# நாகபட்டினம்

## கோவை இளஞ்சேரன்

# நாகபட்டினம்

"கவிஞர்கோ"

கோவை இளஞ்சேரன்
(முன்னைத் துணை இயக்குநர்,
தமிழ்ப்பல்கலைக் கழகப் பதிப்புத்துறை)

மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : டிசம்பர், 1996.
திருவள்ளுவர் ஆண்டு : 2027
உரிமை : ஆசிரியர்க்கு

**விலை ரூ. 65-00**

மணிவாசகர் வெளியீட்டு எண் : 558

## பதிப்பாசிரியர்

### டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; தமிழகப் புலவர் குழுவின் துணைத் தலைவர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருபவர். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பதினாறு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய 'தாகூர்' நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர், துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார், 'தமிழவேள்' என்னும் விருதினை வழங்கியுள்ளார். குளித்தலை கா.சு. பிள்ளை இலக்கியக்குழு, 'தமிழ் நெறிக் காவலர்' என்னும் விருதினை அளித்து இவரைச் சிறப்பித்துள்ளது. பதிப்புச் செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :
சிதம்பரம் : 23069 சென்னை : 561039
கோயமுத்தூர் : 397155 மதுரை : 622853
திருச்சி : 34450

அச்சிட்டோர் : பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 013.

# வாழும் நகர்

## பதிப்புச் செம்மல் தமிழவேள் டாக்டர் ச. மெய்யப்பன்

தமிழ் நிலம் தொன்மையானது. நீண்ட நெடிய வரலாறு உடையது. வரலாற்றுக் காலந்தொட்டே பூம்புகார், மதுரை சிறப்புப் பெற்றுள்ளன. நகரங்களின் சிறப்புக்களைச் சங்க இலக்கியம் அழகோவியமாக்கி உள்ளது. பல்வகைச் சிறப்புக்களை உடைய தலைநகரங்கள், துறைமுக நகரங்கள், வணிக நகரங்கள் பற்றிய பல குறிப்புக்கள் இலக்கியங்களில் உள. தமிழர்கள் நகரமைப்பில் தனித்திறம் சான்றவர்கள். சிந்துவெளி நகர அமைப்பிற்கும் சங்ககால நகர அமைப்பிற்கும் பல்வகை ஒற்றுமைகளை ஆய்வாளர் கண்டறிந்துள்ளனர்.

பழம்பெருமையுடைய நகரங்கள் மட்டுமல்லாமல் இன்றும் வாழும் நகரங்களைப் பற்றி ஒரு வரிசை வெளியிடும் திட்டத்தில் முதன்முதலில் 'கடல் நாகை'யைப் பற்றிய அரிய ஆய்வேடு மலர்கிறது. சிதம்பரம், திருவாரூர், திருச்செங்கோடு முதலிய நகரங்கள் இன்றும் வாழும் திருநகரங்களாகும். வரலாற்று இடையீடின்றி ஒளி குன்றாது ஓங்கி வளரும் நன்னகரங்கள் அறிமுகப்படுத்தும் வரிசையில் நாகை வரலாறு முகிழ்க்கிறது.

கோவில்களின் பெருமையைச் சொல்லும் தல வரலாறுபோல் நூல் அமைக்கப்பெறவில்லை. தொல் பழங்காலந்தொட்டு நகர் உருவான வரலாறு தொடங்கி அரசுகளின் எழுச்சிக் காலத்தில் நகர் பெற்ற ஏற்றமும் நகரின் பல்வகை நலங்களும் பன்முகச் சிறப்புக்களும் வகுத்தும் தொகுத்தும் உரைக்கப்பட்டுள்ளன.

நாகையின் தனிச்சிறப்பு துறைமுக நகர். கிழக்குக் கடற்கரையில் கடல் வாணிகத்தின் வாயில். தமிழகத்தின் மையத்தில் அமைந்த நடுநாயகமான துறைமுகம். பன்னாட்டினரின் கடல் வணிபச் சுவடுகள் நிரம்பப் பதிந்துள்ளன. வணிகக் கப்பல்களின் போக்குவரவும் ஏற்றுமதி இறக்குமதி பற்றிய செய்திகளும் நிரம்ப உள. தமிழர் கடல் வணிகத்தில் நாகபட்டினத்தின் பங்களிப்பு சங்ககாலந்தொடங்கி ஆங்கிலேயர் ஆட்சி வரை கிழக்காசிய நாட்டுப் பயணத்திற்கு வாயிலாக அமைந்துள்ளது.

எல்லா நகரங்களுக்கும் வரலாறு அமைவது அரிது. சில நகரங் களுக்குச் சில வரலாற்று நிகழ்வுகளே உண்டு. நாகைக்கு வற்றாத வரலாற்றுப் பெருமை உண்டு. வரலாற்று எச்சங்கள் பல கிடைத்துள்ளன. தொடர்ந்த வரலாறு உள்ள நகரங்களில் நாகை ஒன்று. பல்வேறு சமயங் களின் சங்கமம். சைவ, வைணவ, பௌத்த சமயங்களின் பழஞ்சுவடு களும் கிறித்தவ, இசுலாமியச் சமயங்களின் புதிய பதிவுகளும் நாகையில் கொஞ்சநஞ்சமல்ல. திருக்கோயில் கல்வெட்டுக்கள், நாகையில் சமயங்கள், எழுந்து வீழ்ந்த வரலாறுகளை இயம்புகின்றன. சமய இலக்கியங்களில் குறிப்பாகத் தேவார, திருமுறைகளில் இடம் பெற்றுள்ளன. தமிழகச் சமயப் பொறைக்கு நாகை நல்ல எடுத்துக்காட்டு.

பல்வகைச் சமயங்களின் பாங்கானகூட்டுறவு நகர் நாகை. எல்லாச் சமயங்களின் நெஞ்சங்களும் நாகையிலிருந்து பரவிக் கிடக்கின்றன.

பொதுவாகத் தமிழ் இலக்கியங்கள் நாட்டு வருணனை, நகர வருணனை, படலங்கள் கொண்டு இலங்கும் நாகை நகரின் இலக்கிய வரலாறும் இலக்கியப் பெருமையும் இந்நூலில் களிநடனம் புரிகின்றன. கவி காளமேகம் உள்ளிட்டு மறைமலையடிகள் வரை மாத்தமிழ் வளர்த்த மாமனிதர்கள் மலர்ந்த மண் நாகை மண், தொலைந்து உள. அன்றும் இன்றும் என்றும் இலக்கிய மணம் கமழும் இலக்கிய நகர் நாகை. வளமான புலமையால் இலக்கியமும் தமிழ்மொழியும் செழுமை பெற்ற வகையை நாகை வரலாறு நன்கு உணர்த்தும். பழைய இலக்கியம் மட்டுமல்ல புதுக்கவிதையும் பூத்துக் குலுங்கும் பொய்கை நகர்.

சோழ வளநாடு தமிழர் வளர்த்த அழகுக் கலைகளின் தாயகம், நாகையே ஒரு கலைக்களஞ்சியம். திருக்கோயில் சிற்பங்கள் கதைக் கருவூலங்கள். நாகை எப்போதும் வளர்கலைகளின் தாயகமாக வளர்ந் துள்ளது. கைவினைத் தொழில்களின் காப்பகம். செய்வினை நேர்த்தி மிக்க செய்பொருட்களின் சேமிப்பகம் நாகை.

தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள் சிலை பழம் பெரு மைக்கும் புதுப் பெருமைக்கும் சான்றாகத் திகழும் நாகரிகச் சின்னம்.

அறுநூறு அரிய நூல்களை வெளியிட்ட மணிவாசகர் பதிப்பகம் மேற்கொள்ளும் புதிய வரிசையின் தொடக்கம் இது. இந்த அரிய ஆய்வு நூலை எழுதுவதற்குத் தகுதியும் திறமையும் பெற்ற இளஞ்சேரன் அவர்களைத் தேர்ந்தோம். இவர் நாகையில் அரை நூற்றாண்டுக் காலம் வாழ்ந்த அறிஞர். கோவை இளஞ்சேரன் கவிஞர் – அறிஞர் – சிந்தனையாளர் – ஆய்வாளர் – கலைஞர் எனப் பன்முக நலம் பெற்ற படைப்பாளர். நாடறிந்த புலவர். நாகைக்குப் புகழ் சேர்த்த நல்ல தமிழ்ப் புலவர். நாடு போற்றும் நல்லாசிரியர். செய்வன திருந்தச் செய்யும் செம்மல். அனைத்தையும் அழகியல் நோக்கில் காணும் கலைஞர். நற்றமிழ் பரப்பும் இளஞ்சேரன் நாகையில் புதுமை கண்டார். தெளிவும் தொலைநோக்கு முடைய சாதனையாளராகிய இவர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத் துறையின் முதல் துணை இயக்குநர். பல்கலைக் கழகத்தின் மாபெரும் சாதனையாகிய வாழ்வியல் களஞ்சியம், அறிவியல் களஞ்சியங்களை அழகிய அமைப்புடன் அச்சிட்ட செயலாளர். இவருடைய ஆராய்ச்சி அறிவுக்கு இந்நூல் ஒரு எடுத்துக்காட்டு. பல்லாண்டுகள் உழைத்து அரிதில் முயன்று எழுதித் தொகுத்த அறிவுக்களஞ்சியமாக இந்நூல் விளங்குகிறது.

எங்கள் வேண்டுகோளுக்கிணங்கிச் சிறந்ததொரு நூலை உருவாக் கிய நூலாசிரியர்க்கு நாங்களும் தமிழ்கூறு நல்லுலகமும் கடப்பாடு உடையோம்.

# எழுதியவன் உரை

எழுத்தாளன் உலகத்தை எழுத்தால் ஆள்கிறான். காலங்காலமாய் ஆள்கிறான்; காலத்தையும் ஆள்கிறான். முற்கால எழுத்தாளன் கூர்ங் கல்லாலும், முள்ளாலும், மயில் இறகாலும், எழுத்தாணியாலும் ஆண் டான். பிற்கால எழுத்தாளன் எழுது கோலால் ஆள்கிறான். முன்னவன் எழுத்தாணியே செங்கோலாக–ஆண்டான். பின்னவன் எழுதுகோல் முனையே செங்கோலாகவும், போர்க்கருவியாகவும் கொண்டுள்ளான்.

தமிழ் வளாக எழுத்தாளனுக்குப் புலமைதான் உந்து முனை. இலக்கியத்தையும் இலக்கணத்தையும் படைத்த அவன் அவற்றில் வரலாற்றையும், வாழ்வியலையும், நிலவியலையும், வானவியலையும் பொதிந்து வைத்தான். அந்நாள் எழுத்தாளர் மிகு எண்ணிக்கையர். அனைவரும் எழுத்தாளர்களே. எனினும் ஒரு புலவன் மட்டும் 'எழுத்தாளன்' என்ற சிறப்புப் பெயர் பெற்றான்.

அவன் இயற்பெயர் பூதன்; சேந்தன் அவன் தந்தை. அப்பன் பெய ரின் முன் எழுத்தை மட்டுமின்றி முழுப்பெயரையும் முன்னே கொண்டு 'சேந்தன் பூதன்' எனப் பெயர் பெற்றான். இத்துடன் 'எழுத்தாளன்' என்னும் அடைமொழியும் பெற்றான். மதுரையில் வாழ்ந்த இவன் 'மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன்' என்று முழுப்பெயர் கொண்டான். இங்கு எழுத்தாளன் என்றது மன்னனின் அரசுக் குறிப்புக்களையும், ஆணைகளையும் எழுதுபவன் என்னும் பொருள் கொண்டது. இவ்வகை யிலும் புலமைப் பாட்டு படைத்த வகையிலும் இவன் எழுத்தாளன்.

இவன் பாடல் ஒன்றே ஒன்று குறுந்தொகையில் உள்ளது. அதன் மூலம் காதல் கன்னி ஒருத்தியை நம்முன் நிறுத்தியுள்ளான்.

அவள் ஒரு கட்டழகன் காதலில் தோய்ந்தாள்; அவன் மணம் முடிக்காததால் தேய்ந்தாள்; உடல் ஓய்ந்தாள். என்றாலும் உள்ளம் சாய்ந் தாள் அல்லள். அவனை மணந்து கூடிக் களிப்பதில் உறுதியிருந்தது.

அவளை இங்கு காட்டுதற்குக் கரணியம் இந்நூலை எழுதியவன் என்னும் வகையில் யான் அவளாக ஆனேன் என்பதே.

அவள் அவனைக் காதலித்தாள். எனக்கும் அவ்வாறு ஒரு காதல். அவள் அவனைப் பற்றிய ஓவியத்தை உள்ளத்தில் தீட்டிக்கொண்டே வந்தாள். யானும் அவ்வாறே. என்றேனும் ஒரு நாள் அவனைக் கூடி அவனின் மன ஓவியத்தைக் கண்கூடாகும் உருவாக்கி, அணைக்கும் நோக் கத்தில் இருந்தாள். யானும் அவ்வாறே. அவள் தோழி அவனை ஒரு நாள் அவள் முன்னே கொண்டுவந்து நிறுத்தி உறுதிமொழி எடுக்கச் செய்தாள்.

அது போன்றே என் காதல் ஓவியத்தை என் அருமை நண்பர் பதிப்புச் செம்மல் முனைவர் ச. மெய்யப்பன் அவர்கள் அவர் சொல்லால் என் முன் வைத்து நிறைவேற்றிக்கொள்ளச் சொன்னார். அக்காதல் வடிவந்தான் இவ்வரலாற்று நூலாக்கம். நாகர்பட்டின வரலாற்றை எழுத வேண்டும் என்ற உணர்வார்ந்த ஆர்வமே என் காதல் வடிவு. காதல் நிறை வேற உதவிய நண்பர் பதிப்புச் செம்மலுக்கு அச்சார நன்றி படைக் கின்றேன்.

31 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த மாநில அஞ்சல் ஊழியர் மாநாட்டு அன்பர்கள் வேண்டியதற்கேற்ப நாகை நகர் வரலாற்றை ஒரு கட்டுரையாக

வழங்க நேர்ந்தது. 'நாகை நகராட்சி நூற்றாண்டு விழாமலரில் மற்றொன்று இடம் பெற்றது. தமிழ்ப் பல்கலைக் கழக வாழ்வியல் களஞ்சியத்திற்குச் சற்று ஆழமான கருத்துக்களைக் கொண்ட 'நாக பட்டினம்' கட்டுரை எழுதி வழங்கினேன்.

இருப்பினும் நாகை வரலாற்றை விரிவாக ஆராய்ந்து எழுத வேண்டும் என்னும் உள்ளுணர்வு ஒரு காதலாகவே உள்ளத்தை அவ்வப்போது தழுவியது. இன்று 'நாக பட்டினம்' என்று வரலாற்று மணத்துடன் மலர்கிறது.

ஒரு நகரைப் பற்றி வரலாறு என்பது அதன் சுற்றெல்லைக்குள் மட்டும் சிறையிருப்பதன்று. நாடு தழுவிய, உலகளாவிய பேரெல்லைக் குள்ளும் உலா வருவதாகும். இவ்வரலாறும் அத்தகையதே.

ஒரு நகரைப் பற்றிய வரலாற்றை வடிப்பதற்கு வரையறுக்கப்படாது போனாலும் ஒரு வரலாற்று இலக்கணம் இருக்கலாம். ஆனால் அவ்வாறு ஓர் இலக்கணத்தை நானே வகுத்துக்கொண்டு அதன்படி இதை வரலாற்று இலக்கிய மாக்கியுள்ளேன்.

இஃதொரு வரலாற்று நூல் மட்டும் அன்று; ஓர் ஆய்வு நூல்; வரலாற்று ஆய்வு நூல். ஆழமாக ஆய்ந்து செய்யப்பட்டது. இஃது உண்மை என்பதைப் படிப்போர் உணர்வர்.

அடுத்து அறிவிக்கப் பெற்றுள்ள 'இந்நூல் காட்டும் ஆய்வின் உண்மைகள்' என்னும் பட்டியலே சான்றும் ஆகும்.

இந்நூல் ஒன்பது பருவங்களில் அமைந்துள்ளது.

பிறப்புப் பருவமாக வரலாற்றுத் தோற்றுவாயில் தொடங்குகின்றது. உண்மை வழுவாமல் ஒரு கற்பனை மெருகுடன் பிறக்கிறது.

கால ஓட்டத்தில் நகரின் பெயர் மாற்றம் பெறுவதுண்டு. நாகையும் பெற்றது. பெயர் சொல்லாமல் விடக் கூடாது என்று 'பெயர் பெற்ற நாகை' தொடர்கிறது.

ஆட்சியில்லாமலா நகர நடைமுறை நிகழும்? காலவாரியில் விரிவார்ந்த பாங்கில் 'ஆட்சி நாகை' பதியப் பெற்றுள்ளது. இது மூன்றாவது பருவம்.

நகர் என்றால் அதற்கொரு அமைப்பு உண்டு. அஃது இயல்பாகவும், திட்டமிட்டதாகவும் அமையும். இரண்டையும் அடையாளம் காட்டுவது 'நகரமைப்பு நாகை!'

மக்கள் இல்லாமல் நகர் இல்லை. 18 வகை மக்கள் இடம் பெற்றமை விளக்கப்படுகின்றது, ஐந்தாவது பருவத்தில்.

ஆறாவது பரும் சமய நாகையாக வளர்ச்சியுறுகிறது. உலகளாவிய சமயங்கள் ஐந்து, நாகையளாவிய சமயங்களாக விளங்கியவற்றின் குறிகளையும் நெறிகளையும் காணலாம்.

வணிகந்தான் உலகிற்கு நாகையை அறிமுகப்படுத்தியது. உலகத் தொடர்பையும் நாகை கொள்ள வைத்ததும் வணிகமே. வணிகத்துடன் நெருங்கிய தொழிலும் நாகையை எவ்வாறு வளர்த்தன என்பன அடுத்துக் காணப்படும்.

எட்டாவது கற்றவர் பருவம்; கற்றவர் பயிலும் பருவம். நாகைபெற்ற கல்விச் செம்மல்களை இங்கு கண்டு மகிழலாம்.

இவை எட்டும் இன்று நாகையில் எந்நிலையில் உள்ளன; நாளை எந்நிலை பெறவேண்டும் என்று ஒன்பதாவது அறிவுறுத்துகிறது. அரசுகள் நாகைக்கு ஆற்ற வேண்டியவை திட்டக் கருத்துரைகளாக வைக்கப்பட்டுள்ளன, ஒன்பதாவது பருவத்தில்.

இயன்ற அளவில் உரிய படங்கள் ஆங்காங்கு இணைக்கப் பட்டுள்ளன. இன்றைய நாகை அமைப்பின் வரைபடம் இன்றைய நாகையைக் கருப்புக் கோட்டிலும் எழுத்திலும் குறிக்கும். அசோகன் காலம் முதல் 18ஆம் நூற்றாண்டு வரை நாகைப் புத்த வளாகம் சிவப்புக்கோட்டு எல்லையிலும் இடத்தைச் சுட்டும் எழுத்திலும் அமைக்கப்பட்டுள்ளமை நாகையை இருவகைக் காட்சிக்கு உட்படுத்தும்.

மொழியளவில் தமிழ் மரபும் கலைச் சொல்லமைப்பும் ஆட்சி செய்யும். இந்நூலில் வடவெழுத்துக்கள் உரிய ஒப்புடைய தமிழ் எழுத்துக்களாகக் கைக்கொள்ளப்படுகின்றன. 'ஸ்ரீ' என்பது 'சீர்' என்றிருக்கும். இவ்வாறு முன்னர் பல தமிழ்ச் சான்றோர் கையாண்டனர்.

"செங்கண் நெடுமால் சிரீதரா என்றழைத்தக் கால்" — என்று திருமங்கையாழ்வார் ஆட்சியை ஒரு சான்றாகக் கொள்ளலாம். 'ஸ்' — 'ஃச்' என்று உருப் பெறுகிறது. 'F' என்பதன் ஒலிப்பை 'எஃப்' என்று கையாள் கிறோம் அன்றோ! 'சு' என்றும் கொள்ளப்பட்டது. 'ஜ' —ய,ச' என்றும், 'ஷ' 'ச,ட' என்றும் 'ஹ' — 'அ,க' என்றும் இடம் பெற்றுள்ளன. ஆங்கிலப் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் ஆங்கிலத்தில் வைக்கப் பெற்றுள்ளன.

சொல்லளவில் 'வைணவம் — திருமாலியம்' என்றும் பிற புத்தம், இசுலாமியம், கிறித்துவம் என்றும் எழுதப்பெற்றுள்ளன. பல கலைச்சொற்கள் படைக்கப்பட்டும் எடுத்தாளப் பெற்றும் உள்ளன.

இந்த வரலாற்று ஆய்வு நூலில் படிப்போர் கருத்துத் தொடர்பு அறாமல் படித்துச் செல்ல முன்னர் விளக்கப் பெற்றவை மீண்டும் சுருக்க மாக வைக்கப்பெற்றுள்ளன. தொடர்போட்டம் கருதிய வகையில் இது கூறியது கூறல் ஆகாது. சில இடங்களில் 'முன்னர் கண்டோம்', 'முன்ன ரும் சுட்டப்பெற்றது' என நினைவு கூர்தற்குச் சுட்டப்பட்டுள்ளன.

ஆட்சி, சமயம் இரண்டன் அடிப்படை விரிவுக் கருத்துக்கள் சற்று விரிவாகத் தரப்பட்டுள்ளன. நாகையைக் குறியீட்டுப்படமாகக் கண்டு கொள்ள அவை வேண்டப்படுபவை என்று கருதி விளக்கமாக எழுதப்பெற்றுள்ளன. காலக் குறிப்புகள் கவனத்துடனும், சான்று களுடனும் பதியப் பெற்றுள்ளன.

இவ்வரலாற்று நூலாக்கம் ஓர் ஆய்வுப் பதிவும் ஆகும். இவ்வாறு எழுதுவதை ஒரு தற்புகழ்ச்சியாகக் கொள்ள வேண்டாம். நூலில் முன் இணைப்பாக்கியுள்ள 'இந்நூல் காட்டும் ஆய்வு உண்மைகள்' என்னும் பட்டியல் இதனை 'ஆய்வு நூலே' என்று பளிச்சிட்டுப் பேசும்.

**"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்ல தமைச்சு",**

என்ற வள்ளுவர் காட்டிய வழி, நாட்டை ஆளும் அமைச்சர் மட்டும் நடப்பதற்கு அன்று. ஏட்டை ஆளும் எழுத்தாளர்க்கும் பொருந்தும். இவ்வழிப்படி தெரிய வேண்டியவற்றை ஆய்ந்து தெரிந்து தெரிந்தவற்றைத் தெளிவாகச் சொல்லியும் — அதனையும் ஒருதலையாக — உறுதியாகச் சொல்லியும் கடமையாற்றியுள்ளேன்.

இப்பணி அரும்பணி என்று அயரவில்லை. நாகையில் எனக்கு அருமையான நண்பர்கள் நல்ல எண்ணிக்கையினர். அவர்களுள் வேண்டப்படும் கருத்துக்கு உரியவர்களை இனத்துணையாகக் கொண்டுள்ளேன்.

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்"

என்ற உந்துதலின்படி இந்த அரும்பொருளை அணைவுப் பொருளாகக் கொள்ள முடிந்தது. அவ்வப்போது உதவிய நண்பர்களின் உதவியை ஆங்காங்கு உரிய இடத்தில் அடிக்குறிப்பாகப் பெயர் குறித்துக் காட்டியுள்ளேன். இங்கு உளந்தோய்ந்த நன்றிகூறி மகிழ்கின்றேன்.

சான்றுகளும், மேற்கோள்களுமாகப் பல தமிழ் நூல்களில் வரிகள் இந்நூலில் அமைந்துள்ளன. கல்வெட்டு, செப்பேடு, ஆவணம், அறிக்கை எனப் பல சான்றுகள் ஆங்காங்கு பேசும். சில ஆங்கில நூற்கருத்துக்களும் கைகொடுத்து நிற்கும்.

என்றும், என் அன்பில் தோய்ந்து, அவர்தம் அன்பில் தோய்த்துத் தோன்றும் துணையாய் விளங்கும் நண்பர்கள் புலவர் இரா. இராசு அவர்களுக்கும், புலவர் இரா. இராமதாசு அவர்களுக்கும் நெஞ்சுசார்ந்த நன்றி என்றும் உண்டு. இன்றும் இங்கு படைத்து உவக்கின்றேன்.

பல ஆண்டுகள் தட்டச்சில் பழகிய கை, தட்டச்சு பழுதால் எழுதத் துவங்கியது, எழுத்துக்கள் நெளிந்த புழுக்களின் வளைந்த சாரிகளாய்ப் பிறந்தன. இதனைப் படித்துப் புரிந்து தட்டச்சாக்கி உதவிய என் அன்பு மகள் திருமதி ந. கலைவல்லிக்கு (மன்னார்குடி) உளம் நிறைந்த வாழ்த்துடன் நெஞ்சம் நிறைந்த நன்றி கூறுகின்றேன்.

நன்றிக்கு நிறைந்து நிற்பவர் பதிப்புச் செம்மல் முனைவர் ச.மெய்யப்பனார். தூண்டியும் உசாவியும் இப்பணியை நிறைவாக்கினார். அவ்வரும் நண்பர்க்கு எல்லையில்லா நன்றி படைக்கின்றேன். அவர்வழி மணிவாசகர் பதிப்பகத்தார்க்கும் பாராட்டும் நன்றி வாழ்த்தும் உரியன.

கடைகாப்பாக ஒன்றை எழுத வேண்டும்.

'நாக பட்டினம்' என்னும் இந் நூல் வளாகத்தில் உலவும் அன்பர்கள் நிறையச் செய்தியைப் பெறுவர். முறையான முடிபுகளை அறிவர். உறுதியான கருத்துக்களை அடைவர். இவை கட்டுக்கோப்பான உறுதிகள்.

படிப்பவர் பலர்க்குப் பயன்;
எழுதிய எனக்கு மனநிறைவு.
வணங்கி மகிழ்கின்றேன்.

கலைக் குடில்
59, எழில் நகர்
தஞ்சாவூர் — 613 007

அன்பன்
**கோவை இளஞ்சேரன்**

# நூல் அடங்கல்


| | | பக்கம் |
|---|---|---|
| | நூலுறுப்பு | |
| 1. | பதிப்புரை | *iii* |
| 2. | எழுதியவன் உரை | *v* |
| 3. | நூல் அடங்கல் | *ix* |
| 4. | இந்நூல் காட்டும் ஆய்வு உண்மைகள் | *xi* |
| 5. | சான்று நூல்களும் குறுக்கமும் | *xiii* |
| | (1) வரலாற்று நாகை | |
| | அ. வளையல் துண்டு | 1 |
| | ஆ. புத்தத் திருவிடம் | 3 |
| | இ. அசோகன் பதிவு | 13 |
| | ஈ. ஊறுபாட்டால் ஊர் | 14 |
| | உ. வரலாற்று நிகழ்வுக் கற்கள் | 16 |
| | ஊ. பட்டினம் என்றால் காவிரிப்பூம் பட்டினமே | 18 |
| | எ. நீர்ப்பெயற்று | 21 |
| | ஏ. பட்டின அழிவும் பயணிகள் குறிப்பும் | 30 |
| | ஐ. மணிமேகலை ஒளிக்கதிர் | 34 |
| | ஒ. தோற்றத்திற்கு அழிவு ஒரு முன்னோடி | 38 |
| | ஓ. நாகர்பட்டினம் | 39 |
| | (2) பெயர் பெற்ற நாகை | |
| | அ. பெயரும் புகழும் | 42 |
| | ஆ. நாகைப் பெயர்கள் | 44 |
| | இ. பாம்புத் திசை திருப்பம் | 47 |
| | ஈ. இந்தியாவில் நாகர் | 52 |
| | உ. நாகர்க்கு நுழை வாயில் | 55 |
| | ஊ. நாகர் — தமிழ்ச்சொல் | 57 |
| | எ. இனத்தாரால் பெயர் | 61 |
| | ஏ. நாகர்பட்டினமே நாகபட்டினம் | 62 |
| | (3) ஆட்சி நாகை | |
| | அ. நான்கு வகை ஆட்சி | 66 |
| | ஆ. தலைநகர் அன்று — துறைமுகமே | 66 |
| | இ. தமிழ் மன்னர் ஆட்சி | 70 |
| | ஈ. அயல் புல மன்னர் ஆட்சி | 79 |
| | உ. வேற்று நாட்டவர் ஆட்சி | 99 |
| | ஊ. விடுதலைத் தன்னாட்சி | 119 |
| | (4) நகரமைப்பு நாகை | |
| | அ. ஆற்றங்கரை நாகரிகம் | 124 |
| | ஆ. நீர்ப்பெயற்றுப் பேரூர் அமைப்பு | 130 |
| | இ. பதரி திட்டை அமைப்பு | 133 |
| | ஈ. பட்டின அமைப்பு | 135 |
| | உ. உலகக் கண்ணாடி | 138 |

ஊ. சோழகுலவல்லி பட்டினம் 154
எ. ஊர்ப்பெயர்களின் பெட்டகம் 155
(5) மக்கள் நாகை
அ. நல்ல நிலம் 168
ஆ. நாகையில் பதினெட்டு 170
இ. நாகை மக்களின் தொன்மையும்
சான்றாண்மையும் 192
ஈ. சமய மக்களின் பொதுமை 200
உ. நாகைக் கலைமக்கள் 201
ஊ. உலகெங்கும் நாகையர் 203
எ. பெயர் பொறித்த பெரியோர் 205
ஏ. நாகையில் பாராட்டுச் சின்னங்கள் 208
(6) சமய நாகை
அ. சமயம் 213
ஆ. புத்தம் — விளக்கம் 215
இ. நாகையில் சைவம் 230
ஈ. நாகையில் திருமாலியம் (வைணவம்) 264
உ. நாகையில் இசுலாமியம் 270
ஊ. நாகையில் கிறித்துவம் 281
எ. சமய அமைதி 293
(7) வணிகம், தொழில் நாகை
அ. வணிக நாகை 295
ஆ. வணிகத்தில் பொருள் மாற்று முறை 304
இ. நாகையில் வணிக, வாணிபப் பெருமக்கள் 309
ஈ. தொழில் நாகை 318
(8) "கற்றவர் பயிலும் நாகை"
அ. முற்காலக் கற்றவர் 328
ஆ. இடைக் காலக் கற்றவர் 330
இ. பிற்காலக் கற்றவர் 336
ஈ. 300 ஆண்டுகளில் 341
உ.. தமிழ்ச் சங்க நாகை 351
ஊ. கல்வி பயிற்றும் நாகை 354
(9) இன்று, நாளை நாகை
அ. வரலாற்று நாகை 357
ஆ. பெயர் நாகை 359
இ. ஆட்சி நாகை 362
ஈ. நகரமைப்பு நாகை 368
உ. மக்கள் நாகை 370
ஊ. சமய நாகை 373
எ. வணிகம், தொழில் நாகை 375
ஏ. கற்றவர் நாகை 380
ஐ. நிறைவுரை 382

# இந்நூல் காட்டும் இருபத்துமூன்று ஆய்வு உண்மைகள்

1. 'நாகர்பட்டினம்' என்பது இதன் பட்டினப் பெயர்.

2. சங்ககாலப் பெயர் 'நீர்ப்பெயற்று' என்பது.

3. நாகர்பட்டினத்தின் நகரமைப்பு காவிரிப்பூம்பட்டினத்தின் மறுபதிப்பாகும்.

4. நாகர் – தமிழ்ச் சொல்.

5. நாகர் என்பார் மூலத்தில் தமிழ் இனத்தவர்.

6. நாகர்பட்டினம் ஆட்சித் தலைநகராக இருந்ததில்லை; துறைமுகப்பட்டினமே.

7. நாகையின் சுற்றுப் பாதுகாப்பாகக் கோட்டை இருந்ததில்லை. மேலைக் கோட்டை வாயில், வடக்குக் கோட்டை வாயில் என்பன நுழைவாயில் வளைவுக் கட்டுமான 'தோரண வாயில்'களே.

8. நகரத்தின் நடுவே 'சிந்தாறு' என்றொரு ஆறு ஓடியது. பின் திசை திருப்பப்பெற்றது.

9. நாகையில் புத்தத் துறவிகள் நூல் பணியே செய்து அமைதியில் வாழ்ந்தனர். மதம் பரப்பும் பணி ஆற்றவில்லை. நகர மாந்தர்தம் ஒத்துழைப்போ பகைமையோ கொண்டதில்லை.

10. கி.பி. 10ஆம் நூற்றாண்டிலேயே இங்கு இயற்கை எரிவாயு (Natural Gas) வெளிப்பாடு நேர்ந்தது.

11. புகையுண்ணிக் கிணறு என்பது எரிவாயு (Gas) தோன்றி உள்வாங்கிக் கொள்ளப்பட்ட கிணறு ஆகும்.

12. 'காரோணர்' என்பதே உரியபெயர். 'காயாரோகணர்' என்பதன் திரிபு அன்று.

13. சோழ மன்னர் ஆட்சியில்தான் நாகை வளம் பெற்றது.

14. சாலிசுகன் என்றொரு மன்னன் பெயர் வரலாற்றில் இல்லை.

15. மராத்தியர் காலத்தில் நாகை அவர்க்கு ஒரு வருவாய் உண்டியலாக இருந்தது.

16. 'புதுவெளிக் கோபுரம்' என்பது நாகை அகநகரின் வெளியிடத்தில் அமைந்த புத்த சமயக் கோபுரம். இது கலங்கரை விளக்கமாக எழுப்பப்பட்டதன்று. அவ்வாறு துணையாயிற்று.

17. சைவ விரிவாக்கத்தால் புத்த வளாகம் குறுகியது.

18. நாகைக் கல்லறைத் தோட்டத்திலுள்ள கல்லறைக் கலைமண்டபத்துக் கீழ் அறையில் இவர் அடக்கம் செய்யப் பட்டுள்ளனர்.

19. பள்ளி என்னும் சொல்லின் பொருள் வளர்ச்சி.

20. 'வருணகுலாதித்தன் உலா மட'லின் ஆசிரியை காளி முத்தம்மை என்பவர். அம்மைச்சியோ நீலாயதாட்சியோ அல்லர்.

21. நாகர்பட்டினம் மக்கள் குடியிருப்பாம் ஊர்ப்பெயர்களை எல்லாம் கொண்ட பெட்டகமாகும்.

22. '*பரதவராச* குலம்' என்பதையே 'பருவதராச குலம்' என்றனர்.

23. நாகப்பட்டினம் என்பது தவறு; நாகபட்டினம் என்பதே முறை.

# சான்று நூல்களும் குறுக்கமும்

| நூல் | குறுக்கம் |
|---|---|
| 1. அகநானூறு | : அகம். |
| 2. அபிதான சிந்தாமணி | : அபி. சிந். |
| 3. அருள் திரு நாகநாதசுவாமி திருக்கோயில் வரலாறு | : அரு. நா.தி.வர. |
| 4. ஆராய்ச்சிக் கட்டுரைகள் (தமிழாக்கம்) | : ஆ.கட். (த) |
| 5. இலக்கிய வரலாறு | : இ.வர. |
| 6. இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டும் | : இல.ஆ.கல். |
| 7. ஐங்குறுநூறு | : ஐங்குறு. |
| 8. கலித்தொகை | : கலி. |
| 9. கலைக்களஞ்சியம் | : க.களஞ். |
| 10. குறுந்தொகை | : குறு. |
| 11. கொன்றை வேந்தன் | : கொ.வேந். |
| 12. சிலப்பதிகாரம் | : சிலம்பு. |
| 13. சிறுபாணாற்றுப்படை | : சிறுபாண். |
| 14. சீவக சிந்தாமணி | : சீ.சிந். |
| 15. சுந்தரர் தேவாரம் | : சுந். தேவா. |
| 16. சூடாமணி நிகண்டு | : சூடா.நி. |
| 17. சைவ சித்தாந்த ஞானபோதம் | : சைவ. சி. ஞான. |
| 18. தஞ்சை மராட்டியர் கல்வெட்டு | : தஞ்.மரா.கல். |
| 19. தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50 | : தஞ்.மரா.செப். |
| 20. தமிழகப் புலவர் அகராதி | : தமிழ்.பு. அக. |
| 21. தஞ்சை மராட்டிய மன்னர் அரசியலும் சமுதாய வாழ்க்கையும் | : தஞ். மரா. அர. சமு. வாழ். |
| 22. தமிழ் அகராதி(LEXICON) | : தமி. அக (LEXI). |
| 23. தமிழகப் புலவர் அகராதி | : தமி.பு. அக. |
| 24. தமிழக வரலாறு | : தமி. வர. |
| 25. தனிச்செய்யுட் சிந்தாமணி | : தனி. சிந். |
| 26. தனிப்பாடற்றிரட்டு | : தனி.திர. |
| 27. தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு | : தாயு. திர. |
| 28. திரிகடுகம் | : திரி. |
| 29. திருக்குறள் | : திரு. |
| 30. திருஞானசம்பந்தர் தேவாரம் | : திருஞா. தேவா. |
| 31. திருத்தொண்டர் திருவந்தாதி | : திரு.தொ. திருவ. |
| 32. திருத்தொண்டர் புராணசாரம் | : தி.தொ. புரா. சா. |
| 33. திருநாகைக்காரோண புராணம் | : திரு.நா. புரா. |
| 34. திருநாவுக்கரசர் தேவாரம் | : திரு. நா. தேவா. |
| 35. திருப்புகழ் | : திருப்பு. |
| 36. திருவாசகம் | : திருவா. |
| 37. திறப்புகழ் | : திறப்பு. |

38. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் : தென். குல. குடி.
39. தொல்காப்பியம் – சொல்லதிகாரம் : தொல். சொல்.
40. தொல்காப்பியம் – பாயிரம் : தொல். பாயி.
41. தொல்காப்பியம் – பெயரியல் : தொல் – பெய.
42. நற்றிணை : நற்.
43. நன்னூல் : நன்.
44. நாகை நான்மணிமாலை : நா. நான்.
45. நாலடியார் : நாலடி.
46. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் : நாலா. தி. பிர.
47. பட்டினப் பாலை : பட். பா.
48. பதிற்றுப் பத்து : பதி.ப.
49. பரிபாடல் : பரி.
50. பரிபாடல் திரட்டு : பரி.தி.
51. *பல்சந்த மாலை* : *பல்.மா.*
52. பாரதி பாடல்கள் : பார.பா.
53. பாரதிதாசன் கவிதைகள் : பா. கவி.
54. பாவலர் சரித்திர தீபம் : பா.ச.தீ.
55. பிங்கல நிகண்டு : பிங்.நி.
56. பிளினி : பிளி.
57. பிற்காலச் சோழர் வரலாறு : பி.சோ.வர.
58. புறநானூறு : புறம்.
59. புவியியல் : புவி.
60. பெரிபுளூசு : பெரிபு.
61. பெருங்கதை : பெருங்.
62. பெருந்தொகை : பெருந்.
63. பெரும்பாணாற்றுப்படை : பெரும்பாண்.
64. பொருநராற்றுப்படை : பொருநர்.
65. மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை : ம.நூ.உயிர்.
66. மணிமேகலை : மணி.
67. மதுரைக் காஞ்சி : மது.கா.
68. மறைமலை யடிகளார் நினைவுமலர் : மறை.நி.ம.
69. *சிரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்* : *சி.மீனா.சரித்.*
70. மூதுரை : மூது.
71. மெய்கண்டமூர்த்தி திருக்கோயில் வரலாறு : மெய்.தி.வர.
72. வடமொழி வரலாறு : வட.வர.
73. *வருணகுலாதித்தன் உலா மடல்* : *வரு.உ.மடல்.*
74. வால்காவிலிருந்து கங்கை வரை : வால். கங்.
75. வீரசோழியம் : வீர. சோ.
76. வையா பாடல் : வை. பாடல்.

| பிற பெயர் | குறுக்கம் |
|---|---|
| 1. ஆனைமங்கலம் செப்பேடு | : ஆனை.செப். |
| 2. இராசேந்திரன் மெய்க்கீர்த்தி | : இராசே.மெய். |
| 3. சரசுவதி மகால் மோடி ஆவணம் | : ச.மகா. மோ.ஆவ. |
| 4. சுவாமிமலை வரதராசப் பெருமாள் கோயில் செப்பேடு | : சு.வர.கோ.செப். |
| 5. சென்னை அருங்காட்சியகச்செப்பேடு | : சென்.அ.செப். |
| 6. தமிழ்ப் பல்கலைக்கழகம் | : த.பல். |
| 7. தருமபுர ஆதீனச் செப்பேடு | : தரு.ஆ.செப். |
| 8. திருவாலங்காட்டுச் செப்பேடு | : திருவா.செப். |
| 9. திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடு | : திருவாவ.ஆ.செப். |
| 10. நிறைதமிழ்ச் செம்மல் மறைமலை யடிகளார் சிலைப் பீடக் கல்வெட்டு | : நிறை. மறை.சி.கல். |
| 11. படேவியா வெள்ளிப் பட்டயம் | : படே.வெ.பட். |
| 12. புள்ளிருக்குவேளூர்க் கோயில் ஏகோசி மன்னர் செப்பேடு | : புள். கோ. ஏ. செப். |
| 13. மெக்கன்சி சுவடி | : மெக். சுவ. |

| ஆங்கிலம் | குறுக்கம் |
|---|---|
| 1. A Letter to Government of Borlus | : Let. Govt. |
| 2. Annual Report of Epigraphy 1956-57 | : A.R.E. |
| 3. Foreign Notices of South India History of Epigraphy | : |
| 4. Government Order | : G.O. |
| 5. Indian Epigraphy Annual Report 1956-57 | : I.E.A.R. |
| 6. Nagapattinam Medieval Cholas Part | : |
| 7. Public Works Department Madras | : P.W.D. Madras |
| 8. Remain in the presidency of Madras | : R.P.M. |
| 9. Rock Edict. II, III. | : R. Edi. II, III |
| 10. South Indian Inscription | : S.I.I. |
| 11. Studies in South Indian History and Epigraphy | : S.S.I.H. |
| 12. Tamil Literature | : T.Lit. |
| 13. The Antiquariam Remains in the Presidency of Madras | : A.R.P.M. |
| 14. The Cholas (University of Madras) | : T.Chol. (M.Uni) |
| 15. The Nagapattinam and the other Buddhist Bronser in the Madras Museum | : N.B.B.M.Mus. |
| 16. The Pallavas | : T.Pal. |
| 17. Vide and advanced History of India | : V.A.H.I. |

# நாகபட்டினம்

## (நாகர்பட்டின வரலாறு)

## 1. வரலாற்று நாகை

### அ. வளையல் துண்டு

நீல நிற அலைகளுக்குப் பொன்னிற முலாம் பூசுவதற்கு மாலை நேரக் கதிரவன் முயன்று கொண்டிருந்தான். அதில் உள்ளத்தில் ஊன்றியவாறு 'நாகர்பட்டின'க் கடற்கரையில் நடை விரித்தேன்.

ஏதோ ஒன்று 'சுறுக்' கென்று காலில் தைத்தது. அலைமேல் அடகு போயிருந்த உள்ளம் 'நறுக்' கென்று மீண்டது. தானே கால் மேலே எழுந்தது. பெருவிரல் நகத்தில் பாய்ந்திருந்த ஒன்றை 'வெடுக்' கென்று பறிந்தேன். அஃது ஒரு வளையல் துண்டு.

என்னையும் அறியாமல் 'சீ! பாழும் வளையல் துண்டே! காட்சி இன்பத்தில் மூழ்கியிருந்த உள்ளத்தை இப்படி இழுத்து விட்டாயே' — என்றேன்.

'நான் வெற்று வளையல் துண்டென்று நினைத்தாயா? சங்கு வளையல் துண்டு' — வளையல் துண்டு பேசிப் பார்த்தது.

வியந்த நான், 'சங்கு என்றால் மேம்பட்டதோ' — என்று வம்புக் கிழுத்தேன்.

'இல்லையோ! மேன்மக்களுக்கு என்னைத்தானே உவமை சொன்னார். "சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" 1 என்ற மூதுரை உனக்குத் தெரியாதா? அஃது இருக்கட்டும். எமது நாடு நாகநாடு. 'நாகரிகம்' என்னும் சொல்லே எம் நாட்டு மக்களின் அடிப்படையில் அமைந்தது என்பரே! புகழ் நிறைந்ததன்றோ எம் நாகநாடு! புகார் நகரின் பெருமையைப் பாடிய இளங்கோவடிகளார் எம் நாட்டைச் சுட்டி, "நாகநாடதனொடு... நீள்புகழ்" (2) என்றதை நினைவு படுத்திக்கொள். மேலும் கேள்: எம் நாட்டு மன்னர்பெருமான் பெயர் 'வளைவணன்' என்பது. எம் மன்னர்பெருமான் பெயரின் முற்பகுதியில் எம் பெயராம் 'வளை' அமைந்திருப்பதைப் பார். மன்னர் பெருமானது பட்டத்தரசி 'வாசமயிலை'ப் பெற்றெடுத்த மகள் — எம் அரசிளங்குமரியின் பெயர் 'பீலிவளை'. இப்பெயரின்

பிறபகுதியில் என்னைப் பார்! ஏதோ, என்காலம் இவ்வாறு நேர்ந்துவிட்டது.

'என்ன உன் காலமா?

'பின் என்ன? அரசிளங்குமரி பீலிவளையின் உயிர்த்தோழி கையில் விளையாடிய நான் உன் காலால் உதைபட்டது காலமன்றி வேறென்ன?'

'ஏதேது! ஒரு பெருங்கதையே சொல்வாய் போலிருக்கிறதே!'

'கதைவிட எனக்குத் தெரியாது! வரலாறு கூறுவேன் கேள்:'

வளையல் துண்டு தொடர்ந்தது:

'ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்குமுன் அஃதாவது திருவள்ளுவப் பெருமான் தோன்றிப் பின் இரண்டாவது நூற்றாண்டுக் காலம். *அஃதாவது தி.பி. இரண்டாவது நூற்றாண்டு*".

"அஃதாவது கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குக் காலம்" — என்றேன் நான்.

'அவ்வாறு சொன்னால்தானே உம் போன்றோர்க்குப் புரியும்' — என்று முள்ளில்லாமல் சொல்லால் குத்திவிட்டு மேல் தொடர்ந்தது.

'*இனிமையான* இளவேனிற்பருவம், வைகாசித் திங்கள் முழுநிலவுக்கு முதல் நாள் மாலை. இதே கதிரவன்தான் அன்று செவ்வானத்தில் நின்றான். இந்தக் கரைக்கண் வந்து நின்ற மரக் கலத்தின் *மேல் தட்டில் நின்ற எம் அரசிளங்குமரி பீலிவளையின்* பொன்னுடல்மேல் தன் பொன் கதிர்களை வீசிக் கதிரவன் அழகு பெற்றுக்கொண்டிருந்தான். என்னைக் கையில் அணிந்திருந்த உயிர்த்தோழியின் கையைப் பிடித்தவாறு *அரசிளங்குமரி* இறங்கிக் கரையை அடைந்தாள். நானும் அன்றுதான் இங்கு வந்தேன்.

## ஒரு பேரூர்

சுற்றுப்புறத்தில் மக்கள் நடமாட்டம் குறைவே. கடற்கரை மணல் மேடுகளில் சிறுசிறு குடில்களில் மீனவர் தென்பட்டனர். இப்பகுதி பெரிய நகரம் அன்று. சிற்றூரும் அன்று. பேரூர் என்னலாம். கடலில் மீன் பிடிப்போர், கொண்டு சென்று விற்போர், ஓரளவில் பயிர்த்தொழில் செய்வோர், மிகச் சிலராகச் செல்வ வளம் படைத்தோர் கற்றோர் சிலர், அரிதாக அயலூரார்.

40 கி.மீ. தொலைவிலுள்ள பூம்புகாரில் வணிகம் செய்யச் சென்று வருவோர், சிந்தாறு என்னும் இவ்வூர்க் குறுக்கே ஓடிய ஆற்றங்கரையில் தங்குமிடம் (அகரம்) அமைத்து வாழ்ந்த மறையவர் என மக்கள் சிதறி ' வாழ்ந்தனர். ஆரவாரமில்லை; அமைதி செங்கோலாட்சி செலுத்தியது பேரூர்.

அக்காலத்தியக் கடல் கொந்தளிப்பால் ஒரு கிலோ மீட்டர் அளவிற்குக் கடல் புகுந்துள்ளது. இப்பொழுது இந்நகர் அரசு மருத்துவமனை அமைந்துள்ள பகுதி, அப்போது அருமையான மரங்கள் நிறைந்த தோப்பாக இருந்தது. எம் நாகநாட்டார் இங்கு வந்தால் அந்தத் தோப்பில்தான் தங்குவர். அப்பகுதியில் எம் நாட்டவர் ஓரளவினர் வணிகம் கருதியும், புத்தச் சமயம் கருதியும் நிலைப்பில்லாத குடில்கள் அமைத்துத் தங்கி வாழ்ந்தும் வந்தனர்!'

இடையில் நான் ஒரு குறிப்பு வைத்தேன். 'என் தாத்தா கூறக்கேட்டுள்ளேன். அந்த இடத்திற்கு 'நாகர் தோப்பு ' என்று பெயர் உண்டாம்.

## ஆ. புத்தத் திருவிடம்

'உன் பாட்டனுக்கு நன்றி. அவராவது ஒரு வரலாற்றுக் குறிப்பைச் சுட்டினாரே. அந்தத் தோப்பில்தான் அரசிளங்குமரியுடன் வந்த எம் சுற்றத்தார் மூன்று பாடிவீடுகள் அமைத்துத் தங்கினர். ஒரு தலையாய பாடியில் அரசிளங்குமரி தங்கினாள். ஓய்விற்குப் பின்னர் ஊரின் உட்பகுதி நோக்கிப் புறப்பட்டாள். உடன் சிலரும் சென்றனர். செல்லச் செல்ல மேலும் அமைதி வாய்ந்த சூழலில் ஆழ்ந்து ஓதும் மந்திர ஓசை தெளிவாகிக் கொண்டே வந்தது.

*"புத்தம் சரணங்கச்சாமி!*

*சங்கம் சரணங்கச்சாமி!*

*தன்மம் சரணங்கச்சாமி!*

— எனும் ஒன்றுபட்ட ஓசை உள்ளத்தில் படிந்து நெஞ்சை நெகிழ்வித்தது. அங்கு ஒரு மேட்டு நிலப்பகுதி அளவான பரப்பளவில் இருந்தது. அதனைச் சுற்றி இலந்தை மரங்கள் செறிந்திருந்தன. அவ்விடத்திற்குப் 'பதரி திட்டா' என்று பெயர்.[1]

1. பாளி மொழியில் பதரி என்றால் இலந்தை. இலந்தை செறிந்த மேட்டுநிலம் 'பதரி திட்டா' எனப்பெற்றது.

அதில் புத்தத் துறவிகளின் ஓய்விடம் என்னும் விகாரை ஒன்றிருந்தது. அஃது அசோகப் பெருமன்னன் ஆணையால் எழுப்பப் பெற்றது. அதனைப் 'பதரி திட்ட விகாரை' என்பர். அண்டையில் துறவிகளின் தொழுகை இடமாம் 'சைத்தியமும்', உலாவும் 'ஆராமமும்' இருந்தன. அக்காலத்திலேயே இப் பதரிதிட்டையில் பேரறிஞர்கள் உறைந்தனர். புத்த நூல்களை ஆராய்ந்தனர். உரைகள் எழுதினர். அவர்களாலே[1] இப்பகுதி வெளியே அறிமுகம் பெற்றது. இப் பகுதியின் 'பதரி திட்டை' என்பதே இவ்வூரின் பெயராகவும் குறிக்கப்பட்டது.

இவ்விடத்தை அடைந்த அரசிளங்குமரி புத்தரைத் தொழுதும், புத்தச் சான்றோரிடம் வாழ்த்தும் அறிவுரையும் பெற்றும் மீண்டாள். எம் நாட்டார் இப்பெருநாட்டின் புத்தத் திருவிடங்களுக்கு வந்து செல்வதுண்டு. இலங்கையில் உள்ள மணிபல்லவம் என்னும் நயினாத் தீவினர் இங்குள்ள பதரிதிட்டா, பூம்புகார் முதலிய திருவிடங்களுக்குத் தூய பயணமாக வந்து செல்வர். வாணிபம் கருதியும் வந்தனர்.

பாடி வீட்டுக்குத் திரும்பியதும் வடக்கு நோக்கிப் பயணம் தொடங்கியது. கடற்கரை ஓரமாகப் பூம்புகாருக்குப் புறப்பட்டோம். பூம்புகாரை நெருங்க நெருங்க எம் அரசிளங்குமரியிடம் ஒரு புதுப்பொலிவு — எதையோ அடைய இருக்கும் பூரிப்பின் முன்னோட்டம் தென்பட்டது. இதற்கு ஒரு காரணம் உண்டு.'

'அஃதென்னவோ?'

'துடிக்காதே! உரிய இடத்தில் உரைப்பேன். வைகறைப் போதில் பூம்புகாரை அடைந்தோம். விடிந்தால் காவிரிபுகும் பட்டினமாம் பூம்புகாரின் இந்திர விழாவின் இறுதி நாள் விழா. இவ்விழா சித்திரைத் திங்கள் முழு நிலவு நாளில் துவங்கி இருபத்தெட்டு நாள்கள் நிகழும். இருபத்தெட்டாவது நாள் வைகாசி முழு நிலவு நாளாகும். அன்று கடல் நீரில் விளையாட்டுப்போட்டிகள் நிகழும். வெளிநாட்டாரெல்லாரும் வருவர்.[2] கலைகள் கொழிக்கும்.

1. தன்மபாலா என்பார் குறிப்பிடத்தக்கவர்.

2. "உருகெழு உவவுத்தலை வந்தென
பெருநீர் போகும் இரியல் மாக்களொடு
மடலவிழ் கானல் கடல் விளையாட்டு" — சிலம்பு:6: 111–113.

அந்நாள் அளவில் மூன்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இந்த விழாவில் மாதவியும் கோவலனும் அக்கடற்கரைக் கானலில் 'கானல் வரி' பாடி மனப்பூசலால் பிரிந்தனர்.

இப்பெருவிழாவைக்கண்டு . களிக்க வேண்டும்; புகாரில் அமைந்த புத்தச் சான்றோர்களைக் கண்டு அறவுரை பெற வேண்டும். இவை எம் அரசிளங்குமரி பீலிவளையினுடைய வருகையின் தெளிவும் வெளிப்படையுமான நோக்கமாகும்.

'அவ்வாறானால் புலப்படாததும், குறிப்பான நோக்கமும் உண்டோ' — என்று இடைவெட்டுப் போட்டேன். 'இருக்கலாம், பொறுமையாகக் கேள்!' — என்றது. நான் மற்றொரு முனையான வினாவை எழுப்பினேன். 'ஓர் ஐயம்! ஒரு வெளிநாட்டு அரசிளங்குமரி — அதிலும் கன்னிப்பெண் பெற்றோர், உற்றார் துணையின்றி இவ்வாறு நாடுவிட்டு நாடு வருவதுண்டோ?'

'அந்தக் காலம் மாந்தர் இயல்பும் நாகரிகமும் மணிமுடி சூடித் திகழ்ந்த காலம்' — என்று மறு போடு போட்டு மேலே தொடர்ந்தது.

'அத்துடன் பீலிவளை இவ்வாறு வந்ததற்குத் தனி அடிப்படை உண்டு. மேலே கேள்! கதிரவன் விடியலை அறிவித்துக் கொண்டிருந்தான். புகாரை அடைந்தோம். விழா நிகழ்ச்சிகளைக் காலை முதல் முழுநாளும் கண்டோம். புத்தச் சான்றோரை வணங்கி வாழ்த்தைப் பெற்றாள். அங்கு வெளிநாட்டுப் பெருமக்கட்கென அமைக்கப்பட்ட வளமனையில் தங்கினோம். மறுநாள் அங்கமைந்த 'இந்திரவிகாரை'[1] முதலிய பெயர் பெற்ற புத்தக்கோட்டங்களைக் கண்டு தொழுது முற்பகலைக் கழித்தோம். பிற்பகல் மாலையில் இவ்விடம் நோக்கித் திரும்பினோம்

## விதை ஊன்றப்பட்டது

அன்றையப் பகலிலும் முன்நாளும் அரசிளங்குமரி சோழ அரசகுலத்தாரையோ அலுவலர்களையோ காண நேரும்போது அவர்களிடம் ஏதேதோ உசாவினாள். கரையோரமாக எம் சிறுகலம் வந்தாலும் பீலிவளையின் ஆர்வப்பார்வை கரைப்பகுதியை

1. இவ்விகாரை அசோகப் பெருமன்னனால் எழுப்பப்பெற்று, அவர் மகன், மகேந்திரனால் விரிவு படுத்தப்பட்டது. பின்னர் 'மகேந்திர விகாரை' எனப்பட்டது.

நோட்டமிட்டுவந்தது. ஓர் உப்பளப் பகுதியில் வந்தோம். அதனை அடுத்து ஒரு பெரும் மணல்மேடு.[1] அங்கு இளவரசி இறங்கிக் கரையோரமாகவே நடந்து வந்தாள். ஓர் அழகான பசுஞ்சோலை எம்மை அழைப்பதுபோலத் தென்றலால் தாலாட்டப்பெற்று அசைந்து கொண்டிருந்தது. அங்கு புன்னை மரங்கள் தம் பசுமை அலையால் கடல் அலையைப் பழித்தன. அங்குப் பூத்துக் குலுங்கிய மலர்க்காடு இளவரசி உள்ளத்தில் ஒரு கிளர் உணர்வைத் தூண்டி இழுத்தது. அந்த இடத்தைத்தான் அவள் தேடிவந்ததுபோல் தோன்றியது. கரைப்பக்கம் திரும்பிக் கலத்தை நிறுத்திவைக்குமாறு கைக்குறிகாட்டிக் கரைக்குள் சென்றாள். சோலையை நெருங்க நெருங்க அவள் துள்ளும் உணர்வில் கொப்பளித்துச் செல்வது போல் இருந்தது. தோழியும் பின் தொடர்ந்தாள். சோலைக்குள் புகுந்தாள். அழைப்பாரின்றியே சென்றாள். சோலை நடுவே ஒரு பூப்பந்தலில் அழகிய மேடை. மேடையில்... மேடையில் பூமான் சோழப்பெருமன்னன் நெடுமுடிக்கிள்ளி அமர்ந்திருந்தான். எம் பீலிவளைதான் முதலில் நோக்கினாள். பூரிப்பின் பிறையானாள். திரும்பிவிடுவோம் என்றழைத்த தோழியைக் கையமர்த்தியதுமட்டு மன்றித் தன்னைத் தொடராமல் செல்லுமாறு கைகாட்டி உணர்வின் பிழம்பாக நடந்தாள். ஒரு புன்னைமர மறைவில் தோழி நின்றாள்.

இடம் சோலை; நேரம் மாலை; வீசுவது தென்றல்; பேசுவது குயில்; உலவுவது மணம்; குலவுவன புறவினம். இவற்றிடையே எழில் கொஞ்சும் அரசிளங்குமரி; இளமை குலுங்கும் அவள் பார்வை; ஆண்மை கொழிக்கும் சோழப் பேரரசன். என்ன கதை துவங்கும்? அக்கதை அரும்பியது. குமரியைக் கண்ட மன்னன் வியப்பைவிட உணர்ச்சியின் விறுவிறுப்பில் ஏறி நின்றான். 'யாரிவள்' எனும் எண்ணத்தை மீறிக் காதல் மயக்கம் தலைதூக்கியது.

அதற்குமேல் தோழி நின்று பார்க்கும் நிலை இல்லை. அவள் திரும்பிவிட்டாள்.

---

1. "உம்பலம் தழீஇய உயர்மணல் நெடுங்கோட்டுப்
பொங்குதிரை உலாவும் புன்னையங் கானல்"
மணிமேகலை: 24:27,28

திரும்பிய தோழி கடற்கரைக்கு வந்தாள். காத்துக் கிடந்த ஏவலர் செய்தியறிந்தனர். ஒருவனைத் தவிர மற்றவரிடம் இச்செய்தி ஏதும் புதுமையான வியப்பை ஏற்படுத்தவில்லை. அரைகுறையாகப் புரிந்த ஒருவன் சொன்னான்:

'அரசிளங்குமரி பிறந்த நாளில் கணி சொன்னது உண்மை யாகிவிட்டது'. ஒன்றும் புரியாதவன் கேட்டான்:

'என்ன சொன்னான் கணி? இதையா அப்பொழுதே சொன்னான்? அரைகுறை சொன்னான்: 'ஓ! நீ அப்போது சிறுவன்'.

'இப்பெண்குழந்தை எதிர்காலத்தில் பருவம் அடைந்ததும் சோழகுல மன்னன் ஒருவனால் கூடப்பெற்று அங்குத் தங்காது மீள்வாள்' — என்றான்.

எல்லாம் புரிந்த மூன்றாமவன் முடித்துப் பேசினான்:

கணி சொன்னதால் மட்டும் இது இப்போது நடந்து விடவில்லை. இந்தச் செய்தி மறைத்து வைக்கப்பெற்ற செய்தியன்று; பீலிவளை அறியுமாறும் அவ்வப்போது பேசப்பட்டு வந்ததே! நாளொரு மேனியாய் அவள் வளர்ந்த போது இந்த எண்ணமும் பொழுதொரு வண்ணமாய் அவள் உள்ளத்தில் வளர்ந்து வந்தது. இவ்வாண்டு வந்து விட்டாள்; நடக்கின்றது. அஃதிருக்கட்டும் எப்பொழுது அரசிளங்குமரி — இல்லை, இல்லை அரசி மீள்வாளோ? என்று வினவினான்.

தோழி கைகளை விரித்தாள்.

ஒருவன் 'எப்படியானாலும் தாய்த்தன்மையுடன்தான் வருவாள்' என்று கிண்டலாக ஓர் உண்மையையும் சொல்லி வைத்தான். வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். புகார்க்குள் செல்வதும் மீள்வதுமாகக் கலத்தை ஓட்டினர்.

ஒரு திங்கள் கழிந்தது. ஆனித்திங்களின் தொடக்கத்தில் ஒரு நாள் அந்தி மாலை நேரம் திடீரென்று பீலிவளை விரைந்து ஓடி வந்தாள். மரக்கலத்தில் ஏறத் துடித்தாள்; ஏறினாள். மரக்கலம் விரைந்து இங்கு வந்தது. இடையில் ஒன்றுதான் கூறினாள். 'மன்னர் பட்டினத்திற்குள் சென்றுள்ளார். அந்த நேரம் பார்த்து வந்தேன். வந்தால் விடமாட்டார்; விரைவில் கலத்தை விடுங்கள்' என்றாள்.

தோழி சொன்னாள். 'அவ்வளவு அன்புள்ளவரானால் நாகநாட்டிற்கே வந்தாலும் வந்துவிடுவாரே'.

பீலி, போடி போ! இந்த ஒரு திங்களிலும் நான் யார் என்பதை அறிய முயன்று அவர் தோற்றார்[1] என்று பெருமையடித்துக் கொண்டாள். பேச்சு நின்றது. இங்கடைந்து பாடிவீடுகள் கலங்களில் அடைய விரைந்தடித்துக் கலம் புறப்பட்டது. விரைவில் என்னை அணித்திருந்த தோழியும் மோதியடித்து ஏறினாள். கம்பி ஒன்றில் சிக்கிய நான் உடைந்தேன். கரையில் விழுந்தேன். எனக்காக அவர்கள் பயணம் நிற்குமா என்ன? நான் உடைந்த வளையல். காலப்போக்கில் அலைகளால் தள்ளப்பட்டு இப்பொழுது இங்கு கிடந்து உன் காலால் உதைபட்டேன்'.

நான் ஓர் ஐயத்தை எழுப்பினேன். பீலிவளையைப் பிரிந்த மன்னன் என்ன செய்தான் என்பதை அறியாயோ?

வளையல் துண்டு: ஆம்! அதன் பின்னர் அறிந்தேன். காணாத மன்னன் தானே முன்நின்று அவளைத் தேடினான். இப்பகுதிக்குள் வந்தான். இங்கே இருந்த புத்தச்சாரணரைக் கண்டான்: உசாவினான், அவர் கூறினார்:

'மன்ன, நீ குறிப்பிடும் பெண்ணை யார் என்று உணர்கிறேன். இப்போது யான் அவளைக் காணேன். அவளைப்பற்றி அறிவேன். அவள் உன்னிடம் வரமாட்டாள். அவள் வயிற்று நின் மகன் வருவான். இந்நாள் இந்த நினைவை ஒதுக்கி எதிர் காலத்தில் உன் கடமைகளைச் செய்க' என்று கூறினார்.

## கடலில் குழந்தை

மன்னன் போனான். நான் கிடந்தேன். பத்துத்திங்கள் கழிந்தன. மறு சித்திரையின் முதல் கிழமையும் வந்தது. ஒரு நாள் நள்ளிரவு. முழு நிலவுக்கு இன்னும் நான்கைந்து நாள்கள் இருந்தன. யாரோ ஒருவன் கடலிலிருந்து கரையேறித் தள்ளாடி நடந்து வந்தான். களைத்தவனாக என் அண்டையில் படுத்தான்.

---

1. "ஒருமதி எல்லை கடப்பினும் உரையாள்
பொறுவது பூங்கொடி போயினள் அந்நாள்"
— மணிமேகலை 24:42,43.

'உயிரோடு தப்பிப் பிழைத்தாயே! அந்தோ கலம் கவிழ்ந்ததா? எந்நாட்டவன் நீ ?' — என்றேன்.

பெருமூச்சுடன் பேசினான்: நான் பிழைத்தது இருக்கட்டும். அந்தப் பச்சிளங்குழந்தை என்ன ஆயிற்றோ? அதற்குப் பொறுப்பேற்று வாங்கி வந்த எம் கப்பல் தலைவர் கம்பளச் செட்டியார் என்ன ஆனாரோ?' — என்றான்.

'என்ன பச்சிளங் குழந்தையா? என்ன புதிர் போடுகிறாய்? சற்று விளக்கக்கூடாதா?' — என்றேன்.

புதுச்செய்தியைக் கூறினான்:

'எம் தலைவர் கம்பளச் செட்டியார், புகார் நகரத்துப் பரதவர். கடலோடும் வணிகர். சில திங்களுக்கு முன் வணிகம் கருதிப் பண்டப் பொதிகள் ஏற்றிய பாய்மரக் கப்பலுடன் கடாரத்திற்குச் சென்றோம். எங்கள் தலைவரும் உடன் வந்தார். கீழ்க்கடலில் செல்வோர் செல்லும்போதும் மீளும் போதும் மணிபல்லவத் தீவில் இறங்கி அங்கமைந்த புத்த மேடையை — பீடிகையைத் தொழுவது பழக்கம். கடார வணிகத்தை முடித்துக்கொண்டு பண்டமாற்றாகப் பெற்ற ஆக்கப் பண்டங்களுடன் மீளும்போது மணிபல்லவத்தில் இறங்கினோம்.

'அங்கு நாகநாட்டுப் பீலிவளை எங்கட்கு முன்னரே வந்திறங்கி யிருந்தாள். ஏவற் சுற்றத்தாருடன் ஓர் அழகிய பச்சிளங்குழந்தை இருந்தது. அக்குழந்தை பிறந்து பத்தே நாள்கள் ஆகியிருக்கலாம். அதன் கையில் ஆதொண்டைக் கொடியாலாகிய அணி இருந்தது. அது நாகநாட்டு வளப்பத்தின் அறிகுறி போலும். அக்குழந்தை பக்குவமான பேழையின் உள்ளே அமளி அமைந்த தொட்டிலில் கிடத்தப்பெற்றிருந்தது.

'எம் தலைவரும் யாமும் புத்த பீடிகையை வணங்கி மீளுங்கால் பீலிவளை எம் தலைவரை அணுகி யாரென்று உசாவினாள். தலைவர் தம்மை அறிமுகஞ் செய்தார். புகார் நகரம் செல்லும் தக்கவர் ஒருவரை எதிர்நோக்கி யிருந்த அவள் அங்கிருந்த பேழையைக் காட்டி 'இக்குழந்தை சோழமன்னர் நெடுமுடிக் கிள்ளிக்கு உரிய குழந்தை. இதனை அவர்பால் சேர்த்துதவ

வேண்டும்' — என்று வேண்டினாள்.[1] தான் வர இயலாதவள் என்பதையும் குறிப்பாக உணர்த்தினாள்.

பீலிவளை — நெடுமுடிக்கிள்ளி தொடர்புச் செய்தி இலைமறை காயாகப் பலராலும் அறியப்பட்ட செய்தியாகையால், அதனை அறிந்திருந்த எம் தலைவரும் மிக மகிழ்ச்சியுடன் இசைந்தார். வணங்கி, பேழையுடன் குழந்தையைப் பெற்றுக் கொண்டார்.

சோழ நாட்டு அரசிளங்குமரனுடன் வந்த எம் மரக்கலம் சோழநாட்டுக் கடற்கரையை அடைய ஒரு நாழிகைப் பயணம் இருந்தது. திடீரென்று பெரும் காற்றும், கடற்கொந்தளிப்பும் எழுந்தன. மரக்கலத்தைப் பலவகையிலும் கரைசேர்க்க முயன்றோம். முயற்சிகள் பயனற்றுப் போயின. நடுயாம இருளில் கலம் கவிழ்ந்தது.[2] அந்நேரத்திலும் எம் தலைவர் பேழையைப் பிடித்த வாறே நின்றார். நான் அலைகளால் மோதுண்டு இங்கு கரையில் தள்ளப்பட்டேன். கரைக்குப் பக்கத்திலேயே இது நேர்ந்ததால் பலரும் பிழைத்திருக்கலாம். குழந்தை இருந்த பேழையும் மிதக்கும் அமைப்புடையது. குழந்தை என்ன ஆயிற்றோ? எம் தலைவர் சோழப் பெருமன்னரை எவ்வாறு காண்பாரோ? இப்பழிக்கு அஞ்சி என்ன ஆனாரோ? அறியேன்' — என்று கூறி முடித்தான்.

விடிந்தது. கடற் கொந்தளிப்பும் காற்றும் குறைந்து வந்தன. அந்தச் சூழலிலும் சோழநாட்டு வீரர் கடற்கரையெல்லாம் தேடி அலைந்தார்கள். கம்பளச் செட்டியார் உயிர் பிழைத்துக் கரை சேர்ந்து விட்டார். ஆனால், குழந்தை இருந்த பேழை கடலில் விழுந்தது. இச்செய்தியை மன்னர்பால் கூறியுள்ளார். மன்னன் உள்ளத்திலும் கொந்தளிப்பும் புயலும் புகுந்தன. அயர்ந்து சோர்ந் தான். விரைந்து தேடச் செய்தான். முடிவு 'குழந்தை இறந்திருக்க வேண்டும்' என்பதாயிற்று.

1. "..................... பீலி வளைதான் பயந்த
புனிற்றிளங் குழவியைத் தீவகம் பொருந்தித்
தனிக்கலக் கம்பளச் செட்டிகைத் தரலும்"

— மணிமேகலை 29–5–7

2. "இலங்கு நீர் அடைகரை அக்கலம் கெட்டது" — மணி 25:19

அன்று பீலிவளை பிரிந்தபோது புத்தச் சாரணர் கூறிய சொற்கள் அவன் நினைவில் அவனை ஊசலாட்டின. "புதல்வன் வரூஉம் அல்லது பூங்கொடி வாராள்" என்றதைவிட 'வந்த புதல்வனும் வாரிக்கொள்ளப்பட்டானே' என்று கவன்றான். வேறு நினைவற்றவனானான். நேரில் கடற்கொந்தளிப்பு புகார் நகரை மிகக் கடுமையாகத் தாக்கியது; பெரும் அந்தத் திருநகரம் கடலுக்குள் மூழ்கியது. இதனால் அவ்வாண்டு நிகழவிருந்த இந்திரவிழா நிகழாது போயிற்று.

கடல் பொங்கியதால் ... கடலோரப் பகுதி ஒரு கி.மீ. அளவிற்கு மேல் கடலில் மூழ்கியது.

புகார் மக்களில் பிழைத்தோர் பலர் நிலப்பகுதிக்குள் ஓடினர். மன்னன் நெடுமுடிக்கிள்ளி அரசியற் சுற்றமும் இன்றி ஒரு தனித்தவனாகப் புகார் ... விட்டுப் போயினான்;[1] உறையூர் அடைந்தான்.

புகார் நகரத்திலிருந்து புத்தத் துறவியரும் இங்கு வந்தடைந்தனர். நாற்புறப் பகுதிகளுக்கும் சிதறிய மக்களிற் பலர் இப்பகுதியை அடைந்து வாழத் தொடங்கினர். இப்பேரூர் நகராவதற்கு இது அடிப்படையாயிற்று. கடற் கொந்தளிப்பில் காணாத நாகர் நாட்டுக் குழந்தைபற்றி நாளடைவில் புதுச் செய்திகள் முளைத்தன.

'மிதப்புப் பேழை ஒதுங்கியது. குழந்தையை உயிருடன் எடுத்து எவரோ வளர்த்து வருகின்றார்' என்று ஒரு பேச்சு.

"ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்

சான்றோரும் உண்" டன்றோ (4)

'அவ்வாறு வளர்ந்தது' என்று ஒரு கூற்று. அக்குழந்தை 'உயிருடன் இருந்தான்' என்பது ஓர் உண்மை.

## அலை தந்த குழந்தை

அவன் கடல் அலைகள் – திரைகள் தர வந்து உயிரும் கொண்டமையால் " திரை தர வந்தவன்" என்ற வழக்கால் "திரையன்" எனப் பெற்றான். இஃது ஒரு பேருண்மை.

1. "விரிதிரை வந்து வியன்நகர் விழுங்க
ஒருதனி போயினன் உலக மன்னவன்"– மணி. 25:203,204.

பீலிவளை சுற்றியனுப்பிய தொண்டைக் கொடியின் குறியால் அவன் தொண்டைமான் எனப்பெற்றான். அந்த வரலாறு இருக்கட்டும். ஊர்ச் செய்திக்கு வருவோம்.

குழந்தை காணாத செய்தி நாகநாட்டார்க்குத் தெரிந்தது. குழந்தையைப் பிரிந்த கவலை யிருந்தாலும் உரியவரிடம் சேர அனுப்பியதையும், தன் குடும்பம்பற்றி அலரும் பழியும் நேராது போனதையும் எண்ணிப் பீலிவளை அமைதியுற்றிருந்தாள். அந்நாட்டரசர் வளைவணர்க்கும், இப்பகுதிபால் ஆர்வக் கருத்து கொண்டிருந்த மக்களுக்கும் புகார் நகரம் அழிந்தது பெருங் கவலையைத் தந்தது. குழந்தை பற்றிய செய்தியறியப் பீலிவளை விரும்பினாள். குழந்தை உயிரோடிருக்கும் என்னும் நம்பிக்கையில் ஐயத்தையே புகவிடாத அவள் இப்பகுதிக்கு ஒரு குழுவை அனுப்பினாள்.

நாகநாட்டார் வந்து குழந்தை பற்றி உசாவி அறிந்தனர். காலப்போக்கில் குழந்தையைப்பற்றிய செய்தியறிய வந்தவர் போன்ற பலர் இங்கே நிலைத்துத் தங்கினர்.

'ஓர் உண்மையான வரலாற்றைக் கூறினாய். வளையல் துண்டே! நீ வாழ்க! ஆனால் எதற்கும் புராணம் பேசும் இம்மண்ணில் உள்ளோர் 'நாகம் பட்டினம்' என்று கொண்டு பாம்புப் பட்டினமாகக் கண்டு கதை கட்டினர். "நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பை" வணங்கும் போக்கில் நாகத்தைச் சூடிய சிவபெருமானுக்கு — நாகநாதருக்குத் தனியே நாகநாதர் கோயில் எழுப்பினர். நாளும் நாகப்பாம்பு அங்கு வந்து, அங்கு வைக்கப்படும் முட்டையைக் (சைவத்தை மறந்து) குடித்துப் போகிறது என்று சான்றும் கூறி வருகின்றனர்,' என்றேன்.

வளையல் துண்டு: 'இனி நீயாவது தோலுரித்துக் காட்டு! உன் நகரம் நாகர்பட்டின வரலாற்றை எழுதிப் பதிந்து வைக்கலாமே' என்றது.

"வளையல் துண்டே! வா என்னுடனே இரு! உன் கருத்துப் படியே நாகர்பட்டின வரலாற்றைப் 'பதரி திட்டை' யின் இலந்தை முதல் இன்று வரை எழுதுவேன். .இதில்,

**வரலாற்று நாகையைத் திறந்து**
**பெயர் பெற்ற நாகையைப் பதிந்து,**
**ஆட்சி நாகையை நிறுவி,**
**நகரமைப்பு நாகையைக் காட்டி,**
**மக்கள் நாகையை விரித்து,**
**சமய நாகையை விளக்கி,**
**வணிகம், தொழில் நாகையை எழுதி,**
**கற்றவர் பயிலும் கடல் நாகையைப் படிக்கச் செய்து,**
**இன்று, நாளை நாகையை நிறைவேற்றுவேன்.**

இப்பணி தொய்வின்றி முனைப்பாக நிறைவேற்றப்பட நீ என்னுடனே இரு. உன்னுடன் இருப்பது எனக்கொரு ஊக்கமாகும்' — என்றேன்.

வளையல் துண்டு பட்டென்று, 'உடைந்த வளையல் துண்டால் ஊக்கம் பிறக்கும்' என்ற நம்பிக்கையே தாழ்வானது. உனக்கு இயற்கையாய் உண்டாகாததை நான் உண்டாக்குவேன் என்பதும் ஒரு புராணந்தான். அறிவுத் தெம்பிருந்தால், எழுத்தாற்றலிருந்தால், சான்றுகள் காட்ட இயலுமானால் மொழி ஊற்றத்தோடும், நாட்டுப் பற்றோடும் எழுதுகோலைப் பிடி, போ! பல்லாண்டுகாலம் பழகிக் கிடக்கும் இம்மண்ணே எனக்கு விருப்பமானது; என்னை விடு' என்றது. அதன் விருப்பப்படியே அங்கே விடுத்தேன்.

## இ. அசோகன் பதிவு

நாகை வரலாற்றிற்குக் கிடைத்த முதல் தடம் அசோகப் பெருமன்னன் இங்கு புத்தப்பள்ளியாம் விகாரை ஒன்றை எடுப்பித்தான் என்பதே.

கதைப்பாங்கான இக்கட்டுரையில் வளையல்துண்டு கற்பனை. மற்றைக் கருத்துக்கள் வரலாற்றுச் சான்று கொண்டவை; இலக்கிய அடித்தளம் கொண்டவை; சொல் பின்னணி உடையவை.

தமிழ் நாட்டில் நாட்டு வரலாறோ, மாந்தர் வரலாறோ, தொகுப்பாக வரையறையுடன் எழுதிவைக்கும் நோக்கம் முன் காலத்தில் தோன்றவில்லை. புதையலைப் போலத்தான் கிடைக் கிறது. தேடித் தோண்டும் ஆர்வத்திலும் புதையல் கிடைக்கும். வேறு பணிக்குத் தோண்டும் போதும் எதிர்பாராது கிடைக்கும். தமிழ்நாட்டில் வரலாறும் அத்தகையதே. நாகை நகர் வரலாறும் இதில்

விடுபடுமா என்ன? இருப்பினும் புதையல்கள் இல்லாமற் போகவில்லை.

அசோகர் கல்வெட்டு(5) சோழ பாண்டிய நாடுகளில் புத்தப் பள்ளிகளை எழுப்பித்ததைக் கூறுகிறது.

சீனப்பயணி யுவான் சுவாங் (கி.பி. 629–645) தன் பயணக் குறிப்பேட்டில், அசோகன் எழுப்பித்த புத்தப் பள்ளியை நாகபட்டினத்தில் தான் கண்டதாகக் குறித்துள்ளான்.

அசோகன் கி.மு. 270இல் அரசுகட்டிலேறினான். அவ்வாண்டே கலிங்க நாட்டின் மேல் படையெடுத்து வென்றான். வெற்றி வெளிச்சத்தில் கலிங்க நாட்டின் பேரழிவு கரும்புள்ளிகளாகத் தோன்றியது. செந்நீர் காட்டிய இப்புள்ளிகள் அசோகன் உள்ளத்தைத் தைத்தன. போர் எண்ணம் ஒழிந்தது; சீர் எண்ணம் தோன்றியது. அச்சீர் புத்தமதம் எழுப்பிய உணர்வுச்சீர் ஆகியது. புத்தச் சார்பினன் ஆனான். நாடெங்கும் புத்த மதத்தைப் பரப்ப முனைந்தான். புத்தச் சான்றோரைப் பல்லிடங்களுக்கும் அனுப்பினான். தன்மகன் மகேந்திரனையும் மகள் சங்கமித்திரையையும் இலங்கைக்கு அனுப்பினான். புத்தச் சான்றோர் இருந்த பகுதிகளில் புத்தப் பள்ளிகளை எழுப்பித்தான். அவ்வகையில் எழும்பியதே நாகர்பட்டினப் புத்தப்பள்ளி. அது பதரி திட்டையில் எழுப்பப் பட்டதால் 'பதரி திட்ட விகாரை' எனப் பெற்றது. அப்பகுதியில் முதன் முதலில் தோன்றிய விகாரையாகையால் 'ஆதி விகாரை' என்று பின்னர் சிறப்பித்துக் குறிக்கப்பெற்றது.

இவ்விகாரை கி.மு. 265 – 270 இடைப்பட்ட காலத்தில் கட்டப் பெற்றிருக்கலாம். எனவே, இன்றைக்கு (1992) இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பத்திரண்டு (2252) ஆண்டுகளுக்கு முன்னர் நாகர்பட்டினம் பகுதி 'பதரி திட்டா' என்னும் பெயரில் விளக்கமுற்றது.

ஓரிடத்தில் புத்தப்பள்ளி எழுப்பப்பெற்றது என்றால் அங்கு முன்னரே புத்தத் துறவிகள் இடம் பெற்றிருக்க வேண்டும். இவ்வகையில் நோக்கினால் கி.மு. 270 – இற்கு முன்னரே இவ்விடம் துறவிகள் உறைவிடமாக அமைந்தமை புலப்படும்.

## ஈ. ஊறுபாட்டால் ஊர்

இவ்விடத்தைப் புத்தத்துறவிகள் நாடி வந்தார்களா, ஏதோ சூழலால் இடம் பெற்றார்களா, என்னும் வினாக்களை ஒரு

பொருத்தமான விடை கருதி எழுப்பலாம். ஏதோ ஒரு சூழலால்தான் இங்குப் புத்தத் துறவிகள் புக நேர்ந்தது. என்ன அது?

நாகர்பட்டினத்திற்குத் தெற்கே கரையோரத்தில் 7 கி.மீ. தொலைவில் 'பரவை' என்றொரு சிற்றூர் உள்ளது. இது நாகை – திருத்துறைப்பூண்டிச் சாலைக்கும் கடற்கரைக்கும் இடையில் அமைந்த சிற்றூர். இவ்வூர்ப்பகுதி கடலுக்குள் 1 கிலோ மீட்டர் தொலைவில் கடலில் ஒரு நீர்ச்சுழல் உள்ளது. அவ்வழி வருவோர் இன்னும் கவனங்கொண்டு ஒதுங்கி வருகின்றனர். இவ்விடத்தில் பல ஊறுபாடுகள் (விபத்துகள்) காலங்காலமாக நேர்ந்துள்ளன. புயற் காலங்களில் இவ்விடத் தாக்குதல் அதிகமாகும்.

ஒருமுறை 15ஆம் நூற்றாண்டில் இன்னொரு ஊறுபாடு நேர்ந்தது. பர்மாநாட்டு 'வெகுவில்'லில் ஆண்ட இளமாபதி என்னும் மன்னன் 11 புத்தத்துறவிகளையும், சித்ரதூதன் என்பவனையும் இலங்கைக்குப் புத்த சமயத் தொடர்பான அலுவல் கொடுத்தனுப்பி னான். அவர்கள் பணி முடித்துத் திரும்புகையில் மரக்கலம் புயலில் அடிபட்டுக் கீழைக் கடற்கரையில் ஒதுங்குகையில் அடியில் சிக்கிக் கவிழ அனைவரும் நீந்தி நாகர்பட்டினக் கடற்கரை ஏறினர் என்றும் அங்கமைந்த புத்தர் சிலையை வழிபட்டனர் என்றும் பர்மா தேசத்துக் 'கல்யாணி நகர்க் கல்வெட்டு' ஒரு விவரம் தருகின்றது.

இது போன்று இலங்கையிலிருந்து பூம்புகார் வருவோர் பலமுறை இவ்விடத்துச் சுழலால் ஊறுபாடு பெற்றுள்ளனர். 18ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் இலங்கையிலிருந்து தரங்கம்பாடி சென்ற கிறித்துவப் பாதிரிமார்கள் பரவைப்பகுதிச் சூழலில் சிக்கி நாகையில் கரையேறினர். இங்குள்ள வாய்ப்பு கொண்டு முதன் முதலில் கல்வி நிலையம் ஒன்றைத் தொடங்கினர் என்பதும் ஒன்று.

இவை போன்று அவ்வப்போது காலங்காலமாக இந்த ஊறுபாடு நிகழ்ந்து வந்துள்ளது. இவ்விடம் அத்தகையது என்பதற்குச் சங்க இலக்கியத்திலும் சான்று உள்ளது. அதனை வரலாற்று மூன்றாவது கல்லில் காண வேண்டியுள்ளது.

நீர்ச்சூழல் உள்ள ஊர்ப்பெயர் 'பரவை' என்பது. 'பரவை' என்றால் கடல் என்று பொருள். நீர்ச்சூழலால் பொங்கும் கடல் அடிக்கடி இந்நிலப்பகுதியில் புகுந்து கடற்பாங்கான நிலையைத் தோற்றுவித்தும் வடிந்தும் வந்தமையால் கடல் என்னும் பரவைப் பெயர் கொண்டது.

பூம்புகார் உலகப் புகழ் பெற்றிருந்த காலத்தில் அந்நகர்க்கு வருவோர் பெரும்பாலும் இலங்கை வந்தே வந்தனர். அசோக மன்னனால் அனுப்பப்பெற்று இலங்கையில் புத்தத்தைப் பரப்பிய அவன் மகன் மகேந்திரன் அந்நாட்டு மன்னனையே புத்தமதத்தவ னாக்கினான். அது நழுவாது இன்றும் அரச மதமாகத் திகழ்கிறது. தென்னாட்டில் புத்த சமயத்தார் இருந்ததைவிட இலங்கையிலேயே அதிக அளவில் முழுப் பிடிப்போடு வாழ்ந்தனர். அடுத்துச் சோழநாட்டில் பூம்புகாரில் அன்னார் உறைந்தனர். அடிக்கடி இலங்கைக்கும் புத்தத் துறவியர் பயணம் நிகழ்ந்தது. வெளிநாட்டார் பயணமும் நிகழ்ந்தது. நாகையின் பழைய பெயராகிய 'பதரி திட்டா'வை அறிமுகம் செய்யும்'சாசன வமிசம்' "சிங்களத் தீவின் அண்மையில் உள்ள தமிழ்நாட்டு பதரி திட்ட[1] என்ற தொடர் இலங்கையைக் குறித்தே அடையாளம் சொல்கிறது.

எனவே 'இலங்கையிலிருந்து பூம்புகார் வந்த மிக முற்காலப் புத்தத் துறவியர் 'பரவை' எனும் சிற்றூரின் கடல் எல்லை நீர்ச்சூழலில் சிக்கி ஊறுபாட்டால் கரையேறி உள்ளனர்.கரையேறிய இடம் பெரும் ஊராக இன்றிப் பரதவ மக்கள் வாழும் இடமாக அமைதிச் சூழலில் இருந்ததைக் கண்டனர். தனிமைப் பாதுகாப்பாக அங்கிருந்த இலந்தை செறிந்த மேட்டு நிலத்தைத் தேர்ந்து, உறைந்து அதனை ஒரு புத்தக்களமாகத் திகழ்வித்தனர். இவ்வாறு கொள்வது இயல்புப் பொருத்தமானதாகும்.

## உ. வரலாற்று நிகழ்வுக் கற்கள்

எனவே, ஒரு ஊறுபாட்டில் உருவான இடமே 'பதரி திட்டா'. இதன்படி இதன் காலத்தை அசோகர் காலத்திற்கு முன்னர் — ஏறத்தாழ நோக்கினால் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில்[2] கொள்ளலாம். இதனை நாகைக் களத்தின் வரலாற்றுத் தொன்மையாகக் கொள்ள வேண்டும். இக்கால எல்லையாக வரலாற்றின் முதற்கல்லை நாட்டலாம். நாட்டினாலும் அம்முதற்கல் இறுகி நிற்காது. காலத்தில் கி.மு. வை முன்னோக்கி அசைந்தே காட்டுவதாகும். இது நாகர்பட்டினத்தின் வரலாற்றுக் கல்.

1. "ஸீங்களா தீபஸ்வ சமீபே
டமிளாரட்டே படரதித்த யிறெ"

2. புத்தர் நிறைவு பெற்ற கி.மு. 483இற்கு அண்மைப் பிற்காலம்

இங்கு 'கல்' என்று குறிக்கப்படுவது வரலாற்றின் 'மைல் கல்' அன்று. கல்லுக்குக் கல் ஓர் அளவு விதிக்கப்பெற்று ஒரே அளவைக் கொண்டிருப்பதே மைல் கல். இங்கு அவ்வாறு வரலாற்றை இடைவெளி ஒத்துள்ள அடுக்கடுக்காகக் காண இயலவில்லை. 'எல்லைக்கல்'லும் அன்று. உரிமை கொள்ள அளந்து எல்லையிடப் பெறுவது எல்லைக்கல். இங்கு உரிமையும் இல்லை. அளவு எல்லையும் இல்லை. எனவே, எல்லைக்கல்லும் அன்று. மற்று என்ன கல்?

காலப்போக்கில் நிகழ்ந்த 'நிகழ்வு'களில் அடையாளங் காணுமாறு சுவடி பதிந்த நிகழ்வுகளைக் கொண்டு பதிவதால் இது **'வரலாற்று நிகழ்வுக்கல்'.**

இவ்வகையில் **முதல் நிகழ்வுக்கல்** ஊறுபாட்டால் நேர்ந்ததாக முன்னே கண்டதாகும். இரண்டாவது **நிகழ்வுக்கல்** இலந்தை செறிந்த மேட்டால் பெயர் பெற்ற 'பதரி திட்டா' என்னும் இடப்பெயர் கொண்ட **புத்தத் துறவுக்களம்.** இதன்காலம் முன்குறித்த ஏறத்தாழ கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவு.

**மூன்றாவது,** அசோகப் பெருமன்னன் எடுத்த பதரிதிட்ட விகாரை என்னும் **நிகழ்வுக்கல்.** இது மிக உறுதி வாய்ந்ததாய் நிற்கும் கல். இக்கல் நாகை நிலத்தைப் **புத்தத் திருத்தளமாகக்** காட்டுவது. இதன் காலம் கி.மு. 270–265 இடைப்பட்டது.

**நான்காவது,** சங்க இலக்கியம் நாட்டியுள்ள கல். இஃது ஆய்வில் கிடைக்கும் புதையல். திரைதர வந்த தொண்டைமான் இளந் திரையன் தொடர்புடன் வளர்ந்த இலக்கியம் காட்டுவது.

## பெரும்பாணாற்றுப்படைக்கல்

கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் சங்கப்புலவர் பத்துப்பாட்டில் கரிகாற்பெருவளத்தானைப் பாட்டுடைத் தலைவ னாகக் கொண்டு பட்டினப்பாலையையும், அவன் பெயரன் தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பெரும்பாணாற்றுப் படையையும் பாடியுள்ளார். பிற்கால ஒட்டக்கூத்தர், விக்கிரம சோழன், அவன் மகன் இரண்டாம் குலோத்துங்க சோழன், அவன்மகன் இரண்டாம் இராசராச சோழன் ஆகிய மூவர் காலத்தும் உடன் வாழ்ந்து வந்தவர். மூவர் மேலும் நூல்கள் படைத்தவர். அவர் போன்றே சங்க கால உருத்திரங்

கண்ணனாரும் கரிகாற் பெருவளத்தான், அவன் மகன் நெடுமுடிக்கிள்ளி, அவன் மகன் தொண்டைமான் இளந்திரையன் ஆகிய மூவர் காலத்தும் நெடுநாள் வாழ்ந்தவர். இருவர்மேல் இரண்டு பாட்டுகள் படைத்தவர். பெரும்பாணாற்றுப் படை இளந்திரைய னிடம் காஞ்சியில் பரிசு பெற்று மீளும் ஒரு பாணன், வறிய பாணன் ஒருவனை இளந்திரையன்பால் வழிப்படுத்தும்— ஆற்றுப்படுத்தும் பாட்டு. ஆற்றுப்படுத்தும் தமிழ் இலக்கிய முறையை வாய்ப்பாக்கிக் கொண்டு இளந்திரையன் சிறப்புடன் ஆளும் காஞ்சியை அடைய நெடிய வழியையும் சொல்கிறார். அவ்வமைப்பை நோக்கினால் பரிசு பெற்று மீண்ட பாணன் பாண்டி நாட்டு வட எல்லையில் வைத்து அன்றையச் சோழநாட்டுத் தெற்கெல்லையில் எளிய பாணனுக்கு வழி சொல்லி அனுப்புவதாகக் கொள்ள வேண்டும்.

வழியில் உள்ள பல ஊர்களையும், பலவகை மக்களையும், பல வாழ்க்கைப் பண்பாடுகளையும் விளக்குகிறார். அவ்வழியில் சோழ நாட்டுக் கடற்கரைக்குள் புகவேண்டிய பாணன் சில ஊர்களைக் கடந்து வடக்கு நோக்கிச் செல்ல வேண்டுமெனக் கூறிப் 'பட்டினத்தை அடைவாய்' என்று குறிக்கிறார். அதற்கு,

**"நீர்ப்பெயற் றெல்லை போகி.....**

**..............................................**

பட்டின மருங்கு அசையின்" (319 – 336)

என்று 'நீர்ப்பெயற்றெல்லை' என்னும் ஊரைக்கடந்து அடுத்து வளமிக்க துறைமுக நகரமாகிய பட்டினத்தை அடைவாய்' என்றார்.

## ஊ. பட்டினம் என்றால் காவிரிப்பூம்பட்டினமே

'பட்டினம்' என்ற சொல் துறைமுக நகரங்களைக் குறிக்கு மாயினும் பொதுவாகச் சங்க இலக்கியத்தில் எயிற்பட்டினத்தையும், காவிரிப்பூம்பட்டினத்தையும் குறிக்கும். சிறப்பாகப் பூம்புகாராம் காவிரிப்பூம்பட்டினத்தையே குறிக்கும்.

இப்புலவர் பாடிய காவிரிப்பூம்பட்டினம் பற்றிய பாலைத் திணைப் பாட்டிற்குக்'காவிரிப்பூம்பட்டினப்பாலை' என்றோ 'புகார் பட்டினப் பாலை' என்றோ பெயரிடாது "பட்டினப்பாலை"என்று பெயரிட்டமை கொண்டு 'பட்டினம்' என்று அடைமொழியின்றிக்

குறித்தால் அது காவிரிப்பூம்பட்டினத்தையே குறிக்கும் என்று உணரலாம்.

மேலும் பட்டினப்பாலையுள்ளும்

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்" – என்று பட்டினம் என்றே குறித்தார். இதற்கு விளக்கமளித்த நச்சினார்க்கினியரும் காவிரிப்பூம்பட்டினம் என்று விளக்காமல் "குறைவுபடாத தலைமையினையுடைய பட்டினத்தை எனக்குரித்தாகப் பெறுவே னாயினும்" என்று 'பட்டினம்' என்றே குறித்தார். நூலின் பெயர்க்காரணத்தைக் கூறத்தொடங்கிய போதும்,

"இது பட்டினத்தைச் சிறப்பித்துக்கூறிய பாலைத் திணை யாயினமையின் இதற்குப் 'பட்டினப் பாலை'யென்று பெயர் கூறினார்" என்று காவிரிப்பூம்பட்டினம் என்று விளக்காமல் 'பட்டினம்' என்ற சொல்லாலே குறித்தார்.

மேலும் கூர்ந்து நோக்கினால் பத்துப்பாட்டில் காவிரிப்பூம் பட்டினம் என்ற சொல்லே இல்லை. 'புகார்' என்னும் பெயரே "தீம்புகார்" (7) என்று வருகின்றது. சங்கஇலக்கியத்தில் அக நானூற்றில் நக்கீரர், "காவிரிப் படப்பைப் பட்டினம்" (8) என்று பாடியுள்ளார்.

எனவே உறுதியாகச் சொன்னால் காவிரிப்பூம்பட்டினம் 'பட்டினம்' என்றே குறிக்கப்படும் என்று பதியலாம். சிறுபாணாற்றுப் படையில் ஒரு பட்டினம் குறிக்கப்படுகின்றது. அது எயிற்பட்டினம். ஆனால், எயிற்பட்டினம் என்று சிறப்பாய்க் குறிக்கப்படாமல் பட்டினம் என்று பொதுவாகவே குறிக்கப்படுகின்றது. ஆயினும் அதற்குள்ள அடைமொழி எயிற்பட்டினம் என்று கொள்ள வைக்கின்றது.

"மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய

பனிநீர்ப் படுவிற் பட்டினம்" (9) எனப்படுவதில் "மதிலொடு பெயரிய" (மதில் – எயில்) என்னும் அடைமொழி கொண்டு உரையாசிரியர் நச்சினார்க்கினியர்,

"மதிலொடு பெயரிய– மதிலோடே பெயர் பெற்ற பட்டினம் – என்றது எயிற்பட்டினம் என்றதாம்" (10) என்று விளக்கினார்.

ஓய்மா நாட்டு நல்லியக் கோடன் என்னும் சிற்றரசனை நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர் பாடிய பாட்டு சிறுபாணாற்றுப்படை.

அவனிடம் பரிசு பெற, பாணனை ஆற்றுப்படுத்தும் பாட்டு சிறுபாணாற்றுப்படை. பாணன் கடக்க வேண்டிய பல பகுதிகளைச் சொல்லி நல்லியக்கோடனுடைய ஓய்மா நாட்டிற்குள் புக வைப்பவர், அவன் நாட்டைச் சேர்ந்த 'எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய ஊர்களைக் கடந்தால் அவன் தலைநகரமாகிய 'கிடங்கில்' என்னும் மூதூரை அடைவாய்' என்றார்.

இவற்றுடன் நல்லியக்கோடனைப் பற்றிக் கூறும் நத்தத்தனார்,

**"குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்**

**செல்லிசை நிலைஇய பண்பின்**

**நல்லியக் கோடன்" (11)**

என்று நிறைவு செய்தார். இதில் அவனைக் "குறிஞ்சிக் கோமான்" என்று மலை நாட்டுத் தலைவனாகக் குறித்துள்ளார். இங்கு மலை என்பது கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் மதுராந்தகத்திற்கு வடக்கே உள்ள குன்றுப் பகுதியைக் குறிக்கும். எனவே எயிற்பட்டினம் கடற்கரை ஊர் என்பதுடன் மலைப்பகுதியைச் சார்ந்ததுமாகும். உ.வே.சா. அவர்கள் குறித்த 'நீர்ப்பேர்' என்னும் ஊரும் மதுராந்தகத்தை அடுத்தது.

இங்கு கண்டவற்றுள் எயிற்பட்டினம், 'மதிலாற் பெயர் பெற்ற தென்பதும் மலைப்பகுதி சார்ந்த தென்பதும்' அழுத்தமாக நினைவிற் கொள்ள வேண்டியனவாகும்.

'பட்டினம்' என்று அடைமொழியின்றிக் கூறப்பட்டால் அது புகார் என்று காவிரிப்பூம்பட்டினத்தையே குறிக்கும் என்னும் முடிவான கவனத்துடன் முன்னே விட்ட இடத்தைத் தொடர்வோம்.

## எ. நீர்ப்பெயற்று

இளந்திரையனுடைய காஞ்சிபுரத்தை அடைய, பாணனுக்கு வழிசொல்லும் உருத்திரங்கண்ணனார்,

"நீர்ப்பெயற் றெல்லையைக் கடந்தால்

பட்டினத்தை அடைவாய்" என்றார். இங்கு அடைமொழியின்றிப் பட்டினம் என்று பொதுவாகவே குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் உரைவகுத்த நச்சினார்க்கினியர் இதனைக் காவிரிப்பூம்பட்டினம் என்று கூறாது பொதுவாகப் பட்டினம் என்றே எழுதினார்.

பத்துப்பாட்டைப் பதிப்பித்த தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் நீர்ப்பெயற்றெல்லை என்பதற்கு அடிக்குறிப்பு எழுதும்போது,

"மதுராந்தகம் தாலூக்காவில் 'நீர்ப்பேர்' என

வழங்கும் ஒரூர் உண்டு. அது இதுவாக

(நீர்ப்பெயற்று என்னும் ஊராக) இருக்கலாம்"

என்று தோன்றுகிறது" (12) என்று குறித்துள்ளார். இவ்வாறு தோன்றுவதைக் கொண்டு பார்த்தால் மதுராந்தகம் பக்கமுள்ள 'நீர்ப்பேர்' ஊரைத் தாண்டிக் காவிரிப்பூம்பட்டின எல்லைத் தெற்கே உள்ளது. எனவே, உ.வே.சா. அவர்களும் நச்சினார்க்கினியர் காவிரிப் பூம்பட்டினம் என்று குறிக்காததை ஏற்றே குறித்தார்' என்று கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறாயின் 'நீர்ப்பேர்' என்னும் ஊருக்கு அண்மையிலுள்ள எயிற்பட்டினத்தைப் பட்டினமாகக் கருதுவதாகத் தெரிகிறது.

எயிற்பட்டினம் என்று கொள்ள அடைமொழி இல்லை என்றாலும் அவ்வாறு முதற் பார்வையில் கொள்வதற்கு இடம் உண்டு.

காஞ்சிபுரம் செல்லும் வழியில் எயிற்பட்டினம் இருக்கிறது. 'காஞ்சிபுரமே! எயிற் கோட்டத்தைச் சேர்ந்தது' என்று ஒரு கல்வெட்டு குறிக்கின்றது. தற்போதும் தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் வட்டத்தில் 'எயில்' என்றொரு சிற்றூர் உள்ளது. (பாண்டி நாட்டிலும் 'எயில்' என்னும் பெயர் கொண்ட ஊர் உண்டு)

எனவே எயிற்பட்டினத்தைக் குறிக்கலாம் என்று கருதலாம்.

ஆனால் உண்மை அதற்கு அப்பால் உள்ளது. அதற்குச் சிறு பாணாற்றுப்படை "மதிலொடு பெரிய.... பட்டினம்" என்று எயிற் பட்டினத்தை வண்ணிக்கும் பகுதியைக் காணவேண்டும்.

'மதிலொடு பெயரிய பட்டினத்' தில்

தாழை, செருந்தி, முண்டகம், புன்னை பூத்திருக்கும்.

"கானல் வெண்மணற் கடலுலாய் நிமிர்தரப்

பாடல் சான்ற நெய்தல் நெடுவழி

மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய

பனிநீர்ப் படுவிற் பட்டினம்" (13) என்று எயிற்பட்டின அறிமுகம் உள்ளது. அதாவது,

நல்லியக் கோடனைப் பாடிய பாடலால்

புகழ்பெற்ற பட்டினம்;

கடற்கரைப் பகுதியாகிய நெய்தல் நிலத்து

நீண்ட வழியில் உள்ள பட்டினம்;

நீலமணிபோன்ற கழிகள்

சூழ்ந்த பட்டினம்;

மதிலாலே பெயர்பெற்ற பட்டினம்;

குளிர்ந்த நீரைக் கொண்ட குளங்களையுடையபட்டினம்;

தொடர்ந்து

ஒட்டகத்தைப் போன்று வரும் அலைகளை

யுடைய பட்டினம்;

அவ்வலைகள் கொண்டு வந்து தள்ளும்

அகில் விறகாலே நெருப்பு மூட்டி அப்பகுதிப்

பரதவப் பெண்கள் கள்ளைச் சமைக்கின்ற

பட்டினம்

– என வண்ணனை நிறைவேறுகின்றது. இவ்வண்ணனையை நோக்கினால் எயிற்பட்டினம் கடற்கரை ஊர் என்றறியலாமேயன்றிப் போக்குவரத்துடைய கடல் துறைமுகம் கொண்டது என்றோ, வெளிநாட்டுப் பொருள்கள் வந்திறங்கி, உள்நாட்டுப் பொருள்

ஏற்றுமதியாகும் துறைமுகம் என்றோ, கலங்கள் — நாவாய்கள் நிற்கும் பட்டினம் என்றோ ஒரு குறிப்பும் இல்லை. அவ்வாறிருந் திருப்பின் கட்டாயம் ஓர் அடியேனும் பாடப்பட்டிருக்கும்.

எனவே, எயிற்பட்டினம் துறைமுகம் கொண்ட பட்டினம் அன்று என்பதைத் துணிவாகக் கொள்ளலாம்.

ஆனால்,

உருத்திரங்கண்ணனார் இளந்திரையனைப் பாடிய பெரும் பாணாற்றுப்படையில் குறிக்கப்படும் பட்டினமும் அவரே கரி காலனைப் பாடிய பட்டினப்பாலையில் குறிக்கப்படும் காவிரிப் பூம்பட்டினமும் ஒன்றிய கருத்துடையனவாக விளக்கப்படுகின்றன. அவற்றை இவ்வாறு ஒப்பிட்டுப் பட்டியலிட்டுக் காணலாம்.

## பட்டினம்

### பெரும்பாணாற்றுப்படை

1. "நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை" (அடிஎண் 321)
2. "வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம்" (320)
3. "பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயில்" (337)
4. "முத்த வார்மணல் பொற்கழங் காடும்" (335)
5. "நெல்லுழு பகட்டொடு கறவை துள்ளா" (325)

### பட்டினப் பாலை

1. "தீம்புகார்த் துறைமுன்றுரைத் தூங்கு நாவாய்" (அடிஎண் 173, 174)
2. "நெல்லோடு வந்த வல்வாய்ப் பஃறி" (30)
3. "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்" (135)
4. "வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்" (187)
5. "நறவு நொடைக் கொடியொடு" (180)
6. "வலையுணங்கு மணல் முன்றில்" (83)
7. "காய்ச்செந்நெற் கதிரறுத்து மோட்டெருமை முழுக்குழவி" (13, 14)

இப்பட்டியல் பத்திகளின் இரு வண்ணனைகளும் ஒன்றித்து நிற்பதைக் காட்டுகின்றன. மேலும் பட்டின மகளிர் பற்றிய வண்ணனை, பரதவர் பற்றிய செயல்முறைகள், உயர்ந்த மாடங்கள் முதலியனவும் ஒருமித்த காட்சியளிக்கின்றன.

இரண்டிலும்

கடல்துறையில் கலங்கள் — நாவாய்கள் நிற்கின்றன;

குதிரைகள் இறங்குகின்றன;

பண்டங்கள் இறங்குகின்றன;

உள்ளூர்ப் பண்டங்கள் ஏற்றப்படுகின்றன.

மேலும்,

இரண்டு வண்ணனையிலும்

பண்டங்களைக் காவலர் காத்து நிற்கின்றனர்;

கள்ளுக்கடை முற்றத்தில் மலர்கள் தூவப்பட்டிருக்கின்றன;

பலர்புகும் பெரிய வாயில்கள் இருக்கின்றன;

மாடிவீடுகளில் ஏற்றப்பட்ட விளக்குகள் நாவாய்களில் செல்வோர்க்கு ஓர் அடையாளமாக இருக்கின்றன.

இவற்றை ஓர்ந்து பார்த்தால்,

உருத்திரங்கண்ணனார் என்னும் ஒரே ஆசிரியரால் வண்ணிக்கப்பெறும் பெரும்பாணாற்றுப்படைப் பட்டினமும், பட்டினப்பாலைப் பட்டினமும் ஒன்றே என்பது புலப்படும்.

மற்றோர் அமைவையும் காணவேண்டும். பெரும்பாணாற்றுப் படையிலும், பட்டினப்பாலையிலும், 'பட்டினம்' என்று பொது வாகவே குறிக்கப்படுகின்றது. காவிரிப்பூம்பட்டினம் என்று பட்டினப் பாலையிலும் இல்லை. ஆனால் (காவிரி) புகுந்து நிறை (புகு + ஆர்) வடையும் இடம் என்றும் புகார்ப் பெயர் வருகின்றது. எந்த ஆறு கடலில் புகுந்து நிறைந்தாலும் புகார் என்று குறிக்கலாம். ஆனால், புகார் என்னும் பெயர் காவிரி புகுந்து நிறைவடையும் காவிரிப் பூம்பட்டினத்தையே குறிப்பது.

இதனாலும், மேலும் பட்டினப்பாலைத் தலைவன் கரிகாலன் ஆண்ட பட்டினமாகையால் அது காவிரிப்பூம்பட்டினம் என்பது சொல்லாது போனாலும் உண்மை அஃதாகும்.

எனவே, இரண்டு பாட்டுகளிலும் பட்டினம் என்று வருவது காவிரிப்பூம்பட்டினமே என்றாவதால் பெரும்பாணாற்றுப்படைப் பட்டினமும் காவிரிப்பூம்பட்டினமேயாகின்றது.

இவ்விரண்டைப் பற்றிய வண்ணிப்பு ஒன்றித்துள்ளன, என்பதை உ.வே.சா. அவர்களும், நீர்ப்பெயற்றெல்லையை விளக்கும் போது,

"நீர்ப்பெயற்றென்னும் ஊருக்கருகிலுள்ள

பட்டினம் (பெரும்பாணாற்றுப்படைப்பட்டினம்)

காவிரிப்பூம்பட்டினம் (பட்டினப்பாலைப் பட்டினம்)

என்னும் இரண்டு கடற்கரைநகர்களைப் பற்றிக் கூறுவனவற்றுள் பல பகுதிகள் ஒன்றிய கருத்துள்ளன". (14) என்றும் ஒத் துள்ளமையைக் காட்டியுள்ளார்.

ஆனால், பட்டினப்பாலைப் பட்டினத்தைக் காவிரிப்பூம்பட்டினம் என்று குறித்தவர் பெரும்பாணாற்றுப்படைப் பட்டினத்தை எது என்று குறிக்காமல் 'பட்டினம்' என்று பொதுவாகவே குறித்தார். இது கொண்டு, உ.வே.சா. அவர்கள் பெரும்பாணாற்றுப்படையில் வரும் பட்டினம் காவிரிப்பூம்பட்டினம் என்று கொள்ள மனங்கொள்ள வில்லை என்றே படுகின்றது.

இதற்குக் காரணம் அவர் 'நீர்ப்பேர்' என்னும் ஊர் 'நீர்ப்பெயற்று' என்னும் ஊராக இருக்கலாம் என்று கருதியதேயாகும். அந்த 'நீர்ப்பேரைத்' தாண்டி வடக்கே காவிரிப்பூம்பட்டினம் இல்லாமை யாலும் அவ்வாறு இரண்டுமற்ற நிலையில் விட்டார்.

## நீர்ப்பேர் அன்று

வேறோர் அமைவையும் காண வேண்டும். இரண்டு பாட்டுகளுக்கும் உரை எழுதிய நச்சினார்க்கினியரும் இரண்டு இட விளக்கங்களிலும் காவிரிப்பூம்பட்டினம் என்று விரிக்கவில்லை. இது கொண்டு நச்சினார்க்கினியரும் பெரும்பாணாற்றுப்படைப் பட்டினம் காவிரிப்பூம்பட்டினம் என்று குறிக்க மனங்கொள்ள வில்லையோ, அன்றிப்பொதுவிற் பட்டினமென்றாலே காவிரிப்பூம் பட்டினம்தானே என்ற கருத்தாலோ எழுதினார் என்று விடலாம்.

நாம் இக்கருத்தோட்டத்தோடு உ.வே.சா. குறித்த 'நீர்ப்பேர் என்னும் ஊரைத் தாண்டிக் காஞ்சிபுரம் செல்லும் வழியை நோக்க

வேண்டும். மதுராந்தகம் வட்டத்து நீர்ப்பேருக்கு வடக்கே கடல்துறைப் போக்குவரத்து கொண்ட பட்டினம் இல்லை. சென்னப்பட்டினம் பிற்காலத்தே உருவானது. அவ்வாறானால் "நீர்ப்பெயற்றெல்லை" என்றது, எதனைக் குறிக்கும் என்ற வினா எழுதல் இயல்பே.

'நீர்ப்பேர்' என்பது "நீர்ப்பெயற்றெல்லை" அன்று. 'நீர்ப் பெயற்று' என்னும் சொல் 'நீர்ப்பேர்' என்று மருவுவதற்கு வாய்ப் புண்டு என்றாலும் இடச்சூழலை நோக்க அதனை அடுத்தமைந்த தாகக் குறிக்கப்பெறும் பட்டின இடமும் பொருந்தா. எனவே, 'நீர்ப்பேர்' வேறு; "நீர்ப்பெயற்றெல்லை" வேறு, 'நீர்' என்னும் அடை மொழியுடன் கூடிய ஊர்கள் வேறும் உள்ளன. நாகர்பட்டினத்திற்குத் தெற்கே 'நீர்முளை' என்றொரு ஊரும் உண்டு. அதுபோன்று 'நீர்ப்பேர்' வடக்கே உள்ளது.

'நீர்ப்பெயற்றெல்லையைத் தாண்டிச் சென்றால் பட்டினத்தை அடையலாம்' என்றதால் காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே அமைந்த இடம் 'நீர்ப்பெயற்றெல்லை' என்றாகின்றது. அவ்விடம் எது?

'நீர்ப்பெயற்றெல்லை' என்றால் என்ன? அதன் பொருள் யாது? பொருளைக் காண்பதில் ஒரு சிறு சிக்கல் உள்ளது. அந்தச் சிக்கலை எடுத்தால் ஒரு வரலாற்றுப்பெயர் வெளிப்படும்.

'நீர் + பெயற்று + எல்லை' என்னும் மூன்று சொற்களில் 'பெயற்று' என்பதுதான் சிக்கலானது. இச்சொல் பெயல் + து என்று பிரிபடும். 'து விகுதி இடத்திற்கேற்பப் பொருள் கூட்டும். "முதற்றே உலகு" (குறள்) என்பதில் முதல் + து என்பது முதலாக 'உடையது' என்னும் உடைமைப் பொருளோடு நிற்கும். 'இயற்று' என்பதில் இயல் + து என்பது இயங்க வைப்பது என்னும் வினைப் பொருளைத்தரும்.

'பெயற்று எல்லை' என்றதில் பெயல் + து – பெயலை உடைய எல்லை என்று பொருள் கொள்வதை விட 'பெயலைச் செய்யும் எல்லை' என்னும் பொருள் கொள்வதே பொருந்துகின்றது.

'நீர்ப்பெயற்று' என்பதற்கு 'நீர்ப்பெயர்த்து' (15) என்னும் பாட வேறுபாடு உ.வே.சா. அவர்களால் காட்டப்பட்டுள்ளது.

'நீர்ப்பெயர்த்து' என்னும் பாடம் மற்றோர் வகையில் பொருந்து கின்றது. இதற்கு 'நீர்ப்பெயரை உடையது' என்றொரு பொருள்.

இப்பொருள் கருதியே உ.வே.சா. அவர்கள் வ்டக்கே உள்ள 'நீர்ப்பேர்'இஃதாகஇருக்கலாம் என்று குறித்தார்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் 'நீர்ப்பெயற்று' என்பதையே பாடமாகக்கொண்டு பொருள் எழுதியதால் உ.வே.சா. அவர்களும் வேறு குறிப்பொன்றும் எழுதாமல் பாட வேறுபாட்டைக் காட்டி மட்டும் விட்டார்.

'நீர்ப்பெயர்த்து' என்னும் பாடத்தைக்கொண்டு 'நீரை (இடம்) பெயர்த்திடும் என்று பொருள் கொள்ளலாம். பொருநராற்றுப் படையில் 'நீர்ப்பெயர்ச்சுழி' என்றுள்ளது. அதற்கு நச்சினார்க் கினியர் "நீரிடத்துப் பெயர்த்தலையுடைய சுழிபோல" (16) என்று விளக்கந் தந்தார். இவ்வழியில் 'நீர்ப்பெயர்த்தெல்லை' என்னும் பாடத்தைக் கொண்டு 'கடல்நீரைப் பெயர்த்துக் கரைக்குக் கொணரும் இடமாகிய எல்லை' என்று பொருள் கொள்ளலாம். அவ்வெல்லை இடம் பற்றி மேலே கொள்ளும் முடிவிற்கு மிகப் பொருந்துகின்றது.

எனவே, இப்பொருள்களில் பின்வரும் இரண்டைத் தேர்ந்து எடுத்துக்கொண்டு மேல் ஆராயலாம்.

"நீர்ப்பெயற்றெல்லை" — நீரைப் பெய்யச் செய்யும் எல்லை.

"நீர்ப்பெயர்த்து"எல்லை — நீரைப் பெயர்த்திடும் எல்லை.

இவ்விரு பொருள்கள்ளயும் மையமாகக் கொண்டு நோக்கினால் 'ஓர் இடம் கடற்கரையில் உள்ள ஊருக்கு எல்லையாக இருந் துள்ளது' என்னும் கருத்து நிலைப்படும்.

நிலைப்படும் இக்கருத்தைக் கொண்டு முன்னர் நாம் கண்ட 'பரவை' என்னும் சிற்றூரை அணுகலாம்.

அங்கு கடலுள் நீர்ச்சுழல் இருப்பதை அறிந்தோம். அந்தச் சூழலால் பல காலங்களில் கடல் நீர் எழும்பி உயர்ந்து கரையை அடைத்தவாறு பரவச் செய்தது. அதனால் அது 'பரவை' எனப் பட்டது. அவ்விடம் மட்டுமின்றி அதனை உள்ளிட்ட பேரூர்ப் பகுதி "நீர்ப்பெயற்று" என்று பெயர் பெற்றது.

அந்த எல்லை அப்பக்கம் வரும் கடற் பயணியர்க்கு ஓர் எச்சரிக்கை எல்லையாகக் குறிக்கப்பட்டதாகின்றது.

இஃது எல்லை என்றால் இதனை எல்லையாகக்கொண்ட 'நீர்ப்பெயற்று' என்றது எதனை? அது பரவை என்னும் சிற்றூரை எல்லையாகக் கொண்ட இன்றைய நாகர்பட்டினம் என்றாகின்றது.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர், 'நீர்ப்பெயற்றெல்லை' என்பதற்கு,

"நீர்ப்பெயற்று என்னும் ஊரின்" எல்லையிலே போய்" (17) என்று ஓர் ஊரின் பெயராகவே நீர்ப்பெயற்றைக் குறித்தார்.

எனவே, இன்றைய நாகர்பட்டினம், நாகர்பட்டினம் என்று பெயர் பெறுவதற்கு முன்னர் "நீர்ப்பெயற்று" என்னும் காரணப் பெயர் பெற்றிருந்தது என்று ஒரு வரலாற்று முடிச்சை அவிழ்த்துத் தெளிவு கொள்ளலாம்.

இந்த 'நீர்ப்பெயற்று, நாகர்பட்டின வரலாற்று நிகழ்வின் நான்காவது கல்.

இந்தக் கல்லின் காலம் கடைச்சங்க காலத்திற்கு முந்தியது. கடைச்சங்க காலத்தைக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவாக ஓரளவில் வரையறுத்துக் கூறி வருகின்றோம். கடைச் சங்க நூல் களில் உள்ள பாடல்கள் ஒரு காலத்தவை அல்ல. சில நூற்றாண்டுகள் அளவில் கூட இடைவெளி கொண்டவையாகலாம். கடியலூர் உருத்திரங்கண்ணனாரை வைத்துக் கரிகாலன், இளந்திரையன் தொடர்புடன் காணும்போது இவ்விருவர் காலநீட்டமாகிய கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதி தொடங்கி கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியின் காலம் என்று கொள்ள வேண்டும்.

இக்காலத்திற்கு முன்னரே பல்லாண்டுகள் 'நீர்ப்பெயற்று' என்னும் பெயர் வழக்கில் இருந்திருக்க வேண்டும். எனவே, கி.மு. ஒன்று அல்லது அதற்கு முற்காலம் இந்த நான்காவது கல்லின் காலம் எனலாம்.

**ஊடாட்டம்**

அடுத்து ஓர் இடைநிகழ்வு ஒரு கல்லாகிறது.

இலக்கியத்தில் பதிவுபெற்ற தகுதியில் பேரூராக, 'நீர்ப்பெயற்று' என்ற பெயர் பெற்றிருந்த நாகர்பட்டினம்' அதே காலத்தில் புத்தத் துறவிகள் இருக்கைத் தொடர்பில் 'பதரி திட்டை' என்னும் பெயரையும் கொண்டிருந்தது.

இவை இரண்டிற்கும் இடையில் ஓர் ஊடாட்டம் நிகழ்ந்து கொண்டே இருந்தது. அது நாகநாட்டார் குடியேற்றம். புத்த சமயத் தொடர்பிலும், ஓரளவில் அரசுத் தொடர்பிலும், பெருமளவு வாழ்வுத் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க அளவு வாணிபத் தொடர்பிலும் நாகநாட்டார் நீர்ப்பெயற்றில் குடியேறினர். இங்கு மட்டும் அன்று; இந்தியாவில் பல பகுதிகளிலும் அவர்கள் குடியேற்றம் பையப்பைய நிகழ்ந்தது. நாகர்கோவில், நாகபுரி, நாகார்ச்சுனம் முதலிய பெயர்களே இதனைச் சொல்லி நிற்கின்றன.

## நிகமா

இங்கு இடம் கொண்ட நாகர், தம் மொழிச் சொல்லாலும் இப்பேரூரைக் குறித்தனர். அவ்வாறு குறிக்கப்பெற்ற பெயர் 'நெகமா' என்பது. இதனைப் பிற்காலக் குறிப்புகளிலும் புத்தர் சிலைகளின் பீடத்திலும் காண்கிறோம். நில வரலாற்று அறிஞராகிய தாலமியின் (Clandius Ptolemy) காலம் கி.பி. 118–161. அஃதாவது இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி. இவர் கி.பி. 150–155 அளவில் இந்தியாவைச் சுற்றிக் கண்டு 'புவியியல்' என்னும் குறிப்பிடத்தக்க நூலை எழுதினார். அதில் தமிழ்நாட்டுக் கிழக்குக் கடற்கரை நாட்டைப் 'படாய்' என்று தம் கிரேக்க மொழிப் பாங்கில் குறித்தார். இது பட்டினம் – பட்டினநாடு என்பதன் கிரேக்க ஒலிப்பு என்பர். இந்நாட்டில் பல ஊர்களை – நகர்களை அவர் கேள்வியுற்ற பெயரில் தம் மொழி ஒலிப்பில் குறித்துள்ளார். அவற்றில் ஒன்று 'நிகமா'.

தாலமியின் புவியியல் குறிப்பேடு இந்திய வரலாற்றிற்கு – சிறப்பாகத் தமிழ்நாட்டு வரலாற்றிற்கு ஓர் ஒளிவிளக்கு; உறுதிச் சான்றாகக் கொள்ளப்படுவது. அவர் இங்கு வந்த போது நாகர்கள் இப்பேரூரை 'நிகமா' என்று குறிப்பதறிந்தே 'நிகமா' என்று தாமும் குறித்தார். (18) காரைக்கால் பகுதியில் 'நெகமம்' என்றொரு ஊர் இக்காலத்தும் உள்ளதை ஒரு சான்றாகவும் கொள்ளலாம்.

எனவே, நிகமா என்னும் குறியீடு ஐந்தாவது கல்லாகத் தோன்றியது. இதன் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தொடக்கம் என்று ஏறத்தாழ என்னும் அடைப்பில் – கூறலாம்.

அடுத்து நம் கவனத்தைக் கவர்வது காவிரிப்பூம்பட்டினம் கடற் கொந்தளிப்பால் அழிவுற்ற நிகழ்ச்சி. அதன் அழிவால் குடிபெயர்ந்த அப்பட்டினத்து மக்கள் தெற்கே ஓரளவில் கடற்போக்கு வரத்தின்

முனைத் தோற்றமாக இருந்த 'நீர்ப்பெயற்றில்' — 'பதரி திட்டை'யில்—'நெகமா'வில் இடம்பெற்றதை முன்னரே கண்டோம். இந்நிகழ்வுதான் இப்பேரூர் ஒரு நகரமாகவும், பட்டினமாகவும் வளர வழி வகுத்தது.

இலக்கியங்காட்டிய 'நீர்ப்பெயற்று' ஓர் அறிகுறிப்பெயராகவும், 'பதரி திட்டை' ஒரு சமயக்குறியீடாகவும், 'நெகமா' ஓரினத்தார் குறியீடாகவும் மும்முனைப் பெயர் வழக்கில் இருந்த போது புகாரினின்று குடிபுகுந்த பல்வகையினரும் இங்கு நாகர்கள் மிகுந்து வாழ்வதைக் கண்டு நாகர் ஊராக — நாகரூராகக் (நாகூராக) கண்டனர்.

## ஏ. பட்டின அழிவும் பயணிகள் குறிப்பும்

காவிரிப்பூம்பட்டினம் கடற் கொந்தளிப்பால் அழிந்தமையே நாகர் ஊர் — நாகர்பட்டினமாக உருவாக மூல காரணமாயிற்று.

அக்கடற்கொந்தளிப்பின் காலம் எது?

பட்டினமானதன் தொடர்பு என்ன?

எவ்வமைப்பில் வளர்ந்தது?

கடற்கொந்தளிப்பால் புகார் கடலுள் மூழ்கிய காலத்தைக் கணிக்க அப்பட்டினம் எவ்வெக் காலம் வரை வளமாக விளங்கிற்று என்பதைக் காலப்படியாகக் காணல் வேண்டும்.

இதற்கு ஓரளவில் தமிழ் இலக்கியங்கள் துணை நிற்கின்றன. பெருமளவில் வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்பேடுகளே கைகொடுக்கின்றன.

சங்க இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு எட்டுத்தொகையின் பாடற்கருத்துக்களை அவற்றின் மிக முற்பட்ட கால எல்லையாக ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டளவாகக் கொள்ளலாம். தொகுக்கப்பெற்ற காலம் கி.பி. ஆயினும் முற்கால — ஓரளவில் பழங்காலப் பாடல்களும் இணைந்திருக்கும் என்ற வகையில் கி.மு. முதல் நூற்றாண்டளவிற்குச் செல்லலாம்.

இடையில் ஒரு பெயர்க்குறிப்பு.

காவிரிப்பூம்பட்டினம் என்றும் பெயர்

(காவிரிப்பூம்பட்டினம் என்பது பெருவழக்காய்விட்டமை கொண்டு இங்கும் இப்பெயரிலேயே எழுதப்படுகின்றது) சங்க

இலக்கியங்களில் காவிரிப்பூம்பட்டினம் என்ற வழக்கு இல்லை. அகநானூற்றில் 'காவிரிப்படைப்பைப் பட்டினம்' என்றுதான் குறிக்கப்படுகின்றது. சிலப்பதிகாரத்திலும் அப்பெயர் இல்லை. ஓரிடத்தில் அகநானூற்றைப் போன்று "காவிரிப்படப்பைப் பட்டினம்" (19) என்றுள்ளது. மணிமேகலையில் 'காவிரிப் பூம்பட்டினம்' (20) என்று ஓரிடத்தில் உள்ளது.

கடைச்சங்க நூல்களாகத் தொகுத்த பாரதம் பாடிய பெருந் தேவனார் புலவர் பெயர்களைக் குறித்த இடங்களில் அவரவர் ஊர் களையும் அடைமொழியாக வைத்துக் குறிப்பிட்ட மரபில்,

"காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் (புறம்)

"காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் (நற்றிணை)

"காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் (குறுந்தொகை)

"காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தங்கண்ணனார் (குறுந்தொகை)

எனக் கையாண்டார்.

ஆறு கடலுள் புகுந்து நிறைவடையும் கடல்துறை நகரமுகம் 'புகார்' எனப்படும். இது புகு + ஆர் – புகுந்து நிறைவடைதல் என்னும் பொருள் கொண்டது. இது பொதுப்பெயர். ஆயினும் சிறப்பாகக் காவிரிபுகும்பட்டினத்தையே குறித்தது. பட்டினப்பாலை யிலும், சிலம்பிலும், மணிமேகலையிலும், 'புகார்' என்னும் பெயரே காவிரிப்பூம்பட்டினத்திற்குக் குறிக்கப்பெற்றுள்ளது.

ஆனால், நாட்டு வழக்காகக் காவிரிப்பூம்பட்டினம் என்னும் பெயரே இருந்துள்ளது. அதனால்தான் வெளிநாட்டுப் பயணிகள் 'காவிரிப்பூம்பட்டினம்' என்று கேள்வியுற்றதைக் கொண்டு தம் மொழி ஒலிப்பில் "காபேரிசு", "காமரா" என்றெல்லாம் குறித்தனர்.

நக்கீரர், இந்நகரைப் "பெரும்பெயர்க் காவிரிப் படப்பை" (21) என்று சிறப்பித்துள்ளார். சிலப்பதிகாரமும், மணிமேகலையின் முற்பகுதியும் இந்நகரின் வளப்பமான நிலையைப் பாடியுள்ளன.

அசோகர் மகன் மகேந்திரன் இந்நகரில் ஏழு விகாரைகளை அமைத்தான். அவன் காலத்தில் அஃதாவது அசோகர் காலமாகிய கி.மு. 260 அளவில் இந்நகர் வளமார்ந்திருந்தது.

நாகசேனர் என்பாரது "மிலிந்த பிரஃனை" என்னும் நூலிலும் "மிலிந்த அரசனின் வினாக்கள்" என்னும் நூலிலும் இந்நகர் "கோலப்பட்டன்" என்று சிறப்பாகக் குறிக்கப்பெற்றுள்ளது. இவர் காலம் கி.மு. 150.

கி.பி. 23–79 (முதல் நூற்றாண்டு) காலத்தவரான பிளினி, இந்நகரைக் "காபேரிசு எம்போரியம்" என்று குறித்துள்ளார்.

கி.பி. 50–80 காலத்தவரான பெரிபுளுசின் ஆசிரியர் இப்பட்டினத்தைக் "காமரா" என்றும் தம்மொழி ஒலிப்பில் குறிப்பவர்,

"வடக்கேயிருந்து வரும் கப்பல்கள் தங்க

வாய்ப்பான துறைமுகங்களுள் முதன்மை

இடம் வகிப்பது 'காமரா' (காவிரிப்பூம்பட்டினம்)" (22) என்று குறித்துள்ளார்.

அலெக்சாந்திரியா நாட்டுப் பயணியாகிய கிளாடியசு தாலமி (Clandias Ptolamy) இப்பட்டினத்தைக் 'காபேரிசு' என்று கிரேக்க மொழி ஒலிப்பில் குறித்துள்ளார். இவர் இப்பட்டினத்தை 'ஒரு வணிகச் சந்தை நகரம்' என்று விளக்கியுள்ளார். இவர் இங்கு பயணம் மேற்கொண்ட காலம் கி.பி. 150 எனலாம்.

இவ்வாறு கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை காவிரிப்பூம்பட்டினம் வளமார்ந்த நகரமாகத் திகழ்ந்ததை அறிய முடிகின்றது. இதற்குப் பின்னரே இது கடற்கொந்தளிப்பால் கடலுக்குள் போயிருக்க வேண்டும்.

ஆனால், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டினரான 'புத்த தத்தர்' என்னும் புத்தச் சான்றோர் தாம் இப்பட்டினத்து மடத்தில் இருந்ததாகவும், 'இப்பட்டினம் வணிகத் தளமாக இருந்தது' என்றும், மாட மாளிகைகள் கொண்டு 'விளங்கியது' என்றும் தம் 'அபிதம்மாவதாரம்' என்னும் பாளிமொழி நூலில் எழுதியுள்ளார். இதில் இப்பட்டினத்தை ஆண்ட மன்னன் பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. எனவே, இவர் பட்டின அழிவிற்குப்பின்னர் வந்து அப்போதிருந்த ஒரு மடத்தில தங்கி இப்பட்டினப் பெருமைகளைக் கேள்வியுற்றுக் குறித்துள்ளதாகக் கொள்ள வேண்டும்.

மேலை நாட்டுப் பயணிகள் குறிப்புகளில் காவிரிப்பூம்பட்டினம் ிளங்கிய செய்தியைக் காலப்பின்னடைவாகத் தாலமியின்

குறிப்பாகிய கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியையே காண்கிறோம்.

## முதல் பழுது

அறிஞர் பிளினி தம் வாழ்வின் இறுதியாண்டாகிய கி.பி. 79 இல் குறித்த குறிப்பு ஒன்று காவிரிப்பூம்பட்டினம் கடற்கொந்தளிப்பால் தாக்கப்பட்டதைக் குறிக்கிறது. அது கி.பி. 79 ஆகட்டு 23, 24 ஆம் நாள் என்கின்றது. இது புகாரின் முழு அழிவு நாளன்று. ஒரு கடற் கொந்தளிப்பால் குமரியில் பெரும்பகுதியும் முசிறி, காவிரிப் பூம்பட்டினத்தின் ஒரு பகுதியும் தாக்கப்பட்டுப் பழுதடைந்ததையே குறிக்கும்.

இவ்வாறு மேலைப் பயணிகளின் குறிப்பிற்கேற்பத் தமிழ் இலக்கியக் கருத்துகளும் இயைந்து வருகின்றன.

## பட்டின அழிவும் தமிழ் இலக்கியக் குறிப்பும்

காவிரிப்பூம்பட்டினம் வளமாக இருந்ததை இறுதியாகக் குறிப்பது சிலப்பதிகாரம். மணிமேகலை காலத்தின் முற்பகுதி யிலும் வளம் காணப்படுகிறது. தெற்கே நேர்ந்த, கடல் நிலத்திற் புகுந்து மூழ்கடித்த ஒரு செய்தியைச் சிலப்பதிகாரம் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் காலமாகக் குறிக்கின்றது.

"குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்னும் அடி, 'வடிம்பலம்ப நின்ற பாண்டியன் தன் பாண்டி நாட்டின் ஒரு பகுதியைக் கடற்கொந்தளிப்பால் இழந்து அதற்காகச் சோழநாட்டின் மேலும் சேரநாட்டின் மேலும் சென்று சோழ நாட்டு முத்தூர்க் கூற்றத்தையும், சேரநாட்டுக் குண்டூர்க் கூற்றத்தையும் கவன்று தன் ஆட்சி நிலப்பரப்பில் சேர்த்துக் கொண்டான்' — என்பதைப் பொதிந்துள்ளது. இப்பொதிவை அவிழ்த்து வெளிப்படுத்தியவர் உரையாசிரியர் அடியார்க்கு நல்லாராவார். (23)

இவ்வாறு சிலம்பில் ஒரு கடல்கோள் குறிக்கப்பட்டமை போன்று காவிரிப்பூம்பட்டினத்தின் அழிவும் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில், சேரன் செங்குட்டுவன் கண்ணகியார்க்கு வஞ்சி மலையில் சிலை நாட்டிக் கோட்டமெடுத்து விழாக் கொண்டாடி நிறைவேற்றிய பின் தொடர்ந்த காலக்கட்டத்தில் தான் காவிரிப் பூம்பட்டினம் கடல்கோள் நிகழ்ந்தது. இதனை மணிமேகலைக் காப்பியம் பின்வருமாறெல்லாம் விளக்குவதன் மூலம் காணலாம்.

## ஐ. மணிமேகலை ஒளிக்கதிர்

மணிமேகலை தன் தந்தையையும் கண்ணகித் தாயையும் இழந்ததும் துறவு பூண்டு மணி பல்லவத்தில் 'அமுதசுரபி' பெற்ற போது அஃதாவது மணிமேகலை மணிபல்லவத்தில் இருந்தபோது காவிரிப்பூம்பட்டினத்தில் கடல் கொந்தளிப்பு நேர்ந்துள்ளது. இதனை அத்தீவில் வைத்து அத்தீவின் காவல் தெய்வமாம் தீவதிலகை மணிமேகலையிடம்,

"பலர்தொழு பாத்திரம் கையின் ஏந்திய

மடவரல் நல்லாய்! நின்றன் மாநகர்

கடல்வயிறு புக்கது" (24) என்று கூறுவதாக உள்ளது. இஃதே காவிரிப்பூம்பட்டினம் கடல்கோளில் மூழ்கியதை முதன்முதலில் தருவதாகும். தொடர்ந்து பேசும் தீவதிலகை,

"விரிதிரை வந்து வியனகர் விழுங்க

ஒருதனி போயினன் உலக மன்னவன்" (25)

என்று புகார் மன்னன் நெடுமுடிக்கிள்ளி புகாரை விட்டு நீங்கியதையும் குறித்தது. இக்குறிப்பிற்குத் தீவதிலகை சொன்னதாக உள்ள உவமை கருதத் தக்கது. அவ்வுவமைச் செய்தி முன்னர் கடல் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் காலத்தைப் பாண்டி நாட்டுக் கடல் கோளைக் காட்டும் செய்தியாகும்.

"கடவுள் மாநகர் (குமரிநாடு) கடல்கொளப் பெயர்ந்த

வடிவேல் தடக்கை வானவன் (கடல் வடிம்பலம்ப நின்ற நெடியோன் பாண்டியன்) போல" சோழ மன்னன் அழிந்த புகாரை விட்டு 'ஒரு தனியே போயினன்' என்கிறது. புகார் அழிவிற்குக் குமரி அழிவைக் காட்டியதிலும் ஒருகருத்து பொதிந்துள்ளது.

குமரிக்கோடு கொண்ட கடல்கோள் பெரும் அழிவை ஏற்படுத்தியது. 49 நகர்களை அழித்தது. அதற்குப் பின்னர் நேர்ந்த பேரழிவு தமிழ்நாட்டுக் கடல்கோள் காவிரிப்பூம்பட்டினத்தை விழுங்கியதாகும். உவமை காட்டியதன் மூலம் — ஒரு கடல் கோளுக்கு மற்றொரு கடல் கோளைக் காட்டியதன் மூலம் இதனை உணரலாம்.

இச்செய்தியைத் தொடர்ந்து தீவதிலகை மணிமேகலையிடம் கடல் கொண்டதால் உன் தாய் மாதவியும் செவிலித்தாய் சுதமதியும்

அறவண அடிகளுடன் கடல் கொந்தளிப்பில் தப்பி வருந்தாது சேரநாட்டு வஞ்சி மாநகரை அடைந்தனர். (26,27) என்றும் கூறியது.

இதனைக் கேட்ட மணிமேகலை மணிபல்லவத்திலிருந்து தமிழகம் மீண்டு காவிரிப்பூம்பட்டினம் செல்லாது, கண்ணகித் தாயின் படிமத்தையும் தந்தை கோவலன் நினைவுப்படுக்கையையும் காண நேரே வஞ்சி நாட்டெல்லை வந்து கண்ணகி கோட்டமடைந்து போற்றினாள். பின்னர் அங்கிருந்து அறவண அடிகளையும் தன் தாயாரையும் காண வஞ்சி நகருக்குள் புகுந்தாள். அவர்கள் காஞ்சி மாநகர் சென்றதை அங்கிருந்த கோவலன் தந்தை மாசாத்துவான் கூறக் கேட்டாள்.

இங்குப் பொருத்தமாகும் சிலம்புச்செய்தி ஒன்றை அறிய வேண்டும். கண்ணகிக்குச் சிலை நாட்டிய கோட்டத்தில் வாழ்த்தி அரற்றும் காவற்பெண்டு; "மாசாத்துவன் துறவும் கேட்டாயோ அன்னை" (28) என்றும், அரற்றும் அடித்தோழி,

"மாதவி தன் துறவும் கேட்டாயோ தோழி
மணிமேகலை துறவும் கேட்டாயோ தோழி' (29)

என்றும் கூறுவதாக உள்ளன. இவர்கள் துறவுகள் கோவலன் கொலையுண்ட பின்னர் அக்கொடுந்துயரத்தால் நேர்ந்தவை. இவர்கள் துறவேற்றபோது காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தனர். அப்போது இந்நகர் அழிவுறாமல் விளக்கமாகவே இருந்தது. சோழமன்னனும் அங்கிருந்து ஆண்டான்.

இத்துறவிற்குப்பின்னர் மாசாத்துவான் வஞ்சி மாநகர் சென்றான். தன் செல்வங்களையெல்லாம் அறத்திற்கு ஈந்து புகாரில் வாழ மனமின்றி வஞ்சி சென்றான். வஞ்சியில் இவனது முன் னோன் 'கோவலன்' என்னும் பெயரினன் புத்த சமயச் சைத்தியங் களை எழுப்பித்திருந்தான்.

சேரப் பெருமன்னனின் நண்பனாதலால் வஞ்சியில் எடுத்திருந் தான். (30) அங்கு போய் அமைதியாய் வாழ மாசாத்துவான் மனம்பற்றி வஞ்சி போனான். இங்கிவன் வந்து அமைந்த பின்னர் தான் ஒரு புத்தத் துறவியால் காவிரிப்பூம்பட்டினம் அழிவை அறிந் தான். அவனே அங்குப் பின்னர் வந்த மணிமேகலையிடம்,

"காவிரிப் பட்டினம் கடல்கொளும் என்றஅத்

தூவுரை கேட்டுத் துணிந்திவண் இருந்தது" (31) என்று கூறினான்.

பின்னர்தான் புகார் கடலுள் மூழ்கியது. அவ்வழிவால் இடருற்ற மாதவி அறவண அடிகளுடன் வஞ்சி மாநகர் அடைந்தாள். இதனையும் மணிமேகலைக் காப்பியம்,

"மாநகர் கடல்கொள

அறவண அடிகளும் தாயரும் ஆங்குவிட்

டிறவா திப்பதிப் (வஞ்சிநகர்) புகுந்தது" (32) – என்று தீவதிலகை கூற்றாகக் காட்டுகிறது.

## பட்டின அழிவுக் காலம்

இவற்றையெல்லாம் கொண்டு நோக்கினால் காவிரிப்பூம் பட்டினம் கடல்கோளால் அழிவுற்ற நிகழ்ச்சி,

1. மணிமேகலை துறவுற்று மணிபல்லவத் தீவில் இருந்த போது –

2. மாதவி துறவுற்றுக் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தபோது –

3. மாசாத்துவான் காவிரிப்பூம்பட்டினத்தில் துறவுற்று அதனை நீங்கி வஞ்சி மாநகர் புக்கிருந்தபோது – என்பவற்றுடன்

4. சேரன் செங்குட்டுவன் கண்ணகியார்க்குக்

கோட்டம் எடுத்து வழிபாடு செய்ததற்குப்

பின்னர் என்பதையும் உணரலாம்.

இவை கொண்டு காவிரிப்பூம்பட்டினம் அழிவுற்ற காலக் கட்டத்தை ஒரு வட்ட அளவிற்குள் கொள்ள முடிகிறது.

அவ்வட்டம் எது?

சேரன் செங்குட்டுவன் கண்ணகியார்க்குக் கோட்டம் அமைத்து வழிபட்ட விழாவில் இலங்கை மன்னன் முதல் கயவாகுவும் கலந்து கொண்டான். அவன் இலங்கை சென்று அங்கு கண்ணகியார்க்குக் கோட்டம் அமைத்தான். இதுபோன்று சோழமன்னன் நெடுமுடிக் கிள்ளியும் கண்ணியார்க்குச் சோழநாட்டில் கோட்டம் எடுத்தான். சோழ நாட்டில் எங்கு எடுத்தான்?

"அது கேட்டுச் சோழன் பெருநற்கிள்ளி கோழியகத்து உள்ளே எத்திறத்தாலும் வரந்தரும் இவளோர் பத்தினியாகுமென நங்கைக்குக் கோட்டமும் அமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித் தோனே" – என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். இதன்படி சோழன் நெடுமுடிக்கிள்ளி கண்ணகிக்கு உறையூரில் கோட்டம் எடுத்தான் என்பதை அறியும் போதே ஏன் கண்ணகியின் நகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் எடுக்கவில்லை என்ற ஐயமும் எழுகின்றது. காவிரிப்பூம்பட்டினம் கடல்கோளால் அழிந்து "ஒரு தனி போயினன் உலக மன்னவன்" என்றதன்படி தனியே சோழப் பெருநகராம் உறையூர் அடைந்ததால் நெடுமுடிக்கிள்ளி உறையூரில் எடுக்க நேர்ந்தது என உணர்ந்து ஐயத்தை விடுவிக்கலாம்.

எனவே, இச்சோழ மன்னன் எடுத்தபோதே இலங்கைக் கயவாகு இலங்கையில் எடுத்ததால் அக்காலக்கட்டம் பூம்புகார் அழிவுற்ற காலக்கட்டம் என்றாகின்றது. இலங்கைக் கயவாகுவின் காலத்தை அறிந்தால் அவன் ஆட்சிக் காலந்தான் பூம்புகார் அழிவுக்காலம் என்றுணரலாம். இலங்கை வரலாற்று நூலான மகாவமிசம் கூறுகிறபடி இக்கயவாகு கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற் பகுதிவரை ஆண்டுள்ளான்.

முன்னர் கண்ட பயணி தாலமியின் குறிப்பின்படி கி.பி. 150 வரை காவிரிப்பூம்பட்டினம் வளமாக அழிவின்றி விளங்கியுள்ளது.

எனவே கி. பி.150 –இற்குப் பின்னர் இலங்கைக் கயவாகுவின் ஆட்சிப் பிற்பகுதியாகிய கி.பி. 150 இற்குமேல் பூம்புகார் அழிவுற்ற தாகின்றது. இக்கால வட்டத்தைச் சுருக்கினால் கி.பி. 160 இலிருந்து 170 இற்குள் இவ்வழிவு நிகழ்ச்சி நேர்ந்ததாகக் கொள்ளவேண்டும். இவ்வாறு கொள்வது வரையறுக்கப்பட்ட பெருமளவு பொருந்தும் வட்டமேயாகும்.

இத்துணை விரிவாகக் காவிரிப்பூம்பட்டினப் பகுதிக் கடல் கோளை ஆராய்வதன் நோக்கம் – அதிலும் ஓர் அழிவைப் பற்றிய விரிவான நோக்கம் ஓர் வரலாற்றுக்கல்லை வெளிப்படுத்துவதே யாகும்.

## ஒ. தோற்றத்திற்கு அழிவு ஒரு முன்னோடி

ஒன்றன் அழிவு மற்றொன்றின் தோற்றத்திற்கு அடிகோலும் என்பதற்கு உண்மை உண்டு. விதை ஊறிச் சிதைந்து அழிவதால்

முளை தோன்றிச் செடி, மரம் பிறக்கிறது. வாழை மரத்தின் சரிவிற்கு முன்னோடியாகவே வாழைத்தார் தோன்றுகிறது. கருவின் பை உடைந்து சிதைவதால் குழந்தை பிறக்கிறது. இவ்வுண்மை களின்படியே காவிரிப்பூம்பட்டினம் அழிந்து நாகர்பட்டினம் தோன்றியதைக் காண்கிறோம்.

புகார்க் கடல்கோளால் அதன் ஆளுகை மன்னனே 'ஒரு தனி' யாக வெளியேறியபோது நாட்டுமக்கள் – அன்னோர் செல்வ ராயினும், வணிகராயினும், பொதுமக்களாயினும், துறவிகளா யினும் வெளியேறித் தீர வேண்டியவராயினர். வெளியேறித் தத்தம் சூழலுக்கேற்பப் பல ஊர்களுக்குச் சென்றிருப்பினும் அக்காலத்துக் குறிப்பிடத்தக்க பேரூராகத் தெற்கே 40 கி.மீ. தொலைவிலிருந்த தற்போதைய நாகர்பட்டினப் பேரூரே பலருக்கும் புகலிடமாயிற்று. காரணம், வங்கக் கடலின் கரைப்பகுதியில் ஓரளவு சிறுகலங்களில் நாகர்களின் வருகை அமைந்த சிறு துறையாக இருந்தமையே. மேலும் புத்தச் சமயத் துறவிகள் பெரும்புகழுடன் இங்கு வாழ்ந்தனர். எனவே, புகார் நகரப் புத்தத்துறவியர் இங்கு குடியேறினர். நாகர்களது வணிகச் சிறு இடமாக இருந்ததால் புகார் வணிகர் புகுந்தனர். இவர்களைத் தொடர்ந்து பொதுமக்கள் புகுந்தனர். இப்பேரூரில் ஓரளவு செல்வர் 'நீர்ப்பெயற்று' என்ற பெயர் கொண்டிருந்த காலத்திலிருந்தே வாழ்ந்து வருகின்றனர்.

நான்மறை ஓதும் மறையவர் குடியிருப்பு இப்பேரூரில் அமைந்து வேள்விகள் செய்ததைப் பெரும்பாணாற்றுப்படை குறிக்கிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக, பெருந்துறைமுகமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்திற்குப் பின்னர் சோழ நாட்டுத் துறைமுகத் திற்கேற்ற சூழல்களை இப்பேரூர் பெற்றிருந்த இயற்கைப்பாங்கும் அடிக்காரணமாயிற்று.

மேலும் இஃதொரு குறிப்பிடத்தக்க புத்தத் திருவிடமாகவும் இருந்துள்ளது. புகாரில் புத்தமதச் சார்புடையோர் இருந்துள்ளனர். கோவலன் தந்தை மாசாத்துவான் குடும்பமே புத்தச் சார்புடையது என்று அறிய முடிகிறது. எனவே, இம்மதச் சார்பிலும் இங்குக் குடியேற்றம் நேர்ந்திருக்கும்.

## ஓ. நாகர்பட்டினம்

அவ்வாறு குடியேறியோர்க்கு இங்கு வாழ்ந்த சில்வகை மக்கள் தென்பட்டிருப்பினும் ஓரளவான எண்ணிக்கையில் இடம் பெற்றிருந்த நாகநாட்டார் மிக ஈர்க்கும் நிலையில் தென்பட்டிருப்பர். ஏனெனில் நாகர் இளம் பெண்கள் கண்டால் கண்ணில் நிற்கும் கட்டழகுடையவர்; ஏன் மனத்திலும் புகும் எழில் இளமையர். இவ்வுண்மையை அடுத்து எழுதப்பெறும் பகுதியில் அறியலாம். நாகர் ஆடவரும் எடுப்பான தோற்றத்தவர். எனவே அவர்களைக் காணவும் பழகவும் நெருக்கங் கொள்ளவும் நேர்ந்திருக்கும்.

இவற்றுடன் இப்பேரூர் அப்போது எப்பெயரில் இருந்தது என்பதைக் காண வேண்டும். 'பதரிதிட்டா' என்பது அப்போதும் புத்தமத நினைவுப் பெயர். 'நீர்ப்பெயற்று' ஏறத்தாழ மறைந்து வரும் பெயர். குடியேறிய நாகர் தம் மொழியால் பெயரிட்டுக் குறித்த 'நெகமம்', நாகானனம்' என்னும் பெயர்களே வழங்கப்பெற்றிருக்கும். இவ்விரண்டிலும் நாகானனம் என்னும் பெயரே பெருவழக்காக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் பின்னர் ஏறத்தாழ ஐந்தாம் நூற்றாண்டளவில் மகாகாசபதேரர் என்னும் புத்தத் துறவியார் தாம் ஒரு விகாரையை எழுப்பித்து அதற்கு 'நாகானன விகாரை' என்று பெயரிட்டார்.

இந்நிலத்துத் துறவி நாகரினத்துப் பெயரை இட்டதற்குக் காரணம் நாகானனம் என்னும் ஊரில் எடுக்கப்பட்டதாகலாம். அன்றி நாகானனன் என்னும் நாகாநாட்டான் உதவியால் எடுக்கப்பெற்று அவன் பெயரிடப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும் இப்பகுதி 'நாகானனம்' என்னும் பெயரில் வழங்கியுள்ளது உண்மையாகும்.

எனவே, நாகர் தொடர்பிலேயே பூம்புகார் மக்கள் இவ்வூரை அணுகினர். உறையூர் சென்ற சோழ மன்னன் பூம்புகார் அழிவால் சோழநாட்டிற்கு அமைந்திருந்த புகழ் பெற்ற துறைமுகம் இல்லாமற் போனமையால், விரைந்து மற்றொரு தக்க துறைமுகத்தை அமைக்க முனைந்திருப்பான். ஓரளவில் துறைமுக இயற்கையும் அவ்வளவில் கலத்தின் அல்லது நாவாய்களின் போக்குவரத்தும் அமைந்திருந்த இப்பகுதி உரிய இடமாகியது. விரைந்து – இக்காலச் சொல்லில்

சொன்னால் 'போர்க்கால நடவடிக்கை'யாகத் துறைமுகம் உருப்பெற்றிருக்கும். ஒரு சில ஆண்டுகளிலேயே ஒரு பட்டினமாயிருக்கும்.

அதற்கேற்ற அரசு அலுவலகங்கள், ஆட்சிப்பணியாளர்கள், படைநர்கள், வணிகர்கள் நிறைந்திருப்பர். பழம் பெயராகிய நாகர் தொடர்பிலேயே 'நாகர்பட்டினம்' என்னும் பெயர் பெற்றது.

இப்பெயரே பெருவழக்காயிற்று. பிற்காலத்தில் நச்சினார்க்கினியரால் 'நாகப்பட்டினச் சோழன்' என்று குறிக்கப்படும் அளவில் ஊர்ப்பெயர் – நகரப்பெயராகி பட்டினப் பெயருமாயிற்று.

இதுவரை காணப்பெற்ற வரலாறு நாகர்பட்டினத்தின் பழம் வரலாறு. நாகர்பட்டினம் என்னும் பெயர் பெற்றதன் தோற்றகால வரலாறு.

இத்துடன் நாகையின் வரலாறு நிறைந்துவிட்டதாகக் கொள்ள முடியாது. தொடர்ந்து எழுதப்பெறும் பகுதிகளிலும் வரலாற்றுச் செய்திகள் அதனதன் தொடர்பில் அமையும். அதனதன் தொடர்பு என்பது பெயர்த்தொடர்பில் நாகையின் வளர்ச்சி வரலாறு அமைவதும், ஆட்சித் தொடர்பில் இதன் வளப்ப வரலாறு அமைவதும், நகரமைப்பால் இதன் விரிவு வரலாறு அமைவதுமாகத் தொடர்வதாகும்.

இம்முதற் பகுதி நாகை வரலாற்றின் தோற்றுவாய்.

## 1. வரலாற்று நாகை

| ஆசிரியர் | கொண்டு காட்டி நூற்குறுக்கம் |
| --- | --- |
| 1. அவ்வையார் | : மூது –4 |
| 2. இளங்கோவடிகள் | : சிலம்பு – 1:21,22 |
| 3. சாத்தனார் | : மணி – 24: 44–61 |
| 4. இளங்கோவடிகள் | : சிலம்பு – 19:55,56 |
| 5. – – – – | : R.Edi :ii -iii |
| 6. உருத்திரங்கண்ணனார் | : பட்.பா 218 |
| 7. உருத்திரங்கண்ணனார் | : பட்.பா – 173 |
| 8. நக்கீரர் | : அகம் – 205:12 |
| 9. நத்தத்தனார் | : சிறுபாண் – 153,154 |
| 10. நச்சினார்க்கினியர் | : சிறுபாண் – 153 உரை |

| | |
|---|---|
| 11. நத்தத்தனார் | : சிறுபாண் – 267 – 269 |
| 12. சாமிநாத ஐயர் உ.வே | : பெரும்பாண் – 319: அடிக்குறிப்பு. |
| 13. நத்தத்தனார் | : சிறுபாண் – 150 –153 |
| 14. சாமிநாத ஐயர் உ.வே | : பட் பா. பதிப்புரை – பாடினோர் வரலாறு |
| 15. சாமிநாத ஐயர் உ.வே | : பெரும்பாண் – 319:அடிக்குறிப்பு |
| 16. நச்சினார்க்கினியர் | : பொருள் – 37 உரை |
| 17. நச்சினார்க்கினியர் | : பெரும்பாண் – 319 உரை |
| 18. தாலமி | : புவி. (த.ப) |
| 19. இளங்கோவடிகள் | : சிலம்பு – 15:151 |
| 20. சாத்தனார் | : மணி – 28:135 |
| 21. நக்கீரர் | : அகம் – 205:12 |
| 22. பெரிபுளுசு | : அதிகாரம் 60 குறிப்பு 3 |
| 23. அடியார்க்கு நல்லார் | : சிலம்பு – 11:20 உரை விளக்கம் |
| 24. சாத்தனார் | : மணி – 25: 175 – 177 |
| 25. சாத்தனார் | : மணி – 25: 203,204 |
| 26. சாத்தனார் | : மணி – 25: 201,202 |
| 27. சாத்தனார் | : மணி – 25:201,202. |
| 28. இளங்கோவடிகள் | : சிலம்பு – 29:காவற்பெண்டு அரற்று. |
| 29. இளங்கோவடிகள் | : சிலம்பு – 29: அடித்தோழி அரற்று |
| 30. சாத்தனார் | : மணி – 28: 123 – 125 |
| 31. சாத்தனார் | : மணி – 28: 135,136 |
| 32. சாத்தனார் | : மணி – 28: 80–82 |

# 2. பெயர் பெற்ற நாகை

## அ. பெயரும் புகழும்

'பெயர்பெற்ற நாகை' என்றால் 'புகழ் பெற்ற நாகை' என்றும் பொருள். 'என்றும் பொருள்' என்றால் இப்பொருள் இரண்டாவது பொருள் என்று பொருள். ஒன்றிற்கோ ஒருவர்க்கோ சூட்டப்பெறும் பெயரையே முதலில் குறிக்கும்.

பெயர் வேறு; புகழ் வேறு; பெயரால் புகழ் பெறலாம். பெயர் கொண்டவர் எல்லாரும் புகழ் பெறுபவர் அல்லர். நல்ல செயலாற்றி, பலருக்கும் பயன்பட்டு, ஊரார் உரையாடலில் பெயர் சொல்லப் பெற்று, அவையில் பேசப்பெற்று, ஏட்டில் எழுதப்பெற்று — இவையெல்லாம் சிறப்பாகவே அமைந்து நாட்டில் பாராட்டப் பெற்றால் அப்பெயர் புகழ் பெறும்.

"பெயர் பொறிக்கும் பேராண்மை"(1) என்றார் நாலடியார். பொறிக்கப்பெறும் பெயர்தான் புகழ். எனவே, பெயரால் ஆகிய பெயரே புகழ். புகழுக்கு ஆகுபெயரே பெயர். கலித்தொகைத் தோழி ஒருத்தி "பெரும் பெயர்மீளி"(2) என்று ஒரு காதல் தலைவனைக் குறித்தாள். இங்குப் பெயர் என்றதற்குப் 'புகழ்' என்றே பொருள். இவன் வீரத்தால் பெயர் பொறித்துப் புகழ் பெற்றவன். இத்தகைய வீரர் வீரத்துடன் இறப்பின் அவருக்குக் கல்நட்டு, அக்கல்லில், அம்

"மறவர் பெயரும் பீடும் எழுதிப்"(3) போற்றுவர். இவ்வடியிலும் பெயர் வேறு, புகழ் வேறாகச் சுட்டப்பட்டிருப்பதை அறியலாம்.

பெறப்படும் புகழ் மாந்தர்க்கு மட்டும் அன்று, பொருள்களுக்கும் இடங்களுக்கும் உண்டு. இங்கு நாகை தன்பெயரால் பெற்ற புகழை விவரிக்கப் போவதில்லை. இந்நாகை — நாகர்பட்டினம் என்று தனக்குப் பெற்ற பெயரை — பெயர்களைப்பற்றி இங்குக் காணப் படுகிறது.

ஊரோ, நாடோ பலவகையால் பெயர் சூட்டப்பெறும்; அல்லது இயல்பான வழக்காலும் அமையும். பெரும்பகுதி காரணத்தாலே பெயர் பெறும்.

## பெயர்க் காரணம்

பொன்னை வடிக்கும் நாவல் மரங்கள் நிறைந்த சிறப்பால் இப்பெருநாடு 'நாவலந் தீவு' எனப் பெயர் பெற்றது. வடமொழியில் 'சம்புத் தீவு' எனப்பெற்றது (சம்பு – நாவல்). இது மரத்தால் ஒரு நாடு பெற்ற பெயர். மரத்தால் பெயர் பெற்ற ஊர்கள் பல. விலங்காற் பெயர் பெற்ற நாடுகள், ஊர்கள் உள்ளன. பலவகைகளில் பெயர் பெற்றவற்றில் மாந்தரால் பெயர் பெற்றமை மிகக் கவனிக்கத்தக்கது.

தமிழ் மண்ணின் இடங்கள் அக்கால இயற் பெயர்களாகக் கருதப்பட்ட ஆதன், பூதன், பூவன் முதலியோரால் முறையே ஆதனூர், ஆதமங்கலம், ஆதங்குடி; பூதனூர், பூதமங்கலம், பூதங்குடி; பூவனூர், பூவமங்கலம், பூவங்குடி எனப் பெயர் கொண்டன. வணிகப் பெயரான சாத்தனால் சாத்தனூர், சாத்தமங்கலம், சாத்தங்குடி; நெய்யுந் தொழிற்பெயரான சாலியனால் சாலியனூர், சாலிய மங்கலம், சாலியங்குடி; புலமைப் பெருமக்களான கீரன், கூத்தன் முதலியோரால் கீரனூர், கீரமங்கலம், கீரன்குடி, கூத்தனூர் கூத்தமங்கலம் எனப் பெயர் கொண்டு விளங்குகின்றன.

பிறமண்ணிலும் அம்மண்ணைக் கண்டு சொன்னவரால் பெயர் பெற்றன பல. கொலம்பசால் காணப்பட்ட கொலம்பியா அறிவோம். இதே கொலம்பசு முதன்முதலில் மேற்கே கண்ட நிலப்பகுதியை இந்தியா என்று கருதிச்சொன்னான். ஆனாலஃது இந்தியாஅன்று; அது ஒரு புதுநிலம் என்று ஆய்ந்து சொன்னான் இத்தாலிய மாலுமி 'ஆமெரிகோ' எனனும் பெயரினன், அவன் பெயரையே அம்மண் 'அமெரிக்கா' என்னும் பெயராகக் கொண்டு விளங்குகின்றது. 'பெயர் பெற்ற நாகை' என்னும் இத்தொடரில் பெயர்பெற்ற ஊர்களில் ஓர் ஊரே அடுத்தடுத்துப் பல பெயர்களையும் கொண்ட வரலாறு உண்டு.

'அரையம்' என்பது ஒரு மலைப்பகுதி ஊர். அது சிற்றூராய் இருந்து அதன் பக்கத்தே பேரூர் ஒன்று வளர்ந்ததால் சிற்றரையம், பேரரையம் எனப் பெயர்கள்கொண்டு,

"இருபாற் பெயரிய உருகெழு மூதூர்"(4) என்று கபிலரால் பாடப்பெற்றது. இவ்வடியே ஓரெழுத்தும் மாறாத கபிலர் தொடராக மணிமேகலையில் ஆளப்பட்டது. அதன் பதிகத்தில் சம்பு என்னும் தெய்வம் சொல்லுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

காவிரியாற்றை வரவேற்றுப் பேசும் அத்தெய்வம்,

"என்பெயர்ப் படுத்த இரும்பெயர் மூதூர்

நின்பெயர்ப் படுத்தேன்; நீ வாழிய"(5) என்று 'என்பெயரால் 'சம்பாபதி' என்று பெயர் கொண்டிருந்த இவ்வூரை நின் பெயராகிய 'காவிரிப்பூம்பட்டினம்' என்று பெயர்ப்படுத்தினேன்' என்று, தொடர்ந்து,

"இருபாற் பெயரிய உருகெழு மூதூர்"(6) என்றது. இதுகொண்டு ஒரே ஊர் காலப்போக்கில் பெயர் மாறுவதும், வேறு பெயர் கொள்வதும் சில வேறுபட்ட பெயர்களில் வழங்கப்படுவதும் உண்டு.

## ஆ. நாகைப் பெயர்கள்

இவற்றையெல்லாம் சூழவைத்து நம் நாகைப் பெயரைக் காண்பது ஒரு வரலாறுமாகும். இவ்வரலாற்றுப் புதையலில் கண்டெடுக்கப்பெற்ற பெயர்கள்:

**1. நீர்ப்பெயற்று**

– இப்பெயர் இலக்கியம் காட்டிய செயற் காரணப்பெயர்; இது தமிழ்ப்பெயர்.

**2. பதரி திட்டா**

– இப்பெயர் இலந்தை மரத்திட்டால் பெற்ற காரணப் பெயருடன் புத்தத் துறவியர் இருப்பிடமான புத்தத் திருவிடப்பெயர்; இது பாளிமொழிக்கலப்பு.

**3. நிகமா**

– இப்பெயர் நாகநாட்டாரது புத்தத் தூய்மைக் குறியாகிய பெயர். இஃதும் தமிழ் வடமொழிக் கலப்பு.

**4. நாகானனம்**

– இப்பெயர் நாகநாட்டார் இக்கடற்கரையை இந்நாட்டுப் புகுமுகமாகக் கொண்டு இட்ட அல்லது சூட்டிய பெயர். இத்தொடர் தமிழும் வடமொழியும் இணைந்த இணைப்புச் சொல். நாகர் + அனனம் என்று பிரிபடும். அனனம் என்றால் முகம். நாகர் கண்ட கடற்கரை முகம் – துறைமுகம் என்று பொருள்படும்.

## நாகர் பட்டினம் – நாகபட்டினம்

– இப்பெயர் நாகர் தொடர்பால் அடித்தளம் கொண்டு சோழன் முனைப்பால் துறைமுகமான பெயர். முழுத்தமிழ்ப் பெயர். நிலைத்து விளங்கும் பெயர்.

இப்பெயராம் நாகர்பட்டினமே காலவோட்டத்தில் வெளிநாட்டுப் பயணிகளால் அவரவர் மொழி ஒலிப்பில் பின்வருமாறெல்லாம் குறிக்கப்பெற்றது.

தாலமியால் – நிக்கவ்வா (Nikawa)

மார்க்கபோலோவால் – படான் (Pa - tan)

இத்சிங்கால் – நாகவதனா (Nagavadana)

இரச்புதீனால் – மலிபட்டன்(Mali - Pa - tan)

கலியாணிப் பட்டயத்தில் – நவுட்டபட்டனா(Navwttapattana)

போர்த்துகீசியரால் – நெகபட்டன்

ஆலந்துக்காரரால் – நேகபேட்டன்

ஆங்கிலேயரால் – நெகபெட்டாம் (Negapettum)

புத்தநூல்கள் – நெகமா, நாகானனை, நாகநகரம் எனச் சில பெயர்கள்

சைவம் – நாகைக்காரோணம்

திருமாலியம் – திருநாகை

மேலே கண்டு காட்டிய பெயர்களுள் 'நீர்ப்பெயற்று' என்னும் பெயர் சங்க காலத்தோடு சரி. 'பதரிதிட்டா' புத்தக் குறிப்புகளோடு முடிந்தது. 'நிகமா' அகழ்வில் கிடைத்த புத்தச் சிலைகளில் பொறித்த எழுத்தோடு நின்றது. 'நாகானனம்' அந்தக் காலத்து வழக்கோடு அழிந்தது. 'நாகர்பட்டினமும்' நாகபட்டினம் என்று ஒரெழுத்து தொக்கு நிற்க இன்றளவும் வழக்கில் பெயர் பெற்றுள்ளது. ஆனாலும், நச்சினார்க்கினியர் ஆட்சி, இராசராச சோழனது ஆனை மங்கலம் செப்பேடு, தொடர்ந்த சில ஆவணங்கள், பெரியபுராணம், நாயக்க மன்னர் அலுவலர்கள், மராட்டிய மன்னர் காலப்பதிவுகள், உடன்படிக்கை ஆவணங்கள், இன்றைய வழக்குகள் ஆகியவற்றில் நிலவுகின்றது. ஆனால் நாகர்பட்டினத்தின் மரூஉச் சொல்லான 'நாகை' என்னும் பெயர்தான் தமிழ் இலக்கியங்களில் பொறிக்கப்

பட்டுள்ளது. எட்டாம் நூற்றாண்டளவில் நாகையில் எழுப்பப்பெற்ற நாகநாதர் கோயில் கல்வெட்டொன்றில் "நாகை" என்று குறிக்கப்பெற்றுள்ளது. தேவார மூவர் படைப்புகள் தொடங்கி, திருமங்கையாழ்வார் பாடலில், தொடர்ந்து இடையில் சில இலக்கி யங்களிலும், பிற்காலக் கவிஞன் காளமேகம், வருணகுலாதித்தன் மடல் ஆசிரியை கவித்திருமதி காளிமுத்து அம்மையார் என்றெல்லாம் பிற்காலப் புலவர்கள் வரை 'நாகை, கடல்நாகை' என்றெல்லாம் பாடப்பட்டுள்ளது. நம்காலப் பெரும்புலவராகிய 'தனித்தமிழ்த்தந்தை' மறைமலையடிகளாரும் தம் முற்பருவத்தில் 'நாகை வேதாசலம் பிள்ளை' என்றுதான் எழுதினார். இங்கேயும் 'பெயர் பெற்ற நாகை' என்று பெயர் சொல்ல நேர்ந்துள்ளது.

இப்பெயர்பெற்ற நாகையை – நாகர்பட்டினத்தை அனைவரும் நாகபட்டினம் என்றே குறிக்க இந்நூல் நாகர்பட்டினம் என்று பதிந்து வருவதற்குரிய காரணத்தை நிறைவாக விளக்கினால்தான் 'பெயர் பெற்ற நாகை' பெற்ற உண்மைப் பெயர் நிலைத்துப் பதியப் பெற்றதாகும்.

## நாகர் – பட்டினம்

நாகர்பட்டினம், 'நாகர்' என்னும் அடைமொழியுடன் பட்டின மாக நிற்கிறது. 'பட்டினம்' என்பதற்குச் சான்றுகளோ, விளக் கங்களோ எழுத வேண்டியதில்லை. இஃது அறிவறிந்த உண்மை.

'நாகர்' என்பதுதான் தக்க சான்றுகளுடன் விளக்கப்பட வேண்டியதாகின்றது. நூலின் தோற்றுவாயில் நாகர் வருகையால், குடியேற்றத்தால், குடியமர்வால் – இவ்வடைமொழி பொருத்த மானதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே நாகர்நாடு, நாகர், அன்னார் இந்தியாவில் இடம்பெற்றமை, நாகை அன்னாரால் பெயர்பெற்றமை ஆகியன சற்று விரிவாக – தக்க சான்றுகளுடன் காணப்பட வேண்டும்.

நாகர்நாடு நக்கவாரம் – நிக்கோபார் என்று உலக அளவில் குறிக்கப்படுவது. இது வங்காள விரிகுடாக் கடலில் உள்ள 18 தீவுகளின் கூட்டம். நம் இந்திய அரசின் பிடியில் உள்ளது; பழங்கால வரலாறு கொண்டது. தமிழ் இலக்கியங்களில் மணிமேகலையில் இது 'நாகநாடு' என்றே குறிக்கப்படுகிறது. மலைகள் நிறைந்த நாடு. தமிழ்க் கல்வெட்டுகளில் 'மாநக்கவாரம்' என்று மெய்க் கீர்த்தியில்

குறிக்கப்படும். முதல் இராசராசன் "முந்நீர்ப்பழந்தீவு பன்னீ ராயிரமும் மாநக்கவாரமும்" வென்றடிப்படுத்தினான் என்றுள்ளது.

இங்கு வாழ்மக்கள் 'நாகர்' எனப்படுவர். வடமொழில் 'நக்கர்' அஃதாவது ஆடை உடுத்தாத – பிறந்தவாறு உருவினர் என்று குறிக்கப்படுவர். ஆனால், இவ்வகையினர் நகைக்கத்தக்க நக்கர். 18 தீவுகளில் ஒரு தீவில் தான் வாழ்ந்தனர். சாதுவன் என்னும் வணிகனால்,

"நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்

பக்கம் சார்ந்தவர் பான்மையன்"

ஆயினன்(7) என்று மணிமேகலையில் குறிக்கப்பட்டுள்ளது. அந்நூலில் நாகநாட்டில் பல மன்னர் ஆண்டதையும் காணலாம்.

"கீழ்நில மருங்கின் நாகநா டாளும்

இருவர் மன்னவர்"(8) ஒரு புத்த பீடிகைக்கு உரிமை கொண்டாடிப் போரிட்டதைக் காண்கிறோம். அந்நூலே வளைவணன் என்றும் அரசன் பெயரையும் வாசமயிலை, பீலிவளை என்றும் அரச மகளிரையும் குறித்ததை முன்னர் கண்டோம். அம்மக்களை மங்கோலியர் வழியினர் என்பர். கிடைக்கின்ற குறிப்புகளைக் கொண்டு நோக்கினால், அம்மக்கள் பேரழகுடையவர் என்று உணரலாம். வளைவணன், மயிலை, பீலிவளை முதலிய தமிழச் சொற்களால் அவர்கள் தமிழறிந்தோர், அத்துடன் தமிழ் முன்னோர் வழியினர் என்று கொள்ளலாம். அன்னார் ஒரே தெய்வ வணக்கம் கொண்டிருந்தவர். ஒருவனுக்கு ஒருத்தி என்பதுடன் பல மனைவியர் முறையும் கொண்டிருந்தவர். அசோகர் காலத்தில் புத்தமதம் இந்திய மண்ணிலும் இலங்கை மண்ணிலும் வேரூன்றிப் பரவியபோது நாகரும் புத்த மதத்தவராயினர். இலங்கையுடன் தொடர்பு கொண்டிருந்ததும் இதற்கு அடிப்படையாயிற்று.

## இ. பாம்புத் திசை திருப்பம்

ஆனால், புத்த மதத்தை அழிக்கத் தொடங்கிய வைதிக சமயத்தவர் கண்ணில் நாகநாடு பட்டது. எதையும் சொல்லாலும் அதன் பொருளாலும் திசை திருப்பவதில் தேர்ந்த வடமொழியாளர், நாகர் என்பார் நாகப்பாம்பு வழியினர் – ஆதிசேடன் – வாசுகி வழியினர்

என்றும் அந்நாடு நிலத்தின்கீழ் சூழ்ந்துள்ளது என்றும் சுட்டினர். இவ்வழியில் நச்சினார்க்கினியரும் 'நாகபட்டினச்சோழன் பிலத்துவாரத்தின் வழியே கீழ்உலகம் சென்று நாககன்னிகையைப் புணர அவள் மகனைப்பெற்றாள்' என்று எழுதினார்.

மேலும் நாகநாடு என்பது பேரின்ப உலகாகிய 'சுவர்க்கம்', 'பவணம்' என்றெல்லாம் சுட்டினர்.

கீழ்நில மருங்கின் என்னும் கிழக்குத்திக்கு நாட்டை, நிலத்தின் கீழ் அமைந்த தனி உலகமாகவும் குறித்தனர். அத்துடன் நாகர் என்பவர் நாகப்பாம்பின் சின்னத்தைக் கொண்டவர் என்று கூறினர். இதனை எடுத்துக்காட்டும் உ.வே.சா. அவர்கள்,

"நாக இலச்சினையை அடையாளமாக

உடைமையின் இவர்களுக்கு இப்பெயரும்,

(நாகர் என்ற பெயரும்) தட்சகர் என்ற பெயரும் வந்தனவென்று ஊகிக்கின்றனர்.(9) என்று —" ஊகிக்கின்றனர் என்றே குறித்தார். இது ஊகமேயன்றி உண்மையன்று. ஆனால் இஃதொரு கட்டுக்கதை என்பதே உண்மை. எவ்வாறு?

நாகர் பாம்புச் சின்னம் கொண்டவராக எவ்வகை வரலாற்றுச் சான்றிலும் இல்லை. நாகர் என்பார் 'ஒரு சாதியினர்' என்று அகரமுதலிகள் குறிக்கின்றன. அவ்வகரமுதலிகளே "நாகர் பதினெண் கணத்தாருள் ஒருவர் நாகலோகத்தவர்" என்றும் நாகலோகம் (சுவர்க்கம்) 'பெரின்பவீடு' என்றும், நாகநாடும் அஃதே என்றும், நாகநகர் 'பவணம்' என்றும் பொருள் எழுதின.

"கீழ்பாதி உடல் பாம்பு போன்றும்

மேல்பாதி மாந்தர் உடலமைப்பு போன்றும்

கொண்டவர்"(10) என்று சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி குறித்துள்ளது. கதைகளின்படி சற்று கற்பனை கலந்த பாம்புருவம், இதன் தொடர்பான கதைகள் படைக்கப்பட்டுள்ளமை ஒன்று; தனி ஆதிக்குடிகளாக நாகர்தீவில் வாழ்ந்த வரலாற்றுக் குறிப்புகளை யுடைய மாந்தரினத்தாராகிய நாகர் மற்றொன்று. இரண்டையும் ஒன்றாக்கி எழுதியமை குழப்பத்தை மட்டுமன்று, உண்மையைப் பொய்யால் பூசி மறைக்கும் செயலுமாகும்.

இந்தப் 'பாம்பு' என்று சொல்லும் நிலை ஒரு கொள்கையாகவே வட மொழியாளரால் வைத்துக் கொள்ளப்பட்டது. பிற மதங்களை அழிக்கவும் வேறு இனத்தவரைத் தாழ்வாக்கவும் முனைப்புடன் செயற்பட்ட ஆரிய வழியினர் 'நாகர் – பாம்பு' என்னும் இதனைப் பரவலாகவே பரப்பினர்; உருவங்களும் அமைத்தனர். விளக்கங் களும் தந்தனர். கதைகள் கட்டினர்.

இச்செயல் நம் நாகர்பட்டினம் பெயரையும் தீண்டியது. நாகரைப் பாம்பு என்றும் அதற்குரிய வடமொழியாகிய 'உரகம்' என்பதை வைத்து மாற்றியும் பட்டினத்தைப் 'புரி' என்னும் வடசொல்லால் மாற்றியும் 'உரகபுரி' (11) என்று பெயர் குறித்தனர். அகரமுதலி களிலும் புராணங்களிலும் (12) எழுதினர். ஆயினும் வழக்கில் நாகர்பட்டினம் – நாகபட்டினம் என்று தன் பெயர் பெற்றதில் நிலைத்தது.

## பாம்புக் கோயில்

இந்தப் போக்கில் நாகையில் 'நாகநாதர் கோயில்' ஒன்றும் எழுப்பப்பட்டது. இன்றும் உள்ள இக்கோயிலில் இரண்டு பாம்புகள் பின்னிப் புணர்ந்து நிற்கும் வடிவம் மூலவராகவும் உள்ளது. அத்துடன் அவ்வுருவ மூலவரும் உள்ளார். ஆனால் அங்கு வழிபடுவ தாக அமர்ந்துள்ள நாகராசன் மாந்தனாகவே உள்ளான். அவன் தலை மீது ஐந்து தலை நாகம் படம் விரித்துள்ளது. குறிப்பிடத்தக்க மற்றொரு பெண் சிற்பமும் அமர்ந்த தோற்றத்தில் உள்ளது. மாந்தர் கால்களே இதற்கு உள்ளன. இது அழகிய கன்னிப் பெண்ணின் வடிவம். இதில் ஒரு புதுமை இவ்வடிவத்தில் மூன்று கொங்கைகள் வடிக்கப்பெற்றுள்ளன. இவ்வமைப்பை ஓர் உள்ளீட்டுக் கருத்தின் சின்னமாகக் கொள்ள வேண்டும். பின்னர் இதை அறியலாம். முன்னர் இந்நூல் தொடக்கத்தில் குறிக்கப்பட்டமை போன்று இக்கோயிலில் கல்லால் உருவாக்கப்பெற்றுள்ள புற்றில் நாளும் முட்டையை உடைத்து ஊற்றுகின்றனர். நாகப்பாம்பு என்னும் கடவுளுக்குப் படைக்கும் உணவுக் காணிக்கையாகச் செய்யப்பட் டுள்ளது.

இவ்வாறு பாம்புக் கோயில் எழுப்புவது சிதறலாக ஆங்காங்கும் மரத்தடிகளில் பரவலாகவும் நிகழ்ந்துள்ளது. இந்திய நாட்டின் தென்கோடியில் உள்ள ஓரூர் நாகர்கோயில். இப்பெயர், நாகர் – பாம்பு கோயில் என்று காட்ட அமைக்கப்பட்டது. இவ்வூரின்

பழம்பெயர் 'கோட்டாறு'. இங்கும் நாகநாதர் கோயில் உண்டு. இரட்டைப்பாம்பு உருவம் மட்டுமே மூலவராக உள்ளது.

தொன்மையில் பாம்புக் கோயில் இல்லை. சிலப்பதிகாரத்தில் "வெள்ளை நாகர்தம் கோட்டம்" என்று புகார்க் கோயில் ஏன் குறிக்கப்படுகிறது? அது பலராமன் கோயில். பலராமன் ஆதிசேடனின் தோற்றரவு என்று கதை இருப்பினும் பலராமனின் மாந்த வடிவமே உள்ளது.

## நாககன்னிகைச் சோழர்

இக்கோயில் நாகநாட்டு மக்களது புத்தமதத் தொடர்புள்ளதும், இலக்கியங்களில் பேசப்படுவதுமாகிய மணிபல்லவத் தீவு; இலங்கைத் தீவுக் கூட்டங்களில் ஒன்று. இக்காலத்தில் இது நயினாத் தீவு எனப்படுகின்றது. இத்தீவில் உள்ள நாகபூசணியம்மன் கோயில் மூலவர் உருவம் பின்னிப்புணரும் இரட்டைப் பாம்புகளே. யான் இதனைக் கண்டுள்ளேன்.

நச்சினார்க்கினியர் " நாகப்பட்டினத்துச் சோழன்" என்று குறித்து, அவன் பிலத் துவாரத்தின் வழியே நாகலோகம் (கீழ் உலகம்) சென்று நாககன்னிகையைக் கூடி ஒரு மகனைப் பெற்று வந்தான். அவனே இளந்திரையன் என்று எழுதினார். இக்கதையே ஒரு மன்னன் பெயருடன் பெரும் மாற்றமின்றி ஒரு கதை எழுதப்பெற்றுள்ளது.

"சூர ஆதித்த சோழன் என்பவன் சூளாமணிச் சோழன் வழிவந்தவன். திரிசிரமலைப் பகுதியில் தூய நீராட வந்த நாக கன்னிகையைத் தொடர்ந்து நாகலோகம் சென்று அங்கு காந்திமதி என்னும் வேறு நாககன்னிகையை மணம்புரிந்து அங்கிருந்து வெற்றிலையையும் செந்நெல்லையும், இலிங்கத்தையும் கொண்டு வந்து தமிழ் நிலத்தில் நட்டும் பெருக்கியும் நாட்டியும் வழிபட்டும் வந்தான்". (13)

இவ்வாறு கூறும் அபிதான சிந்தாமணிக் கதையில் நச்சினார்க்கினியர் குறித்த நாகபட்டினச் சோழன் பெயர் வெளியிடப்படுவதாக இருந்தாலும், நாககன்னிகையர் வேறுபடு கின்றனர். இது நாகர்பட்டினத்தில் தொடங்கியதாக இல்லை; திருச்சிராப்பள்ளியில் தொடங்குகிறது. திருச்சிராப்பள்ளி பழைய சோழர் தலைநகராம் உறையூர்க்கு அண்மையானது என்பதை

நினைவு கூறலாம். உறையூர்ச் சோழன் ஒரு நாக கன்னிகையுடன் சென்று மற்றொருத்தியை மணந்தானாம். இவர்கள் வழியில் 50 — ஆவதாக வந்தவனே முதற் பராந்தக சோழன் என்றும் கூறப்பட்டுள்ளது. இப்பெயர்கள் வரலாற்றுப் பெயர்கள். காலங்களும் ஓரளவில் பொருந்துகின்றன.

ஆனால், இரு மன்னரும் 'பிலத்துவாரத்தின்' வழியே நாக லோகம் சென்றனர் என்பது அக்காலத்தில் இரண்டு உலகங்களுக்கும் சரங்கப்பாதை இருந்ததா என்று விடையில்லாத வினாவை எழுப்புகின்றது. அன்றி, பாம்புப் புற்றில் புகுந்து போனார்களோ என்னும் நகைப்பையும் ஏற்படுத்துகிறது.

இவையிரண்டுமே புலவர் சாத்தனார் தம் மணிமேகலைக் காப்பியத்தில் பதிந்துள்ள நெடுமுடிக்கிள்ளி — பீலிவளை தொடர்பு நிகழ்ச்சிக்குப் புராணப் பொய் பூசிய கற்பனைப் படைப்புகளே. எவ்வாறெனில் சாத்தனார் குறித்தவை அறிவுடன் இணைந்து பொருந்துகின்ற கருத்துக்கள் என்பதே.

பாரதக் கதையிலும் ஒரு நாககன்னிகை இழுக்கப் பெற்றுள்ளாள். ஐவரில் நடுவனான அருச்சுனன் 'உலூபி' என்னும் உரகபதியின் (நாகஅரசனின்) மகளை மணந்து ஒரு வீரக் குழந்தையைப் பெற்றதாகக் காணப்படுகின்றது. அக்குழந்தையின் பெயரும் பாம்புப் பொருளுடையது. அப்பெயர் அரவான். அதாவது அரவு (பாம்பு) + அன் — அரவன் அரவான் — பாம்பு ஈன்ற ஆண்மகன் என்னும் பொருள் கொண்டது.

எவ்வாறாயினும் நம் அறிவிற்குப் பொருந்துவது ஒன்று. அது வரலாற்றின்படி வங்கக் கடலில் நாகநாடு அன்றுமுதல் இன்றுவரை உள்ளது. அங்கு வாழ்ந்தவர் வாழ்பவர் நாகர் என்னும் பழங்குடியினர். மற்றொன்று புராணம் கூறும் பாம்பு உலகச் செய்தி. இவையிரண்டையும் கலந்து குழப்பாமல் தனித்தனியே பிரித்துக் காண்பதே அறிவுமுறையாகும்.

மேற்கண்ட சூர ஆதித்த சோழன் கதையால் ஓர் உண்மை வெளிப்படுகிறது. வெற்றிலை நம்நாட்டுப் பயிர் அன்று. அது மலேயாவிலிருந்து கொண்டுவரப்பட்டது என்பது உண்மை. அது நாகநாட்டிலும் இருந்தது. அங்கிருந்தும் கொண்டுவரப்பட்டிருக்கலாம். இதனாலும் நாகநாடு குறிக்கத்தக்க ஒன்றாகின்றது. நாகநாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் நீண்டகாலமாகவே தொடர்பிருந்திருக்கிறது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

## ஈ. இந்தியாவில் நாகர்

நாகநாட்டவர் அங்கிருந்து தமிழ்நாட்டுக் கடற்கரையூருக்கு வந்து குடியமர்ந்தனர் என்பது ஒன்றுமட்டுமல்லாது, இந்தியாவில் பல பகுதிகளிலும் குடியேறி வாழ்ந்தனர் – வாழ்ந்து வருகின்றனர் – நிலைத்துள்ளனர் என்பதையும் காணலாம்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அசாமில் நாகநாட்டு நாகர் குடியேறினர். அங்குள்ள ஆதிக்கக் குடியினர் பட்டியலில் நாகர்களே மிகுதியானவர். அன்னார் அங்கு வாழ்ந்த பகுதி மலைப்பகுதி. அப்பகுதி அன்னார் தொடர்பால் 'நாககிரி – நாகமலை' என்று பெயர் பெற்றது. அன்னார் தம் கொத்தடிமையை உணர்ந்து, துடித்தெழுந்து புரட்சி செய்து தம் பெயரால் 'நாகாலாந்து' என்னும் தனி மாநிலம் அமையப்பெற்றுள்ளனர்.

1951 ஆம் ஆண்டுக் கணக்கின்படி அசாமில் மக்கள் தொகை 90 நூறாயிரம். அவருள் ஆதிக்குடிகளாகிய நாகர் 5 நூறாயிரம், இந்நாகருள் பல பிரிவினர் உளர். அங்கமி, அரங்கமர், சேமர் லோக்தர், ஆவோ, சோன்யகர், சங்கு, துக்கோமி என்னும் குடிப்பெயர் கொண்டுள்ளனர்.

இப்பெயர்ச் சொற்களுள் பல தமிழ் அடிநிலை கொண்டவை. அவற்றிலும் சங்கு (வளை) என்னும் பெயர் தமிழ்ச்சொல் அறிமுகத்துடன் மணிமேகலையில் காணப்பெறும். வளைவணன், பீலிவளை என்னும் தமிழ்ச் சொல்லுருவங் கொண்டுள்ளமை கருதத்தக்கது. இந்நாகர் பற்றி ஆய்ந்தெழுதிய மாந்தரியல் பேராசிரியராகிய கே. பக்ராசி என்பார் இவ்வினத்தவர் வாழ்வியல், ஆட்சியியல் முறைகளையும் அறிவித்துள்ளார்.

'ஒரே தெய்வ வணக்கமுள்ளவர். 'ஒருத்தனுக்கு ஒருத்தி' என்னும் வாழ்வினரும் உளர். பலமனைவி வாழ்வினரும் உளர். சமுதாய ஒற்றுமை உடையவர்; கலை வல்லுநர், உழைப்பாளர் என்பவற்றை யும் கண்டறிந்துள்ளார். மற்றொரு மாந்தரியல் பேராசிரியராகிய தி.என். மசும்தார் என்பார் நாகர்தம் ஆட்சி முறையை,

"நாகர் போன்ற அசாம் ஆதிக்குடிக

ளிடையே தலைவர் ஆட்சியும், மற்றைக்

குடிகளிடையே மக்களாட்சியும் காணப்படுகின்றன" என்று குறித்துள்ளார்.

மேலும் இவரிற் பலர் — மிகப்பலர் புத்தமதச் சார்பாளர்களாவர். சீனா — திபேத் வழி வந்த மொழி கொண்டவர்.

இதனை எழுதிக் கொண்டிருக்கும் நாளிலேயே ஒரு வன்முறை யான துப்பாக்கிச் சூட்டுச் செய்தி வந்துள்ளது. நாகரினத்து ஆதிக்குடியைச் சேர்ந்த இளம் வன்முறையாளர் மூலம் அம்மாநில (நாகாலாந்து) முன்னாள் முதலமைச்சரைப் புதுதில்லியில் அதிலும் நாகாலாந்து இல்லத்தில் வைத்தே சுட்டுள்ளனர் என்பதே அச்செய்தி.

## நாகாலாந்து

நாகர் குடியேற்றத்தால் வடகிழக்கு இந்தியாவில் அவரினப் பெயரில் ஒரு தனி நிலமே (Land) நாகாலாந்து என்று பெயர் பெற்றுள்ளதை இங்கே காணவேண்டும். இந்த நாகாலாந்து நாகர்கள் ஆதிக்குடிகளாகவே நாகமலையில் இடம் பெற்றவராவர்.

இது போன்றே இந்தியாவின் எல்லைப்பகுதியில் மட்டுமன்றி மையப்பகுதியிலும் நாகர் குடியேறினர். மராட்டிய மாநிலத்தில் பம்பாயின் வடகிழக்கில் நாகபுரி — நாக்பூர் என்றொரு நகர் உள்ளது. கீழை நாடான சாவக நாட்டின் தலைநகரத்தின் பெயரும் நாகபுரி என்பது இங்கு கருதத்தக்கது.

**"நாக புரமிது நன்னக ராள்வோன்**

**பூமிசந் திரன்மகன் புண்ணிய ராசன்"(14)**

என்று சாத்தனார் பாடியுள்ளார். மராட்டிய நாகபுரி ஒரு மாவட்டம். அங்கு மலைப் பகுதியிலும் குறுகிய அளவில் நகர்க்குள்ளும் நாகர் இனத்தவர் வாழ்ந்தனர்; வாழ்கின்றனர்.

அறிஞர் ஆர்.கே.மூக்கர்சி (R.K. Mookarjee) என்பார்,

"வட இந்தியாவில் மாளவத்திலும்

யமுனை யாற்றங்கரையிலும் 'நாகர்'

ஆட்சி செய்தனர்"(15) என்று தம் நூலில் பதிந்துள்ளார். அங்கு இடம் பெற்றது மட்டுமன்றி ஆட்சி செலுத்தும் அளவிற்கே கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிலைபெற்றிருந்தனர். இவர் ஆட்சிக்காலம் கி.பி. 230 என்றும் அவ்வாசிரியர் குறித்துள் ளார். அஃதாவது 'பதரி திட்டை'யில் அன்னார் இடம்பெற்று நிலைத்த

காலத்திற்கு அடுத்தடுத்த நூற்றாண்டளவாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

'வால்காவிலிருந்து கங்கை வரை' வரலாறு கண்ட வடமொழிப் பேராசிரியர் இராகுல சாங்கிருத்தியாயன்,

"அங்கு (வடபுலமாகிய அவந்தியில் – மாளவத்தில்) சில நாகர்களின் வீடுகளும் இருந்தன. மக்கள் அவர்களையும் 'பணியா' (வணிகர்) என்று அழைத்தனர்(16) என்று ஆய்ந்து கண்டெழுதி னார். இவர் குறிப்பிடும் காலம் கி.பி. 420 ஆகும். இவரே,

"இவர்கள் (நாகர்கள்) தங்களை நாகர்கேந்திரப் பிராமணக் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வர்" என்றும், தொடர்ந்து,

"அவர்களிற் பெரும்பாலோர் பிராமண மதத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்; புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள்" (17) என்றும் சுபர்ணயௌ தேயன் என்னும் ஆரியர் தலைவன் வாயில் வைத்து எழுதியுள்ளார்.

இக்கருத்துகளால் நாகர் இந்தியாவில் குடியேறி நிலைத்தது மட்டுமன்றித் தாம் அவ்விடங்களுக்கு ஏற்பத் தம்மைக் காட்டிக் கொண்டனர் என்பதையும் அறியலாம். அத்துடன் இந்நாகர்கள் புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டதை நாகநாட்டில் நாகர்கள் புத்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததையும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

அந்த ஆரியர் தலைவனையே,

"நீ உச்சயினிக்குப் போனால் அங்கே தங்களைக் கிரேக்கர்கள் என்றே வெள்ளையாகச் சொல்லிக் கொள்ளும் அனேக நாகர்களைக் காணலாம். அவர்களைச் சத்திரியர்கள் (அரச குலத்தினர்) என்று ஒப்புக் கொள்ளும்படியாகப் பிராமணர்கள் ரொம்பவும் கேட்டுக் கொள்கிறார்கள்"(18) என்று பேசவைத்தார். இராகுல சாங்கிருத்தியாயன் எழுதிய இக்கூற்றில் ஓர் உண்மை வெளிப்படுவதைக் காணலாம். நாகநாட்டு நாகர் ஆளும் மன்னர் குடியினர் என்பதே அவ்வுண்மை.

தம்மைக் கிரேக்கர் என்று கூறிக்கொள்வதாகச் சொன்னதை இப்படியும் சொல்லலாம். கிழக்குக் கரைவழி வந்தவர் – கிழக்குக் கரையர் – கிழேக்கர் கிரேக்கர் என்று உருப்பெற்றதாகவும் சொல்லலாம்.

இவ்வாறு நாகநாட்டு நாகர் இந்தியாவில் குடியேறிய வரலாற்றை இடங்காட்டிக் கொண்டே போனால் அந்த விவரப்பட்டியல் நீளும். இங்குக் காட்டப்பட்டவைகளே போதுமானவை.

## உ. நாகர்க்கு நுழைவாயில்

அவ்வாறானால் நாகநாட்டு நாகர் இந்தியாவில் எவ்வழியே புகுந்தனர். அவர்கள் கரையேறிப் புகுந்த நுழைவாயில் எது? அதற்கும் அறிஞர் கே. பக்ராசி,

"நாகமக்கள் தெற்கே ஏதோ ஓரிடத்திலிருந்து இந்தியாவின் எல்லையைக் கடந்து வந்தனர் என்று கருதப்படுகிறது" (19) என்று ஒரு கருத்தைத் தந்துள்ளார்.

"தெற்கே ஏதோ ஓரிடம்" என்ற அறிய முடியாத கருத்தைத் தரும் தொடர் அவரால் விடுவிக்கப்பட்டிருக்க முடியும். முடியாமைக்குக் காரணம் அவர் தமிழ் இலக்கியங்களையும், மொழித் தமிழ் இயலையும் கற்காமையேயாகும்.

நாகர்தம் இந்தியக் கரைப்போக்குவரத்து இலங்கை வழியாகப் புத்த சமயத் தாக்கம் கொண்டு 'பதரி திட்டா' என்னும் நம் நாகையில் தான் தொடங்கியது.

எனவே, நாகர்தம் முதற் குடியிருப்பை இந்தியாவின் கிழக்குக் கடற்கரையாகிய சோழநாட்டுப் பழம் பேரூராம் நீர்ப்பெயற்றில் அதாவது அன்றைய பதரிதிட்டையில் ஏற்படுத்தினர் என்பதே. இஃதே உறுதிசெறிந்த உண்மை. நாகரினத்தவர் இந்திய மண்ணில் அடிவைத்த நுழைவாயில் இந்நாகையே.

### நாகரால் தாக்கம்

நுழைந்தவர் இந்தியாவில் ஆங்காங்கே குடியமர்ந்தனர். இவர் குடியமர்வால் இந்தியா குறிப்பாகத் தமிழ்நில மக்களிடம் நேர்ந்த தாக்கம் என்ன? அத்தாக்கம் எந்த அளவில் மாற்றத்தை ஏற்படுத்தியது? அல்லது தாக்கத்தின் எதிரொலியாக என்ன மாற்றம் பெற்றது?

நாகர் புத்த மதத் தொடர்புடன் நுழைந்தனர். அத்தொடர்பு நழுவாமலே தாக்கம் நிகழ்ந்தது. சில பெயர்களை வைத்து இதனைக் காண முடிகின்றது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஒரு புத்தக் கோட்பாட்டறிஞர் புகழ்பெற்றார். அவரை ஆய்ந்த மேலையறிஞர் தி. வாட்டர்சு (T.Wattersu) என்பார் அவ்வறிஞரைப் "பிற்காலப் புத்தத்தின் வியப்புகளில் ஒன்று" என்றார். அவ்வியப்பைத் தந்தவரின் பெயர் 'நாகார்ச்சுனர்'. இவர் கவிஞருமாவார். இவரைத் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் என்பர். நாகர் பெயரமைக்கப்பெற்ற இவர் பெயரால் 'நாகார்ச்சுனகொண்டா' என்னும் பெயர் பெற்ற புத்தத்திருவிடம் குண்டூர் மாவட்டத்தில் அமைந்தது. அங்கு பின்னர் எழுந்த நாகார்ச்சுனசாகர் நாடறிந்த ஒன்று.

'திந்நாகர்' என்னும் பேரறிஞர் திகழ்வு பெற்றார். இவர் தோற்றத்தில் புத்தமதச் சார்புடையராகிப் பின்னர் "நாத்திகர்" என்றே குறிக்கப்பட்டார். இவர் தமிழர்.

கன்னடத்தில் 'நாகவர்மா' என்பார் கன்னட மொழிக்கு இலக்கணம் வகுத்தவர். இவர் 6ஆம் நூற்றாண்டினர்.

'நாகச்சந்திரன்' என்பவர் ஒரு தீர்த்தங்கர்.

'நாககுமாரன் பற்றி' நாககுமார காவியம் தமிழில் படைக்கப்பட்டது.

இவ்வாறு தாக்கத்தால் அறிஞர் தோன்றினார் நாகப்பெயரில்.

தமிழ் மண்ணில் நாகர் பெயரில் தொன்மையராகத் தென் படுபவர் முரஞ்சியூர் முடிநாகராயர். இவர் பெயரில் முழு உருவம் முடிநாக அரையர். அரையர் என்பது ஒரு வகைக் குறுநில மன்னரைக் குறிக்கும். இவர் அக்குடியில் தோன்றியவராகலாம். முன்னே அடைமொழியாக உள்ள 'முடி' என்பதும் அதனை வலியுறுத்தும். இதில் நாக என்பது 'முடிநாக', என்பதால் முடியில் பாம்பு சூடியவர் என்றாகாது, அரையர் பின்னிருப்பதால் இதனால் சிவனையும் குறிக்காது.

இவரைத் தொடர்ந்து 'நாகனார்' எனும் பெயரில் சிலர், தீன்மிதி நாகனார், மருதன் இளநாகனார், வெண்நாகனார், அம்மெய்யன் மகன் நாகனார், நாகன் மகன் போத்தனார், எழுஉப்பன்றி நாகன் குமரனார், முப்பேர் என்னும் ஊரினரான நாகனார், நாலை கிழவன் நாகன் என்னும் ஒரு செல்வக்கோமான் என்றெல்லாம், புலவர், புரவலர் பெயர்கள் கிடைக்கின்றன.

நாகர் கூட்டுறவால் – தமிழரை மணந்த உறவால் ஒரு புதுக் குலமே தோன்றியது. "ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் என்பான் ஓவியர் குடியினன். ஓவியர் குடி என்பது நாகர் குடியில் ஒரு வகுப்பு" என்பார் உ.வே.சா. அவர்கள் (20).

நெடுமுடிக்கிள்ளி நாகநாட்டு இளவரசி பீலிவளைபால் பெற்ற மகன் இளந்திரையன் நாகர் வழியினன். அவன் நாட்டு அடையாள மாக அவன் கையில் சுற்றப்பட்ட தொண்டைக் கொடியால் அவன் தொண்டைமான் எனப்பட்டதும், அவன் வழியினர் தொண்டையர் எனப்பட்டதும், அவ்வழி தொண்டை நாடு என்றாகித் தமிழ்ப்பகுதி நாடே அமைந்ததும் நாகரை மூலமாகக் கொண்டதன் அறிகுறியே யாகும்.

இவ்வாறெல்லாம் 'நாகர்' என்னும் சொல்லை வைத்து அனைத்தும் நாகநாட்டார் வழி அல்லது தாக்கம் என்று கூறலாமா? முழுமையாகப் பொருந்துமா? இவ்வாறு ஐய வினாக்கள் எழுந்தால் தவறில்லை. வேண்டப்படும் வினாக்களுமாகும்.

## ஊ. நாகர் தமிழ்ச் சொல்

'நாகர்' என்னும் சொல் தமிழிலும் உண்டு. வடமொழியிலும் உண்டு. அவ்வவ்மொழியின் சூழ்நிலைகளுக்கேற்பப் பொருள் வேறுபாடு கொள்ளும். வடமொழியில் பாம்பு. ஒலி, கருங்குரங்கு, யானை, வானம், வீடு பேற்று உலகம், மேகம் என்னும் பொருள் களைத் தரும்.

தமிழில் மலை, சுரபுன்னை (புன்னாசம்) சங்கு, குறிஞ்சிப் பண்வகை, காரீயம் என்னும் பொருள்களைத் தரும்.

தமிழ்ச் சொல்லுக்கு வேர் அடிநிலை. ந–நா–நகம்–நகு என்பவை. நாகு இளமைப் பொருள் தரும். ஆனால் அஃறிணைப் பெண்பால் இளமையைக் குறிக்கும் (21). இவ்விளமையில் சங்கைக் குறிப்பது (22) இங்கு கருதத்தக்கது.

சிறப்பாக மலை, சங்கு என்னும் பொருள்களைக் கொண்டு சிறுசிறு மலைகள் செறிந்தமையாலும், சங்குப் பெயர்கள் சூட்டப் பட்டமையாலும் நாகர்தம் நாட்டைக்குறிக்கும். இவ்வகையில் நாகர் என்னும் இதனைத் தமிழ்ச் சொல் எனலாம். உலக முதற் குடியாகத் தோன்றிய தமிழர் பல்லிடத்தும் பரவி வாழ்ந்தமை ஓர் ஆழ்ந்த உண்மையாகையால் கிழக்குத் தீவுகளில் தொன்மைத் தமிழர்

இடம்பெற்று 'நாகர்' என்னும் பெயர் பெற்றனர். பின்னர் அன்னார் பிற மாநிலங்களுக்கும் குடியேறியவராவர். வரலாற்றாசிரியர் அனைவரும் நாகர், நாகத்தீவுகளிலிருந்து குடியேறியவர் என்றே கண்டுள்ளனர்.

தமிழர் உலகெங்கும் பரவினர் என்ற வகையில் அவர் முன்னோர் மலையின் தோற்றத்தவர் என்பதால் நாகன் — நாகர் பெயர் பெற்றுப் பரவிய இடத்திலும் அப்பெயர் பெற்றிருக்கலாம்.

எவ்வாறாயினும் நாகரது தாக்கம் தமிழ்மண்ணில் நேர்ந்தது உண்மையாகும்.

'நாகம்' என்னும் வடசொல்லுக்குப் 'பாம்பு' என்னும் பொருள் கொண்டு நாக நாட்டாரை எவ்வகையிலும் பாம்புப் பொருள் தொடர்பில் குறிக்க இயலாது. பாம்புக் குறியீடு ஏதும் அன்னார்பால் இல்லை. இந்திய மண்ணில் குடியேறிய இடங்களிலும் மலைப் பகுதியையே முதல் வாழ்விடமாகக் கொண்டு ஆதிக்குடியாகவே கொள்ளப்பட்டனர்.

## நாக மகளிர் சிற்றின்ப ஊற்றத்தர்

பின் எப்படி பாம்புத் தொடர்புபடுத்தப்பட்டது எனில் இங்குதான் நாகரினத்து மகளிரைப்பற்றி எண்ண வேண்டியுள்ளது. அவ்வினத்து மகளிர் நல்லழகியர். அதனிலும் என்றும் இளமைக் கட்டு குலையாதவர். காண்போர் கவர்ச்சிக்குரியவர். இவற்றினும் உள்ளீடாகச் சிற்றின்பம் எனப்படும் உடலுறவு இன்பத்திற்குச் சிறந்தோர் ஆவர்.

எவ்வாறெனில் கதைகளிலும், வரலாற்றிலும் நாககுலக் கன்னியரைத் தமிழ்நாட்டாரும் வடபுலத்தாரும் மணந்ததைக் காண்கிறோம். வடபுலத்திலும் இக்கன்னியர் ஆரிய குலத்தவரால் பெண் கொள்ளப்பட்டுள்ளனர். அறிஞர் இராகுல சாங்கிருத்தி யாயன் அவர்கள் முன்கண்ட ஆரிய குலத்தலைவன் கூற்றில் வைத்து,

"அநேக நாககுலப் பெண்கள் எங்கள் குடும்பத்திலேயே கொள்ளப்பட்டிருக்கிறார்கள்" (23) என்றும்,

"நம்முடைய சம்பந்திகளான இந்த நாகர்கள் நகரத்திலே வாழ்பவர்கள்" (24) என்றும் சொல்லப்பட்டுள்ளனர். நெடுமுடிக் கிள்ளி, சூர ஆதித்தன், அருச்சுனன் முதலியோர் நாகர் கன்னியரை விரும்பி மணந்தவற்றையும் கண்டோம்.

"சுந்தர பாண்டியன் என்னும் தமிழ் மன்னன் நாகர் குலப் பெண்ணை மணந்தான். அதனால் இவன் சுந்தரநாகன் – சுந்தர பாண்டிய நாகன் எனப்பெற்றான்"

என்று மார்க்கபோலோ தம் குறிப்பில் எழுதியுள்ளார்.

நாகர் கன்னியரை மணந்த செயல் அரசராலோ மற்றவராலோ செய்து கொள்ளப்படும் இயல்பான தொடர்புத் திருமணம் என்பதன்று. நாகர் கன்னியர்பால் இருந்த ஒரு தனித்தன்மையே யாகும். என்ன அந்தத் தனித்தன்மை?

நாகர் கன்னியர் உடலுறவாம் இன்பத்தை நல்குவதில் அதற்குரிய உறுப்பமைப்புகளைச் சிறப்பாகக் கொண்டிருந்ததும், என்றும் கட்டிளமை மாறாமல் இருந்ததுமாகும்.

நாகர்பட்டினத்தில் உள்ள நாகநாதர் கோயிலில் ஒரு நாக கன்னிகையின் சிற்பம் இருப்பது பற்றி முன்னர் குறிக்கப்பட்டது. அவளுக்கு இயல்புக்கு மேலாக மூன்று கொங்கைகள் உள்ளன. இதனைச் சிற்றின்ப ஊற்றத்திற்குரிய சிறப்பமைப்பாகக் கொள்ள வேண்டும்.

மலையத்துவசன் என்னும் பாண்டிய மன்னனுக்குப் பிறந்த பெண்ணிற்கு மூன்று கொங்கைகள் இருந்ததும், எந்த ஆணைக் கண்டு நாணுகின்றாளோ அப்போது மூன்றாவது மறையும் என்றும் அவ்வாறே இமயத்தில் சிவபெருமானைக் கண்டபோது மறைய, சிவனை மதுரையில் மணந்து நீண்ட புணர்ச்சி கொண்டாள் என்ற கதையும் இங்கு நோக்கத்தக்கது.

உடலுறவுப் புணர்ச்சிக்கு ஊற்றமளிப்பதில் மகளிரின் கொங்கை பெரும்பங்கு வகிப்பதை

"முலையிரண்டும் இல்லாதாள்பெண்

காமுற்றற்று" (25) என்னும் திருக்குறளாலும் குறிப்பாக அறிகிறோம். கலிங்கத்துப் பரணி போன்ற இலக்கியங்களிலும், கந்த புராணத்திலும் இதனை அறியலாம். வடமொழியில் உள்ள 'காமசூத்திரம்' தமிழில் வந்துள்ள 'கொக்கோகம்' முதலியன விரிவாகவே இக்கருத்தைத் தருகின்றன.

## பாம்புப் புணர்ச்சி

புணர்ச்சி இன்பத்தின் நிறைவிற்குச் சொல்லப்படும் பல உவமைகளில் சிலப்பதிகார வெண்பா காட்டும் உவமை இங்கு காணத்தக்கது.

"தூமப் பணிகள்ஒன்றித் தோய்ந்தா லெனஒருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து – நாமம்
தொலையாத இன்பமெலாம் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று" (26).

இருபாம்புகளின் புணர்ச்சி இங்கு உவமையாகக் காட்டப் பட்டுள்ளது. பாம்புகள் புணரும்போது அவை இரண்டு உடல்களும் வளைந்து, திருகித் திருகிப் பின்னி இறுகத் தழுவி ஒன்று விரும்பினாலும் கழல முடியாதபடி வாலை ஊன்றி நிமிர்ந்து நிற்கும் என்பர். இப்புணர்ச்சியே நிறைவு என்பர். இவ்வாறு புணரும் இரட்டைப் பாம்பின் வடிவமே நாகப்பாம்புக் கோயில்களில் வழிபடும் சிற்பமாக வடிக்கப்படுகின்றது.

திருத்தக்கதேவர் இதனைக் கூறுவது சற்று ஆழ்ந்து நோக்கத் தக்கது. உதயணன் வாசவதத்தையை யாழிசையில் வென்று மணந்து புணர்ந்ததை,

"நஞ்சுற்ற காமம் நனி நாகரின் துய்த்தவாறும்" (27) என்றமை சிலம்பு வெண்பா போன்று உவமை காட்டுகிறது. இதனை விளக்கிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர்,

"இருதலையும் ஒத்த காமத்தை நாகரைப்போல் நுகர்ந்த படியுமென்க" என்றும்; இதற்கு விளக்கமாக,

"நாகரோடு உவமை ஒருடம்பாதலும் நீங்கல் அன்மையும் பற்றி (27) என்றும் தெரிவித்தார். இதில் இறுக்கத்தால் ஒருடம்பாதலும் பிணைப்பால் நீங்க இயலாமையும் கூறப்பட்டது. அத்துடன் "நாகரைப்போல" என்றதும் "நாகரோடு உவமை" என்றதும் கூர்ந்து நோக்கத்தக்கது. இங்கு 'நாகர்' என்றது நாகப்பாம்பின் பன்மையாக நாகர் எனப்பட்டது எனக் கொள்ளலாம். அத்துடன் நாக இனத்து ஆடவர் மகளிர் போல எனக் கொள்ளவும் இடம் உண்டு.

இவ்வாறு உடலின்பத்திற்குப் பாம்புப் புணர்வை உவமை கூறியமையின் விரிவான கற்பனையே நாகர் இனத்தாரைக் கீழ்ப் பாதி உடல் பாம்பின் வடிவம் என்று வண்ணிக்கப் பட்டதாகலாம். இத்தொடர்பிலேயே நாகலோகம் போகத்திற்குச் சிறந்தது – சிறந்த மக்களைக் கொண்டது என்றும் சொல்லப்பட்டது.

எவ்வாறாயினும் நாகர் மகளிர் கவர்ச்சிக்குரியவர் என்பது புலப்படுகின்றது. வட புல ஆரியர் அழகு வடிவினர். அம்மகளிர் உடல் நிறம் மெருகேறிய தந்தம் போன்ற வெண்மையானது.

சகுந்தலையின் உடல்நிறத்தைக் காளிதாசர் இவ்வாறே 'முல்லை போன்ற உடல் நிறத்தவள்' என்றார். அத்தகைய ஆரிய இனத்தவர் நாகரினத்துப் பெண்களை மணந்தனர் என்பதும் நாகர்தம் எழிலை வலுப்படுத்துவதாகும்.

எனவே, இந்திய மண்ணும் தமிழ் நிலமும் நாகரால் கவரப் பட்டுத் தாக்கத்திற்கு உள்ளாயின என்பது ஆழங்காணப்பட்ட உண்மையே. இவ்வுண்மை நாகையில் – முற்காலப் பதிதிட்டையில் நாகர் குடியமர்ந்து விளக்கமுற்றபோது – காவிரிபூம்பட்டினம் கடல்கொள்ளப்பட்டுக் கலைந்த மக்கள் புகுந்தபோது – நாகர் இருக்கையாகவே கண்டனர்.

அதனால் அதனை நாகர் ஊராகப் பெயர் கொண்டனர். அது விரைந்து துறைமுகப்பட்டினமானதும் நாகர்பட்டினமாகப் பெயர் பெற்றது என்பது திண்ணமாகி வைரம் பாய்ந்த உண்மையாகிறது.

## எ. இனத்தாரால் பெயர்

வேற்று நிலத்திலிருந்து ஓர் இனத்தார் ஒரு நிலத்தில் குடியேறுதல் இயற்கை. இவ்வியற்கையால் குடியேறிய இனத்தாரால் குடியேற்ற நிலம் பெயர் பெறுதலும் உலகத்தில் பெருநிகழ்ச்சி யாகும். பலவற்றைக் காட்டலாமாயினும் ஒன்றே போதுமானதாகும்.

இன்று 'இங்கிலாந்து' எனப்படும் பிரிட்டன் இப்பெயரை எவ்வாறு பெற்றது?

கி.பி. நான்காம் நூற்றாண்டில் செர்மனியிலிருந்த ஓர் இனத்தார் படையெடுத்து வென்று இங்குக் குடியேறினர். ஏறிய இனத்தின் பெயர் 'ஆங்கில்'. ஆங்கில் இனத்தார் குடியேறிய நிலம் (Land) அவர் பெயரால் 'ஆங்கிலாந்து' என்று பெயர் பெற்றது.

அச்சொல்லே அங்கு வாழ்ந்த மொழிக்கும் 'ஆங்கிலம்' எனப் பெயர் ஆயிற்று.

'ஆங்கில்' என்ற இனத்தாருடன் சாக்சர் என்ற இனத்தாரும் குடியேறினர். இரண்டினத்தாரும் பேசிய மொழியின் கூட்டே 'ஆங்கிலோ – சாக்சன்' எனப்பெற்றது. இந்தியர்க்குப் பிறந்த கலப்பால் 'ஆங்கிலோ – இந்தியர்' என்ற ஒரு பிரிவும் தோன்றியது. அந்த 'ஆங்கிலாந்து' தான் காலப்போக்கில் 'இங்கிலாந்து' ஆகி 'ஆங்கிலமும்' 'இங்கிலீசு' ஆகியது.

இதுபோன்றே கி.பி. முதலிரண்டாம் நூற்றாண்டளவிலேயே அசாமில் குடியேறிய நாகரால் நாகமலையும், பின்னர் நாகாலாந்தும் பெயர் பெற்றன.

இதுபோன்றே நாகர் குடியேற்றத்தால் — அவ்வினத்தார் பெயரால் 'நாகர்பட்டினம்' பெயர் பெற்றது.

ஓர் ஊரார் மற்றொரு நாட்டில் அமைந்து ஒன்று சேர்ந்து வாழும் ஊர்ப்பகுதியும் அவ்வூரார் பெயர் பெற்றிருப்பதைக் காண்கிறோம். இலங்கையில் பட்டுக்கோட்டை மக்கள் கூடி வாழ்ந்த ஊர் வட்டுக் கோட்டை எனப்படுகிறது. இதுபோன்றதே, அங்குள்ள திருநெல் வேலிப் பெயருமாகும். மலேயாவில் இராமநாதபுரம் உள்ளது. மூணாறு உள்ளது. இதற்கெல்லாம் ஆழம் தருவது போன்று நாகர் பட்டினத்து வணிகப் பெருமக்கள் யாவாவில் இடம்பெற்ற ஊர் இன்றும் நாகபட்டினம் என்ற பெயரில் உள்ளது. வெளிநாடு என்ன; ஒரு நாட்டுக்குள்ளேயே அந்நாட்டின் மற்றொரு ஊரார் அமைந்து தம் ஊர்ப்பெயரை நாட்டியுள்ளனர்.

தஞ்சாவூரில் இராமநாதபுரம் உள்ளது. அங்கங்கே பல தூத்துக்குடிகளும் புதுக்கோட்டைகளும் உள்ளன.

உள்ளூர்க்குள்ளும் ஒரு சான்று என்பது போல் நாகைப் பகுதியிலேயே செட்டிமார், வடுகர்மார் குடியேறிய சிற்றூர்கள் செட்டிச்சேரி, வடுகர்சேரி என்றுள்ளன. நாகர் பட்டினத்திற் குள்ளேயே பார்ப்பனர் அமைந்த சேரி பார்ப்பனச்சேரியாக பெயரளவில் உள்ளது.

இவை போன்றே பதரிதிட்டை பட்டினமாகி இனத்தார் பெயரால் நாகர்பட்டினம் என்னும் பெயர் பெற்றது என்பது நிலைக்கிறது. நாகர்பட்டினமிருக்கட்டும். அதன் மரூஉப் பெயராகிய நாகை என்னும் பெயரில் மன்னார்குடிக்குப் பக்கத்தில் ஒரு நாகையும், மதுரைப் பக்கத்தில் ஒரு நாகையும் மேலும் சில நாகைகளும் உள்ளன.

## ஏ. நாகர்பட்டினமே நாகபட்டினம்

நாகரால் பெயர் பெற்ற பட்டினம் 'நாகர்பட்டினம்' என்றன்றோ வழங்கப்பெற வேண்டும். இடையில் உள்ள இடை இனத்திற்குரிய 'ர்' மறைந்து நாகபட்டினம் என வழங்கப்பெறுதல் ஏன் என்று ஐயுறலாம். இதுதான் அடிப்பட்ட வழக்கின் அடையாளமாகும்.

சோழர் ஆண்ட நாடு சோழர்நாடு என்னும் வழக்கில் இல்லை. சோழநாடுதான் பெயர். இது போன்றே

| | |
|---|---|
| பாண்டியர் நாடு | – பாண்டிநாடு |
| சேரர் நாடு | – சேரநாடு |
| தொண்டையர் நாடு | – தொண்டை நாடு |

மொத்தத்தில்

| | |
|---|---|
| தமிழர் நாடு | – தமிழ்நாடு |

நாடு மட்டுமா? பட்டினம் பெயர்களும்.

| | |
|---|---|
| சென்னப்பன் பட்டினம் | – சென்னப்பட்டினம், சென்னபட்டினம் |
| சிரீரங்கர் பட்டினம் | – சிரீரங்க பட்டினம் |
| மகாதேவர் பட்டினம் | – மகாதேவபட்டினம் |
| வைசாகர் பட்டினம் | – வைசாக பட்டினம், விசாகபட்டினம் |

என அமைந்துள்ளன.

எனவே நாகர்பட்டினம் என்னும் நிறை பெயரே நாகபட்டின மாகப் பெயர் பெற்றுள்ளது. ஆனால் இதனை நாகப்பட்டினம் என்று இடையில் 'பகர ஒற்று' போட்டு எழுதப்படுகிறது. இது தவறே. 'பகர ஒற்று' இட்டுப் பிரித்தால் அது நாகம் + பட்டினம் என்றே பிரிபடும். பிரிபட்டு அதன் மூலப் பொருளை மாற்றிப் பாம்புப்பொருளைத் தந்து வரலாற்றை மாற்றி விடும்; மயக்கத்தையும் தரும். எனவே நஞ்சைக்கொண்ட பாம்பைக் காட்டும் பகர ஒற்றாம் நஞ்சை நீக்கியே வழங்க வேண்டும்.

இலக்கியங்களிலும், பழம் ஆவணங்களிலும் பட்டயங்களிலும் 'நாகபட்டினம்' என்றே ஆளப்பெற்றுள்ளது. மறைமலையடி களாரும் நாகபட்டினம் என்றே எழுதியுள்ளார்.

அவ்வாறானால் இந்நூலில் நாகர்பட்டினம் என்று எழுதப் படுவது ஏன் என்று வினவலாம். இப்பட்டினத்தின் வரலாற்றுப் பெயரைச் சுட்டிச் சுட்டிச் சொல்லி அறிமுகப்படுத்துவதற்கே நாகர் பட்டினம் என்று ஆளப்பெறுகின்றது. வரலாற்று அமைப்பான பெயரை மக்கள் நினைவிற் கொள்ள வேண்டுமென்று கருதியும் நாகர்பட்டினம் என்று கையாளப்பெறுகின்றது. இஃதொரு பதிவாகவும் அமையும்.

## நாகபட்டினம் என்பதும் நாகர்பட்டினமே

இப்பகுதியில் நாகை பெற்ற பெயரின் வரலாறு விரிக்கப் பெற்றது. காலத்திற்குக் காலம் காரணங்களால் பெயர்களைப் பெற்று வந்த பெயர் வரலாற்றில் ஒவ்வொரு பெயராக மறைந்தாலும் வரலாற்று ஏட்டில் இலைமறை காய்களாக உள்ளன.

நாகர்பட்டினம் என்னும் நாகபட்டினமே நிலைத்த பெயராயிற்று.

இவ்வாறு பெயர் பெற்ற நாகை தன் பெயர் பொறித்ததால் புகழ் பெற்றதா? ஆம் பெற்றது.

**"பொன்னி நாடெனும் கற்பகப் பூங்கொடி மலர்போல்**

**நன்மை சான்றது நாகபட் டினத்திரு நகரம்".**

என்று சேக்கிழாரால் புகழ் பாடப்பெறும் அளவில் சோழ நாட்டின் வாடாத கொடி மலராகப் புகழ் பெற்றது. உலகத்தையும் இதன் புகழ் எட்டிப்பார்த்துள்ளது.

உலகம் தன் முகத்தைப் பார்க்க ஆவல் கொண்டதாம். தன்னைத் தனக்குக் காட்டுவது முகம் பார்க்கும் கண்ணாடியன்றோ? அவ்வாறு உலகம் பார்த்துக்கொள்ளும் கண்ணாடியாக, உலகத்துடன் உலகோர் பார்த்துக்கொள்ளும் கண்ணாடியாக,

**"குவலயம் காணும் ஆடி மண்டிலம் போல்வதவ் வணிகிளர் மூதூர்"** என்று புகழ்ந்தார் சேக்கிழார்.

சமயத்தால் புகழ் பெற்றது;

வணிகத்தால் புகழ் பெற்றது;

தமிழால் புகழ் பெற்றது;

ஓரளவில் வளத்தாலும் கல்வியாலும் புகழ் பெற்றது;

நகரமைப்பாலும், மக்களாலும் புகழ் பெற்றது;

'ஆட்சியால் புகழ் பெற்றதா?' என்றால் அடுத்துவரும் 'ஆட்சி நாகை'யைப் படிப்போர் கிடைக்கும்விடையைக் கொள்வார்களாக!

| கொண்டுகாட்டி ஆசிரியர் | கொண்டுகாட்டி நூற்குறுக்கம் |
|---|---|
| 1. நாலடியார் | : நாலடி – 199 |
| 2. பாலை பாடிய பெருங்கடுங்கோ | : கலி. – 17–21 |
| 3. நோய்பாடியார் | : அகம். – 67:9 |
| 4. கபிலர் | : புறம். – 202:6 |

5. சாத்தனார் : மணி. – பதிகம்: 31,32
6. சாத்தனார் : மணி. – பதிகம்: 33
7. சாத்தனார் : மணி. – 16: 15,16
8. சாத்தனார் : மணி. – 9: 55,56
9. சாமிநாத ஐயர், உ.வே. : மணி. – 9: 54 அடிக்குறிப்பு
10. தமிழ்ப் பேரகராதி : செ.ப. கழகம்
11. சிங்கார வேலு முதலியார், ஆ. : அபி. சிந். – பக். 248
12. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சி. : தி.நா.புரா. –
13. சிங்காரவேலு முதலியார், ஆ. : அபி. சிந் – பக். 718
14. சாத்தனார் : மணி. – 24: 169, 170
15. Mukaraji R.K. : Vide Advance History of India - P. 144
16. இராகுல சாங்கிருத்தியாயன் : வால்–கங்.– (க. பதிப்பு) பக். 289
17. இராகுல சாங்கிருத்தியாயன் : வால்–கங். – (க.பதிப்பு) பக். 300
18. இராகுல சாங்கிருத்தியாயன் : வால்–கங். – (க.பதிப்பு) பக். 300
19. பக்ராசி கே. : க.களஞ். – தொகுதி 6:பக். 336
20. சாமிநாத ஐயர், உ.வே. : புறம். – பாடப்பட்டோர் வரலாறு பக்.. (66)
21. தொல்காப்பியர் : தொல். பொருள் – 567
22. தொல்காப்பியர் : தொல். பொருள் — 648
23. இராகுல சாங்கிருத்தியாயன் : வால்–கங். – 289
24. இராகுல சாங்கிருத்தியாயன் : வால்–கங். – 300
25. திருவள்ளுவர் : திரு. – 402
26. இளங்கோவடிகள் : சிலம்பு. – 2: இணைப்பு ஈற்று வெண்பா
27. திருத்தக்கதேவர் : சீ. சிந். – 114

# 3. ஆட்சி நாகை

## அ. நான்கு வகை ஆட்சி

நாகர்பட்டினத்தின் ஆட்சி வரலாற்றை நான்கு தொடர்களில் நிறைவேற்றிவிடலாம். ஒன்று, தமிழ் மண்ணின் மைந்தர் ஆண்ட போது அவர்தம் ஆட்சியில் இருந்தது. இரண்டு, அயல்மண் மைந்தர் ஆண்டபோது அவர்தம் ஆட்சியில் இருந்தது. மூன்று, கடல்கடந்த வேற்று மண் மைந்தர் ஆட்சியில் இருந்தது. நான்கு, விடுதலை பெற்ற இந்தியாவின் தன்னாட்சி.

இவற்றை ஆட்சி வரலாற்றில் நான்கு அதிகாரங்களின் தலைப்புக்களாக,

அ. தமிழ் மன்னர் ஆட்சி;

ஆ. அயல்புல மன்னர் ஆட்சி;

இ. வேற்று நாட்டவர் ஆட்சி;

ஈ. விடுதலைத் தன்னாட்சி — எனச் சூட்டிக் கொள்ளலாம்.

## ஆ. தலைநகர் அன்று; துறைமுகமே!

நாகர்பட்டினம் ஆளுகையின் தலைநகராக இருந்ததில்லை; துறைமுகமே! இந்நகரில் அமர்ந்து இடம் பெற்று ஆட்சிக்களமாகக் கொண்டோர் அயல் நாட்டார் இருவகையார் மட்டுமேயாவார். பிறர் எவரும் இதனைத் தலைநகராகக் கொண்டு இடம்பெற்று ஆள வில்லை. துறைமுகம் அமைந்த பட்டினமேயன்றி ஆளுகைத் தலைநகர் அன்று. இங்கு அரண்மனை இல்லை; இருந்ததாக எந்தச் சுவடும் இல்லை.

அவ்வாறானால், 'மேலைக்கோட்டை வாயில்' 'வடக்குக் கோட்டை வாயில்' என்றும் பெயர் வழக்குகள் இன்றும் உள்ளனவே? இவை சுவடுகள் அல்லவா என்று வினவலாம்.

ஆம், உள்ளன. ஆனால், கோட்டை வாயில்கள் இருந்திருக்க லாம்; கோட்டை இல்லை. இத்துறைமுகப் பட்டினத்தின் மேற்கு எல்லையில் புகுவாயிலாக ஒரு 'தோரண வாயில்' இருந்திருக்கும். வடக்கு எல்லையாக ஒரு 'தோரண வாயில்' இருந்திருக்கும். கிழக்கு

எல்லை வங்கக்கடல். தெற்கு எல்லை இக்காலக் கடுவையாறு. எனவே கிழக்கு, தெற்கு இரண்டிலும் தோரண வாயில்கள் இல்லை. கோட்டைகள் இருந்திருந்தால் புதிய வீடுகள்கட்ட, கிணறுகள் அமைக்கத் தோண்டிய போதும், பயிரிட அகழ்வுகள் நேர்ந்தபோதும் கோட்டையின் அடித்தள அடையாளமாவது தென்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு எந்த அறிகுறியும் கிடைக்கவில்லை. 'கோட்டை கொத்தளம்' என்பர். கோட்டையில்லாது போனாலும் 'மருந்துக் கொத்தளம்' என்று இப்போது ஓரிடம் வழங்கப்படுவது கொண்டு கொத்தளம் இருந்தது உண்மையாகாதா? உண்மையே. துறைமுகப் பாதுகாப்பிற்கு அவ்வவ்வாட்சியாளரால் காவல்படை இருந்திருக்கும். அவர்க்குப் பயன்படும் மருந்து படைக்க மருந்துக் கொத்தளங்கள் இருந்தன. அவை மருந்துக் கொத்தளங்கள் தாமேயன்றி நால்வகைப் படைக்குரிய கொத்தளம் அன்று. 'யானைக்கட்டி முடுக்கு' என்றோரிடம் இன்றும் வழங்கப்படுகிறதே எனலாம். கலங்களில் இறக்கப்பட்ட ஒன்றிரண்டு யானை கட்டி வைக்கப்பட்ட இடம் இதுவாகலாம். யானைப்படை கொண்ட படை வளாகம் அன்று. ஒரு முடுக்குதான்.

மேலே குறிக்கப்பட்ட மேலைக் கோட்டை வாயில், வடக்குக் கோட்டைவாயில், மருந்துக் கொத்தளம், யானைக் கட்டி முடுக்கு என்பன நாகர்பட்டினத்தின் நகர் அகத்துள் உள்ளன. தம்மை ஆட்சியின் அறிகுறித்தடயங்களாகத் தத்தம் பெயரளவால் கூறிக் கொண்டுள்ளன.

## வெளியே பாளையம்

நகர்க்கு — அதாவது பட்டின நகர்க்கு வெளியே 'வெளிப் பாளையம்' என்றொரு பகுதி உள்ளது. இது வடக்குக் கோட்டை வாயில் எல்லையை ஒட்டித் தொடங்கும் குடியிருப்பு. நகர் அகத்தின் **வெளியே** அமைந்த **பாளையம்** என்பது இதன் பொருள்.

'பாளையர்' என்பார் கட்டிளமையுள்ள போர் வீரர்கள்; படை பயின்றவர்கள். அரசன் ஏவலின்படி போர் நேரின் பகைவரைத் தாக்க அமர்த்தப்படுபவர்கள். பாளையர் 'பாளையப்பட்டு' என்றும் வழங்கப்பெறுவர். பாளையர் வாழுமிடம் பாளையம். இத்தகைய பாளையர் தலைநகரில்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. பெரும்பகுதி ஆட்சிக்குரிய வேற்றிடங்களிலேயே அமைவர்.

தஞ்சை மாவட்டத்தில் அமைந்தது மன்னார்குடி; இதன் பழம்பெயர் மன்னவர்குடி சோழ மன்னரது குடிகள் அமைந்த ஊர். இங்கு முதற் குலோத்துங்கன் ஒரு திருமாலியக் (வைணவக்) கோயிலை எழுப்பினான். அது 'குலோத்துங்க சோழ விண்ணகரம்' என்று கல்வெட்டில் குறிக்கப்பெறும். அது இப்போது 'இராச கோபாலசாமி கோயில்' என்று சமயத்தாரால் மாற்றப்பெற்று வரலாற்றுப் பெயரை இழந்து நிற்கிறது. எழுப்பித்தவன் பெயரையும் மறைத்து அழித்து நிற்கிறது. இங்கு அரசரது நேர்முகக் குடிகள் இருந்தமையால் 'இராச மன்னார்குடி' என்றும் பெயர் வழங்கப் பெறுகிறது.

இவ்வூரின் கிழக்கு எல்லையில் 'அரசர் பாளையம்' என்றும் தெற்கெல்லையில் 'உருக்குமணி பாளையம்' என்றும் இரண்டு பாளையங்கள் உள்ளன. அரசர் அமர்த்தும் ஆட்சிப் பாதுகாப்பான பாளையர் இருந்த இடம் 'அரசர் பாளையம்'. உருக்குமணி கோயிலின் பாதுகாப்பான பாளையர் இருந்த இடம் 'உருக்குமணி பாளையம்'. இவ்வாறு பல பாளையங்கள் தமிழகத்தில் ஆங்காங்கு உள்ளன.

மன்னார்குடி ஒரு குடி ஊரேயன்றித் தலைநகர் அன்று. இது போன்றே நாகை வெளிப்பாளையமும் தலைநகர் அமைப்பில் இருந்ததன்று.

## காடவர்கோன்பாடி

இவ்வெளிப்பாளையத்தை ஒட்டி வடக்கே தொடங்கும் மக்கள் வாழ்பகுதி 'காடம்பாடி' எனப்படுவது. 'பாடி' என்னும் சொல் லமைந்ததால் இஃதும் ஆட்சி அறிகுறிப்பெயரே. இதன் முழுப்பெயர் 'காடவர்கோன்பாடி'. நாகையில் உள்ள குமரன் கோயிலுக்கு உரிமையுடையதாய் உளள சில பகுதி நிலம் அக்கோயிலின் பதிவு ஆவணங்களில் "காடவர் கோன்பாடி" என்றே குறிக்கப்பட்டுள்ளது.

'பாடி வீடு' என்றால் நிலைப்பில்லாமல் தங்குவதற்கு அமைக்கப்படும் கூடாரம். போர்ப்பாசறையிலும் பாடிவீடுகள் அமையும். அரசர் சுற்றுப்பயணத்தின்போதும் பாடி வீடு அமையும். நரசிம்ம பல்லவன் காலத்தில் அவன் ஆட்சி அலுவலன் ஒருவன் 'காடவர் கோன்' பட்டம் பெற்றவன். 'காடவர்' என்பது பல்லவருக்குரிய பெயர் என்பதாகக் கல்வெட்டாய்வாளர் சதாசிவப்

பண்டாரத்தாரும் (1) மேலை நாட்டறிஞர் டுபிரெயில் (2) என்பாரும் கண்டெழுதியுள்ளனர். பல்லவர் ஆட்சியும் இப்பட்டினத்தைக் கொண்டிருந்தது. பட்டினத்துள் அரச அரண்மனை இருந்திருக்கு மானால் அரசு அலுவலர் அங்கு தங்கியிருப்பர். இல்லாமையால்தான் பட்டின எல்லையில் பாடி வீடமைத்துத் தங்க நேர்ந்தது.

எனவே எவ்வகையில் நோக்கினும் நாகர்பட்டினம் சோழ நாட்டின் துறைமுகப் பட்டினமே யன்றித் தலைநகராக இருந்த தில்லை. மேலும் இதற்கொரு சான்று கூறலாம்.

## சோழர் தலைநகர்கள்

முற்காலச் சோழர்காலத்தில் உறையூரும், பூம்புகாரும் சோழ நாட்டுத் தலைநகர்களாக விளங்கின. பிற்காலச் சோழர் காலத்தில் தஞ்சாவூரும், கங்கைகொண்ட சோழபுரமும், ஆயிரந்தளி என்னும் பழையாறையும், சில ஆண்டுகள் கும்பகோணம் எனப்படும் குடமூக்கும் தலைநகர்களாக விளங்கின.

தலைநகராக இல்லை என்பதால் இதற்குக் குறை ஒன்றும் இல்லை. தலைநகர்ப் பெருமையைவிட பலமடங்கு துறைமுகத்தால் பெருமை கொண்டது. இதனை இராசராசன், முதல் இராசேந்திரன் கடாரம், இலங்கை முதலிய கடல்கடந்த நாடுகளைத் தம் கடற்படை மூலம் படையெடுத்து வென்ற பெருமைகளே பேசும். பூம்புகார், அழிவிற்குப் பின்னர் உரோமானியர், சீனநாட்டார், பர்மியர், சுமத்திரர், அரபியர் முதலியோர் வந்திறங்கிச் செய்த வணிக வரலாறு பளிச்சிட்டுக் காட்டும். சோழநாட்டுத் தூதுவர் கீழை நாடுகளுக்கும் சீனாவிற்கும் இத்துறைமுகம் வழியே சென்று தொடர்பு கொண் டமையும் ஆழமாகச் சொல்லும். சோழநாட்டு வணிகக் குழுவினர் பல்வகைத் தமிழ்நாட்டுப் பண்டங்களுடன் கீழை நாடுகட்கும், சீனாவிற்கும் கலத்திற் சென்று செய்த பெருவணிகம் விளக்கும்.

அவ்வாறானால் நாகை எவரெவர் ஆட்சியினால் ஆளப்பட்டது?

தொடக்கத்தில் குறித்தது போன்று காலவட்டத்தில் நான்கு வகையானவர் ஆட்சியில் இருந்தது. கால வரிசையில் ஒவ்வொன் றாகக் காணலாம்.

# இ. தமிழ் மன்னர் ஆட்சி

இங்குத் தமிழ்மண் என்றது "வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்" (3) ஆகும். சோழர், பாண்டியர், சேரர், தொண்டையர் என்னும் அரச குடியினரே தமிழ் மண்ணின் மைந்தர்.

இவருள் பெரும்பகுதியினராகச் சோழ குல மன்னர் ஆட்சியில் நாகை திகழ்ந்தது. இடை இடையே பாண்டியரும் இந்நிலப்பகுதியை ஆண்டனர்.

## 1. தொன்மைச் சோழர் ஆட்சி

நமக்குக் கிடைத்துள்ள தொன்மைச் சோழர்,

"தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்"

(தொடித்தோள் செம்பியன்)

"பறவைக்காகக் குறைவில் உடம்பெறிந்த கொற்றவன்"

(சிபி மன்னன்)

"கறவை முறை செய்த காவலன்"

(இயற்பெயர் அறிய இயலாத மனுச் சோழன்)

"வடவரைமேல் வாள்வேங்கை ஏற்றின கொற்றவன்" (4)

(கரிகாற் சோழன்)

— என்று சிலம்பு வரிசைப்படுத்திப் பாடும் நால்வர் அறியப்படு கின்றனர். இடையில் கரிகாலன் தந்தை அச்சந்தரும் தேர்ப்படையை உடைய "இளஞ்சேட் சென்னி" உள்ளான். தொடர்ந்து கிள்ளி வளவன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, போர்வைக்கோ பெருநற் கிள்ளி, நெடுமுடிக்கிள்ளி, இளந்திரையன், செங்கணான், நல்லடி முதலியோரை அறிகிறோம்.

இன்னோரர் ஆட்சியில் நாகை ஆட்பட்டு ஆளப்பட்டது. நெடுமுடிக்கிள்ளி தவிர ஏறத்தாழ அனைவருமே என்று சொல்லலாம், 'நீர்ப்பெயற்று', 'பதரிதிட்டா' என்னும் பெயரில் இருந்த இந்நாகையை எட்டியும் பார்த்திரார். பரந்து பட்ட இவர்தம் ஆட்சியில் ஓர் ஊராக இஃது இருந்தது.

### கோச்செங்கட் சோழன்

செங்கணான் என்பான் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை ஆண்டவன். முற்காலச் சோழன் எனப்படுவான். மூன்றாம் நூற்றாண்டில் இப்பெயர்கொண்ட கோச்செங்கணான் ஆட்சி பெற்றான். முன்னே கண்ட செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறையுடன் போரிட்டு வென்றவன். சேரமானைக் குடவாயிற் கோட்டச் சிறையில் வைத்தவன். அவ்விடம் இன்றும் அக்குறிப்புடன் உள்ளது. பின்னே வந்த கோச்செங்கணான் தமிழகமெங்கும் சிவபெருமானுக்குப் 'பெருங்கோயில்' எடுத்தவன். திருநாவுக்கரசராலும், திருமங்கையாழ்வாராலும் பாடப்பெற்றவன். முன்னவனில் இவனை வேறுபடுத்திக் காட்டவே 'கோ' என்னும் அடைமொழி சேர்த்துக் 'கோச்செங்கணான்' எனப் பெற்றான்.

இவன் ஆட்சிக் காலத்தில் நாகை பட்டினமாக உருவாகிவிட்டது. இவன் இங்கு வந்திருக்கக் கூடும். 'கூடும்' என்று ஐயத்தோடு எழுதுவதற்குக் காரணம் நாகையில் இவன் எடுத்த பெருங்கோயில் அமையாமையேயாகும்.

இடையில் இந்நாகைக்குரிய மன்னன் ஒருவன் இம்மண்ணில் அரசனாக வராமை ஒரு குறையே. அவன் இளந்திரையன். கடல் அலைகள் தர நாகைக் கரையில் உயிருடன் வந்த 'திரைதர வந்த' தால் இளந்திரையனானவன். காஞ்சியில் இருந்தே ஆண்டான். அப்போதும் நாகை பட்டினமாக முழு உருப்பெறவில்லை.

செங்கணானுக்குப் பின்னர் சில சோழமன்னர் ஆண்டனர். ஆனாலும் அயல் மண் மைந்தராகிய களப்பிரர் புகுந்து கைப்பற்றிய தால் 'முற்காலச் சோழர்' என்று பெயர் பெறும் அளவில் சோழர் ஆட்சி முடிவடைந்தது.

கி.பி. 400 முதல் ஏறத்தாழ 590 வரை களப்பிரர் என்பார் தமிழ்நாட்டாட்சியைக் கைப்பற்றி ஆண்டனர். இன்னோர் தமிழ் மண்ணின் மைந்தர் அல்லர். எனவே, இவ்விடைக்காலம் அயல்புல மன்னர் ஆட்சிக்காலமாகிறது. இஃது இத்தலைப்பில் பின்னர் காணப்படும்.

## 2. இடைக்காலப் பாண்டியர் ஆட்சி (590–862)

கி.பி.590–இல் பாண்டியன் கடுங்கோன் என்பான் களப்பிரரை வென்றான். இதனை வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

கடுங்கோன் சங்க காலத்திற்குப் பின்னர் ஏறத்தாழ மூன்று நூற்றாண்டிற்குப் பின்னர் தோன்றிய பாண்டியன். ஆதலால் இவனையும் இவனைத் தொடர்ந்தோரையும் 'இடைக்காலப் பாண்டியர்' எனலாம்.

பாண்டி நாட்டில் காலூன்றிய கடுங்கோன் களப்பிரர் ஆட்சியில் இருந்த சோழநாட்டுப் பகுதியையும் தன் ஆளுகையில் கொண்டான். பாண்டியர் தமிழ் மண்ணின் மைந்தர். எனவே, இவனை முதலாகக் கொண்டு தொடர்ந்த ஆட்சி தமிழ் மண் மைந்தர் ஆட்சியாகும்.

இவனுக்குப் பின் வந்த மாறவர்மன் அவனிசூளாமணி (620–645), செழியன் சேந்தன் இருவரும் சோழரை வென்றனர் என்று காண்பதால் களப்பிரருக்குப் பின் சோழமன்னர் சோழ நாட்டைச் சிதறலாக அவ்வப்போது ஆட்சி கொண்டனர் என்று கொள்ள வேண்டியுள்ளது. இன்னோரை இடைக்காலச் சோழர் என்று குறிக்கலாம்.

பின்னர் தொடர்ந்து பாண்டியன் அரிகேசரி என்னும் நின்றசீர் நெடுமாறன் முதல் இரண்டாம்வரகுணவர்மன் வரை கி.பி. 862 வரை சோழநாட்டுப் பெரும்பகுதியை ஆண்டனர்.

இடையிடையே பல்லவர் கையிலும் சோழநாடு இருந்தது.

மேலே கண்ட பாண்டியருள் கூன்பாண்டியன் என்பான் "ஒரு பகல் போதில் சோழரை வென்றான்" என்றும், சிறீமாற சிறீ வல்லவன் பல்லவ மன்னரை சோழநாட்டுக் குடமூக்கு என்னும் கும்பகோணத்தில் தோற்கடித்தான் என்றும் வேள்விக்குடிச் செப் பேட்டில் காணப்படுகின்றது. நின்றசீர் நெடுமாறன் என்பான் கூன னாக இருந்து சைவத்தால் நிமிர்ந்து நின்றசீர் நெடுமாறன் ஆன வன். இவன் சைவப் பெருமகளாகிய மங்கையர்க்கரசியாரை மணந் தவன். மங்கையர்க்கரசியார் சோழ நாட்டு இளவரசி யாதலாலும் இடையிடையே சோழர் சிற்றரசர்களாய் அவ்வப்போது மற்றவர் துணையுடன் சோழ நாட்டை ஆண்டுள்ளமை புலனாகின்றது.

எனவே, ஏறத்தாழ 500 ஆண்டுகள் சோழ நாட்டைச் சோழர் பெருமன்னராய் ஆளாது மற்றவர் ஆள நேர்ந்தது. இக்காலத்தில் தமிழகத்திற்கு வந்த அதாவது கி.பி. 640 அளவில் வந்த சீனப் பயணியின் குறிப்பொன்று ஒரு குறிப்பு தருகின்றது. அவன் கீழைக் கடற்கரைத் துறைமுகமாக நாகர்பட்டினத்தைக் குறித்துள்ளான்.

எனவே, சோழர் ஆட்சி நிலவாத காலத்திலும் இது துறைமுகமாக இருந்துள்ளதால் எக்காலத்தில் எவர் ஆண்டாலும் அவர் ஆட்சியில் நாகை இருந்ததாகக் கொள்ள வேண்டும். ஆனால், அவரில் எவரும் நாகைக்கு வந்ததாகக் கொள்ள எந்தச் சான்றும் இல்லை. அவர்கள் க்வனப்பார்வை பட்டிருக்கும் என்றே கொள்ள வேண்டும்.

இடைக்காலப் பாண்டியருள் இறுதியாக மாறவல்லவன் மகன் இரண்டாம் வரகுணன் கி.பி. 862—இல் பல்லவருக்கு அடங்கினான். இதனால் நேர்முகமாக 18 ஆண்டுகள் பல்லவர் சோழ நாட்டை ஆண்டனர். பல்லவர் தமிழ் மண் மைந்தரல்லர். வடபுலச் சார்பினர்.

### 3. முத்தரையர் ஆட்சி – (840)

இக்காலக் கட்டத்தில் அஃதாவது கி.பி. 840 அளவில் முத்தரையர் என்பார் வல்லத்தைத் தலைநகராகக் கொண்டு தஞ்சையை ஆண்டனர் . இம்முத்தரையர் தமிழ் மண்ணின் மைந்தர். இதனை உணர "அரையர்" என்னும் சொல்லின் விளக்கம் கூறல் ஓர் இடைச்செய்தியாகிறது. "தமிழ் முத்தரையர் கோவை" என்றொரு நூல் இருந்து மறைந்து விட்டது. இப்பெயரில் முத்தரையரைத் தமிழ் முத்தரையர் என்று குறித்திருப்பதும் முத்தரையர் தமிழ் மண் மைந்தர் என்று காட்டுகிறது.

'அரையம்' என்றால் பக்கமலை. அப்பகுதி ஊரும் அரையம் எனப்பெறும். 'சிற்றரையம்', 'பேரரையம்' என்னும் இரு ஊர்ப் பெயர்களை முன்னரும் கண்டோம். பெருவேந்தரால் ஆட்சி அதிகாரம் பெற்றோர் 'அரையர்' எனப்பெற்றனர். இன்னோரை ஓரளவில் சிற்றரசர் எனலாம்.

சங்ககால இறுதியில் உருவான 'பழமொழி' என்னும் நூலை எழுதியவர் முன்றுறையரையர் என்பார். இதிலுள்ள 'அரையர்' என்னும் சொல்லும் இதனையே அடையாளங் காட்டுகிறது. இன்றும் முத்தரைய இனத்தார் உள்ளனர். 'முத்தரையர் சங்கம்' அமைத் துள்ளனர். இந்த 'அரையர்' என்பது 'ராஜன்' என்னும் வடசொல்லின் தமிழ் ஒலிப்பு அன்று. தூய தமிழ்ச் சொல்லே.

இவ்வகையில் பாண்டிய மன்னரால் முத்துக்குளித்தல், முத்து வணிகம் முதலிய முத்துத் துறைக்கு ஆட்சி அதிகாரியாக அமர்த்தப் பட்டவர் 'முத்தரையர்' எனப்பட்டார். இம் முத்தரையர் வளமான

வாழ்வுடன் எளியவரைப் போற்றும் மனப்பாங்குடையவர். நாலடியார்,

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்

கருணைச் சோறார்வர்" (5) என்று ஒரு பெருமுத்தரையரைப் பாராட்டியுள்ளது. பிற்காலத்தும் சோழநாட்டில் இந்த அரையர் பட்டம் பெற்றோர் பலர் பலதுறைக்கு இருந்தனர். அரையர் என்னும் சொல்லே மருவிக் குறைந்து 'ராயர்' ஆயிற்று.

தஞ்சை + அரையர் – தஞ்சையரையர் – தஞ்சைராயர்.

மழவர் + அரையர் – மழவரையர் – மழவராயர்

முனையது + அரையர் – முனையதரையர்

சேனை + அரையர் – சேனாவரையர்

பல்லவ + அரையர் – பல்லவரையர் – பல்லவராயர்

சேதி + அரையர் – சேதியரையர் – சேதிராயர்

– எனப் பல இனப்பெயர்கள் இக்காலத்தும் உள்ளன.

அரபிக்கடல் வழி வந்திறங்கிய அரபியர் கலஞ்செலுத்தும் வல்லமை பெற்றிருந்தனர். இங்கமைந்த போது தமிழ்மண் அரசர் அவரை மரக்கல அலுவல் அதிகாரியாக, அஃதாவது அரையர்களாக அமர்த்தினர். அன்னார் 'மரக்கலவரையர்' எனப்பெற்றனர். அச் சொல் இக்காலத்தும் 'மரக்கலவரையர் – மரைக்காயர் – மரைக்கார் –மரைக்கான்' என்று திரிந்து வழங்கப்பட்டுள்ளதை அறியலாம்.

இவ்வகையில் பழங்காலப் பெருமுத்தரையர் வழியில் வந்த பெரும்பிடுகு முத்தரையர் என்பார் அப்போது சோழநாட்டில் ஆளுமை பெற்றிருந்த பல்லவரால் தஞ்சை ஆட்சியைப் பெற்றார். வல்லத்தில் இருந்து ஆண்டார். இவர் ஆட்சிக் காலத்தில் நாகையும் இவருக்கு உட்பட்டிருக்கலாம். முத்தரையர் ஆட்சி மிகக் குறுகிய கால அளவினதே.

## 4. பிற்காலச் சோழர் ஆட்சி (கி.பி. 870– 1279)

கி.பி. 870–இல் தலையெடுத்த விசயாலயன் என்னும் சோழமன்னன் தஞ்சை ஆட்சியைப் பெரும்பிடுகு முத்தரையரிட மிருந்து கைப்பற்றினான். இதனைத் திருவாலங்காட்டுச் செப்பேடு (6) அறிவிக்கிறது.

விசயாலயன் முழுச் சோழப் பேரரசை நிறுவினான். இவன் தொடக்கமாக மூன்றாம் இராசேந்திரன் (1256–1276) வரை 409 ஆண்டுகள் சோழநாட்டைச் சோழமன்னர் ஆண்டனர். இன்னோர் பிற்காலச் சோழர் என்று வரலாற்றாசிரியரால் குறிக்கப்படுகின்றனர்.

இவ்வாண்டுகளில்,

| சோழர் | ஆட்சிக்காலம் |
|---|---|
| 1. விசயாலயன் | 870–881 |
| 2. ஆதித்த சோழன் | 881–907 |
| 3. முதற் பராந்தகன் | 907–953 |
| 4. கண்டராதித்தன் | 953–957 |
| 5. அரிஞ்சயன் | 957–(சிலதிங்கள்) |
| 6. இரண்டாம் பராந்தகன் (சுந்தர சோழன்) | 957–973 |
| 7. உத்தம சோழன் | 973–985 |
| 8. இராசராசன் | 985–1014 |
| 9. இராசேந்திரன் | 1014–1044 |
| 10. இராசாதிராசன் | 1044–1054 |
| 11. இரண்டாம் இராசேந்திரன் | 1054–1063 |
| 12. வீரராசேந்திரன் | 1063–1070 |
| 13. குலோத்துங்கன் | 1070–1118 |
| 14. விக்கிரமசோழன் | 1118–1130 |
| 15. இரண்டாம் குலோத்துங்கன் | 1130–1150 |
| 16. இரண்டாம் இராசராசன் | 1150–1163 |
| 17. இரண்டாம் இராசாதிராசன் | 1163–1178 |
| 18. மூன்றாம் குலோத்துங்கன் | 1178–1218 |
| 19. மூன்றாம் இராசராசன் | 1218–1256 |
| 20. மூன்றாம் இராசேந்திரன் | 1256–1279 |

தொடர்ந்து இடையீடின்றி இருபது சோழமன்னர் சோழ நாட்டை ஆண்டனர். இவர்தம் 409 ஆண்டுகள் தொடர்ந்த ஆட்சியில் இடையில் பாண்டிய மன்னன் சுந்தர பாண்டியன் மூன்றாம்

இராசராசனை 1219இல் வென்று தஞ்சையையும், உறையூரையும் தீக்கிரையாக்கினான். பின்னர் சோழனே ஆளச் செய்தான். அடுத்து வந்த மூன்றாம் இராசேந்திரனும் பாண்டியருக்குத் திறை செலுத்திச் சிற்றரசனாகவே ஆண்டான். இந்த 80 ஆண்டுகள் அன்றி 329 ஆண்டுகள் பிற்காலச் சோழர் சோழ நாட்டைச் சோழப் பேரரசாகவே வைத்திருந்தனர்.

இவ்வாண்டுக்காலம் முழுமையும் நாகர்பட்டினம் அவ்வக்காலச் சோழர் ஆட்சியில் இருந்தது. குறிப்பிடத்தக்க சிறந்த துறைமுகமாக இருந்தது. விசயாலயன் தொடக்கமாக அனைவருமே நாகைக்கு வந்து ஆளுகை கண்டு சென்றனர் எனலாம். ஆனால், எவரும் நாகையில் தங்கி ஆண்டவர் அல்லர். தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், பழையாறை ஆகியவையே தலைநகரங்களாக இருந்தன. சில ஆண்டுகள் குடமூக்கு தலைநகர் என்றும் கண்டோம்.

முதற் குலோத்துங்கனிடம் கடாரத்தரசன் சாமந்தர் நாகையிலமைந்த புத்த விகாரை பற்றிய குறை சொல்ல அவன் பழையாறை அரண்மனையிலிருந்து கேட்டுக் குறைபோக்கினான். இதனாலும் நாகையில் அமையாமையை உணரலாம்.

மேலும் பிற்காலச் சோழர் சோழ நாட்டில் நிறுவிய ஊர்களாக உத்தம சோழபுரம், கண்டராதித்த சோழபுரம், இராசராசபுரம், அருண்மொழித்தேவபுரம், கங்கைகொண்ட சோழபுரம், சயங்கொண்ட சோழபுரம், வீரசோழபுரம், இராசேந்திரப்பட்டினம், விக்கிரமம், மதுராந்தகம் என்ற பட்டியலைக் காண்கிறோம். இவற்றில் நாகை இல்லை.

## நாட்டுப்பகுப்பு

சோழராட்சியில் சோழநாட்டு நிலம் அளக்கப்பட்டது. அளந்தகோல் 'உலகளந்த கோல்' எனப்பட்டது. இஃது ஒரு புத்தாக்கம்.

அளக்கப்பட்ட சோழநாட்டுப் பகுதியில் மேலாண்மை அரசு அவ்வப்போது ஆண்ட சோழ மன்னர் கையில் இருந்தது. நாட்டுப்பகுதி நாடு என்று குறிக்கப்பட்டது. நாட்டின் உட்பிரிவுகளாக வளநாடு, கோட்டம், கூற்றம், ஊர் என்று குறிக்கப்பட்டன.

இப்பிரிவில் நாகர்பட்டினம் 'பட்டினக் கூற்றம்' என்று கூற்றமாக அதாவது இக்கால வட்டமாக (Taluk) அமைந்தது.

ஆட்சி உரிமை சோழமன்னனுடையதே, அவனே முழு ஆட்சிப் பொறுப்பும், ஆளுமையும் கொண்டவன். ஆயினும் பகுக்கப்பட்ட இறுதிச் சிறுபிரிவாகிய ஊர்களின் ஆளுகைத் திட்டம் அவ்வவ்வூர் *மக்களால்* — மக்களால் தேர்ந்தெடுக்கப் படுவோரால் கவனிக்கப் பட்டது; நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆட்சி நடப்பால் பல்வகைத் துறைகள் உண்டாயின. ஒவ்வொன்றும் 'வாரியம்' என்று பெயர் *பெற்றது. பொன்வாரியம், ஏரிவாரியம், சம்வத்சர வாரியம் முதலிய* வாரியங்கள் அமைந்தன. அவற்றின் நடப்பிற்குக் குடவோலை முறையில் ஊர் வாரியத்தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஊருக்குள் மக்கள் குடும்பம் குடும்பமாகக் கணக்கிடப்பட்டனர். அது 'குடும்பு' எனப்பட்டது. இது இக்கால 'வார்டு' (Ward) என்று குறிக்கப்படுகிறது. ஒவ்வொரு குடும்புக்கும் ஒவ்வொரு வாக்குரிமை உண்டு. இவ்வாக்குரிமை பனை ஓலையில் பெயர் பொறிக்கப்பட்டு குடும்புக் கட்டாகி ஒரு குடத்திற்குள் போடப்பட்டுச் சிறு குழந்தையால் ஒரு கட்டு எடுக்கப்பட்டுப் பின்னர் கட்டைப் பிரித்து ஒரு ஓலையும் எடுக்கப்பட்டு மக்கள் தேர்தல் அறிமுகமாகி நடைமுறையாயிற்று. இவ்வாட்சி முறை பின்னர் ஊராட்சி முறையாயிற்று.

இஃது, உண்மையாகவே உலகத்திற்கு வாக்குரிமைத் தேர்தலை முதலில் அறிமுகப்படுத்தியதாகும்; தமிழர் கண்டுபிடித்ததும், கடைப்பிடித்ததுமாகும்.

இவ்வகையில் நாகைக்குக் குடவோலைத் தேர்வு நடந்து சிற்றூர்களில் ஆளுகை நடவடிக்கைகள் செயற்பட்டன. நாகை ஊராட்சி முறை கொண்டது.

## துறைமுகப் பெருமை

நாகர்பட்டினம் தொன்மைக் காலம் முதல் வளரத்தொடங்கி, *துறைமுகமாகி ஓர் அமைப்பான* பட்டினமாக விளங்கியுள்ளது.

நாகை கடற்படையால் விளக்கமுற்றது. முன்னர் சிறிய அளவில் கடற்படை இலங்கியது. முதல் இராசராசன். இத்துறைமுக வழி கடற்படை கொண்டு இலங்கையில் வடபகுதியை வென்று பொலநறுவையைத் தலைநகராக்கினான். தொடர்ந்து இங்கிருந்து கடற்படையைச் செலுத்தி முழு இலங்கையையும் கைக்கொண்டான்.

மேலும் முதல் இராசேந்திரன் சிறப்பாகக் கடாரத்தின் மேல் படையெடுத்து வென்று அவ்வெற்றியின் நினைவாகக் 'கடாரங் கொண்டான்' என்னும் ஊரைத் தமிழகத்தில் கண்டான். இன்றும் 'கடாரங்கொண்டான்' என்னும் ஊரை நாகை திருவாரூர்ச் சாலையில் காண்கின்றோம். தொடர்ந்து குலோத்துங்கனும் கடற்படையைக் கொண்டிருந்தான்.

இவர்கள் காலத்தில் நாகை கீழைக் கடற்கரையில் குறிப்பிடத்தக்க துறைமுகமாகத் திகழ்ந்தது.

பிற்காலச் சோழர் ஆட்சியில் சோழநாட்டு நிலம் அளந்து நிலஅளவை செய்யப்பெற்றதை அறிந்தோம். இதனால் நாகையும் அளவிடப்பட்டதை அறியலாம்.

குலோத்துங்கன் 'சுங்கந் தவிர்த்தோன்' என்று சிறப்பிக்கப் பெற்றவன். 'சுங்கம்' இறக்குமதி ஏற்றுமதி வரி. இது தமிழில் 'உல்கு' எனப்பெறும். இவ்வணிகம் நாகைத் துறைமுக வழியே நிகழ்ந்தது. இதனால் சோழரது நேரடி ஆட்சிக் கவனத்தில் நாகை விளங்கியதை உணரலாம்.

இச்சிறப்புகளைக் காட்டவே பிற்காலச் சோழர் ஆட்சியின் நெடும்பட்டியல் விரிவாகக் காட்டப்பெற்றது.

மூன்றாம் இராசேந்திரன் சோழ நாட்டில் ஆட்சியை முடித்து வைத்தவன்.

## 5. மீண்டும் பாண்டியர் இடையீடு

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பான் 1216 முதல் 1238 வரை ஆட்சியிலிருந்தான். இவன் முதற் குலோத் துங்கனுடன் போரிட்டு வென்றான். ஆயினும் சோழ நாட்டைத் தன் ஆளுகைக்குள் வைக்கவில்லை. வென்ற நாட்டைக் குலோத்துங்கனுக்கே திரும்ப வழங்கினான். இதனால் இவனுக்குச் 'சோழநாடு வழங்கியருளியோன்' என்னும் புகழ்ப் பெயர் ஏற்பட்டது.

1257 இல் முதலாம் சடாவர்மன் என்னும் பாண்டியன் மூன்றாம் இராசேந்திரனை வென்று அடக்கித் திறை செலுத்த வைத்ததை அறிந்தோம். இவன் பிற்காலச் சோழப் பேரரசை முடித்து வைத்தவன். மூன்றாம் இராசேந்திரனுக்குப் பின்னர் இப் பாண்டியனே சோழ நாட்டு ஆட்சியைக் கொண்டான். இவன் ட்சியில் தமிழ்நாடு முழுமையும் இருந்தது.

இவன் காலத்தில்தான் இத்தாலி நாட்டு வெனிசு நகரத்துப் பயணி மார்க்கோபோலோ (1254 – 1324) தமிழ் நாட்டிற்கு வந்தான். சீனநாட்டில் 20 ஆண்டுகள் அரசுப் பணியாற்றிய இவன் கடற்பயணமாக இந்தியக் கீழைக் கடற்கரையில் மாமல்லபுரத் துறைமுகத்தில் இறங்கிக் கடற்கரை ஓரமாகத் தெற்கே பயணம் செய்தான். இவன் நாகையில் இறங்கியுள்ளான். பொன், முத்து, பவளம் விற்கப்படும் நகரங்களாக நாகை, திருநெல்வேலி, இராமேசுரத்தை இவன் குறித்துள்ளமையால் நாகையில் இவன் இறங்கியதை உணரலாம். இவ்வகையில் நாகை கி.பி. 1320 அளவில் குறிக்கப்படுகின்றது.

மேலே கண்ட மூன்றாம் சடாவர்மனுடன் சோழ நாட்டில் பிற்காலப் பாண்டியர் ஆட்சி முடிவுற்றது.

பின்னர் பல்லவர் சோழநாட்டில் புகுந்து அவ்வப்போது சில்லாண்டுகள் ஆளுமை கொண்டனர்.

## ஈ. அயல்புல மன்னர் ஆட்சி

தமிழ் மண்ணில் அயல்புல மன்னர் ஆட்சி நான்காம் நூற்றாண்டுத் தொடக்கமாகத் தோன்றியது. அயல்புல மன்னர் என்பார் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வடபுலத்தவரும், தமிழின் கிளைமொழியான தெலுங்கு மொழியாளருமாவர்.

### 1. களப்பிரர் களம் (கி.பி. 400 – 590)

முன்னர் குறித்தது போன்று கி.பி. நான்காம் நூற்றாண்டில் களப்பிரர் என்பார் சோழரையும், பாண்டியரையும் வென்று தமிழ் மண்ணில் ஆட்சி பெற்றனர். இதனை வேள்விக்குடிச் செப்பேடு அறிவிக்கிறது என்று முன்னரும் குறிக்கப்பட்டது.

இன்னோர் வடபுலத்தவர்; 'களவர்' எனப்பட்டவர். தொண்டை மண்டலத்தின் வடக்கே கொள்ளையராக வாழ்ந்தவர் என்பர். இவருள் பலர் புத்த மதத்தைத் தழுவியவர். இவருள் குறிப்பிடத்தக்க அச்சுத களப்பாளன் என்பான் 'தமிழ்நாட்டு மூவேந்தரையும் தளையிட்டான்' என்று பிற்காலத் தமிழ் நாவலர் சரிதை கூறுகிறது.

இக்காலத்தில் சோழ நாட்டுப் பகுதியும் இக்களப்பிரர் ஆளுகையில் இருந்தாலும் நேரடியாக இன்னோர் தஞ்சையில்

அமர்ந்து ஆளவில்லை. எனவே, நாகையிலும் இவர் வருகை அமைந்திருப்பினும், இங்கு தங்கியோ, தம் ஆட்சி அலுவலரை அமைத்தோ இருந்தனர் என்று குறிக்க இயலாது. இருப்பினும் பொதுவாக இக்காலத்தில் நாகை களப்பிரர் பகுதிக்குள் இருந்தது என்றே கொள்ள வேண்டும்.

இவர் கால அடையாளமாகக் 'களப்பாள், களப்பாளன்' முதலிய சொற்கள் இன்றும் உள்ளன. சோழநாட்டு ஆமூரில் 15 ஆம் நூற்றாண்டில் 'ஆமூர் முதலி' என்னும் களப்பாளன் இருந்ததைக் கவி காளமேகம் பாட்டால் அறிகிறோம். இது களப்பாளரின் சோழநாட்டு ஆட்சிக்கு ஓர் அடையாளமாகும்.

ஆறாம் நூற்றாண்டில் பாண்டியரும் பல்லவரும் களப்பிரரை வென்று அடக்கினர். சோழநாட்டிலும் களப்பிரர் ஆளுகை முடிந்தது. நாகையும் களப்பிரரிடமிருந்து பாண்டியர் கைக்கு மாறியது. கி.பி. 590 – இல் பாண்டியன் கடுங்கோன் களப்பிரரை வென்று சோழநாட்டாட்சியைக் கொண்டதைக் கண்டோம்.

## 2. பல்லவர் தலையீடு

வேலூர் பாளையச் சேப்பெடு,

"காவிரி பாயப் பெற்ற சோழ நாட்டைச்

சோழரிடமிருந்து சிம்ம விச்ணு என்னும் பல்லவ மன்னன் கைப்பற்றினான்", என்று குறிக்கிறது. தொடர்ந்து பல்லவ மன்னர் சோழநாட்டாட்சியை வைத்திருந்தனர். நரசிம்மவர்மன் என்ற மாமல்லன் (கி.பி. 660) ஆட்சியிலும் சோழநாடு இருந்ததாயினும் பல்லவ மன்னர் தம் ஆளுமைக்குட்பட்ட சிற்றரசரையோ ஆளுநரையோ தஞ்சையில் வைத்தே ஆண்டனர்.

எனவே நாகைக்குப் பல்லவ மன்னர், ஆட்சிப் பொறுப்பில் வந்ததில்லை. ஆனால், மாமல்லன் சமயத் தொடர்பில் வந்துள்ளான். இவன் காலத்தில் மாமல்லபுரம் வாய்ப்பான துறை முகமாக்கப் பெற்றதால் நாகைத் துறைமுகம் வணிகத் தொடர்பில் துறைமுகமாக இருந்தது. சீன, கீழை நாட்டு வணிகம் சிறப்புற நடந்ததால் நாகை தன் துறைமுகச் சிறப்பில் மேலோங்கியே நிற்கிறது.

பிற்காலச் சோழர் ஆட்சிகளில் பல்லவர் சோழ நாட்டில் 'கவில்லை. பின்னர் வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம்

தலைநீட்டினார். தம் கொடையாக முத்தரையச் சிற்றரசர்க்குத் தஞ்சை ஆட்சியை வழங்கியமை கண்டோம்.

### 3. விசயநகர அரையர் தஞ்சை (1257 – 1539)

பின்னர் அயல் மண் மன்னர் ஆட்சியாகச் சோழ நாட்டில் விசயநகர மன்னர் தலையீடு நேர்ந்தது. ஆந்திர மண்ணின் மைந்தரான விசயநகர் மன்னரில் கிருட்டிணதேவராயர் கி.பி. 1509–இல் பட்டஞ் சூடினார். இவர் பெயரிலும் பட்டப்பெயராக அமைந்த 'இராயர்' என்பது 'அரையர்' என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபே. இம்மன்னர்தம் தாய் மொழி தெலுங்கு. தெலுங்கு தமிழின் கிளைமொழியாகையால் 'அரையர்' என்னும் 'அரசர்' பொருள் தரும் தமிழ்ச்சொல் அவரால் கைக்கொள்ளப்பெற்றது.

"புதுதில்லி தேசிய அருங்காட்சியகச் செப்பேடு" என்று தலைப்பிட்டுப் புலவர் செ. இராசு அவர்கள் (தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டுத்துறை இணைப்பேராசிரியர்) பதிப்பித்துள்ள செப்பேடு (7) தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை விசயநகர மன்னர்கள் ஆண்டதாகக் குறிக்கிறது. இதில் 'அசுவபதிதேவ மகாராயர்' தொடக்கமாகச் சாளுவ திருமலை தேவ மகாராயர் இறுதியாக எட்டு மன்னர் பெயரைத் தந்து (மேலும் பலர் ஆண்டதாகக் கொண்டு),

"இவை பட்டம் பதினாறும் ராச்சிய

பரிபாலனம் பண்ணப்பட்ட"(8) என்று பதினாறு விசய நகர மன்னராட்சி இருந்ததாகக் குறித்துள்ளது.

'சென்னை அருங்காட்சியகச் செப்பேடு' எனப்பட்டதிலும் 'புசபலதேவ மகாராயர்' தொடக்கமாகக் 'கிருட்டிணதேவ மகாராயர்' இறுதியாக 11 மன்னர் பெயர்களைக் குறித்து,

"யிவர்கள் பிருதிவிராஜ்ய பரிபாலனம்

பண்ணினை பின்பு"(9) என்று சொல்கின்றது. இவையிரண்டிலும் இன்னோர் ஆட்சிக்காலம் குறிக்கப்பெறவில்லை. குறிக்கப் பெற்றுள்ள பெயர்களும் எவ்வகையிலும் ஒன்றித்தில்லை. ஆனால், இரண்டு பட்டியல்களிலும் கிருட்டிணதேவராயர் பெயர் உள்ளது.

இவ்விரண்டு செப்பேடுகளிலும் உள்ள தொடர் கொண்டு இம்மன்னர் சோழ நாட்டில் இருந்து நேர்முக ஆட்சி செலுத்தியதாகக்

கொள்ள இடமில்லை. முதற் செப்பேட்டில் மன்னர் பெயர்களைத் தந்து "இவை பட்டம் பதினாறும்" என்றுள்ளமை இன்னோர் சார்பில் 'பட்ட அலுவலர்' ஆண்டதையே புலனாக்குகிறது. அடுத்த செப்பேட்டில் "இவர்கள் பிருதிவிராஜ்ய பரிபாலனம்" என்றுள்ளது. "பிரதிராச்ய" என்பதே "பிருதிவி" என்றுள்ளது. எனவே விசயநகர மன்னரின் 'பிரதி' களான ஆளுநர் அல்லது சிற்றரசர் ஆண்டதாகவே கொள்ள வேண்டும்.

எனவே, பிற்காலச் சோழருக்குப் பின்னர் சோழ நாட்டை விசயநகரமன்னர் தம் 'கைக்குள் வைத்திருந்தனர்' என்றே கொள்ள வேண்டும்.

## 4. முகமதியர் தலையீடு

இக்காலக்கட்டங்களில் பீசப்பூர் சுல்தான்களாகிய முகமதிய மன்னர் அவ்வப்போது தமிழக ஆட்சியில் தலையிட்டனர். ஆட்சியைப் பெறுவது அன்னோர் நோக்கமன்று. அவ்வப்போது கிடைக்கும் அளவில் பெருஞ்செல்வம் பெறுதலே நோக்கமாகும். அதற்குத் தம் படைத்தலைவர்களையோ சிற்றரசர்களையோ பயன் படுத்தினர். அவர்க்கு ஆட்பட்டோரும் இருந்தனர். தொடக்கத்தில் விசய நகர மன்னர் ஆட்படவில்லை; எதிர்க்கவும் செய்தனர். ஆனாலும், போகப்போக இயைந்தும் நின்றனர்.

இதனால் முகமதிய மன்னர் – அவருள்ளும் பீசப்பூர் சுல்தான்கள் பார்வை சோழ நாட்டைக் கொத்திக் கொண்டேயிருந்தது.

விசயநகர மன்னரில் மேலோங்கியிருந்த கிருட்டிணதேவராயர் மதுரையில் அமர்ந்து பிற இடங்களில் தம் ஆளுநரை ஆட்சியில் அமர்த்தினார். சோழ நாட்டுத் தஞ்சையில் அவர்தம் ஆளுநராக நாயக்கர் இருந்தனர். கிருட்டிணதேவராயர் மறைவிற்குப்பின் அதாவது 1529–இன் பின் விசயநகரப் பேரரசு குலைந்தது. மதுரையில் திருமலை நாயக்கர் இடம் பெற்றார்.

## 5. நாயக்கர் தஞ்சை (1540 – 1674)

தஞ்சையில் ஒரு நாயக்கர் அரசராக அமர்ந்தார். அவர் பெயர் சேவப்ப நாயக்கர். அவர் பெயர் செவ்வப்ப நாயக்கர், செல்வப்ப நாயக்கர், கேசவப்ப நாயக்கர் எனப் பலவாறாகக் குறிக்கப்படு கின்றது. இவர் நாயக்கர் இனத்திற்கென ஒரு வழிமுறையாகத்

தஞ்சையில் ஒரு கிளைக் குடியை உருவாக்கினார். அது 'தஞ்சை நாயக்கர் குடி' என்று பெயர் பெற்றது. 1540–இல் ஆட்சிபெற்ற சேவப்ப நாயக்கர் நாற்பது ஆண்டுகள் தஞ்சையிலிருந்து ஆண்டார். அவர்தம் ஆட்சிக்காலத்தில் அவர் நாகைக்கு வருகை தந்துள்ளார். கோயில் திருப்பணிகள் செய்துள்ளார். அவர் புத்தப் பள்ளிகளுக்கும் முகமதியர் மசூதிகளுக்கும் சமயப் பொதுப்பாங்கில் பல அறக்கொடைகள் செய்தவர். அவர் காலத்தும் நாகையில் புத்தப் பள்ளிகள் இருந்தன. எனவே, அவர் அறக்கொடையை நாகை புத்தப் பள்ளியும் பெற்றது. ஆனால் நாகையிலோ நாகூரிலோ அவர்தம் அறக்கொடையை மசூதி பெற்றதன்று. அப்போது நாகூர் தர்கா அமையவில்லை. தர்காவில் அடக்கமான முகமதியத் துறவியார் அசரத் காதறு ஒலி அவர்கள் 1572 – இல் அடக்கமானார். இதற்கு ஏறத்தாழ 30 ஆண்டுகளின் முன்னர் சேவப்ப நாயக்கர் ஆண்டார்.

அவரைத் தொடர்ந்து தஞ்சை நாயக்க அரசுக் குடியினராகச் சிலரும், பின்னர்

அச்சுதப்ப நாயக்கர் ... 1580 – 1600,

இரகுநாத நாயக்கர் ... 1600 – 1634,

விசயராகவ நாயககர் ... 1634 – 1673 ஆண்டனர்.

பின்னர் திருச்சி சொக்கநாத நாயக்கரால் தஞ்சை மன்னராக ஆக்கப்பெற்ற அவர் தம்பி அழகிரி நாயக்கர் (1673 – 1674) என்பார் தஞ்சையை ஆண்டார். இவ்வழகிரி நாயக்கர் மீது பீசப்பூர் சுல்தான் தன் படைத் தலைவரான மராத்திய ஏகோசியை அனுப்பிப் போரிடச் செய்தார். ஏகோசி அழகிரியை அய்யம்பேட்டையில் தோற்கடித்தார். ஏகோசி தம் பொறுப்பில் செங்கமலதாசர் என்பவரைத் தஞ்சை மன்னராக்கினார். தஞ்சையில் நாயக்க மன்னராட்சி முடிவுற்றது.

## 6. மராத்தியர் தஞ்சை (1675 – 1855)

மராத்தியப் படைத்தலைவராக வந்த ஏகோசி 1675 –இல் தஞ்சையில் மராத்திய மன்னராக ஆட்சி கொண்டார். இவர் முதல்வராக மராத்திய இனத்தவர் ஆட்சி சோழநாட்டில் துவங்கியது.

நாயக்கர் தெலுங்கு நாட்டவர் என்று கண்டோம். தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர். வடமொழிப் பற்றாளர். தமிழும் தெலுங்கும் சோழநாட்டு ஆட்சி மொழிகளாக அமைந்தன. நாயக்க மன்னராட்சியாகத் தஞ்சையும் நாகையை உள்ளிட்ட அதன் சுற்றுப்புறப் பகுதிகளும் 144 ஆண்டுகள் இருந்தன.

## முகமதியர் வழி மராத்தியர்

மராத்திய மன்னர் இனத்து வீர சிவாசி வலிமை வாய்ந்த பெருமறவர். முகமதிய மன்னரை நடுங்க வைத்தவர். அவர் பெற்ற வெற்றிகள் அவரது தனித்திறங்கொண்டவை. அவர் வழி வந்த மராத்திய மன்னர் தமிழகத்தில் அதிலும் சோழநாட்டில் குறிப்பாகத் தஞ்சையில் ஆட்சி பெற்றமை முகமதிய மன்னர் துணை கொண்டதாகும்; அவர் தூண்டுதலுமாகும். அத்துடன் திருச்சி நாயக்க மன்னரும் தஞ்சை நாயக்க மன்னரும் தங்கட்குள் கொண்ட பூசலும் காரணமாயிற்று. மராத்திய ஏகோசி புகுந்தார். தஞ்சையில் அரசராக அமர்ந்தார். முகமதிய மன்னர்க்குப் பொன்னும் பொருளும் தருகின்ற அவர்க்கடங்கிய மன்னராகவே ஆட்சி செய்தார்.

ஏகோசி ஆளத்தொடங்கிய செய்தியை ஆலந்துக்காரரது படேவியா பட்டயம் தெரிவிக்கிறது. ஏகோசி தொடக்கமாக கி.பி. 1676 முதல் 1855 வரை 130 ஆண்டுகள் சோழநாட்டுப் பகுதி தஞ்சையைத் தலைநகரராகக் கொண்டு கீழ்வரும் 13 மராத்திய மன்னரால் ஆளப்பெற்றது.

| | |
|---|---|
| ஏகோசி | 1676 – 1684 |
| சகசி | 1684 – 1711 |
| முதல் சரபோசி | 1711 – 1727 |
| துக்கோசி | 1727 – 1735 |
| இரண்டாம் ஏகோசி | 1735 – 1737 |
| திருமதி சுகன்யாபாய் | 1737 – 1738 |
| காட்டுராசா என்னும் சாசி | 1738 |
| சையாசி | 1738 |
| பிரதாபசிங்கு | 1739 – 1763 |
| துளசா | 1763 – 1787 |
| அமர்சிங்கு | 1787 – 1798 |
| இரண்டாம் சரபோசி | 1798 – 1832 |
| சிவாசி | 1832 – 1855 |

## மராத்தியரில் இருவர்

இப்பதின்மூன்று மன்னரில் நாட்டு எண்ணம் கொண்டவர் என இருவரையே குறிப்பிடலாம். ஒருவர் பிரதாப சிங்கு. மற்றவர் இரண்டாம் சரபோசியாகிய "தஞ்சை துவங்கும் போசன் சரபோசி மகாராசன்" என்று பாடப்பெற்றவராவர்.

இன்னோர் இருவரும் நாகைக்கு வருகை புரிந்துள்ளனர். பிரதாப சிங்கின் பெயரால் நாகைக்குத் தெற்கே 12 கிலோ மீட்டரில் இருந்த 'பூவத்தடி' என்னும் ஊர் 'பிரதாபராமபுரம்' என்று ஆயிற்று. சரபோசி தஞ்சை மாவட்டச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டவர். அவர் வருகையை நாகை பெற்றது. அவர் தஞ்சை அரண்மனையில் புதிய கலைக் கட்டடங்களை எழுப்பியவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம், மராத்தி முதலிய மொழிகளிலமைந்த மருத்துவம், கணிப்பம், (சோதிடம்) ஓரளவில் இலக்கியம் முதலிய சுவடி களையும், ஏடுகளையும் ஆவணங்களையும் தொகுத்தார். இன்றும் திகழும் 'சரசுவதி மகா'லைக் கண்டார். கலை நுணுக்கமுள்ள ஓவியங்கள், பொன்னிழையால் ஆடிப்படங்கள், அருங்கலைப் பொருட்களைத் தொகுத்துள்ள அவர் கலைப்பணி பாராட்டுக்குரியது. மராத்தியர் ஆட்சி அம்மன்னருள் 13-வது மன்னரான சிவாசி என்பாரோடு முடிந்தது. முடிந்த ஆண்டு 1855.

இதுவரை,

தொன்மைச் சோழர்,

பாண்டியர்,

முத்தரையர்,

பிற்காலச் சோழர்,

களப்பிரர்,

பல்லவர்,

விசயநகர அரையர்,

நாயக்கர்,

மராத்தியர்

– எனத் தமிழ் மண் மன்னரும் அயல்புல மன்னருமாக ஒன்பது மன்னர் குடியினர் ஆட்சியில் சோழநாடு இருந்தது. இது கி.மு. முதல்

நூற்றாண்டு முதல் கி.பி. 1855 வரை ஏறத்தாழ 20 நூற்றாண்டுகாலச் சோழநாட்டு ஆட்சி மன்னர் வரலாற்றுப் பட்டியல். இத்துணை நூற்றாண்டிலும் இவ்வொன்பது மன்னர் குடியினரின் கீழ் நாகை பேரூராகவும், துறைமுகப்பட்டினமாகவும் திகழ்ந்தது.

ஒரு மன்னரும் அரண்மனை கொண்டு இடம் பெற்று ஆளாத நாகைக்கு இத்துணை விரிவான பட்டியலை விளக்க வேண்டுமா?

'..... சோழராட்சியில் பேரூராக இருந்தது. எம்மன்னரும் இருந்து ஆளவில்லை; இது தலைநகரமாக இருந்ததில்லை; துறைமுகமாகவே இருந்தது' என்று சுருக்கமாக முடித்திருக்கலாமே? — என்று வினா எழின் அதை ஏற்க இயலாமல் பல கருத்துக்கள் பொதிந்து நின்று மறுக்கச் சொல்கின்றன.

அப்பொதிவுகள் எவை?

அவிழ்ப்போம்.

தாக்கங்கள்

அவிழ்த்தால் .... "நாகைக்கு நலஞ்சேர்த்த கருத்துக்கள் அதிகம் கிடைக்கா. பிற்காலச் சோழர் சிலரது போர்க்கப்பல் களம், அயல்நாட்டு வணிகத் துறை, வணிக அங்காடி, சமயக் கொடைகள், திருக்கோயில்கள் எனும் பகுதிகளில் நேர்ந்த நலன்கள் ஓரளவில் பளிச்சிடுகின்றன.

மற்றைப் பெருமளவில் பாராமுகம், புறக்கணிப்பு, ஒதுக்கல், வருவாய் உண்டியல், குத்தகைப் பொருள், மாற்று அமைப்புகள் என்னும் தாக்கங்களுக்கே நாகை ஆட்பட்டது.

நெடுமுடிக்கிள்ளி, அவன்வழிக் கிள்ளிகளின் ஆட்சிகளால் துறைமுகப் பட்டினமாயிற்று. இயல்பான வணிகத்தால் செழிப்புற்றது. இராசராச சோழன், இராசேந்திர சோழன் என்னும் இருவரால் போர்க் கப்பல்களின் கடற்களமாயிற்று.

மற்றையளவில் தாக்கங்களையே கண்டது; எதிர் கொண்டது. இவற்றிடையே நாகை தன் வணிகத்தால், துறைமுக நடப்பால், புத்த சமயத் தொடர்பால், சைவ சமயப் பெருமையால், நகரப் பெரு ்மக்களின் அறக்கொடைகளால், தன்னைத் தானே நிலைநாட்டிக் காண்டு வளர்ந்துள்ளது. பிற்காலத்தே ஆலந்துக்காரர் ன்னலங்கருதிய சில ஆக்க அமைவுகளாலும், ஆங்கிலேயரது

தன்னாட்சி கருதிய நிறுமிதங்களாலும் நலம் துழப் பெற்றது எனலாம்.

இப்பொதிவுகளை உணரவும், அறியவும் 20 நூற்றாண்டுகளின் ஆளுகை மன்னரது பெரும் பட்டியல் அடையாள அட்டையாகிறது.

## தமிழில்லாப் பெயர்கள்

நெட்டோட்டமாக முன்னே கண்ட மன்னர்களது பெயர்களை மீள்பார்வை இடுவீர்களாயின், ஓர் உண்மை மின்னலிடும். அது தமிழ்த் தொடர்பானது. முற்காலச் சோழ, பாண்டிய, முத்தரையர் களது பெயர்களை நோக்கின் அனைத்தும் தமிழ்ச் சொற்களால் அமைந்தவை. தொடித்தோள் செம்பியன், கரிகாலன், கிள்ளி வளவன், பெரும்பிடுகு, கடுங்கோன் முதலிய தமிழ்ச் சுவைப் பெயர்களைக் காணலாம்.

அடுத்தடுத்து வரகுணன், விசயாலயன், பராந்தகன், இராச ராசன், இராசேந்திரன், இராசகேசரி, பரகேசரி, கிருட்டிணதேவன், அச்சுதன், ஏகோசி, சரபோசி, சிவாசி என வடமொழியும் மராத்திய மொழியுமே தொடர்வதைக் காணலாம்.

பாண்டியன், சோழன் என்னும் குடிப்பெயர்களும் பையப்பைய மறைந்து நாயக்கர், இராயர், சிங்கு, சாகேபு என்னும் பிற குடிப் பெயர்கள் ஆண்டன.

## பத்துத் தேய்ப்பவள்

சோழன் பராந்தகன் காலத்தில் முளைத்தது தமிழரின் தாழ்வு. முதல் இராசராசன் காலத்தில் தமிழச்சி, 'பத்துத் தேய்ப்பவள்', 'சூத்திரச்சி' என்னும் வழக்குப் பெயர்கள் உண்டாக அவைகள் சேரிப் பெண்டிர், தளிச்சேரிப் பெண்டிர் எனக் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டன.

## நாகைச் சீமை

சோழர் காலத்தில் சோழநாடு ஆட்சி வகையில் பிரிக்கப்பட்ட பகுப்புப் பெயர்கள் மராத்தியர் காலத்தில் ஓரளவில் சில பகுதிகட்கு வழங்கப்பட்டன.

மராத்தியர் தம் ஆட்சி நிலப் பகுப்பாக நாடு, மண்டலம், சீமை, வட்டம், மாகாணம், பத்து, கரை எனவும் பேருரைத் தனியூர் என்றும் தலைப்பிட்டனர். இப்பகுப்புப் பெயர்கள் உட்பிரிவு முறையில்

இல்லை. ஆங்காங்கு வேறுபட்டும் கையாளப்பட்டன. நாகை நகரம் "திருவாரூர்ச் சீமை ஊராக,

"னாகப்பட்டணம்ச் சீமை ஊரவர்"(10) என்று சீமைத் தலைப்பில் குறிக்கப்பட்டது. மேலே நிலப்பகுப்புச் சொற்களில் இல்லாத "பர்க்கணா" என்றொரு நகரைக் குறிக்கும் சொல் நாகைக்குக் கொள்ளப்பட்டுள்ளது.

"திருவாரூர்ச் சீமை நாகப்பட்டிணம் பற்க்கணா வுட்பட"(11) என்று திருவாவடுதுறை ஆதினச் செப்பேடு 1–இல் உள்ளது.

மராத்தியர் ஆட்சியில் தமிழ் மரபுகள் யாவும் தலைகீழாயின. மராத்தியர் ஆட்சியில் கொண்டாடப்பெற்ற மன்னர், மக்கள் விழாக்களின் பட்டியல் வருகிறது:

"நவராத்திரி, விசயதசமி, மகாசிவராத்திரி, தீபாவளி, வசந்த பஞ்சமி, இரதசப்தமி, ஊசூவின் அப்த பூர்த்தி, கோலிப்பண்டிகை, மராத்தி ஆண்டுப்பிறப்பு, நாகபஞ்சமி". இவை மராத்தியர் ஆட்சி அலுவலர் விதித்த பட்டியல். இவற்றினிடையே புகுந்து தேடிப் பார்த்தால் பொங்கல் விழா தென்படவில்லை. புத்தாண்டு மராத்தி ஆண்டாகப் பளிச்சிடுகிறது.

இவற்றினிடையே நாகை நகரமும் சுற்றுப்புறமும் பொங்கல் கொண்டாடின; பொன்னேர் பூட்டின. தமக்கென ஒரு தனிப் பாங்கில் நின்றன. நாகைக்கு இஃதொரு பெருமை.

## அக்கரையகரங்கள் பெருக்கம்

மராத்திய மன்னர்களில் குறிப்பிடத்தக்காரில் முதல்வராகிய பிரதாபசிங்கின் பெருமையாக இன்றும் நாகூர் மனோராக் கல்வெட்டில்,

"பசுக்களையும், அந்தனர்களையும் காப்பாற்றுகின்றவரான

(ஸ்ரீ) சீரீமத் சத்ரபதி மகாராசராச (ஸ்ரீ) சிரீ பிரதாப சிம்ம

மகாராசா சாகேப் அவர்கள்" என்றுள்ளதைக் காணலாம். இவர் மட்டுமல்லர்; ஏகோசி தொடங்கி, சிவாசி வரை அனைவரும் பார்ப்பனர்களைக் குடியிறக்கி அக்கரையகரங்களை (அக்ரகாரம்) உருவாக்கினர். தஞ்சையைச் சுற்றிப் பள்ளியக்கரையகரம், கணபதியக்கரையகரம் எனப் பலவற்றைக் காணலாம். தமிழர்களை அப்புறப்படுத்தி அங்கே அக்கரையகரங்களை அமைத்தனர்.

அன்னோர் ஆட்சியில் மராத்தி, வடமொழி இவற்றுடன் அவ்வப்போது தமிழ் ஆட்சி மொழிகளாகவும் சில காலம் தெலுங்கு ஆட்சி மொழிகளில் ஒன்றாகவும், உருதும் கையாளப்பட்டன. ஆவணங்களிலும் செப்பேடுகளிலும் 'கவில், சாகீர், அவுல்தார் முதலிய சொற்களே காணப்படும்.

நாகையின் 'பார்ப்பனச் சேரி' உள்ளது. இது சங்க காலத்திலேயே அங்கு ஓடிய ஆற்றின் அக்கரையில் வந்திறங்கியோர் சேரி அமைத்துத் தங்கியதாகும்.

மராத்தியர் ஆட்சியில் தஞ்சையில் பெருகியது போல் நாகையில் அக்கரையகரம் அமைக்கப்படவில்லை.

மராத்தியர் ஆட்சி, அவ்வினத்தாரது வாழ்வியல் வளம், ஆட்சிக் களம், மன்னரது சிற்றின்பப் பெருக்கம், வடமொழிச் சார்புடைய சமயப் பெருக்கம் எனவே அமைந்தது.

## மனைவியர் வெள்ளம்

அம்மன்னரது மனைவியர் பற்றிய விவரம் தலைநடுக்கம் தருவதாகும். ஒருவர் கூட ஒருத்தியுடன் வாழவில்லை. ஒரு சில எடுத்துக்காட்டுகள்.

மராட்டிய வீர சிவாசிக்கே எட்டு மனைவியர் என்று தொடங்கும் இது தமிழ் மண்ணில் புகுந்து மன்னரான ஏகோசிக்கு அரசித் தகுதியில் மனைவியர் மூவர், காமக்கிழத்தியராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் ஒன்பது மனைவியர் (12) என விரியும். அரசித் தகுதி உள்ளோர் முறைப்படி மன்னர் தாலிகட்ட மணம் கொண்டவர். காமக் கிழத்தியர் 'கத்திகட்டித் திருமணம்' கொண்டவர். மணமகனான மன்னரின் கத்தியை மணவறையில் வைத்து அதற்கு மணமகள் மாலையிட ஒரு கட்டுக்கழுத்தி தாலி அணிவிப்பாள். இவர்களையன்றி மணம் பெறாது மன்னருக்கென இருந்த வைப்புகளும் இருந்தனர்.

பெயர் பெற்ற பிரதாப சிங்குக்கு அரச மனைவியர் மூவர். காமக் கிழத்தியர் எழுவர். (13)

புகழ்பெற்ற சரபோசிக்கு அரச மனைவியர் ஐவர். காமக் கிழத்தியர் பதின்மூவர். (14)

இவர்கட்காகத் திருவையாற்றில் 'கலியாண மால்' என்னும் இரண்டடுக்கு மாளிகையைக் கட்டி அங்கு வைத்தார். இவர் இறந்தபோது 'கலியாண மால் மகளிர்' 24 பேர் இருந்தனர். (அம்மாளிகையில் இப்போது அரசர் கல்லூரி என்னும் தமிழ் – வடமொழி – இசைக் கல்லூரி நடக்கிறது)

## ஒருவர்க்கு ஒரே நாளில் 17 திருமணங்கள்

இவர்கள் அனைவரையும் இவ்வகையில் தோல்வியுறச் செய்தவர், மராத்திய இறுதி மன்னராகிய சிவாசி. அவருக்கு அரச மனைவியர் 20 மகளிர். 'கத்தி கட்டித் திருமணம்' பெற்றோர் 24 மகளிர். இவர்கட்கெனத் தஞ்சைத் தெற்கு வீதியில் 'மங்கல விலாசம்' என்னும் இரண்டடுக்கு மாளிகை உள்ளது. இம்மாளிகையில் இவர்களுடன் மேலும் சேர்த்துக்கொள்ளப் பட்டோர், எடுபிடிகளாகிய சிலதிகள் என 303 மகளிர் வைப்பாட்டிகளாக இருந்ததாக (சிவாசி இறந்தபோது) ஒரு மாவட்ட ஆட்சியர் குறிப்பு உள்ளது. (15) இம்மனைவியர் பட்டாளத்தைப் படைத்ததற்கு முடிசூட்டுவது போன்று சிவாசி செய்த ஒன்று தலைநடுக்கும் தருவதாகும். அஃதாவது ஒரே நாளில் 17 திருமணங்கள் செய்து கொண்டார் என்பது. இதன் முடிந்த முடிவு அவர் பெயர் சொல்ல ஒரு குழந்தையும் இல்லை என்பதே. 'இதனால்தான் இந்த மேல் எல்லை அளவு மகளிரைக் கூடினார்' என்று சொல்லலாம். இஃது ஒரு முலாம் பூச்சுப் பேச்சு; அதிலும் நொண்டிப் பூச்சு. குழந்தையில்லாமல் தத்து எடுத்துக்கொண்ட மராத்திய மன்னர் உளர். துக்கோசி சரபோசியைத் தத்துப் பிள்ளையாகக் கொண்டவர்.

இந்த நொண்டிப் பூச்சு போன்று வேறொரு நொண்டிப் பூச்சும் பூசலாம். மனனர்கள் இவ்வாறு பலரைக் கொள்வது எங்கும் நடப்பதுதான் என்பது அந்தப் பூச்சு. இதற்கு ஆட்படாத தமிழ் மண் மன்னர் மிகப்பலர்.

## திருமாவளவனும் மாதவியும்

சோழன் (திருமாவளவன்) அவையில் மாதவி கூத்தாடி அரங்கேற்றினாள். அவளுக்கு மன்னன் 'தலைக்கோல்' மாராயம் செய்து பச்சை மரகதமாலையுடன் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் பரியமாக வழங்கினான். 'பரியம்' என்று வழங்குவது 'பெண்ணுக்கு பரிசம் போடுகிறோம்' என்கிறோமே அது போன்று மாதவிக்குச்

'சோழன் பரிசம்' போட்டது. அன்று அவள் அவனுக்கு ஒரு நாள் மனைவியாகலாம் ஆனால் அப்பெருமன்னன் சோழன் பரியப் பொன்னைக் கொடுத்தான்; ஆனால்,

**"நாம் இவளை வரையின் நவை பிறக்கு மென்று கருதி வரையானாயினான்"** (16). நவை – குற்றம்.

இஃது ஒருபுறமிருக்க மற்றொரு வினாவை நீட்டலாம். மராத்திய மன்னரில் இந்தத் திருமணக் கூத்துக்களுக்கும் நாகைக்கும் என்ன தொடர்பு? – என்ன தாக்கம்? – என்ன இழப்பு?– எனலாம்.

## நிலவரிக் கடுமை

இக்கூத்துகளுக்கெல்லாம் செலவிற்குச் செல்வம் ஏது? எல்லாம் அரசுக் கருவூலச் செலவுதான். அதற்கு வேளாண் மக்களிடம் நிலவரியாக அளவிற்கு மீறிப் பெறப்பட்டது.

1683 – ஆம் ஆண்டு பிரிட்டோ பாதிரியார் எழுதிய கடிதம் ஒன்றில் முதலாம் ஏகோசி நிலவரி வசூல் செய்த முறை பற்றிக் கூறப்படுகிறது. நிலவருவாயில் ஐந்தில் ஒரு பங்கு வரியாக விதிக்கப்பட்டதென்றும் தன் விருப்பம் போல் விளைபொருட்களின் விலையை உறுதியிட்டு அதை நாணயமாகச் செலுத்த வேண்டு மென்று வற்புறுத்துகின்றார் என்றும், நிலத்தின் முழு விளைச் சலையும் விற்றால்கூட நிலவரியைச் செலுத்த முடியாமல் மக்கள் தவித்தனர் என்றும், **நிலவரி கொடுக்க முடியாதவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்** என்றும் அவர் கடிதத்தில் கூறப்படுகிறது.

'பிற அரசர்களும் குடியானவர்களைக் கசக்கிப் பிழிந்து வரிவாங்கினர்' என்பது சில ஆசிரியர்கள் கூறும் செய்தியாகும்(17) – இவ்வாறு புலவர் செ. இராசு அவர்கள் எடுத்து மொழிந்துள்ளார். ஆனால் அவர் இவற்றை மறுத்துள்ளார். ஆனால் – மேலும் ஒரு ஆனால் போட வேண்டியுள்ளது – ஆனால் 'மராத்திய மன்னர் அரசியலும் சமுதாய வாழ்க்கையும்' என்னும் நூலில் இச்செய்தி வைரம் பாய்ந்த உறுதியாகிறது. மேலே "நிலவரி கொடுக்க முடியாதவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் பட்டனர்" என்று கண்டோமே அப்படி என்ன 'கடுமையான தண்டிப்பு' தெரியுமா? நிலவரியை விதிக்கப்பட்ட நாளுக்குள் கட்ட முடியாது போனால் அவ்வேளாளன் 13 அகவைக்கு மேற்பட்ட தன் வீட்டுப் பெண்ணை அரசுக்குக் கொடுத்து விடவேண்டும். இது எத்தகைய கடுமை? கடுமை மட்டுமன்று கயமையும் ஆகாதோ? இன்னும் விரிவாக 'மராத்திய

மன்னர் அரசியலும் சமுதாய வாழ்க்கையும்' என்னும் நூல் (18) குறித்துள்ளது.

இத்தண்டத்திற்கு ஆட்பட்ட நாகை வேளாண்மையரும் இருந்தனர் என்பதை 'ஆய்மழைக் கதை' சொல்லிக் கொண்டுள்ளது. இப்படியொரு தாக்கம் நாகைக்கு. இது மட்டுமா? மராத்திய மன்னர் தம் வருவாய்க்காக நாகையைக் குத்தகைப் பொருளாக்கியதைப் பின்னர் காணலாம்.

## பாராமுக நாகை

அதற்குமுன் நாகை மராத்திய ஆட்சியரால் பாராமுகமானதற்கு ஓர் எடுத்துக்காட்டு: துக்கோசி சில குடும்ப அரசியல் காரணங்களால் தஞ்சை ஆட்சியில் ஒரு பகுதியைப் பெற்று வேறு இடத்தில் வாழ வேண்டி நேர்ந்தது. நாகையைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். ஆனால் மன்னார்குடி வட்டத்திலுள்ள மகாதேப்பட்டணத்தைத் தேர்ந்து, அங்குக் கோட்டை கட்டி, உள்ளே பெரிய அரண்மனை, சிறிய அரண்மனை என இரண்டு அரண்மனைகள் கட்டி அதனைத் தலைநகராகக் கொண்டார். இது நாகை பாராமுகமாக்கப்பட்டதன் ஓர் அடையாளம்.

## ஒதுக்கப்பட்ட நாகை

நாகை ஒதுக்கப்பட்டதற்கு ஓர் அடையாளம் சாளுவ நாயக்கன் பட்டினம். இப்பட்டினம் கிருட்டிணதேவராயர் ஆட்சியில் அவர் ஆளுநரான சாளுவ நாயக்கர் பெயரில் உருவான ஊர்தான்.

சரபோசி மன்னர் தம் ஆட்சியில் இங்கு ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பினார். அவர் ஆங்கிலேயர் மேல் நீங்காப் பற்றுக்கொண்டவர். அந்நாளில் உலகப்புகழ்பெற்ற போனபார்ட்டு நெப்போலியனை ஆங்கிலேயர் தோற்கடித்தனர். அந்த மகிழ்ச்சியின் நினைவாகச் சரபோசி சாளுவ நாயக்கர் பட்டினத்தில் ஒரு மனோரா எழுப்பினர். அது சிறந்ததாகக் குறிக்கப்பெறும். அங்குக் கப்பல் தளத்தையும் உருவாக்கினார். அங்கிருந்து இலங்கைக்கும் பிற கடற்கரை ஊர்களுக்கும் பாய்மரக்கப்பல்கள் வழி வணிகம் நிகழச் செய்தார். அக்காலத்தில் மராத்தியருக்கென 'பிரகதீசுவரர் பிரசாத், ருவாரூர் பிரசாத்' என இரு பாய்மரக் கப்பல்கள் நாகைத் றைமுகத்தில் இருந்தன. அங்கிருந்து வணிகத்திற்கும் யன்பட்டன. அவற்றைச் சாளுவ நாயக்கன் பட்டினத்தில் அமைத்து வணிகம் நிகழச் செய்தார் சரபோசி. முன்னரே பட்டினமாக அமைந்து சிறந்த வணிக நகராகவும் திகழ்ந்த நாகையில் 'மனோரா'

கட்டியிருக்கலாம். இத்துறைமுகத்தையே கைக்கொண்டிருக்கலாம். அஃதாவது வணிகத்திற்குச் சாளுவ நாயக்கன் பட்டினத்தைக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். இது நாகை ஒதுக்கலுக்கு ஆட்பட்டதன் அடையாளம். ஆனால் மேலே கண்ட பாராமுகம், ஒதுக்கல் இரண்டையும் மீறி நாகை அன்னோர் காலத்திலும் பின்னரும் அயல்நாட்டு வணிகத் துறைமுகமாகச் சிறப்புடன் விளங்கியது. இது நாகை தன்னைத்தானே நிலைநாட்டிக் கொண்டதன் வெற்றி அடையாளம்.

### வருவாய் உண்டியல்

இதற்கு மேலும் அழுத்தமாகத் தெரிவது நாகை மராத்திய மன்னருக்கு 'வருவாய் உண்டியலா'கப் பயன்பட்டதாகும். இது வெளிநாட்டார் ஆட்சித் தொடர்பில் காண வேண்டியதாகிறது.

தமிழ் மண் மன்னர் ஆட்சியுடன் அயல்மண் மன்னர் ஆட்சிக் கூட்டையும், தொடர்புகளையும் ஒரு மீள்பார்வையிடுவீர்களாயின் ஒரு கீழறுப்புச் செயல் புலப்படும். அஃது இந்நாட்டை ஐரோப்பியருக்கு அடிமையாக்கிய பொறுத்தாற்ற முடியாத கொடுமை.

அசோகப் பெருமன்னன் இந்தியப் பெருமண்ணின் பெரும் பகுதியைக் கைக்கொண்டான். அவன் ஆட்சிப் படத்தில் தமிழ்நாடு தன்னாட்சியிலிருந்ததைக் காண்கிறோம். அப்பெருமன்னன் புத்த அறக்கொடையாளனாகவே இம்மண்ணை மிதிக்க முடிந்தது. நாகைக்கும் அவ்வாறே வரும் வாய்ப்பு நேர்ந்திருக்கலாம் என்று கண்டோம். பிற்காலச் சோழர் காலத்திலும் ஐரோப்பியர் பயணிகளாகவும், தூதுவர்களாகவும், பார்வையாளர்களாகவும் வந்து சென்றனர்.

கி.மு. 302 – இற்கு முன் வந்த சிரியாநாட்டு மெகசுதனிசு முதல், எகிப்துத் தாலமி, சீனநாட்டுப் பாகியான், யுவான்சுவாங், இத்– சிங் முதலிய பலரும் கடற்கரையோரமாகவும் உள்பகுதிகள் சில இடங்களாகவும் தாம் கண்டவற்றை எழுதி நம் வரலாற்றிற்கு உதவியுள்ளனர். நாகையைப் பற்றிப் பலரும் நல்ல குறிப்புகளைத் தந்துள்ளனர்.

### வாசுக்கோடகாமா

1498–இல் போர்ச்சுகீசியராகிய வாசுகோ–ட–காமா (Vasco Da Gama) புதுநிலங்காணும் பயணியாக மேலைக் கடற்கரையில்

வந்திறங்கினார். கோழிக் கோட்டில் இடம் பெற்றார். உள் பகுதிகளையும், இலங்கையையும் சுற்றினார். இங்குள்ள வளமான சூழலை உணர்ந்து தம் நாட்டாராகிய போர்த்துகீசிய வாணிபர்களை அழைத்து வந்து கோழிக்கோட்டில் (கள்ளிக்கோட்டையில்) இறக்கினார். பின்னர் கோவாவில் இடம்பெறச் செய்தார். இம் மண்ணில் ஐரோப்பியர் கால்வைக்க வழிவகுத்தவர் இந்த வாசுக் கோடகாமாவே. போர்த்துகீசியர் தொடர்ந்து இலங்கையிலும், சோழநாட்டுக் கடற்கரை நகரங்களிலும் வாணிபராகப் புகுந்தனர். வாணிபத்தில் கால்ஊன்றி நிமிர்ந்தனர். இந்நிமிர்வால் அவ்வப் பகுதியை ஆளும் மன்னருடன் உடன்பாடு செய்து கொண்டு வணிக உரிமையைப் பெற்றனர். அதற்கு வாரக் குத்தகைக் கட்டணமாகப் பொன்னை வழங்கினார்.

## அயல்நாட்டார்க்கு அடகு உடன்பாடு

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் போர்த்துகீசியருக்கு நாகையில் வணிகஉரிமை யளித்து 1529இல் ஓர் உடன்பாடே செய்துகொண்டார். வணிக உரிமையுடன் கிறித்துவ மதத்தைப் பரப்பும் வாய்ப்பையும் அளித்தார்.

இவ்வாறு உரிமை நாகைப் பகுதியில் நன்கு பிடிப்புப் பெற்றது. போர்த்துகீசியருக்குப் பின் நாகையில் இடம்பெற்ற ஆலந்துக்காரர் (டச்சு) காலூன்றினார். போர்த்துகீசியருக்கு இருந்த உரிமைகள் தஞ்சையை அப்போது ஆண்ட விசயநகர நாயக்கரால் ஆலந்துக் காரருக்குப் புதுப்பித்து வழங்கப்பட்டன. 1661 இல் நாயக்கருக்கும் ஆலந்து நிறுவனத்தாருக்கும் (கும்பினியாருக்கும்) ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இவ்வுடன்பாடு நாகையையும் நாகைப் பகுதிகளையும் நாகையைச் சூழ்ந்திருந்த ஊர்களையும் வணிக வாரத்திற்குக் கொடுப்பதாகும். இவ்வுடன்பாடு ஒரு வெள்ளித் தகட்டில் பதியப்பட்டது. இது 'வெள்ளிப் பட்டயம்' எனப்படும். இதன் விதிப்புகள் தெலுங்கில் எழுதப்பட்டவை.

இதன்மூலம் நாகர்பட்டினத்தில் வணிகம் செய்யும் உரிமை வழங்கப்பட்டது.

நாகைப் பகுதியில் மேலக்கோட்டை வாயிலுக்குத் தெற்கேயிருந்த பொய்யூர்த் தோட்டம், வெளிப்பாளையத்திற்கு மேற்கே யிருந்த

தோட்டம் ஆகிய இரண்டையும் பயன் கொள்ளும் உரிமையும் கொடுக்கப்பட்டது.

மேலும் நாகையைச் சுற்றியுள்ள பின்வரும் பத்து ஊர்களின் வணிக உரிமையும் வரி தண்டிப் பெறும் உரிமையும் வழங்கப் பட்டன.

அப்பத்து ஊர்கள்:

புத்தூர்,
முட்டம்,
பெருவளச்சேரி,
அந்தோணிப்பேட்டை,
கருவேப்பங்காடு,
நிருத்தன மங்கலம்,
அழிஞ்சிலா மங்கலம்,
சங்க மங்கலம்,
மஞ்சட் கொல்லை,
நரியங்குடி

– ஆகியவை. இப்பத்து ஊர்களும் செப்பேட்டில் "பழைய பத்து ஊர்கள்" என்று பழமை காட்டிக் குறிப்பிடப்படுகின்றன. இப்பத்து ஊர்களால் பெறும் பயனுக்காக ஆலந்துக்காரர் ஆண்டுக்கு 1200 பொன் வாரப் பணமாகத் தரவேண்டும். நாகை, நாகைப்பகுதிகள் பயனுக்காக ஏறத்தாழ ஆண்டுக்கு 3000 பொன் தர வேண்டும்.

நாயக்க மன்னருக்குப்பின் தஞ்சை ஆட்சியை – சோழநாட்டுப் பகுதி ஆட்சியைக் கைப்பற்றிய மராத்திய மன்னர் ஏகோசி 1676 இல் ஆலந்துக்காரருடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டார்.

## வெள்ளிப் பட்டயம்

இவ்வுடன்பாடும் ஒரு வெள்ளிப்பட்டயமாகப் பதியப்பட்டது. இப்பட்டயம் ஆலந்துநாட்டு நகராகிய 'படேவியாவில்' உள்ள அருங்காட்சியகத்தில் இருந்தது. இது காணப்பட்டு இதற்கு "படேவியா அருங்காட்சியக வெள்ளிப் பட்டயம்" என்று தலைப்பிட்டுக் கல்வெட்டுத்துறை அறிஞர் புலவர் செ. இராசு பதிப்பித்துள்ளார்.

இவ்வெள்ளிப்பட்டயம் ஏகோசியும் 'டச்சு கிழக்கிந்தியக் கும்பினியாரும்' அஃதாவது ஆலந்துநாட்டு வணிக நிறுவனத்தாரும்

செய்து கொண்ட உடன்படிக்கை ஆவணமாகும். டச்சு என்பது ஆலந்து (Holand) என்று வழங்கப்படும். இப்பட்டயத்தில் ஆலந்தர் 'ஒல்லாந்தர்' என்று குறிக்கப்பட்டுள்ளனர். 'உலாந்தாக்காரர்' என்றும் குறிக்கப்பட்டனர். (19)

இஃது உருவான நாள் 30.12.1617. இந்நாள் இப்பட்டயத்தில் "1617 ஆண்டு நள வருடம் மார்கழி மீ 30 உ' என்று குறிக்கப் பட்டுள்ளது.

இவ்வுடன்பாடு உருவாக அமர்ந்து பேசியோர் மராத்திய மன்னர் ஏகோசியும் ஆலந்து நிறுவனச் சார்பில்,

"நாகப்பட்டணம் பெரிய கற்பித்தர் சிஞ்ஞோர் பிக்குருவோவர்[1] சின்னக் கற்பித்தர் சிஞ்ஞோர் தோமாசு வண் டேறோ[2] என்னும் இருவருமாவர். இவ்விருவரும் ஆலந்து அரசினால் இலங்கை, சோழமண்டலக் கரை முதலிய இடங்களுக்கு ஆளுநராக அமர்த்தப் பெற்ற "சிஞ்ஞோர் சுமரால் மகராசா நிக்களோப்பு வண்கூஞ்சு"[3] என்பவரின் சார்பாளர்களாகப் பங்கு கொண்டனர்.

இவ்வுடன்பாட்டுப் பேச்சு எவ்விடத்தில் நிகழ்ந்தது என்ற குறிப்பு பட்டயத்தில் இல்லை. நாகையில் நிகழ்ந்திருக்க இயலாது. ஏனெனில் ஒரு மன்னர் வந்து தங்கும் அளவில் அரண்மனையோ, வளமனையோ நாகையில் இருந்ததாக ஒரு தடயமும் இல்லை. மேலும் ஒரு மன்னன் தலைநகர் விட்டுப் புறநகரில் போய்ப் பேசுவது தகுதியானதும் அன்று. மேலும் ஏகோசி மன்னர் சில தினங்களாக ஆலந்து நிறுவனத்தாருடன் நட்பின்றி ஏறத்தாழப் பகை உணர்வுடனே இருந்துள்ளார். இந்நிலையில் ஆலந்துக்காரர் இருப்பிடத்திற்குத் தாம் சென்று பேச இசைந்திருக்க மாட்டார். எனவே, தஞ்சை அரண்மனையில் இது நிகழ்ந்திருக்க வேண்டும். நாகையில் நிகழவில்லை.

இதற்கு முன்னரே இப்பட்டயத்தில் காணப்படும் பகுதிகள் போர்த்துகீசியருக்கும், ஆலந்துக் காரருக்கும் உரிமைகளாக

---

1. Senior Captain Signor Bikkururoar
2. Junior Captain Signor Thomas Van Dero
3. Signor Admiral Rajklof Van Coens

இருந்தவையே. இவற்றை மேலே கண்டுள்ளோம். அவ்வுரிமைகளை நீட்டித்து உறுதி செய்வதாகவே இப்பேச்சு நிகழ்ந்துள்ளது.

இப்பட்டயக் குறிப்பின்படி சில திங்கள்கள் ஆலந்துக்காரருடன் பிணக்குற்றிருந்த ஏகோசி மன்னர் பின்னர் என்ன நெருக்கடியாலோ ஏறத்தாழ விட்டுக் கொடுத்தும், ஆட்பட்டும் இவ்வுடன்பாட்டிற்கு வந்துள்ளார் என்று உணர முடிகின்றது.

ஆலந்துக்காரர் உரிமைக்காக இப்பட்டயத்தில் பேசப்படும் இடங்கள் முன்னே கண்ட நாகர்பட்டினமும், பொய்யூர்த் தோட்டமும், வெளிப்பாளையத் தோட்டமும், நாகையைச் சுற்றியுள்ளனவாக முன் காணப்பட்ட பழைய பத்து ஊர்களுமாகும்.

நாகைத் தொடர்பில் நாணயம் அச்சடிக்கும் செயல் உரிமையும் இதில் உள்ளது. அறக்கட்டளையைப் பேணும் பொறுப்பும் வழங்கப்

இவையன்றித் தஞ்சாவூர்ச் சீமை, திருமலைராயன் பட்டினம், காரைக்கால் பகுதி உரிமைகளும் இதில் உள்ளன.

முன்னே உள்ள நாகையின் மூன்று இடங்களின் உரிமைகளால் பின்வருமாறு மராத்திய மன்னர்க்கு வருவாய் கிடைத்தது.

பத்து ஊர்களின் உரிமைப் பயனுக்காக ஆண்டுக்கு 1200 பொன், ஒரு கொம்பன் யானை. அஃதாவது தந்தம் உள்ள ஆண் யானை ஒன்று. நாகை இரண்டு தோட்டங்களுக்காக 3000 பொன். ஆக ஆண்டுக்கு 4200 பொன்னும் ஓர் ஆண் யானையும் ஆலந்து நிறுவனத்தாரால் வருவாய் பெற்றது மராத்திய அரசு.

## நாணயக்காரத் தெரு

நாணயம் அச்சடிப்பது '**கம்பட்டம்**' என்று மராத்திய மொழியில் குறிக்கப்பட்டுள்ளது. இதில் செலவு போகக் கிடைக்கும் ஊதியத்தில் ஆலந்தார்க்குப் பாதி; மன்னருக்குப் பாதி.

இவ்வருவாய்களை வைத்துத்தான் முன்னர் நாகை 'வருவாய் உண்டியலாகப்' பயன்பட்டது என்று குறிக்கப்பட்டது. இன்றும் நாணய அச்சடிப்பின் சின்னமாக 'நாணயக் காரத்தெரு' நாகையில் உள்ளது.

## ஆங்கிலேயர்க்கு நண்பர்

ஆலந்துக்காரருக்குப்பின் ஆங்கிலேயர் இடம்பெறத் துணைநின்றவரும் மராத்திய மன்னரே. அவருள் இரண்டாவது சரபோசி 'ஆங்கிலேயரை உயர்த்தினார்' என்றுசொல்ல வேண்டும்.

முன்னே கண்ட சாளுவ நாயக்கன் பாளைய மனோராவில் சரபோசி பற்றிப் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது.

அஃது, "இங்கிலீசு துரைத்தனத்தின் சினேகிதரும், படைத் துணைவருமாகிய தஞ்சாவூர் சீர்மை மகாராசா சத்ரபதி சரபோசி மகாராசா" என்று காட்டுகிறது.

ஆங்கிலேயருக்குச் சரபோசி மன்னர் நண்பராகமட்டுமன்றிப் படைத்துணைவராகவும் இருந்துள்ளார். தமிழ் மண்ணில் பிற இடங் களைக் கைப்பற்ற ஆங்கிலேயர் போர் செய்ய முனையும் போது அவருக்குப் படைகள் வழங்கித் துணையாகியுள்ளார். இதனால் ஆங்லேயர் ஆட்சி அமைய ஒரு வகையான அடித்தளத்திற்கு உதவி யுள்ளார். இந்த ஒருவகையான அடித்தளத்திற்கு மேல் முழுவகை யான நிலைத்த தளத்திற்கும் செயற்பட்டார். இச்சரபோசி மன்னர் 1798—இல் தம் மராத்திய ஆட்சியிலிருந்த நாட்டுப்பகுதி முழுவதையும் ஆங்கிலேயரே தம் பொறுப்பில் கொண்டு ஆள வழங்கிவிட்டுத் தஞ்சைக் கோட்டை எல்லைக்குள்ளேயே தம் ஆட்சியைச் சுருக்கிக் கொண்டார். ஆங்கிலேயர் ஆட்சி என்னும் சுருக்குக் கயிறு தமிழ்நாட்டு மக்கள் கழுத்தில் விழவும் வழிவகுத்தார்.

முடிவாக நோக்கினால் சோழமண்ணில் நாகையில் 'வெளி நாட்டவர் இடம்பெறக் காரணராக, கிருட்டிணதேவராயர் கால்கோள் செய்தார். மராத்தியர் கால்கோளை அடித்தள மனையாக்கினர். இதில் பெரும்பங்கைப் பங்களிப்பாகக்கொண்ட இரண்டாம் சரபோசி அடித்தள மனையில் அரண்மனை கட்டிக்கொடுத்த பணியைச் செய்தவரானார்.

## நன்மை இல்லை

அயல்மண் மன்னர்களால் நாகைக்கு நேர்ந்த நன்மைகள் சில உள்ளன. நாயக்கர் காலத்தில் நாகைக் காரோணர் கோயிலில் ஆகமப்படி சில விரிவாக்கம் நேர்ந்தது. சிறுசிறு புதிய கோயில்கள் எழுந்தன. தொடர்ந்து மற்றவராலும் ஓரளவில் அறக்கட்டளைகள் நிறுவப்பட்டன. பழைய அறக்கொடைகள் பேணப்பட்டன; நழுவவும் விடப்பட்டன. நாணயம் அச்சடிக்கும் தொழில் நிகழ்த்தப்பட்டது.

மராத்தியர் காலத்தில் தமிழகம் பெற்றது என்ன? வரலாற்றுப் பேராசிரியர் திரு. கே.கே. பிள்ளை அவர்கள்,

"அது தொடங்கி (மராத்தியர் ஆட்சி தொடங்கி) சரபோசி மன்னர் ஆட்சிக்காலம் வரையில் மராட்டியரால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் நன்மை ஏதும் விளைந்ததாகத் தெரியவில்லை" (20) என்று குறித்ததைத் தான் விடையாகக் கொள்ள வேண்டியுள்ளது.

கல்வெட்டறிஞர் புலவர் செ. இராசு அவர்கள் இதனை மறுத்து மராத்தியர் செய்த நன்மைகளாகப் பலவற்றைக் குறிப்பிடுகிறார். அவற்றுள் துளசா திருப்பூந்துருத்தியில் மண்மேடிட்ட குடமுருட்டி ஆற்றைத் திருப்பி வெட்டியமைத்த ஒரு பொது நன்மை. மற்றவை வணிகரும் மராத்திய மன்னரும்,அரசியரும் செய்த சமய அறக் கொடைகளும், தம் புகழ் நிறுவச் செய்தவையாகவும் அமைகின்றன. மிகவும் சிறப்பாகப் பார்ப்பனர்களுக்கு அக்கரையகரம் அமைத்தமை தென்படுகிறது. பொது நன்மை என்பது குறைவே.

## உ. வேற்று நாட்டவர் ஆட்சி

### 1. போர்த்துகீசியர் (1500–1658)

வாசுகோடகாமா போர்த்துகீசியரை 1498–இல் இறக்குமதி செய்ததைக் கண்டோம். கள்ளிக்கோட்டையில் கால்வைத்தோர் மேலைக் கடற்கரை ஓரமாகத் தெற்கே இலங்கையை அடைந்து வாணிபம் மேற்கொண்டனர். பையப்பைய இலங்கை மன்னர்க்கு அவா மூட்டியும், நெருக்கடி தந்தும் வாணிபத்துடன் ஆட்சிப்பங்கில் இடம்பெறச் சில உரிமைகளைக் கொண்டு சிறு பகுதியைத் தம் ஆளுகையிலும் வைத்தனர்.

தொடர்ந்து கீழைக்கடற்கரையோர நகரங்களில் வாணிபம் நடத்தி நாகையை அடைந்தனர். அங்கும் வாணிபம் நிலைக்க வகை கோலினர். இலங்கையில் கையாண்ட முறையை மேலும் பாங்கோடு கையாண்டு விசயநகர மன்னர் துணையால் அவருக்கு முகவர் போன்று தஞ்சையை, திருச்சியை ஆண்ட நாயக்கர்களைக் கைக்குள் வைத்து நாகையில் ஒரு சிற்றாட்சியே நடத்தினர். படையையும் வைத்துக் கொண்டனர். கடற்பயணக் கலங்களை வைத்துக் கொண்டனர். அவர்கள் காலத்துக் கல்லறைத் தடயங்கள் இன்றும் காணப்படுகின்றன.

ஒரு வகையில் நாகையில் அன்னார் ஆட்சி நடத்தினர் என்றே கொள்ள வேண்டும்.

இது நிகழ்ந்தது கி.பி. 1500 முதல் 1658 வரை.

போர்த்துகீசியரது 158 ஆண்டுகள் நாகை ஆட்சியில் நாகைக்கு பெருநலங்கள் என்றில்லாது போயினும் ஒரு நலமாவது நிகழ்ந் திருக்க வேண்டுமே; இல்லை மாறாகத் தீமைகளும் செய்தனர். வரலாற்றாசிரியர்கள் 'போர்த்துகீசியர் கீழைக்கடற்கரையில் பல மீனவர்களைக் கொன்றனர்' என்றும், 'நாகூரில் இருந்த அரங்க நாதர் கோயிலை இடித்தனர்' என்றும் எழுதியுள்ளனர்.

## 2. ஆலந்துக்காரர் (Dutch-1658-1824)

1658 – இல் ஆலந்துக்காரர் இலங்கையில் கால்வைத்து அங்கு ஏறத்தாழ ஆட்சி கொண்டிருந்த போர்த்துகீசியருடன் சிறு போரிட்டனர்; வென்றனர். அதே ஆண்டில் நாகை வந்தடைந்தனர். அங்கு ஆட்சிக் கால் ஊன்றி நின்ற போர்த்துகீசியருடன் சிறு போரிட் டனர். வென்றனர். அவரிடமிருந்து 23.7.1658 இல் நாகையைக் கைப்பற்றினர். வாணிபத்தைத் தொடங்கினர். வாணிப உரிமையைப் போர்த்துகீசியரிடமிருந்து பறித்தனர்.

1659–இல் பீசப்பூர் சுல்தானின் படைத்தலைவன் முகம்மதிய முல்லாவும் மராத்திய சாசிபோன்ஃசலேயும் சோழநாட்டில் புகுந் தனர். தஞ்சை நாயக்க மன்னரைச் சிறு போரினால் வென்றனர். பல பகுதிகளைக் கைக்கொண்டனர். அக்காலக் கட்டத்தில் நாகையில் இடம் பெற்ற ஆலந்துக்காரருக்கு வாணிபத்தைத் தொடர இசை வளித்தனர்.

உடன் தஞ்சை விசயநகர நாயக்கரை அணுகி நாகையைக் குத்தகைக்குப் பெற்றனர். குத்தகை என்றால் சில ஆண்டுகள் வாணிபம் செய்யும் உரிமை; அதன் வழியில் வரி தண்டும் உரிமை. இவ்வாறு உரிமைபெறப் பழவேற்காட்டுத் துணிவாணிபர் மல்லைய சின்னைய செட்டி என்பார் தூண்டித் துணை நின்றார்.

### படேவியா வெள்ளிப்பட்டயம்

இவ்வழியாக முதலில் மூன்றாண்டுகளுக்கு உரிமைக் குத்தகை பெற்றனர். 1661 முதல் மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிமையை

நீட்டித்து, அதற்கு 5.1.1662–இல் பட்டயம் வழிப் பதிவாக்கிக் கொண்டனர். இதனைத் தெலுங்கு மொழியில் வெள்ளித்தகட்டில் பொறிக்கப்பட்ட 'படேவியா வெள்ளிப்பட்டயம்' தெரிவிக்கிறது. போர்த்துகீசியரிடமிருந்து உரிமையை – சிற்றாட்சியைப் பறிக்கப் படையால் அடித்தனர். அதில் உறுதியாக ஊன்றிக் கொள்ள மராத்திய மன்னரைப் பணத்தால் அடித்தனர்.

## கையூட்டு

மராத்திய சாசி மன்னர் இறப்பிற்குப் பின் சில அரண்மனைக் கீழறுப்புக்காரர்கள் அரசரின் வெள்ளாட்டி மகன் ஒருவனைக் காட்டி இவன் அரசுக்குரியவன் என்றனர். இதற்கு உடந்தையாக இருக்க நாகையிலிருந்த ஆலந்து நிறுவனத்தார்க்குச் சில உரிமைகளைத் தருவதாகச் சொல்லிப் பணமும் பெற்றனர்.

இதனை மெக்கன்சி சுவடி

"நாகப்பட்டினம் வகையறாவிலே யிருக்கப்பட்ட உலாந்தா கிட்ட கொஞ்ச திரவியமே வாங்கிக்கொண்டு சேனைகளையும் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டு" (22) என்று காட்டுகிறது. பலவகையில் ஆலந்துக்காரர் மராட்டியரைப் பணத்தாலடித்து நாகைச் சிற்றாட்சி கொண்டதற்கு இஃது ஒருசோற்றுப்பதம். இது நிகழ்ந்தது 1736–இல். நாகையில் ஓர் ஆளுநர் அமர்ந்து ஆட்சி புரிந்தார். இடையில் 1673 முதல் 1684 வரை ஒன்பது ஆண்டுகள் ஆளுநர் அலுவலகம் நாகையில் இல்லை. இவ்வலுவலகம் மூடப்பட்டு இலங்கை ஆலந்து ஆளுநர் மேற்பார்வையில் இருந்தது.

## அமரால் மகாராசா

முன்னரே 1676–இல் ஏகோசியுடன் பேசி உடன்படிக்கை செய்து கொண்டதைக் கண்டோம். அதன்படி நாகையையும் முழு உரிமையாகக் கொண்டனர். அப்போது நாகைக்கும் இலங்கைக்கும் ஆலந்து வாணிப நிறுவனத்தாரின் ஆட்சியராக ஓர் ஆளுநர் இருந்தார். அவர் பெயர் 'நிக்கேளாப்பு வங்கூஞ்சு' என்று படேவியாப் பட்டயத்தில் குறிக்கப்பெறும். இரீச்சிளோஃப்வான் கோயென்சு' (Signor Admiral of Van Coens)என்பவராவர். இவரது ஆட்சிப் பணித்தகுதி மூத்த கடற்படைத் தலைவர் என்பதாகும். இவர்தாம் நாகையின் ஆலந்து ஆட்சித் தலைவர், நாகை அரசர் என்றே சொல்ல வேண்டும். படேவியா செப்பேடும் இவரை "உத்தம

சிஞ்ஞோர அமரால் மகராசா" (23) என்று மாமன்னராகவே பேசுகிறது. இவர்தாம் நாகை நகரில் அமைந்த வளமனையில் அவ்வப்போது தங்கி நேரடியாக ஆட்சி செய்த முதல் ஆட்சியர்.

இவருக்குச் செயல் அமைச்சர்களாக முன்னர் குறிக்கப்பெற்ற மூத்த படைத்தலைவர் தகுதியுள்ள பிக்குருரோவர் (Bikkururoar) என்பாரும், இவருக்கு உதவியாக இளைய படைத்தலைவர் தகுதியுள்ள தாமசு வான் தெரோ (Thomas Von Dero) என்பாரும் நாகையில் நிலைத்துத் தங்கி ஆட்சி அலுவலை மேற்கொண்டனர். இவ்விருவருமே தஞ்சையை ஆண்டோரிடம் பேசி நாகையை வார உடன்பாடு செய்து கொண்டவர்கள்.

இந்த உடன்பாடு நீடித்தது. இந்த ஆளுநருக்குப் பின்னர் நமக்குக் கிடைக்கும் குறிப்புகளின் படி நாகை ஆளுநரானவர் சர் சோன்சு வான் ஃச்டீலண்டு (Sir Jones Van Steelant). இவர் 1702 இல் மசூலிப்பட்டினத்திலிருந்தவர். 1704 அளவில் நாகைக்கு ஆளுநராக வந்தார்.

## ஒரு துன்பியல் மண்டபம்

இவர் தொடர்பில் ஒரு துன்பியல் செய்தியை எழுத வேண்டும்.

நாகையில் கடற்கரையிலிருந்து உள்ளாக ஏறத்தாழ 300 அடி தொலைவில் ஒரு கல்லறைத் தோட்டம் உள்ளது. அதில் கி.பி. 1600 தொடக்கமாகப் பலரது கல்லறைகள் உள்ளன. மிகப்பழமையானது போர்த்துகீசியர் கல்லறை.

அக்கல்லறைத் தோட்டத்தில் நம் பார்வையை ஈர்க்கும் ஒரு கல்லறை மண்டபம் உள்ளது. அந்த மண்டபத்துள் 3 அடி உயரம், 6 அடி நீளம், 4 அடி அகலங்கொண்ட கல்லறை மேடை உள்ளது. அந்த மேடையின் மேல் அதே நீள அகலத்தில் ஓர் அடி தடிப்பு கொண்ட ஒரு கற்பாறைக் கல்வெட்டுடன் உள்ளது. அந்தக் கல்வெட்டு ஆலந்து டச்சு) மொழியில் புடைப்பு எழுத்துக்களால் ஆனது.

இக்கல்வெட்டுப் பாறை போன்று பலப்பல கீழை நாடுகளில் காணப்படுகின்றன. மலாக்காவில் மிகப்பழைய ஒரு திருச்சபைக் கோயிலில் இத்தகைய கல்வெட்டுப்பாறைகள் பார்வைக்காகச் சார்த்தி வைக்கப்பட்டுள்ளன. இக்கோயில் இப்போது சிதைந்த நிலையில் உள்ளது. இவற்றை யான் மலைநாடு சென்றபோது (1966) கண்டேன்; இவ்வகையானவை மேலை நாடுகளில்

உருவாக்கப்பட்டுக் கொணரப்பட்டவை. இவை போன்றே நாகைக் கல்லறைக் கல்வெட்டுப் பாறையும் ஆலந்து நாட்டில் உருவாக்கப் பட்டுக் கொணரப்பட்டது.



ஆலந்துப் பெருமாட்டியின் கல்லறை மண்டபம்

## ஒரு புடைப்புச் சிற்பம்

இக்கல்வெட்டின் தலையில் ஒரு புடைப்புச் சிற்பம் காணப் படுகின்றது. வட்ட வடிவான அமைப்புடைய இச்சிற்பத்தின் அடியில் கடல் அலையும் அதன்மேல் ஒரு படகும், படகின்மேல் ஒரு பெண்

அம்மணமாக நிற்பதும் உள்ளன. அவள் ஆடை இடுப்பிலிருந்து அவளது வலப்பக்கமாக வளைந்து தலைக்கு உயரே வளைந்து இடப்பக்கம் தொங்குகின்றது.

கல்லறைமேல் ஒரு மண்டபம் 15 அடி முகடு உயரத்தில் எழுப்பப்பட்டுள்ளது. மண்டபம் நான்கு புறமும் மேல் வளைவு வாயில்களைக் கொண்டது. மண்டபக் கூரை கவிழ்ந்த குடை வடிவில் மேலே கலயக் கூம்பு கொண்டு காட்சியளிக்கிறது. குடை வடிவத்தின் அடிப்புறத்தில் நான்கு புறங்களிலும் மேலே கண்ட பெண் சிற்பம் சுண்ணாம்புச் சுதையால் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

நகரில் பழைய பேருந்து நிலையத்தை ஒட்டி வடக்கில் உள்ள தென்னிந்தியத் திருச்சபைக் கோயிலின் உள்ளே ஓர் உயரமான மரமேடை அமைக்கப்பட்டு அதிலும் மேற்கண்ட சிற்பம் மரத்தில் புடைப்புச் சிற்பமாக வைக்கப்பட்டுள்ளது.

### செவிவழிக் கதை

மொத்தத்தில் இச்சிற்பம் பற்றியும் இதில் பொதிந்த கதையாக வழங்கப்படும் செவிவழிச் செய்திகளாகவும் யான் அறிந்தவை இவை:

> "நாகையில் இருந்த ஆலந்து ஆளுநர் ஒருவரது மனைவி கப்பலில் வந்து இறங்கும் போது தவறி விழுந்து கம்பி ஒன்று வயிற்றில் பாய்ந்ததால் குடல் வெளிவந்து இறந்தாள். (அலைகள், படகு, கப்பலில் வந்து இறங்கியதன் அறிகுறி; இடுப்பிலிருந்து மேல் நோக்கி வளைந்தது வெளிவந்த குடலின் அறிகுறி.) அதன் அறிகுறிதான் இப்புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. இறந்த அம்மையாரின் உடல் இக்கல்லறையில் உள்ளது. நிலத்தடியில் ஓர் அறை அமைப்பாகச் சுற்றிலும் பாறைக் கற் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. அறைக்குள் ஓர் ஊஞ்சல் அமைத்து அதில் பெட்டியுள் அம்மையாரின் உடல், அவர் அணிந்திருந்த பொன், மணி, வைர அணிகலன்கள் பூணப்பட்டதாக வைக்கப்பட்டுள்ளது".

இது பல்லாண்டுகளாக வழங்கப்படும் ஒரு கமுக்கமான கதை. இங்கு அம்மையாரின் நினைவுக் காணிக்கையாகத்தான் திருச்

சபைக் கோயிலுள் மேலே குறிக்கப்பெற்ற மரமேடை அமைக்கப் பட்டதாம்.

இந்தக் கதையில் அந்த அம்மையாரின் இறப்பு பற்றிய செய்தி மட்டும் தவறானது; கற்பனை கொண்ட கட்டுக்கதை. இது கட்டுக்கதை என்பதைக் கல்லறை மேல் மூடப்பட்டுள்ளதாக மேலே கண்ட புடைப்புக் கல்வெட்டுச் சொற்றொடர்கள் வெளிப்படுத்துகின்றன.

## புடைப்பு எழுத்துப்பதிவு

கல்வெட்டின் தலைப்பாக மேலே உள்ள தொடர் மட்டும் இலத்தீன் மொழியில் உள்ளது. அதன் ஆங்கில மொழிபெயர்ப்புத் தொடர் இது.

BEATI QUIMORIUNTURIN DOMINS.

HIER ONDER LEGDBEGRAVEN.

D'EER BARED EUGDENZEDEN~RYKEM>VROU IXI E ANTHONIANILO, ZALIGERGEMALINNEVANDEN ED$^{LE}$ HEERIONNESVAN STEELANT, GOVERNEUR ENDIRECTEURDESER CUSTECHORMANDELMET DEN RESORTE VANDIEN, GEBORENTOT PALLIACATTADEN 21.ZEPT$^{R}$ A$^{O}$ 1677. ENINHETCRAAMBEDDE, DEN 13. NOVB$^{R}$ A$^{O}$ 1709. TOT NAGAPATNAM INDENHEEREONTSLAPEN, OUD321AREN, IMAANDEN 23.DAGEN, HEBBENDEIN DEN ARMHAARED $^{LES}$ TEDERIONCEZOONTIE KORTVOOR HARROVERLY DEN, DOODTER IXI ERELDGEBRACT.~

BENEVENSHAARED$^{LES}$ ZOONEN :

PIETERVAN STEELANT, GEBORENTOT NAGAPATNA DEN 16.JANUARYA$^{O}$ 1705, ENOVERLE DENTERGEMELTF PLAATSE DEN 25.JUNY DAARAAN.

GASPARVAN STEELANT GEBORENTOTMASULP $^{M}$ DEN 24.AUG$^{TY}$A$^{O}$ 1702, ENOVERLE DEN TOT NAGAP$^{N}$ DEN 20.FEBRUARYA$^{O}$ 1707~EN~GASPARVAN STEELANT, DENTWEEDEN VANDIENNAEMGEBORE: TOT NAGAP$^{M}$ DEN 9.SEPTEMBERA$^{O}$ 1707. ENALDAAROOKOVER LED: DEN 29. SEPTEMBERA$^{O}$ 1709.

*டச்சு கவர்னர் மனைவியின் கல்லறைக் கல்வெட்டின்படி - டச்சுமொழி*

**கல்லறைப் பாறைக் கல்வெட்டு டச்சுமொழியின் ஆங்கிலப் பெயர்ப்பு**

"BLESSED ARE THOSE WHO DIE IN THE LORD"

இத்தொடர் 'இறைவனின் திருவருள் கூட்டுவிக்கப் பெற்று அவனில் அடங்கியோர்' என்னும் பொருள் கொண்டது. இது 'அடங்கியோர் (Are those)'
— என்று குறிப்பது கவனத்திற்குரியது.

அதனைத் தொடர்ந்து கீழே அமைந்துள்ள டச்சு மொழிச் சொற்றொடர்கள் அறிவிக்கும் செய்திகள் இவை.[1]

மேன்மை தங்கிய சர் சோன்சு வான் ஃச்டீலண்டு (Honourable Sir. Jones Van Steelant) ஆளுநரும், தமிழ்நாடு கீழைக் கடற்கரை ஆலந்து ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் இயக்குநருமாவார். இவர்தம் வாழ்க்கைத் துணைவியார் அந்தோணியானிலோ (Anthonianilo). இவ்வம்மையார் 21.9.1677 இல் ஆலந்து நாட்டுப் பல்லகட்டன் என்னும் ஊரில் பிறந்தவர். 32 ஆண்டுகள் ஒரு திங்கள் 23 நாள்கள் வாழ்ந்து 18.11.1709இல் நாகபட்டினத்தில் இறந்தார். இவரது இறப்பு இவரது நான்காவது குழந்தைப் பேற்றின்போது நேர்ந்தது. பிறந்த ஆண் குழந்தையும் இத்தாய் இறப்பிற்குச் சற்று முன்னர் இறந்தது. இவர் பெற்ற நான்கு ஆண் குழந்தைகளும் நாகையில் இறந்தன. இதன் விவரத்தைக் கல்வெட்டில் உள்ளவாறு இவ்வாறு கட்டமிடலாம்;

நான்கு குழந்தைகளில் இரண்டாவது குழந்தை முதலில் இறந்தது. அதை நாகைக் கல்லறைத் தோட்டத்தில் போர்த்துகீசியர் கல்லறைகளுக்கு மேற்கில் அடக்கம் செய்தனர். அடுத்தடுத்து இறந்த இரண்டு குழந்தைகளையும் அதன் அண்மையில் அடக்கம் செய்தனர். தாயையும் நான்காவதாக இறந்த அறைக் குழந்தையையும் அதே இடத்தில் அடக்கம் செய்தனர்.

கல்வெட்டு சொல்லும் விவரங்களைக் கொண்டு இவ்வாறு நதலாம்.

மூன்று குழந்தைகள் அடக்க இடத்தின் மேல் பாறை சூழ்ந்த அறை (நிலத்தின் கீழ் அமைந்த அறை) அமைக்கப்பட்டு அதில் ஊஞ்சல்

1. இக்கல்வெட்டையும் ஆலந்தர் அமைத்த திருச்சபை ஏசு கோயில் முகப்புச் சுவர் கல்வெட்டையும் மொழிபெயர்த்தவர் திரு. செ. சேம்சு (ஓய்வு பெற்ற ஆசிரியர், தென்னிந்தியத் திருச்சபை மேனிலைப் பள்ளி, நாகை) அவர்கள்.

| குழந்தை | பிறப்பு | பெயர் | வாழ்ந்த ஆண்டு | திங்கள் | நாள் | இறப்பு |
|---|---|---|---|---|---|---|
| முதல் | 24.8.1702 | காஃச்பர் வான் ஃச்டீலண்டு (Go ar Van Steelant) | 4 | 5 | 9 | 20.2.1707 |
| இரண்டாவது | 16.1.1705 | பீட்டர் வான் ஃச்டீலண்டு (Peter Van Steelant) | – | 5 | 9 | 25,6,1705 |
| மூன்றாவது | 9.10.1707 | காஃச்பர் வான் ஃச்டீலண்டு (முதல் மகன் நினைவாக இவன் பெயர்) | 2 | – | 20 | 29.10.1709 |
| நான்காவது | 13.11.1709 | …….. | | | | 13.11.1709 |
| தாய் | 21.9.1677 | அந்தோனியானிலோ | 32 | 1 | 23 | 13.11.1709 |

அமைத்து ஊஞ்சல் பெட்டியில் தாயும் நான்காவது சேயும் வைக்கப்பட்டனர். தாயின் கீழ் தாயின் நிழலில் மூன்று குழந்தைகளும் நீடுதுயில் கொள்வதாகக் கொள்ளலாம்.

இக்கல்லறைக் கல்வெட்டு ஆலந்து அம்மையாரின் அவல வரலாறுதான்; துன்பியல் பதிவுதான். ஆயினும், இதனால் ஒரு வரலாற்றுக் குறிப்பு கிடைத்துள்ளது. [இதன் ஆங்கில மொழி பெயர்ப்புப் படம் உள்ளது][1]

1705லும் அதற்கு மேலும் பல ஆண்டுகள் ஆலந்து நாட்டாரின் ஆளுநராக சர் சோன்சு வான் ஃச்டீலண்டு நாகையில் அமர்ந்து ஆண்டுள்ளார்; அவரே கீழைக் கடற்கரைப் பகுதியில் ஆலந்தாரின் இயக்குநராக இருந்துள்ளார் என அறிய முடிகிறது.

அவரது ஆளுகைக் காலச் சின்னமாகவும் நாகையில் குறிப்பிடத்தக்க ஒரு சின்னமாகவும் இக்கல்லறை மண்டபம் விளங்குகின்றது.

## ஒல்லாந்தர்

இங்கு ஆலந்துக்காரர் – டச்சுக்காரர் என்பது பற்றி ஒன்றை விளக்கிடவேண்டும்.

ஐரோப்பாவில் செர்மனிக்குக் கிழக்கிலும், பெல்சியத்திற்கு வடக்கிலும் அமைந்தது நெதர்லாந்து (Nether Land.). இஃதே ஆலந்து (Holand) என்று வழங்கப்படும். மேற்கு செர்மனியில் பிராங்கோயன் என்றோர் இனமக்கள் இருந்தனர். இம்மக்கள் செர்மனியின் மேற்கு வட்ட மொழியாகப் பெசியது டச்சு மொழி எனப்படும். இம்மக்களின் கிளர்ச்சியால் 1581இல் ஆலந்தில் டச்சு மொழி பேசுவோரின் டச்சு அரசு ஏற்பட்டது. அவ்வரசின் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தாரே டச்சுக்காரர்' ஆயினர். 'ஆலந்துக்காரர்' என்பதும் அவரைக் ;றிப்பதாகும். ஆலந்துக்காரர் 'ஒல்லாந்தர்' என்று மக்களால் பழங்கப்பெற்றனர்.

இலங்கையிலும், நாகையிலும் இவரை 'ஒல்லாந்தர்' என்றே குறித்தனர். நாகையில் இக்காலத்தில் நாட்டப்பட்டுள்ள நிறை தமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார் சிலை நோக்கியுள்ள கிழக்கே

1. இம்மொழிபெயர்ப்பைப் பெற்று உதவியவர் கும்பகோணம் திரு இரா. தியாகராசன் அவர்கள்.

செல்லும் சாலை 'ஆலந்துச் சாலை' (Holand Road)எனப்பட்டது. இஃது இப்போது நேத்தாசி சாலை என்று மாற்றப்பட்டுள்ளது. இன்றும் மீனவ இனத்து முதியவர்கள் இதனை 'ஒல்லாந்தர்' தெரு என்று வழங்குவதுண்டு.

இதுகொண்டு இச்சாலையில் அந்த நாள்களில் ஆலந்து நாட்டு ஆட்சி அலுவலர்கள் இடம் பெற்று வாழ்ந்தனர் எனக் கொள்ளலாம். இங்கொரு பழமையான திருச்சபைக் கோயிலும் உண்டு. இவ்வகையில் இச்சாலை தன் பழம் பெயரால் ஆலந்துக்காரரின் ஒரு சின்னமாக உள்ளது.

## கொடி மரத்து மேடை

மேலும் ஆலந்துக்காரரின் குறிப்பிடத்தக்க இரண்டு சின்னங்கள் உள்ளன; மூன்றும் உள்ளன. ஒன்று கொடி மரத்து மேடை.

கடலில் வரும் மரக்கலங்களுக்குக் கரை காட்டிக் குறிப்பீடு களைத் தரக் கொடி காட்டப்படும். இதற்காக ஆலந்து ஆட்சி நிறுவனத்தார் ஒரு மேடையைக் கடற்கரையில் எழுப்பினர். இதற்கு இன்றும் 'கொடிமரத்து மேடை' என்றே பெயர். இது கடற்கரையை ஒட்டி ஓடும் உப்பனாற்று மேல்கரையில் அமைக்கப்பட்டுள்ளது. கடல் மட்டத்திலிருந்து 20 அடி உயரங் கொண்டது. வடக்கு தெற்காகக் கிழக்குப் புறத்தில் 113 அடி நீளமும், மேற்குப் புறத்தில் 110 அடி நீளமும், கிழக்கு மேற்காக வடபுறத்தில் 123 அடி அகலமும், தென் புறத்தில் 123 அடி அகலமும் கொண்ட மேல் தளத்தை உடையது.[1]

இம்மேடைக் கட்டுமானம் நீண்ட 21/2 அடி தடிப்புச் சுவர்களாக எடுக்கப்பட்டுச் சுவர்களின் இடையில் மண் நிரப்பப்பட்டு எழுப்பப் பட்டது. மேடை மேல் தளத்தில் 3 அடி உயரத்தில் 40 அடி விட்டம் கொண்ட வட்ட வடிவ மேடை ஒன்றுள்ளது. இது கொடிக்கம்பம் நாட்டப்படும் மேடையாகும்.

இப்போது இக்கொடிமரத்து மேடை பொதுப் பூங்காவாக நாகை நகராட்சியால் பொறுப்பேற்று நடத்தப்படுகிறது. நாகை மக்கள் மாலையில் கொடி மரம் இல்லாமலே மேடையில் வீசுகின்ற மெல்லிய

1. இந்த அளவுகளை எடுத்து வழங்கியவர் புலவர் இரா. இராமதாசு (அந்தணப்பேட்டை) அவர்கள்.

பூங்கடற்கரைக் காற்றுடன் வலிய வீச்சுக் காற்றையும் ஏற்று வருகின்றனர்.

இக்கொடிமரத்து மேடை ஆலந்துக்காரரின் ஒரு சின்னம்.

**வளமனை**

இரண்டாவது சின்னம் ஆளுநர் வளமனை (Governer Bunglow)

நாகையைக் கைக்கொண்ட ஆலந்தர் தமக்கென ஓர் ஆளுநர் வளமனையை எழுப்பினர். இப்போதுள்ள தென்னிந்தியத் திருச்சபை மேல்நிலைப் பள்ளியின் தெற்கில் இன்றும் உள்ளது. அதன் சுவர்க் கட்டுமானத்தைக் கொண்டே இது பழமையானது எனலாம். இங்கு அமர்ந்து ஆளுநர் தம் ஆளுகையை நடத்தியுள்ளார். (இவ்வளமனையிலும் இன்று பள்ளி வகுப்புகள் நடைபெறு கின்றன.)

*ஆலந்து ஆட்சியின் வரலாற்றுச் சின்னமாக இதனையும்* கொள்ள வேண்டும்.

**சுரங்கப்பாதை**

இந்த வளமனையில் ஏறுவதற்குப் படிக்கட்டுகள் கொண்ட அகல ஏறுவழி உள்ளது. இப்படிக்கட்டின் முதற் படியை ஒட்டி இரண்டு அடிக்குக் கீழே நிலத்திற்குள் ஒரு சுரங்கப்பாதை தொடங்குகிறது. இச்சுரங்கப்பாதை 6 1/2 அடி உயரமுடையது. 5 அடி அகத்தில் மேல் கூரை வளைவு மண்டப அமைப்பைக் கொண்டது. இது கிழக்கு நோக்கிச் சென்று கொடி மரத்து மேடைக்குச் சற்று தெற்கில் மேலேறுவதாக முடிகிறது. கப்பலில் வந்து இறங்கும் ஆளுநரும், அவர்தம் குடும்பத்தாரும் இதன் வழியாக வளமனையை அடைந் தனர் போலும்.

1978 இல் தென்னிந்தியச் திருச்சபை மேல்நிலைப் பள்ளிக்குக் கூடைப்பந்து ஆட்டத்தளம் தோண்டியபோது இச்சுரங்க வழி தென்பட்டது. குடைவு வழி உப்பு மண் போட்டு அடைக்கப்பட் டிருந்தது. இதனை நான் கண்டுள்ளேன்.

எனவே, இதனை நினைவுச் சின்னத்தின் மூன்றாவதாகக் குறிக்கலாம்.

இந்த ஆளுநர்கால மராத்தியர் ஆட்சி மராத்திய மன்னர் சகசி (1684–1711) யின் பிற்பகுதியும் முதல் சரபோசியின் (1711–1729) முற்பகுதியுமாகும்.

## சிவன் கோயிலுக்கு ஆலந்தர் அறச்செயல்

இவரைத் தொடர்ந்து ரெயினியா வான் சிங்கா ஆளுநரானார். இவர் பெயரிலுள்ள வான் என்பது குடிப்பெயர். எனவே, இவர் முன்னிருந்த வான் ஃச்டீலண்டின் குடியினர் என்று கொள்ள வேண்டும். அவர் பரிந்துரையால் அல்லது செல்வாக்கால் பதவி பெற்றிருக்க வேண்டும்.

இவர் நாகைக் கோவில்களுக்கு உடைமையான சில இடங்களைத் தம் அலுவற் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொண்டு அதற்கு ஈடாகச் சில கோயில்களுக்குச் சில அறங்களைச் செய்தார். அவற்றுள் இவர் விரும்பிச் செய்தது நாகை நகர நடுவில் உள்ள கைலாசநாதர் கோவில் என்னும் மலையீசுவரன் கோயிலைப் புதுப்பித்ததாகும். இவர் செய்த இப்பணி இக்கோவில் கல்வெட்டிலும் பொறிக்கப் பட்டுள்ளது. அதன்படி இது 1771 இல் நிகழ்ந்தது.

## கிழக்கிந்திய வணிக நிறுவனங்கள்

ஐரோப்பியப் பிரித்தானியர் இந்தியாவில் கிழக்கிந்திய வணிக நிறுவனமாகப் புகுந்தது முதலாக வணிகத்துடன் சமயத்தையும் புகுத்தினர். மெல்ல மெல்லக் காலூன்றி ஆட்சி அலுவல்களிலும் புகுந்தனர்; இடம் பெற்றனர். ஆங்காங்கு வணிக உரிமையும் ஆட்சி உரிமையும் பெற்றிருந்த பிற ஐரோப்பியருடன் உடன்பாடு செய்தும் சிறு பூசல்களால் கைப்பற்றியும் தம் வலிமையைப் பெருக்கினர்.

இவர்கள் குறியில் ஆலந்துக்காரர் இடம் பெற்றனர். சிறுசிறு பூசல்கள் விளைந்தன. இக்காலக் கட்டத்தில் (1652–1674) ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் ஆலந்துக்காரரின் வலிமை குலையலாயிற்று. ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் ஆங்காங்கு வென்றனர். ஆனால் 1746 இல் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கி லேயருக்கும் நாகர்பட்டினம் கடற்பகுதியில் ஒரு போர் நிகழ்ந்தது. இதில் ஆங்கிலேயர் வென்றனர். 1824 இல் ஆலந்தார்க்கும் ஆங்கிலேயர்க்கும் ஓர் இறுதி உடன்பாடு நேர்ந்தது.

இவ்வுடன்பாடே ஆலந்தர் ஆளுமையைக் கீழைக் கடற்கரையி லிருந்தும் அதன் தலைமையிடமான நாகையிலிருந்தும் அகற்றிற்று. ஆலந்து (டச்சு) ஆட்சி நாகையில் முடிவுற்றது.

## ஆலந்தர் செயல்கள்

ஆக கி.பி. 1657 முதல் 1824 வரை 165 ஆண்டுகள் நாகை ஆலந்துக்காரர் பிடியில் இருந்தது. இப்பிடியில் நாகை பெற்ற நன்மை என்று குறிப்பிட்டுச் சொல்ல முன்னே கண்ட நினைவுச் சின்னங்கள் தவிர வேறு ஒன்றும் இல்லை எனலாம்.

பொதுவாகவே மேலை நாட்டினர் இந்தியாவைத் தம் வேட்டைக் காடாகத்தான் கருதினர். கையாண்டனர். அவருக்குள்ளும் ஆலந்து டச்சுக்காரர் பற்றி வரலாற்றாசிரியர், "டச்சுக்காரர்கள் தம் ஆட்சியிலுள்ள மக்கள் நலத்தைக் கருதாது, தம் வணிகப் பெருக்கத்திலேயே நாட்டமாயிருந்தனர்" (24) என்பர். இக்காலத்தில் பிரித்தானிய ஆளுநராகச் சென்னையில் இருந்தவர் ஆபர்ட்டு பிரபு (Lord Hobert).

இந்த வணிக வேட்டை நாகையில் நிறைவாகவே நடந்தது.

இவர்கள் நம்நாட்டிலிருந்து கொண்டு சென்ற ஒன்றைக் குறித்தாலே அவர்களது வணிக வேட்டை மட்டுமின்றி கொள்ளை கொண்ட நிலையும் விளங்கும்.

நாகையில் கீழை நாட்டரசரால் சூளாமணி விகாரை கட்டப் பட்டதை அறிந்தோம். அதற்குச் சோழமன்னர் இராசராசனும், மகன் இராசேந்திரனும் நாகைக்கு அண்மையிலுள்ள 'ஆனைமங்கலம்' என்னும் சிற்றூரையே அறக் கட்டளையாக்கினர். அதற்கு நிலைத்த ஆவணமாகச் செப்பேடு ஒன்றையும் ஆக்கினர். அதன் பெயர் 'ஆனை மங்கலம் செப்பேடு' செப்புத் தகட்டால் ஆனதுதான் அது. பெரும் கலைப் பொருள் என்று சொல்ல முடியாது. ஆவண வரலாற்றுப் பதிவேடு. அதன் பெயராக இப்போது கல்வெட்டறிஞர் களாலும் வரலாற்றாசிரியர்களாலும் குறிப்பிடப்படுவதும், பதியப் படுவதும், வழங்கப்படுவதும் 'இலெய்டன் செப்பேடு' என்பதாகும்.

இலெய்டன் ஆலந்து நாட்டினுள் ஒரு நகரம், ஆலந்துக்கார ஆளுநர் ஒருவர் தஞ்சையிலிருந்தோ, நாகை சூளாமணி விகாரையி லிருந்தோ இச்செப்பேட்டைக் கைப்பற்றி எடுத்துச் சென்று இலெய்டனில் வைத்தார். பல்லாண்டுகள் அங்கிருந்ததால் 'இலெய்டன் செப்பேடு'டாயிற்று.

இது சொல்லும் செய்தி யாது?

பல குறிப்பிடத்தக்க பொருள்களை ஆலந்தார் கைப்பற்றி எடுத்துச் சென்றுள்ளனர். ஆனைமங்கலம் வருவாய்களை மாற்றித் தாம் கைக்கொண்டதாலோ மாற்றம் செய்ததாலோ அன்றி வேறு எக்காரணத்தாலோ இதனை எடுத்துச் சென்றுள்ளனர். நாகை நகரின் 'தென்மேற்கில் கருவையாற்றங்கரையில் கார்முகேசர் கோயில் என்றொரு சிவன் கோயில் இருந்தது. அக்கோயிற் பகுதி நிலம் இவர்கட்கு வேண்டியிருந்ததால் அக்கோயில் திருவுருவங் களை அகற்றச் செய்து நிலத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இது இவரது மற்றொரு திருவிளையாடல்.

இவற்றால் அன்னார் நாகையில் ஆற்றிய பணிகள் எத்தகையன என அறியலாம். ஆலந்துக்காரர்களோ கலையான கல்லறை மண்டபம் ஒன்றை அன்பளிப்புச் சின்னமாக வைத்துச் செப்பேட்டை 'இலெய்டன் செப்பேடு' என்று பெயர் பெறுமாறு எடுத்துச் சென்று 'ஆனைமங்கலம் செப்பேடு' என்ற அதன் பெயரையும் மறைத்தும் விட்டனர்.

போர்த்துகீசியர் நாகைக்குத் தம் அன்பளிப்புச் சின்னங்களாகக் கல்லறைகளை விட்டுச்சென்றனர். அன்னார் ஆட்சிக்குக் கல்லறை கண்ட ஆலந்துக்காரர் தம் அன்பளிப்புச் சின்னங்களில் 'கல்லறை மண்டபம்' ஒன்றை விட்டுச் சென்றனர். அன்னார் ஆட்சிக்கு ஆங்கிலேயர் கி.பி. 1824 இல் கல்லறை தந்தனர்.

## 3. ஆங்கிலேயர் ஆட்சி (1824 – 1942)

மேலை ஐரோப்பியர் கிழக்கிந்தியப் பகுதிகளில் வணிகம் செய் வதற்காகக் கிழக்கிந்திய வணிக நிறுவனங்களை (கம்பெனிகளை) உருவாக்கினர். அவற்றுள் கி.பி. 1600இல் இங்கிலாந்தின் முதல் எலிசபெத் அரசியார் ஆட்சியின்போது நிறுவப்பட்ட ஆங்கிலக் கிழக் கிந்திய வணிக நிறுவனமே குறிப்பிடத் தக்கதாக நீண்டகால உயிர் கொண்டது.

இந்தியாவில் வணிகம் கருதிப் புகுந்த இந்நிறுவனத்தார் வணிகத்தோடு அவ்வப்போது கிறித்துவ சமய நெறியாளராகவும் குடியேறினர்.

1612 இல் இந்திய தூரத்தில் ஒரு பண்ட சாலையை நிறுவினர்; அதற்கொரு ஆளுநரைப் (Governor) பணியமர்த்தினர். இந்த

ஆளுநர் பணியே பின்னர் மாநிலங்களை ஆளும் ஆளுநர் அமையத் தோற்றுவாயாயிற்று. இந்நிறுவனத்தார் பையப்பைய ஆனால் உறுதியாகக் காலூன்றி வணிகத் துறையிலேயே சென்னப் பட்டினத்தை விலைக்கு வாங்கினர். அதன் கடற்கரையில் வணிக வாய்ப்பும், ஆட்சி எதிர்நோக்கும் உடைய கோட்டையைக் கட்டினர். அக்கோட்டைக்குச் செயிண்டு சியார்சுக் கோட்டை (St. George Fort) என்று தம் முத்திரைப் பெயரிட்டனர்.

## ஆட்சிக் கால்கோள்

இந்திய அரசியலில் விளையாடினர்.

பிரித்தாளும் சூழ்ச்சி, இந்திய மன்னர்களைக் கைக்குள் வைக்கும் திறன் முதலிய இவற்றால் இந்நிறுவனமே கோட்டைகள் கட்டியும், படைகள் அமைத்தும் வளர்ந்தது. 1773 இல் இந்தியாவின் வணிக முழுமைக்கும் ஓர் ஆளுகைத் தலைவர் (Viceroy) அமர்த்தப்பட்டார். 1858இல் வணிக நிறுவன ஆட்சியை மாற்றிச் சில ஆங்கிலர் இந்திய ஆட்சியை ஏற்றனர். இந்தியாவில் கிளைவின் போராட்ட வெற்றியால் ஆங்கில அரசு தன்னை நிலைப்படுத்திக் கொண்டது.

நாட்டைப் பல மாநிலங்களாகப் (Provinces) பிரித்து ஒவ்வொன் றையும் ஆளுகை அரசாக்கி (Government) அதற்கு ஒவ்வோர் ஆளுநரை ஆட்சித் தலைவராக்கியது.

இவ்வகையில் சென்னை மாநில அரசின் ஆளுநரின் கீழே தஞ்சை மாவட்டத்தின் நாகை ஆளத் தலைப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வரி தண்டுவதற்காக ஒவ்வொரு தண்டலர் (Collector) பணியமர்த்தப்பட்டார். அவர் மாவட்ட ஆட்சித் தலைவ ராய் நாகை ஆட்சியாளர் ஆனார். அவரும் அக்காலத்தில் வெள்ளை பராகவே அமர்ந்தார். இன்றைய நிலையிலும் அந்த மாவட்ட ஆட்சியர் அமைப்பு நீடிக்கிறது.

நாகையில் இவ்வாறு ஆங்கிலர் ஆட்சி கால்கோள் கொண்டது.

## உள்ளாட்சி முறை

ஆங்கிலர் தமிழ்நாட்டுச் சோழ மன்னரது — அவரிலும் குறிப்பாக இராசராசன் ஆட்சி முறைகளைக் கண்டறிந்தவர். ஏறத்தாழ அவற்றை ஒட்டியும் தம் நாட்டு முறைகளைக் கருத்தில் கொண்டும், தம் பிடிப்பு அகலாத வகையில் ஆட்சி முறையை வகுத்து நடைமுறைப்படுத்தினர்.

மக்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ள மாவட்டக் கழகங்களை (District Boards) அமைத்து அவற்றில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டோரைக் கருத்துரையாளராகக் கொண்டு, தம் வெள்ளை அலுவலர் ஒருவரை ஆணையராக (Commissioner) வைத்து அவர் ஆணைப்படி மாவட்ட நடவடிக்கைளை மேற்கொண்டனர். இதனால் மாவட்ட மக்களுக்கும் பொது வாழ்வு நலன்கள் பல அமைந்தன. இம்மாவட்டக் கழகமாகிய தஞ்சை மாவட்டக் கழகத்தால்தான் நாகை நகர்க்குக் குடிநீர்க் குழாய் அமைப்பும், கழிவு நீர் ஓடச் சாக்கடைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

## நாகை நகராட்சி

இவ்வாறான உள்ளாட்சி அமைப்பில் நகரங்களுக்கும் சிற்றூர்களுக்கும் நகராட்சிகளையும் (Municipalities) ஊராட்சி களையும் (Panchayats) அமைத்தனர். நாகை நகரமும் ஒரு நகராட்சி நகரமாயிற்று.

'நகராட்சி' என்னும் சொல் 'முனிசிபாலிட்டி' என்னும் இலத்தீன் சொல்லுக்கு அமைக்கப்பட்ட சொல். முனிசிபாலிட்டி என்னும் சொல்லுக்கு மேலை நாட்டில் 'உரோமாபுரி நகருக்கும் சிற்றூர்களுக்கும் இடையே இருந்த ஆட்சி உறவு' என்பது பொருள். இப்பொருள் பொருந்தாமையால் நகரத்தின் நலன்களைச் செய்யும் நகரத்திற்குரிய ஆட்சி என்னும் பொருள் கொண்டு 'நகராட்சி' என்னும் சொல் அமைந்தது. ஆனாலும் முனிசிபாலிட்டி என்பதன் ஆங்கில மூலப்பொருள் 'போர்ப்படை அல்லது வாணிகச் சிறப்பு வாய்ந்த ஆட்சி' என்பதாகும். இப்பொருள் முழுமையும் நம் நகராட்சி களுக்குப் பொருந்தாது போயினும் "நாகை" பழங்காலமுதல் 'வணிகச் சிறப்பு வாய்ந்த நகரம்' என்னும் அளவில் அமைக்கப் படாத பொருத்தமாக உள்ளமை ஒரு நயமாகும்.

நாகை நகராட்சி 1866ஆம் ஆண்டு தோன்றியது. ஆங்கில ஆட்சியர் அமர்த்திய அலுவலரை நகர ஆணையாளராகக் கொண்டு 19ஆண்டுகள் செயற்பட்டது. 1885இல் நகரத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட 'நகராட்சி அவை' அமைந்தது. உறுப்பினர்களால் நகராட்சித் தலைவராக முதல் முதலில் தேர்ந்தெடுக்கப்பெற்ற திரு. சி.வி. சுயம்பு ஐயர் முதலாக 1976 வரை திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியினரான திரு. ஈசுவரி தலைவராக அமைந்தனர். இது வரை 110 ஆண்டுகளில் 23

நகராட்சித் தலைவர்களைக் கொண்ட நகராட்சி ஆளுகை அமைந்துள்ளது.

நாகையின் சுற்றுப்புறச் சிற்றூர்களுக்கு இதுபோன்றே ஊராட்சி மன்றங்கள் அமைந்து அவற்றின் ஒன்றியமாக நாகை ஊராட்சி ஒன்றியம் அமைந்தது.

## ஆங்கில ஆட்சி நன்மைகள்

வணிக வழியாக இந்திய மக்களைச் சுரண்டத் தொடங்கிய வெள்ளையர் அடக்குமுறை ஆட்சியாலும் சுரண்டினர். அதனால் அன்னாரைச் 'சோப்பு சீப்பு விற்க வந்தவன் கோப்பு வைத்து ஆளத்தொடங்கினான்' என்றனர்.

ஆனால் வெளிநாட்டார் ஆட்சியில் எந்த நன்மையும் காணாத இந்தியா – சென்னை – தஞ்சை – நாகை அனைத்தும் ஆங்கிலர் ஆட்சியில் பல நிலைத்த நன்மைகளைப் பெற்றன என்று கட்டாயம் குறிக்கவேண்டும்.

இந்தியச் செல்வத்தை வாரிய வெள்ளையர் மதத் தலைவர் களாம் பாதிரிமார்களை அனுப்பி, கல்வி நிலையங்கள் கண்டும், மருத்துவ மனைகள் திறந்தும் உதவினர்.

இடையே ஒன்றைக் குறிக்க வேண்டும். உலகின் மேலைப் பகுதியில் பல்வகை ஐரோப்பிய இனத்தார் உள்ளனர். அனைவரும் ஒரே குணத்தினர் என்று எழுத முடியாது.

இங்கிலாந்து ஒரு தனித்தீவு. உலகப் பண்பாட்டிலும் அஃதொரு தனித்தன்மை கொண்டது. மரபுகளைக் காத்தல், மற்றவரை மதித்தல், அறிமுகம் பெற்று மகிழ்தல், தாழ்ந்தார் உயர்வதைப் பார்த்து இன்புறுதல் முதலியவற்றில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இத்தகைய பண்புகளே இந்திய நாட்டில் ஆட்சியை ஊன்றிய போதும் மக்கள் வாழ்வுத்துணைகள் பலவற்றை உருவாக்கின எனலாம்.

## போக்குவரத்து நன்மை

ஆங்கில ஆட்சிதான் போக்குவரத்திற்குப் புகைவண்டித் தடங்களை உண்டாக்கியது. செய்திப் போக்குவரத்திற்கு அஞ்சல் முறையைத் திறந்தது. வளர்ந்துள்ள பிறவற்றை நாம் அறிவோம்.

ஆங்கிலர் காலத்தில்தான் துறைமுக அலுவலகம் (Port Office) திறக்கப்பெற்றது. கீழைநாடுகளுக்கு வணிகம் கருதியும் ஏற்றுமதி இறக்குமதிக்காகவும் பயணிகள் சென்று வரவும் துறைமுகம் வாய்ப்பான கப்பல்களைப் பெற்றது. சரக்கு ஏற்றுமதி இறக்குமதி களுக்கு தனிக் கப்பல்களும், பயணிகளுக்குத் தனிக் கப்பலுமாகக் கப்பல் போக்குவரத்து முறையாகத் தொடங்கப்பட்டது. இது கடல் வழிப் போக்குவரத்து.

வெளிநாட்டு இறக்குமதி ஏற்றுமதி, பயணிகள் பயணம் கருதிய உள்நாட்டுப் போக்குவரத்தான புகைவண்டித் தடத்தை நாகை பெற்றது. போக்குவரத்து வணிகப் பெருக்கத்திற்கு ஏற்பப் புகை வண்டி நிலையங்கள் அமைக்கப்பட்டன.

நகருக்கு 'நாகபட்டினம் புகைவண்டி நிலையம்', ஏற்றுமதி இறக்குமதிக்கு அடுத்த 200 மீட்டர் அண்மையில் 'கடற்கரைப புகை வண்டி நிலையம்', அதையடுத்து 400 மீட்டரில் புறநகர் நிலையமாக 'வெளிப்பாளையம் புகைவண்டி நிலையம்', அதையடுத்து 3 கிலோ மீட்டரில் 'நாகூர்ப் புகை வண்டி நிலையம்' என நாகை ஒன்றிற்கே நான்கு புகைவண்டி நிலையங்கள் அமைந்தன. கடற்கரையில் தெற்கு வடக்காக நோக்கினால் கடலில் கப்பல்களும் படகுகளும் காட்சியளிக்கும்; கடலின் ஒட்டிய கரையில் புகைவண்டி நகரும். அதையொட்டிய சாலையில் பேருந்துகள், சரக்குந்துகள், மகிழ்வுந்து கள், வண்டிகள் ஓடும். இவ்வாறு மூன்று வகைப் போக்குவரத்தையும் இன்று காணும் அளவிற்கு நாகை பெற்றது.

### அஞ்சல் நன்மை

செய்திப் போக்குவரத்திற்கு அஞ்சல் துறை ஏற்பட்டது. ஆளுகைக்கு ஆட்சித்துறை ஏற்பட்டது. உரிமை இயல் அறமன்றங் களும், குற்றவியல் அறமன்றங்களும் உண்டாக்கப்பட்டன. சட்ட ஒழுங்கை அறிவுறுத்தவும் காப்பாற்றவும் காவல்துறை உண்டாயிற்று. கல்வி நிலையங்கள், மருத்துவ நிலையங்கள், கலைக் கூடங்கள் தோன்றின.

இவையெல்லாம் உலகில் நேர்ந்துள்ள ஆட்சி முறையில் நடப்புகள்தாம் என்றாலும் இதற்கு முன்னர் முற்காலச் சோழர் ஆட்சியின்போது நேர்ந்த அமைப்புகள் அன்றிப் பிற ஆட்சியாளரால் எதையும் பெறாத நாகை ஆங்கில ஆட்சியால் இவற்றையெல்லாம் பெற்றுத் திகழ்வதைச் சிறப்பாகவே குறித்தாக வேண்டும்.

இருப்பினும் ஆங்கிலர் இந்தியரை – தமிழரை – நாகையரைத் தம் பண்ணைக்குட்பட்ட அடிமைகளாகவே கருதினர். கருப்பராகவே கருதினர். அடங்கியிருக்க வேண்டியவர்கள் என்று நடத்தினர். தன்னுரிமை என்று எதையும் தந்து விடவில்லை.

மக்களும் ஆங்கிலரை உயர்ந்தவராகவே கருதினர்; அவர் பார்வைபட்டால் பூரித்தனர்; பேசினால் பேறாகக் கருதினர். துரை – துரைசானி என்றே அழைத்தனர். அடிமைகளாகவே கருதப்பட்ட நிலையில் மக்கள் உணர்வு முளைத்தது. இந்திய தேசிய காங்கிரசு உருவாகியது. அதனை ஒரு 'இயூம்' என்ற வெள்ளையரும் சேர்ந்து உருவாக்கினார் என்பது ஒரு குறிப்பிடற்குரியது தான்.

'வானம் பொழிகிறது; பூமி விளைகிறது; உனக்கேன் காணிக்கை' என்றார் கட்டபொம்மன்.

'விடுதலை எமது பிறப்புரிமை' என்றார் திலகர்;

'தாமிருக்கும் நாடு தமதென்பதறிந்தார் மக்கள்;

'வெள்ளையனே, வெளியேறு' என்றார் காந்தியடிகள்.

## வெள்ளையனே வெளியேறு

1942 இல் வெள்ளையனே வெளியேறு ஓர் இயக்கமாக எழுச்சி யுற்றது. 1947 ஆகட்டில் புரட்சியாகவே வெடித்தது. வெள்ளையர் ஆட்சி தானாகவே வெளியேறியது.

1947 ஆகட்டு 15இல் இந்தியாவில் இந்தியர் விடுதலை ஒளிவிட்டது. வழிவிட்ட ஆங்கிலேயர் ஆட்சி முடிவுற்றது.

கி.பி. 1612 முதல் 1858 வரை 246 ஆண்டுகள் இந்தியாவும் அதனுட்பட்ட நாகையும் பிரித்தானியக் கிழக்கிந்திய வணிக நிறுவன ஆட்சிப்பிடியிலும் 1858 முதல் 1942 வரை 84 ஆண்டுகள் பிரித்தானிய அரசின் அழுத்தத்திலும் இருந்த இந்திய மக்கள் விடுதலை பெற்றனர்.

330 ஆண்டுகால ஆங்கிலர் ஆட்சி பின்வாங்கி மறைந்தது. "வெள்ளைப் பரங்கியைத் துரை என்ற காலமும் போயிற்று; நாமிருக்கும் நாடு நமக்கே உரிமையாயிற்று". ஆளுவோரை நம் நாட்டினராகவே தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றனர் நம் மக்கள். தமக்காகத் தமது அமைச்சர்களாகவும், தமது படைத்தலைவர் ளாகவும், தமது அலுவலர்களாகவும் தமது காவலர்களாகவும், தமது ணியாளர்களாகவும் இந்திய மக்கள் – நம் நாகை மக்களும் பெற்று ன்னரானினர். எல்லாரும் இந்நாட்டு மன்னரானினர்.

## ஊ. விடுதலைத் தன்னாட்சி – 1950

### விடுதலை நாகை

இந்திய விடுதலையால் நாகை பல்வேறு பொருத்தமற்ற ஆட்சிகளினின்றும் வேறுபட்ட ஆட்சியில் அமைந்தது.

1950 சனவரி 26 இல் இந்தியாவில் தகுதியான தன்னாட்சி அமைந்தது.

முதல் ஆட்சித் தலைவராக நமக்கொரு சக்கரவர்த்தி அமர்ந்தார். ஆம் நம் நாட்டுச் சக்கரவர்த்தி அமைந்தார். அதிலும் நம் தமிழ் நாட்டுச் சக்கரவர்த்தி கிடைத்தார். ஆம் சேலத்துச் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் பொறுப்பேற்றார். முதல் குடியரசுத் தலைவராக ஓர் அரசர் அமர்ந்தார். அரசனை வடமொழியார் இந்திரன் என்றும் குறிப்பர். ஆம் இந்திரனைக் குறிக்கும் பிரசாதகன் என்னும் பிரசாத் குடிப்பெயர் கொண்டவர், முதல் குடியரசுத் தலைவரானார். அவரும் நம் தமிழ் நாட்டுச் சோழ அரசன் பெயர் பெற்ற இராசேந்திரப் பிரசாத்.

இந்தியக் குடியரசுத் தலைவரின் தலைமையில் பண்டித சவர்கலால் நேருவின் தலைமை அமைச்சர் ஆட்சியில் இந்தியா – நாகை முடிசூடியது. தொடர்ந்து பல குடியரசுத் தலைவர் தலைமை அமைச்சர்கள் ஆட்சியில் – சென்னை மாநிலத்து ஆளுநர்கள் – முதலமைச்சர்கள் ஆட்சியில் நாகை வளர்ந்தது.

## அரசியல் கட்சி ஆட்சி

ஆங்கிலர் ஆட்சியில் 1919இல் நேர்ந்த மாண்டேகு சட்டத்தின்படி மாநிலங்களில் தேர்தல் நடத்தப்பட்டு ஆங்கிலர் பிடிப்புடன் கூடிய சட்ட மன்றங்கள் அமைந்தன. சென்னையிலும் சட்ட மன்ற வழி ஆளுநர் ஆட்சி நிகழ்ந்தது.

இவ்வாட்சியில் ஆங்கிலர் தம் சார்பானவர்களையே ஆட்சியில் புகுத்தி அமர்த்தினர். பார்ப்பனர் மிக இடம் பெற்றனர். இதனால் 1920 இல் பார்ப்பனல்லாதார் அரசியல் கட்சியாக 'நீதிக்கட்சி' (Justice Party) தொடங்கப்பட்டது. இக்கட்சி தேர்தலில் நின்று அதிக இடம் பெற்று ஆட்சி அமைத்தது. இஃது தமிழ்நாட்டின் முதல் அரசியல் கட்சி ஆட்சி. இக்கட்சி ஆட்சியில் பார்ப்பனரல்லாதார்க்குப் பல

வாய்ப்புகளும் நலன்களும் கிட்டின. இவ்வாட்சியில் அமைந்த நாகையும் இப்பயன்களைக் கொண்டது.

அடுத்து 'பேராயக்கட்சி' என்றும் 'காங்கிரசும்' திராவிட இயக்கத்துக்குத் 'திராவிட முன்னேற்றக் கழகமும்' அதனின்று பிரிந்த 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும்' தம்தம் கட்சி வெற்றியில் தமிழ்நாட்டு ஆட்சியை மேற்கொண்டன. இவ்வாறு நாகை அரசியல் கட்சி ஆட்சிகளால் ஆளப்பட்டது; ஆளப்படுகின்றது.

### கல்வி தந்த காமராசர்

தமிழ்நாட்டு ஆளுகையில் அமைந்த காங்கிரசு அமைச்சர்களில் குறிப்பிடத்தக்கவர் 'பெருந்தலைவர்' என்னும் சிறப்புப்பெற்ற திரு காமராசர் அவர்கள். அவர்தம் ஆட்சியில் கல்விக் கூடங்கள் பெருகின; சிறு தொழிற்கூடங்கள் பெருகின. ஏழை மாணவர்க்கு நண்பகல் உணவு வழங்கல் நடைமுறைக்கு வந்தது.

### தமிழ் நாடாக்கிய அண்ணா

அடுத்துக் குறிப்பிடத்தக்கவராக திராவிட முன்னேற்றக் கழக அறிஞர் பெருந்தகை அண்ணா (சி.என். அண்ணாத்துரை) பணி ஏற்றார். மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டாலும் மொழிப் பெயர் அன்றி 'சென்னை மாநிலம்' என்ற பெயராக இருந்ததை மாற்றித் 'தமிழ்நாடு' என்னும் உரிமைப் பெயரைச் சூட்டினார். பகுத்தறிவுக் கட்சியாக விளங்கிய அவர் ஆட்சியில் சீர்த்திருத்தத் திருமணங்கள் சட்ட இசைவு பெற்றன. இந்தி மொழி விலக்கலால் இரு மொழிக் கல்வித் திட்டம் உருவாயிற்று. தமிழ் ஆட்சி மொழியாயிற்று. நாகையும் இதனால் பயன் பெற்றது.

அடுத்துக் கலைஞர் மு. கருணாநிதி ஆட்சி குறிப்பிடத்தக்க மக்கள் நலன்களை நல்கியது. இவற்றால் நாகை மக்களும் பயன் பெற்றனர். இவர் காலத்தில்தான் முதன் முதலில் நாகைக்கு அரசுக் குடியிருப்பு வீடுகள் எழுந்தன.

இப்போது செல்வி செயலலிதா ஆட்சியில் நாகை தனியொரு மாவட்டமாக 'நாகை காயிதேமில்லத் மாவட்டம்' ஆயிற்று.

நாகை தன் நேர்முக ஆளுநராக மாவட்ட ஆட்சித் தலைவரைப் பெற்றது.

இவ்வாறு நிகழும் நம் ஆட்சியின் பயன்களைத் தொடர்ந்து வரும் பகுதியில் ஆங்காங்கு விரிவாகக் காணலாம்.

நாகை தன் ஆட்சி வரலாற்றில் மண்ணின் மைந்தர் ஆட்சி, அயல் மன்னர் ஆட்சி வெளிநாட்டவர் ஆட்சி, விடுதலை பெற்ற தன்னாட்சி என 2300 ஆண்டு கால ஆளுகைகளைக் கண்டதாகும். இந்த நான்கு வகை ஆளுகைகளின் ஆட்சியாளர்களை மேலே கண்டபடி காலவாரியாகக் கீழ்வருமாறு தொகுத்துப் பட்டியலிடலாம்.

## 23 நூற்றாண்டு ஆட்சிகள்

| ஆண்டு | ஆட்சியர் | ஆட்சிக்காலம் |
|---|---|---|
| கி.மு. முதல் நூற்றாண்டு வரை | தொன்மைச் சோழர் | |
| கி.பி. 1 முதல் 400 | முற்காலச் சோழர் | 400 ஆண்டுகள் |
| கி.பி. 400– 590 | களப்பிரர் | |
| கி.பி. 590 – 662 | இடைக்காலப் பாண்டியர் | 272 ஆண்டுகள் |
| கி.பி. 862 – 870 | பல்லவர் | 8 ஆண்டுகள் |
| கி.பி. 840 (இடையில்) | முத்தரையர் இடையில் | |
| கி.பி. 870– 1279 | பிற்காலச் சோழர் | 409 ஆண்டுகள் |
| கி.பி. (1279) | பிற்காலப் பாண்டியர் | |
| கி.பி. (1257) 1539 | விசயநகர அரையர் | 280 ஆண்டுகள் |
| கி.பி. 1540–1674 | தஞ்சை நாயக்கர் | 134 ஆண்டுகள் |
| கி.பி. 1675–1855 | மராத்தியர் | 180 ஆண்டுகள் |
| கி.பி. (1500–1658) | போர்த்துகீசியர் (வார உரிமை ஆட்சி) | 158 ஆண்டுகள் |
| கி.பி. 1658–1824 | ஆலந்தர் (வார உரிமையுடன் உள்ளாட்சி) | 165 ஆண்டுகள் |
| கி.பி. 1824 – 1942 | ஆங்கிலர் | 118 ஆண்டுகள் |
| கி.பி. 1942 | இந்தியர் | |

இப்பட்டியலில் எவ்வாட்சியால் நாகை நலமும் சிறப்பும் பெற்றது எனும் வினாவை எழுப்பினால்,

தொன்மைச் சோழர்
முற்காலச் சோழர்
ஓரளவில் பல்லவர்
பிற்காலச் சோழர்
ஆங்கிலர்
இந்தியர் என்றே குறிக்க வேண்டும்
மற்றவரெல்லாரும் மற்றவரே.

## கொண்டுகாட்டி

| ஆசிரியர் | கொண்டு காட்டி நூற்குறுக்கம் |
|---|---|
| 1. சதாசிவப் பண்டாரத்தார் | : இலக்.ஆ.கல் – பக் 156 |
| 2. Dubreuil, J. | : T. Pal - P.69 |
| 3. பனம்பாரனார் | : தொல். பாயி – 1,2 |
| 4. இளங்கோவடிகள் | : சிலம்பு – 29: அம்மானை வரி 1 – 3 |
| 5. நாலடியார் | : நாலடி – 291 |
| 6. ...... | : திருவா. செப் – S.I.I. III – எண் 205 |
| 7. இராசு, செ. | : தஞ். மரா. கல் – வரி 18 |
| 8. ........ | : சு.வ.கோ. செப் (புதுதில்லி தேசிய அருங்காட்சியகத்தில் உள்ளது) வரி.20 |
| 9. " " | : புள்.ஏ.செப் (செப்.அ. செப்.1) வரி 42,43 |
| 10 " " | : செ.அ.செப். வரி 33 |
| 11. " " | : திருவா.ஆ. செப் 1 – வரி 22,23 |
| 12. " " | : மெக்.சுவ. 3180 (கே.எம். வேங்கடராமையா த.பல். பக் 91) |

13. " " : (கே.எம். வேங்கடராமையா பதிப்பு – த.பல். பக். 93,94)

14. " " : (கே.எம். வேங்கடராமையா பதிப்பு – த.பல். 93,94)

15. Borbus : Let Government.

16. அடியார்க்கு நல்லார் : சிலம்பு – 3 :அடி 159,160

17. இராசு, செ. : தஞ். மரா. செப். பதிப்புரை பக். XXI

18. வேங்கடராமையா, கே.எம். : தஞ்.மரா. அர.சமு. வாழ்

19. இராசு, செ. : தஞ். மரா. செப். – பக்.1

20. பிள்ளை, கே.கே. : தமி. வர – பக். 429

21. " " : படே. வெ. பட்.வரி 17,18 (த.மரா. செப்)

22. " " : மெக். சுவ –3180 எம் 79

23. " " : படே. வெ.பட் – வரி 30

24. தாமசு சீனிவாசன் : க. களஞ். தொகுதி 3: பக். 644

# 4. நகரமைப்பு நாகை

## அ. ஆற்றங்கரை நாகரிகம்

உலகத்தில் நகரமும் அதனோடு இயைந்த நாகரிகமும் ஆற்றங்கரையில் தோன்றின.

தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களும் இதனைத் தொன்மைக் காலத்தில் வரையறுத்துள்ளன. மாந்தன் மலையாம் குறிஞ்சியில் தோன்றினான். மலைமேல் நீர் சுரந்து ஊறி வரி வரியாக ஓடியது. ஒன்று கூடிய நீரோட்டம் அருவியாய் அடியில் விழுந்தது. நீரின் வரி ஓட்டத்தைக் கண்ட மாந்தன், அந்த ஓட்டத்தைக் கண்டவாறே வந்தான். விழுந்த அருவி கீழே ஆறாக ஓடுவதைக் கண்டான். அந்த நீரோட்ட வழியே வழியாக... நடந்தான். காடாம் முல்லையைக் கடந்தான். மருதமாம் ஆற்றங்கரையில் நிலத்தைக்கண்டு தங்கி, நிலத்தைச் செப்பம் செய்தான். கூடி வாழ்ந்ததில் ஊர் உருவாயிற்று. செப்பமான அமைப்பில் நகர் பிறந்தது. நகரின் ஒழுங்கும் முறையும் அழகும் அமைப்பும் கொண்ட பழக்க வழக்கம் நாகரிகத்தை உருவாக்கியது.

எனவே தமிழ் மண்தான் முதலில் ஆற்றங்கரை நாகரிகத்தை உருவாக்கியது.

ஆற்றங்கரை நாகரிகத்தையே உலகில் சிறப்பித்துச் சொல்லுவர். அகழ் ஆய்வாளரும், வரலாற்று ஆய்வாளரும் உலகத்தில் தோன்றிய ஆற்றங்கரை நாகரிகத்தைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்:

இந்தியா – சிந்து ஆற்றங்கரை நாகரிகம்;

எகிப்து – நைல் ஆற்றங்கரை நாகரிகம்;

மெசப்போட்டோமியா – டைக்கிரீசு ஆற்றங்கரை நாகரிகம்,
யுப்ரடீசு ஆற்றங்கரை நாகரிகம்

இவை மூன்றுக்குள் குறிப்பிடத்தக்க தொன்மையும் சிறப்பும் கொண்டதாகச் 'சிந்தாற்று நாகரிக'த்தையே குறிப்பிடுவர்.

ஆனால், அகழ்வு ஆய்வாளரும் வரலாற்று ஆய்வாளரும் ஒன்றைக் கணக்கில் எடுத்து ஆராய்ச்சியில் கொள்ளவில்லை. புதற்குக் காரணம் தக்க தடயங்கள் கடலுக்குள் இருந்தமையேயாகும்.

அத்துடன் தமிழ் மொழியைக் காணாது, தமிழ் நூல்களைக் காணாமையும் ஆகும்.

## முதன்மை நாகரிகம்

முதல் ஊழிக் காலக் கடல்கோளில் தென்பெருங் கடலில் பெருநிலப்பகுதி மூழ்கியது. அப்பகுதி 'குமரி நாடு' எனப்பெறும். குமரி நாட்டில் ஓடிய பஃறுளி ஆற்றங்கரையில் தோன்றிய பழந் தொன்மை நாகரிகம், கண்காணும் தடயங்களைக் காட்டாமையால் அது மறைபொருள் ஆயிற்று.

பஃறுளியாற்றங்கரை நாகரிகமே உலகத்தில் முதன்மை நகர நாகரிகமாகும்.

முற்கால அளவில் இந்திய நாட்டில் காவிரிக்கரை நாகரிகமும், கங்கைக் கரை நாகரிகமும் சிந்தாற்றங்கரை நாகரிகமும் தோன்றின. காவிரி, கங்கை நாகரிகங்கள் ஒன்றிற்கொன்று பலதுறைகளில் வேறுபட்டவை; முரண்பட்டவையுமாகும்.

காவிரிக்கரை நாகரிகத்தின் கிளையே நாகை நகர நாகரிகமு மாகும்.

## தொன்மைக்கால நகரத் தோற்றம்

சிந்து நாகரிகம் என்று வழங்கப்பெறும் நாகரிகம் சிறந்த நாகரிகமே. சிந்து நாகரிகம் என்னும் தொடரில் உள்ள இரண்டு சொற்களும் நாகை நகர நாகரிகத்தை ஒத்து அணுகுகின்றன.

முதலில் 'நாகரிகம்' என்னும் சொல் நாகர்+இகம் என்று பிரிபடும். இது "நாகரிகர்" என்னும் சொல்லின் திரிபாகும்.

"நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்"(1) என்னும் நற்றிணைப் பாடலில் 'நாகரிகர்' என்றதற்கு'நாகரியர்' என்னும் பாடவேறுபாடு உண்டு. இச்சொல் நாகர்+(இ)+அர் என்பவற்றின் கூட்டுச்சொல்.

இதற்குக் 'காப்பியர்' என்னும் சொல்லும் ஒப்பானதாகும். காப்பு +இ+அர் என்பதன் கூட்டு 'காப்பியர்'. காப்பியாறு என்னும் ஓர் யாறு தொன்மைக் காலத்து யாறு. அது காப்பு+யாறு என்று 'ஊருக்குக் காப்பான யாறு' என்று பொருள்படும் (காப்பு+யாறு = காப்பியாறு என்று ஆவதை இலக்கணத்தார் குற்றியலிகரம் என்பர்). காப்பியாற்றுக் கரையிலிருந்த ஓர் ஊர் 'காப்பியாறு' என்றே பெயர் பெற்றது.

இவ்வூர்ப் புலவர் காப்பியனார் என்பவர். காப்பியாற்றுக் காப்பியனார்' என்று பெயர் பெற்றார். இவருக்கு முன்னரும் சில காப்பியனார் வாழ்ந்திருப்பர். அவருள்ளும் தொன்மையான காப்பியர் 'தொல்காப்பியர்' ஆவார். அவரே,

"தன் பெயர் தோற்றித் தொல்காப்பிய"த்தைப் படைத்தவர்.

"நாகரியர்" என்னும் சொல்லில் நாகர் முந்தி நிற்கின்றனர். நாகர் கைக்கொண்டு வளர்த்த செப்பமான படைப்புகளும் பண்பாடுகளும் மரபுகளும் 'நாகரிகம்' ஆகியது.

இவ்வகையில் நாகர்பட்டினமாம் நாகை – நாகரால் பெயர் பெற்ற நாகை – நாகரிகப் படைப்புத் தொடர்பு கொண்டதாகிறது.

அடுத்து 'சிந்தாற்றங்கரை' என்பது ஒரு வகையில் நயமாகவும், மறுவகையில் உண்மையாகவும் நாகையுடன் பொருந்துகிறது.

வடபுலத்துச் சிந்தாற்றங்கரையில் அகழ்ந்து காணப்பெற்ற மெகஞ்சதாரோ ஆரப்பா என்னும் இடங்கள் மிகத் தொன்மையான நாகரித்தவை என்பர். அவை தொன்மைத் திராவிடர் வாழ்ந்ததும், எழுப்பியதும், படைத்ததுமான இடங்கள் என்பது பல ஆய்வாளர்களது கருத்து. இவ்வகையில் திராவிடர் தொடர்பில் நாகை நகரம் ஒரு தொடர்பு கொள்கிறது.

## நாகையில் ஒரு சிந்தாறு

மற்றொரு உண்மைத் தொடர்பு உண்டு. நாகை ஒரு காலத்தில் ஆற்றங்கரை நகரமாக உருவெடுத்த தாகும். அந்த ஆறும் 'சிந்து ஆறு' என்றே பெயர் கொண்டது. இதற்குப் பெரும் சான்றுகள் கண் கூடாகக் கிடைக்கவில்லை. கிடைக்கவில்லை என்பதால் சான்று களோ, தடயங்களோ இல்லை என்பது முடிவாகாது. இதற்குரிய அகழ்வு ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

## இரண்டு துறைக் கோயில்கள்

நாகையில் நகரின் மையப் பகுதியிலிருந்து மேற்கு நகர் எல்லை யில் ஒரு பிள்ளையார் கோயில் 'சிந்தாற்றுத்துறைப் பிள்ளையார் கோயில்' என்று இன்றும் வழங்கப்பெறுகிறது. இதுபோல் நகரின் மையப் பகுதியிலிருந்து கிழக்கில் நாகை கடற்கரைக்கு 75மீட்டர் ...ளே 'சிந்தாற்றுத்துறை மாதா கோயில்' என்று ஒரு கிறித்துவர் ...யில் உள்ளது. எனவே, நகரின் மேற்கிலிருந்து கிழக்காக ஓர் ...று நகரின் மையத்தில் ஓடிப் பாய்ந்திருந்தது என்று அறியலாம்.

மேலே குறிப்பிட்ட இரண்டு கோயில்களின் பெயர்களைக் கொண்டு அவ்வாற்றின் பெயர் 'சிந்தாறு' என்றாகிறது.

## நாணயக்காரத் தெருவில்

இதற்கு மேலும் துணைச் சான்றுகள் செவி வழி வழக்கும், நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார் தம் 'அறிவுக்கடல்' (ஞானசாகரம்) இதழில் எழுதிய ஒரு கட்டுரையுமாகும். இரண்டின் படியும் நகரின் மேற்கெல்லையில் புகுந்து 'சிந்தாறு' இக்காலத்தின் மேலவீதியைக் கடந்து, சட்டையப்பர் தெற்கு வீதிக்குள்ளாகப் பாய்ந்து, இக்கால நாணயக்காரத் தெருவில் ஓடி, வெங்காயக் கடைத் தெரு வழியாகப் பாய்ந்து, பின் வடக்கு நோக்கித் திரும்பி ஓடி, வெளிப்பாளையத்தில் ஓடி, அதன்பின் இக்காலத்தியப் பார்ப்பனச் சேரியின் கிழக்கே திரும்பிக் கடலில் கலந்தது. இவ்வாறு கொள் வதற்கு மேலும் சில தடயங்கள் உள்ளன. நாணயக்காரத் தெருவில் தெற்குப் புறத்தில் ஒரு மேட்டு நிலத்தில் புத்தர் சிலைகள் பலவும், சிலவகை நாணயங்களும், சில அரும் சிற்பங்களும் கண்டெடுக்கப் பட்டன. இவை சென்னை எழும்பூர் காட்சிக்கூடத்தில் வைக்கப் பட்டுள்ளன.

இவை கண்டெடுக்கப்பட்ட இடம் ஒரு புத்தப்பள்ளியாகவோ, புத்தர்கள் கலைக்கூடமாகவோ இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. வீரபத்திரசாமி கோயிலுக்குப் பின்புறத்தே இருந்த இடம் இஃதாகும். ஆற்றங்கரையில் புத்தப் பள்ளியமைத்து புத்தத்துறவிகள் வாழ்ந்துள்ளனர். மேலும் வெளிப்பாளையத்தின் கிழக்குக் கடற்கரைப்பகுதியில் இப்போதுள்ள புகைவண்டித் தடத்தை ஒட்டி மேலைப் பகுதியில் 'இளஞ்சேரன் நகர்' என்று புதிதாக உருவான புறநகர் ஒன்றுள்ளது. இந்நகரில் வீடுகள் கட்ட அடித்தளத்திற்கு அகழ்ந்த போது 30 அடி அகல அளவிற்கு இந்நகர் மனைகளின் மையமாகத் தெற்குவடக்கில் நீளமாக ஆற்று மணல்களே தோன்றின. (இது நான் கண்ட உண்மை). இதற்கு மேலும் 'பார்ப்பனச்சேரி' ஒரு தடயமாகும்.

## ஆற்றின் அக்கரை அகரம்

வெளிநிலத்திலிருந்து ஒரு நகர் நோக்கி வந்து புகும் பார்ப்பனர் அங்குள்ள ஆற்றின் அக்கரையில் தங்குவர். அது அவரது நாள் தொழுகைக்கும் மரபுக் கடன்களுக்கும் உகந்தது. இவ்வாறு நகரில் ஓடும் ஆற்றின் அக்கரையில் சேர்ந்து தங்கியதால் அவ்விடம் 'அக்கரை

அகரம்' (அக்கரகாரம்) எனப்பெற்றது. அகரம் என்றால் தங்கும் இடம் என்பது பொருள். இஃதே 'அக்ரகாரம்' எனப்படுகின்றது. இந்த 'அக்கரையகரம்' பார்ப்பனர் சேர்ந்து வாழ்ந்ததால் 'பார்ப்பனச் சேரி' எனப்பட்டது. இன்றும் வழக்கில் உள்ளது. இந்த இனப்பெயரை விரும்பாதோர் இப்போது அங்கு பார்ப்பனர் வாழாமையால் அப்பெயரை மாற்றி, 'பால்பண்ணைச் சேரி' என்று வழங்கப் பார்க்கின்றனர். (பால் பண்ணை ஏதும் அங்கிருந்த தில்லை) சேர்ந்து வாழும் இடம் 'சேரி' எனப்படுவது முற்கால வழக்கு. எவர் வாழினும் சேரியே. பிற்காலத்தில் தாழ்த்தப்பட்டோர் வாழிடமாக மட்டும் கருதப்பட்டது. சற்றுத் தாழ்வாகவும் எண்ணப்படுவதுண்டு. பார்ப்பனர் வாழ்ந்த தெருவைப் பெருங்கதை ஆசிரியர் கொங்குவேளிர், "அந்தணர் சேரி அகவிதழார்" (3) என்று பாடினார்.

பார்ப்பனர் சேர்ந்து வாழும் தெருவிற்கும் சேரி எனப் பெயரமைந்தமை பழங்கால வழக்காதலால் நாகைச் சிந்தாற்றங் கரைப் பார்ப்பனச் சேரி தொன்மையானது என்பதையும் உணரவேண்டும்.

நாகையின் தொன்மையான ஆற்றங்கரையில் 'பார்ப்பனச் சேரி' அமைந்ததற்குப் பெரும்பாணாற்றுப்படை சான்று தருகிறது. அதனை அடுத்துப் பார்க்க உள்ளோம்.

## நாகையில் காவிரியாறு

ஆறு ஓடியதற்கு மற்றொரு சான்று.

'சோழகாசபர்' என்னும் புத்தத் துறவியார் 'மோகவிச்சேதனீ' என்னும் நூலைப் பாளி மொழியில் எழுதியவர். அந்நூலின் குறிப்பில் அவர்,

"காசபதேவர் காவிரியாறு பாயும்
நாக நகரத்தில் நாகானன விகாரையில் தங்கினார்"

– என்று குறிக்கப்படுகிறார். இதில் குறிக்கப்பெற்ற 'நாக நகரம்' நாகர்பட்டினமாகும். இதற்கு நாகர் இட்ட பெயர் 'நாகானனம்' என்பது. இதன்படி தொன்மை நாகையில் காவிரியாறு பாய்ந்ததா?

இக்காசபதேவர் சோழ காசபதேவர் என்று சிறப்பிக்கப் பெற்றவர். எனவே சோழ நாட்டவர்.

நா.10.

கல்லறை மண்டபத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ள ஆலந்து பெருமாட்டி உருவத்தின் மரச்சிற்பம் - (கிருத்துவக் கோயிலில் உள்ளது)



காரோணர் கோயில்



வேளாங்கன்னிக் கோயில்

உண்ண இறங்கும் துறையில் இறங்கி நீராடிய மகளிர்' என்பதில்

ஆற்றில் நீர் உண்ணுவதற்காக இறங்கும் துறை 'நீர் உண்துறை'

அதில் இறங்கி நீராடினர் மகளிர் என்பனவற்றால் நீர்ப்பெயற்றாம் பழம் நாகையில் ஆறு ஓடிய செய்தியை முதன்முதலில் காண்கிறோம். 'புனலாடு மகளிர்' என்னும் தொடர் ஆற்றில் நீராடுவதைக் குறிக்கும். இதனை ஐங்குறுநூற்றுப் பாடலும் (100–1) சொல்லும்.

மகளிர் – அவரிலும் விளையாடும் இளம் பெண்கள் நீராடினர் என்றால் அந்த ஆறு ஊர்க்குள் ஓடியதை உணரலாம்.

உருத்திரங்கண்ணனார் வண்ணனையைத் தொடர்கிறார்:

நீராட இறங்கும் முன் பெண்கள் தம் காதணிகளைக் கழற்றிக் கரையில் போட்டனர். காதணியின் ஒளியைக் கண்ட மீன்கொத்திப் பறவை ஒன்று அதைத் தன் இரை என்று கருதி அலகால் கவ்விப் பறந்து போய் உயர்த்திக் கட்டப்பட்டிருந்த தூணின் மேலே அமர்ந்து வைத்தது. அத்தூண் பார்ப்பனர் வேள்வி செய்வதற்காக நாட்டிய வேள்வித் தூண். தூண் நாட்டி வேள்வி செய்கின்ற அந்தணர் இருப்பிடம் உண்டு – என்கிறார். இது கொண்டு ஊருக்குள் பாய்ந்து ஓடிய ஆற்றின் கரையில் பார்ப்பனர் வந்து தங்கி வாழ்ந்து வேள்வி செய்ததை அறிகிறோம். பார்ப்பனரின் அக்கரை அகரமாகிய இஃதே முன்குறித்த 'பார்ப்பனச் சேரி'யாக இப்போதும் வழங்கப் படுகின்றது.

எனவே, பெரும்பாணாற்றுப்படையின் காலமாகிய கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் நாகையில் ஓர் ஆறு ஓடியதை உறுதி யாகக் கொள்ளலாம்.

'மோகவிச்சேதனி' என்னும் நூலில் 'காவிரி பாயும் நாகை' என்றுள்ளது. இந்நூல் ஐந்தாம் நூற்றாண்டின் நூல். இந்நூற் றாண்டிலும் ஆறு ஓடியிருக்கிறது.

தேவாரக் காலத் தொடக்கமாகிய ஆறாம் நூற்றாண்டில் ஆறு குறிக்கப்படாமையால் ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிவரை ஆறு ஓடியதாகக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு கொள்வதை ஒரு வழக்கு இடைமறிக்கிறது. அதுதான் 'சிந்தாற்றுத்துறைப் பிள்ளையார் கோயில்' என்பது. பிள்ளையார் கோயில் தமிழ்நாட்டில் ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பரஞ்சோதி என்னும் சிறுத்தொண்டரால் அறிமுகம் செய்யப்பட்டது. அவ்வாறாயின் ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆறு ஓடியதா என்று வினவலாம். அவ்வாறானால் தேவாரப் பாடலில் ஆறு இல்லாமை இதற்குத் தடையாகும்.

இந்த இடைமறிப்பை இவ்வாறு நீக்க வேண்டும்.

## சிந்தாற்றுத் துறைகள்

ஆறு ஒன்று ஓடும்போது மக்கள் பயன்படுத்த நீரில் இறங்கும் வழி 'துறை' எனப்படும். துறை என்பது வழியின் பெயர்தான். நீர்த்துறை அமைந்த இடமும் 'துறை' எனப்படும். இவ்வகையில் ஆறு ஓடிய போது துறைபெயரைக் கொண்ட கரையின் இடம் ஆற்றின் போக்கு மாற்றப்பெற்ற பின்னரும் அப்பெயர்கொண்டு 'துறை' எனப்படுவ துண்டு. இவ்வகையில் 'சிந்தாற்றுத்துறை' என்று பெயர் கொண்ட இடத்தில் எழுப்பப்பெற்ற பிள்ளையார் கோயில் சிந்தாத்துறைப் பிள்ளையார் கோயில்' என்று குறிக்கப்பட்டது.

இது போன்றே சிந்தாற்றின் கிழக்கெல்லையில் அமைந்த துறைமுகப் பகுதியில் பிற்காலத்தில் எழுப்பப்பட்ட கிறித்துவக் கோயிலும் சிந்தாற்றுத்துறைப் பெயர் கொண்ட இடத்தில் எழுந்த தால் 'சிந்தாத்துறை மாதா கோயில்' எனப் பெற்றது.

எனவே, முற்காலத்தில் காவிரியாறு என்னும் நாகை நகர் நடுவே புகுந்து ஓடிய ஆறு பின் 'சிந்தாறு' என்னும் பெயர் கொண்டது.

நகர் நடுவே ஓடியபோது ஓடிய ஆற்று நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்திய மக்கள் ஆற்றங்கரையில் குடியமைப்பைக் கொண் டனர். ஊர் உருவாயிற்று. ஊர் வளம் பெற்று மக்கள் வளம் பெருகி வளமான இல்லங்களையும் அமைத்தனர். ஊர் பேரூர் ஆயிற்று. அப்பேரூர் 'நீர்ப்பெயற்று' என்னும் பெயர் கொண்டது. இப்பேரூர் அமைப்பில் வடக்கில் புத்தத் துறவிகள் இலந்தைமர மேட்டு நிலத்தில் இடம் பெற்றனர் என்பதையும் இங்கு இணைத்து நகரமைப்பை மனக்கண்ணால் காணவேண்டும்.

இவ்வாறாக, நாகை

Δ சிந்தாற்றங்கரை ஊராகத் தோன்றியது;

Δ அது 'நீர்ப்பெயற்று' என்னும் பெயர் பெற்றது.

Δ அதில் சிந்தாறு மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்ந்து, வடக்கில் திரும்பி, சற்றுத் தொலைவில் கிழக்கு நோக்கித் திரும்பிக் கடலில் கலந்தது.

Δ சிந்தாற்றின் தெற்கில் வயல் வெளிகள் அமைந்தன; மேற்கிலும் அமைந்தன.

Δ கிழக்கில் கடற்கரை ஓரமாகப் பரதவர் குப்பங்கள் அமைந்தன.

Δ சிந்தாற்றின் வடகரையில் வளமனைகள் அமைய அவற்றின் வடக்கே பரந்த வெட்டவெளியும், அதனை அடுத்து இலந்தை மர மேட்டு நிலமும் இருந்தன.

– இவ்வாறு நாகையின் தோற்றக்கால அமைப்பு நேர்ந்தது.

தோற்றக் காலம் கி.மு. ஆகும்;

இது முதல் கட்ட அமைப்பு.

அடுத்த கட்ட அமைப்பு இதே நிலையில் ஒரு சேர்க்கைக் குடியேற்றத்தால் நேர்ந்த அமைப்பாகும்.

## இ. பதரி திட்டை அமைப்பு

புகார் நகரம் தலைநகரமாகவும், துறைமுகமாகவும் கி.மு. காலக்கட்டத்தில் உருவாகிவிட்டது. அசோகப் பெருமன்னன் தென்னாட்டில் புத்த மதத்தைப் பரப்பியபோது புகாரை நற்களமாகக் கண்டுள்ளான். புத்தத் துறவிகள் நூற்றுக்கணக்கில் அங்கு இடம் பெற்றனர். பல்கிப் பெருகிய புகார்ப் புத்தத் துறவிகள் நெருக்கடி காரணமாகவும், நூல்களை எழுத அமைதியான இடத்தை நாடியும் வேற்றிடம் காண முனைந்தனர். அன்னார்க்குப் புகாரின் தெற்கேயிருந்த 'நீர்ப்பெயற்று' ஊர் தக்க இடமாகப்பட்டது. அங்குள்ள மேட்டு நிலமான இலந்தைக்காடு தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு இடம் கொண்டனர். இவ்வாறு ஓர் ஊறுபாட்டாலும் (விபத்தாலும்) நாகை விரிவாக்கப்பட்டது எனலாம்.

இவ்வகையில் மட்டுமின்றி இலங்கையிலிருந்து புகார் வந்த புத்தத் துறவிகள் நீர்ப்பெயற்றெல்லை என்று நாம் கண்ட பரவையில் கடற்சுழலில் சிக்கிக் கரையேறினோரும் இந்த இலந்தை மரக் களத்தை அடைந்துள்ளதைக் கண்டோம். இவ்வாறு புத்தத் துறவிகள் இட அமைப்பால் "நீர்ப்பெயற்று" விரிவடைந்தது. அசோகப் பெரு மன்னன் புத்தத்துறவிகளுக்காக ஒரு புத்தப்பள்ளியை எழுப்பி னான். அது 'ஆதிவிகாரை' எனக் கண்டோம். இதனால் மேலும் ஊர்க்கு ஒரு விரிவாக்கம் நேர்ந்தது.

கீழை நாடுகளிலிருந்து புகார் வரும் வணிகர்களும், புத்த வழிபாட்டாரும் 'நீர்ப்பெயற்று'க் கடற்கரையில் இறங்கித் தங்கிச் சென்றனர். நாகநாட்டவர் மிகுதியாக வந்ததைக் கண்டோம். இவ்வகையில் புத்த அமைப்புகளால் ஊர் பேரூராக அமைப்புற்றது.

தோற்றமான ஊரின் வடக்கே பதரி திட்டையால் விரிவாக்கமும், கிழக்கே கடற்கரையில் அவ்வப்போது பாடிவீடுகள், தங்கும் இடங்கள் அமைந்ததால் விரிவாக்கமும் கூடின. ஆற்றங்கரையின் தெற்குப் பகுதியிலும் நிலவழியாக வந்தவர்தம் குடியிருப்புகளும், வணிகர் களின் நிலையங்களும் கூடின. இவற்றால் வளமுள்ள மக்களின் மனைகள், நல்லில்லங்கள் அமைந்து சற்றுச் செல்வ வளமும் தோன்றலாயிற்று.

பெரும்பாலும் இவ்வளர்ச்சியும் விரிவாக்கமும் செல்வ வளத் தோற்றமும் மக்கள் பெருக்கமும் முன்னர் நாம் கண்ட 'நீர்ப்பெயற்று' ஊர் தோன்றிய காலக்கட்ட அளவோடு நிகழ்ந்ததாகவே கொள்ள வேண்டும்.

## நீர்ப்பெயற்று மறைந்தது

புத்தத் துறவிகளது அமைப்பால் நேர்ந்த வளர்ச்சியால் இப்பகுதி அவர்கள் இருப்பிடத்தைக் குறிக்கும் வகையில் 'பதரிதிட்டா' என்ற வழக்கு பெருகியது. வெளிப்புறப் புத்தத்துறவிகளும், மதம் சார்ந்தவர்களும் இவ்விடத்தைப் 'பதரி திட்டா' என்றே வழங்கினர்.

இதனால் காலப்போக்கில் 'நீர்ப்பெயற்று' என்னும் ஊர்ப்பெயர் பையப்பைய மறைய, 'பதரி திட்டா' என்னும் பெயரே வழக்காயிற்று. புத்த சமயப் பதரி திட்டா தமிழ் நிலத்து நீர்ப் பெயற்றுப் பெயரை மறைத்தது. பாளி மொழிச்சொல் தமிழ்ச் சொல்லை விழுங்கியது.

இவ்வமைப்பு இப்பேருரின் தோற்றக் காலக் கட்டத்துடன் தொடர்ந்து நேர்ந்த காலக்கட்ட அமைப்பாகும். இருப்பினும், பெயர் மாறும் அளவு நேர்ந்தமையால் அஃதொரு தனி அமைப்பாகக் கொள்ளத் தக்கதாகும்.

## ஈ. பட்டின அமைப்பு

ஓர் ஊறுபாட்டாலும் (விபத்தாலும்) நம் தொன்மை நாகை விரிவாக்கம் பெற்றதென்றேன். மற்றொரு கடிய அழிவால்தான் துறைமுகப் பட்டினம் ஆயிற்று; பெருநகரமுமாயிற்று. அந்தக் கடிய அழிவு பூம்புகார் கடற் கொந்தளிப்பால் நேர்ந்ததாகும். இக் கொந்தளிப்பும் அழிவும் எப்போது நேர்ந்தன?

ஒரு வரலாற்றாசிரியர் (7) கி.பி 79 ஆகட்டு 23, 24 ஆம் நாள்களில் நேர்ந்ததாகக் குறித்துள்ளார். இக்கணிப்புக்குரிய சான்றுகள் தெளிவாக இல்லை. பிளினியின் குறிப்புகளைக் கொண்டு கூறப்பட்டதாகத் தெரிகிறது. பிளினியின் காலம் கி.பி. 23 முதல் 79 வரை. அவரது இறுதியாண்டில் நேர்ந்ததாக உள்ளது.

இஃது ஓரளவில் அமையுமாயினும் இக்கொந்தளிப்பால் புகார் நகரின் ஒரு பகுதி சிதைந்ததாகவோ மூழ்கியதாகவோ குறிக்கப்படு கிறது. பின் முழு அழிவும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு என்று குறிக்கப்படுகிறது. இஃதும் ஓர் அரை நூற்றாண்டு அளவு பிற்படுகிறது. இவையிரண்டையும் ஓரளவில் ஏற்றால், முதல் அழிவைக் கண்ட சோழ மன்னன் எதிர்காலத்தை எண்ணிப் புகார் நகருக்கு மாற்றாக ஒரு துறைமுகத்தைச் சோழ நாட்டிற்காக அமைக்க விரும்பியிருக்கக் கூடும். அதற்குப் புகாரின் தெற்கே ஓரளவில் அமைப்பாக இருந்த நாகையே அதாவது பதரிதிட்டா என்னும் நீர்ப்பெயற்றே தக்கதாக இருந்தது.

எனவே, சோழ மன்னன் கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியளவில் அங்குத் துறைமுகம் கண்டு அதற்கேற்பப் பட்டினம் அமைக்கவும் முனைந்திருக்க வேண்டும். அதன் விளைவு, வரலாறுகள் ஏற்கும் நாகர்பட்டினத்தை உருவாக்கியது.

### பூம்புகாரின் மறு அச்சுவார்ப்பு

அவ்வுருவாக்கமும் அஃதாவது பட்டின நகரமைப்பும் புகார் நகரம் போன்றே அதன் மாற்று வடிப்பாகவே அமைக்கப்பட்டது.

புகார் நகரின் அமைப்பு எத்தகையது? அது சோழநாட்டின் தலைநகரமும், துறைமுகப் பட்டினமுமாகும் அன்றோ? அரசர் வாழ அரண்மனையும், அமைச்சர், படைத்தலைவர், படைகள், வாழும் மனைகளும் ஆட்சிக்கூடங்களும் அமைந்த நகர்ப்பகுதி 'பட்டினப் பாக்கம்' என்று பெயர்பெற்றது. இப்பட்டினப் பாக்கத்தில்தான் துறைமுகமும் இருந்தது. ஏற்றுமதி இறக்குமதிகளும் நிகழ்ந்தன. வணிகச் செல்வர்கள் அயல் நாட்டுப் பெருமக்கள் இடம் பெற்றிருந்தனர். இப்பகுதிதான் பெருநகர்ப்பகுதி.

இதன் தெற்கே இரு கல்லில் ஊர்ப்பகுதி அமைந்திருந்தது. ஊரில் தொழிலாளர், சிறுவணிகர்கள், பொதுமக்கள் வாழ்ந்தனர். இன்னோர் மருவி வாழ்ந்ததால் இப்பகுதி 'மருவூர்ப்பாக்கம்' எனப்பட்டது.

இவ்விரண்டிற்கும் இடையில் காலையில் கூடும் நாள் அங்காடியும், இரவில் கூடும் அல் அங்காடியும் அமைந்தன.

கி.பி. 150 அளவில் இங்கு வந்த தாலமி,

"புகார் நகர அரசர் அவர்தம் குடும்பத்துடன் புகார்த் துறை முகமாகிய பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் இவற்றின் வடக்கே 3 கி.மீ (2 கல்) தொலைவில் வாழ்ந்தனர்" எனக் குறித்துள்ளார்.

ஆனால் இதற்குரிய தடயங்கள் இல்லை. அஃதும் கடலுக்குள் மூழ்கியிருக்கலாம்.

புகாரின் மேற்குப்பகுதியில் பல்வகைக் கோட்டங்கள் இருந்தன. அதன் மேற்கே புத்த சமணத் துறவிகள் வாழிடமும், பள்ளிகளும் விகாரைகளும் இருந்தன,

இவ்வமைப்பிலேயே நம் அன்றைய நாகை நகர் அமைக்கப் பெற்றது.

இப்போதுள்ள நாகர்பட்டின நகரம் புகாரின் பட்டினப்பாக்கம் போன்றது. இதன் வடக்கே 4 கி.மீட்டரில் உள்ள நாகர் + ஊர் = நாகூர் புகாரின் மருவூர்ப்பாக்கம் போன்றது. இப்போதைய அமைப்பாலும் அரசு அலுவலகங்கள் முதலியன நாகை நகர்ப்பகுதியிலும் பல்வகை மக்கள் மருவி வாழும் பகுதி நாகூர் பகுதியிலும் உள்ளன. கடையில் உள்ள நாகர்தோப்பில் அங்காடிகள் அக்காலத்தில் அமைந்திருந்தன. புகாரின் மேற்கே அமைந்தது போன்று புத்தத் துறவிகள் வாழ்விடமும்

விகாரைகளும் அமைந்தன. ஊர்ப்பகுதியில் சிறு சிறு கோட்டங்கள் அமைந்தன.

இவ்வாறு புகார்ப்பட்டின அமைப்பின் அச்சு வார்ப்புப் போன்றே நாகர்பட்டினநகரம் மூன்றாவது கட்டமாகப் படைக்கப்பட்டது.

ஆயினும் கடல் கோளுக்குப்பின் ஒரு தனியே போன சோழ மன்னன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு அமைந்தான். நாகர்பட்டினம் துறைமுகமாக மட்டும் அமைந்தமையால் அரசர் முதலியோர் வாழ்விடமாகிய அரண்மனை முதலியன அமைய வில்லை. தாலமி பூம்புகார்க்குக் குறித்தமை போன்று நாகூரின் வடக்கில் அரசர் அரண்மனை இருந்ததாகவும் தடயம் ஏதும் இல்லை.

## பன்னாட்டு நகரம்

ஆனால் தாலமி (கி.பி. 119—161) நாகர்பட்டினத்தைக் கண்டு இதனைப் "பன்னாட்டு நகரம்" (Metropoli Town)என்று சிறப்பித் தார். இதனால் பல்வகை வெளிநாட்டாரும் வந்து போகும் பெரு வணிக நகரமாகவும் திகழ்ந்தது.

பட்டினமாக அமைவதற்கு முன்னர் சிந்தாற்றின் தெற்கே பேரூர் மக்கள் வாழிடத்தை ஒட்டி வெட்ட வெளி இருந்தது. வடக்கே இலந்தை மர மேட்டுநிலம் இருந்தது.

மீன்பிடி பரதவர் குப்பங்கள் கடற்கரையில் அமைவது தொடர்ந்தே வந்தது.

இவ்வாறாக நாகை, பட்டினநகர அமைப்பாக மூன்றாவது கட்ட வளர்ச்சிபெற்றது. இவ்வமைப்பே பின்னர் விரிவாக்கத்திற்கும் அடித்தளமாக அமைந்தது. இவ்வமைப்பிலும் நகர் நடுவே சிந்தாறு ஓடியதையும் நினைவிற் கொண்டே நகரமைப்பை அக்கண்ணால் காண வேண்டும்.

## தாலமி படத்தின்படி

இக்காலக்கட்டத்தில் நாகர்பட்டினத்திற்கு வந்த தாலமி உரோம அரச குலத்தவர். ஒரு நிலவியல் வல்லுநர். அவ்வல்லுநர் அறிவுடனே தாம் எழுதிய பயண நூலை நிலவியல் நூலாக உருவாக்கினார். அந்நூலில் தாம் கண்ட ஒவ்வொரு குறிப்பிடத்தக்க ஊரும் நகரும் உலகில் எப்பகுதியில் அமைந்தது என்பதை நிலப்படம் மூலம் காட்டியுள்ளார்.

நிலப்படத்தின் நடுக்கோட்டின் வடக்கிலும் தெற்கிலும், கிழக்கு மேற்காக வரையப்பட்ட அளவீட்டுக் கோடு 'நில நீளக்கோடு' (Longitude) எனப்படும். வடக்கு தெற்காக வரையப்பெற்ற கோடு (Lalitude)அளவீட்டுக்கோடு 'நில அகலக் கோடு' எனப்படும்.

இக்கோடுகளிட்டு அவர் அமைத்த உலக நிலப்படத்தில் நாகர்பட்டினம் நிலநீளக்கோடு 10.46°உம் நில அகலக்கோடு 79.53°உம் கூடும் இடத்தில் அமைந்துள்ளதாகக் குறித்துள்ளார். இக்கால நிலக்கோடுகள் சற்று வேறுபட்டுள்ளன. இந்நாளில் அந்த அளவு சற்று கூடுதல் கொள்கிறது. இதன்படி நிலநீளக்கோட்டில் 20° கூட்டிக்கொள்ள வேண்டும். அகலக்கோட்டில் 6° கூட்டிக்கொள்ள வேண்டும்.

துறைமுகமாக உருப்பெற்ற அந்நாள் நாகர்பட்டினம் உலக அளவில் குறிக்கப்பெறும் தகுதியும் பெற்றது!.

இத்தகுதிபெற்ற அமைப்பு நாகர்பட்டின நகரமைப்பின் மூன்றாவது கட்டமாகும். இதன் காலகட்டம் கி.பி. முதல் நூற்றாண்டி லிருந்து நான்காம் நூற்றாண்டு வரை எனலாம்.

## உ. உலகக் கண்ணாடி

"பொன்னி நாடெனும் கற்பகப் பூங்கொடி மலர்போல்

நன்மை சான்றது நாகபட் டினத்திரு நகரம்" (8) – என்று சேக்கிழார் சிறப்பித்துப் பாடும் நிலைமை நான்காவது கட்ட நாகை நகரமைப்பை எய்தியது.

இக்கட்ட நகரமைப்பு நீண்ட நெடுங்கால அளவு கொண்டது. கி.பி. 5ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரை 1100 ஆண்டுக்காலம் கொண்டது. சற்றுச் சற்றாக, பெரிதும் திட்டமிடப் படாமல் வளர்ச்சியாக இக்காலக்கட்டத்தில் நகர் விரிவாக்கங்கள் பெற்று வளர்ந்தது. இஃது ஒரு வரலாற்றுச் சிறப்பாகும்.

ஓரளவில் பட்டினமாக அமைந்த நாகர்பட்டினம் சோழநாடு என்னும் "கற்பகப் பூங்கொடியின் மலராக" மலர்ந்தது சிறப்பிற் குரியதே.

இவ்விரிவாக்கம் இரண்டு மாற்றங்களால் ஏற்பட்டது எனலாம். ஒன்று சிந்தாற்றின் ஓட்டப் பாதை மாற்றம்; மற்றொன்று சமயத்தால் நேர்ந்த மாற்றம்.

முன்னர் கண்டபடி ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிந்தாற்று மாற்றம் நேர்ந்தது. இது களப்பிரர் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்தது. மாற்றமாக ஆறு எப்புறம் திருப்பிவிடப்பெற்றது?

நகரின் மேற்கெல்லை நடுப்பகுதியில் இத்திருப்பம் அமைந்தது. முன்னர் குறித்த பிற்காலத்தில் தோன்றிய சிந்தாற்றுப் பிள்ளையார் கோயில் இடத்தில் கிழக்கே பாய்ந்த ஆறு தெற்கு நோக்கித் திருப்பப் பெற்றது. அவ்வோட்டம் நகரின் தென்மேற்கு எல்லைவரை அமைந்து அங்கிருந்து கிழக்குநோக்கித் திருப்பப் பெற்றது. இத்திருப்பம் அமைந்த தொடக்க இடத்தில் ஆற்றின் மேல்கரைப் பகுதியில் இடைக்காலத்தில் ஒரு குளம் அமைந்தது. அது திருப்பிவிடப்பெற்ற ஆற்றின் (ஊர்க்கு) அக்கரையில் அமைந்தது. இன்றும் அக்குளம் 'அக்கரைக்குளம்' எனப்படுகின்றது.

மேற்குறித்த தென்மேற்கு மூலையிலிருந்து கிழக்கே ஓட்டம் பெற்ற ஆறு முன்னர் ஓடிக்கொண்டிருந்த பெரு வாய்க்கால் போன்ற உப்பனாற்றுடன் இணைக்கப் பெற்றது. தொடர்ந்து கலவையான இரண்டும் ஒன்றாய்க் கடற்கரைக்குச் சற்று தொலைவு வரை ஓடி, பின் வடக்கு நோக்கித் திரும்பி, கடற்கரைச் சாய்வில் பாய்ந்து கடலில் கலந்தது. இஃதே இன்றுள்ள நிலையாகவும் உள்ளது. இவ்வாறு வடக்கே நோக்கித் திரும்பிய ஆற்றின் கிழக்குக் கரையில் கடலுக்கும் ஆற்றுக்கும் இடை அமைந்த வணிகப்பெட்டை 'அக்கரைப்பேட்டை' எனப்படுகின்றது.

## புராணக் காவிரி

இந்த நூற்றாண்டளவில்தான் வடமொழியில் தமிழ்நாட்டுக் கோயில்களுக்குத் தலபுராணங்கள் எழுந்தன. நிகழ்ச்சிகள் யாவும் தலபுராணங்களில் கடவுள் அருள் வழங்கலாகவே அமையும். கட்டுக்கோப்பான கற்பனைகள் இடம்பெறும். கடவுளுணர்வைப் பெருக்கி, அருள்பெறும் ஆர்வத்தை மூட்டும். இவற்றைத் தமிழில் பாடினோர் அவ்வவ்வூர் நிகழ்ச்சிகளையும் ஓரளவில் அமைப்புக் களையும் ஊடே காட்டுவர். இவ்வகையில் நாகைத் தலபுராணங்கள் சிந்தாறு மாற்றப்பட்டு ஓடியதற்குரிய செய்திகளைத் தருகின்றன. ஆனால் 'சிந்தாறு" என்று குறிக்காமல் காவிரி என்று குறித்தன.

நாகை, காரோண புராணத்தை எழுதிய பிள்ளையவர்கள் நகரப்படலத்தில் ஆறு ஓடியதாகக் காட்டவில்லை. ஆனால் மற்றோர்

இடத்தில் "விருத்த காவிரி" என்னும் ஆறு ஓடியதாகக் குறித்துள்ளார். அதுபற்றிய உரிய இடத்தில் காணலாம் என்றும் முன்னர் குறிக்கப் பெற்றதன்றோ? அவ்வுரிய இடம் இவ்விடமாகிறது. அப்புராணத் திலுள்ள 'கார்முகேசப்' படலத்தில்,

"நிருதி ஆசையிற்புகா

ஒரு விருத்த காவிரி" (9) என்று பாடியுள்ளார். 'நிருதி ஆசை' என்றால் தென்மேற்கு மூலைத்திசை. இதிற் புகுந்து பாய்ந்த 'விருத்த காவிரி' என்று பொருள். சிந்தாறு தெற்கு முகமாகத் திருப்பி விடப்பட்டதைக் கண்டோம். அந்த ஆறு தெற்கே பாய்ந்து தென்மேற் கெல்லையில் திரும்பிய இடத்தில் ஒரு கோயில் அமைந்தது. அது 'கார்முகேசம்' என்னும் சிவன்கோயில்.

இதைப்போன்றே பிள்ளையவர்கட்கு முன் வாழ்ந்த அழகு முத்துப் புலவர் (17 ஆம் நூற்றாண்டு) என்பார் நாகைக் குமரக் கடவுள் மேல் 'திறப்புகழ்' என்று ஒரு நூலைப் பாடியுள்ளார். அதில்,

"மிகுந்த காசியின் மாநதி போலவும்

வடக்கு மாதிர மேல்முக மாய்வரு

"விருத்த காவிரி சூழ் திருநாகை" (10) – என்று 'விருத்த காவிரி' குறிக்கப்படுகிறது. குடகு மலையில் தோன்றிய பொன்னிக் காவிரிக்கு முன்னர் தோன்றியது இக்காவிரி என்று புராணங்கள் கூறும். இது வடக்குத் திசையிலிருந்து (தெற்கே) பாய்ந்ததாகவும் குறித்துள்ளார்.

வடமொழிப் புராணத்தின்படி சிவபெருமான் அருளால் இக் காவிரி தோன்றியதாகும். அஃதும் இவ்வெல்லையிலேயே தோன்றிய தாகும். இதனால் குடகில் தோன்றிய பொன்னிக் காவிரிக்கும் முந்திப் பிறந்த 'மூத்த காவிரி' என்னும் கருத்தில் 'விருத்த காவிரி' எனப்பெற்றது.

மற்றுமொரு கதை உண்டு. நாகமன்னன் நாகையிலுள்ள நாகநாதர் கோயில் கடவுளிடம் நாகையில் வளம் பெருக ஆறு ஒன்று பாய வேண்டி நின்றான். கடவுள் நாகநாதர் அருளால் தோன்றிய இந்த ஆறு (11) விருத்த காவிரி எனப்பெற்றது. மற்றொன்றையும் இங்கே கொள்ள இடம் கிடைக்கின்றது. திருப்பிவிடத்தொடங்கியதி லிருந்து நகருக்குள் பாய்ந்த போது 'சிந்தாறு' என்று பெயர்

பெற்றிருந்ததை இப்புராணங்கள் திரும்பிய ஆற்றை விருத்த காவிரி யாக்கின.

புராணங்களைக் கொண்டு காலவிதிப்பு செய்ய இயலா தாகையால், "ஆறு ஒன்று விருத்த காவிரி என்னும் பெயர் பெற்று நகரின் மெற்கிலும் தெற்கிலுமாக நகரைச் சூழ்ந்து ஓடியது" என்னும் கருத்தைக் கொள்ளலாம்.

இந்த ஆற்று மாற்றத்தால் நகரின் உட்புறம் அகநகராக வளர்ச்சி பெற்றது. ஆறு ஓடிய வழி தெருக்களாகவும், கரைப்பகுதிகள் இல்லங்களாகவும், வளமனைகளாகவும் விரிவாக்கம் பெற்றன.

## சமயத்தால் ஆக்கம்

இனி சமயத்தால் நேர்ந்த மாற்றத்தால் நாகை நகரம் இன்றைய நிலைக்கு வளர்த்தது. சமயம் என்பது இங்கு இரு சமயங்களைக் கொண்டது. புத்த சமயத்தின் ஆக்கமும் தேக்கமும், சைவ சமயத்தின் ஆக்கம், வளர்ச்சி, விரிவு என்று சுருக்கிச் சொல்லும் அளவு சைவம் தன் பங்களிப்பை நல்கியது.

முதலில் புத்த சமய ஆக்கத்தைக் காண்போம்.

பதரி திட்டையாகத் தொடங்கிய புத்த சமயக்களம் காலப் போக்கில் நகரின் விரிவாலும், துறைமுகமானமையாலும் சற்று விரிவடைந்தது. புத்தத் துறவிகளுக்காக அசோகப் பெருமன்னன் எடுத்த ஆதி விகாரை பற்றி அறிந்தோம். பூம்புகாரில் இந்திர விகாரை ஏழும், அதற்கு முன் எடுத்த பல விகாரைகளும் புகார் அழிவால் சிதறுண்டன. அப்புத்தத் துறவிகள் பதிரி திட்டையை நாடினர். நாக நாட்டவர், யாவா நாட்டவர், பர்மியர் முதலிய கீழை நாட்டவரும், இலங்கையரும், சீனரும், வணிகம் கருதி நாகையை நாடி வந்தனர். இன்னோரர் அனைவரும் புத்த மதச் சார்பினர். எனவே, இங்கு வழிபடப் புத்த விகாரையை நாடினர். புதிய விகாரைகள் இலந்தை மரமிருந்த இடப்பகுதியில் தோன்றும் இன்றியமையாமை நேர்ந்தது. ஐந்தாம் நூற்றாண்டளவில் இங்கிருந்த சோழ காசபதேவர் ஓர் விகாரையை எழுப்பினார். அது 'நாகானன்' விகாரை எனப்பெற்றது. 'நாகானனம்' என்பது நாகர் இட்ட பெயர். இவ்விகாரைக்கு நாகர் உதவி மிகுதியாக இருந்ததுபோலும். அன்றி நாகர் வழிபாட்டிற்குரியதாகக் கொள்ளப்பட எழுப்பப்பெற்றது போலும். இக்கால ஆட்சியர் களப்பிரரும் புத்தச் சார்பினராயினர்.

அன்னார் துணையும் கிட்டியிருக்கும். இவ்வகைப் பெருக்கத்தால் நாகை நகரம் ஒரு புத்த வழிபாட்டுத் திருவிடமாகத் திகழாலாயிற்று.

பதரி திட்டையின் மேற்குப் பகுதியிலும் வடக்கிலும் புத்தக்களம் பரந்தது. மேற்குப் பகுதியில் ஒரு கோபுரம் எழுந்தது. இவ்வாறு ஒரு விரிவாக்கம் நேர்ந்தது. இது பழைய வெளிக்கோபுரம்.

ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிவரை நாகை நகரத்தில் சைவ சமயம் 'இடம் கொண்டிருந்தது' என்னும் அளவிற்கே அமைவு பெற்றிருந்தது, பூம்புகாரில் பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான் கோயிலும் பிற கடவுளரின் – தெய்வங்களின் கோட்டங்களும் இருந்தன. அதன் அழிவிற்குப் பின்னர் அங்கிருந்த சைவ அடியாரும், அன்பரும் நாகையில் குடிகொண்டு சைவக் கோயில்களை எழுப்ப முனைந்திருப்பர்.

சைவக் கோயில்களின் தோற்றம் பற்றிய பொதுக்கருத்தை இங்குத் தரவேண்டும். அப்படித் தருவது இன்றியமையாததுமாகும்.

சைவ சமயம் தமிழ் மண்ணின் உரிமைச் சமயம். தாய்மையும், உண்மையும் பொதிந்த வழிபாட்டு வழி கொண்டது. அனைத்து வகை இம்மண் மக்களாலும் கொள்ளப்படும் அளவு தமிழ்மொழி கொண்ட சமயம். குறிப்பாகச் சொன்னால் மக்கள் சமயம். இதன் இறையுருவமும் போற்றுதலும் தமிழ் மரபின் அடித்தளத்தில் எழுந்தவை.

## பள்ளிப்படையே கோயில்

தமிழர் போரில் இறந்த வீரர்க்கும், சான்றோர்க்கும் அவர் அடக்கம் செய்யப்பெற்ற இடத்தில் நினைவாகக் கல் நட்டனர். அது நடுகல் எனப்படும். அதற்கு வீரரின் இல்லாள், உறவினர், சான்றோர், அணுக்கர், அயலார் வணக்கம் செலுத்தி வழிபாடும் செய்யத் தொடங்கினர்.

"கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே" (12) என்னும்

அடிகளும் இதனைக் காட்டும். அரசர் இறந்து அடக்கம் செய்யப்பெற்ற களமும் நடுகல் களமாயிற்று. அரசர் நடுகல் இடம் அவரின் நினைவுச் சின்னமாகக் கட்டடம் எழுப்பப்பெற்று இது 'பள்ளிப்படை' எனப்பெற்றது. இறந்தவர் நீடு துயில் கொள்ளும் படுக்கை (பள்ளி) உண்டான (பட்ட) இடம் என்னும் பொருள் கொண்டது

பள்ளிப்படை. இவ்வாறு நேர்ந்த பள்ளிப்படைகளே பிற்காலத்தில் பெருங்கோயில்களாயின. இன்றும் இறந்தவர்க்கு 16ஆம் நாள் ஆற்றப்படும் நீர்க்கடன் நிகழ்ச்சி நீர்நிலைக் கரையில் நிகழும். அக்கரை நிகழ்ச்சி நாற்கோணத்தில் மண்ணைக் கோலி மதிற்சுவர் போன்று அமைத்து நான்குபுறமும் வாயில் அமைப்பர். உள்ளே நான்கு மூலையிலும் சிறு தெய்வப் பலியிடம் கட்டமாக அமைக்கப் பெறும். மையத்தில் தீக்குழி அமைத்து இறந்தவர்க்கு ஈமக்கடன் போன்ற நிகழ்ச்சி நிகழும். இதற்குமுன் அவர்க்கு நாட்டுவதற்குக் கல் கொணரப்படும். இன்றும் கல்நாட்டிக் கருமம் செய்தல் என்பர். இவ்வமைப்பும் பள்ளிப்படையின் மறுபதிப்பே யாகும். இவ்வாறு அமைத்த பள்ளிப் படையில் எழுந்த நடுகல்லே பின்னர் அருவுருவ மாக (இலிங்கமாக) உருப்பெற்றது. இறையுணர்வை மட்டும் அடித்தளமாகக் கொள்ளாமல் மக்கள் வரலாற்றுப் போக்கையும் எண்ணினால் இவ்வமைப்பின் உண்மை விளங்கும்.

இவ்வாறான அருவுருவமாம் இலிங்க வழிபாடே சைவ வழிபாடாக வளர்ந்தது. காலவளர்ச்சியில் நாகையிலும் இவ்வமைப்புச் சிறு கோயில்கள் உருவாயின. நகரின் நடுப்பகுதியில் தோன்றிய சிவன்கோயில் முன் கண்ட சிந்தாற்றின் வடக்குக் கரைப்பகுதியில் உண்டாயிற்று. அஃது இன்றும் 'நடுவர் கோயி'லாக உள்ளது.

இதுபோன்று கோயில் தொடக்கம் வெட்டவெளியில் மரத்தடியில் நேர்ந்தது. நாகையில் பதரி திட்டைக்குத் தெற்கில் ஒரு பெரும் வெட்ட வெளி இருந்ததை அறிந்தோம். அவ்வெட்டவெளியில் ஓர் அருவுருவத் திருஉடல் அமைந்த சிறு கோயில் உருவாயிற்று. அது சைவக் கோயில்.

### பாசுபதத்தார் வருகை

இப்போது ஆறாம் நூற்றாண்டில் புகுகின்றோம். சைவத்தில் ஒரு சிறு சைவமாற்றம் நேர்ந்தது. சைவசமய ஏணிப்படிகள் (சோபானம்) நான்கு. அவற்றுள் அகப்புறச் சைவம் ஒன்று. அதன் ஆறுபிரிவில் பாசுபதத்தர் ஒரு குழுவினர். அதனைத் தோற்றுவித்தவர் வகுளீசர் என்பார். இவர் மராத்திய மாநிலத்துப் பம்பாய்ப் பகுதியில் 'கார்வான்' எனப்படும் ஊரில் தோன்றியவர். கார்வான் கரோகண் என்றும் கரோகணம் என்றும் வழங்கப்பெறும். இக்கரோணர் இலிங்க வழிபாடு உடையவர். வடபுலத்தவராகிய இச்சைவர் தென்புலத்தி

லிருந்து எங்கும் பரவிய சைவத்தின் பிள்ளைகளேயாவர். இக்காரோணச் சைவர் தென்னாட்டில் புகுந்து சைவ இலிங்க வழிபாடுள்ள சில சிறு கோயில்களை விரிவுபடுத்தி விமானங்கள் உருவாக்கி எழுப்பினர். அவ்வாறு அன்னார் எழுப்பிய கோயில்கள் 'காரோணம்' எனப்பெற்றன. நாகை வெட்டவெளியில் அமைந்த மரத்தடிக் கோயில் காரோணம் ஆயிற்று.

இக்காரோணர் கோயிலின் அமைப்பால் சைவம் இங்கு எழுச்சியுற்றது. இவ்வெழுச்சியால் ஒரு மாற்றம் அடிவேர் விடத் தொடங்கியது. அதுதான் புத்தமதத்திற்கு வெடிவேராகத் தோன்றியது.

இருப்பினும் இந்த ஆறாம் நூற்றாண்டளவிலும் புத்தம் இங்கு போற்றப்பெற்றது. காரணம் புத்தச் சார்புடைய வெளிநாட்டார் தொடர்பாகும்.

தோன்றிய காரோணம் பையப்பைய மன்னர்களாலும் மக்களாலும் திருச்சுற்று, மடைப்பள்ளி, மடைவளாகம் என்றெல்லாம் வளர்ந்தது. வளர்ந்து சைவ நகரமாயிற்று. ஏழாம் நூற்றாண் டளவில் நாயக்க மன்னர்களது துணையாலும் மக்கள் பற்றாலும் காரோணக் கோயில் வளம் பெற்றது. நகரில் ஆங்காங்கே சைவக்கோயில்கள் சிற்றளவில் எழுந்தன.

திருமால் அடியார்களால் அச்சமயக் கோயில் உருவாயிற்று. கோயிலின் முன்னே குளம் அமைந்தது. தமிழ்நாடெங்கும் எழுந்த கோயில் நகரங்களில் நாகை குறிப்பிடத்தக்க சைவ நகரமாயிற்று.

தமிழகத்தில் அமைந்த சைவக்கோயில்களைக் கண்டு வழிபட்டுப் பதிகங்கள் பாடிய திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் நாகைக்கு வந்து பதிகம் பாடினர். இவ்விருவரும் நாகையை நேரில் கண்டு பாடியோர். இவர்தம் பாடல்களில் நகர வண்ணனையும் இடம் பெற்றிருக்கும். செய்யுளமைப்பு, அதன் இசையோட்டம் இவற்றில் சில அடைமொழிகள் அமைந்தாலும் உண்மை பொதிந்திருக்கும்.

**"கடிகமழ் சோலை சுலவு கடல் நாகை"**

**"கார்மலி சோலை சுலவு கடல் நாகை"** என அப்பகுதியில் சோலை சூழ்ந்த ஊராகப் பாடியுள்ளார்.

இந்நாகையில் நாகை நகரின் அமைப்பைத் தமிழ்நாட்டு நகரமைப்புப் பாங்கறிந்து காணவேண்டும்.

## சோலை ஊரமைப்பு

புதுமைக்கால அறிவார்ந்த நகரமைப்புக் கருத்துக்களில் 'சோலை ஊரமைப்பு' முதன்மையானது; மூலமானது. இது தமிழ் மண்ணில் முற்காலச் சான்றோரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. திவாகர நிகண்டு என்னும் நூல் இச் சோலை ஊரமைப்பை எடுத்து *மொழிந்துள்ளது:*

"சுரந்த நீரும் வயலும் சூழ்ந்த ஊர்

கிராம மாகக் கிளக்கப் படுமே" (13) – இந்நூல் 11 ஆம் *நூற்றாண்டு நூலாயினும் சொற்களஞ்சியமாகிய* இந்நூலில் தொன்மைக் கால வழக்குகளும் நடப்புகளுமே சுட்டப்படும். இவ்வூரமைப்பை மக்கள் தொகையாலும் வரையறுத்தனர்.

"நூறு குடும்பங்களைக் கொண்டது சிற்றூர்

ஐநூறு குடும்பங்களைக் கொண்டது பேரூர்" (14) – என்று சூடாமணி நிகண்டு ஓர் மக்கள்தொகை எல்லை கூறியுள்ளது.

இவ்வகையான சிற்றூர், பேரூர் நிலையை நாகை நகரம் முன் காலக்கட்டங்களிலேயே கண்டது. இவற்றில் வளர்ச்சியாக நகரம் *உருவாயிற்று.*

"வடிவுடை இராசதானி, மணிமதிற் கோபுரங்கள்

புடைபடும் அகழாற் சூழ்ந்த புரம், புரி

நகரமும் பேர்" (15) – என்னும் சூடாமணி நிகண்டுப் பாடல் 'நகரம்' என்னும் பெயர் பெறுவதற்குரிய அமைப்பைக் கூறியுள்ளது.

## தாமரை நகரமைப்பு

இவ்வகை நகரமைப்பை நம் சங்க காலப் பாடல்கள் அறிவித்துள்ளன. தமிழகத்து முற்கால இடைக்கால நகர்களில் கச்சி என்னும் 'காஞ்சிபுரமும்' மதுரை மாநகரமும் உள்ளது உள்ளபடி விளக்கப் பெற்றுள்ளன.

கச்சி சிறந்த நகரம் என்னும் உண்மையை அழகுமுத்துப்புலவர் "எத்தனை நகர் ஒரு காஞ்சியாமோ" (16) என்று பாடினார். இத்தகைய காஞ்சியின் நகரமைப்பைக் காட்டும் கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

"நீலநிற உடம்பையுடைய திருமாலின்

கொப்பூழில் (உந்தியில்) தோன்றிய தாமரையின்

பொகுட்டைப் (மலரின் மையத்தில் மேடை போன்று அமைந்தது பொகுட்டு) போலத் தோன்றியது காஞ்சி" (17) என்றார்.

மதுரையைப் பாடும் நல்லழிசியார் என்னும் சங்கப்புலவர்,

"திருமாலின் கொப்பூழில் மலர்ந்த தாமரைப்பூப்

போன்றது சீர்மிக்க மதுரை;

அத்தாமரைப் பூவின் மையத்திலுள்ள

பொகுட்டைப் போன்றது சிவனார் கோயில்;

பூ இதழ்களின் வரிசைகள் போன்றன தெருக்கள்;

பூவின் தாது (மகரந்தம்) என்னும் மணத்தூள்

போன்றவர் நகரத்துக் குடிமக்கள்;

அத்தாதை உண்ணும் வண்டுகளைப்

போன்றவர் பரிசில் பெறுவோர்" (18) என்றார். கொங்கு வேளிரும் தம் பெருங்கதையில் 'இராசகிரி' என்னும் நகரை (19) இவ்வாறே விவரித்தார்.

இவ்வகை நகரமைப்பை ஆரப்பா, மெகஞ்சதரோ நகரங்களும் திராவிடக் கலை அடையாளங்களாகக் கொண்ட நகரங்கள். இவற்றிற்கும் முந்தையத் தமிழ் நாட்டு நகரங்கள் இவ்வமைப்பைக் கொண்டிருந்தன.

இதற்கு இலக்கியச் சான்றுகளாக மூன்றைக் காட்ட வேண்டும். முன்னிரண்டும் நாட்டு நடப்பின் எழுத்துப் பதிவுகள்; மூன்றாவது பெருங்கதை, கற்பனைக் கதையைக் கொண்டதென்றாலும், நகர வண்ணனை நாட்டு நடப்பை முன்னிரண்டு அறிவித்ததை வண்ணித்ததாகும்; கற்பனை அன்று; முன்னிரண்டின் கருத்தையும் மூலப் படச்சுருளாகக் கொண்டு எடுக்கப்பெற்ற படப் பதிவாகும்.

எனவே பலமுறையில் தமிழ்நாட்டு நகரமைப்பை உறுதி யாக்கவே மூன்று சான்றுகள் அமையும்.

மேலை நாட்டு நகரங்கள் உலகில் ஈடு இணையற்ற கட்டடங்களால் சிறப்புற்றிருந்தாலும் தமிழ் மண்ணில் அமைந்த 'சோலை' ஊரமைப்பு தொடக்கமாக நகரமைப்பு தொடர்ச்சியாக இவை முறையான அமைப்புக் கொண்டன அல்ல. இஃது ஒரு

முறையே. இதனை ஈ.பி ஆவெல் (E.B. Hawel) என்னும் நகரமைப்பு அறிஞர்,

> "இந்தியச் சோலைச் சிற்றூர் அமைப்புத் திட்டத்தை அடிப் படையாகக் கொண்ட சோலை நகர அமைப்பை ஐரோப்பிய அறிவியலார் ஆராய்ந்து முன்னேற்றமடையவில்லை" என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐரோப்பியரின் இக்குறைக்குக் காரணம் அங்கு கோயிலை மையமாகக் கொண்டு நகர் அமையாமையேயாகும்.

நாகையில் கரோணராம் பாசுபதத்தாரால் எழுந்த கோயிலைச் சுற்றி, பின்னர், ஆட்சி கொண்ட சோழரும், நாயக்கரும் நகர்ச் செல்வரும் திருச்சுற்றுகளையும் ஆகம முறைப்படிக் கருவறை, மேற்கூரையாம் விமானம், பல்வகை முறையான மண்டபங்கள், வாயில் கோபுர அடித்தளம் முதலியவற்றையும் பெருக்கினர். உள்ளே ஒரு குளமும் அமைந்தது.

வெளிச்சுற்றின் புறத்தே கோயில் பணியாளரும் பார்ப்பனரும் பூசெய்ப் பணிபுரியும் குருக்கள்களும், பிற பார்ப்பனரும் அமைந்த குடியிருப்புகள் அமைந்தன. இவற்றிற்கும் புறத்தே நான்கு பெருவீதிகள் அமைந்து அவ்வற்றில் செல்வர், வணிகர், கலைஞர், கற்றோர் வளமனைகளும், மாளிகைகளும் எழுந்தன. இவ்வீதிகள் பிற்காலத்தே அம்மையின் பெயரால் நீலா கிழக்கு தெற்கு, மேற்கு, வடக்கு எனப் பெயர் கொண்டன.

நாகையை நேரில் கண்டு பாடிய திருஞானசம்பந்தர்,

"மண் ஆர் முழவு ஓவா மாடம் நெடுவீதிக்
கண்ஆர் கடல் நாகை" என்றும்; சுந்தரர்,

"காண்பினிய மணிமாடம் நிறைந்த நெடுவீதி
கடல் நாகை" என்றும் பாடியுள்ளமை இங்கு கருதத்தக்கவை.

மையக் கரோணர் கோயில் நகரமைப்பிற் கண்டவாறு தாமரைப் பொகுட்டாகவும் மற்றவை மற்ற அமைப்புகளாகவும் அமைய நாகை ஒரு நிறை நகரமாகியது.

### சீனக் கோபுரம்

இக்காலத்தில் புத்த வளாகமும் ஆக்கம் கொண்டது. முன்னர் சமயங்களின் துணைக்காக அமைந்த ஒளிதரும் கோபுரம்

பழுதுற்றதால் புதுக்கோபுரம் வேண்டிய சூழல் நேர்ந்தது போலும். சீனர்களின் வருகை பெருகியதால் அக்காலச் சீன மன்னன் நாகையில் நாட்டம் வைத்தான். அவனது சீனமொழிக் கல்வெட் டொன்று இங்கு இருந்ததை தாவோ – சி –லியோ என்னும் சீனநூல் கூறுகிறது. இம்மன்னனும் இரண்டாம் நரசிம்ம வர்மனாம் பல்லவ மன்னனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். சீன மன்னன் வேண்டியதற்கு இணங்கி நரசிம்மவர்மன் புதிதாக ஒரு கோபுரத்தை எழுப்பி வழங்கினான். இது அந்நகரின் வெளியில் புத்த வளாகத் தில் எழுந்ததால் 'வெளிக்கோபுரம்' எனப்பட்டது. முன்னொரு கோபுரம் இருந்தமையால் இது 'புது வெளிக்கோபுரம்' எனப் பெயர் பெற்றது. இது ஐந்தடுக்கு மாடங்களைக் கொண்டது. இதனைச் சீன பகோடா (Chinese Pagoda) என்றும் வழங்கினர். ஒல்லாந்தர் உடன்படிக்கைச் செப்பேட்டில் இப்பெயரும் குறிக்கப்பட்டுள்ளது.

படேவியா வெள்ளிப்பட்டயம் இதனை,

"நாகப்பட்டணத்து ....................................

புது வெளிக்கோபுரத்திற்கு மேல்புறமாய் இருக்கிற தோட்டமும்"(20) என்று குறிக்கிறது.

இப்புது வெளிக்கோபுர அமைப்புடன் நாகை நகரம் ஒரு குறிப்பிடத்தக்க தோட்டத்தையும் பெற்றிருந்தது. உடன்படிக்கையில் குறிப்பிடப்படுவதால் இத்தோட்டம் நல்ல வருவாய் தருகிற மர இனங்களையும் பசுமைத் தாவரங்களையும் கொண்டமைந்ததாகக் கொள்ள வேண்டும். இதன் அண்மையில் கிழக்கே நிலவறை கொண்ட ஒரு கட்டடம் எழுந்தது. இக்கோபுர அமைப்பு நாகைக்கு ஒரு சிறப்பான அமைப்பாயிற்று. புத்தச் சின்னங்கள் யாவும் சிதைவுற்றும், சிதைக்கப்பட்டும் அழிந்த காலத்திலும் இப்புது வெளிக் கோபுரம் ஒன்றே ஒரு தடயமாக இருந்தது.

## நகர் வகை மூன்று

இவை அனைத்தையும் ஒன்று கூட்டி நோக்கினால் பிற்காலத்தே,

"................... பயில் புற நகரம் என்றும்

நிகர் இடை நகரம் என்றும் நிலவும் உள் நகரம் என்றும்

புகரிலோர் மூன்று உண்டு" (21) என்று பிள்ளையவர்கள் பாடுவதற்கிணங்க மூவகை அமைப்புகளை நாகை கொண்டது.

துறைமுகத்தையும் காரோணர் கோயிலின் நாற்புறத்தையும் கொண்ட நகர்ப்பகுதி 'உள்நகர்' என்னும் அகநகராயிற்று.

தெற்கில் விருத்த காவிரி எனப்பெற்ற ஆற்றின் வெளிக் கரைப்பகுதியும் மேற்கில் அமைந்த பகுதியும் வடக்கில் காடவர் கோன்பாடி, நாகூர் ஆகியவை அமைந்த பகுதிகளும் 'புறநகர்' ஆயிற்று.

வடக்குக் கோட்டை வாயிலுக்கும் காடவர்கோன்பாடிக்கும் இடையில் அமைந்த புத்தவளாகம், வெளிப்பாளையம் பகுதி 'இடைநக'ராயிற்று.

உள்நகராம் அந்நகரில் சிவன் கோயில்கள் பல எழுந்து அவற்றில் ஒவ்வொன்றும் நாற்புறமும் வீதிகள் அமையப்பெற்றது. இக்காலத்தில் நகரின் தென்மேற்குப் பகுதியில் பெருமாள் கோயில் எழுந்து அதற்கும் சுற்று வீதிகள் அமைந்தன. இவ்வகைப் பெருக்கத்தால் சேக்கிழார் பாடியதற்கிணங்க,

"பொற்சுடர் மாளிகைகளும், மகளிர் பந்தாடு தெற்றிகளும் 'திரைபோல் கரிபரித்தொகை மணிதுகில் சொரியும்" கப்பல்களை யுடைய துறைமுகமும் அமைந்து திருமகட்கு வாழ் திருவிடமாகத் (22) திகழ்ந்தது.

இடைநகராகிய வெளிப்பாளையத்திலும் சிவன் கோயில், சிறு பெருமாள் கோயில் அமைந்து சுற்றுவீதிகள் உரிய அணிகளுடன் நேர்ந்தன.

புறநகரம் நாகர் ஊர் — நாகூரில் பொதுமக்கள் வாழ்ந்ததுடன் மரக்கலம் செலுத்தும் அலுவலர்களாக அமைந்த மரக்கலவரையர்கள் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் இடம் பெற்றுக் குடியிருப்புகளை அமைத்து வாழத் தொடங்கினர். மேற்பகுதியில் தமிழ்ப்பெருமக்கள் வாழ்விடம் கொண்டனர்.

இனிக் குறிப்பிடத்தக்க நகர்ச் சிறப்பாக, சுந்தரசோழன், இராசராச சோழன், இராசேந்திரசோழன் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் அமைந்தவற்றைக் குறிக்க வேண்டும். இராசராசன் காலத்தில் சோழநாடு நில அளவை செய்யப்பட்டபோது நாகையும் அவ்வகையில் இடம் கொண்டது.

கோயிலுக்குப் பல அறக்கட்டளைகளை நிறுவிச் செப்பேட்டிலும் கல்வெட்டிலும் பதிந்தனர். இவ்வறக்கொடைகளில்

குறிப்பிடத்தக்கது சூளாமணி விகாரை அறக்கட்டளையாகிய 'ஆனைமங்கலம் செப்பேடு' காட்டுவதாகும்.

## சாவகர்க்கு விகாரை

இச்செப்பேடு நாகையில் எழுப்பப்பெற சூளாமணி விகாரைக்கு மன்னன் இராசராசன் பள்ளிச் சந்தமாக[1] ஆனைமங்கலம் என்ற சிற்றூரின் பல்வகை வருவாய் வழங்கிய அறக்கட்டளையின் பதிவு ஆகும். இது பதினோராம் நூற்றாண்டில் இராசராசனின் ஆட்சி ஆண்டு 21 இல் அதாவது கி.பி. 1006இல் நிகழ்ந்தது.

இக்காலத்திற்கு (1993) 1036 ஆண்டுகளுக்கு முன் அசோகப் பெருமன்னன் நாகையில் ஆதிவிகாரை கட்டினான். அஃது ஏறத்தாழ 700 ஆண்டுகள் பயன்பட்டது. பின் சிதையாமல் என்ன ஆகும்? அதனால் ஐந்தாம் நூற்றாண்டில் நாகானன விகாரை எழுந்தது. அது 600 ஆண்டுகளாகப் பயன்பட்டது. சிதையாமல் என்ன ஆகும்? எனவே புதிதாக ஒரு விகாரை வேண்டும் சூழல் நேர்வது இயல்பே.

கடார நாட்டு மன்னன் சைலேந்திர குலத்தினனான சிரீ விசய சூளாமணி வர்மன் நாகையில் வணிகத் தொடர்பு கொண்டிருந்தான். அவன் புது புத்த விகாரை ஒன்றை எழுப்ப விரும்பினான். இராசராசப் பெருமன்னனின் துணையும் கிடைத்தது. பணிகளைத் தொடங்கினான். இடையில் அவன் புகழுடம்பெய்தவே அவன் மகன் சிரீவிசய விசயோத்துங்க வர்மன் அப்பணியைத் தொடர்ந்து நிறைவேற்றி அதற்குத் தன் தந்தை நினைவாகச் 'சூளாமணி விகாரை' என்று பெயரிட்டான்.

## உலகத் திலகம்

இதன் அமைப்பையும் சிறப்பையும் ஆனைமங்கலம் செப்பேடு இவ்வாறு காட்டுகிறது:

> **"சத்திரிய சிகாமணி வளநாட்டின் பட்டினக் கூற்றத்தில்**
> **உலகத்திற்குத் திலகம் போன்ற நாகப்பட்டினத்தில் தன்**
> **உயரத்திற்கு பொன் மலையையும் சிறியதாகக் காட்டி**
> **தன்அழகினால் வியப்படையச்செய்கின்ற சூளாமணி**
> **விகாரை".**

---

1. *பள்ளிச் சந்தம்* = புத்த சமணப் பள்ளிகளுக்கு வரியில்லாத நிலக்கொடையாக மன்னரால் வழங்கப்படுவது.

இவ்விகாரை அமைப்பால் நாகபட்டினம் ஒரு தனிச்சிறப்பை இணைத்துக் கொண்டது. நகரத்தே ஒரு தனி அழகாக இவ்விகாரை அமைந்தது. அத்துடன் இவ்விகாரையின் இணைப்பாக இராசேந் திரனால் கட்டப்பெற்ற இரண்டு பள்ளிகள் (பயிலும், துயிலும் இடம்) இராசராசப் பெரும்பள்ளி, இராசேந்திரப் பெரும்பள்ளிகள் சிறப்பைப் பெருக்கின.

முதற் குலோத்துங்கன் காலத்தில் மீண்டும் உறுதி செய்து பதியப்பெற்ற செப்பேடாகிய ஆனைமங்கலம் சிறிய செப்பேட்டில் சூளாமணி விகாரை அமைந்த புத்த வளாகப் பரப்பின் நான்கெல்லைகள் வரையறுத்துக் குறிக்கப்பட்டுள்ளன.

அன்றைய வளாகம் இன்றையப் படத்தில்

அதன்படி வளாகப் பரப்பு இன்றைய அமைப்புடன்[1] கீழ்வரு மாறு அமையும். ஆனைமங்கலம் சிறிய செப்பேட்டில் உள்ள தொடரும் அதன் பொருள் விளக்கமாக இன்றைய நிலைப் பார்வையும் வருகின்றன. கிழக்கெல்லையிலிருந்து தொடங்குகிறது.

செப். தொடர்: கிழக்கெல்லை:

."கீழ்பாற்கெல்லை கடற்கரையில் மணற்குன்றுற் பட மேற்கும்"

பொருள்: வங்கக் கடற்கரையில் வடக்குப் பகுதியில் உள்ள நம்பியார் நகர் மணல்மேடு. அதனைத் தொடர்ந்து தெற்கில் திட்டுத்திட்டாக இன்றைய ஆரிய நாட்டுச் செட்டித்தெருப் பகுதியின் வடவெல்லை வரை உள்ள மணல்மேடு வரை நீண்டுள்ள கடற்கரைப் பகுதியின் மேற்கில் புத்தவளாகம் தொடங்கியது.

செப். தொடர்: தெற்கெல்லை:

"தென்பாற்கெல்லை புகையுணிக் கிணற்றுக்கு வடக்கும், இதன் மேற்கு திரு வீரட்டானமுடைய[2] மகாதேவர் நிலத்துக்கு வடக்கும் இதன்மேற்கு பரவைக் குளத்து மாராயன் கல்லுவித்த குளத்தின் வடகரை மேற்கு காரைக்காறப் பெருவழிவுற வடக்கும்".

பொருள்: தெற்கு எல்லையாக 3 பகுதிகள் குறிக்கப்பட்டுள்ளன. ஒன்று முன்கண்ட கடற்கரை எல்லையிலிருந்து மேற்காக வரும் கிறித்துவர் குடியிருப்புத் தெரு தொடரும் மேலைக்கோட்டை வாயில்

---

1. புகையுணிக்கிணறு – "இது புகை உண்ணிக்" கிணறு ஆகும். இக்கிணற்றை அக்காலத்தில் ஆழப்படுத்தியபோது புகை – அதாவது இக்காலத்தில் நாகைப் பகுதியில் நிலத்தடியில் கிடைக்கும் எரிவளி (Gas) வெளிவந்திருக்கிறது. இஃதே 'புகை' எனப்பெற்றது. இப் 'புகையை இக்கிணற்றில் மறு பகுதியே நிலத்துக்குள் ஈர்த் ருக்கலாம். இதனால் 'புகை உண்ணிக் கிணறு' எனப்பெற்றது ாலும். இப்போது இக்கிணறு அறியக்கூடவில்லை. இப்புகை ாரணமாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

2. 'திருவீரட்டானம்' என்பது எட்டு வகை வீரங்களை வெளிப்படுத்திய சிவபெருமானின் திருவிடம். நாகைக் காரோணர் அருளிச் செயல்களில் இக்கல்வெட்டில் ஒன்றும் இல்லை. அட்ட வீரட்டானத் திருக்கோயில்கள் ஒன்று அண்மையிலுள்ள திருக் குறுக்கைக் கோயில். இது கோயிலுக்கு அறக்கட்டளையாக இந்த நாகைப்பகுதி வழங்கப்பட்டிருக்கலாம்.

(அறிஞர் அண்ணா சிலைப்பகுதி) அதனைத் தொடரும் மேற்கில் ஒரு கிணறு 'புகையுண்ணிக்கிணறு' என்ற பெயரில் இருந்தது. இரண்டு, அதனைத் தொடர்ந்து மேற்காக இருந்த நிலப்பகுதி வெளியூர்ச் சிவன் கோவிலுக்குரியது. மூன்று, 'பரவைக்குள மாராயன்' என்பவன் தோண்டிய (கல்லுவித்த) தாக (இப்போது தூய அந்தோனியார் மேனிலைப்பள்ளி வளாகத்தில்) உள்ள குளத்தின் வடகரையில் துவங்கி, சற்று தொலைவு மேற்காகச் செல்லுவதாகிய – இன்றைய சுடுகாட்டுக்குச் செல்லும் தெருவாகும். இதன் வடக்கு புத்தவளாகம்.

**செப். தொடர்: வடக்கெல்லை:**

"மேற்பாற்கெல்லை காரைக்காற் பெருவழிக்குக் கிழக்கும்"

**பொருள்:** மேனிலைப்பள்ளிக் குளத்து வடகரையில் துவங்கிய காரைக்கால் சாலை சற்றுத் தொலைவில் வடக்கே திரும்பி நீள்கிறது. இஃது இப்போது அறமன்றத்துப் பின்புறச் சுற்றுச் சுவரை ஒட்டியுள்ள தெரு. இது மேற்கெல்லை. இதன் கிழக்கு புத்தவளாகம்.

**செப். தொடர்: மேற்கெல்லை:**

"வடபாற்கெல்லை சோழகுலவல்லி பட்டணத்து நிலம் வடகாடம் பாடி எல்லைக்குத் தெற்கும்"

**பொருள்:** வெளிப்பாளையத்தின் வடக்கிலுள்ள காடவர் கோன்பாடியின் தெற்குப்பகுதியின் எல்லையிலிருந்த வெளிப் பாளையத்திற்குரிய நிலம், வடக்கெல்லை, இதன் தெற்கு புத்த வளாகம்.

**செப். தொடர்:** "ஆக நான்கெல்லைக்குட்பட்ட நிலம் முப்பத் தொன்றே முக்காலே இரண்டுமா முந்திரிகை".

**பொருள்:** இவை நான்கு எல்லைகளுக்கடங்கிய நிலப்பகுதியில் விரிவாக அமைந்தது, சூளாமணி விகாரை அமைந்த புத்த வளாகம். இதன் பரப்பளவை இக்கால மனை அளவில் (60 x 40 = 2400 ச. அடி) சொன்னால் ஏறத்தாழ 4000 மனைகளைக் கொண்ட தாகும். இவ்விருவகை அமைப்பையும் காட்டும் வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது.

# ஊ. சோழகுலவல்லி பட்டினம்

இவ்வாறு பெருவளாகமாகத் தனியொரு பேரூர் போன்று இடமகன்றிருந்தாலும் முதல் குலோத்துங்க சோழன் (1070 – 1118) காலத்தில் இவ்வளாகத்தின் வடபகுதியிலிருந்த வெட்ட வெளியில் சில குடியேற்றங்கள் அமைந்தன. அரசருக்குப் போரில் உதவப் பயிற்சிபெற்ற பாளையக்காரர்கள் இங்கு குடியேற்றப்பட்டனர். அதனால், இப்பகுதி 'வெளிப்பாளையம்' எனப்பெற்றது. வெளிப் பாளையம் விரிவடைந்தது. கிழக்குக் கடற்கரையில் படகுத் துறைகள் அமைந்தன. முதற் குலோத்துங்கன் இப்பகுதியையும் நாகபட்டினம் என்னும் பட்டினக் கூற்றத்துள் அடங்கிய ஒரு பட்டினப்பகுதி யாக்கினான். இதற்குத் தன் பட்டத்தரசி பெயரால் "சோழகுலவல்லி பட்டினம்" என்று பெயரிட்டான். இப்பதிவையும் செப்பேடும், கல்வெட்டும் அறிவிக்கின்றன. "பட்டினக் கூற்றத்துச் சோழகுலவல்லி பட்டினம்" என்றுள்ளதால், இது வெளிப்பாளையம் உள்ளிட்ட புத்தவளாகம் பகுதியைக் குறிக்கும் நாகபட்டினத்தை அன்று.

தொடர்ந்து இந்தப் புத்த வளாகப் பகுதியிலேயே சைவ சமயத்தாரும் இடம் பெற்றனர். சிவன் கோயிலும் அமைந்து நாளடைவில் இக்கோயிலும் சுற்றுப்புற நான்கு தெருக்களையும் பெற்றது. வைணவக் கோயிலும் அமைந்தது. புத்த வளாகம் அமுங்கத் தொடங்கியது.

வடக்கில் நாகூரில் மரக்கல அரையராக இடம் பெற்ற முகமதியர் குடியிருப்புகள் பெருகின. கடலில் படகுத் துறையும் அமைந்தது. முகமதியக் குடியிருப்புகள் கிழக்குக் கரைப்பகுதியிலேயே அமைந்தன. முன்னே நாகையில் தொடங்கிய காரைக்கால் சாலை நாகூர் வழியே சென்றது. அச்சாலையில் கிழக்குப் பகுதியில் முகமதியர் இடம் பெற்றது போன்று மேற்குப் பகுதியில் தமிழ் மக்கள் குடியிருப்புகள் அமைந்து அங்குச் சிவன் கோயிலும், பெருமாள் கோயிலும் அமைந்தன. சுற்று வீதிகளும் அமைந்தன. நாகூர் விரிவடைந்தது. படகுத் துறை வணிகத் துறையாகவும் பெருகியது.

## மக்கள் மொய்த்த நகரம்

இவ்வகையில் நாகூரையும் அடக்கிய நாகர்பட்டினம் தன் வளாக எல்லையில் ஒரு நிறை நகராக ஆனது. ஒரு நகர் நிறை நகராக,

அதிலும் வணிக நகராக, அதனிலும் பன்னாட்டு வணிக நகராக விரிந்தால் அந்நகரைச் சுற்றி மக்கள் குடியிருப்புகள் அமைந்து அங்கங்கு ஊர்கள் உருவாவது ஒரு பெரிய நகரமைப்பின் துணை அமைப்புகளாகும். நாகையைச் சுற்றிலும் அதனை ஒட்டியனவாகப் பத்து ஊர்கள் அமைந்தன. அவற்றையும் சுற்றி ஆங்காங்கு தனித்தனி ஊர்கள் உருவாயின. நாகர்பட்டினத்து எல்லைகளில் வடக்குத் தொடங்கிக் கடற்கரையோரமாகவும் தெற்கிலும் தென்மேற்கிலும், வடமேற்கிலும் வடக்கிலுமாகப் பல்வகை ஊர்கள் பெருகின. அவை எவ்வாறு ஒரு பெருநகரத்தின் துணை அமைப்புகளாகும் என்பதை அவ்வவ்வூர்களின் பெயர்களே அடையாளங் காட்டுகின்றன.

நாகை நகர்க்கு மேற்கில் 4 கி. மீட்டரில் 'சிக்கல்' என்றொரு சிற்றூர் உருவாயிற்று. இதன் வளர்ச்சியும் நாகை நகர்க்கு ஒரு துணை அணியாயிற்று.

மக்கள் கூடி வாழும் வளாகமாம் ஊர் என்னும் பொருளைத் தரும் சொற்களாக நிகண்டுகள் 56 சொற்களைப் பட்டியலிட் டுள்ளன. அவற்றுள் தமிழ்ச் சொற்கள் 44. இவற்றுள் 25 சொற்களை அதாவது ஊர்ப் பெயர்களை நாகை நகர் தன்னிடத்தும் தன்னைச் சுற்றிலும் பெற்றுத் திகழ்வது ஒரு சிறப்பான நகர் அமைப்பாகும்.

## எ. ஊர்ப் பெயர்களின் பெட்டகம்

கடற்கரை ஒரு கோடாக அதன் தெற்கிலிருந்து தொடங்கி நக வளைவாக நாகையைச் சூழ்ந்து சுற்றியுள்ள ஊர்ப்பெயர்களைக் காண்பது மேலே சொன்ன அமைப்பைக் காண்பதாகும். ஊர்ப்பெயரும் அதிலுள்ள ஊர் என்னும் பொருளைத் தரும் சொல்லும் கீழ்வருகின்றன. கடற்கரை வடக்கிலிருந்து தெற்கே வந்து நகரை நக வளைவாகச் சூழ்ந்திருக்கும் அமைவுகள்..

| **ஊர்ப்பெயர்** | **ஊர்ச்சொல்** |
|---|---|
| நாகூர் (நாகர் ஊர்) | — ஊர் |
| பார்ப்பனச் சேரி | — சேரி |
| நம்பியார் நகர் | — நகர் |
| ஆரிய நாட்டுச் செட்டித் தெரு | — தெரு |
| அக்கரைப் பேட்டை | — பேட்டை |
| கீச்சான் குப்பம் | — குப்பம் |

| | |
|---|---|
| பூவத்தடி | — அடி |
| பிரதாபராமபுரம் | — புரம் |
| திருப்பூண்டி | — பூண்டி |
| வேட்டைக்காரன் இருப்பு | — இருப்பு |
| வெள்ளப் பள்ளம் | — பள்ளம் |
| கிராமத்து மேடு | — மேடு |
| வாழைக்கரை | — கரை |
| கருவேலங்காடு | — காடு |
| தண்ணிலப்பாடி | — பாடி |
| நிருத்தனமங்கலம் | — மங்கலம் |
| பாலைக்குறிச்சி | — குறிச்சி |
| மூங்கிற்குடி | — குடி |
| மஞ்சட்கொல்லை | — கொல்லை |
| முட்டம் | — முட்டம் |
| நத்தம் | — நத்தம் |

மேலே குறிக்கப்பெற்ற ஊர்ச்சொற்களைக் கொண்டனவாக இடையிடையே அமைந்துள்ள ஊர்கள் கீழ் வருவன:

| | |
|---|---|
| ஊர் | — பொய்கைநல்லூர் (பொய்யூர்), புத்தூர், ஆழியூர், கடம்பனூர், செல்லூர். |
| சேரி | — செட்டிச்சேரி, வடுகர்சேரி, புறவர்சேரி (பொறவச்சேரி), புதுச்சேரி, திட்டச்சேரி. |
| பேட்டை | — அந்தோனிப் பேட்டை (அந்தணப் பேட்டை) |
| அடி | — விழுந்தமாவடி |
| மங்கலம் | — அடியார்க்கு நல்லார் மங்கலம் (அடியக்க மங்கலம்), நன்னி மங்கலம், சங்க மங்கலம், ஆபரணதரி சதுர்வேத மங்கலம், அழிஞ்சி மங்கலம் முதலியன. |

## நகர்க்குள் அமைந்தவை

| | |
|---|---|
| யானைகட்டி முடுக்கு | — முடுக்கு |
| வெளிப்பாளையம் | — பாளையம் |
| மேலைக் கோட்டை வாயில்<br>வடக்குக் கோட்டை வாயில் | — வாயில் |
| காடவர்கோன்பாடி | — பாடி |
| நாகர்பட்டினம் | — பட்டினம் |

மேற்காணப்பெற்ற அனைத்துப் பெயர்களுள்ளும் நாகர் பட்டினம், நாகூர், பார்ப்பனச் சேரி, பரவை, காடவர்கோன்பாடி, வெளிப்பாளையம் ஆகியவற்றின் பெயர்க் காரணங்கள் ஆங்காங்கே விளக்கப் பெற்றுள்ளன. பிறபெயர்களுள் விளக்கம் பெற வேண்டியன உள்ளன. அவ்விளக்கங்களால் வரலாற்றுச் செய்தி களும் தமிழ்ச் செய்திகளும் கிடைக்கும். எனவே நாகை நகர் அத்துணை ஊர்களும் அடங்கிய பெட்டக நகராகும்.

## பொய்கை நல்லூர்

பொய்கை என்றால் வளமார்ந்த குளம். இக்குளம் ஒன்று அமைந்த குளத்து ஊர் நல்லூர் சேர்ந்து இப்பெயர் பெற்றது. இதன் சுருக்கமாகப் ‘பொய்யூர்’ என்று வழங்கப்படினும் இஃது ‘உண்மை ஊரே’. இப்பெயருள்ள ஊர் ஒன்று பாப்பாகுடியை உள்ளடக்கிய தாகத் தனிக் கூற்றமாக உள்ளது. முன்னர் புது வெளிக்கோபுரத்திற்கு மேற்கில் வருவாய் தரும் ஒரு தோட்டம் இருந்தது குறிக்கப்பெற்றது. அது போன்று இப்பொய்கையூருக்கும் உரியதாக ஒரு தோட்டம் இருந்துள்ளது. இது குறிப்பிடத்தக்க வளமான தோட்டம்.

மராத்திய கால படேவியா வெள்ளிப்பட்டயத்தில்,

".. னாக பட்டினத்துக் கோட்டைக்குத் தெனம்பிறமாய் இருக்கிற

பொய்யூர்த் தோட்டமும்" (24) குறிக்கப்படுகிறது. இதன் வருவாய் ஆலந்துக்காரருக்கு வழங்கப் பட்டிருப்பதால் இஃதொரு வருவாய் தரும் தோட்டமாக இருந்துள்ளது. இப்பொய்கைநல்லூர் இக்காலத்தில் இரண்டு பகுதிகளாக வடக்குப் பொய்யூர், தெற்குப் பொய்யூர் என்று வழங்கப்படும் ஊர்களாக உள்ளன.

## பூவத்தடி

இவ்வூர் வேளாங்கன்னிக்குத் தெற்கே 6 கி.மீட்டரில் உள்ளது. 'பூவம்' என்பது மரத்தின் பெயர். இது குறிப்பிடத்தக்க பெரிய மரம் (Love Tree Longaro). இதன் தாவரவியல் பெயர் 'நெபேலிகம்' லாங்கனா" (Nephelcom Longana). இது தமிழில் 'கும்பாதிரி' என்றும் "பூவத்தி" என்றும் வழங்கப்பெறும். குறிக்கத்தக்க மரம் இருக்கிற பகுதியில் அமையும் இடமோ ஊரோ 'மரத்தடி' என்று பெயர் பெறுவதுண்டு. விழுந்தமா (மாமரம்) வடி, தேக்கடி, அரசடி எனும் பெயர்கள் உள்ளன. 'பூவம்' என்றோர் ஊர் காரைக்கால். பொறையார் சாலையில் உள்ளது. எனவே, பூவமரம் ஒன்றிருந்து அதன் அடையாளப் பெயராகப் 'பூவத்தடி' என்று பெயர் பெற்றிருந்த ஊரை 'இராமாயணப் புராணத்தார்' இராமர் சிவனை வழிபடப் பூவைத் தேடிப்போய் இவ்விடத்தில் கண்டார் என்று கூறி இதனைப் 'பூவைத்தேடி' என்று குறித்தனர். இது கதை.

தஞ்சை மராத்திய மன்னர்க்குக் குல ஆசானாக வந்து அமைந்த இராமதாசர் என்பாரது பெயரை ஓர் ஆணைப் பெயராகவே மராத்திய மன்னர் கொண்டனர். தம் அரசின் ஆவணங்களில் கைச்சான்றிடும் போது தம்பெயரை 'ஸ்ரீராமபிரதாப்' என்றே இட்டனர். அரசு முத்திரையிலும் காவலர்கள் வில்லையிலும் இவ்வாறே பொறிக்கப்பட்டது. (25) மராத்திய மன்னர் பிரதாபசிங்கு 'பிரதாபராம்' என்றே சிறப்பாகப் பெயர் பெற்றார். அவர் பெயரால் தஞ்சை அரண்மனையில் 'பிரதாபராமசுவாமி மகால்' என்று ஒரு மகால் பெயர் அமைந்தது. தஞ்சையில் 'பிரதாபராமசாமி கோயில்' ஒன்று உண்டு. இவ்வகையில் பிரதாபசிங்கு காலத்திலோ அவர்க்குப் பின்னர் அவர் நினைவாகவோ பூவத்தடி, 'பிரதாபராமபுரம்' என்று பெயர் பெற்றது.

## அந்தோனிப்பேட்டை

இச்சிற்றூர் நாகை நகரின் மேற்கில் புத்தூரை அடுத்து வேளாங்கன்னிச் சாலைப் பக்கத்தில் புகைவண்டி நிலையமாக உள்ளது. இப்போது அந்தணப் பேட்டை என்று வழங்கப் பெறுகின்றது. இங்கு முன்னர் அந்தணர் துறவியர் – பார்ப்பனர் – வாழ்ந்திருக்கக்கூடும். டாக்டர் கிருட்டினசாமி ஐயங்கார் என்பார் புத்தூரை அடுத்து அக்கரையகரம் இருந்ததாக எழுதியுள்ளார். இதனைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் இவ்வூர் அந்தணர்

வாழ்ந்த ஊராக இருந்திருக்கும். அந்தணப்பள்ளி (26) அந்தணச் சேரி என்றெல்லாம் அந்தணர் வாழிடம் முற்காலத்தில் வழங்கப் பெற்றது. பேட்டை என்ற பெயர் இல்லை. பேட்டை சிறு வணிக இடம்; அங்காடி கூடும் இடம். அந்தணர் பேட்டையாகாது. ஆனால் மன்னரிடம் பிரமதேயம் என்று அறக்கட்டளையாக ஊரைப் பெற்ற அந்தணர் – பார்ப்பனர் பின்னர் அதனை விற்றும் வந்தனர். இதனை,

*"ஸ்ரீமது அம்மாபேட்டை அசேழ மகா சனங்க*

ளனைவரும் (அந்தணர் – பார்ப்பனர்கள் அனைவரும்)

தாராசுரத்திலுள்ள ஞானப்பிரகாச பத்தருக்கு

நந்தவன தர்மத்துக்கு நிலம் விலைக்கிறைய

சாத்(ச)னம் பண்ணிக் குடுத்தபடி" (27) என்று ஒரு செப்பேட்டில் காண்கிறோம்.

இவ்வாறு முன்னர் தமக்கு மன்னரால் வழங்கப்பட்ட தம் வாழ்வூரை அந்தணர்கள் பின்னர் போர்த்துகீசியரிடம் அங்காடிப் பேட்டைக்காக விற்றிருப்பர். தூய அந்தோனியர் பெயராலோ வேறு ஒரு வாணிக அந்தோனியர் பெயராலோ பேட்டை அமைத்து 'அந்தோனிப்பேட்டை' எனப் பெற்றது. படேவியா வெள்ளிப் பட்டயம் குறிக்கும் நாகையைச் சேர்ந்த "பழைய பத்தூர்களில் இஃதும் ஒன்று. அதில் 'அந்தோனிப்பேட்டை" என்றே குறிக்கப் பெறுகிறது. இப்பெயர் மாற்றம் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் கி. பி. 1650அளவில் நேர்ந்திருக்கும். பேட்டை என்பதற்கு அடையாளமாக இன்றும் அங்காடிக்கடைகளும், புடவைக் கடைத்தெரு என்றொரு தெருவும் உள்ளன. அந்தோனியை விரும்பாதோர் பழம் பெயரை நினைவு கூர்ந்து அந்தணப்பேட்டை யாக்கியுள்ளனர். புகை வண்டி நிலையமும் 'அந்தணப்பேட்டை' என்றே உள்ளது.

### மங்கலங்கள்

மன்னர்களால் பார்ப்பனர்க்கும் கலைஞர்க்கும் கோயில் களுக்கும் புலவர்கட்கும் சான்றோர்க்கும் வரியில்லா நிலமாக வழங்கப்பட்ட நன்செய் ஊர்கள் மங்கலங்கள் என்று பெயர் பெற்றன. இம்மங்கலங்கள் நாகையைச் சுற்றிலும் உள்ளன. சிவனடியார்க்காக வழங்கப்பட்ட மங்கலம் அடியார் மங்கலம்.

கூத்தாடும் ஆடற் கலைஞர்க்கு வழங்கப்பட்டது நிருத்தனமங்கலம். புத்தர்களுக்கும் மங்கலங்கள் அமைந்தன. புத்த சமயம், 'புத்தம் – சங்கம் – தன்மம்' என்றும் மூன்று கோட்பாட்டுப் பணித்துறைகளைக் கொண்டது. இவ்வகையில் புத்த சமயத்தார் ஊர் புத்தரூர் – புத்தூர் எனப்பெற்றது. புத்த சங்கத்துக்கு வரியின்றி வழங்கப்பட்ட ஊர் 'சங்க மங்கல'மாயிற்று.

அரிஞ்சிமங்கலம் என்றொரு சிற்றூர் உள்ளது. இதன் முழுக்காரணம் புலப்படவில்லை. அழிஞ்சில் என்பது ஒரு மரம். அம்மரமிருந்த ஊர் மங்கலமாகியதால் இப்பெயர் பெற்றிருக்கலாம். பழைய பத்தூர் என்று வெற்றிப்பட்டயம் குறிக்கும் பத்தூர்களில் இஃதும் ஒன்று. அப்பட்டியலில் அழிஞ்சிலா மங்கலம் என்றுள்ளது. இது நாகையில் வடமேற்கில் உள்ள ஊர்.

## புரவர் சேரி

நாகைக்கு மேற்கில் திருவாரூர்ச் சாலையில் சிக்கலை ஒட்டியதாகப் பொரவச்சேரி என்றொரு ஊர் உள்ளது. வைணவத் திருமங்கையாழ்வார் சூளாமணி விகாரையிலிருந்த பொன்னாலான புத்தர் சிலையைக் கவர்ந்து இவ்வூரில் பொதிந்து வைத்திருந்ததாக, அதனால் இது 'பொருள் வைத்த சேரி' என்று பெயர் கொண்டது என்பர். பழைய பத்தூர்களில் ஒன்றான இஃது அப்பட்டியலில் 'பொருவளச் சேரி' என்றுள்ளது. தோட்டம், புரவு முதலியவற்றுக் குரியவர் புரவர் எனப்படுவர். அன்னார் கூடிவாழ்ந்த சேரியாகலாம். எவ்வாறாயினும் மக்கள் சேர்ந்து வாழ்ந்த ஊர் இது. இது போன்றே திட்டர் (திட்டை ஆக்குவோர்) சேர்ந்து வாழ்ந்த ஊர் திட்டர் சேரியாற்று. திட்டை என்னும் மேட்டுநிலத்தில் சேர்ந்து வாழ்ந்த இடத்தில் திட்டைச்சேரி யாகியிருந்தலும் கூடும்.

நாகர்பட்டினம் நாணயக்காரத்தெரு மருந்துக் கொத்தளத்தெரு, வெளிப்பாளையம், காடவர்கோன்பாடி, கோட்டை வாயில்கள் ஆகிய இவற்றின் பெயர்க்காரணங்களை ஆங்காங்கே அறிந்தோம்.

## யானைகட்டி முடுக்கு

யானை கட்டி முடுக்கு என்றொரு பகுதி தெருப் பெயருடன் நகரின் நடுவில் உள்ளது. நாகை துறைமுகமானது முதல் யானைகள் இறக்குமதியாயின. சேக்கிழாரும், "கரிபரித்தொகை சொரிவதாம் கலத்தால்" என்று பாடினார். ஆனால், பல

யானைகளைப் படைக்குரிய யானைகளாகக் கூட்டும் அளவில் இவ்விடம் இல்லை. 'முடுக்கு' என்னும் சொல்லே இதனை அறிவிக்கிறது.

"முடங்கிய கோணந்தன்னை முடுக்கெனல் அடுக்கும்"(28)

என்று மண்டலபுருடர் கூறுகின்றபடி ஒரு முக்கோணத்தில் முடியும் சிற்றிடம் முடுக்கு. இவ்விடம் பெருமாள் கோவிலுக்கு அண்மையில் உள்ளதால் இக்கோயிலுக்குரிய யானை கட்டி வைக்கப்பட்ட முடுக்கு ஆகும். இவ்வாறு எழுத்தாளர் நாகை ப. சிங்காரவேலன் சொல்கிறார். இஃது பொருந்தும்.

இவ்வாறெல்லாம் நாகை தன் நகரளவிலும், சுற்றுச் சூழல் ஊரமைப்புகளிலும் ஒரு நிறைவு பெற்ற நகராக அமைந்தது. இதனைச் சேக்கிழார் பார்த்துள்ளார் எனலாம். சேக்கிழார் பெரியபுராணத்தை எழுதுவதற்குச் சுந்தரமூர்த்தியின் 'திருத் தொண்டர் தொகை'யை மூலமாகக் கொண்டார்.

உடனே ஓர் அறையில் அமர்ந்து எழுதத் துவங்கிவிடவில்லை. திருத்தொண்டர் தொடர்பான நகர்களையும் ஊர்களையும் இடங்களையும் நேரில் கண்டுள்ளார். இதனைப் பெரியபுராணப் பேரறிஞராகிய திரு. சி. கே. சுப்பிரணிய முதலியாரும் எழுதி யுள்ளார்.

பெரிய புராணத்தைப் பாடச் சேக்கிழார் நாகை நகரை வந்து கண்டிருப்பார். அவர் பார்வைக்கு நாகை எவ்வாறு காட்சியளித்தது?

"கோடி நீள்தனக் குடியுடன் குவலயங் காணும்
ஆடி மண்டலம் போல்வதவ் வணிகிளர் மூதூர்"

எனக் காட்சியளித்தது (29). உலகத்துப் பொருள்கள் பலவும் பரவி யிருக்கும் காட்சி உலகமே எதிரொளித்துக் காட்டும் நிலைக் கண்ணாடியாகத் தோன்றியதாம். சேக்கிழார் பாடிய உண்மைப் படப் பிடிப்பின்படி நாகை நகரம் உலகக் கண்ணாடியாயிற்று.

## தலைநகர் அமைப்பு

நிறை நகரமைப்பு பெற்ற நாகை அடுத்த 600 ஆண்டுக் காலத்தில் பெற்ற அமைப்பு ஒரு தனிக் காலக்கட்டமாகக் காண்பதற்குரியது. 14 -ஆம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டு வரை அஃதாவது இன்றுவரை ஒரு தனிக்கட்டம். இஃது ஐந்தாவது காலக்கட்டம்.

இதனை ஒரு தனிக்காலக் கட்டமாகக் காண,

1. நேர்ந்த மாற்றம்

2. அதன் தொடர்பான குடியமைப்பு

3. புறநகர் ஒன்று உருவானது

4. சுற்றுச் சாலை ஒரு புதுப்படைப்பு

5. ஐரோப்பியரால் அமைப்புகள் – எனும் ஐந்தும் காரணமாயின.

பதரி திட்டையாகத் தொடங்கி வளர்ந்து புத்த வளாகமாகப் பரந்த புத்த சமயம், தொய்வடையத் தொடங்கியது. இத்தொய்வின் முன்னறிவிப்பாக எட்டாம் நூற்றாண்டளவில் திருமங்கைமன்னன் புத்த விகாரத்துப் புத்தர் பொற்சிலையைக் களவாடியதைக் கொள்ளலாம். அதன்பின்னர் சூடாமணி விகாரை எழுப்பப்பெற்று அதற்கு இராசராசனும், முதல் இராசேந்திரனும் வழங்கிய பள்ளிச் சந்தமாகிய ஆனைமங்கலம் அறக்கொடை சில அறக்கொடைப் பெருச்சாளிகளால் குலைந்தது. கடாரத்து மன்னன் முதற் குலோத்துங்கன்பால் தூதனுப்பவேண்டி அறக்கட்டளையைச் செயற்படுத்தினான். இந்நிகழ்ச்சி புத்த சமயத் தொய்வின் மறு அறிகுறியாகும்.

தொடர்ந்து நாகையில் சைவம் சிறப்பாகத் தலைதூக்கியது. தாம் சென்று பாடும் இடங்களில் புத்த, சமண அமைப்புகள் இருப்பின் அவற்றைச் சாடிப்பாடிய திருஞானசம்பந்தரும், திருநாவுக் கரசரும் நாகையில் வந்த போது அவ்வாறு ஊர் குறித்துப் பாடவில்லை. அப்போது புத்தக்களம் சிறப்பாகவே இருந்தமை அதனை அணுக வேண்டாத சூழலை அவ்விருவர்க்கும் தந்திருக்கலாம்.

ஆனால், முன்னே கண்டபோது வெளிப்பாளையம் சோழகுலவல்லிப்பட்டினமாகிப் பாளையக்காரர் குடியேற்றம் புத்த வளாகத்திலும் புகுந்தது. அதன் வளர்ச்சியாக மெல்ல மெல்ல பொதுவான மக்களும் சைவத்தாரும் ஏற்படுத்திய தாக்கத்தால் சூளாமணி விகாரை உட்பட ஒவ்வொன்றாக மறையும் நிலை நேர்ந்தது. புத்த வளாகத்தின் மேற்கு எல்லையிலே ஒரு பெருமாள் கோயில் எழும் அளவு தொய்ந்தது. 5 அடுக்காக அமைந்த புதுவெளிக் கோபுரம் சிதைந்து கவனிப்பாரற்றுப் போயிற்று. இது புத்தக்களம் நாகையில் தேய்ந்து ஓய்ந்ததன் சான்றான அறிவிப்பாகும். அதே ஆண்டில் நாகையில் 'இயேசு சபையார்' புது வெளிக்கோபுரத்தை

இடித்துத் தள்ளித் தம் சபைக்குரிய கல்வி நிலையக் கட்டடம் எழுப்பினர். இத்துடன் நாகையில் புத்த சமயத்தின் மூச்சு நின்றது.

இம்மாற்றத்தால் புத்தக்களத்தில் உள்ளேயும் சைவர், கிறித்துவர் இடம் பெற்றனர். கட்டடங்கள் எழும்பின. ஒருவகைச் சிறுவளர்ச்சி நேர்ந்தது. பின்னர் ஆங்கிலர் ஆட்சியில் கிழக்குப் பகுதியில் மருத்துவமனை, நகராட்சி நூலகம், பயணிகள் இல்லம் அமைய லாயின.

மேற்கண்ட இரண்டும் (1) நேர்ந்த மாற்றமும் (2) அதன் தொடர் பான குடியமைப்பும் ஆகும்.

## ஒரு தனி ஊர்

அடுத்து நாகூர் சோழர்கால ஊர்ப்பிரிவின்படி குறித்தால் ஒரு தனி ஊராக உருவாயிற்று எனலாம்.

நாகூரின் கிழக்குப்பகுதியில் முன்னர் முகமதியர் மரக்கல வரையரையராகக் குடியேறினர். இக்குடியேற்றம் வளர்ந்தது. 1558இல் முகமதியத் தூய துறவியார் அப்துல் காதிறு அவர்கள் இங்கு அடக்கமானார்கள். அதனால் குறிப்பிடத்தக்க முகமதியக் களமாக நாகூர் அமைந்தது. அடக்கமான இடத்தில் அவர் பள்ளிப் படையாக முகமதியக் கோயிலாம் 'தர்கா' வடிவம் பெற்றது. தொடர்ந்து மாடத் தூண்களாகச் சிறிய அளவில் மனோராக்கள் எழுந்தன. 1757இல் மராத்திய மன்னர் பிரதாபசிங்கால் பெரிய மனோரா 131 அடி உயரத்தில் 11 மாடங்களுடன் பீடுடன் எழுந்தது. இஃது நாகூருக்கு மட்டுமன்றி நாகைக்கும் ஓர் சிறப்பு அமைப்பா யிற்று.

நாகூரில் சிறு அளவில் ஏற்றுமதி இறக்குமதி கொண்ட படகுத்துறை 1806—இல் ஒரு சிறு துறைமுகமாக அமைந்தது.

இது நாகைக்குப் (3) புறநகர் அமைப்பு என்று முதலில் அமைந்ததாகும்.

## ஒரு கன்னி ஊர்

(4) அடுத்துச் சுற்றுச் சார்பு அமைப்பாக நாகைக்குத் தெற்கில் 10 கி.மீட்டரில் போர்ச்சுகீசியரால் கிறித்து மரியன்னை கோயில் ஒன்று சிறுகுடில் கோயிலாக அமைந்தது. இது பதினாறாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் நேர்ந்தது. 1920இல் இக்குடில் கோயில் கவின் மிகு பெருங்கோயிலாக வளர்ந்து 'வேளாங்கன்னி மாதா கோவில்'

என்னும் புகழ்ப் பெயர் கொண்டது. இதன் வளர்ச்சி இன்றையத் தோற்றத்தில் ஒரு பெருமித எடுப்பான காட்சியாக உள்ளது. வடக்கே நாகூரால் துணைப்புகழ்பெற்று நாகை அமைப்பு, தெற்கே வேளாங்கன்னியால் மேலுமொரு துணைப் புகழ் கொண்டது.

## ஐரோப்பியர் காலம்

(5) ஐரோப்பியர் வரவும் ஆளுகையும் பெற்ற நாகை ஒல்லாந்தரால் கொடி மரத்து மேடை, ஆளுநர் வளமனை, ஒல்லாந்தர் வீதி, ஏசு கிறித்துவக் கோயில் எனப் புது தலைப்புகளைக் கொண்டது. முதற் கடற்கரைச் சாலையில் சரக்குச் சேமிப்புக் கிடங்குகளும், சிறுசிறு தொழிலகங்களும் அமைந்தன.

1958இல் தொடங்கிய ஆங்கிலர் ஆட்சியால் இக்காலத் தோற்றம் பெரும் அளவிற்கு வளர்ந்தது. முன்னர் கண்டது போல் புகை வண்டிநிலையங்கள், துறைமுக அலுவலகம், ஆட்சி அலுவலகங்கள், அஞ்சல், பேருந்து நிலையங்கள் அமைந்தன. நகருக்கணிகலம் போன்று கலங்கரை விளக்கம் எழுந்தது.

## வளரும் நாகை

விடுதலை பெற்ற இந்தியாவின் நாகை மேலும் வளர்ந்து நகரமைப்பில் விரிவடைந்தது. நாகூரையும் நாகையையும் இணைக்கும் அளவிற்கு நாகூரை அடுத்துத் தெற்காகப் பலமுனைத் தொழிற்கல்லூரி, அரசினர் தொழில் நுட்பப் பள்ளி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காவல் துறை அலுவலகம் என அமைந்தன.

நகரிலும் கடற்கரையோரமாக அ.து. மகளிர் கல்லூரிக் கட்டடம், அரசின் சரக்குக் கிடங்கு, தமிழ்நாடு பயணியர் வளமனை, கடுவை யாற்றில் படகுப் போக்குவரத்திற்கு வாய்ப்பாகத் தூக்குப் பாலம் என அமைந்தன.

நகருள் குமரன் கோயிலாரும், சுழற் சங்கத்தாரும் இணைந்து எழுப்பிய 'குமரன் திருமண மண்டபம்', நகை வணிகச் செட்டியார் எழுப்பிய 'பாலகங்காதரஞ் செட்டியார் (D.B.G) திருமணமண்டபம்' வெளிவையில் தனியார் இராசா திருமண மண்டபமும் பழம்பெரும் வீடுகள் மாற்றப்பட்ட திருமண இல்லங்களும் அமைந்தன. திரையரங்குகள் நகரில் இரண்டும், நாகூரில் ஒன்றும் அமைந்தன. புத்தக் களமாயிருந்த காலத்துப் 'பதரிதிட்டா', 'அவுரித்திடல்' என்று

மருவி அது பொதுக்கூட்டம் நடத்தும் பெரிய திடலாகி நேரு திறந்த வெளி அரங்கமாகியது. இன்று புதிய பேருந்து நிலையமாகி உள்ளது.

புறநகர்களாக வெளிப்பாளையம் பகுதியின் கிழக்கே 'இளஞ்சேரன் நகர்' அதனையொட்டி வடக்கில் புதிய 'மறைமலை நகர்' (அரசு அலுவலர் குடியிருப்பு) வெளிப்பாளையம் மேற்குப் பகுதியில் சிறிய மறைமலை நகரம், காயாரோகண நகரம் உருவாகி யுள்ளன.

ஒரு நகருக்கு வேண்டியனவாகிய நூலகம், பள்ளிகள், வணிக நிறுவனங்கள், சிறு தொழிலகங்கள், பூங்காக்கள் (சாலமன் பூங்கா, தம்பித்துரை பூங்கா, கொடி மரத்து மேடைப் பூங்கா) அமைந் துள்ளன.

தமிழ்ச் சான்றோரைப் போற்றும் தகவுடைப்பணியாக நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளாரின் முழு உருவ வெண்கலச் சிலை நாகை புகைவண்டி நிலைய முகப்பில் நாகைத் தமிழ்ச் சங்கத்தால் நாட்டப்பெற்றது. அதனைச் சுற்றிலும் இரும்பு கவைத்தட்டி அமைப்புடன் சிறு பூங்கா அமைத்து நகரில் அழகிய காட்சி தந்துவருகின்றது.

நாகை நகரப் புகுவாயில் ஊராம் புத்தூரிலும் நகருள் மேலைக் கோட்டை வாயிலிலும் அறிஞர் அண்ணா சிலைகளும், காசுமாபாலிடன் முன்றிலில் பெருந்தகை வே.ப. காயாரோகணம் பிள்ளையின் மார்பளவுச் சிலையும் அமைந்துள்ளன.

பழங்கால நில அளவைகளுள் ஒன்று 'குரோசம்'. 21/2 மைல் சுற்றளவைக் கொண்டது ஒரு குரோசம். நாகை நகரம் ஐந்து குரோசம் கொண்டதாகக் கணக்கிட்டிருந்தனர். இதனைப் பிள்ளையவர்கள்,

**"அறைபெரும் புகழ்சால் நாகை**
**ஐங்குரோ சத்தில் உள்ள**
**நிறைதரும் இலிங்க தீர்த்தம் முதலியனவும்"** (30)

என்று குறித்தார்.

**"................... நாகைப்**

**பயன்நிறை ஐங்குரோசப் பதி"** (31) என்று நாகை நான்மணி மாலை குறிக்கிறது. இதன்படி நாகை நகரம் 121/2மைல் அதாவது

21 கிலோமீட்டர் சுற்றளவு கொண்டதாக ஒரு காலத்தில் இருந்தது. 1951 ஆண்டளவில் 4.75 சதுர மைல் பரப்பளவில் 72,000 மக்கள் தொகையைப் பெற்றிருந்த நாகை நகரம் 1991 ஆண்டளவில் 5.44 சதுர மைல் பரப்பளவில் 99,064 மக்கள் தொகையாக விரிவுற்று விளங்குகிறது.

18.10.1991இல் நாகை தனியொரு மாவட்டமாகியது. நாக பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் என்று தலைப்புப் பெயர் பெற்றதைக் கண்டோம். இம்மாவட்டத்தின் தலைநகராக நாகை நகரம் அமைந்தது. சைவசமயக் கோயில்களின் பெருக்கத்தால் 'சிவ இராசதானி' என்று சமயத் தலைநகர் தகுதி பெற்றது. அனைத்து மன்னர் காலத்திலும் தலைநகர் தகுதியைப் பெறாத நாகை நகரம் சமயத்தலைநகராகியது. மாவட்டத் தலைநகராண்மை இந்நகர்க்கு ஒரு மணிமுடி எனலாம். இதனால் தலைநகர் அமைப்புக்குத் தகுதி பெற்றது.

## நகரமைப்பு நாகை

கொண்டுகாட்டி

| ஆசிரியர் | கொண்டு காட்டி நூற்குறுக்கம் |
|---|---|
| 1. — — — | : நற் — 357 — 7 |
| 2. காப்பியாற்றுக் காப்பியனார் | : பதிற்று. — பதிகம்: 4—14 |
| 3. கொங்கு வேளிர் | : பெருங். — மகத காண்டம்: 3—8' |
| 4. திவாகரர் | : திவா. நி. — இடப்பெயர்: 46 |
| 5. அழகுமுத்துப் புலவர் | : திறப்பு. — 99:1 |
| 6. உருத்திரங்கண்ணனார் | : பெரும்பாண். — 311,312 |
| 7. இராகவன், வி.எசு.வி. | : பிளி. — பக். 49 |
| 8. சேக்கிழார் | : தி.தொ.புரா. — அதிபத்தர் — 1 |
| 9. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சி. | : தி.நா.புரா. — கார்முகேசப் படலம். 17:1,2 |
| 10. அழகு முத்துப் புலவர் | : திறப்பு. — 62—4 |
| 11. ஆதிகேசவன், இரா. | : அரு. நா. தி.வ. — பக். 11 |
| 12. மாங்குடி கிழார் | : புறம். — 335:11,12 |
| 13. திவாகரர் | : திவா. நி. — |

14 மண்டல புருடர் : ஆடா. நி. –

15. மண்டல புருடர் : சூடா. நி. –

16. அழகுமுத்துப் புலவர் : திறப்பு. –

17. உருத்திரங்கண்ணனார் : பெரும்பாண். 402 – 404.

18. நல்லழிசியார் : பரி.தி. – 6:1–8

19. கொங்கு வேளிர் : பெருங். – இராசகிரியம் புக்கது – 108,109

20. ——— : படே.வெ.பட் – வரி 28

21. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சி. : தி.நா.புரா. – நகரப் படலம்–20

22. சேக்கிழார் : தி.தொ.புரா. – அதிபத்தர் – 2,3

23. ——— : ஆனை, செப். – (சிறியது)

24. ——— : படே.வெ.பட். – வரி. 27,28

25. வேங்கடாரமையா, கே.எம். : ச.மகா.மோ.ஆ. சுவடி 1 – வரி 30,31 (தமிழாக்கம்)

26. மாங்குடி மருதனார் : மது.கா. – 474

27. ——— : சென்.அ.செப். – 4 – வரி 17–2

28. மண்டல புருடர் : சூடா. நி. – இடப்பெயர் – 47

29. சேக்கிழார் : தி.தொ.புரா. – அதிபத்தர் – 4

30. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சி. : தி.தொ.புரா. – பஞ்சகுரோசப் படலம் – 24

31. சாமிநாத பிள்ளை, வி. : நா. நான். – 15

# 5. மக்கள் நாகை

## அ. நல்ல நிலம்

அவ்வையார் நிலத்தை அழைத்தார். "நீ நல்லை" என்று ஒரு சான்றுரை தந்தார். அதனையும் ஒரு விதிப்புடன்தான் தந்தார். எவ்வகையில் ஆண்மக்கள் நல்லவர்களாக உள்ளனரோ அவ்வகையில் "நீ நல்லை" என்பதை,

"எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே" (1)

என்று வாழ்த்திப் பாடினார்.

திருவள்ளுவப் பெருந்தகையோ சற்றுக் கடுமையாகவே "பண்புடையவர் வாழ்வதனாலேயே உலகியல் ஒழுங்காக நடை பெறும்; அந்தப் பண்புடைமை இல்லையென்றால் உலக நடை முறைகளே மண்ணில் புகுந்து அழிந்து போகும்" (2) என்றார்.

'பண்புடையவர் எத்தகையவர்' எவற்றைச் செய்வார்? இவற்றிற்குக் கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி என்ற மன்னர் விடை தந்துள்ளார்.

மிக இனிமையானதாக இருந்தாலும் தாம் தனித்து உண்ண மாட்டார்;

எதிலும் வெறுப்பு கொள்ளமாட்டார்;

சோம்பல் கொள்ளார்;

பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்;

புகழுக்கு உயிரையும் கொடுப்பார்;

பழி என்றால் உலகமே பரிசானாலும் கொள்ளார்;

மனச்சோர்வு கொள்ளார்;

பிறர்க்கெனவே முயற்சிப்பர். இவர்களால்தான் உலகமே நிலைத்துள்ளது (3) என்றார்.

உலகத்தில் இவர்களைக் கொண்ட பல நகரங்களும் உள்ளன. அப்பட்டியலில் நாகை நகரமும் இடம் பெற்றதாகும். இதனைப் பல வழிகளில் காணலாம். ஆயினும் ஒரு வழிக்காக ஓர் எல்லை கொண்டு காண்போம்.

## பதினெட்டு

18 வகைக் குடிமக்கள், உலகங்கள் 18, நாடு 18, மொழி 18, இலக்கியம் 18, (மேற்கணக்கு 18, கீழ்க்கணக்கு 18), மங்கலச் சொல் 18, இசைக்கருவிகள் 18, குற்றங்கள் 18, படிகள் 18 (அழகர் மலைப்படி, மாடிப்படி, பதினெட்டாம் படிக் கருப்பன்), பதினெட்டாம் ஆடிப்பெருக்கு 18, போர்க்கால எண் 18, (தேவர் அசுரர் காலப்போர் 18 ஆண்டு, இராமாயணப் போர் 18 திங்கள், மாபாரதப் போர் 18 நாள்கள், செங்குட்டுவன் வடநாட்டுப் போர் 18 நாழிகை) சித்தர் 18, புராணம் 18 ஆன்மக் கோட்பாடு 18, கணம் 18, மெய்யெழுத்து 18, பருவ அகவை 18. புதிதாக வாக்குரிமை அகவை 18.

மேலும் இப்பட்டியல் வளருமாயின் 18ஐ, 18 வகையோடு நிறுத்திக்கொள்ளலாம். இப்பதினெட்டு வகை 18களிலும் நாகை நகர் பங்கு பெறுகிறது. என்றாலும் சுருக்கம் கருதிச் சேக்கிழார் வாக்கில் நின்று பார்க்கலாம். அவர் வாக்கிலும் பதினெட்டு வருகிறது.

**"நீடு தொல்புகழ் நிலம்பதி னெட்டினும் நிறைந்த**

**........................................................**

**கோடி நீள்தனக் குடியுடன்"** (4) என்று சேக்கிழார் 18 நாட்டு மக்களும் நாகை நகரில் நிறைந்திருந்தனர் என்றார். அந்நாட்டு மக்களுடன் இந்நகர மக்களுமாகக் 'கோடி நீள் செல்வக் குடி'களாக வாழ்ந்தனர் என்றார்.

பதினெட்டு நாடுகள் என்பதைப் "பதினெண் நிலம்" என்பது தமிழ் வழக்கு. இப்பதினெட்டும் தமிழகம், குடகம் (கேரளம்), தெலுங்கம் (ஆந்திரம்), கன்னடம், துளுவம் (கன்னடத்தின் தெற்கு நிலம்), கொல்லம் (மலையாளத்து ஒரு பகுதி), கொங்கணம் (கோவாவின் வடக்கு கூர்ச்சரத்தின் தெற்கு) என்னும் தென்னியந்தியத் திராவிட நிலங்கள் ஏழும், அங்கம் (உத்திர மாநிலப் பனாரசு), வங்கம் (வங்காளம்), கலிங்கம் (ஒரிசா), மகதம் (தென்பீகார்), கவுடம் (வங்காளத்து ஒரு பகுதி), கோசலம் (அயோத்தி) என்னும் வடபுலத்து நிலங்கள் ஆறும் சிங்களம் (இலங்கை), சாவகம் (இந்தோனீசியா தீவகம்) கடாரம் (சுமத்திரை), சீனம், சோனகம் (யவனம் என்னும் அரபியா) என்னும் அயல்நில நாடுகள் ஐந்தும் என்பது தமிழ் நூல் வழக்கு (5).

சேக்கிழாரும் இப்பதினெட்டை எண்ணித்தான் பாடினார். ஆயினும் இப்பதினெட்டு நாட்டாரும், நாகை நகரின் மக்களாக வாழ்ந்தனர்; உலவினர் என்று கொள்ள முடியவில்லை, இப்பதினெட்டு நாட்டாரில் ஒன்பது நில மக்கள் நாகை நகரில் வாழ்ந்தவராகவும் உலவியவராகவும் கொள்ள வேண்டும்.

பிற ஒன்பதின் மக்கள் அடையாளம் இல்லை. என்றாலும் வேறு ஒன்பது நிலத்து மக்கள் செங்கனித் தோற்றமாகவும், இலைமறை காயாகவும் தென்படுகின்றனர்.

அவ்வொன்பதின்மர்,

வடபுலத்துத் தட்சசீலத்திலிருந்து வந்த புத்தத் துறவியர் (1), நாகநாட்டு நாகர் (2), வடபுலத்து ஆரியப் பார்ப்பனர் (3), உரோமர் (4), போர்த்துகீசியர் (5), ஆலந்தர் (6), பர்மியர் (7), ஆங்கிலர் (8), குசராத்தியர் (9) ஆவர்.

இப்பதினெட்டு நிலத்து மக்களும் நாகை நகரைத் தத்தம் வாழ்வாலும், வரவாலும் அணி செய்தனர். பதினெட்டு நிலத்துடன் பதினெட்டு மொழியும் இங்கு ஒலித்தது. தமிழ் அல்லாத பிற பதினேழு மொழிச் சொல்லும் "திசைச்சொல்" என்பதைப் பவணந்தியார்,

**"ஒன்பதிற் றிரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்**

**தம்குறிப் பினவே திசைச்சொல் என்ப",** (6) என்று காட்டினார்.

இப்பதினெட்டு நிலத்தார் நாகை நகரில் இடம் கொண்டதையும் அவரவர் மொழியையும் கால வாரியாகக் காணலாம்.

## ஆ. நாகையில் பதினெட்டு

### 1. தமிழர்

இவர் தமிழ் மண்ணின் – நாகை மண்ணின் மக்கள், கி.மு. நாகை நகரை 'நீர்ப்பெயற்று' என்று காட்டும். பெரும்பாணாற்றுப் படை இந்நகர்க்கு உரியவராக இருவகைத் தமிழ்க் குடியினரையும் வந்திறங்கியோராக ஒரு குடியினரையும் குறித்துள்ளது.

முதற் குடியினர் கடற்கரை நிலமாம் நெய்தல் நிலத்து மக்கள். கடற்கரை ஓரத்தில் "நாவாய் சூழ்ந்த நளிநீர்ப்படப்பை" (321)யில் வாழ்ந்த நுளையர் நுளைச்சியர் மணல்மேட்டுக் குப்பங்களில் வாழ்ந்தனர். இன்னோர் மீன்பிடிக்கும் கடலோடிகள். ஆடவர்

மீன்பிடித்துவர, மகளிர் அங்காடியிலும் நகர்க்குள்ளும் விற்றனர். கரையை அடுத்த நகரில்,

"மாடம் ஓங்கிய மணல்மலி மறுகில்

பரதவர் மலிந்த பல்வேறு தெரு" (7)க்கள் இருந்தன.

இப்பரதவர் நெய்தல் நிலத் தலைமக்கள். இன்னோர் வணிகர், வணிகப் பொருள்கள் பலவற்றைக் கொட்டி வைத்த சரக்கறைகளை — பண்டசாலைகளைக் கொண்டவர். இப்பண்டசாலைகள் மிக உயர்ந்த மாடங்களாக அமைந்தவை. இவற்றைக் காவல் செய்ய ஏவலர்கள் இருந்தமையைப் பெரும்பாணாற்றுப்படை,

"சிலதர் காக்கும் சேண்உயர்வரைப்பு" (324) என்று கூறுகிறது.

எனவே இந்நெய்தல் மக்கள் வளமாக வாழ்ந்துள்ளனர்.

நகருள்ளே மற்ற தமிழ்க் குடியினர் இடம் கொண்டிருந்தனர். அன்னார் "வயலை உழும் ஏறுகளுடன் ஆவினங்களையும், ஆடு களையும் அவற்றைக்காக்க நாய்களையும் கொண்டிருந்தனர். உள்நகரில் பசிய கொடிகள் பறக்கும்.

பலர்புகும் தோரண வாயில்களைப் பெற்றிருந்தது. ஒவ்வொரு இல்லத்தின் முன்றிலிலும் மக்கள் செம்பூக்களைத் தூவியிருப்பர். இல்லங்கள், 'வான்பொர நிவந்த வேயா மாடங்கள்' அஃதாவது கூரை வேயாமல் சுண்ணாம்பால் ஒட்டிப் பூசப்பட்ட மேல்தளம் உடையவை. விண்ணோக்கி உயர்ந்தவை. இங்கு இரவில் கொளுத்திய விளக்குகள் கடலோடும் கலங்களுக்குக் கலங்கரை விளக்கமாக அமைந்தன" என்று உருத்திரங்கண்ணனார் (8) விளக்கியுள்ளார்.

இவ்விருவகைத் தமிழ்க் குடிமக்களும் தம் நகர்க்கு விருந்தாக வரும் புதியவர்க்குக் கூழும் கறிச்சோறும் படைத்து விருந் தோம்பினர்.

## நெய்தல் நில மீனவர்

இக்காலத்தும் மீனவக் குடியினர் கரையோரத்தில் மணல்மேட்டுக் குப்பத்தில் மீன்பிடிக்கும் கடலோடிகளாகவே வாழ்கின்றனர். இத்தொழிலால் மிகுவளத்தில் வாழவில்லை. ஆடவர் உழைப்பின் உரத்தால் உடல்வளம் உள்ளவராகத் தென்படுவர். மகளிரும் காய்ந்த சருகுகளாகவே உள்ளனர். இக்காலம் படித்த இளைஞர் கப்பற் பணிகளில் அமர்ந்து வளங்காட்டுகின்றனர். இவருள்

திறனுடையவராக வாழ்ந்தாரை மதித்தனர் என்பதற்கு அடையாள மாகக் 'கீச்சான் குப்பம்' தெரிகின்றது. தமக்கென மன்னரென்று சொல்லும் அளவில் ஒரு தலைமகனைக் கொண்டோர் நம்பியார் நகரில் உள்ளனர். 'நம்பி' என்றால் தலைவன். இன்றும் அக்குடிவழி வந்தவர் உள்ளார். இல்லங்களில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கு அவரை மேளதாளத்துடன் அழைத்து வந்து விரிப்பில் அமர வைத்து, போற்றி அவர் தலைமையிலேயே நடைமுறைகளைச் செய்கின்றனர்.

இவ்விருவகைத் தமிழ்க் குடியினரின் மொழி தமிழ்.

## 2. ஆரியப் பார்ப்பனர்

உருத்திரங்கண்ணனார் அறிமுகப்படுத்தும் மூன்றாவது குடியினர் ஆரியப் பார்ப்பனர். முன்னர் கண்ட பார்ப்பனச் சேரியில் தம் இடம் கண்டவர். ஆற்றில் நீராடிய தமிழ்க்குடிச் சிறுமியர் கழற்றி வைத்த காதணியை மீன்கொத்திப் பறவை கொத்திப் பறந்ததன்றோ? அது பறவைகள் அமரும் பனைமரத்தில் அமரவில்லையாம். பார்ப்பனச் சேரியில் வேள்வி செய்வதற்காகவே நட்டிருந்த வேள்வித் தூணின் மேல் அமர்ந்து காதணியை வைத்தது. அவ்வணி கலனின் ஒளி,

"......... யவனர்
ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனில் பைப்பயத் தோன்றும்" என்றார். (9)

இது கொண்டு அக்காலத்திலேயே வந்திறங்கிய பார்ப்பனர் தாம் தனிக்குடியினராக ஊருக்கு வெளியே குடி கொண்டனர். இன்னாரும் விருந்தாய் வருவோர்க்குப் பாற்சோறு வழங்கினார். இன்னோர் காலப்போக்கில் ஊர்ப்புறத்தை விட்டு ஊருக்குள் புகுந்து நகரின் நெஞ்சகமாம் இடத்தில் குடிகொண்டனர். அக்கரையகரத்தை ஊர்க்குள் அக்ரகாரமாக்கினர். இன்றும் எவ்வகைக் குறையும் இன்றி வளமுடன் வாழ்கின்றனர்.

### 18 மொழி அல்லாதது

இவர்தம் மொழி வடமொழியாம் சமற்கிருதம், பேச்சில் தமிழைக் கொண்டாலும் உணர்வார்ந்த இல்ல நிகழ்ச்சிகள், வழிபாடு முதலியவற்றில் வடமொழியையே கொண்டதால் அஃதே இவர்தம் தாய்மொழியாகும். இம்மொழி மறைநூல், எழுதாக்கிளவி என்று எழுத்தில் இல்லாமல் ஓதும் மொழியாகவே இருந்தது. அதனால் தமிழ் வழக்கில் இம்மொழி 18 மொழிகளில் ஒன்றாகக் கொள்ளப்பட

வில்லை. நன்னூலும் திசைச்சொல்லில் ஒன்றாகக் கொள்ள வில்லை. ஓதும் மொழியாக இருந்தது. காலப்போக்கில் தாம் இடம் பெற்ற நிலத்தில் பேசப்படும் மொழிச் சொற்களுடன் கலந்து பேசப் பட்டது. நாளடைவில் அப்பேச்சு வழக்கும் குறைந்தது. பின்னர் தாம் ஏற்படுத்திக்கொண்ட எழுத்தால் எழுத்து மொழியாயிற்று. அது கருதியே 18 மொழி எனப்பாடிய பாரதியாரும்,

"**செப்பும் மொழி பதினெட்டுடையாள்**" (10) என்று "பேசும் மொழி" என்று குறித்தார். பாரதி பாடியதும் வடமொழி நீக்கிய 18 மொழிகளையாகும்.

## 3. புத்தத் துறவியார்

அசோகப் பெருமன்னன் புத்த மதத்தை நாடெங்கணும் பரப்ப, புத்தத்துறவிகளை ஆங்காங்கு இறக்குமதி செய்தான். நாகை நகரிலும் ஆதிவிகாரையைக் கட்டுவித்து, தட்சசீலத்துப் புத்தச் சான்றோரைக் குடியமர்த்தினான். முன்னர் நாம் கண்டபடி இலந்தை மரமேட்டு நிலத்தில் உருவான பதரிதிட்டா வளாகத்தில் இத்துறவியர் இடம் பெற்றனர். இவ்விடமன்றி நகர்க்குள் ஓடிய ஆற்றங்கரையில் மாடக் கட்டடம் ஒன்றிலும் அமர்ந்தனர்.

காலப்போக்கில் பிறநாட்டுப் புத்தத்துறவியரும் வந்தமர்ந்தனர். எனினும் பொதுமக்கள் தொடர்பு இருந்ததாகத் தெரியவில்லை. கீழை நாட்டாரும் சீனருமாகிய புத்த மதச் சார்பினர் இவர்களுடன் தொடர்பு கொண்டனர்.

அமைதி நாடி இவ்விடம் வந்த புத்தத் துறவிகள் பயின்றும், ஆய்ந்தும், நூல்கள் எழுதியும் தத்தம் துறவு வாழ்வில் இருந்தனர். நகர்க்கோ, நகர் மக்கட்கோ உதவியோ இடையூறோ இல்லாமல் அளவான தொடர்புடன் அமைதியில் இருந்தனர்.

இத்துறவிகட்குக் கீழை நாட்டில் சாவகம் (யாவா), சுமத்திரா மன்னர்களுடனும் மக்களுடனும் தொடர்புகள் இருந்தன. காஞ்சியி லிருந்து வந்த தன்மபாலர் முதலிய பல துறவியர் இவ்வளாகம் வந்து நாகைத் துறை வழியாகவே கீழை நாடுகளுக்குச் சென்றனர். நாகை யைப் பொறுத்தவரை இந்நிலத்தில் வாழ்ந்தனரே அன்றி நகர்த் தொடர்பில் புளியம்பழமும் அதன் ஓடுமாகவே இருந்தனர். 17ஆம் நூற்றாண்டுவரை இடம் பெற்றிருந்த இத்துறவியர் 19ஆம் நூற்றாண்டில் நாகையில் ஒரு நிலைத்த தடயம் இல்லாத அளவில் மறைந்தனர்.

### பாளிமொழி

இவர்தம் மொழி பாளி மொழி. பாளி மொழி வடமொழிச் சிதைவு மொழி. புத்தர் இம்மொழியில் தான் பேசினார். 'திரிபிடகம்' முதலிய புத்த நூல்கள் இம்மொழியில்தான் எழுதப்பட்டன. இப்பாளி மொழி நாகையில் விகாரை அளவில் உரையாடப் பெற்றது; பேசப் பெற்றது; நூல்களாக எழுதப் பெற்றது.

## 4. நாகநாட்டு மக்கள்

நாகநாட்டு இளவரசி பீலிவளையின் தமிழ்நாட்டு நாகர்நகர் வருகையை மணிமேகலைக் காப்பியம் அறிவிக்கின்றது. நாகநாட்டரசன் ஒருவன் நாகையில் கட்டிய சிவன்கோயில் நாகநாதர் கோயில் என்று உள்ளது. நாகர் பெயரில் 'நாகர் தோப்பு' என்று வழக்கும் ஆவணப்பதிவும் உள்ளது. இது நாகை நகரில் நாக மக்கள் இடம் பெற்றமையின் அடையாளம். நாகர் மன்னன் நாகையில் ஒரு சிவன் கோயில் கட்டினான் என்பது நாகர் தமிழ் மண்ணின் சமயமாம் சைவத்தில் ஈடுபாடு கொண்டான் என்னும் புதுமை தெரிகிறது.

### நாகர் தமிழரே

இந்த நாகர் யாவர்? மூலத்தில் எவ்வினத்தவர்? இதனை எவரும் விரிவாக ஆராயவில்லை. எனினும் நாகர் என்பார் தமிழின மூலம் கொண்டவர் என்பதே உண்மை. தமிழ் மண்ணில் தோன்றிய, உலகில் பல நிலங்களிலும் பரவிய தமிழினத்தின் ஒரு கூறு கீழை நிலங்களில் குடியேறிற்று. அவற்றில் நாகநிலம் ஒன்று. நாகர் என்னும் சொல்லே அதற்குச் சான்று. இச்சொல் நாகு + அர் என்று பிரிபடும். 'நாகு' என்றால் இளமை, நாகர் தமிழின வழியினர். அவர் தம் மொழிச் சொற்கள் மிகப்பல தமிழ் மூலம் கொண்டவை.

பூம்புகாரிலிருந்து சென்ற சாதுவன் என்னும் வாணிகன் கலம் கவிழ்ந்து நாகநாட்டுக் கரையில் ஒதுங்கியபோது ஒரு பகுதி நாக ராகிய நாகரிகமற்ற ஆதிக் குடிகள் பேசிய மொழியை அறிந்தான் என்கின்றது மணிமேகலைக் காப்பியம். அவர்தம் கொச்சை மொழி யிலும் தமிழ் மூலம் இருந்தமையாலேயே உணர முடிந்தது. நாகர் மொழி தமிழ்த் திரிபு மொழியே.

அவர்தம் பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும் தமிழர் வழியாகவே இருந்து அங்கு புத்தம் நிலைத்த பின்னர் மாற்றம் பெற்றது. *எவ்வாறாயினும் மூலத்தால் அவர் தமிழரே.*

புத்த சமயத் தொடர்பாலும் பின்னர் சிறு சிறு வணிகத்தாலும் நாகை மண்ணில் இடம்பெற்ற நாகர் தம் புத்தப் பெருக்கத்தால் *தமக்கெனச்* சோழநாட்டுக் காசபதேவரைக் கொண்டு ஒரு புத்தப்பள்ளி கண்டதும் அதற்குத் தம் ஒலிப்பில் 'நாகனன விகாரை' என்று பெயரிட்டதும் நாகர் *இம்மண்ணின் மைந்தராகவே* வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றுகள். அவர்களாலே இந்நகர் துறைமுகமான பின்னரும் 'நாகர்பட்டினம்' என்று பெயர் பெற்றமை நோக்கில் அவர்தம் கலப்புற்ற தொடர்பு கல்லெழுத் தாகிறது. பட்டினம் மட்டுமன்றி நாகர் பெரும்படியாக வாழ்ந்த ஊர் *நாகர் ஊர் — நாகூர் என்றமையும்* கல்லெழுத்தை ஆழமாக்குகின்றது.

மற்றும் பீலிவளைக்குப் பிறந்த சோழனது குழந்தை இளந்திரையனாகப் புகழ்பெற்றதையும் அவன் காஞ்சியை ஆண்டு கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பெரும்பாணாற்றுப்படை என்னும் சங்க இலக்கியத்தைப் பெற்றதையும் பொருத்திப்பார்த்தால் நாகர் இந்நாட்டை *மூலமாகக்* கொண்டவர் என்பது உறுதியாகும்.

நாகநாட்டுத் தீவிலிருந்து வந்தவராயினும் நாகை நகரைப் பொறுத்த அளவில் நாகர் தமிழ் மக்களேயாவர். இன்று பிரித்தறிய இயலாத நிலையில் ஒன்றியுள்ளனர் எனலாம்.

## 5. சிங்கள மக்கள்

சிங்களர் என்பார் இலங்கைத் தீவின் மக்கள். இலங்கைக்கும் தமிழகத்திற்கும் பல்வகையான தொடர்புகள் உள்ளன. எனினும், நாகை நகரைப் பொறுத்த அளவில் புத்தக் காலத்தில் புத்தச் சமயத் தொடர்பும் போகப்போக வணிகத் தொடர்பும் ஏற்பட்டன. *ஈழை நாட்டாரின் நாகைப்* பயணத்தில் இலங்கை வழியே இன்றியமையாததாக இருந்தது.

புத்தத் துறவியர் நாகை நகர மக்கள்பால் *தொடர்பு கொண்டவர்* அல்லர். ஆனால் வணிகம் கருதி வந்த சிங்கள மக்கள் நகரிலும் இடம் பெற்றனர்; நகரத்தாருடன் உறைந்தனர். சிங்களர் இடம் கொண்ட தற்குப் பெரும் அடையாளங்களைக் காண இயலாது. ஆயினும் நாகைப் பெருமாள் வடக்கு வீதியின் தொடக்கத்தில் தெற்குப்

பார்த்து அமைந்திருந்த ஒரு பெரிய ஓட்டு வீடு 'கண்டிராசா வீடு' எனப்பட்டது. மிகப்பழைய வீடன்று; பழைய வீடு. கண்டி இலங்கையில் ஒரு நகர். இடைக்காலத்தில் அரசுத் தலைநகராகவும் இருந்தது. அவ்வரசர் குடியினர் வணிகம் கருதியோ புத்தம் கருதியோ வந்து நாகையில் வாழ்வு கொண்டனர். இதனைக் கொண்டும் சிங்கள மக்கள் நாகையில் இடம் பெற்றனர் என்று அறியலாம்.

### சிங்களம்

இவர்தம் மொழி சிங்களம். வடமொழியும் பாளி மொழியும் கலந்த இந்தோ ஆரிய மொழி. இது நாகை நகரில் சிங்களர் வாழ்ந்த இல்லத்து மொழியாகவும், புத்த வளாகத்தில் துறவிகள் வாய் மொழியாகவும் ஒலித்தது.

## 6. சாவக மக்கள்

தமிழகத்தின் தென்கிழக்கில் இந்துமாக்கடலில் உள்ள தீவுக் கூட்டங்கள் இந்தோனீசியா எனப்படும் பெருந்தீவுகளாக 5 தீவுகள் உள்ளன. ஐந்துள் யாவாவும், சுமத்திராவும் இங்கு குறிக்கப்பட வேண்டியன. "யாவா" என்பது "ஜாவா" (Java) என்பதன் தமிழ் வடிவம். 'ஜ' என்னும் வடமொழியிலிருந்து தமிழில் 'ய' என்றும் 'ச' என்றும் எழுதப்பெறும். விவிலியத்தை மொழி பெயர்த்த யாழ்ப்பாணத் தமிழ்ச்சான்றோர் 'ஜோசப்' (Joseph) பை 'யாக்கோபு' என்றும் 'ஜேசு' வை(Jesus) "யேசு" என்றும் அமைத்தனர். இன்றும் ஜப்பானை (Japan) 'யப்பான்' என்றே எழுதுவர். இம்முறையில் 'ஜாவா' 'யாவா' என்றனர். தமிழ் நூல்கள் 'சாவகம்' என்று குறிக்கும்.

இக் கீழைநாடுகளுடன் கி.மு. முதலே தமிழகத்திற்கு வணிகத் தொடர்பு இருந்ததைப் பெரிபுளூசு (கி.பி. 50 – 80) நூலாசிரியரும் தாலமி (கி.பி. 119 – 161) யும் குறித்துள்ளனர்.

### சாவக நோன்பிகள்

சாவக நாட்டு மக்கள் நோன்பிருத்தலில் நாட்டமுள்ளவர். இதனால் 'நோன்பிகள்' தமிழில் 'சாவகர்' எனப்பெற்றனர். 'சாவக நோன்பிகள் அடிகளாதலின்' (11) என்றது சிலப்பதிகாரம் . சங்க இலக்கியமாகிய மதுரைக் காஞ்சி, "பூவும் புகையும் சாவகர் ஏத்த" (12) என்றது. இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் "சாவகர் –

நோன்பிகள் — சீனத்துறவியர் என்று சீன நோன்பிகள்மேல் ஏற்றி எழுதினார். நேரடியாகச் சாவகர் என்பது சீனரைக் குறிக்காது. சாவக நாட்டுத் துறவியரே சாவகராவார்.

சாவகத்திற்கும் தமிழகத்து நாகை நகர்க்கும் நீண்ட காலத் தொடர்பு உண்டு. மணிமேகலைக் காப்பியம்,

**"சாவக நன்னாட்டுத் தண்பெயல் மறுத்தலின்"** (13) என்று சாவகத்தில் மழை பெய்யாது பொய்த்ததைக் குறித்து அங்கு மக்கட்குச் சோறு வழங்கத் தமிழ்நாட்டு ஆபுத்திரன் அமுத சுரபியுடன் சென்றதாக எழுதினார். ஆபுத்திரன் நாகை வழியாக இலங்கையி லுள்ள நயினாத்தீவு என்னும் மணிபல்லவத் தீவிற்குச் சென்றான். அங்கிருந்து சாவக நாடு சென்றான்.

## நாகையில் சாவகக் கலை

சாவக நாட்டு மக்கள் புத்த மதத்தினர். நாகைக்குப் புத்தத் தொடர்பு கருதியும், வணிகம் கருதியும் வந்தனர். புத்த வளாகத்திலும் நகரில் ஆற்றங்கரையிலிருந்த புத்தப் பள்ளியிலும் வழிபாடு நடத்தினர். நாகையில் வெண்கலத்தாலான புத்தர் சிலைகள் நூற்றுக் கணக்கில் கிடைத்துள்ளன. அவை இந்தோனீசியச் சிறபத் திறன்கொண்டவை என்பது சிற்ப வல்லுநர் கருத்து. இந்தோனீசியச் சாவகத்தில் 'போராடிதூர்' என்னும் ஊரில் அமைந்த புத்தக் கோயில் உலகச் சிறப்பைப் பெற்றது. அதில் 504 புத்தர் சிலைகள் இருந்ததாக அங்குச் சென்ற சீனப் பயணி 'இதிசிங்' (671 – 695) பதிந்துள்ளார். அவற்றில் நாகர் நகர்ச் சிலைகள் அங்கிருந்து வந்திருக்கலாம். அன்றி அந்நாட்டுக் கலைஞர்களால் இங்கு வழங்கப்பட்டிருக்கலாம். அன்றித் தமிழ்க் கலைஞர்கள் சாவகம் சென்று பயின்று வந்திருக்கலாம். எனவே இதன் தொடர்பை நோக்கினாலும் சாவகர் – நாகையர் தொடர்பு விளங்கும்.

## சாவக மன்னன் விகாரை

வணிகத்தைப் பொறுத்த வரை இறக்குமதியும் ஏற்றுமதியும் வளர்ந்தன. இடையில் அந்நாட்டு சிரீவிசய மன்னன் மாறுபட்ட செயல்களைச் செய்தான். பின்னர் வணிகம் தொடர்ந்தது. வணிகப் பெருக்கால் சாவக மக்களுக்கென நாகையில் தனியொரு வழி பாட்டுப்பள்ளி எடுக்கும் எண்ணம் எழுந்தது. சாவக மன்னனான சூளாமணிவர்மனும் அவனுக்குப் பின் அவன் மகனும் நாகையில்

'சூளாமணி விகாரை' எடுத்ததை அறிந்தோம். அதற்கு இராசராசனும் இராசேந்திரனும் அறக்கட்டளை நிறுவியதையும் அறிந்தோம்.

இதற்கு முன்னரே கி.பி. 871 இல் சாவக நாட்டார் குடியிருப்பு நாகையில் இருந்ததைப் பயணிகள் குறித்துள்ளனர். சாவகத்தார் நாகைக்கு வந்து குடியிருப்புப் பெற்றதைப் போன்றே நாகர்ப்பட்டின நகரத்தாரும் சாவகத்திற்குச் சென்று வணிகம் நடத்தியும், தொழில் செய்தும் குடியிருப்புப் பெற்றனர். இது போன்று தமிழர் இலங்கைக் கும், மலேயாவிற்கும் சென்று குடியமர்ந்தனர். இலங்கையில் வட்டுக்கோட்டை, திருநெல்வேலி, இராமநாதபுரம் முதலிய ஊர்களை இன்றும் காண்கிறோம். அவ்வவ்வூர் மக்கள் வாழ்ந்த பகுதிகள் இவ்வாறு பெயர் பெற்றன. இவைபோன்று சாவகத்தில் 'நாக பட்டினம்' என்றொரு நகர் இன்றும் உள்ளது. நாகை மக்கள் அமைந்ததன் அறிகுறி அது.

இவற்றைக் கொண்டு நோக்கினால் சாவக நாட்டு மக்கள் நாகை நகரில் இடம்பெற்று ஓரளவில் குடியமர்ந்ததையும் பெருமளவில் வந்துபோய் உலவியதையும் உணரலாம். அவர்களது சிற்பக்கலை நாகைக்கு ஒரு சிறப்பைத் தந்தது. காப்பிக்கொட்டை, தேயிலை, இலவங்கம் (கிராம்பு) முதலிய பொருள்களை நாகைத் தமிழரும் பெற்றனர்.

சாவக நாட்டு மக்களது மொழி 'சாவகம்' என்பது. இது மலேயா மொழியின் பங்கு கொண்டது. நாகையில் இம்மொழி ஒலித்தது.

## 7. கடாரத்து மக்கள்

'கடாரம்' என்று தமிழ் குறிப்பிடும் நாட்டைப் பர்மா என்றும் சுமத்திரா என்றும் வரலாற்றாசிரியர்கள் இருவகையாகக் குறிக்கின்றனர். பர்மா நாட்டுத் தொடர்பு இருந்தது.

### கடாரம் பர்மா அன்று

மலேயாவில் தோன்றி இந்தோனீசியாவில் புகுந்த சிரீவிசய அரச குலத்தாரும் அவர்வழி சைலேந்திர அரச குலத்தாரும் யாவாவிலும் சுமத்திராவிலும் இருந்தனர். சைலேந்திரர் தமிழகத்துடன் அதிலும் நாகையுடன் தொடர்பு கொண்டவர். இராசராசப் பெருமன்னன் காலத்தில் இவ்விரு நாட்டு வணிகமும் நடந்தது. சுமத்திராவிலும் மேற்கு யாவாவிலும் ஆண்ட சங்கிராம விசயோத்துங்கவர்மன்

சோழனுடன் மாறுபட்டதால் இராசராசன் தன் மகன் இராசேந்திரனைக் கப்பற்படையுடன் அனுப்பிப் போரிடச் செய்தான். இராசேந்திரன் சுமத்திராவில் உள்ள துறைமுகமாகிய கடாரம் என்னும் பட்டினத்தைக் கைப்பற்றினான். இவ்வெற்றியின் அறிகுறியாக இங்கு 'கடாரம் கொண்டான்' என்றொரு ஊருக்குப் பெயரிட்டான். நாகை திருவாரூர்ச் சாலையில் இவ்வூர் உள்ளது. வென்ற இராசேந்திரன் வரும் வழியில் மலேயாவில் தங்கினான். தங்கிய படைத்தளத்திற்குத் தன் வெற்றியின் அறிகுறியாகக் 'கெடா' என்று பெயரிட்டான். இன்றும் மலேயாவில் 'கெடா' உள்ளது.

இவ்வெற்றி அவனது கல்வெட்டில்,

"தொடுகடற் காவற் கடுமுரண் கடாரமும்" (14) என்றுள்ளது.

இதனைக் கொண்டு கடாரத்தார் கடுமையாக முரண்பட்டவர், முரட்டுக் குணத்தவர் என்றறிய முடிகிறது. 'கடாரம்' என்பது கடற்கரைக் காவல்பட்டினம் என்பதையும் உணரலாம். பர்மியர் முரண்பட்டவரல்லர். மென்மைக் குணத்தவர். எனவே, சுமத்திராவின் கடற்கரைப்போரே கடாரப் போர் ஆகும். கடாரம் என்னும் கடற்கரைப் பட்டினம் சுமத்திராவில் உள்ளது.

## காழகக் கிராமம்

இக்கடாரத்திலிருந்து தமிழகத்தில் வணிகம் சங்ககாலத்தில் நிகழ்ந்தது. சங்க இலக்கியங்களில் 'கடாரம்' என்றும் சொல் இல்லை. ஆனால் கடாரத்தைக் குறிக்கக் 'காழகம்' என்னும் சொல் பட்டினப் பாலையில் உள்ளது. பிற இலக்கியங்களில் 'காழகம்' என்பது ஆடையைக் குறிக்கும். பூம்புகார் நகரில் இறக்குமதியான பல்வகைப் பண்டங்களையும் குறிக்கும் உருத்திரங்கண்ணனார்,

"காழகத்து ஆக்கமும்" (15) என்று குறித்தார். இதனை விளக்கிய நச்சினார்க்கினியர், "கடாரத்தில் உண்டான நுகரும் பொருள்களும்" என்று எழுதினார். உண்மையாகவே சுமத்திராவின் விளைபொருள்களாகிய தேயிலை, காப்பிக்கொட்டை, இலவங்கப்பட்டை, இலவங்கம் என்னும் கிராம்பு முதலிய பொருள்கள் உணவாக நுகரப்படும் பொருள்கள். இவை இறக்குமதியாயின.

எனவே 'யாவா' என்னும் சாவக நாட்டு மக்களுடன் அவரைச் சார்ந்த கடாரத்தாராகிய சுமத்திரா மக்களும் நாகை நகரில் வணிகத் தொடர்பாலும், புத்தத் தொடர்பாலும் இடம் பெற்றனர்.

அவர் நாட்டில் மற்றொரு வகையில் தமிழகம் பொருந்துகிறது. அங்குத் தமிழ் இலக்கண முனிவர் அகத்தியருக்கு வழிபாடு உண்டு; கோயிலும் உள்ளது. சுமத்திரர் நாகையில் இருந்ததன் அடையாளம் ஏதும் இக்காலத்தில் இல்லை. எனினும், அவர் நாட்டுக் கிராம்பும், இலவங்கப் பட்டையும் உணவிலும் மருந்திலும் நின்று நினை வுறுத்திக் கொண்டுள்ளன.

### யாவா மொழி

சுமத்திரா மக்களாம் கடாரத்தாரின் மொழி மலாய் மொழியின் தொடர்புடையது. மலாய்மொழியின் வழிவந்தது என்றும் கருதுவர். அம்மொழியின் ஒலி புத்த வளாகத்தில் ஒலித்து நகர வணிகர் களிடமும் உரையில் நின்றது.

## 8. சீனத்து மக்கள்

சீன நாட்டார் வணிகம் கருதித் தமிழ்நாட்டிற்கு வந்தனர். அவர்தம் வருகை நிலவழியாகப் பர்மாவை அடைந்து, கடல் வழியாகச் சுமத்திரா, யாவா சென்று அங்கிருந்து இலங்கை வந்து நாகையை நாடி நடந்ததாகும்.

இலங்கை அசோகர் காலத்தில் புத்தத் திருவிடமாகப் பெருகிற்று. சீனநாட்டிலும் புத்தம் கவர்ச்சியுடன் தொடங்கப்பட்ட காலம். வணிக நோக்குடன், இலங்கையில் புத்தரது பல் இருந்தமையால் அதனைக் கண்டு வழிபடும் உணர்வும் கலந்தது. அங்கிருந்து நாகைப் பயணம் வணிக நோக்கிலும் புத்த உணர்விலும் அமைந்தது.

இத்தொடர்பு தொடங்கிய காலம் எது? அறுதியிட்டு எழுத இயலவில்லை. கிடைத்துள்ள ஒரு சான்றின்படி ஏழாம் நூற்றாண்டு முன்வருகிறது. முதல் நரசிம்ம வர்மன் காலத்தில் நாகை வந்தவர் சீனப் பயணி யுவான் சிங் (Yn - Sing) என்பவர். எனவே கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சீனர் குறிப்பு தெரிகிறது.

### நாகையில் சீனக் கல்வெட்டு

அடுத்து இரண்டாம் நரசிம்மன் காலத்தில் கி.பி. 720 இல் சீன அரசன் ஒருவன் வேண்டியபடி இரண்டாம் நரசிம்மனால் நாகைப் புத்த வளாகத்தில் ஒரு புத்தக் கோபுரம் எழுப்பப்பட்டது. அதற்கு என்ன பெயரிடுவது என்று சீன மன்னனைக் கேட்க அவன் 'மேலும்

அமைதியை மலர்த்துக' என்று பொருள்படும் "கோய் –ஃசெ" என்ற பெயரை அக்கோபுரத்தில் கல்வெட்டாகப் பதிக்கச் சொன்னான். அவனே ஒரு கல்தூணையும் அனுப்பி வைத்தான். இக்கல்வெட்டு நாகையில் உள்ள செய்தியை 15 ஆம் நூற்றாண்டுச் சீன நூலாகிய 'தாவோ – யி – சிலியோ' என்பது அறிவிக்கிறது. இந்தப் புது வெளிக்கோபுரம் சீனக் கோபுரம் என்றும் வழங்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. எனவே கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாகை சீனர் தொடர்பு ஆழமாகவே படிந்துள்ளது.

சீன வணிகர் வரவு நாகையில் பெருகியதால் அவர்தம் தொழுகைக்கெனத் தனியாகக் புத்தக்கோபுரம் காணப்பட்டது.

சங்க இலக்கியங்களில் சீனர் பற்றிய குறிப்பு இல்லை. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய உரிச்சொற்கள் நூலாகிய திவாகர நிகண்டும் பின்னர் 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த மயிலைநாதர் (நன்னூலுக்கு) உரையும் தமிழ்நாட்டில் வழங்கிய 18 மொழிகளை பட்டியலிட்டுள்ளன. அவற்றின் 10 மொழிகள் இரண்டிலும் ஒத்துள்ளன. அவற்றுள் ஒன்று சீனம். எனவே ஒன்பதாம் நூற்றாண்டின் முன்னரே சீனமக்கள் தமிழகத்தில் அமைந்தமை புலப்படும்.

## நாகையில் சீனப் பயணிகள்

சீனநாட்டு அலுவலராக இந்த மார்கோபோலோ பயணியாக நாகை வந்தார். தாம் இங்கு சீனக் கோயிலைக் கண்டதாகக் குறித்துள்ளார். மேலும் சீனப் பயணிகளாக யுவான் சுவான், இத் சிங் ஊஃசிங் (Ww-Hing) சீ – ஃசுங் (She-Hing) ஆகியவரும் நாகை வந்து தங்கினர். பின்னிருவர் உயிர்ப் பயிற்சியாம் யோகம் கற்று இலங்கை சென்று புத்தர் பல்லைக் கண்டு தொழுதுள்ளனர்.

இதுபோன்றே தமிழகத்திலிருந்தும் நாகையிலிருந்தும் போதி தருமர், தம்மபாலர், புத்திதர்ம மகாதேரர், போதிசேனா, பரத்துவாசர் முதலியோர் பர்மா வழியாகச் சீனா சென்று புத்த அறிவுரைகள் வழங்கி வந்தனர்.

இவ்வாறு புத்தத் தொடர்பு வணிகத்தால்தான் வளர்ந்தது. பூம்புகார் நகரில் பல்வகை நாட்டு வணிகம் வளர்ந்ததைப் பட்டினப்பாலை இறக்குமதியான பொருள்கள் வழி காட்டுகிறது. அதில் சீனக்குறிப்பு இல்லை என்றாலும்,

"புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்" (16) என்னும் அடிக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்,

'மாக்கள் என்றது சோனகர், சீனர் முதலியோரை' என்று எழுதினார். சங்கப்பாட்டில் நேரடிக் குறிப்பு இன்மையால் 14ஆம் நூற்றாண்டிலான நச்சினார்க்கினியர் தாம் கண்டதைக் குறித்தார் எனலாம்.

"அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்"(17) என்று நாட்டையும் அந்நாட்டார் தொழில் திறத்தையும் குறிக்கும் மணிமேகலையும் சீனத்தைக் குறிக்கவில்லை.

எவ்வாறாயினும் ஐந்தாம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டு வரை சீனத்தார் நாகையில் உலவினர், தங்கினர் எனலாம்.

## சீனச் சூடம்

சீனத்துப் பட்டு, சீனவெடி, சீனப் படிகாரம், சீனக்கற்கண்டு, சீனக் கண்ணாடி, சீனச் சட்டி (இரும்பு), சீனச் சூடம், சீனப் பீங்கான் எனும் பொருள்கள் அன்று முதல் இன்றும் அவர்தம் வணிகத்தைச் சொல்லிக் கொண்டுள்ளன. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் (14 ஆம் நூற்றாண்டு) சிலம்பில் வரும் 'தொகுகருப் பூரமும்" (18) என்பதற்குச் "சூடன் – சீனச் சூடன் என்று பெயர் கூறப்பட்ட" என்று எழுதினார்.

ஒட்டு மொத்தமாகச் சீனர் வணிகர்களாகவும், புத்த வழிபாட்டளராகவும் நாகையில் இடம் பெற்றதை அறியலாம்.

## சீனமொழி

சீனர்தம் மொழி சீனம். நாகையில் ஒலித்தது மட்டுமன்றிச் சீனக் கோபுரம் என்று பெயரோடு சீன எழுத்துக்களையும் கல்வெட்டாகப் பெற்றது.

# 9. உரோமர்

மேலைநாட்டு உரோமர் தமிழகத்துப் பொருள்களை நாடி வந்தனர். மேலும் உரோம நாடு கிறித்துவ மதத்துத் தலைநகர். இன்றும் 'வாக்டிகன்' நகர் ஒரு தனி அரசு போன்ற நகர். உரோமன் கத்தோலிக்கர் என்பதை அறிவோம். கிறித்துவ மதப் பரப்பலுக் காகவும் உரோமர் உலகின் பலமுனை நகர்களுக்கும் சென்றனர். இவ்விருவகையிலும் தமிழகத்துடன் தொடர்பு கொண்டனர்.

நாகை நகரில் வணிகம் கருதியே உலவினர் உரோமர். நாகையில் அவ்வப்போது உரோம நாணயங்கள் கிடைத்துள்ளன. அவர்கள் கடற்கரையில் பண்டசாலை அமைக்கும் பழக்கத்தினர். அவ்வகையில் நாகைக் கடற்கரைச்சாலையில் பண்டசாலை அமைந்திருக்க வேண்டும். தமிழகத்திலிருந்து மிளகு, முத்து, சங்குகளைத் தம் நாட்டிற்கு வாங்கிச் சென்றனர். நாகூர்த் துறைமுகத்திலும் முத்து ஏற்றுமதி நடந்துள்ளது. எனவே முத்து, சங்குகளைப் பெற்றுச் செல்லும் வணிகத்தைச் செய்துள்ளனர்.

### உரோமில் திருநள்ளாறு

தமிழகத்தில் சனி பகவானுக்காக நாகைக்கு அண்மையில் உள்ள திருநள்ளாற்றில் தனிக் கோயில் உள்ளது. உரோம நகரில் இரண்டடுக்கு மாடம் கொண்ட பெரிய சனிபகவான் கோயில் மிகப்பழையதாக இன்றும் இடிபாடுகளுடன் உள்ளதை இங்கு நினைவிற் கொள்ளலாம்.

எனவே, நாகையில் உரோமர் வணிகர் என்ற அளவில் இருந்தனர் என்றாகின்றது.

### இலத்தீன் மொழி

உரோமரது மொழி இலத்தீன். அவர்தம் மத மொழியுமாகும். வணிகப் பண்டசாலைகளிலும் இம் மொழி ஒலித்தது. ஆலந்து ஆளுநர் மனைவி, குழந்தைகளின் தொகுதியாக நாகையில் உள்ள கல்லறை முன்னர் விளக்கப்பட்டது. அக்கல்லறை மேல் பாறைக் கல்வெட்டின் தலைப்பு இலத்தீன் மொழியில் அமைந்தது. இன்றும் இலத்தீன் எழுத்தில் காட்சியளித்துக் கொண்டுள்ளது.

## 10. தெலுங்கு மக்கள்

நாகை நகர் பெரும் வணிக நகராக வளஞ் சூழ்ந்திருந்த போது வாழ்வு நாடித் தமிழகத்தைச் சூழ்ந்த நாட்டு மக்கள் நாகைக்கு வந்தனர். வந்தோர் நாகை நகரைச் சுற்றி, தெற்கு மேற்கு வடக்காக நக வளைவில் சேர்ந்து வாழ்ந்தனர். அவ்வவ்வினத்தார் பெயரில் அவ்வவ்வூர் 'சேரி' எனப் பெயர் பெற்றுள்ளது. அவற்றில் ஒன்று வடுகர்சேரி. இப்போது 'வடுகச்சேரி' எனப்படுகிறது. இங்கு

வாழ்வோர் வேளாண் மக்கள். வாழ்வு கருதியும், வணிகம் கருதியும் நகர்க்குள் வந்து செல்வர்; நகரிலும் தங்கினர்.

இன்னார் பேசும் மொழி தெலுங்கு. உண்மையில் இன்னார் தெலுங்கரே.

## வடுகர்

சங்க இலக்கியங்களில் வடுகர் என்றோர் இனத்தார் குறிக்கப்படுகின்றனர். அன்னார் பம்பையடித்து முழக்குவர்; சினங்கொண்ட நாயை உடையவர்; முரண்பட்டவர்; கஞ்சங் கோரையைத் தலையில் சூடுபவர்; கல்லா மாக்கள் என அவர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். அவருள் இந்நாள் இங்கு வாழும் மக்கள் வேறானவர்; நயமானவர்; நல்லவர்; கற்றவர்.

நாகை வடுவர் தெலுங்கு மொழியாளர்; திராவிட இனத்தவர். தெலுங்கு மொழி ஆறாம் நூற்றாண்டளவில்தான் உருப்பெற்றது. சங்க கால வடுகர் எனப்பட்டவர், கொச்சையான வடமொழி ஒன்றைப் பேசினர். அன்னார் தமிழ்ப் பேச்சு பேசியதில் மிகுந்த வடசொற்களும் கலந்து தெலுங்காயிற்று. தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பேராசிரியர், பதினெட்டு நிலங்களைச் சொல்லும் போது "வடுகும் தெலுங்கும்" என்று வெவ்வேறாகவே காட்டியுள்ளார்.

பின் எவ்வாறு தெலுங்கர் வடுகரானார். வடுகு என்றால் வடக்கு என்று பொருள். குடம் என்றால் மேற்கு. மேற்கே அமைந்த மலைநாடு குடகம் எனப்பட்டதுபோன்று தமிழகத்தை ஒட்டிய அண்டை வடபகுதி நிலம் வடுகு எனப்பட்டது. அங்கு உருவான தெலுங்கரும் வடுகர் எனப்பெற்றனர்.

16ஆம் நூற்றாண்டில் கிருட்டிணதேவராயர் காலத்தில்தான் தெலுங்கு பேசும் மக்கள் நாகைப் பகுதிக்கு வந்தனர். சுற்றியிருந்த சேரியில் வாழ்ந்தோர் நகர்க்குள்ளும் வாழ வந்தனர்.

## தெலுங்கு மொழி

இவ்வடுகர் எனப்படும் தெலுங்கர் தம்முள் குடிமொழியாகத் தெலுங்கைக் கொண்டவர். தம் இல்லத்திலும் தம் குடியாரோடும் தெலுங்கில் உரையாடுவர். பொதுவில் தமிழிலே பேசுவர்.

## 11. சோனகர் எனப்பட்ட இசுலாமிய மக்கள்

மேற்கு நாடாகிய அரேபியாவிலிருந்து வணிகம் கருதிக் கடல் வழியாகத் தமிழகம் வந்தவர் சோனகர் எனப்பட்டனர். கடல் வழியாகவே இலங்கை சென்று கீழைக்கடற்கரை நகரங்களில் வணிகம் நடத்தினர். சிறப்பாக இடம் பெற்றனர்.

### யவனர் (அயோனியர்)

இவர்களைச் சங்க இலக்கியங்கள் 'யவனர்' என்று சிறப்பித்துப் பேசுகின்றன. 'அயோனியர்' என்பார் அயோனியத் தீவினர். இன்னோரார் கிரீசு வழியினர். இவர்கள் அரபு நாட்டுத் தொடர்பினர். ஒருவகையில் அக்குடியின் சார்பினர். அயோனியர் கட்டடக் கலையில் தூண்கள் உயரமானவை; தூணின் மேற்பகுதியில் நான்கு பக்கமும் சுருட்டி விட்டது போன்ற கலையமைப்பு கொண்டவை. இவ்வகைத் தூண்கள் திருமலை நாயக்கர் மாலிலும் பிற இடங்களிலும் காணப்படுவது அயோனியரை நினைவு படுத்தும். அரேபியராக நம் நாட்டை அடைந்தோரின் அறிமுகமாக அயோனியர் இடம் பெற்று அப்பெயரால் 'யவனர்' எனப்பட்டனர் போலும்.

ஜாவா, சாவா (யாவா) ஆகி அஃதும் அகம் என்னும் சொல் பெற்றுச் 'சாவகம்' ஆனது போன்று அயோனியர் சோனர் ஆகி அஃதும் அகம் பெற்றுச் 'சோனகம்' ஆகியது. இருப்பினும் குறிப்பாக அரேபியரையே குறிக்கும்.

சங்க இலக்கியங்களில் யவனர் கலைகளாக 'அன்ன வடிவ விளக்கு' (பெரும்பாண் 367), கலைத்திறமை மிக்க கப்பல் (அகம். 149) குறிப்பிக்கப்பட்டன. அம்மக்கள் 'துருக்கர்' என்று அடியார்க்கு நல்லார் (சிலம்பு. 14 – 67) குறித்தார்.

அன்னார் வன்மையான உடலினர். யவனர் 'அடல்வாள் யவனர் கடிமதில் வாயில் காவலிற் சிறந்த யவனர்; மரக்கல யவனர் எனப்பெற்றனர். அவர்கள் வாழ்ந்த இடம், 'பயன்அறவு அறியா யவனர் இருக்கை' (சிலம்பு 5–10) எனப்பெற்றது. இந்த இருக்கை பூம்புகாரில் இருந்தது. இதன்படி புகார் அழிவிற்குப் பின் அந்த யவனர் நாகையில் இடம் பெற்றிருப்பர்.

அரேபியாவின் பேரீச்சை, பார்லி, பொன் முதலியவை நாகையில் இறக்குமதியாயின. அவ்வணிகம் நடந்தது. கப்பலில்

தண்மகிழ் தேறலாம் தேன் கொணர்ந்தனர். மணப்பொருள்களாம் அத்தர், புனுகு, சவ்வாது நாகைக்கு வந்தன.

## சோனக மீன்கள்

அவர் சோனகர் என்று பெயர் பெற்றது போன்று அவர் நாட்டுக் கடல் மீன்கள் சோனைக் கெழுத்தி, சோனைவாளை, சோனைத் திருக்கை தமிழகத்திலும் நாகையிலும் அமைந்தன. சோனைச் சிடுக்கு என்னும் சிடுக்கெடுக்கும் சீப்பு வந்தது. அதில் மாணிக்கக் கல் பதிக்கப்பட்டிருந்தது.

இவற்றையெல்லாம்விட அரேபிய நாட்டுக் குதிரைகள் பூம்பு காரிலும் பின்னர் நாகையிலும் இறங்கின. அக்காலச் சோனகராம் அரபியர் வந்து போனவர் நாகையில் உலவியரே.

## இசுலாமியர்

கி.பி. 17 ஆம் நூற்றாண்டளவில் பீசப்பூர் சுல்தானின் படைத் தலைவனாகிய மராட்டிய ஏகோசி தஞ்சையை ஆண்டபோது முகமதியர் நாகைக்கு வந்தனர்.

அரேபியர் மதத்தால் இசுலாமியர். அரேபியாவின் மக்கா நகரத்தில் பிறந்து அம்மதத்தை நபி திருமகனார் முகம்மது அவர்கள் பரப்ப அவரைப் பின்பற்றியோர் முகம்மதியர் எனப்பட்டனர். தமிழர் பெருமைக்குரிய மக்களைச் சீமான், பூமான் என்றது போன்று முகம்மதியரையும் "முசல்மான்" என்றனர்.

மணிமேகலை "யவனத் தச்சர்" என்று குறிப்பிட்டது. தச்சர் கல்தச்சரும் மரத்தச்சருமாவர். மரக்கலத் தச்சில் சிறந்தவர் மரக்கலவரையராக நாகூரில் அமைந்தனர். நாகூரில் துறவுத் திருமகனார் காதிறு அவர்கள் அடக்கமானதும், அங்கு முகம்மதியப் பெருமக்கள் பெருகினர். நாகையிலும் அமைந்தனர்.

கீழை நாடுகளான மலேயா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனீசியா, ஆசுதிரேலியா, தாய்லாந்து நாடுகளுக்கு நாகையிலிருந்துதான் இசுலாமியர் சென்று பரவினர். இன்றைய அளவில் முகம்மதியராம் இசுலாமியர் நாகையிலும் நாகூரிலும் பெரும் எண்ணிக்கையில் தமிழர்களது உடன்பிறப்புக்களாகவே வாழ்கின்றனர். அவர்கள் தொழுகைக்குப் பள்ளி வாசல்கள் உருவாகியுள்ளன. கீழை நாடுகளுக்கும் குவைத்து, ஈரான் நாடுகளுக்கும் சென்று தொழில் செய்தும், வணிகம் செய்தும், பணி செய்தும் பொருளீட்டி நாகைக்கு

வந்து வளம் கூட்டுகின்றனர். இன்றும் நாகூர் என்றாலே வெளிநாட்டு நுகர் பொருள்கள், கவின் பொருள்கள், மணப் பொருள்கள் மகம்மதிய வணிகர்களால் வழங்கப்படும் இசுலாமியர் ஊர் என்று விளங்குகின்றது. மேலும் ஒரு முத்திரையாக நாகை ஒரு தனி மாவட்டமாகி இசுலாமிய மக்களுக்கு உழைத்த பெருந்தலைவர் காயிதே மில்லத்து அவர்கள் பெயர் பெற்றுள்ளது. தமிழர் முகம்மதியர் இணைந்து – இசைந்து வாழும் தகுதி பெற்றுள்ளது நாகை. புதுமையாக அரசியல் களத்தில் புகுவோர் அதைக் கெடுக்காதிருக்க வேண்டும்.

### அரசு – உருதுமொழி

இசுலாமியரின் மூலமொழி அரபுமொழி. குர்ஆன் என்னும் அவர்தம் மறைநூல் அம்மொழியில் அமைந்தது. இன்றும் நாகையில் ஓதப்பட்டுகிறது. முகம்மதியர் பலவகையாகப் பெருகியதில் உருது, இந்துத்தானி பேசப்படுகின்றன. பொதுவில் தமிழிலேயே உரையாடு கின்றனர்; எழுதுகின்றனர். அரபு பாரசீக மொழித் தொடர்புடையது. அதன் அறிகுறியாக நாகூர் பெரிய மனோரா என்னும் மாடக்கோபுரக் கல்வெட்டு ஒன்று பாரசீக எழுத்தில் திகழ்கிறது.

## 12. பர்மியர்

நாகையில் பர்மா நாட்டினர் இடம் பெற்று வாழ்ந்தனர் என்று உறுதியாகக் கூற இயலவில்லை. ஆயினும், சில குறிப்புகள் அன்னார் இங்கு வந்து போயினர் என்ற கருத்தை வலியுறுத்துகின்றன. புத்தமதத்தைச் சார்ந்தோர் பர்மியர். எனவே புத்தத் திருவிடமாக விளங்கிய நாகைக்கு அன்னார் வந்திருக்கலாம்.

இதனைவிட நாகை புத்த நிலை பற்றிய பல குறிப்புகளைப் பர்மா நாட்டுக் கலியாணி நகர்க் கல்வெட்டு தருகிறது. பர்மா நாட்டு விவரணச் சுவடிகள் நாகை புத்தச் செய்திகள் பலவற்றை வரலாற்றுக் குறிப்பிற்கு உதவியாகத் தருகின்றன.

சீனாவிலிருந்து சீனர் பர்மா வழியாகவே நாகை வந்தனர். நாகையிலிருந்து சீனா சென்றோரும் பர்மா வழியாகவே சென்றனர். இந்நிலையும் பர்மியரை நாகையுடன் பொருந்த வைக்கிறது.

பர்மாவின் அம்சபதி மன்னனாகிய இராமபதி என்பவன் தன் அலுவலன் சித்ரதுரிதனுடன் புத்தத் துறவிகளை இலங்கைக்கு அனுப்பினான். அவர்கள் பர்மாவிற்குத் திரும்பும்போது புயலால் கலம் கெட நாகையில் கரையேறிப் புத்தக் களத்தில் தங்கியிருந்து சென்றனர். இஃதும் பர்மியரது தொடர்பிற்கு ஒரு சான்று.

போர்ச்சுகீசியர், ஆலந்தர் நாகையிலிருந்தே தம் வணிக நிறுவனத்தால் பர்மாவை அடைந்தனர். பர்மா நாட்டு விளை பொருள்கள் நாகையில் இடம்பெற்றன. குறிப்பாகப் பர்மா அரிசி, பர்மா தேக்கு இடம் பெற்றன. பர்மா நாட்டுத் தலைநகர் இரங்கூனில் தமிழகத்து நகரத்தாராகிய செட்டிமார்கள் வட்டிக்கடை வைத்து மற்றும் சில வாணிகம் நடத்தினர். பர்மாவிலிருந்து விரட்டப்பட்ட தமிழர் இங்கு வந்து சேரப் பட்டபாட்டையும் நினைக்க வேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் ஒன்று கூட்டி நோக்கினால் பர்மியத் தொடர்பு நாகைக்கு உண்டு என்றும் பர்மியர் வருகை வணிகமாகவும் நிகழ்ந்தது என்றும் கொள்ளலாம்.

### பர்மிய மொழி

பர்மியரின் பர்மியமொழி இங்கு எங்கும் ஒலிக்கவில்லை போலும். ஆனால் அம்மொழியின் நெடுங்கணக்கு தென்னிந்தியப் பல்லவர் மொழியின் நிழற் கொண்டதாக உள்ளது. பல்லவர் பர்மியர் தொடர்பும் நாகை வழியாகத்தான் நேர்ந்திருக்கும்.

## 13. குடகர் என்னும் கேரள மக்கள்

தமிழ் மன்னராகிய சேரரே கேரளர். திராவிட இனத்தாருள் ஒருவர். நாகையில் இவர்தம் வருகை நிலவழியாகவும் நீர் வழியாகவும் அமைந்தது. நீர்வழியாக மிளகு மூட்டை மூட்டையாக வந்தது. இவர் வருகை கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னரே நாகையில் அமைந்திருக்கும்.

18ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் மலையாளத்தார் சிறு தொழில் நாடியும், தேநீர்க் கடைகள் அமைத்தும் சில உணவு விடுதிகள் அமைத்தும் தொழிலராக வந்தமைந்தனர்.

காலப்போக்கில் தமிழர்களுடன் உறவும் கொண்டனர். இங்கு தங்கினர். சில மலையாளக் குடும்பங்கள் நாகையில் அமைந்தன.

முன்னாள் குடியரசுத் தலைவர் மாண்புமிகு வி.வி.கிரி அவர்களது மாமனார் நாகை சட்டையப்பர் கீழ வீதியில் வாழ்ந்தார்.

### மலையாள மொழி

ஓரளவில் மலையாளமொழி நாகையில் ஒலித்தது – ஒலிக்கிறது.

## 14. போர்த்துகீசியர்

ஆட்சி நாகைப் பகுதியில் போர்த்துகீசியர் நாகையில் வணிக நிறுவனமாகப் புகுந்து ஓரளவில் ஆளுகை நிலையிலும் இருந்ததைக் கண்டோம். இதனால் போர்த்துகீசிய நிறுவனத்தார் இடம் பெற்றனர். போர்த்துகீசிய அரசின் அலுவலர்களும் தங்கினர்.

நாகைக் கல்லறைத் தோட்டத்தில் போர்த்துகீசியர் பலரின் கல்லறைகள் தென்படுகின்றன. இவற்றால் பல போர்த்துகீசியர் குடும்பங்கள் இங்கு வாழ்ந்தன என அறியலாம்.

### போர்த்துகீசிய மொழி

அவர்தம் போர்த்துகீசிய மொழி அவர்கட்குள் உரையாடப் பெற்றது. அம்மொழி எழுத்து கல்லறை கல்வெட்டுகளில் உள்ளது.

## 15. ஆலந்துக்காரர்

ஒன்றரை நூற்றாண்டிற்கு மேல் (158 ஆண்டுகள்) நாகையி லிருந்த போர்த்துகீசியர் நினைவைக் கல்லறையால்தான் எழுப்ப முடிகிறது. அவரைவிட ஏழு ஆண்டுகள் (165 ஆண்டுகள்) அதிகமாக ஆலந்தர் நம் நினைவிற்கு வரும் அளவில் இங்கு இருந்துள்ளனர். ஆளுநராகவும் அவர் குடும்பமாகவும் அலுவலர்களாகவும் அலுவலர் குடும்பங்களாகவும் நாகையில் வாழ்ந்துள்ளனர். போர்த்து கீசியருடன் போரிட்டதால் படை வீரர்களும் நாகையில் இருந்திருப்பர். எனவே சில நூற்றுக்கணக்கில் ஆலந்தர் நாகையில் வாழ்ந்ததாகக் கொள்ளலாம்.

கல்லறைத் தோட்டக் கல்லறைக் கதையுடன் ஆலந்துச் சாலை என்றும் தெருப்பெயரால் ஆலந்தர் வாழ்ந்ததை அறிகிறோம். மேலும் மலையிறைவன் கோயில் திருப்பணியும், கிறித்துவக் கோயில் திருப்பணியும் அவர்தம் வாழ்வுச் செயல்களைச் சுட்டுகின்றன.

மற்றொன்றும் உண்டு. அது நாகையில் நீலா தெற்குத் தெருவில் குமரன் கோயில் உருவாக்கம் ஆலந்தரது ஒரு கைப்பற்றல் செயலால் நேர்ந்ததை அறிந்தோம். அக்கெடுதிச் செயல் அவர் வாழ்வின் தாழ் செயலையும் அறிவிக்கிறது.

அயல் நாட்டார் நாகையில் வாழ்ந்தனர் என்பதில் ஆலந்தார் தனித்துத் தென்படுகின்றனர்.

### டச்சுமொழி

அவர்தம் டச்சுமொழி அவர்களால் பேசப்பட்டது. அம்மொழி எழுத்து கல்லறை மண்டபப் பாறைக் கல்லிலும் புதிய கிறித்துவக் கோயில் கல்வெட்டிலும் பதிவாகியுள்ளன.

## 16. ஆங்கிலேயர்

ஆலந்தரிடமிருந்து நாகையைக் கைப்பற்ற ஆங்கிலேயர் தம் படையாலும் மராத்தியர் துணையுடனும் புகுந்தனர். அவர்தம் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தாரும் நாகையில் அமர்ந்தனர். அவர்தம் ஆட்சி நேர்ந்ததும் துணை மாவட்ட ஆட்சியர் நிலையிலும் அறமன்ற நடுவர் நிலையிலும் மேலும் சில குறிப்பிடத்தக்க அலுவற் பணியிலுமாக ஆங்கிலர் பலர் இடம் பெற்றனர். அவர்தம் குடும்பத்தாருடன் இடம் பெற்றனர். சில இடங்கள் மன்னர்களின் பெயர்க்குறிப்புகள் இதனை அறிவிக்கின்றன. ஆங்கிலருடன் சட்டைக்காரர் எனப்பட்ட ஆங்கிலோ இந்தியர் குடும்பங்கள் நாகையில் சற்றுப் பரவலாகவே வாழ்ந்தனர். ஆயினும் பிரித்தானிய ஆங்கிலேயர் நாகைப் பொதுமக்களுடன் பழகியவர் அல்லர். கிறித்துவக் கோயிலுக்குத் தொழுகைக்கு வருவதிலும் ஒதுக்கமே காட்டியுள்ளனர்.

துரை, துரைசானி என்று ஐரோப்பியரைப் போற்றியும் அவர்களைக் கண்டு பயந்தும் வாழ்ந்தனர் நகரத்துமக்கள்.

இருப்பினும் அவர்தம் நல அமைப்புகள் அவரைப் பெருமைப் படுத்தியதில் நமக்கு நலன் கூடியதாகக் கொள்ளலாம்.

### ஆங்கில மொழி

அவர்தம் மொழி ஆங்கில மொழி. அவரால் மட்டுமன்றித் தமிழ் அலுவலர் தொடங்கி அனைத்து வணிகர்களாலும் பேசவும் எழுதவும்

பட்டு இன்றளவில் தூயதமிழையே தன் கலப்பால் குலைக்கும் அளவில் வளர்ந்துள்ளது.

## 17. கன்னட வழியினர்

கன்னட நாட்டார் கருநாடர் எனப் பெற்றனர். அவர் திராவிட இனத்தவர். நாகையில் இம்மக்கள் அமைந்ததாகச் செய்தியே இல்லை. ஆனால் அவர் வழியினரான ஒட்டர் என்பார் கூலிப் பணி கருதியும், சக்கிலியார் என்பார் தொழில் கருதியும் எங்கும் புகுந்து இடம் பெற்றதைப் போன்று நாகையிலும் இடம் பெற்றனர். இன்றும் உள்ளனர். அவர்தம் மொழி கொச்சைக் கன்னடம். எழுத்தில் இங்கு இல்லை. அவர்களிடமே அருகிய அளவில்தான் பேசப்படுகிறது.

## 18. குசராத்தியர்

18ஆம் நூற்றாண்டளவில் குசராத்து மாநிலத்து வணிகக் குடியினர் நாகை வணிகர்க்கு வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழில் செய்ய வந்தனர். தொடர்ந்து சிற்றுண்டிப் பொருள்களாகிய இனிப்புக் கடைகளை 'மிட்டாய்கடை' என்னும் பெயரில் நடத்தினர். இதில் இன்னோர் தனிப்பெயர் பெற்றனர். மிகச் சில குடும்பங்களே நாகையிலும் நாகூரிலும் இடம் பெற்றன. "சேட்டுகள்" என்னும் குறியீட்டுப் பெயரில் குசராத்திய மொழி பேசுபவராக வாழ்ந்தனர். மிகச் சிறிய எண்ணிக்கையினர் தமிழ் மக்களுடன் ஒன்றிப் பழகினர்; பழகுகின்றனர். வங்கிக் கடன் வழங்குவது பெருகிவிட்ட மையால், வட்டிக்கடைத் தொழிலை நாகையிலும் கைவிட்டனர். வட்டிக்குக் கொடுத்தோர் மத்தியப்பிர்தேச மார்வாரியிலிருந்து வந்த மார்வாரிகள். அவர்கள் இப்போது நாகையில் இல்லை.

### பன்னாட்டு நகர்

23 நூற்றாண்டுக்கால நாகை வரலாற்றில் நாகை பெற்ற மக்களாக 18 நாட்டுக் கணக்களவில் நோக்கினால் தாலமி குறித்தது போல் அவ்வப்போதும் பன்னாட்டு நகரமாகவே விளங்கியுள்ளது.

நாகை கண்ட மக்களை நாடு, இனம், குடி என்னும் வகைகளில் கண்டோம். மரபளவிலும் பண்பாட்டளவிலும் அவர்களைக்

காண்பதே "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை" என்னும் அவ்வையார் வாய்மொழியைக் காண்பதாகும்.

## இ. நாகை மக்களின் தொன்மையும் சான்றாண்மையும்

### வாழ்தரத் தாங்கும் நாகை

மாந்தரது தொன்மையைக் கற்கால அளவாகக் கொண்டு காண்பர். அஃது அவ்வந்நிலத்தில் கிடைக்கும் பழம்பொருளாம் சின்னங்களைக் கொண்டு கணிக்கப்படும். அப்பொருள்களில் "முது மக்கள் தாழி" ஒன்று.

நாகையை அடுத்த பூவத்தடி என்னும் பிரதாபராமபுரத்தில் நிறைய முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன; இன்றும் உள்ளன. அத்தாழிகளில் உள்ள எலும்புகள் அன்னார் பயன்படுத்திய பொருள்களைக் கொண்டு அவர்கள் இரும்பைப் பயன்படுத்திய வர்கள் என்றறிய முடிகிறது. இரும்பைப் பயன்படுத்திய மாந்தர் "பெருங்கற்கால மாந்தர்" எனப்படுவர். இவர் காலம் 2500 ஆண்டு களுக்கு முற்பட்டது. எனவே, கிடைத்துள்ள பொருள் அளவைக் கொண்டு நாகை மக்கள் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மை யானவராவர். இக்காலக் கணக்கு ஒரு கீழ் எல்லைதான்.

புலவர் ஏறு மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் நாகை நகரை,

"யாரையும் வாழ்தரத் தாங்கும்

தன்மை மேயது நாகபட் டினத்திரு நகரம்" (19) என்று பாடினார். நாகை மக்கள் தம் நகரை நாடி வந்த 18 நாட்டாரை மட்டுமன்றி 18 குடிமக்களையும் வரவேற்றுப் போற்றினர். வந்தாரை வாழவைக்கும் நாகைப் பெருமக்கள் பலவகைச் சான்றோராகவும் பொதுமக்கள் அளவில் பலர்க்கும் உதவி புரிபவராகவும் திகழ்ந்தனர். துன்புற்றோர்க்கு உதவுவதில் பெருமனம் படைத்தவர் என்பதை ஒரு பாடல் விளக்குகின்றது:

தமக்குத் தீமை செய்தவராக இருப்பினும் ஒத்த மனத்துடன் உதவினர். தன் உறுப்பை அறுத்தெடுத்துத் தீயின்கண் போடும் அளவு தீமை செய்தவராயினும் அவர்க்கும் ஒத்த மனத்தால் வாழ்ந்தனர். என்பதை,

"உற்றவர்க் குறுப்பறித்
தெரியின்க்ண் உய்த்தலை அன்ன
தீமை செய்தோர்க்கும் ஒத்த மனத்தராம்
நற்றவர்க் கிடமாகி
நின்றது நாகையே" (20) என்று பாடப்பெற்றது.

"இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று" என்னும் வள்ளுவப் பெருந்தகை வாய்மொழிக்கு இலக்கியமானவர் நாகை மக்கள்.

## காத்தான்

மேற்கண்ட குறளுக்கு முன்பு உள்ள பாடல் 12ஆம் நூற்றாண்டிற்கு முந்தியது. இஃது புத்தத் துறவியாரையும் குறிக்கலாம். நகரத்து நல்லவரையும் குறிக்கலாம். பெருங்கொடை வள்ளல்களைப் பெற்றது நாகை நகரம். அவருள் ஒருவன் காத்தான் என்னும் வருணகுலாதித்தன். காத்தான் என்னும் பெயரே மக்களைப் பசியினின்றும் வறுமையினின்றும் காத்தவன் என்று காட்டுகிறது. இவன் இளவலும் காத்தான் என்று சிறப்பிக்கப்பட்டவன். வருணகுலாதித்தன், வருணகுலத்தார் என்ப்படும் மீனவ குலத்தினன். திருமலைராயனால் பாராட்டப் பெற்றுத் திருமலராய வருணகுலாதித்தன் எனப் பெற்றவன். இவன் வருணகுலாதித்த அச்சுதராயன் எனச் சிறப்பிக்கப் பெற்றவன். முத்தமிழ்ப் புலமையுடைய புரவலன். மீனவர் குலத்து மன்னன். நிலைபெற்ற பெருஞ்செல்வன்.

"கார்மதித்த நற்கொடையான்" (21)

என்று பாடப்பெற்றவன். நாகையில் மழையின்மையால் மக்கள் வாடியபோது இவன் கஞ்சித் தொட்டிகள் அமைத்தவன். நிலையாக நாள்தோறும் உணவு வழங்கும் 'சத்திரம்' ஒன்று கட்டியவன். அஃது இன்றும் காத்தான் சத்திரம் என்ற பெயரளவில் உள்ளது. கவி காளமேகம் இச்சத்திரத்தில் உணவுண்டுள்ளார். காத்தான் செட்டி என்னும் குடிப்பெயராலும் இவன் குறிக்கப் பெற்றான். நற்செயலைப் போற்றும் நற்பண்புகளைக் கொண்டவர் நாகையர். நலஞ் செய்த காத்தான் பெயரால் இவன் சத்திரத்திற்குச் செல்லும் வழியைச் சொல்வதுபோல் அவ்வழித் தெருவிற்குக் 'காத்தான் செட்டித் தெரு' என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.

## செட்டிப் பெருமக்கள்

நாகை நகர மக்களில் செட்டியார்களுக்கு நல்ல பங்கு உண்டு; செட்டியார் வணிகச் செட்டிமார், சேனைக் கொண்ட செட்டிமார் முதலிய பலவகையினர். இவர்தம் தொழில் பெரும்பகுதி வணிகமே. நாகை வளமான வணிக நகரமாகவும் திகழ்வதைப் பயன்படுத்தித் தமிழகத்துச் செட்டிமார் நாகை எல்லைக்கு வந்து குடியமர்ந்தனர். இன்றும் செட்டிச்சேரி உள்ளது. நகரத்துள்ளும் நல்லிடம் பெற்றனர். பெருவணிகம் செய்தனர்.

## வேளாள மக்களும் காளமேகமும்

காளமேகப் புலவர் நாகைக்கு வந்தபோது ஒரு புகழ்ப் பாடல் பெற செட்டிமார் விரும்பினர். அவரை அணுகி 1000 பொற்காசுகள் வழங்கி நாகை நகரத்தைச் சிறப்பித்துப் பாட வேண்டினர்.

தன்னுணர்வால் பாடும் இயல்புள்ள காளமேகம் பணத்தால் பாடல் பெற வந்தவரை வெறுத்தவராகப் பாடத் தொடங்கினர்.

பாடல் பெற விரும்பி வந்தோர் அப்போது வெங்காயம் உண்டு வந்திருப்பர் போலும். அதனால்

**"உள்ளிநாறும் வாயரும் உவட்டெழுந்த தலையரும்"** என்று பாடத் தொடங்க, செட்டிமார் அவரை அமைதிப்படுத்திப் பணிந்து வேண்டினர். பின்னர் அவர் பலதிறத்து வணிகத்தையும் பாராட்டி,

**"அஞ்சுவண்ண மும்தழைத்து அறத்தின்வண்ண மானஊர்"** என்று பாடினர். இவ்வரலாற்றுச் செய்தியைச் சோழமண்டலம் சதகம் கூறுகிறது.

## திருமேனி செட்டித் தெரு

திருமேனி செட்டியார் என்னும் நாகைச் செட்டியார் நாகையில் மட்டுமன்றி பிற ஊர்களிலும் அறங்கள் செய்தனர். மராட்டிய மன்னன் துளசா காலத்தில் 1767இல் திருமுல்லைவாயில் முல்லைநாதர் கோயில் திருப்பணி தொடங்கியது. இதற்குப் பல வணிகரும் உதவினர். இவ்வுதவி பற்றிய விவரம் துளசா காலத்துச் செப்பேடு ஒன்றில் பதியப்பட்டுள்ளது. அதில்,

"பிற்றார் நாகூர் சிவந்தலிங்க செட்டியாா் நாகப்பட்டண திருமேனி செட்டியார்" (22) எனும் இருவர் வருவாயில் பங்காக

தொடர்ந்து வழங்குதலாகிய மகமை வழங்க இசைந்தமை குறிக்கப்பட்டுள்ளது. இவ்விருவரும் நாகைத் துறைமுகத்தில் ஏற்று மதிப்பொருளில் கண்டி (ஒரு அளவை) 100 இற்கு 1 வராகன் என்றும், இறக்குமதிப் பொருளில் கண்டி 100 இற்கு 2 வராகன் என்றும் பிற பொருள்களில் 1/2 வராகன் என்றும் மகமை வழங்க இசைந்தமை பதிவாகியுள்ளது.

நாகையில் வாழ்ந்த பெருவணிகர் திருமேனி செட்டியாரின் அறச்செயல்களைப் போற்றிய நாகைத் தமிழர் அவர் வாழ்ந்த தெருவிற்குத் "திருமேனி செட்டித்தெரு" என்ற பெயரிட்டு இன்றும் வழங்கி வருகின்றனர். இதுபோன்றே 'மார்க்கண்ட செட்டித்தெரு' உள்ளது. வடநாடு போய்த் திரும்பி வந்த மீனவ குலச் செட்டி ஒருவரைப் பெருமைப்படுத்திக் கடற்கரையில் ஒரு பகுதி 'ஆரிய நாட்டுச் செட்டித்தெரு' என்று வழங்கப் பெறுகின்றது. மீனவரில் ஒரு பகுதியாளரும் செட்டிப்பட்டம் கொண்டவராவர்.

## தருமலிங்கம் செட்டி

"யாரையும் வாழ்தரத் தாங்கும்" நாகை என்றதற்கு இலக்கியமாக ஒரு செட்டியார் பெருந்தகை நாகையில் விளங்கினார். அவர் பெயர் தருமலிங்கம் செட்டியார்.

தஞ்சையை ஆண்ட விசயராகவ நாயக்கரின் பெயரனும் மன்னாரு நாயக்கரின் மகனுமானவன் திருவளர் செங்கமலதாசு. இவன் சிறுவனாயிருக்கும்போது பீசப்பூர் சுல்தான் ஆள்கள் இவனைத் தீர்த்துக்கட்டத் தேடினர். தஞ்சையிலிருந்து இச்சிறுவன் தப்பி நாகைக்கு வந்தான். நாகைத் தருமலிங்கம் செட்டியார் இவனை ஏற்றுத் தம் பாதுகாப்பில் வைத்திருந்து நாயக்க அரசன் குடும்பத்தாரிடம் ஒப்படைத்தார். இச் செங்கமலதாசு பின்னர் மராத்திய ஏகோசி வழங்கிய பொறுப்பால் தஞ்சை ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டான்.

நாகைத் தருமலிங்கம் செட்டியார் தம் பெயருக்கு ஏற்பத் தர்ம — அறத்தின் இலிங்கம் — திருவுருவாய்ச் சிறப்புற்றவர் ஆனார்.

## சமயம் சார்ந்த பெருமக்கள்

சமயத்தின் தனியொரு சிறப்புடையவராக நாகை மக்களில் குறிக்கப்பட்டவர் அதிபத்தர். இவர் சைவ சமய நாயனார். 63 சைவ நாயன்மாருள் ஒருவர். மீனவ குலத்தினர். அவர் வாழ்ந்த நாகை குப்பப்பகுதி மக்களின் தலைவர்.

"அதிபத்தர் பரதவத் தலைவர்" (23) என்று உமாபதிசிவம் பாடினார். அதிபத்தர் என்பது இயற்பெயர் அன்று. சிறப்புப் பெயராகும். இறையன்பாம் 'பக்தி' தமிழ் உருவில் 'பத்தி' எனப்படும். இறையன்புத் தன்மையைப் 'பத்திமை' என்றனர். அதிகப் பத்தி கொண்டவர் என்னும் பொருளில் 'அதிபத்தர்' என்று குறிப்பிக்கப்பெற்றார். மிகுதியாம் பண்பைக் குறிக்க 'அதி' என்னும் அடைமொழி கொடுப்பர். அதிகச் சுவையுடன் பாடுபவர் 'அதிமதுரகவி' எனப்பட்டார். அதிக வீரமுள்ளவர் 'அதிவீரராமர்' எனப் பெயர் பெற்றார்.

பத்தரையே "பத்தராய்ப் பணிவார்" என்று தொகையடியாருள் ஒரு தொகையடியராகப் பாடினார் சுந்தரர். அவரினும் சிறப்பாக 'அதிபத்தர்' என்று தனியாகக் குறிக்கப்பட்டமை கொண்டு இவர்தம் சிறப்பை உணரலாம். இவர் காலம் 7ஆம் நூற்றாண்டு.

மீன்பிடிக்கும் தொழில் கொண்ட இவர் ஒவ்வொரு நாளும் தம் வலையில் விழும் முதல் மீனைச் சிவபெருமானுக்குக் காணிக்கை யாகக் கடலில் விட்டு விடுவார். இதனைப் பொய்க்காது, ஒரு நோன் பாகக் கொண்டிருந்தார். பல நாள்கள் மீன் ஒன்றும் கிடைக்காத நிலையில் வறுமையில் வாடினார். இதனைக் கண்ட நம்பியாண்டார் நம்பி,

"நாகை அதிபத்தராகிய பொய்யிலியே" (24) என்று பொய்க் காதவராகச் சிறப்பித்தார்.

திருத்தொண்டர்களைத் தொகுத்த சுந்தரர் இவரை "நாகை அதிபத்தர்க் கடியேன்" எனற உயர்த்தி 63 தனியடியாருள் ஒருவராகக் கோத்தார். இதனை அடியொற்றிய திருத்தொண்ட புராண வரலாற்றிலும் இடம் பெற்றார். சேக்கிழார் தம் திருத்தொண்ட புராணமாம் பெரிய புராணத்தில் இவர் வரலாற்றை "அதிபத்த நாயனார் புராணம்" என்று 20 பாடல்களால் பாடினார்.

நாகையில் வாழ்ந்த சைவப் பெருமக்களின் முன்னோடி யானவர் அதிபத்தர். எளிய குடிமகனாகிய இவர் அரிய செயல் செய்த சைவச்சான்றோரானார்.

இடைக்காலத்தில் சைவத் தலைநகராக விளக்கம் பெற்று நாகையில் பூம்புகாரிலிருந்த சைவப்பத்தர் இங்கு குடியேறியிருப்பது தொடர்ந்து சைவம் புத்தத்தின் இடையேயும் பெருகியது என்பதை உணர்த்தும் ஏழாம் நூற்றாண்டில் பாடிய திருஞானசம்பந்தர்,

"பேணி வழிபாடு பிரியா தெழுந்தொண்டர்

காணும் கடல்நாகைக் காரோணத்தானே" என்று நாகையில் சைவத் தொண்டர்கள் காணப்பட்டதைக் குறித்தார். அன்னார் சைவ நெறிப் பேணிக் காத்தவர்; சில வழிபாட்டை நாளும் மேற் கொண்டவர்; அதை என்றும் பிரியாதவர்; சைவத்தொண்டிற்கு எழுந்தனர் என்றெல்லாம் நமக்குக் காட்டியுள்ளார்.

அவர் கூற்றின்படி நாகையில் நல்லாரும், பொல்லாரும் அயலாரும் இருந்ததை,

"நல்லார் அறஞ்சொல்லப் பொல்லார் புறங்கூற

அல்லார் அலர்தூற்ற அடியார்க் கருள்செய்வான்" (25) என்று பாடிக் காட்டியுள்ளார். இதனை ஒரு நோக்கில் சிறப்பாகவும் மறு நோக்கில் பொதுவாகவும் காணலாம்.

நல்லார் – சைவத்தார்

பொல்லார் – புத்தத் துறவியர்

அல்லார் – நாகையில் அல்லாதவராகிய சமணர் எனலாம். ஆயினும் சைவ அடியார்க்குக் காரோணத்தார் அருள்வார் என்றார்.

பொதுநோக்கில் நாகையில் நல்லவரும் இருந்தனர்;

பொல்லாதவரும் இருந்தனர்; தமிழர் அல்லாதவரும் இருந்தனர்.

கடுக்காய் ஊட்டச்சத்தும் மருந்தும் ஆவது. அதன் கொட்டையோ நஞ்சு. இஞ்சி உணவில் நல்ல சுவையேற்றி உடலையும் தேற்றுவது. அதன் தோல் நஞ்சு. "கடுக்காய்க்கு அகத்திலும், இஞ்சிக்குப் புறத்திலும் நஞ்சு" என்பது மருத்துவப் பழமொழி. கொட்டையில்லாக் கடுக்காயும் இல்லை; தோல் இல்லா இஞ்சியும் இல்லை அன்றோ!

19, 20 ஆம் நூற்றாண்டளவில் நாகையில் பல சைவப் பெரு மக்கள் சான்றோராக வாழ்ந்தனர். சைவத்திரு சோ. வீரப்பச் செட்டியார் வேதாகமம் பயின்று சைவசித்தாந்தம் கொண்டவர். இங்கு அலுவலராக வந்தடைந்த திரு மதுரை நாயகம் பிள்ளை சைவத்தில் ஊறி வெளிவையில் 'சைவசித்தாந்தச்சபை' கண்டவர்.

நாகை சைவச் சான்றோர் நிறைந்த நகரம் எனலாம்.

### திருமாலிய மக்கள்

அடுத்து வைணவமாம் திருமாலியம் சார்ந்த மக்கள் நாகையில் வாழ்ந்தனர். பிடிப்பான சமயப் பற்றுள்ள அன்னார் சௌந்தரப் பெருமாள் கோயிலைக் கண்டு திருமாலியம் வளர்த்தனர். முற்காலச் சான்றோராகக் குறிக்க இயலவில்லையாயினும் பிற்காலத்தே பல சான்றோர் சமயஞ்சார்ந்த நூல்களை ஆக்கினர். தம்பெயர்களைத் திருமாலிய ஆழ்வார் பெருமக்களின் அடியவர்களாக ஆக்கிக் கொண்டு வாழ்ந்துள்ளனர். திரு முத்துக்கிருட்டிண பிள்ளை இராமாநுசதாசர் என்றும் மற்றிருவர் ஆழ்வார்தாசர், வேங்கட விட்டலதாசர் என்றும் பெயர் சூட்டிக்கொண்ட திருமாலியப் பெரு மக்களாவர். (26)

நாகையில் திருமாலியம் சார்ந்தோர் பிடிப்புள்ள சமயத்தாராக வாழ்ந்தனர்.

### இசுலாமிய மக்கள்

பிற சமயத்தாருள் அடுத்து இசுலாமியம் சார்ந்த மக்களைக் குறிக்க வேண்டும். 15 ஆம் நூற்றாண்டில் நாகூரில் இசுலாமிய விடிவெள்ளி இடம்பெற்றது. அச்சமயத்து இறையடியார் அசரத்து காதிறு அவர்கள் நாகை மண்ணின்மைந்தரல்லர். இப்பெரியார் தம் நாகூர் அருளிப் பாடுகளால் இசுலாமிய மக்கள் பெருகலாயினர். மற்றையோர்க்கும் அருளினார். 1558இல் அடக்கமாயினார். அடக்க இடமான தர்கா இசுலாமியத்திருவிடமாகியது. நாகை யிலும் இச்சுமயத்தார் பெருகினர்.

நாகையிலும் நாகூரிலும் இசுலாமியம் சார்ந்த மக்கள் தம் ஐந்து கோட்பாட்டு நெறியில் படிந்து மௌலானாக்களைத் தம் சமயப் பெருந்தகைகளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

### கிறித்துவ மக்கள்

அடுத்து, கிறித்துவ சமய மக்கள் போர்த்துகீசியர் காலத்தில் (17 – ஆம் நூற்றாண்டில் இடம் பெற்ற) குடும்பங்கள் ஆகிக் கிறித்துவக் கோயில்கள் அமையும் அளவு பெருகினர். குறிப்பிடத்தக்க கிறித்துவச் சமயச் சான்றோராக எவரையும் குறிக்க இயலவில்லை. என்றாலும் அச்சமயத்தில் சில பிரிவினர்களாக அள்ளித் தெளித்தது போன்று நாகை நகரில் வாழ்ந்து வருகின்றனர்.

சமயப் பணியின்றி ஓர் இதழ்ப் பணியைச் செய்த ஒரு கிறித்துவ அறிஞரை இங்குக் குறிக்கவேண்டும். நாகைப் புகைவண்டித் துறை

அலுவலகத்தில் பணியாற்றிய திரு 'ஆலிவர்' என்பார் ஓரளவில் வளவாழ்வுடன் வளமான அறிஞராகவும் வாழ்ந்தார். இவர் ஆங்கிலத்தில் 'நாகபட்டினம் இதழ்' என்னும் பெயரில் ஓர் இதழைத் தொடர்ந்து வெளியிட்டார்.

அந்த இதழில் மாவட்டச் செய்திகள் பலவற்றைப் பதிந்துள்ளார். தஞ்சையில் இப்போதுள்ள 'இராசா மிராசுதார் மருத்துமனை' அமைவதற்கு அக்காலத்தில் நிகழ்ந்தவற்றை அவ்விதழில் காணலாம். நாகைக் கலைபற்றியும், தொழில் பற்றியும் பல *அரிய நிகழ்ச்சிகளை* வெளியிட்டார். அவ்விதழ்களின் தொகுப்பு நல்ல பதிவேடு ஆகும். இவர் *நாகை நகராட்சித் தலைவராகவும்* இருந்தார். இத்தாலியப் பயணி 'சீசர் ஃபெடெரிசி (Cesare Fedaric) "நாக பட்டினம் பெரிய நகரம். கிறித்துவர்கள் இங்கு மேம்பட்டிருந்தனர்; பெருந் தகவாக வாழ்ந்தனர்" என்றெழுதினார்.

## பெரியார் கொள்கையர்

சமய எண்ணத்தை ஒரு நோக்காகக் கொள்ளாமல் கடவுள் *பற்றால்* பெரும்பகுதி திருநீறு பூசி வாழும் மக்களும் உள்ளனர். அன்னார் இந்தக் கோயில் – அந்தக் கோயில் என்று பாராது தம் பார்வையில் படும் எந்தக் கோயிலைக் கண்டாலும் ஒரு முழுக் கும்பிடோ அரைக் கும்பிடோ போட்டு வணங்கிச் செல்வோராகவும் உள்ளனர்.

கடவுள் பற்றில்லாக் கடவுள் மறுப்பாளர்களாகத் திராவிட இயக்கத்தார் நாகையில் அவ்வப்போது இடம்பெற்று வாழ்ந்து வருகின்றனர். இன்னோர் பெரியார் ஈ.வே.இரா அவர்களது பகுத்தறிவுக் கொள்கை கொண்டோராக எச்சமயமும் சாராமல் சமயத்தைச் சாடி, "மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்" என்னும் வள்ளலார் கருத்தை ஒட்டியும் வாழ்ந்தனர்; வாழ்கின்றனர்.

இத்தனை வகையினர் இருப்பினும் சமயக்காழ்ப்பு இல்லா மக்களாகவே நாகையரைக் காண்கிறோம். இராமர் பிள்ளையார் வலைவீசுவதற்குப் வலையைப் பிடித்துள்ள சில குறுக்கீட்டாளர் இந்நாகை சமயப் பொதுமையான அமைதியைக் கெடுக்க முனைந்தனர். அப்படி செய்யாமல் நாகை மக்கள் தாக்குப்பிடித்துப் பொறுமையாக வாழ்வர்; வாழ்கின்றனர்.

### நாகைச் சீமைக் குடியானவர்

திருவாரூர் தியாகராசர் கோயில் கமலாலயம் அல்லியங் கோதையம்மன் கோயில் திருப்பணிக்கும், இவ்விரண்டு கோயில் களுக்கும் புதிதாகப் பார்ப்பனப் பயணிகளாக வருவோர்க்கு நாள்தோறும் உணவளிப்பதற்கும் ஓர் அறக்கட்டளை நிறுவப்பட்டது.

இது மராட்டிய மன்னன் சகசி ஆண்ட 1695 இல் நிறுவப்பட்டது. மராட்டிய சகசி ஆட்சியில் வேளாண்மை செய்து கொள்ள நிலத்தைக் குடிஉரிமையாக 36 ஊரார் பெற்றிருந்தனர்.

அவர்களுள் வேளாண் குடியினர் 22 ஊரவர். அவர்களுள் "நாகபட்டினச் சீமைக்" குடியானவரும் பங்கு கொண்டனர்.

இவர்கள் அறக்கட்டளையின்படி ஒவ்வொரு அறுவடையிலும் 100 கலத்திற்கு 1 மரக்கால் நெல் வழங்க வேண்டும். நாகைப் பகுதி வேளாண் குடியானவர் விரும்பியோ அரசர் விருப்பப்படியோ இவ்வறத்தைச் செய்துள்ளனர். (27)

இவ்வாறாக அறச்சான்றோர் அன்றித் தனித்தனிக் குழுவினராக நாகையில் வாழ்ந்தவருள் பாளையக்காரர் இருந்தனர். அவர்கள் வாழ்ந்ததுதான் வெளிப்பாளையம் என்று அறியப்பட்டது. நாயக்க மன்னர் காலத்திலும் நாயக்க இனத்தவர் அமைக்கப்பட்டிருந்ததை இப்போதும் வெளிப்பாளையத்திலுள்ள இராம நாயக்கன் பாளையம் சொல்லிக் கொண்டுள்ளது.

## ஈ. சமய மக்களின் பொதுமை

அறம் செய்வதில் இந்து, இசுலாமியர் வேறுபாடியன்றிக் கூட்டாகச் செய்தனர். அதனிலும் மேலாக இந்துக்கள் இசுலாமியப் பள்ளிவாசலுக்கும் இசுலாமியர் இந்துக் கோயில்களுக்கும் செய்தனர்.

நாகூர் தர்காவிற்கு மராட்டிய மன்னர் பல அறங்கள் செய்தார். பெரிய மனோரா மராட்டிய மன்னன் பிரதாபசிங்கால் கட்டப் பட்டது. அறம் மட்டுமன்றி இசுலாமிய தர்காவை வணங்கினர். பெரிய மனோரா எழுப்ப நிலம் வழங்கியதைக் குறிக்கும் கல்வெட்டில் துளசாமகன் "பிரதாபசிங் வணங்கி அளித்த நிலத்தில்" என்று அவன் செய்த வழிபாட்டு வணக்கம் குறிக்கப்பட்டுள்ளது. இந்த மனோராவின் மேல் இந்துக் கோயில் முறைப்படி கலசம்

வைக்கப்பெற்றது. அந்தக் கும்பம் வைத்ததை ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகக் கருதி அது வைக்கப்பட்ட நாள் "தை மாதம் 9 ஆம் நாள் கும்பம் வைத்தது" என்று குறிக்கப்பட்டுள்ளது.

20 ஆம் நூற்றாண்டிலும் நாகூர் பக்கிரிசாமி செட்டியார் மகன் கோவிந்தசாமி செட்டியார் நாகூர் தர்காவிற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளார். வடக்கு மனோராவிற்குத் தங்கக் கலசத்தைக் கூத்தாநல்லூர் மகாதேவ அய்யர் செய்து வழங்கியுள்ளார். இவற்றிற்கும் கல்வெட்டுகள் உள்ளன.

இசுலாமியர் இங்குள்ள இந்துக் கோயில்களுக்குச் செய்த அறங்கள் கிடைக்கவில்லை எனினும் செவிவழிச் செய்தியாகப் பல கேள்விப்படுகிறோம். ஏகோசி காலத்தில் தஞ்சாவூர் கொங்கனேசுவரர் கோயிலுக்குப் பாசிக்கடை மீரா என்பவரும் பிரதாபசிங் காலத்தில் பாசிப்பேட்டை அகமது இராவுத்தர் என்பவரும் முறையே 6.12.1735 இலும் 9.6.1758 இலும் கொடை அளித்து வந்தனர்.

பிற்காலத்தே மேலைநாட்டார் ஆளுகையின்போது கிறித்துவக் கோயில்கள் அமைந்தபோது தமிழர்கள் பொருளுதவி செய்துள்ளனர். இவ்வாறாக மதப்பிணக்கின்றி நாகை மக்கள் வாழ்ந்தமையும், வாழ்ந்து வருகின்றமையும் குறிக்கத்தக்கன. இன்னும் நாகை மாரியம்மன் கோயில் விழா, நாகூர்க் கந்தூரி விழா, வேளாங்கன்னித் திருவிழாக்களில் அவ்வம்மத மக்களுடன் ஏனையவரும் பங்கு கொள்வதைக் காண்கிறோம்.

அறச்சான்றோராகத் திகழ்ந்தது போன்று வணிகச் சான்றோராகவும், தொழிற் சான்றோராகவும் கல்விச் சான்றோராகவும் இவற்றையெல்லாம்விட மேலாக உழைப்புச் சான்றோராகவும் திகழ்ந்தவர்; திகழ்ந்து வருபவர் நாகை மக்கள். தொன்மைக் காலம் முதல் இன்றுவரை கடற்கரை வாழ்க்கையைக் கொண்டுள்ள கடலோடிகளாக ஆடவரும் மீன் வாணிபராக மகளிரும் வாழ்ந்து வருவதும் உழைப்பின் சின்னமாக இருப்பதும் குறிக்கத்தக்க ஒன்றாகும்.

## உ. நாகைக் கலை மக்கள்

நாகை நகரத்து மகளிர் கலைகளிற் சிறந்தோராக ஆடற் கலையில் வல்லவராக இருந்தனர். இதனை,

"மங்கைமார் ஆடல் ஓவா மன்னு காரோணத்தான்" என்று அப்பரும்

"கலவ மயில் இயலவர்கள் நடமாடும் செல்வக் கடல்நாகை" என்று சுந்தரரும்

"பாடலும் நாடக சாலையும் பைந்தொடியார்

ஆடலும் சூழ்கின்ற ஆலயம்" என்று கவித்திருமதி காளிமுத்து அம்மையாரும் பாடிய பாடல்கள் குறிக்கின்றன. ஒரு பழம்பாடல் நாகை நகரமாதர் திருமகள் போன்றவர் என்றும், அவர்தம் கண்கள் காமவேளை நிலைநாட்டும் காவிமலர்க்கு எதிரானவை அல்ல; ஒத்து இமைப்பவை என்றும், பண்ணை (இசையை) மலர்த்தும் யாழ்பயில் கையினர் என்றும் பாடியுள்ளது.

"தண்மலர் வில்லிதன் பேராமைக்குத் தயையத்த

கண்மலர்க் காவிக் கெதிரா னதுமன்று, கைப்பொலிந்த

பண்மலர் யாழ்பயில் வரஆர்வு சேர்பதி நாகை, மிக்க

தண்மை கயத்துப் பதுமத்த மாதர் தடங் கண்களே" இப்பாடலை வீரசோழிய மேற்கோள் பாடலாகக் காண்கிறோம். இராசராசப் பெருமன்னன் எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார் கோயிற் பணிகளுக்காக 400 சிலதியர் என்னும் பணிப்பெண்களை அமைத்தான். அன்னார் 'தளிச்சேரிப் பெண்டிர்' எனப்படுவர். அவருள் நாகைப் பெண்டிர் இருவர் இடம்பெற்றனர். அவருள் ஒருத்தி கூத்துக்கலை பயின்றவள். பெருவுடையார் தேவர்க்கு அடித்தொழில் செய்த தேவரடியார் இருவர்.

## முருங்கையில் முசுமுசுக்கை

கலைத் திறனுடைய மகளிர் பொதுமக்கள் கண்ணிற்படுவர். கற்புப் பண்புடைய மகளிர் இல்லத்தில் அடங்கியிருப்பர். அவருள்ளும் சான்றோர் உளர்.

ஊட்ட உணவாகவும், மருந்தாகவும் பயன்படும் இலைக் கீரையைத் தரும் முருங்கை மரத்தின் அடியில் முசுக்கட்டான் என்னும் கம்பளிப்பூச்சி இருக்குமன்றோ? அதுபோன்று நாகை மகளிரிடையே பரத்தையரும் தேவரடியாராக வாழ்ந்தனர்.

வசை பாடுவதில் வள்ளலான காளமேகம் பாடல் இது:

"வாய்த்த திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள் – நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணான்தான் கண்டுகொண்டே னென்றே
பழுதையெடுத் தோடிவந் தான்" (28)

## ஒரு முத்து

இத்தகைய முசுக்கட்டான்களிடையே ஒரு முத்தும் தோன்றியது. புலால் நாறும் சிப்பியில்தானே ஒளிவிடும் தூய முத்து தோன்றுகிறது. அதுபோல் தேவரடியார் குலத்தில் ஒரு முத்து தோன்றியது. அது காளிமுத்து அம்மையார். இவர் ஒரு கவித்திருமதியார். காத்தான் வருண குலாதித்தன்மேல் "வருண குலாதித்தன் உலாமடல்' பாடினார். இன்பச் சுவைப் பேழையாகப் பாடிய புலமைச் சான்றோர் இவர்.

## ௩௯. உலகெங்கும் நாகையர்

நாகை மக்கள் நாகையிலும் தமிழகத்துப் பிற நகர்களிலும் இந்தியப் பரப்பிலும் ஓரளவில் பரவினர். அலுவலர், வணிகம், தொழில், பணி செய்தனர். வெளிநாடுகளுக்கும் சென்றனர். கீழை நாடுகளுக்கு அரசர்கள் காலத்தே ஓரளவில் வணிகத்திற்கும், புத்த சமய, சைவ சமயத் தொடர்பிலும் சென்றனர். நகரத்தார் என்னும் செட்டிமார்கள் கீழைநாடுகள் பலவற்றிலும் வட்டிக்கடைகளும், தொழிலகங்களும் நடத்தினர். இதனால் "தனவணிகர்" எனப் பட்டனர். இரங்கூன், சைகோனில் நாகைப் பெருமக்களும் வணிகம் செய்தனர். வருவாய் திரட்டி நாகைக்கும் வளம் திரட்டினர்.

இவற்றுடன் சிறுபணியாளர்களாகவும் தொழிலாளர்களாகவும் கங்காணிகளாகவும் இலங்கை, தாய்லாந்து, யாவா, சுமத்திரா, மலேயா, சிங்கப்பூர், பர்மா, மொரீசியசு, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இடம் பெற்றனர். இருப்பினும் அங்கேயே தங்கியோர் மிகச் மிகச் சிலரே. ஏனையோர் ஈட்டிய பொருளுடன் நாகை வந்து நகரில் வளமாக வாழ்ந்தனர். இசுலாமியப் பெருமக்கள் குறிப்பாக இந்தோனீசியாவில் தம் மதத்தைப் பரப்பவும், நாட்டவும் நாகையிலிருந்தே சென்றனர். இன்று இந்தோனீசியா குறிப்பிடத்தக்க இசுலாம் நாடாகத் திகழ்வதற்கு நாகை வழிப்பயணிகளே வழிவகுத்தவராவர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கீழை நாடுகளுக்கு, குறிப்பாக மலேயா, சிங்கப்பூர் பர்மா நாடுகளுக்குப் பயணிகள், கப்பல் வழிச் சென்றோர் தொடர்ந்து பெருகினர்.

தமிழகத்துப் பழங்குடியினரை ஆய்ந்த அறிஞர் எட்கர் தர்ஸ்ட்டன் என்பார் தம் நூலில் வெளிநாட்டிற்கு நாகை வழியே சென்றோர் எண்ணிக்கையைப் பிற துறைமுக நகர்களுடன் ஒப்பிட்டு ஒரு கணக்கைத் தந்துள்ளார்.

1906ஆம் ஆண்டில் மட்டும்

மலேயா, சிங்கப்பூருக்குக் கப்பற் பயணிகளாகப் பிழைக்கச் சென்றோர் (தென்னிந்தியர் மட்டும்),

| | |
|---|---|
| பாண்டிச்சேரி | 55 பேர் |
| கடலூர் | 588 பேர் |
| போர்ட்டுநோவா | 2555 பேர் |
| காரைக்கால் | 3422 பேர் |
| நாகை, நாகூர் | 45,453 பேர் (29) |

நாகை, நாகூர் வழியே சென்றோர் எண்ணிக்கை மற்றவருடன் நோக்கும்போது எத்தனை மிகப்பெரிது என்பதை அறியலாம். இவருள் நாகை, நாகூர் மக்கள் மிகப்பலர்.

இவ்வாறு சென்றோருள் பெருவணிகர், சிறுவணிகர், பணியாளர், தச்சர் கொல்லர் முதலிய தொழிலாளிகள், படகுகள் கட்டுவோர், சங்கறுப்போர், மணிகோப்போர், கலங்களில் பணிபுரிவோர், ஆசிரியர் அடங்குவர்.

இன்றும் அவ்வந் நாடுகளில் தமிழ்க் குடிமக்கள் அவருள் நாகை மக்கள் மிகச் சிறு அளவிலும், தாய்லாந்து, மொரீசியசு நாடுகளில் பெருமளவிலும் குடியமர்ந்து அந்நாட்டு மக்களாகவே அந்நாட்டை வளப்படுத்துகின்றனர். பெரும்பாலோர் சென்று உழைத்துப் பொருளீட்டித் தாய் நகர் வந்து தம் நாகை நகரை வளப்படுத்தி யுள்ளனர்.

நாகை நகரையே தம் வாழ்வுத் திருவிடமாகக் கருதி வந்தோர் பலர், இங்கேயே குடியமர்ந்து உழைத்து வாழ்ந்து நாகையையும் வளப்படுத்தினர்.

## ஏ. பெயர் பொறித்த பெரியோர்

முற்காலந்தொட்டுப் பெருமக்கள் பலர் சிறப்புற வாழ்ந்து நாகை நகரையும் சிறப்பில் நிறுத்தினர். 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் குறிப்பிடத்தக்கோரை இங்கு சுருக்கமாகவேனும் பதிவது நூலாசிரியர் கடமையாகும்.

பெருமக்கள் பலவகையினர். ஆங்கிலேயர் ஆட்சியில் பெருஞ்செல்வராகவும் செயற்கரிய செய்தோராகவும் இருந்தோரைப் பாராட்டி மதிக்க விரும்பிய ஆட்சியர் அத்துடன் அவரைத் தம் கைக்குள் வைத்துக் கொள்ளும் உள் நோக்குடன் 'சர்', 'இராவ் பகதூர்', 'திவான்பகதூர்', 'கான்பகதூர்', 'ஆனரபிள்' முதலிய விருதுகளை வழங்கினர். அவ்வாறு விருதுகளைப் பெற்றோராக நாகை மக்களும் திகழ்ந்தனர். அவருள் சிலரையும் பிற பெருமதிப்பிற்குரியார் சிலரையும் இங்கு குறிப்பிட நாகை நகராட்சித் தலைவராயிருந்தோர் என்னும் எல்லையை வைத்துக்கொண்டு சுருக்கமாகக் காண்போம்.

நாகை நகராட்சியின் முதல் தலைவர்

திரு. சி.வி. சுயம்பு ஐயர் 1.4.1885 முதல் 21.9. 1885 வரை.

திரு எஃப். ஆலிவர் (இருமுறை) 22.9.1885 – 2.3.1886; 21.4.1892 – 2.3.1896.

ஆனரபில் ஆர். இரத்தினசபாபதிப் பிள்ளை (இருமுறை) 22.8.1886 – 20.4.1892; 4.11.1895 – 12.7.1902.

இராவ்பகதூர் கே.எஃச் வேங்கடராமய்யர் (இருமுறை) 13.2.1908 – 27. 6. 1914; 26.4.1917 – 24.9.1918.

ஆனரபிள் கான்பகதூர், சர் ஏ.டீ, மரைக்காயர் (இருமுறை) 25.8.1916 – 3.12.1917; 25.9.1920 – 12.12.1924.

திரு. வே.ப. பக்கிரிசாமிபிள்ளை (இருமுறை) 19.2.1924 – 10.5.1924; 24.8.1924 – 30.10.1924.

திரு. வே.ப. கா காயாரோகணம் பிள்ளை 12.11.1934 – 31.3.1938.[1]

காயாரோகணம் பிள்ளை திரு வே.ப. பக்கிரிசாமி பிள்ளை மகனார். இவர்கள் இல்லத்தில் பனகல் அரசர், பொப்பிலி அரசர், சர். தியாகராயர், டாக்டர் நடேசன் ஆகிய நீதிக்கட்சிச் சான்றோரது படங்கள் அமைந்துள்ளன.

இன்னோர் அனைவரும் பெருஞ்செல்வர்; தாழ்விலாச் செல்வர்; தாழ்விலா எளியவர். இருவரும் நகராட்சித் தலைவராக இருந்தனர்.

ஒருவர் வாழும் திரு. சு. மா. அரங்கசாமி. இவர் ஓர் எளிய பூக்கடைக்காரர். மற்றவர் திரு ஈசுவரி, இருவரும் தி.மு.க.வினர். எளியோரான தக்கார் இருவர் பிற பல எளிய பெருமக்களுக்கும் சான்று ஆவர். ஏனையப் பெருமக்கள் பலரும் நகராட்சித் தலைவராக இருந்தனர்.

## மா. சிங்காரவேலர்

நகராட்சித் தலைவர் என்னும் சுற்றுக்கோட்டில் அல்லாமல் நாகையை அணிசெய்தோர் மிகப்பலர்.

சுருக்கமாகக் குறிப்பிடத்தக்க பல்வகையான சிலர் பின்வருவோர்

"போர்க்குணம் மிகுந்தநல் செயல் முன்னோடி
பொதுவுடைமைக் கேகுக அவன் பின்னாடி" என்றும்

"சிங்கார வேலரைப் போலச் சிந்தனைச் சிற்பி
எங்கேனும் கண்டதுண்டோ" என்றும் பாவேந்தர் பாரதிதாசனால் பாடப்பெற்ற அவர்தம் நண்பர் திரு மா. சிங்காரவேலர் குறிப்பாகக் குறிக்கத்தக்கவர். இவர் பாரதியார்க்கும் பெரியார் ஈ.வே.இரா. அவர்கட்கும் நண்பர். தொழிற்சங்கங்களைத் தோற்றுவித்துப் பெரும் போராட்டப்புரட்சி செய்து 1924இல் கான்பூர் சதி வழக்கில் ஆட்பட்டவர். இந்தியா முழுமையும் புகழ்பெற்றவர். 1933 இல் சென்னை 'ஒயிட்சு நினைவுக்கூட' த்தில் முதன்முதலாக நாத்திக மாநாட்டைக் கூட்டியவர்.

1. நகராட்சித் தலைவர்கள் விவரத்தைப் பெற்று வழங்கியவர் திரு. கோ. சண்முகவேலு அவர்கள்.

இவரைப் போற்றும் நினைவாக நாகை ஆரிய நாட்டுச் செட்டித் தெருவில் 'மா. சிங்காரவேலர் படிப்பகம்' நிறுவப்பட்டுள்ளது. இவர் மீனவர் குலத்தவர்.

திரு அருணாசலம் பிள்ளை என்னும் வள்ளலார் அடியொற்றிய பெருமகன் வாழ்நாள் முழுமையும் வள்ளலார் புகழ் பரப்பி வாழ்ந் தார். "பெருநெறி பிடித்தொழுக வேண்டும்" என்ற அருட்பாவின் படி பசித்திருந்தும் தனித்திருந்தும் விழித்திருந்தும் வள்ளலார் அறிவித்த பதவி பெற்று வாழ்ந்தவர்.

வழக்கறிஞர் திரு விசயராகவலு நாயுடு வெளிப்பாளையத்தில் வாழ்ந்த தன்மானங் காத்த பெரியார். தந்தை பெரியார் வழிக் கொண்டவர்.

திரு. ஆர். வி. கோபால் அவர்களும் பெரியார் வழியில் பகுத் தறிவை நாகையில் பரப்பியவர்.

முதன்முதலில் இசைத்தட்டில் பாடியதால் 'பிளேட் வேங்கடராம ஐயர்' என்பார் நாகையில் வாழ்ந்த இசைப்பெருமகனார்.

இசைப்பெருமாட்டி திருமதி வசந்தகோகிலம் இசையுலகில் 'இசைக்குயில்' எனப் புகழ் நாட்டிய மகளிர்குல இன்னோசை.

திரைப்படத்துறையின் முன்னோடியாகத் திகழ்ந்த திரைப்பட இயக்குநர் திரு கே. சுப்பிரமணியம் நாடகக் கலையை வளர்த்துப் பல நாடகப்பெருமக்களை உருவாக்கியவர்.

புலவர் மருத்துவர் திரு ப.மு. சொக்கலிங்கனார் எளிய மக்களுக்கு எளிய காசு பெற்றும், இலவயமாகவும் மருத்துவம் செய்தவர். இவர் சீர்காழி முத்துத் தாண்டவராயப் பிள்ளை மகனார்.

நாகூரில் வாழ்ந்த வழக்கறிஞர் திரு. சூரியமூர்த்தி செட்டியார் தமிழ் ஆர்வலர். நெஞ்சுரம் படைத்தவர். நாகூரில் தமிழ் மக்களுக்கு அரணாக விளங்கியவர்.

திரு தண்டபாணி செட்டியார் விறுவிறுப்பான செயல் திறத்த வணிகர். புதுமையாகச் செயலாற்றியவர்.

திரு கே.பி. நடராசன் பொதுவுடைமை இயக்கத் தோழர். தஞ்சை மாவட்டமெங்கணும் இயக்கப் பணி செய்தவர். திருமணம் கொள்ளாது வாழ்ந்தவர்.

இன்று வாழ்வோரில் திருமதி இராசம்மாள் தேவதாசு அவர்கள் கல்விப் பேரறிஞர். கோவை அவிநாசிலிங்கம் செட்டியார் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராகத் தொடர்ந்து இருந்து கல்விப்பணி புரிபவர். தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க காந்தியக் கல்வி அறிஞர்.

திரு இலட்சுமண நாயுடு காங்கிரசு பேரியக்கத் தொண்டராக நாட்டு விடுதலைப் படையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்.

நாகை மக்கள் 'அண்ணாச்சி' என்று அன்புடன் அழைத்து மகிழும் வணிகத்திரு அ.து. செயவீரபாண்டிய நாடார் கல்விப் பெரு வள்ளல். தொடக்கக் கல்வி முதல் கல்லூரி வரை கல்வி நிறுவனங் களைத் தோற்றுவித்துத் தம் வருவாயை ஈடுபடுத்தி வருபவர். ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தில் 20 ஆம் நூற்றாண்டுக்குச் செம்மல்.

இசையுலகில் புகழ் நிறுத்தி வரும் இசை முரசு நாகூர் அனீபா தென்னகத்திலும் வட நாட்டிலும் திரையுலகிலும் கீழை நாடுகளிலும் முரசு கொட்டும் இசைத் தோன்றல். கணீர்க் குரலே இசைமுரசு எனக் காட்டும்.

நாட்டு மேனிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு. சீ. பாலசுப்பிரமணியம் சாரண இயக்க நற்பணி யினர். பொது நிகழ்ச்சிகளில் தோய்ந்து நிற்பவர். ஏறத்தாழ எண்பது அகவைக்குச் செல்லும் இவர் 'S.B' என்பதற்கு ஏற்ப (Yes: Bee) 'ஆம் தேனீ' யாக வாழ்பவர்.

இத்தகு பொதுநிலைச் சான்றோருடன் தமிழ்ப் புலமைச் சான் றோராக வாழ்ந்தோர் பலர்.[1]

## ஏ. நாகையில் பாராட்டுச் சின்னங்கள்

நாகை ஈன்ற – போற்றத்தக்க பெருமக்கள் பலர். அவரை நாகை நகர மக்கள் மதித்து அவ்வப்போது பாராட்டு நினைவுச் சின்னங் களை நிறுவினர். இன்றும் அச்சின்னங்களை நாகையில் வாழ் வோர் அன்றன்று கண்டு மகிழ்கின்றனர். நகர்க்கு வருவோரும் கண்டு உவக்கின்றனர்.

நாகூரில் அடக்கமான இசுலாமிய ஆன்மீகத் திருமகனார் அசரத் காதிறு அவர்களை நாகூர் ஆண்டவர் என்று போற்றுகின்றனர். அவரடக்கமான தர்கா பீடுற்று நினைவுச் சின்னமாக அமைந்தமை நாடறிந்து போற்றும் சமயச் சின்னமாகும்.

நாகை குமரக் கடவுள் மீது 'திறப்புகழ்' என்னும் இலக்கியம் பாடிய அழகுமுத்துப் புலவரின் திருவுருவம் நாகைக் குமரக் கடவுள் கோயிலின் வழிபாட்டுத் தெய்வமாகவே கருதப்பட்டுள்ளது.

இக்கோயில் உருவாக முனைந்து துணை நின்ற பாண்டிச்சேரி திரு ஆனந்தரங்கம் பிள்ளையவர்களது உருவச் சிலையும் இக்கோயிலில் அமைக்கப்பெற்றுத் திகழ்கிறது.

முன்னர் நாகைக் கல்லறைத் தோட்டத்தில் கண்ட கல்லறை மண்டபம், ஆலந்துப் பெருமாட்டியுடன் அவர்தம் செல்வங்களின் நினைவுக் கலை மண்டபமாக நிற்கிறது.

ஆலந்தர் காலத்துக் கொடிமரத்து மேடையும், புதுக் கிறித்துவக் கோயிலில் அமைக்கப் பெற்றுள்ள ஆலந்துப் பெருமாட்டியின் மரச்சிற்பமும் காணத்தக்கவை.

நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார்க்கு நாகை மக்கள் நாகைத் தமிழ்ச் சங்கத்தின் வழியாக எடுத்துள்ள முழு வெண்கலச்சிலை நாகை புகைவண்டி நிலைய முகப்பில் பெருமிதக் காட்சி தருகிறது.

புகை வண்டி நிலையத்தின் உள்ளே "நிறை தமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார் பிறந்த நகரம்" என்று அறிவிக்கும் வார்ப்புப் பாளம் தமிழ்ப் பெருமகனார்க்குப் புகை வண்டித் துறையார் சேர்த்த பெருமையாகும்.

நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார் பெயரில் இரண்டு புறநகர்ப் பகுதிகள் 'மறைமலை நகர்' என்னும் பெயரில் அரசு ஊழியர், மக்கள் குடியமைவுகளாக உருவாகியுள்ளன.

அண்ணல் காந்தியடிகளின் அமர்ந்த தோற்றச் சிலை ஒன்று நாகை அபிராமியம்மன் கோயில் திருமுன் நிறுவப்பட்டு அண்ணலை நினைவுறுத்திக் கொண்டுள்ளது.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது சிலைகள் முறையே நாகை நகர் நுழைவாயிலான புத்தூரிலும், மேலைக் கோட்டை

வாயிலிலும் நின்ற தோற்றத்தில் அரசியல் பண்பாட்டை நினை வுறுத்தும் சின்னங்களாக நிற்கின்றன.

நாகைப் பெருமகனாராக வாழ்ந்த திரு.வே.ப.கா. காயா ரோகணம் பிள்ளை அவர்களது மார்பளவுச் சிலை 'அனைத்து இணக்க மன்றம்' (Casmopoliton Club) முகப்பில் காட்சியளிக்கிறது.

முன்னாள் நகராட்சி தலைவர் திரு. அ.மு.பொ. திருவம்பலம் செட்டியார் அவர்களது பெயரால் ஒரு சிறு நூலகம் நகராட்சி நூலகமாக இன்றைய மருத்துவமனை அண்டையில் இருந்தது.

பூங்காச் சின்னங்களாக நாகையில் வெளிப்பாளையம் புகை வண்டி நிலையத்திற்கு அண்மையில் சாலமன் பூங்கா, வெளிவையில் தம்பித்துரை பூங்கா உள்ளன.

இந்நூலாசிரியரின் தமிழ்ப் பணியையும், பொதுப்பணியையும் பாராட்டும் நோக்கில் 'வீடுவாய்ப்பற்றோர் சங்கத்தார்' நாகை வெளிவையில் "இளஞ்சேரன் நகர்" என்னும் புறநகர்ப் பகுதியை உருவாக்கியுள்ளனர். இஃது எளிய புலவரையும் பாராட்டும் நாகை மக்களின் பெருந்தகவான சின்னமாகும்.

நாகையைச் சார்ந்த பொய்யூரில் தமிழ்ச் சித்தர்களில் ஒருவரான கோரக்கர் வந்து தங்கிப் போனதன் திருக்குறியாக அவர்தம் திருவடி வடிவமைத்த நினைவிடம் உள்ளது.



## அழகு முத்துப் புலவர்

| ஆசிரியர் கொண்டுகாட்டி | கொண்டு காட்டி நூற்குறுக்கம் |
|---|---|
| 1. அவ்வையார் | : புறம். – 187; 3,4 |
| 2. திருவள்ளுவர் | : திரு. – 996 |
| 3. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி | : புறம். – 182 |
| 4. சேக்கிழார் | : தி.தொ.புரா. – அதிபத்தர் – 4 |
| 5. திவாகரர் | : திவா. நி. – பல்பெயர்க் கூட்டத் தொகுதி |
| 6. மயிலை நாதர் – பேராசிரியர் | : நன். 272 – தொல். சொல். 400 உரைகள் |
| 7. உருத்திரங்கண்ணனார் | : பெரும்பாண் – 322,323 |
| 8. உருத்திரங்கண்ணனார் | : பெரும்பாண் – 325 – 349 |
| 9. உருத்திரங்கண்ணனார் | : பெரும்பாண் – 316 – 318 |
| 10. சுப்பிரமணிய பாரதி, சி. | : பார. பா. – தொடர் எண் 231 (த.பல்.பதிப்பு) |
| 11. இளங்கோவடிகள் | : சிலம்பு – 16 – 17 |
| 12. மாங்குடி மருதனார் | : மது. காஞ் – 476 |
| 13. சாத்தனார் | : மணி – 14 – 74 |
| 14.——— | : இராசே. மெய். |
| 15. உருத்திரங்கண்ணனார் | : பட். பா. – 191 |
| 16. உருத்திரங்கண்ணனார் | : பட். பா. – 217 |
| 17. சாத்தனார் | : மணி. – 19 – 109 |
| 18. இளங்கோவடிகள் | : சிலம்பு – 14 – 109 |
| 19. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சி. | : திரு.நா.கா.பு. திரு நகர – 3 – 2, |
| 20. பெருந்தேவனார் (உரையாசிரியர்) | : வீரசோ – உரைமேற்கோள் |
| 21. காளிமுத்தம்மை | : வரு. உ.மடல் – கண்ணி. 298 |
| 22. ——— | : தரு. ஆ. செப். 4 – வரி – 10,11 |
| 23. உமாபதி சிவம் | : தி.தொ.புரா. சாரம். – 48 – 3 |

| | |
|---|---|
| 24. நம்பியாண்டார் நம்பி | : தி. தொ. புரா. திருவந்தாதி 52: 3,4. |
| 25. திருஞானசம்பந்தர் | : திரு.ஞா. தேவா – நா. கா. பதி: 5–314 |
| 26. ஆதிகேசவன், இரா. | : மறை. நி. மலர். – பக். 231 |
| 27. ——— | : சென். அரு. செப். – வரி 24–33 |
| 28. காளமேகப் புலவர் | : தனி. சிந். – பக். 96 பாடல் 107 (பதிப்பு 1908) |
| 29. எட்கர் தர்ஸ்ட்டன் | : தென். குல. குடி. – தொகுதி – முகவுரை x viii (த.பல். தமிழ்ப் பதிப்பு) |
| 30. திருவள்ளுவர் | : திரு. 751 |

# 6. சமய நாகை

## அ. சமயம்

சமையம் என்றால் சமைக்கப்பட்டது என்று பொருள். இதன் தொழிற்சொல் சமையல். சமையம் என்றால் 'உணவை அமைத்தல் – உணவைப் பக்குவப் படுத்தல்' என்னும் பொருள்தான் முதலில் தோன்றும். நாள்தோறும் உண்ட பழக்கத்தால் அவ்வாறு தோன்றும்.

இச்சொல்,

"அம்" எனும் வேர்ச்சொல்லைக் கொண்டது. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள்,

"அம் – அமை – அமைதல் = பொருந்துதல், ஏற்படுதல், நேர்தல்.

அமையம் – நேரம், வேளை" என்று தொடங்கி,

"அமை – சமை – சமைதல் – அமைதல்

= பொருந்துதல்" என்று தொடர்ந்து, இப்பொருளுக்குச் சான்றாக,

"என்றிவை சமையச் சொன்னான்" (கம்ப. இரா. அங்கத – 8)

"வனஞ்செல் வதற்கே சமைந்தார்கள்" (கம்ப. இரா. நகர்நீங்கு. 143) எனக் காட்டியுள்ளார்.

இப்பொருள் தொடர்பில்தான்,

"மாந்தன் (ஆன்மா) இறைவனை அடையச் சமையும் (தகுதிபெறும்) நிலை" என்று நிறுவினார். இது வடமொழியன்று என்றும், வடமொழியில் இப்பொருளுக்குரிய மூலம் இல்லை என்றும் காட்டிச் சமையம் சமயம் என்றாயிற்று என்று எழுதி, இது தமிழ்ச்சொல்; தமிழிலிருந்து வடமொழிக்குப் போயிற்று என்றார். (1)

நாகை பெற்ற புலமைச் சான்றோர் நிறைதமிழ்ச்செம்மல் மறைமலையடிகளாரும் "சமயம்" என்பதற்குக் "காலம், நேரம், அவசரம்" என்னும் பொருள்களை விரித்து, 'நேரம்' என்னும் பொருளிலேயே சமயத்தை விளக்கி,

"சிவம் – எப்பொருளும் கடந்த பெரும் பொருளை ஆராய்ந்த நேரமே சைவ சமயம் என்று உணரற்பாற்று" என்று (2) நிறுவினார்.

## சமய விளக்கம்

சமயம் என்பதற்குச் சொல் அளவிலன்றிப் பொருள் அளவிலும், நடைமுறை அளவிலும் – அறிஞர் பலர் விளக்கம் தந்துள்ளனர். உளவியலாரும் மாந்தவியலாரும் 'சமயம் ஆதிக்குடிகளின் மந்திர முறையிலிருந்து எழுந்தது' என்றும் 'தொன்மை மாந்தரின் அச்ச உணர்வாலும், குற்ற உணர்வாலும் நேர்ந்தது' என்றும் கூறினர்.

20ஆம் நூற்றாண்டில் உளவியல் அறிஞர்க்கு முன்னோடியான சிக்மண்டு பிராய்டு என்பார்,

"மாந்தரின் மிக இன்றியமையாத இயல்பு

பால் உணர்ச்சி. இதன் உந்துதலுக்குத்

தடைகள் நேரும்போது, தடைக்குத் தக்கபடி

மேற்கொள்ளும் ஒழுக்கமே சமயம்" என்றார். இவர் சமயத்தைக் கடவுளோடு தொடர்புபடுத்தவில்லை.

சமயம் என்பதற்கு ஒப்பாகச் சொல்லப்படும் ஆங்கிலச் சொல் 'Religion' என்பதற்கு இருபொருள்களைக் கூறுவர். ஒன்று "குறிசொல்வது;அஃதாவது கடவுளின் திருவுள்ளத்தை அறியச் சில நிகழ்ச்சிகளை அடையாளங்களாகக் கொள்வது"; மற்றொன்று "இறைவனுடன் ஒன்று படுவது."

இவை அனைத்திலும் பெரிதும் பொருந்துவதும் சிறந்ததும் தமிழ் விளக்கமே, 'கடவுள் உணர்வுத் தொடர்பில் பக்குவப்படுத்த மாந்தனால் அமைக்கப்பட்டது சமயம்' என்பதே.

## மதம்

'மதம்' என்னும் சொல்லும் சமயத்தின் மாற்றுச் சொல்லாக வழங்கப்படுகிறது. 'மதம்' என்னும் சொல் 'கொள்கை' என்பதால் அது பல்வகைக் கொள்கைகளையும் குறிக்கும். இலக்கணநூலோ, நூலாசிரியன் கைக்கொள்ளும் கொள்கைகளைக் குறிக்கிறது.

"எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்...." (3) என்று ஏழாகக் காட்டும்.

மதம் என்பதன் மற்றொரு பொருள் யானையின் திமிர்க் கொழுப்பால் கசியும் மதநீர் – அதனால் கொள்ளும் மதவெறி என்பது. இதுபோல் மதத்திமிர் பிடித்த மாந்தர் பெருகியதால் வள்ளலார் இராமலிங்கர் "மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்"

என்று வேண்டினார். இந்தியாவில் மதமெனும் பேய் பிடித்தோர் முன்னாளிலும் இருந்தனர்; இந்நாளிலும் தோன்றியுள்ளனர்.

உலகில் சமயங்கள் சிறிதும் பெரிதுமாக நூற்றுக்கணக்கில் உள்ளன. அனைத்தும் மாந்தரால் அமைக்கப்பட்டனவே. பலவற்றைச் சமைத்தவரை அறிகிறோம். ஒன்றிரண்டு, சமைத்த முதல்வரை அறிய முடியாமல் உள்ளன.

## நாகையில் சமயங்கள்

நாகை மண்ணில் புகுந்து அமர்ந்த சமயங்களைக் கால வரிசையில் குறித்தால்,

புத்தம் —

சைவம் —

திருமாலியம் (வைணவம்) —

இசுலாமியம் —

கிறித்துவம் — என அமையும்.

இந்தியாவில் பழஞ்சமயங்களில் குறிப்பிடத்தக்கதாக இருந்தது சமணம். தமிழ் மண்ணில் அது பரவியிருந்தது. தமிழுக்கும் தன் பங்களிப்பைச் செய்தது. நாகை மண்ணில் அது கால் வைக்க வில்லை. நாகையைச் சுற்றியுள்ள திருப்புகலூர், நந்திபுரம், திருநாகேசுவரம், திருவாரூர் ஆகிய ஊர்களில் இடம் பெற்ற சமணம் நாகையில் இடம் பெறவில்லை. எனவே பழஞ் சமயமாகிய சமணத்திற்கும் நாகைக்கும் தொடர்பில்லை.

## ஆ. புத்தம் — விளக்கம்

நாகை மண்ணில் முதன்முதலில் இடம் பெற்றது புத்த சமயமே. இது புத்தரால் அமைக்கப்பட்டது. அமைதி நாடிய புத்தத் துறவிகள் இங்கிருந்த இலந்தைமர மேட்டில் அமைந்ததை அறிந்தோம். புத்தர் பெற்ற மெய்யறிவு ஒளியால் கொள்ளப்பட்ட ஞானம், "துன்பம், துன்பத்திற்குக் கரணியம், துன்பப்போக்கு வீடு, துன்பப்போக்கு வீட்டிற்கு வழி" என்னும் நான்கினைக் கோட்பாடுகளாகக் கொண்டது.

"ஆன்மா என்று ஒன்று இல்லை;

மறுபிறவி உண்டு;

கடவுள் பற்றிய கருத்தே இல்லை;

வழிபாடு, தவம் இல்லை;

தன் செயலே எல்லாவற்றையும் உண்டாக்கும்"

என்னும் விரிந்த கொள்கைகளைக் கொண்டது. இவற்றின் பாங்கில் நாகை மண்ணில் புத்தத் துறவியர் இடம்பெற்று நூல்களை ஆராய்ந்து நூல்களை எழுதினர். இம்மண்ணின் மொழியாகிய தமிழில் எழுதவில்லை பாளியிலும் வடமொழியிலும் சீனத்திலும் எழுதினர். கடவுள், வழிபாடு, தவம் முதலியவற்றைக் கொள்ளாமை யால் தங்கள் வளாகத்தில் கடவுளை வணங்கவில்லை; புத்தரைப் போற்றினர். வழிபாடு செய்யவில்லை; தவம் புரியவில்லை. இவை போன்ற தம் மதத்தைப் பரப்பத் தாம் இடம் பெற்றிருந்த வளாகம் அன்றி அதன் எல்லை தாண்டி ஏதும் புரியவில்லை. அவ்வளாகத்தில் ஓய்விடமாம் விகாரை இருந்தது. விகாரைகள் பொதுவாக வெட்ட வெளியில் அமையும் உயர்ந்த அடுக்கு மாடமாகும். விகாரைக்குப் பக்கத்தில் 'சைத்தியம்' அமைந்திருந்தது. 'சைத்தியம்' என்பது தொடக்கக் காலங்களில் இறந்தோரின் எலும்புகளைக் குவித்து, மண் கொண்டு மூடி வணங்கும் இடம். இவ் வடசொல் பாளி மொழியில் 'தகபா' (Dagaba) எனப்பட்டது. இஃதே பின்னர் (கோபுரம்) பகோடா (Bagoda) ஆகியது. இவ்விடத்திலும் புத்தர் சிலையை வைத்துப் போற்றுவர். மலரைக் கொண்டு போற்றி செய்தல், நீராட்டல், ஆடை சாத்தல், அணிகலன் பூட்டல் முதலிய வழிபாடுகளைச் செய்ய மாட்டார். இவற்றுடன் 'ஆராமம்' எனனும் சோலை இருக்கும். இங்கு உலாவுவர். கட்டாயம் இவ்வளாகத்தில் ஓர் அரச மரம் வளர்ப்பர். விகாரத்திலும் சைத்தியத்திலும் அவரவர் தத்தமக்கெனப் புத்தர் சிலைகளைக் கொண்டிருப்பர். ஓய்விடமே 'பள்ளி' எனப்படும். இங்குதான் அமர்ந்து ஆய்வையும் நூல் எழுதும் பணியையும் செய்வர்; படுத்து உறங்குவர்.

## மும்மணிக் கூடை

இவ்வமைப்புகள் யாவும் நாகைப் புத்த வளாகத்தில் இருந்தன. கூட்டாகவும் தனித்தும்,

"புத்தம் சரணம் கச்சாமி;

சங்கம் சரணம் கச்சாமி;

தன்மம் சரணம் கச்சாமி"

என்று கூறிக் கொள்வர்; முழங்குவர். புத்த சமயத்தில் இவை மூன்றும் மும்மணிகள் கொண்ட கூடை. அதாவது திரிபிடகம் (பிடகம் – கூடை) எனப்படும். இவ்வோசைகளையே அண்மையிலிருந்த மக்கள் கேட்டிருப்பர். கேட்டவர் சமயச் சார்பானவர் ஆகவில்லை.

இருப்பினும் இவ்வளாக அளவிலேயே புத்தத்துறவிகள் எண்ணிக்கையும் கீழை நாடுகளிலிருந்தும் சீனாவிலிருந்தும் வந்து வணங்கிப் போகும் புத்த சமயத்தவர் எண்ணிக்கையும் பெருகின. இதனை இங்கு எழுப்பப்பட்ட விகாரைகளையும் அவற்றின் களங்களையும் கொண்டு உணரலாம்.

கி.மு. 3ஆம் நூற்றாண்டில்,

அசோக மன்னன் எழுப்பிய 'பதரி திட்ட விகாரை' (ஆதிவிகாரை);

கி.பி. 5ஆம் நூற்றாண்டில்,

நாகமன்னன் துணையுடன் காசபதேவர் எழுப்பிய 'நாகானன விகாரை;

கி.பி. 8ஆம் நூற்றாண்டில்,

இரண்டாம் நரசிம்மப் பல்லவன் காலத்தில் சீன மன்னன் வேண்டுகோளால் எழுப்பப் பெற்ற 'புதுவெளிக் கோபுரம்' என்னும் சைனக் கோபுரம். இது எழுப்பித்தவன் பெயரால் "மல்லன் கோபுரம்" என்றும் வழங்கப் பெற்றது என்பனவற்றை அறிந்தோம்.

கி.பி. 11ஆம் நூற்றாண்டில்,

சிரீ விசய மன்னன் (சுமத்திரா) சோழப்

பெருமன்னன் இராசராசன், அவன் மகன் இராசேந்திரன் உதவியுடன் எழுப்பிய 'சூளாமணி விகாரை' பற்றி அறிந்தோம்.

இவற்றால் காலப்போக்கில் முன்னது பழுது பட்டபின் பின்னவை எழுப்பப்பட்ட நிலையை அறியலாம். இதனால் தொடர்ந்து புத்த சமயத்தவர் நீண்ட தொடர்பில் நிறைந்திருந்ததையும் உணரலாம்.

இங்கு அமைந்த புத்தப்பிரிவு ஃகீனயானம், மகாயானம் என்னவற்றில் முன்னுள்ள பிரிவினமும் பின்னர் மகாயானமும் ஆயிற்று. பின் பெருகிய காலத்தில் ஓர் ஆனந்தரால் மகளிரும்

புத்தத்தில் இணைத்துக் கொள்ளப் பட்டனர். ஆனால் எம்மகளிரும் நாகையில் அமைந்ததாகக் குறிப்பில்லை.

## புத்தத் தமிழ்ப்புலவர்

தமிழகத்தில் புத்த சமயம் சார்ந்த சான்றோரும் புலவரும் இருந்தனர். சங்க காலத்தில் 'இளம்போதியார்' என்றொரு புலவர் வாழ்ந்துள்ளார். புத்தர் அரச மரத்தடியில் அமர்ந்து அறிவுப் (போதம்) பேரொளி பெற்றார். அதனால் அரசமரம் "போதி" எனப்பெற்றது. 'போதியார்' என்பது புத்தர்க்கும் பின்னர் அச்சமயத்தார்க்கும் பெயராயிற்று. தமிழ்ப்புலவர் 'போதியார்' புத்தம் சார்ந்தவர்; துறவியல்லர். அவர் பாடிய ஒரே பாடல் நற்றிணையில் 72ஆம் பாடலாக உள்ளது. அப்பாடல் காதல் தொடர்பான அகத்துறைப் பாடல். எனவே துறவியல்லர்.

மணிமேகலைக் காப்பியம் பாடிய சாத்தனார் புத்த சமயச் சான்றோர்; துறவியல்லர்; தமிழாசான். 'சாத்து' என்றால் வாணிபத் தொழில். 'சாத்தன்' என்பது தமிழ்ச்சொல். அதன் பெண்பால் 'சாத்தி'. இது புத்த சமயப் பெயரன்று. இலக்கிய வழக்கில்லாத போதிராசர், தருமராசர் என்னும் சொற்கள் புத்தச் சார்புடையவை.

எவ்வாறாயினும் நாகை மண்ணில் தமிழ்ப்பணி செய்த புத்தச் சமயத்தார் இலர்.

## புத்த வளாகம்

நாகை விகாரை, கோபுரங்கள் பற்றிய விவரங்கள் முன்னே ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. புத்த சமயத் தொடர்பைப் பொறுத்த வரை வெளிநாட்டாராகிய யாவா, சுமத்திரா, மலேயா, பர்மா, சீனா நாட்டவரே பெருந்தொடர்பில் இருந்தனர். நாகை மண்ணில் மைந்தர்பால் – மக்கள்பால் மனம் பற்றப் படவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட வெளிநாட்டார் வணிகம் கருதி இங்கு வந்தனர். தம் சமயச் சார்பில் இவ்வளாகத்தை ஒரு புத்தத் திருவிட மாகக் கொண்டனர். சைத்தியத்தில் வணங்கியும், விகாரையில் அறிவுரை பெற்றும் சென்றனர்.

## நாகையில் புத்தர் சிலைகள்

மற்றொன்றை இங்கு குறிக்க வேண்டும். அது நாகையில் கிடைத்த சிலைகளைப் பற்றியது. பொதுவாக, புத்தர் சிலைகளைக் கல், மரம், வெண்கலம், வெள்ளி,பொன் முதலியவற்றால்

வடித்தனர். உலகின் சிலைகளில் புத்தர் சிலைகளே மிகமிக அதிக எண்ணிக்கை கொண்டவை; உருவ அளவிலும் பெரியவை. ஆப்கானித்தானத்தில் 'பாமியன்' என்னும் இடத்தில் 100 அடி உயரமுள்ள புத்தர் சிலை உள்ளது. இது. கி.பி. 300 அளவில் உருவாக்கப்பட்டது. சீனாவில் பீகிங்கிற்கு வடகிழக்கில் உள்ள லாமா கோயிலின் 85 அடி உயரமுள்ள சிலை சந்தனமரத்தாலாகியது. இதுதான் மரத்தாலான புத்தர் சிலைகளுள் உயரமானது. உலகில் மிகப்பெரிய தங்கச்சிலை தாய்லாந்து நாட்டின் தலை நகராகிய பாங்காங்கில் உள்ள புத்தர் பொன்கோயிலில் உள்ளது. முழுமையும் தங்கத்தாலான இச்சிலை 10 அடி உயரமுடையது. இன்றைய மதிப்பு உருவாயளவில் 100 கோடி எனலாம்.

இந்தப் பெருமைகளுடன் ஒவ்வொரு புத்த வளாகத்திலும் நூற்றுக் கணக்கில் புத்தர் சிலைகள் இடம் பெற்றிருந்தன. முன்னர் போராபுதூர் கோயிலில் 504 சிலைகள் இருந்ததை அறிந்தோம். குறிப்பிடத்தக்க உயர அளவிலான சிலை நாகையில் இல்லை. ஆனால், எண்ணிக்கையில் அதிகம் இருந்தன. கலைத்திறம் உடையனவாக இருந்தன. முழுமையும் பொன்னாலான சிலை நாகானை விகாரையில் இருந்தது.

நாகையில் (1926–இல்) வெளிப்பாளையத்திலும்(1934–இல்) நாணயக்காரத் தெருவிலும் சேர்ந்து 350 வெண்கலச் சிலைகள் கிடைத்துள்ளன.(4) இச்சிலைகளின் கலைவடிப்பு இந்தோனீசியக் கலைவடிப்பு என்பர். இப்பெரும் சிலை எண்ணிக்கை கொண்டு புத்த சமயம் சார்ந்த ஒவ்வொருவரும் புத்தத் துறவியரிடமிருந்து சமயப் பரிசாகப் புத்தர் சிலைகளைப் பெற்றுச்சென்று வணங்க வைத்துக்கொண்டனர் என்றறியலாம். மேலும் புத்த விகாரைக்குக் காணிக்கையாகப் புத்தர் சிலைகளை வழங்கினர் என்றும் கொள்ளலாம்.

நாகையில் கண்டெடுக்கப்பெற்ற சிலைகள் சென்னை எழுமூர் அருங்காட்சியகத்தில் உள்ளன. சிலையின் அமைப்பு; கீழே சதுரமான பீடம்; மேலே புத்தரின் அமர்ந்த தோற்றம்; கைமேல் கை வைத்த பாதக்கால் மடிப்பு; தலையின் பின்புறம் கதிரவன் வடிவ வட்டம்; மேலே குடை. இது 11ஆம் நூற்றாண்டுக் காலத்தது. முன்னர் கண்டபடி ஒரு சிலையில் 'நெகமா' என்று பொறிக்கப்பட்டுள்ளது.

சில சிலைகளின் அமைப்பு மகாயான புத்தச் சார்பில் தென்படுகின்றது.

## நாகையில் புத்தச் சிறப்பு

யுவான், இத்சிங், ஊசிங், சீஅங் முதலிய புத்தச் சார்பினர் பயணிகளாக நாகைக்கு வந்துள்ளனர். அனைவரும் நாகை மண்ணில் புத்தம் இருந்ததைச் சிறப்பாகக் குறித்துள்ளனர்.

ஆனாலும் சீனப்பயணி யுவான்சுவாங் (629 – 645) நாகையில் 'புத்தம் பல்லவர் காலத்தில் கீழ்நிலை அடையத் துவங்கிவிட்டது' என்று குறித்துள்ளார். அவ்வாறு துவங்கியிருப்பினும் 'கி.பி. 716 இல் இரண்டாம் நரசிம்மன் புதுவெளிக்கோபுரத்தை எழுப்பினான்' என்னும் செய்தியால் முன் இறக்க நிலை தொடங்கிப் பின்னர் பல்லவன் துணையால் சற்று ஆக்கம் பெற்றது போலும் என்று கொள்ளலாம்.

## புத்தமும் சைவமும்

ஆயினும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் காலங்களில் நாகைப் புத்தம் தாக்கம் பெறவில்லை. பொதுவாகவே இருவரும் புத்தத்தையும், சமணத்தையும் தாக்கிப் பாடியுள்ளனர். இருவரிலும் ஞானசம்பந்தர் மதுரையில் சமணரை வாதில் வென்று அவர் அழியக் கரணியமானவர். மேலும் திருநள்ளாற்றிலிருந்து சென்ற இவரைப் போதிமங்கையிலிருந்த புத்தநந்தி எதிர்த்தார். ஞான சம்பந்தரின் பாடல்களை ஏட்டில் எழுதிவந்த சம்பந்த சரணாலயர் என்பார் தேவாரத்திலுள்ள "அத்திரமாவது அஞ்செழுத்துமே" என்பதைச் சொல்லி அவர் 'தலையறுந்துபோகச் செய்தார்' என்பர்.

தொடர்ந்து சத்திர மண்டபத்திலே தங்கியிருந்த ஞானசம்பந் தரைச் சாரிபுத்தன் என்பான் எதிர்க்க அவனுடன் வாதாடிப் பணியவைத்துச் சைவனாக்கினார். ஆனால், புத்தம் பெருகியிருந்த நாகைக்கு அவர் வந்தபோது புத்தர் எதிர்ப்பு இல்லை. கரணியம் இங்கிருந்தோர் மதம் பரப்பும் செயலில் இல்லை. மேலும் ஞான சம்பந்தரும் அவர்களைப் பற்றிய கவனம் கொண்டதாகவும் இல்லை.

எனவே, ஏழாம் நூற்றாண்டுவரை நாகையில் புத்தம் வளமாக இருந்துள்ளது.

## பொன்சிலைத் திருட்டு

ஆனால், எட்டாம் நூற்றாண்டில் திருமாலியத்தார் புத்தரை மிகவும் சாடிப்பாடியுள்ளார். தொண்டரடிப் பொடியாழ்வார்,

"சமணரும் புத்தரும் திருமால்பற்றிப்
பொறுப்பரியன பேசினால்"
"குறிப்பெனக் கடையுமாகில்
கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமம்" (5)

என்று தலையறுக்கவும் முனைப்பு கொண்டு பாடினார்.

நாகைக்கு வந்த திருமங்கை மன்னன்,

"போதியார் என்றிவர் ஓதும் கள்ள நூல்கள்" என்று பாடினார். களவு செய்தே தம் திருப்பணியைச் செய்த அவர் நாகையில் நாகானை விகாரையில் இருந்த புத்தரது பொன் சிலையைத் திருடிக் கவர்ந்தார். இதுகொண்டு திருவரங்கம் கோயிலுக்கு மதிற்சுவர் எடுத்தார். இச்செய்தியைத் திருமாலிய நூலான 'குருபரம்பரைப் பிரபாவம்' என்னும் நூலே குறித்துள்ளது. (6)

புத்தப் பொன்சிலையைப் பார்த்த திருமங்கையாழ்வார் ஒரு பாடலும் பாடியுள்ளார்.

"ஈயத்தால் ஆகாதோ? இரும்பினால் ஆகாதோ?
பூயத்தான் மிக்கதொரு பூதத்தால் ஆகாதோ?
தேயத்தே பித்தளையால் செம்புகளால் ஆகாதோ?
மாயப்பொன் வேணுமோ மதித்துன்னைப் பண்ணுதற்கே",

என்று பழித்துப் பாடிய பாடலைத் தனிச் செய்யுட் சிந்தாமணியில் காண்கிறோம். அவர் பாடியதோ; அன்றோ? அவர் பொன்சிலை திருடியதை அபிதான சிந்தாமணி (பக்கம் 845) இவ்வாறு சொல் கிறது: "நாகப்பட்டினத்துப் பௌத்தர் கோயிலில் செல்வமிருக் கின்றதாகக் கேள்விப்பட்டு அங்குச் சென்று அதற்குக் காவலாகச் சுழன்று கொண்டிருந்த சக்கரத்தை, வாழை மரத்தைச் சக்கரத்தில் கொடுத்து நிறுத்தி, சுவர்ண பௌத்த விக்ரகத்தை உருக்கித் திருமதில் முதலிய கைங்கர்யம் செய்வித்து". — இதுகொண்டு பொன் புத்தருக்குக் காப்பாக ஓர் ஆழி சுழன்றதாக அறியமுடிகிறது.

பொன் சிலையைத் திருடியமை திருடியவரின் களவுத்திறத்தை அறிவிப்பதுடன் அதுபற்றிய தடைகளோ பின் நடவடிக்கையோ இல்லாமற் போனமை புத்தர்க்கு நகரத்தாரின் கவனம் கிடைக் காததையும் குறிக்கிறது.

நூற்றாண்டுகளின் ஓட்டத்தில் அசோகன் எடுத்த விகாரையும், பின்னர் எழுந்த நாகானை விகாரையும் பழுதுபட்டு அழிந் திருக்கலாம்.

## ஒரு பொன்மலை

பின்னர் எழுப்பப்பெற்ற 'சூளாமணி விகாரையும்', 'புதுவெளிக் கோபுர'மும் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றன.

சூளாமணி விகாரையைப் பற்றி இலெய்டன் சிறிய செப்பேடு சிறப்பாக விளக்கியுள்ளதைக் கண்டோம்.

அச்செப்பேட்டில்,

"உலகத்துக்குத் திலகம் போன்றது" என்றும்

"நாகபட்டினத்தில் தன் உயரத்தால்

கனக கிரியையும் சிறியதாகச்

செய்து, என்றும் அழகினால் வியப்படையச்

செய்கின்ற சூளாமணி விகாரை" என்றும் விவரிக்கப் பெற்றுள்ளமை இதன் சிறப்பை உணர்த்துகின்றது.

இதற்கு அறக்கட்டளையாக மன்னன் இராசராசனும் பின்னர் இராசேந்திரனும் ஆனைமங்கலம் ஊர் நிலத்தை வழங்கினர், சில ஆண்டுகளே இவ்வறக்கட்டளை செயற்பட்டது. குலோத்துங்கன் காலத்தில் ஆனைமங்கலம் வருவாய் இவ்விகாரைக்குக் கிடைக்க வில்லை. இதற்கு சிரீவிசய நாட்டு மன்னன் இரு தூதுவரை அனுப்பிக் குலோத்துங்க மன்னனிடம் முறையிட, அவன் உதவி கிட்டுவதற்கு உதவினான் என்று முன்னரும் கண்டோம்.

தடைபட்ட உதவியைப் பெற இங்கிருந்த புத்தத் துறவிகளால் இயலவில்லை. நகரத்தில் உள்ள மக்களைக் கொண்டு முயற்சிக்க லாம். அவ்வாறும் செய்யவில்லை. மக்களில் எச்சான்றோராகிலும் முன் வந்து முனைந்திருக்கலாம்; இல்லை. வெளிநாட்டு மன்னன் முயன்றுள்ளான்.

இந்நிலையும் 'நாகையில் புத்தம் மக்கள் சார்பற்று இருந்தது' என்பதைக் காட்டுவதுடன் புத்தத்திற்கு நாகை மண்ணில் ஓர் இறக்கநிலை நேரத் துவங்கியது என்பதையும் காட்டுகின்றது.

13ஆம் நூற்றாண்டில் நாகைக்கு வந்த மார்க்கோபோலோ நாகையில் சிலகாலம் தங்கினார். அவர்தம் குறிப்பில் நாகையில்

விகாரை இருந்ததைக் குறித்துள்ளார். அது 'கிழக்கே இருந்தது' என்றும் குறித்தார். கிழக்கு என்பது அக்காலத்தில் ஓரளவில் நிலைத்திருந்த புதுவெளிக் கோபுரத்திற்குக் கிழக்கு ஆகும். அவர் குறிப்பில் கோபுரம் என்னும் பொருள் குறிப்பு இல்லை. எனவே அது 'சூளாமணிவிகாரை'யைக் குறிப்பதாகும். அதில் கல்வெட்டு இருந்ததைக் குறிக்கும் அவர் அதனைச் சீனமொழிக் கல்வெட்டு என்று குறிக்கவில்லை. எனவே, அவர் காலத்தில் சூளாமணி விகாரை இருந்தது. ஆனால் சூளாமணி விகாரை பற்றி ஆனை மங்கலம் செப்பேடு குறித்த சிறப்பான அமைப்பில் இருந்திருந்தால் மார்க்கபோலோ ஒரு குறிப்பாவது எழுதி வைத்திருப்பார். எனவே, இந்நூற்றாண்டளவில் சூளாமணி விகாரை தனக்குரிய சமயச் சிறப்பில் இல்லை. சில சிதைவுகளையும் பெற்றதாயிற்று. இது நாகையில் புத்தசமயம் இறக்கம் கொண்டதற்கு மற்றொரு அடையாளமாகும்.

அடுத்து நமக்குக் கிடைக்கும் செய்தி பர்மா நாட்டு நகரிலமைந்த கல்யாணி நகர்க் கல்வெட்டு அறிவிப்பதாகும். கி.பி. 1473இல் அமைந்த இக்கல்வெட்டு நாகையில் புத்தப் பள்ளி இருந்ததைக் குறிக்கிறது. அப்பள்ளிக்குப் "பத்திசாராமம்" என்று பெயர் குறிக்கிறது. பத்தி – இலந்தை – இலந்தை பெயரிலமைந்த இடம்; அது "பத்ரிச" என்றாகி ஆராமம் என்னும் புத்தப்பள்ளிச் சார்பான சொல் சேர்ந்து "பத்ரிசாராமம்" எனப்பட்டது. எனவே இது சூளாமணி விகாரையைக் குறிப்பதே; அதனுடன் இருந்த புதுவெளிக் கோபுரத்தை அன்று. அவ்வாறாயின் பெருவழக்காயிருந்த கோபுரம் என்று காட்டியிருக்கும். எனவே, 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாகைச் சூளாமணி விகாரை இருந்துள்ளது.

## ஒரு வளர்ச்சி – மறு தளர்ச்சி

இவ்வாறு ஓரளவில் புத்தம் படிப்படியாக இறக்கம் பெற்று வந்ததற்கு நாகை 'காரோணம்' என்று ஆகிச் சைவம் பெருகியதே யாகும். குலோத்துங்க சோழர் காலத்தில் வெளிப்பாளையம் தோன்றி விரிந்தது. "சோழகுலவல்லிபட்டினம்' ஆனதையும் கண்டோம். இதனால் புத்த வளாகம் சுருங்கியது. சைவக் கோயில்கள் வளர்ந்தன. திருமாலியக் கோயிலும் உருவாயிற்று. சைவம் மக்கள் சமயமாயிற்று. சைவத்தார் வேண்டுமென்றே புத்தத்தைக் குறைக்கவோ சிதைக்கவோ முயலவில்லை. என்றாலும் சைவத்தின் வளர்ச்சி புத்தத்தின் தளர்ச்சிக்குக் கரணியமாயிற்று.

மக்கள் சமயமாகிய சைவம் கேடு சூழவில்லை என்றாலும் அயல்நாட்டுச் சமயமாக ஆட்சியின் வலுவில் நுழைந்த கிறித்துவம் புத்தத்தைக் குலைக்கவும் அறவே அழிக்கவும் கரணியமாயிற்று.

17ஆம் நூற்றாண்டில் நாகையில் இடம்பெற்ற (1658 இன் முன்னர்) போர்த்துகீசியர் மற்றைய மதத்தார்பால் கடுமையாக நடந்துகொண்டனர். சில புத்தர்களைக் கொன்றதாகவும் செய்தி உண்டு. எனவே, இக்காலத்திய புத்தம் சிதைவின் முனைக்கு வந்துவிட்டது என்று கொள்ளலாம்.

அடுத்து வந்த ஆலந்துக்காரர் 18ஆம் நூற்றாண்டிலும் இருந்தனர். அன்னார் சூளாமணி விகாரையில் இருந்த 'ஆனைமங்கலம் செப்பேடுகளைத் தம் நாட்டுக்குக் கொண்டு சென்று இலெய்டனில் வைத்தனர் என்றறிந்தோம். அதனால் அச்செப்பேடு கள் தம் உரிய பெயரை இழந்து பொருத்தமில்லாப் பெயரைப் பெற்றன. செப்பேடுகள் எடுத்துச் செல்லப்பட்டன என்றால் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சூளாமணி விகாரை தடம் தெரியாமல் அழிக்கப்பட்டது என்றே பொருள். புத்த சமயமே நாகை மண்ணில் அற்றுப் போயிற்று.

ஆனால் சூளாமணி விகாரைக்கு 400 ஆண்டுகளுக்கு முன்னர் பல்லவ மன்னன் துணையுடன் எழுந்த 'புதுவெளிக் கோபுரம்' சூளாமணி விகாரைக்குப் பின்னரும் இருந்தது.

இஃதும் அழிவதற்குக் கிறித்துவக் குருமார் முயன்று வெற்றி கண்டனர். இவ்விவரங்களையும் கோபுரம் பற்றிய விளக்கத்தையும் அரசுக் குறிப்புகளால் அறிய முடிகிறது.

அரசின் குறிப்பின்படி 1846இல் இக்கோபுரத்தின் புகைப்படமும் வரைபடமும் உருவாக்கப்பட்டன. இவற்றைப் பெற்ற சென்னை ஆங்கில அரசு 11–10–1858 இல் கோபுரத்தின் நிலை பற்றிய விவரத்தின் அறிக்கையை அனுப்புமாறு தஞ்சையிலிருந்த ஆட்சியர் காப்டன் எஃப் ஒக்சு என்பாருக்கு எழுதியது. அவர் தந்த அறிக்கையால்தான்(7) புதுவெளிக் கோபுரத்தின் அமைப்பையும் அது சிதைந்து நின்ற விவரத்தையும் பின்வருமாறு அறிய முடிகின்றது.[1]

1. அரசுத் தொடர்பான இவ்வறிக்கைகளின் படிகளையும் புதுவெளிக் கோபுர படத்தையும் வழங்கி உதவியவர் பேராசிரியர் அ.சிவசங்கரன் அவர்கள், கும்பகோணம்



நாகபட்டினம் புத்தக வளாகப் புதுவெளிக்கோபுரம்
இடிந்த நிலையில் கல்லச்சுப்படத்தின் வரைபடம்
நா.16.

'இப்புதுவெளிக் கோபுரம் 5 அடுக்கு மாடங்களைக் கொண்டது. ஏறத்தாழ 68 அடி உயரமுள்ளது. 41 சதுர அடி பரப்புடையது. செங்குத்தான அமைப்பு. அடித்தளத்தின் கூடம் 12" X 11" பரப்புடையது. செங்கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்டது. கூரையின் சுற்றுப் பக்கங்களில் அமைந்த பிதுக்கம் சிற்ப வேலைப்பாடுடையது. இதில் இருந்து ஒரு புத்தர் சிலையும் கிடைத்தது.

இதன் 5ஆவது மாடம் மிகச் சிதைந்து இடிபாடு அடைந்ததால், இடிந்து விழுந்து ஊறு நேராமல் இருக்க வேண்டி, முன்னர் இருந்த மாவட்ட ஆட்சியாளர், அதனை இடித்து விட்டார்.

பின்னர் 4ஆவது மாடமும் சிதைவுற்றிருந்தது. இக்கோபுர இடத்தின் பின்பக்கத்தில் ஏசு சபையோராக அப்போது அங்கிருந்த பிரெஞ்சுக் குருமார் ஒரு தொழுகை அறை (Chapple) அமைத்திருந்தனர். அதற்கு இஃது இடையூறு என்று கருதி 4ஆவது மாடத்தை இடித்து; விட்டனர்.

எஞ்சியிருந்த 3 மாடம் 50 அடி உயரம் உடையது. இதனைச் சுற்றி மண் பாதுகாப்பு அமைக்க காப்டன் ஓக்சு திட்டமிட்டு உருவா 400 செலவாகும் என்று அதற்கு இசைவு வேண்டி 19.4.1859 இல் அறிக்கை அனுப்பினார். இது மாநிலத் தலைமைப் பொறியாளரால் 12.5.1859 இல் பரிந்துரை செய்யப்பெற்று அரசு (மிக விரைவாகவே) இசைவளித்து 4.6.1859 இல் ஆணை அனுப்பியது. ஆனால் செயல்படவில்லை.

என்ன காரணம்?

அங்கிருந்த ஏசு சபையார் (Jesus Society) அதே ஆண்டில் (1859) இதனை இடித்து விட வேண்டுமென்று அரசுக்கு வேண்டுகோள் அனுப்பினர். இதன் காரணமாக இருக்கலாம். வேலை நிகழவும் இல்லை; ஏசு சபையார்க்கு விடையும் இல்லை.

கிணற்றில் போட்ட கல்லாக எட்டாண்டுகள் கிடந்த ஏசு சபையார் 1867—இல் மீண்டும் அரசுக்கு எழுதினர். இடித்துவிட நான்கு கரணியங்களைக் காட்டினர். (1) சிதைந்துள்ள இந்நிலையால் பாதுகாப்பில்லை. (2) இதன் பின் உள்ள எம் தொழுகை அறைக்கு இதன் மறைப்பால் வெளிச்சமும் இல்லை; கடற்காற்றும் இல்லை; (3) இப்பகுதி நிலத்தை வாங்க வேண்டியுள்ளது; (4) இதனை

இடிப்பதால் கிடைக்கும் செங்கல் முதலியன தாம் கட்ட இருக்கும் கல்லூரிக்குப் பயன்படும் (8).

இவ்வாறு வேண்டுகோள் பெறப்பட்ட அதே ஆண்டில் அஃதாவது 28.8.1867 நாளிடப்பெற்று இடித்துக் கொள்வதற்குச் சென்னையி லிருந்த ஆங்கில அரசு இசைவளித்து ஆணை தந்தது.

அவ்வாண்டிலேயே புதுவெளிக் கோபுரம் தரைமட்டத்திற்குக் கீழும் அகழ்ந்தெடுக்கப்பெற்று அழிக்கப்பட்டது. ஆனால், வரலாற்று ஆசிரியர் சர் வால்டர் எல்லியட் என்பார் இக்கோபுரத்தைக் குறித்துள்ளார். இக்குறிப்பு இவர் முன் கண்டதைப் பின் 1878இல் எழுதிய போது குறித்ததாகக் கொள்ள வேண்டும். (9).

ஆனால் இராபர்ட் சீவல் என்பார் இக்கோபுரம் 1882 இல் இடிக்கப்பட்டதாகக் குறித்துள்ளார். இவ்வாண்டு மேலே இடிக்கப் பட்டதாகக் குறிக்கப்பட்ட 1867இற்கு 15 ஆண்டுகள் பிந்தியதாகிறது. இவ்வாண்டுகளின் அறிவிப்பில் மாற்றமிருப்பினும் இடிக்கப் பட்டது என்பதில் மாற்றம் இல்லை.

நாகையில் -- அஃதாவது சோழ மண்ணில் வெளிநாட்டுச் சீனமன்னன் தூண்டுதலால் அயல்நாட்டுப் பல்லவ மன்னன் எடுத்த ஒரு கலைக்கோபுரம் வெளிநாட்டுச் சமயத்தார் பயனுக்கும் நலனுக்கும் வெளிநாட்டு ஆங்கிலர் ஆண்ட அரசின் இசைவுடன் தகர்க்கப்பட்டது. 1100 ஆண்டுக் காலச் சின்னம் புத்தத்துடன் அழிந்தது.

## சமயக் கோபுரமே

அரசுக்கு அறிக்கை தந்த படைத்தலைவர் எஃப். ஓக்சு இக்கோபுரம் பற்றிய தம் கருத்தை அந்த அறிக்கையில் தந்துள்ளார்.

அக்கருத்து,

"இது சமயத்தொடர்பு கொண்ட கோபுரம் அன்று. தாம் பர்மாவில் கண்டுள்ள புத்த சமயக் கோயிலின் கட்டட அமைப்பின்படி பார்த்தால் இது புத்த சமயக் கோயில் அன்று. இஃது ஒரு கலங்கரை மாடமே (Land Mark)" என்பதாகும்.

இது பொருந்தாது. சீன மன்னன் இப்படியொரு கோபுரத்தை எழுப்ப இரண்டாவது நரசிம்ம பல்லவனிடம் வேண்டியது சமய நோக்கில்தான். கலங்கரை விளக்கமாக மட்டும் எடுக்க முனைந்

திருந்தால் அதனைக் கடற்கரைப் பகுதியில்தான் அமைத்திருப்பர். ஒரு புத்த சமயத்து மன்னன் புத்த வளாகத்திற்குள் அதிலும் சமய வளாகத்தில் எடுக்க வேண்டியிருக்க மாட்டான். இம்மணணின் சமயத்தவனான பல்லவனும் வெளியில் எடுத்திருப்பான்.

எனவே இக்கோபுரம் ஒரு புத்த சமயக் கோபுரமேயாகும். அதே போதில் இது கலங்கரை மாடமாகவும் பயன்பட்டது. கலங்கரை விளக்கம் என்பதற்கு இதற்கு மேலே விளக்கு அமைப்போ, ஏறுதற்குப் படிகளோ அமைக்கப் பெறவில்லை என்பதையும் கருத வேண்டும். மேலும் இக்கோபுரக் கூரையின் பக்கப் பிதுக்கங்களில் புத்தத் தொடர்புக் கலையமைந்த சிற்ப வேலைப்பாடுகள் இருந்துள்ளன. அனைத்திற்கும் மேலாக ஒரு புத்தர் சிலையும் இதிலிருந்து எடுக்கப் பெற்றுள்ளது. எனவே முடிவாக இது புத்தசமயக் கோபுரமே என்று கொள்ள வேண்டும்.

## நிலவறை

இந்த இடிப்பால் ஒரு தடயம் கிடைத்தது. இதனை இடித்தபோது இதன் கிழக்கே சற்று அண்மையில் ஒரு தொன்மையான இலுப்பை மரம் இருந்தது. கட்டடம் எழுப்பக் கருதி இம்மரம் வெட்டப்பட்டது. வேரைக் கெல்லும் போது இதன் அடியில் மூன்று அடி ஆழத்தில் ஒரு நிலவறை காணப்பட்டது. இந்த நிலவறையில் கலையழகு மிக்க அழகான 5 புத்தர் சிலைகள் கிடைத்துள்ளன.

இந்த நிலவறைதான் முன்னர் பர்மா நாட்டு மன்னன் இலங்கைக்கு அனுப்பிய துறவிகளும் தூதனும் வங்கக் கடலில் புயலால் வீழ்ந்து கரையேறி வந்து தங்கிய இடமாகும்.

இந்த நிலவறை சூளாமணி விகாரையை ஒட்டியோ சூளாமணி விகாரையின் அடியிலோ அமைக்கப் பட்டதாகும். பல புத்தப் பள்ளிகளில் நிலவறை அமைக்கப்படுவதுண்டு. தமிழ்நாட்டுக் கோயில்கள் பலவற்றில் கருவறையிலோ கருவறையை ஒட்டியோ நிலவறைகளும் சில கோயில்களுக்கு மன்னர் வந்து போகச் சுரங்கப் பாதைகளும் அமைக்கப்படுவதுண்டு. மன்னார்குடிப் பெரிய கோயிலில் கருவறையை ஒட்டிச் 'சுரங்க அறை' உள்ளது. இதில், நான்கு கீழ் அடுக்குகளாக நீண்ட கூடங்கள் உள்ளன. கீழ் நான்காவது அடுக்கில் ஒரு மூலையில் ஒரு வாயில் மேல் கருங்கல்லில் 'இராசராசன் திருவாயில்' என்று வெட்டப்

பெற்றுள்ளது. இவ்வாயில் செங்கற்களால் மூடப்பட்டுள்ளது. (இதனில் நான் இறங்கிப் பார்த்துள்ளேன்). நாகையிலுள்ள நடுவர் கோயில் கருவறையில் ஒரு சிறு நிலவறை உள்ளது. இவ்வமைப்பு போர்க்காலங்களில் சிலைகளையும், அணிகளையும் மறைத்து வைக்கப் பயன்படுவதாகும்.

இதுபோன்றே சூளாமணி விகாரையிலும் நிலவறை அமைக்கப் பட்டிருந்தது. இந்நிலவறை கொண்டு மரவோர் கெல்லப்பட்ட இவ்விடத்தில்தான் சூளாமணி விகாரை இருந்தது எனலாம்.

போர்த்துகீசியர் செய்த கொடுமையும் ஆலந்துக்காரர் காட்டிய கடுமையும் புத்தத் துறவியரை ஐயப்பட வைத்து அவர்பால் சிக்காமலிருக்கப் புத்தச் சிலைகள் மறைத்து வைக்கப்பட்டனவாகக் கொள்ள வேண்டும். வரலாற்றாசிரியர் சர் வால்டர் எலியட்டும் 'துறவியர் சிலைகளை மறைத்து வைத்திருக்கலாம்' என்னும் கருத்தை எழுதியுள்ளார்.

## சூளாமணிமேல் சூழ்ந்த கல்லூரி

இடித்த கிறித்துவக் குருமார் நிலவறையை அப்படியே வைத்து இதன்மேல் கட்டடம் எழுப்பி அதில் தூய வளனார் கல்லூரியை நிறுவினர். இக்கல்லூரி பின்னர் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றப் பெற்றது. இப்போது இக்கட்டடம் அறமன்றங்களின் அலுவல் மன்றங்களாக உள்ளது. இப்போது இக்கட்டடத்திலுள்ள வழக்கறி ஞர்கள் அறைக்குக் கீழே இறங்கிச் செல்வதற்குரிய படிகள் இருந்த வாயில் மூடப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பெற்ற 5 புத்தர் சிலைகளின் கதை நோக்கத் தக்கதும்; நோவத்தக்கதுமாகும்.

ஒரு சிலை பாரிசு நகர்ப் பாதிரியார் சாராயோன் (Carayon) என்பாருக்கு அனுப்பப்பட்டது. மூன்று சிலைகள் குவிண் கல்விச் சாலைக்குப் போயின.

ஒன்று நாகையில் அமைந்த தூய வளனார் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டது. பின்னர் அங்கு வருகை தந்த சென்னை ஆளுநர் மாண்புமிகு நேப்பியர் பிரபுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

புத்தம் சிதைந்தது மட்டுமின்றிச் சிதறியதையும் இச்சிலைப் பகிர்வு காட்டியது. சிதறலும் சமயச் சிதறலாக இல்லை; பரிசுச் சிதறலாகப் போயிற்று.

நாகை இருக்கிறது; சூளாமணி விகாரை இல்லை. விகாரைக்கு வழங்கப்பட்ட அறக்கட்டளை ஊராம் ஆனைமங்கலம் இருக்கிறது; அதற்குரிய நிலங்களும் விளைகின்றன; அறக்கட்டளை செயற்படுத்தப் படவில்லை. அறக்கட்டளையைப் பதிந்த செப்பேடுகள் இருக்கின்றன; அவற்றின் இயற்பெயர் போய் இலெய்டன் பெயர் பெற்றுள்ளன.

நாகை மண்ணில் 21 நூற்றாண்டுகள் இருந்த புத்தம் சுவடற்றுப் போயிற்று.

## இ. நாகையில் சைவம்

சமைக்கப்பட்ட சமயங்களில் ஒன்றிரண்டு அன்றி மற்றவற்றைச் சமைத்த முதல்வரை அறிகின்றோம். தீர்த்தங்கரர் சமணத்தையும், புத்தர் புத்தத்தையும், ஏசுகிறித்து கிறித்துவத்தையும், முகம்மது நபியவர்கள் இசுலாத்தையும், கன்பூசியசு கன்பூசியத்தையும் சமைத்தனர். இவ்வாறே பிறவும். சைவ சமயத்தைச் சமைத்த முதல்வரைக் குறித்துச் சொல்ல முடியாதபடி அதன் தொன்மை உள்ளது. சைவ மூலவர் 'சிவபெருமான்'.

### சைவம் — முதற் சமயம்

தமிழர் இயற்கையாம் கதிரவனை வணங்கத் தொடங்கினர். கதிரவனின் வெப்பம், நிறம் இவற்றின் பங்காகிய நெருப்பை வணங்கினர். இரண்டின் செம்மை நிறத்தையும் கொண்டு 'செம்மையன்' என்னும் 'சிவன்' பெயரைக் கொண்டனர். சைவ இலக்கியங்களில் சிவபெருமான் "தீவண்ணன்" என்று பாடப் படுவதைக் காணலாம்.

நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளாரும் தீப்பிழம்பான சூரியனில் சிவனைக் கண்டு தமிழர் வழிபட்டனர் என்றும், நெருப்பின் சிவந்த நிறம் 'சிவன்' என்றும் அந்நெருப்பின் நடுவே காணப்படும் நீல நிறமே உமையம்மை என்றும் எழுதினார். எனவே சைவசமயத்தின் தொடக்கால வணக்கநிலை தீவணக்கமாகவே இருந்தது

தமிழ் மாந்தர், வாழ்வில் வீரங்காட்டி இறந்தவனுக்கு நடுகல் நட்டனர். அதனையே பரவித் தொழுதனர்.

**"கல்லே பரவின் அல்லது**

**நெல்உகுத்துப் பரவும் தெய்வமும் இலவே" (10)**

என்னும் புறப்பாட்டும் இதனைக் காட்டுகிறது. இந்த நடுகல் உருவமே காலப்போக்கில் சிவலிங்க வடிவ வழிபாடாயிற்று.

## தமிழ்ச் சைவம்

மரத்திலும் கல்லிலும் இயற்கையான வடிவமைப்பாக இலிங்க வடிவம் காட்சி தந்ததையும் இயற்கையில் தோன்றிய சிவலிங்கமாகக் கருதினர். இவ்வாறு இயற்கையில் தானே தோன்றியதைத்தான் 'தான்தோன்றி இலிங்கம்' என்றனர். 'தான்தோன்றி மலை' என்றொரு மலை உள்ளது. இன்னம்பர் என்னும் சைவத் திருநகரில் அமைந்த சிவபெருமானுக்குத் 'தான் தோன்றி ஈசர்' என்று பெயர். பிற்காலத்தில் இச்சொல் அகந்தை கொண்டவனைக் குறிக்கும் சொல்லாகியுள்ளது. இவற்றை எல்லாம் ஒருங்கு சேர்த்துக் கருதினால் சிவனும் சைவமும் தமிழ் மண்ணில் தோன்றியவை என்ற உண்மையை உணரலாம்.

இதனால்தான் மாணிக்கவாசகர்,

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி" (11) என்று அறிவித்தார். இஃதே சைவரின் முழக்கமும் ஆயிற்று. ஐரோப்பியக் கிறித்துவப் பெருமகனார் முனைவர் சி.யூ. போப்பையர் சைவம் பற்றி,

"சைவ சிந்தாந்தமானது தென்னிந்தியாவிற்கே சிறப்பாக உரியசமயம்; தமிழர் சமயம் தென்னிந்திய வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தொன்மைச் சைவம், பெருஞ்சமயம். ஆரியர் வருகைக்கு முன்னரே சைவ சமயம் தமிழர் நெஞ்சகத்தில் நிறைந்து விளங்கியது" என்று எழுதியமை உண்மை பொதிந்த எழுத்தாகும். சைவ சமயத்தின் மொழியும் தமிழே. தமிழ் என்னும் சொல்லுக்கே "சிவம்" என்னும் பொருளையும் கண்டனர்.

"தமிழ் சிவம் இனிமை எனும் தனிப்பொருளாம்"

என்று கழாரம்பர் என்னும் பழம்புலவர் தம் 'பேரிசை நூற்பா'வில் குறித்தார்.

'காமிக ஆகமம்' என்னும் வடமொழி நூலும்

"சிவபெருமானுக்கு வழிபாடு ஆற்றும் போது தமிழ் வேதங்களை ஓதுதல் வேண்டும்" என்று எழுதிக் காட்டியது.

## தான் தோன்றி

இவ்வாறு சூரியன், நெருப்பு இவற்றின் கோட்பாட்டில் உருவகம் பெற்ற இலிங்கம், "தான்தோன்றி இலிங்கம்" என்று சைவத் தமிழ் மண்ணில் வழங்கப்பெற்றது. தமிழ் மண்ணில் மூலச் சமயமாகவும் உரிமைச் சமயமாகவும் சைவம் வளர்ந்தது.

"தான்தோன்றி இலிங்கத்தை" அறிந்த வடமொழியார் தம் மொழியில் "சுயம்புலிங்கம்" என்றனர். "விடங்கர்" என்னும் சொல்லையும் கையாண்டனர். "டங்கம்" என்னும் வடசொல்லுக்குச் சிற்பம் செதுக்கும் சிற்றுளி என்று பொருள். விடங்கர் — சிற்றுளியால் வடிக்கப் படாதவர் என்றாயிற்று. இவ்வாறான விடங்கர் சிறப்பாக ஏழுநகரங்களில் உளர். இவ்வூர்கள் "சப்த (ஏழு) விடங்கத் தலங்கள்" எனப்படும். இவ்வேழுள் நாகை ஒன்று.

"சீரார் திருவாரூர், தென்நாகை, நள்ளாறு,
காரார் மறைக்காடு, காறாயன், — பேரான
ஒத்த திருவாய்மூர், உலந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம் (12)

விடங்கர் சிவபெருமானைக் குறிக்கும். நாகை விடங்கர் "அழகிய விடங்கர்" எனப் பெற்றார். திருக்கோளிலி — திருக்குவளை.

### சைவக் கோட்பாடுகள்

ஏறத்தாழ இரண்டாம் நூற்றாண்டிற்குப்பின் - அஃதாவது பூம்புகார் அழிந்தபிறகு -(அதற்கு முன்னரே நாகை புத்தக் களமாக ஆகியிருந்ததால் அதற்குப் பின்னர்தான்) நாகையில் சைவக் கோயில் சிற்றளவில் அமைந்தது. பெரிய வெட்ட வெளி வளாகத்தில் ஒரு மரத்தடியில் அருவுருவ (இலிங்க) வழிபாடு தொடங்கியது. இந்நிலையில் சைவம் இயற்கைப் பாங்குடைய வழிபாட்டிலும், கோட்பாட்டிலும் இருந்தது.

நான்கு ஐந்தாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இக்கோட்பாடுகள் பெருகின; வகைப்பட்டன. வடவர் கோட்பாடுகளும் வடமொழி நூல் வழிகளும் புகுந்தன.

சைவம் அகச்சைவம், அகப்புறச் சைவம், புறச்சைவம், புறப்புறச் சைவம் என நான்கு வகைப்பட்டது. சைவ 'ஏணிப்படிகள்' எனப்படும் 24 சோபானங்கள் விரிந்தன. இச் சோபானங்களைச் சிவபெருமானே ஏற்படுத்தினார். 'ஏணிப்படிகள்' 19 முதல் 24 வரை

உள்ளவை ஆறும் நிறைவு பெற்றவை. இவை அகச் சைவமாகச் சைவ சித்தாந்தம் தோன்றியது. 13 முதல் 18 வரை உள்ள ஆறும் ஒன்றாகிச் சைவசித்தாந்தத்தோடும் அகச் சைவத்தோடும் வேறுபட்டு அகப்புறச் சைவமாயிற்று. இவற்றுள் பாசுபதம் ஒன்று. இது முழுமை யாக வடவர் பாங்கு கொண்டது. திருநீறு பூசும் ஒன்றில் மட்டும் அகச் சைவத்திற்கு ஒத்தது. சடைமுடி தரித்தல். சிவனுக்கு உயிர்க் (மாந்தர் – நரபலி) காணிக்கை தருதல் என்று கொலையை ஏற்றது. அருளின் உருவகமானவன் சிவன். அன்பே சிவம் என்ற சிவனைச் சினம் (உருத்திரம்) கொண்ட உருத்திரனாகக் கண்டது. மூலமான இலிங்க வழிபாடு உண்டு. மண்டையோட்டைக் (கபாலம்) கையில்கொண்ட சிவனாகப் பார்த்த 'கபாலி'களுடன் ஒத்துப்போவது. இப்பாசுபத வழியினர் 'பாசுபதர்' எனப்பட்டனர். இவர் மராட்டிய மாநிலத்துக் 'கார்வான்' பகுதியினர். இவர் தமிழகத்துள் புகுந்தனர். 'நகரமைப்பு நாகை' என்ற இந்நூற்பகுதியில் விளக்கப்பட்டவாறு இவர் 'வகுளீசர்' என்பார் வழிவந்த காரோணத்தர்.

இவர்கள் தமிழகத்தில் மூன்று இடங்களில் கோயில்களைத் தம் பாங்கில் விரிவாக்கினர். இன்னார்க்குத் தமிழ்நாட்டை அப்போது ஆண்ட மன்னர் சார்பு இருந்தது. அதனைத் துணையாகக் கொண் டனர். இவர்கள் 'நாகைக் காரோணம்', 'குடந்தைக் காரோணம்', 'கச்சிக் காரோணம்' என மூன்று கோயில்களை (முன்னிருந்த வைகளை) விரித்தனர். நாகைக் காரோணம் உருவாயிற்று. ஆறாம் நூற்றாண்டளவில் இங்கு அமைந்த காரோணர் அகச் சைவத்தின் மூலக் கோட்பாடுகளை விடத் தம் கோட்பாடுகளைப் பெருக்கினர். இவர் அமைத்த காரோணர் கோயிலாம் காரோணத்தைத்தான் தேவார மூவரும் பரவினர்; பாடினர்.

## திருக்கோயில் கதைகள் (தல புராணம்)

கிருட்டிண தேவராயர் காலத்தில்தான் வட மொழித் 'தலபுராணங்கள்' எனப்பெறும் திருக்கோயில் கதைகள் புகுந்தன. தமிழ் நாட்டின் தொடர்பிலும் வடமொழியில் தலபுராணங்கள் எழுதப்பெற்றுக் கடவுட் பாங்குடன் பரப்பப்பட்டன. இவற்றில் பல தமிழிலும் பெயர்க்கப்பெற்றன. தேவார மூவர் பாடல்களில் இத்தல புராண வடவர் கருத்துக்கள் இடம் பெறவில்லை. ஆயினும் அவற்றின் நிழல்கள் தென்படுகின்றன. பின்னர் எழுந்த திருமாலிய (வைணவ) ஆழ்வார் பாடல்களில் இந்த நிழலும் இல்லை.

மூலச் சைவத்தில் புகுத்தப்பெற்ற கோட்பாடுகளும், வழிபாடுகளும், விழாக்களும், கூறப்பட்ட பயன்களும் மிகக் கவர்ச்சியூட்டுவனவாக இருந்தன. நலம் பல எளிதில் கிடைக்கும் என்னும் அவாவைத் தூண்டின. உருத்திரன் என்னும் அச்சமூட்டும் உருவினன்; மண்டை ஓட்டினைக் கொண்டவன் என்பவை அச்சமூட்டும் வகையில் அமைந்தவை அன்றோ? அவாவும் அச்சமும் மக்களைப் பணிய வைத்தன; ஆட்பட வைத்தன.

திருவள்ளுவரோ 'கீழ்மக்களுக்கு ஒழுக்கம் உண்டு என்றால் ஒன்று அச்சத்தால்; அன்றி அவாவால்'[1] என்றது இவ்வகைக்கும் அமைவதாயிற்று. இவ்வாறு ஆட்பட்டாலும் தமிழ் மக்கள் திருநீறு பூசும் சைவராக இருந்தனர். சைவம் மக்கள் சமயமாக விளக்கம் பெற்றது.

## காணுமிடமெல்லாம் கோயில்கள்

நாகையில் சிவன் கோயில்கள் பெருகின. பட்டியலிட்டால்,

1. பெரியகோயில் எனப்பெறும் நாகைக் காரோணம், 2. மேலைக் காயாரோகணம், 3. சட்டையப்பர் கோயில், 4. நடுவர் கோயில், 5. அழகர் கோயில், 6. கட்டியப்பர் கோயில், 7. நாகநாதர் கோயில், 8. மலையீசர் கோயில், 9. விசுவநாத வீரபத்திரர் கோயில், 10. அமரேந்திரேசர் கோயில், 11. முத்தி மண்டபம் விசுவநாதர் கோயில், 12. அகத்தீசுரர் கோயில் (வெளிவை), 13. கார்முகேசர் கோயில், 14. மெய்கண்ட வேலவன் என்னும் குமரன் கோயில், 15. நாகூரில் புன்னாகவனப்பர் கோயில், 16. சொக்கநாதர் கோயில் எனக் காணலாம்.

## தெரு ஒன்று, பிள்ளையார் நான்கு

பிள்ளையார் கோயில்கள் மட்டும் 26 உள்ளன. ஒரே தெருவில் 4 பிள்ளையார் அமர்ந்துள்ளனர். நால்வரும் நான்கு திக்கில் முகம் வைத்துள்ளனர். நீலா தெற்கு வீதியில் கிழக்கு நோக்கி ஆண்டான் பிள்ளையார்; தெற்கு நோக்கி அம்பட்டன் பிள்ளையார்; மேற்கு நோக்கிப் பெருநாட்டுப் பிள்ளையார்; வடக்கு நோக்கி (நாட்டு மேனிலைப் பள்ளிக்குள்) வித்தியா பிள்ளையார். இஃதொரு

1. "அச்சமே கீழ்கள தாசாரம்; எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது" – திரு. 1075

புதுமை. சில பிள்ளையார் பெயர்கள் நயமானவை. கரையான் பிள்ளையார், காக்கா பிள்ளையார் (காக்கும் பிள்ளையார்), ஏழைப் (எல்லை) பிள்ளையார்; சம்மட்டி (சம்பங்கோரை)ப் பிள்ளையார்; பெரிய கோயிலுக்குள் இரண்டு பிள்ளையார்; ஒருவர் மாவடிப் பிள்ளையார், மற்றொருவர் ஐந்து முகப் பிள்ளையார்.

இவையன்றித் தனி அம்மன் கோயில்களாக நெல்லுக்கடை மாரி யம்மன் கோயில், வெளிவை முத்து மாரியம்மன் கோவில், மாகாளி யம்மன் கோயில், திரௌபதியம்மன் கோயில், அங்காள பரமேசுவரி யம்மன் கோயில், வேப்பிலைக் காளியம்மன் கோயில், அபிராமி யம்மன் கோயில் முதலிய 20 கோயில்கள் உள்ளன.[1] இவை யெல்லாம் திருநீறு வழங்குவன. ஆகையால் சிவன் கோயில்களே.

## சைவத் தலைநகர்

அனைத்துக் கோயில்களையும் சேர்த்தால் நாகையில் சைவ சமயக்கோயில்கள் அறுபதுக்கு மேல் உள்ளன. தெருவிற்கு ஒரு கோயில் எனலாம். சில தெருக்களில் இரண்டு, மூன்று, நான்கும் உள்ளன. வேறு எந்த நகரமும் இத்துணைக் கோயில்களைக் கொண்டதன்று. மிகப் பெரிய நகரங்களில் இருக்கலாம்.

எனவே நாகை நகர் 'சிவராசதானி' (சைவத் தலைநகர்) எனப் புகழ் பெற்றது. ஆட்சி வகையில் தலைநகராக இருந்ததில்லை என்றாலும் சைவ சமயத்தால் இது தலைநகரம் ஆயிற்று.

இக்கோயில்கள் அனைத்துமே நாகை நகரின் கிழக்குப் பகுதியில் இல்லை. நாகையிலும் நாகூரிலும் நாகை நாகூர்ச் சாலை யின் கிழக்குப் பகுதி இசுலாமிய மக்கள் வாழும் பகுதி பெரும்பகுதி. ஆதலால், இப்பகுதிகளில் சைவ, திருமாலியக் கோயில்கள் இல்லை.

இக்கோயில்களில் முதன்மையாகவும் விவரமாகவும் காணத் தக்கது காரோணர் கோயிலாகும். இது 'நீலாயதாட்சியம்மன் கோயில்' என்றே மக்கள் வழக்கில் உள்ளது. சுற்றிலும் உள்ள நான்கு பெருந் தெருக்களும் நீலா கிழக்கு, நீலா தெற்கு, நீலா மேற்கு, நீலா வடக்கு என்றே பெயர் பெற்றுள்ளன.

---

1. நாகைத் திருக்கோயில் விவரங்களைத் தொகுத்து உதவியவர் நாகை நண்பர் திரு ப. சிங்காரவேலன் அவர்கள்.

பெரிய கோயிலாகிய இக்காரோணர் கோயில் கோயிலுக்குரிய நிறைவான அமைப்புகளைக் கொண்டது. இஃது ஒரு கற்றளி (கல் கோயில்), கோபுரவாயில், நந்தி, பலிபீடம், கொடிமரம், மண்டபம், திருச்சுற்றுக்கள், கருவறை, விமானம் என நிறைந்தது. கோயிலுக் குள்ளேயே திருக்குளம் 'தேவதீர்த்தம்' என்னும் பெயரில் உள்ளது. இங்கு விசுவநாதர் கோயிலும் அழகிய முத்தி மண்டபமும் உள்ளன.

முத்தி மண்டபம் கோயிலின் ஒரு சிறப்பு.

இந்நாட்டில் காசி, காஞ்சி, நாகை என்னும் மூன்று திருநகர் களில்தாம் முத்தி மண்டபங்கள் உள்ளன. நாகை முத்தி மண்டபம் பட்டி மண்டபமாகவும் பல நூல்கள் அரங்கேறும் களமாகவும் உள்ளது.

பெரிய கோயிலின் தென்மேற்கு மூலையில் வெளியிலிருந்து கொணர்ந்து அமைக்கப்பட்ட மூலவரைக் கொண்ட கோயில் ஒன்று எழுந்துள்ளது. நகரின் தென்மேற்கு மூலையில் பழைய சிந்து ஆற்றங்கரையில் கார்முகேசர் கோயிலென்றொரு கோயில் இருந்தது. ஆலந்துக்காரர் அவ்விடம் தமக்கு வேண்டியிருந்ததால் அக்கோயிலை அப்புறப்படுத்தினர். அங்கிருந்த மூலவரையும் அணுக்கத் தெய்வங் களையும் இங்குக் கொணர்ந்து தனிக் கோயில் அமைத்தனர். நகரின் தென்மேற்கு மூலையிலிருந்து வந்ததை இக்கோயிலின் தென்மேற்கு மூலையில் அமைத்ததும் ஒரு பொருத்தமாகும். கார்முகேசர் முன்னிருந்த இடத்தில் ஒரு பிள்ளையார் கோயில் மட்டும் உள்ளது. அவ்விடம் சம்பங்கோரை நிறைந்த இடமாகையால் சம்பங்காட்டுப் பிள்ளையார் எனப்பட்டு அஃதே 'சம்மட்டிப் பிள்ளையார்' ஆயிற்றாம்.

காரோணர் கோயில் நுழைவாயிலில் நாகாபரணப் பிள்ளையார் திருவுருவம் உள்ளது. இதன் தலை மேல் ஐந்து தலைப்பாம்புப் படம் விரித்து நிற்கிறது. இரண்டாவது வாயிலின் தென்புறம் முருகன் இடம் பெற்றுள்ளான். இம்முருகனுக்கு இங்கு 'மயிலேறு சேவகன்' என்னும் சிறப்புப் பெயர் உண்டு. இம்முருகனையே அருணகிரியார் ஆறு பாடல்களில் போற்றியுள்ளார்.

அரிமா ஊர்தியில் ஏறிய ஐந்து முகப் பிள்ளையாரையும் இங்குக் காணலாம்.

இக்கோயிலில் அனைத்துக் கடவுளர்க்கும் திருவுருவங்கள் உள்ளன. உலகம் அழிந்த ஊழிக்காலத்தில் அனைத்துக் கடவுளரும்

இங்குப் புகலிடம் பெற்றுத் தங்கினர் என்பதன் அறிகுறியாகும் இஃது என்பர். இவ்வமைப்பொரு தனிச்சிறப்பாகும்.

## ஒன்பது பார்வை ஒரே பார்வையில்

பெருங்கோயில்களில் ஒன்பது கோள்களுக்கும் (நவக் கிரகங்கள்) திருவுருவம் அமைந்திருக்கும். ஒன்பதும் மாறிமாறி நோக்கியிருக்கும். நாகைக் காரோணத்தில் ஒன்பதும் ஒரே முகமாக மேற்குப் பார்வையில் அமைந்து உள்ளமை ஒரு புதுமை. இஃதும் ஒரு சிறப்பாகும்.

## அழகிய தான்தோன்றியர்

மூலவர் அருவுருவினர். இதனை இலிங்கம் என்பர். கருவறையில் மூலவரின் தென்புறம் 'சோமாஃச்கந்தர்' என்னும், சிவனும் உமையும் நடுவில் முருகப் பிள்ளையை அணைத்திருக்கும் திருக்கோலத் திருவுருவம் இடம் பெற்றுள்ளது. ஸ:சிவன் – உமா – ஃச்கந்தன் (கந்தன்) என்பதே சோமாஃச்கந்தர். காரோணத்திற்கு இஃதொரு சிறப்பு. இதனைத்தான் 'அழகிய விடங்கர் – சுந்தர விடங்கர்' என்று புராணம் விவரிக்கின்றது.

முதலில் இந்திரன் தன் வழிபாட்டிற்காகத் திருமாலிடமிருந்து முதல் சோமாஃச்கந்தரைப் (தியாகராசரை) பெற்றான் என்றும் அவனுக்கு உதவிய முகுந்தன் இதனை வேண்டினான் என்றும், இதனை இழக்க மனமில்லாத இந்திரன் அதே போன்று வேறு ஆறு திருவுருவங்களைத் தேவகம்மியன் மயனைக் கொண்டு உருவாக்கினான் என்றும் முகுந்தனோ முதல் திருவுருவத்தை அடையாளங் கண்டு பெற்று வந்து திருவாரூரில் தியாகராசராக நாட்டினான் என்றும் கூறப்பட்டுள்ளது.

தொடர்ந்து அவை ஒவ்வொன்றாக மண்ணுலகிற்கு வந்தன. தொடர்ந்து 'சாலிசுகன்' என்னும் மன்னன்தான் பெற்றதைத் திருநாகையிலும் இவன் குல மன்னன் ஒருவன் பெற்றதைத் திருமறைக் காட்டிலும், ஆரியகுல மன்னன் ஒருவன் திருநள்ளாற்றிலும் ஆரிய மன்னன் மற்றொருவன் திருக்காறாயிலிலும், ஆரிய குலக் காளை ஒருவன் திருவாய்மூரிலும் நாட்டி வழிபாடு நடத்தினர். ஒவ்வொரு ஊரிலும் இவ்விடங்கர் வெவ்வேறு சிறப்புப் பெயர்கள் கொண்டார்.

நாகை விடங்கர் அழகியவர். எனவே 'சுந்தரவிடங்கர்' என்றனர் பிள்ளையவர்கள்,

*"........... சோமாசுக்*

*கந்தரை முழுதும் நோக்கிக் கண்காணித்து நாமம்*

*சுந்தரவிடங்கர் என்று சொல்லி"* (13)

என்று பாடினார்.

## கிணற்றுக்கல்

கருவறையண்மையில் சிறப்புமிக்க ஓர் அருவத் திருவுருவம் இருந்தது. இது பெரிய அளவிலான ஒரே கோமேதகக் கல்லுருவம். இது மிக ஒளியும் அழகும் வாய்ந்தது. பளபளப்பாகத் தேன் போன்ற நிறமுடையது. இதற்கும் வழிபாடு செய்தனர். இவ்வழிபாட்டில் சூட ஒளியேற்றும் வழிபாட்டை இவ்வுருவத்தின் முன்பக்கத்தில் செய்வதில்லை. பின்புறம் நின்றே செய்தனர். இதன் பின்புற ஒளி வீச்சில் மருத்துவத்திற்குரிய கதிரொளி வீசியதாம். அதனால் பின்னே செய்ததாகச் சொல்வர். இது கோடி வெண்பொற்காசுகளுக்கு மேலும் மதிப்புடையது. இது கடந்த ஆண்டு களவு போயிற்று. கடவுளாக இருந்த கோமேதகத்தைக் கல்லாகவே கொண்டு கள்வன் கொண்டு சென்றான். களவும் கண்டுபிடிக்கப்படாமல் கிணற்றில் போட்ட கல்லாகவே உள்ளது.

## தான்தோன்றி உரு எது?

இக்கோமேதகத் திருவுரு இயற்கையில் விளைந்தது. உளியால் வடிக்கப்படாதது. எனவே, இதனையும் 'விடங்கர்' என்றனர். அழகு சிறக்கும் இஃது 'அழகு விடங்கர்' எனத் தக்கதாகவும் கருதப்பட்டது. ஆனால், திருநாகைக் காரோணத்தைப் பாடிய பிள்ளையவர்கள் இது பற்றிக் குறிப்பிடவில்லை.

தானே தோன்றியது. விடங்கர் எனும் வரம்பில் முன்கண்ட சோமாஃச்கந்தர் அடங்காது. அதனைத் தேவதச்சன் மயன் உருவாக்கினான் என்றனர். அவன் கம்மியன். ஆனால் அவன் உளிகொண்டு செய்வதில்லை என்பர். இது புராணக் கதையாகவும் உள்ளது.

பொதுவில் இயற்கைத் தோற்றத்தில் அருவுருவங் கொண்டதையே 'விடங்கர்' என்று கொள்ள வேண்டும். இதன்படி நோக்கினால் மூலவரான திருவுருவமே தான்தோன்றியான விடங்கர் எனப்படலாம். இவரே 'காரோணர்' எனப்படுபவர். கோயில் அமைப்பில் கருவறைக்கு அண்மையில் அம்மன் அமர்ந்துள்ளார். அம்மனின் பெயர் கருந்தடங்கண்ணி. இவ்வாறே தேவார மூவரும்

பாடியுள்ளனர். ஆனால் மாற்றுப்பெயராகத் தோன்றிய 'நீலாய தாட்சி' என்பதே வழக்கில் உள்ளது. பெண் மக்களுக்குப் நீலாய தாட்சி என்றே பெயர் சூட்டுகின்றனர். 'கருந்தடங்கண்ணி' என்னும் அழகிய பெயர் ஏட்டோடு நிற்கிறது.

சிவன் கோயில்களில் இன்றியமையாது அமையும் கூத்தரசன் திருவுருவமும் தனித்திருமுன்னும் உள்ளன. 63 சைவ அடியார் களின் திருவுருவங்கள் திருச்சுற்றில் உள்ளன. முன் குறித்தது போன்று அனைத்துக் கடவுளரின் திருவுருவங்கள் அமைந்துள்ளன.

## மூவர் பாடல் நகர்

இத்தகு சிறப்புடைய நாகைக் காரோணம் பாடல் பெற்ற கோயில்; நாகை பாடல் பெற்ற நகர். தேவார மூவரும் பாடியயுள்ளனர். சோழ நாட்டுத் தேவாரத் திருவிடங்கள் 190. அவற்றுள் காவிரியின் தென் கரையில் உள்ளவை 127. இவற்றுள் குறிப்பிடத்தக்கது நாகைக் காரோணம். திருநாவுக்கரசர் 4 பதிகங்கள் - 41 பாடல்கள் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் 2 பதிகங்கள் - ஒவ்வொன்றும் கடை காப்புப் பாடல் ஒவ்வொன்றுடன் 22 பாடல்களை இசைத்துள்ளார். திருநாவலூரர் எனப்பட்ட சுந்தரர் 1 பதிகம் ஒரு கடைகாப்புப் பாடலுடன் 11 பாடல்களைப் பாடியுள்ளார்.

## அப்பர் வாய்மொழி 'அந்தண் நாகை'

நாவுக்கரசருடைய பாடல்துறைகளில் திருத்தாண்டகம் குறிப் பிடத்தக்கது. அவர் 'தாண்டகவேந்தர்' என்று சிறப்பிக்கப்படுபவர். அதனில் 4ஆவது பதிகமும் பிற திருநேரிசை, திருவிருத்தம், திருக் குறுந்தொகை என உள்ளன. திருநேரிசையில் "காரோணத்தானை, ஐயனை, ஒருத்தனை" என்றெல்லாம் பாடல்தோறும் அடுக்கி "உய்ந்த வாறே, களித்தவாறே, பிறந்திலாரே" என்று வினை முடிவுகளால் நிறைவேற்றியுள்ளார். திருவிருத்தத்தில் பாடல்தோறும் "காரோணனே, காரோண" என்று விளித்துப் பாடியுள்ளார். பன்னி ரண்டு பதிகங்களிலும் நாகையரின் கல்விச் சிறப்பைத் திருக்குறுந் தொகையில் "வினை ஒயுதே, வினை கழலுமே, நீங்குமே, சோருமே, இல்லையே, மாயுமே, கெடுந்துயர் திண்ணமே, தீவினை தீருமே" என ஒவ்வொரு பாடலையும் ஒரே அமைப்பில் வினை முடிவு செய்துள்ளார். திருத்தாண்டகம் சொற்சுவை, பொருட்சுவை காட்சிச் சுவை கொண்ட பாடல்களை உடையது. ஒவ்வொரு பாடலும்

"காரோணத்தெஞ்ஞான்றும் காணலாமே" என்று நிறைவு பெறும். திருத்தாண்டகம் மட்டும் 11 பாடல்களைக் கொண்டது. ஆனால் இது தன் பெயர் முத்திரை வைத்துப் பாடப்பெறும் கடை காப்புப் பாடல் அன்று. முதற் பதிகத்தின் முதற் பாடலாகிய "மனைவி, தாய், தந்தை, மக்கள் மற்றுளசுற்றம்" என்னும் பாடலும் திருத்தாண்டகத்தில் "வரிவண்டு தேனே பாட" என்னும் பாடலும் போற்றியில் பாடப் படுவனவாகும். முன் மூன்று பதிகங்களிலும் இறுதிப் பாடல்களில் இமயத்தைப் பெயர்க்க முனைந்த இராவணனை இறைவன் கால் கட்டை விரலால் அழுத்தியதைக் காணலாம். திரிபுரம் எரிந்தமை, காலனைக் காய்ந்தமை, சுடலையாடியமை, நஞ்சுண்டமை என்னும் சிவனார் அருளிப்பாடுகளைப் பாடல்தோறும் சூட்டியுள்ளார்.

"கடல்சூழ் நாகை, கற்றார் பயில் கடல் நாகை, கல்லினால் மதில் நாகை, கதிகமழ் நாகை, சோலை குலவு நாகை, கலங்கள் சேர் கடல் நாகை" என்றெல்லாம் நாகை நகரை விவரித்துள்ளார். திருத் தாண்டகத்தில் "அந்தண் நாகை" என்று ஒன்பது பாடல்களில் வைத் துள்ளார். இத்திருத்தாண்டகம் மேலுமொரு சிறப்பைக் கொண்டது. இதில் 26 சைவத் திரு ஊர்களை அடுக்கிப் பாடியுள்ளமை ஒரு தனி அமைப்பாகும். 26 ஊர்களைப் பாடவேண்டும் என்று கருதிய தாலேயே இப்பதிகம் மட்டும் ஒரு பாடலை அதிகமாகப் பெற்றது போலும். இத்துணைத் திருவிடங்களிலும் இருப்பவனை "நாகைக் காரோணத் தெஞ்ஞான்றும் காணலாமே" என்று ஒவ்வொரு பாடலும் நிறைவு பெறுகின்றது. இஃது அப்பதிவுகள் நாகைக்குத் தந்த தனிச்சிறப்பு. "நாகைக் காரோணம் என்றும் சிந்தை செய்வானைப் பிரியாதிருக்கும் திருமங்கையே" என்று பாடியமையும் ஒரு சிறப்பு முத்திரையாகும்.

## ஞானசம்பந்தர் வாய்மொழியில்
## 'ஞானத் துறை வல்லார்'

திருஞானசம்பந்தர் குறிஞ்சிப் பண்ணிலும் செவ்வழிப் பண்ணிலும் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். இவர் பாடல்களின் கருத்தமைப்பில் எட்டாவது பாடல்கள் யாவும் இராவணன் இமயத்தைப் பெயர்த்ததைக் குறிக்கும். ஒன்பதாவது பாடல் திருமாலும் நான்முகனும் தேடியதைப் பாடும். பத்தாவது பாடல் சமணர் புத்தரைச் சாடும். இவ்வமைப்பிலே நாகைப் பதிகங்களும் அமைந்துள்ளன. நாகை நகரைக் "கடல் நாகை, கழிசூழ் கடல்நாகை,

மாடநெடுவீதி நாகை, வங்கங்கள் கரையார் நாகை" என்றெல்லாம் காட்டியுள்ளார். நாகைப் பெருமக்களை, "அடியார் விதியால் வழி படுபவர், வழிபாடு பிரியாது எழுந்தொண்டர், ஞானத்துறைவல்லார் நாளும் பணிந்தேத்த, நல்லார் அறஞ் சொல்வர், பொல்லார் புறங் கூறுவர், அல்லார் அலர் தூற்றுவர், அடியார்க்கருள் செய்வார்" என் றெல்லாம் பாடி இறையன்புடையவராய், கற்றவராய், வழிபாடு குறையாதவராய்க் காட்டியுள்ளார்.

இவர்தம் பதிகம் ஒவ்வொன்றும் பதினொன்றாவது பாடல் ஒவ்வொன்றைக் கொண்டது. இதில் "தமிழ்ஞான சம்பந்தன்" என்று தம்பெயரை நாட்டித் தம் "தமிழ் மாலை" பாடுபவர் நலம் பெறுவர் என்று நிறைவேற்றுவார். இது "கடைகாப்பு" எனப்பெறும். இத் தன்முத்திரைப் பாடல்கள் இருபதிகங்களிலும் உள்ளன.

## ஓயாத ஒட்டாரம்

திருநாவலூரர் எனப்பெறும் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய ஒரே பதிகத்தில் கடைகாப்புப் பாடலுடன் 11 பாடல்கள் உள்ளன. "கொல்லிக் கௌவாணம்" என்னும் பண்ணில் அமைந்தது இது. இவர் "தம்பிரான் தோழர்" எனப்பெறும் உரிமையைச் சிவபெருமா னிடம் பெற்றவர். இவர் பாடல்கள் அவ்வாறு நெருக்கம் காட்டுவன அவ்வப்போது வாழ்க்கைக்கு வேண்டிய மனைவி முதல் அடுத்தவள் தொடங்கி அணிகலன்கள், செல்வம் வரை அடிக்கடி வேண்டிப் பெறுபவர். சிவனிடம் ஒட்டாரம் பிடிப்பவர்; சிவனைப் பகடியாகவும் பாடியவர். இவற்றையெல்லாம் இப்பதிகத்திலும் காண லாம். சற்று மிகையாகவே பாடியுள்ளார்.

இறைவனையே,

"பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்",

"சேவேறித் திரிவீர்", "செல்வத்தை மறைத்து வைத்தீர்".

"பாம்பினொடு படர்சடைகள் அவை காட்டி வெருட்டிப்

பகட்டுகிறீர்" (14)

என்றெல்லாம் பகடியாடியுள்ளார். இவர் ஒரு மேனி மெருகர். வாழ் வின்பத்தில் திளைப்பவர். இவற்றிற்கேற்ப இறைவனிடமே பல வற்றை வேண்டிப் பெறுபவர். நாகைக்கு வந்தவர் உடுத்திக் கொள்ளப் பட்டும், மார்பின் குறுக்கே போடும் பட்டிகையும்

வேண்டியுள்ளார். பூசிக்கொள்ளக் கத்தூரி, கமழ்சாந்து முதலிய மணப்பொருள்கள், குளிர்ச்சிக்குக் கண்ணுக்குக் கண்ணாடி, செலவிற்குப் பணம், உடைமைக்குத் தங்கக்கட்டி முதலியவற்றோடு உண்ணுவதற்குக் "கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டும்" என்றும் வேண்டியுள்ளார். இசுலாமியர் வாழ்ந்த ஊர் அன்றோ. புலவுச் சோறு சமையல் மணந்தது போலும். அதற்கென்று நிணப்புலவுச் சோறு கேட்கவில்லை. காய்கறி நெய்ச்சோறு (காய்கறிப் பிரியாணி) கேட்டுள்ளார்.

இவற்றைக் கேட்டு முழுமையாக ஒட்டாரமே செய்துள்ளார்.

"செல்வத்தை மறைத்து வைத்தீர்";

''கட்டியெமக்கு ஈவதுதான் எப்போது சொல்வீர்''? நஞ்சைக் கொடுத்த தேவர்க்கு அமுதைக் கொடுத்தீரே! முடியாதா?

முன்பொருமுறை நல்கை (விருத்தி) கேட்டபோது திருப்பூந் துருத்தியில் போய் உட்கார்ந்து கொண்டீர். இப்போது கீழ்வேளூர் போனீரா? திருவாரூரில் தந்த செல்வத்தில் பாதியாவது தர வேண்டும். இவற்றைத் தராமல் இருக்க நீர் ஒன்றும் வறுமை உடையவர் அல்லர். உம் கோயில் பண்டாரத்தி (கருவூலம்) லிருந்து எடுத்துத் தரலாம்.

"தாரீரேல் ஒருபோதும் அடியெடுக்க ஒட்டேன்"

என்று மறியல் போராட்டம் நடத்தினார். "பாம்பைச் சீறச் செய்து சடைமுடியைக் காட்டி அச்சுறுத்த முடியாது; அஞ்ச மாட்டேன்" என்று எதிர்த்தார்.

திருவீழிமிழலையில் காசு கொடுக்கவில்லையா? நாகையில் மட்டும் கொடுக்காதது ஏன்? கொடாவிட்டால் உன் "திருமேனி வருந்த வளைத்துக் கொள்வேன் (முற்றுகையிடுவேன்)" என்பனவெல்லாம் படு ஒட்டாரம் அன்றோ?

இவற்றிற்காகச் சிவனை மட்டும் பகடி செய்யவில்லை. "மலையரையன் பொற்பாவை சிறுவனையும் தேறேன்" என்று முருகனையும் "கணக்கின்றி உண்ணும் பெருவயிறன் கணபதி ஒன்று மறியாதவன்" என்று பிள்ளையாரையும் பகடிக்குள் வைத்தார்.

இவ்வாறெல்லாம் நான் ஒட்டாரம் செய்தால், "நாளை என்னைக் கண்ணறையன் (கண்ணோட்டமில்லாதவன்), கொடும்பாடன் (கொடியவன்) என்றெல்லாம் சொல்லக்கூடாது" என்றொரு

கண்டிப்பும் போட்டார். "நீ இருந்த மலையைத் தூக்கிய இராவணன் பின்னர் பாடிய பாட்டைக் கேட்டுத் தேரும் வாளும் தந்தாயே. என் பாட்டுக்கும் கொடு" என்றார். இவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு செல்ல, "காற்றனைய கடும்பரிமா ஏறுவதும் வேண்டும்" என்று சவாரிக் குதிரையும் வேண்டினாரர்.

மிஞ்சிப் பேசியது மட்டுமன்று; கெஞ்சியும் "மற்றாரை உடையேன்" என்று நின்றுள்ளார். இவற்றை எல்லாம் பெற்றார் என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

## வக்கணைச்சொற்கள்

இவர் பதிகத்தில் கையாண்டுள்ள சில சொற்கள் அக்கால வழக்கிலிருந்தவையும், படைப்புச் சொற்களும், புதுமைச் சொற்களும் ஆகும். 'கிறிபேசி, பாண்பேசி (பகடிகள் பேசி), படிறுஆடி (வஞ்சம் பேசி) சேஏறி (காளை ஏறி), பகட்டு, சுவண்டு (வீண்), மிண்டாடி (மிடுக்காக), வினைக்கேடு (இக்காலத்தில் மெனக்கேடு எனப் படுவது) காம்பினொடு நேத்திரம் (கண்ணாடி), சொற்பாடு (தூது) என்பனவற்றை இப்பதிகத்தில் காண்கிறோம்.

ஒவ்வொரு பாடலும் "கடல் நாகைக் காரோணம் மேவி இருந்தீரே" என்று நிறைவேறுகின்றது. "கடல் நாகை, காண்பினிய நெடுமாடம் நிறைந்த நெடுவீதி, செல்வக் கடல் நாகை" என்றெல்லாம் நகரைப் பாடியுள்ளார். இறுதிப் பாடல் கடைகாப்பாக, "அணிநாவலூரரான் சொன்ன அருந்தமிழ்கள் இவைவல்லார் அமருலகாள்பவரே" என்று தன் முத்திரையுடன் முடிக்கிறார்.

அப்பர் பாடலைத் "தேவாரம்" என்றும், சம்பந்தர் பாடலைப் "பாசுரம்" என்றும் சுந்தரர் பாடலைப் "பாட்டு" என்றும் கூறுவது ஒரு மரபு. இம்மரபை நாகைக் காரோணம் பெற்றதும் சிறப்பாகும்.

இறைவனிடம் இவ்வாறு சற்று வம்பாடி நடந்து கொண்டதால் "வன்தொண்டர்" எனப்பெற்றார்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டு எட்டாம் நூற்றாண்டுகளில் தேவார மூவர் பாடினர். ஒன்றை இங்கே அறிய வேண்டும்.

## மூவர் பாடலிலும் முற்றும் இல்லை

சோமாஃச்கந்தர் என்னும் அழகிய விடங்கர் பற்றி முன்னர்க் கூறப் பட்டது. கோயில் அமைப்பைக் காட்டும் வரிசையில் அது முன்னே

கூறப்பட்டது. ஆனால், இந்த வழக்கும் கதையும் தேவார காலத்திற்குப் பிற்பட்டுப் புகுந்த வடமொழிப் புராணம் அறிவித்தவை.

மூவர் பாடல்களிலும் இதற்குறிய குறிப்பே இல்லை. பிற கதைகளாகிய இராவணன் கயிலையை எடுத்தமை, திரிபுரம் எரித்தமை, மால் நான்முகன் தேடியமை, பாற்கடல் கடைந்தமை, தக்கன் வேள்வி, காலனை உதைத்தமை, பார்த்தனுக்குப் பாசுபதம் அளித்தமை, யானைத்தோல் உரித்தமை முதலியவை மூவராலும் பாடப் பெற்றுள்ளன.

சிவபெருமான் உமையுடன் மங்கை பாகனாகக் காட்சி தருவதை மூவரும் பரவலாகவே பாடியுள்ளனர். ஆனால் நாகைக் காரோ ணத்தில் அமைந்த, முருகனை நடுவில் கொண்ட சோமாஃச்கந்தக் காட்சி குறிப்பாகக் கூட இல்லை. சில முதற் பாடல்களிலேயே 'மங்கை பாகன்' என்று மட்டும் பாடியுள்ளனர். மேலும் ஏழு விடங்கங் களையும் அஃதாவது ஏழு திரு ஊர்களையும் பாடியுள்ளார். சுந்தரர் திருக்காறாயில், திருவாய்மூர் இரண்டைப் பாடவில்லை. அப்பர் திருக்காறாயில் தவிர மற்றவற்றைப் பாடியுள்ளார். எந்தப் பதிகத்திலும் இந்த அழகிய விடங்கர் – சிவன், உமை, முருகன் தோன்றும் காட்சி—பாடப்படவேயில்லை. முதல் விடங்கமாகிய திருவாரூர்ப் பதிகங்களிலேயே இல்லை. அப்பர் ஆருரை 23 பதிகங்களில் 232 பாடல்கள் பாடியுள்ளார். எதிலும் எக்குறிப்பும் இல்லை. தியாகராசர் என்னும் குறிப்பும் இல்லை. ஏழு உலகு, ஏழு மணல், ஏழு கடல், ஏழு யுகம் என்றெல்லாம் பாடியோர் ஏழு விடங்கர் பற்றிக் குறிக்கவே இல்லை.

எனவே, சோமாஃச்கந்தர் கதையும் சிற்பமும் நாகையில் உள்ளன உட்படத் தேவார மூவர் காலத்திற்கு பின் கதையாகப் புகுந்து வடிவம் பெற்றுள்ளன.

## காயாரோகணம் இல்லை

இங்கு மற்றொன்றையும் காண வேண்டும். வடபுலத்திலிருந்தும் வந்த பாசுபதத்தார் முதலில் காரோணத்தை உருவாக்கினர் என்று கண்டோம். தொடர்ந்து மன்னர்களால் கோயில் துணையமைப்பு களுடன் பெருக்கம் பெற்றது. இக்காலக் கட்டத்தில்தான் புராணக் கதைகள் வடமொழியிலிருந்து தமிழ்மண்ணில் இறக்குமதி செய்யப்பட்டன. காரோணத்திற்கும் ஒரு வேற்றுக்கதை தோன்றியது. அதுதான் 'காயாரோகணம்' என்பது.

புண்டரீக மாமுனிவர் என்பார் நாகையை வழிபட முனைந்தார். நாகையில் ஒரு சிறு கோயிலை உருவாக்கி வழிபட்டார். அருள் புரிய எழுந்த சிவபெருமான் அவரை உடலுடன் (காயத்துடன்) ஏற்றுக் கொண்டார் (ஆரோகணித்துக் கொண்டார்). அதனால் சிவ பெருமான் அதாவது 'காரோண' ராக இருந்த சிவபெருமான் 'காயா ரோகணர்' ஆனார். முனிவர் எடுத்து வழிபட்ட கோயிலும் காயா ரோகணர் கோயில் ஆயிற்று. அது தனிக்கோயிலாக முன்னர் அமைந்த காரோணர் கோயிலுக்கு மேற்கே அமைந்ததால் 'மேலைக் காயாரோகணம்' எனப்படுகின்றது. அதற்கென ஒரு குளமும் தோன்றி அக்குளம் 'புண்டரீகுளம்' எனப்படுகின்றது. 'காரோணம்' முன் அமைந்த கோயில்; 'காயாரோகணம்' பின் எழுந்த கோயில். ஆயினும், முன்னிருந்த கோயிலுக்கு வழங்கிய 'காரோணம்' என்னும் பெயருடன் காயாரோகணம் என்ற பெயரும் வழக்கில் வந்து காலப்போக்கில் 'காரோணம்' உள்வாங்கிக் கொள்ளக் 'காயா ரோகண'மே வெளிப்பாடாயிற்று. மூலப் பெயர் 'காரோணம்' என்றும் வழிப்பெயர் காயாரோகணத்தின் மரூஉச் சொல் என்றும் தவறாகக் கொள்ளப்பெற்றது.

தேவார மூவர் 'காயாரோகணரை' அறியார். மூவரும் 'காரோணம்' என்றே பாடினர். எனவே, 'காயாரோகணம்' என்ற பெயர் வழக்கும் அதற்காகப் புகுத்தப்பட்ட புராணமும் எட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர்த் தோன்றியவை.

இதனால் என்ன குறை? — என்று கருதலாம்.

**"ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்**

**திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ" (15)**

என்று மாணிக்கவாசகர் பாடியிருக்கும் போது இந்த இரண்டாவது திருப்பெயரைக் (காயாரோகணம்) கொள்ளக்கூடாதா(?) என்று வினவலாம். கொள்ளலாம். பொருள் வேறுபடாமல் இருந்தால் கொள்ளலாம்; கொள்வதால் உண்மைகள் மறைவதாக இருந்தால் ஏன் கொள்ளவேண்டும்? அத்துடன் இதனால் வேறு நோக்கம் இருக்குமானால் கொள்ளக் கூடாதன்றோ?

## சுவை சொட்டும் சொற்கள் — அவை எங்கே?

இப்படிக் கொண்டதால் தேவார மூவர் கொண்ட கருத்தாழம் மிக்க இனிய தமிழ்ப்பெயர்கள் நூற்றளவில் மறைந்தனவே! தமிழ்

ஞானசம்பந்தன் கொண்ட தமிழ்ச் சொற்கள் போய் எவ்வாறெல்லாம் மாறின!

'மறைக்காட்டு மணாளர்' 'வேதாரண்ய புரீசுவரர்' ஆனார். புற்றிடங் கொண்டார் 'வன்மீக நாதரானார்'. 'மாதிருக்கும் பாதியர்' 'அர்த்த நாரீசுவரர்' ஆனார். 'வெண்ணெய்ப் பெருமாள்' 'நவநீத நாதர்' ஆனார். பெரிய பெருமானடிகள் - பிரமபுரீசுவரர்; ஐயாறப்பர் - பஞ்சநதேசுவரர்; தான்தோன்றியப்பர் - சுயம்புநாதர் என்றெல்லாம் வட மொழிப் பிறப்பில் ஆயினரே.

இறைவன் மட்டுமா? அழகம்மை — சௌந்தர்ய நாயகி; மலை வளர் காதலி — பர்வத வர்த்தனி; தேன்மொழிப் பாவை — மதுரவசனி ஆயினர்.

வண்டமர்பூங்குழலி, மட்டுவார் குழலி, மருவார் குழலி, ஏலவார் குழலி, வண்டுவார்குழலி, காரார்குழலி, சரிவார் குழலி, கருந்தார் குழலி என எத்துணை இனிய தமிழ்க் குழலிப் பெயர்கள் வழக் கற்றுப் போயின. இவை போன்று கருந்தடங் கண்ணம்மை முதலாக எத்துணைக் கண்ணம்மைகள், கரும்படு சொல்லி முதலாக எத் துணை மொழியம்மைகள் பெயர் தெரியாது போயினர். இது தமிழுக் கும் அதன் வழியே தமிழர்க்கும் ஏற்பட்ட இழிவன்றோ? இவ்வழியில் கோயிலிலேயே தாய் மொழித் தமிழ் இல்லாது போயிற்றே.

இவை நிற்க, காரோணம் பற்றிய செய்தியைத் தொடர்வோம். அதன் கோயில் திருமரம் சுரபுன்னை என்னும் புன்னாகம். கடவுளின் பெயர்களோ காரோணர், காயாரோகணர், ஆதிபுராணர், சுந்தர விடங்கர், தியாகராசர் எனப் பெருகின.

காரோணரை வழிபட்டுப் பேறு பெற்றோர் மிகப்பலர்; பல தகுதியினராவர். திருமால் முதலாகக் கடவுளர் நால்வர்; தேவர் இருபதின்மர்; புண்டரீகமுனிவர் முதலாக முனிவர் பதினொருவர்; அரிகேசரி முதலாக அரசர் எண்மர்; அதிபத்தர் முதலாக அடியவர் நால்வர்; ஆக நாற்பத்தொருவராவர்.

## எழுப்பியவர்...?

பாசுபதத்தாரால் தோற்றுவிக்கப்பெற்ற கோயிலை வளர்த்துக் கட்டியவன் ஒரு மன்னன்; அவன் பெயரைச் 'சாலீசுகன்' என்கின்றது புராணம். வரலாற்றில் இப்பெயரில் மன்னன் இல்லை மணிமேகலைச் காப்பியத்தில் வரும் நெடுமுடிக்

கிள்ளியைத்தான் 'சாலீசுகன்' என்றாக்கியுள்ளனர். காரோணர் கோயில் கல் தூணில் வடிக்கப்பெற்றுள்ள அரச வடிவம் இவனது என்கின்றனர். உண்மையில் ஓர் அரசன்தான் கட்டியுள்ளான். அவன் வடிவந்தான் தூணில் உள்ளது. ஆனால் அவன் பெயர் அறியக் கூடவில்லை என்பதே உண்மையாகும்.

## அறப்பேழைகள்

காரோணர் கோயிலில் சோழமன்னர் காலக் கல்வெட்டுகள் உள்ளன. படியெடுக்கப்பட்டுள்ளவற்றில் முதல் இராசராசனின் ஒன்பதாம் ஆட்சி ஆண்டாகிய கி.பி. 994 முதல், மூன்றாம் குலோத் துங்கன் ஆட்சி ஆண்டாகிய கி.பி.1192 வரையிலான 198 ஆண்டுக் காலங்களில் செய்யப்பட்ட அறங்களை அறிகின்றோம். இவை யன்றிச் சிதைந்த இடிபாடுகளால் போனவை, இடம் மாறியவை எத்துணையோ இருக்கலாம்.

முன்னர் ஓலையிலோ, செப்புத் தகட்டிலே எழுதப்பட்ட சாசனம் பின்னர் கல்வெட்டாகும். கல்வெட்டின் தொடக்கம் மங்கலச் சொல்லில் தொடங்கும். தொடர்ந்து மன்னரின் புகழுரையோ வெற்றிச் செய்திகளைத் தரும் மெய்க்கீர்த்தியோ அமையும். கல் வெட்டில் அறக்கட்டளையோ பிறவோ அமைக்கப்பட்ட காலத்து மன்னரின் ஆட்சியாண்டு குறிக்கப்பெறும்.

நாகைக் கல்வெட்டுகள் சில "பிரசஸ்த்தி" என்னும் மங்கல மொழி யாம் வடசொல்லுடன் தொடங்குகின்றது. பிற யாவும் தமிழில் உள்ளன. மங்கலமொழியைத் தொடர்ந்து "திருமன்னி வளர", "திரு வளர் திரள் புயத்து', "திருமகள் மன்னிய", "திங்களேர் தரு" என்னும் வளங்கூறும் சொற்கள் உள்ளன. (16)

கிடைத்துள்ளவற்றில் காணப்படும் அறங்கள் சோழ மன்னர் களால் வழங்கப்பட்டவை அல்ல. அக்காலத்தில் ஆண்ட மன்னர்களது இத்துணையாம் ஆண்டில் என்னும் ஆட்சி ஆண்டு மரபுப்படி குறிக்கப்பட்டுள்ளவை. நாகை ஊர்ப் பெருமக்கள் என்னும் ஊரார், வணிகர், சில இனத்தவர், அரசுப் பணி கொண்டோர், வெளியூரினர் மேலைக்கடற்கரைக்குடிக் கேணிச் செல்வத்தைச் சேர்ந்த வணிகர்கள், கீழைநாட்டு சிரீவிசய மன்னரின் முகவர்கள் முதலியோர் பல்வகை அறங்களைச் செய்து கல்வெட்டில் பதித்தனர்.

பொன் நகைகள், கல்பதித்த அணிகலன்கள், வழிபாட்டிற்குரிய வெள்ளிப் பாண்டங்கள், சீனக் கனகங்கள் (பொன் காசுகள்), 30 காசுகள் முதல் 8000 காசுகள் வரை காசுகள், பல நந்தா விளக்குகள், பாவை விளக்குகள், பயணிகளாக வரும் அடியார்க்கும் கோயில் பார்ப்பனருக்கும் உணவுகள், மாசிமகத்து ஆறாவது நாள் திரு விழாவிற்கு இருப்புகள், பஞ்சாமிர்த முழுக்காட்டலுக்குக் காசுகள், விளக்கு எரிக்க எண்ணெய் முதலிய பல்வகை அறங்கட்கு வழங்கப் பட்ட நல்கைளை இக்கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. இவற்றுள் மேலைக் கடற்கரைக் கொல்லத்து வாணிகரும் ஈழை நாட்டாரும் செய்தவை குறிக்கத்தக்கவை.

## பெரிய ஏப்பம்

இவ்வறங்கள் அனைத்தும் என்ன ஆயின? கல்மேல் எழுத்தாக அழியாமல் இருக்கின்றன. நடைமுறையோ நீர்மேல் எழுத்தாகி அழிந்து விட்டது.

கல்வெட்டு மங்கலச் சொல்லில் தொடங்கும். முடிவு அவ் வறத்தைக் காப்போரைப் போற்றியும் அழிப்போரைத் தூற்றியும் அமைக்கப் பெறும். இதற்கு 'ஓம்படை' என்று பெயர். அறத்தைக் காப் பாற்றுக என்றிருக்கும். காப்பாற்ற வேண்டியோர் ஏப்பம் விட்டனர். "இவ்வறம் காத்தார் அடி எம் முடிமேலன" என்று முடியும். நாம் அறத்தைக் காத்தால் நம் கால் அவர் தலை மேல் ஏற்கப்படுமே; அப்படி நம் காலை வைக்கலாமா என்று கருதிய பெருமனத்துடன் அறக்கட்டளைகளை அடுக்களைச் சாப்பாடாக்கினர்.

அறத்தைக் கெடுத்தோர் தீராப் பழி அடைவர் என்றிருக்கும். பழியைப் பெற்றும் இருக்கலாம். கடவுளையே ஏய்க்க நினைத்தவர் கடவுளர்க்கு ஒரு வழிபாடு நடத்தியே பழியையும் மூடியிருப்பர். முடிவாக எந்த அறமும் இல்லை.

மேலே கண்டவைகள் மட்டுமா? அறங்கள் மேலும் தொடர்ந்தன. மராட்டியர் ஆட்சிக்காலத்தில் "னாகப்பட்டினத்திலேயுள்ள தேவ தாயம் (கோயில் கொடை), விறுமதாயம் (பிரமதாயம்), மானீயம் (அறக்கட்டளை), மடப்பிறம் (மடங்களுக்குக்கொடை) முன்பின் அத்துப் பிரகாரம் நடப்பித்துக் கொள்ளுகிறது'' (17) என்று பதியப் பட்ட படேவியா வெள்ளிப்பட்டயம் இருக்கிறது அறங்கள் எல்லாம் தாயக்கட்டைகளாக உருண்டுவிட்டன.

புத்த சமய அறக்கட்டளைகளை மட்டும் ஏப்பம் விட்டுச் சைவ சமய அறக்கட்டளைகளை விழுங்காமல் சமயத்துக்குச் சமயம் ஒருதலைச் சார்பு செய்யக்கூடாது என்று சமமாக நடந்துள்ளனர் போலும். இவை போகட்டும்.

பிற்காலச் சோழமன்னர்கள் கோயில் திருப்பணிகளையும் அறங்களையும் காரோணர்க்குச் செய்திருக்கலாம். தடயம் இல்லை. ஆனால் கோயிலின் இரண்டாவது திருச்சுற்றுத் தெற்குச் சுவரின் அடியில் சோழர்கால ஓவியம் உள்ளது. அதன் மேல் பூச்சமைந்து நாயக்கர் கால ஓவியம் இடம்பெற்று உள்ளது. அஃதும் மேற்பூச்சு பெற்று மறைந்துள்ளது.

## கயிலாயமே ஒக்கும் நாகை

காரோணரை வழிபட்டால் பெறும் பேறுகள் பல கூறப் பட்டுள்ளன. அழகிய விடங்கர் உருவம் முருகன் என்னும் குழந்தையை நடுவில் அணைத்ததன்றோ. அதனை ஓராண்டு வழிபட்டால் மகப்பேறு கிடைக்கும் என்பர்.

அழகிய விடங்கருக்கு ஆண்டுப் பெருவிழாவிற்கு ஆனித்திங்கள் அத்தத்தில் கொடியேறும். 18ஆம் நாள் அட்டகொடி; 24ஆம் நாள் திருத்தேர்; 27ஆம் நாள் அருள்நீர் (தீர்த்தம்) கொடுத்தல் எனச் சிறப்பு விழா நிகழும். ஆடிப்பூரத்தில் கருந்தடங்கண்ணம்மைக்குப் பூரம் கழித்தல் விழா நிகழும். அவ்வப்போது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நிகழும்.

இக்கோயிலுக்கு 1826–இல் குடமுழுக்கு நீராட்டு நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

இம்முருகனை அருணகிரியார்,

"நாலு திக்கும் வெற்றி கொண்ட
 சூரபத்மனைக் களைந்த
நாகப் பட்டி னத்தமர்ந்த பெருமாளே"

என்று பாடித் திருப்புகழ் படைத்துள்ளார்.

புலவர் ஏறு மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் திருநாகைக் காரோண புராணம் அவர் புராணங்களிலேயே சிறந்தது. 61 படலங்களில், 2506 செய்யுள்களைக் கொண்டது.

"கயிலாயமே ஒக்கும் நாகப்பட்டினத் திருநகரம்" என்று பாடிச் சைவசமய மந்திரமாகிய 'நமசிவாய' என்பது போன்று காயாரோகண(ம்) ஐந்தெழுத்து என்று பெருமைப்படுத்தியுள்ளார்.

## பெற்ற பத்து

பல்வகைச் சிறப்புள்ள நாகைக் காரோணம் பிற ஏதும் பெறாத பத்துச் சிறப்புகளைத் தனக்கெனத் தனிச்சிறப்புகளாகப் பெற்றுள்ளது. அவை:

1. விடங்கர் திருவிடம்.
2. அழகிய விடங்கர்.
3. கோமேதகக் கல் அருவுருவம் பெற்றிருந்தமை.
4. அனைத்துக் கடவுளர்க்கும் புகலிடம்.
5. ஒன்பது கோள்களும் ஒருமுகமாக மேற்கு நோக்கியிருத்தல்.
6. முக்தி மண்டபம்.
7. காயத்துடன் ஏற்றமை.
8. பிள்ளையவர்களின் சிறந்த புராணம்.
9. அதிபத்த நாயனார் பேறு பெற்றமை – இவற்றாலும் தெருவிற்கொரு கோயில் கொண்டமையாலும்.
10. சைவத் தலைநகர் (சிவராசதானி).

## 2. சட்டையப்பர் கோயில்

ஒரு முனிவரால் ஒரு காயாரோகணம் தோன்றியது. அவர் புண்டரீக முனிவர். இதுபோல ஓர் உடையாரால் ஒரு சட்டையப்பர் கோயில் தோன்றியது. அவர் சோழீச் சரமுடையார். இச்சட்டையப்பர் கோயில் ஓர் உட்கோயில். ஆம்; மேலைக் காயாரோகணர் கோயிலுக்குள்ளேயே தெற்கு முகமாக அமைந்த கோயில்.

சட்டைநாதர் சிவபெருமானின் சங்கம வகைத் தோற்றம் என்பர். பத்துக் கைகளைக் கொண்டவர். அவற்றில் முத்தலைவேல், உடுக்கை, வாள், தோட்டி (அங்குசம்), மண்டையோடு, பாம்பு, வட்டம், கவர்கயிறு (பாசம்), வளைதடி (தண்டாயுதம்) அருள்குறி எனப் பத்தையும் கொண்டவர்.

ஐந்து திருப்பெயர் கொண்டவர். திருமாலின் உடல் தோலைச் சட்டையாக அணிந்ததால் 'சட்டையப்பர்'. அவர் முதுகெலும்பை

வளைதடியாகக் கொண்டதால் 'தண்டபாணி'. எமன் போன்று ஒறுத்ததால் 'காலவயிரவர்'. ஆபத்தைக் கெடுப்பதால் 'ஆபத் தோத்தாரணர்'; மணம் கமழும் புழுகை அணிந்ததால் புழுகாணி (புனுகு பூசி ஆள்பவர் என்பதால் புனுகாளி என்றும் கூறுவர்).

## காளைக்கு மாற்று அரிமா

இவர் திருமுன் தெற்குமுகமாக அமைந்தது. நந்திக்கு மாற்றாக அரிமா – சிங்கம் படுத்துள்ளது. நரசிங்கத்தை அழித்ததன் அறிகுறி இஃது என்பர். பெருவிழாக் கொடியேற்றத்தில் அரிமா பொறித்த கொடி யேற்றப்படும்.

இக்கோயில் மேலைக் காயாரோகணத்தின் உள்ளேயே அமைந்த அகக் கோயிலாயினும் தனியமைப்புக் கொண்டது. தென்பால் சற்று மேடான கோயில். மாடக்கோயிலுக்குரிய நிறைவான அமைப்புடைய தன்று. இவர்க்குத் தனியே பெருவிழா நிகழும். பங்குனி இறுதிக் கிழமையில் தொடங்கிச் சித்திரை இரண்டாம் கிழமையில் நிறைவுறும். தனித் தேரோட்டம் நிகழும்.

இத்தேரோட்டம் பற்றி ஒரு கருத்தை அறிவது நயம் பொதிந்த தாகும்.

## வடமும் வடையும்

இக்கோயிலுக்கென அமைந்த நான்கு வீதிகளிலும் தேர் ஓடும். தேரை இழுக்க அக்காலத்து நாகையில் இருந்த புகைவண்டித் தொழி லகத் தொழிலாளர் கூட்டாக வருதல் மரபு. தேரோட்டம் முடிந்ததும் கோயில் பார்ப்பனர் பெருவிருந்துண்பர். ஓராண்டில் தொழி லாளர்கள் வடம் பிடிப்பது நாங்கள்; வடை தின்பது பார்ப்பனரா என்று எதிர்ப்பு காட்டி வடம் பிடிக்கவில்லை. அக்காலத்தில் நாகை நாட்டுயர்நிலைப் பள்ளியில் பெரும்புலவர் சதாசிவனார் தமிழா சிரியராகப் பணி யாற்றினார். அவர், மறுத்த தொழிலாளர்க்கு வேண்டுகோளாகப் பின்வரும் வெண்பாவை எழுதி அனுப்பினார்;

**"மட்டாருஞ் சோலை மலருந் திருநாகைச்**

**சட்டையப்பர் கோயில் தனித்தேரில் – கட்டும்**

**வடம்பிடிக்க வாருங்கள்; வண்கயிலை தன்னில்**

**இடம்பிடிக்க வேண்டுமேல் ஈங்கு".**

இவ்வேண்டுகோள் வெண்பாவைக் கண்ட தொழிலாளர் புலவர் பெருந்தகைக்கு மதிப்பளித்து வடம் பிடித்தனர்.

இக்கோயில் தோன்றியதற்கு ஒரு வரலாற்றுக் கதை உண்டு. வட புலத்தில் இராமதேவர்[1] என்னும் சித்தர் காசியில் அமர்ந்து தாம் உருவாக்கிய சட்டைநாதர் படிமத்தை வழிபாடு செய்து வந்தார். அவர்பால் சோழீச்சரமுடையார் என்னும் மறையவர் அடியவரானார். அவரிடம் இராமதேவர் தம் படிமத்தை வழங்கி இதனை உரிய இடத்தில் நாட்டிக் கோயில் எழுப்புக என்றார். பெற்ற உடையாரின் கனவில் சிவன் தோன்றி 'இதனை நாகையில் நாட்டுக' என அவ்வாறே நாகைக்குப் படிமத்துடன் வந்தார். கோயில் எழுப்பப் பொருள் இன்றிக் கவன்றபோது அடுத்துள்ள திருமலைராயன் பட்டினத்தை ஆண்ட திருமலைராயன் என்னும் குறுநில மன்னன் மகளுக்குப் பேய் பிடித்திருப்பதை அறிந்து அதனை நீக்கினார். காணிக்கை செலுத்த விரும்பிய மன்னனிடம் சட்டையப்பருக்குக் கோயில் எழுப்புமாறு வேண்ட அவர் எழுப்பியதே இக் கோயிலாயிற்று. இக்கோயிலின் எதிரே ஒரு பலிபீடம் உள்ளது. அவ்விடம் சோழீச்சரமுடையார் அடக்கமான இடம் என்பர். திருமலைராயன் காலம் 1453 முதல் 1468 வரை. எனவே இக்கோயில் 15 ஆம் நூற்றாண்டில் எழுந்தது. சட்டை என்னும் பெயரில் 'சட்டைமுனிவர்' என்னும் ஒரு சித்தர் இருந்தார். அவர் பாடல்கள் ஆறு, சித்தர் பாடல்களில் உள்ளன.

## 3. நாகநாதர் கோயில்

ஒரு கோயிலுக்குள் அமைந்த ஓர் உட்கோயில் கண்டோம். கோயிலுக்குள் ஒட்டியுள்ள இணைக் கோயிலையும் கொண்ட ஒரு கோயிலைக் காண்போம். அதுதான் நாகநாதர் கோயில். இக் கோயிலே நாகர்பட்டினத்தை நாக (பாம்பு) பட்டினமாக்கியதன் சின்னம்.

இது சட்டையப்பர் கோயிலுக்கு வடக்கிலும் புண்டரீகுளத்திற்கு மேற்கிலும் அமைந்தது. சுற்றிலும் நான்கு வீதிகளைத் தன் பெயரில் கொண்டது. அரச கோபுரம் உடையது. இப்பெயர் பெறுதற்குக் காரணமாக நாகநாட்டரசன் திருவுருவத்தை, திருமுன் செல்லும் நுழைவாயில் வலப்புறச் சுவர் மாடத்தில் வழிபடும் வடிவில் கொண்டது. கருவறையில் நாகநாதர் திருவுருவம் உளது. அம்மன்

(1) தமிழ்ச் சித்தர்களில் இராமதேவர் என்பார் ஒருவர். அவர்பாடிய தமிழ்ப் பாடல்கள் உள்ளன. மேலே கண்ட இராமதேவர் வேறு; இவர் வேறு.

பெயர் அகிலாண்டவல்லி. இதனை ஒட்டிய மண்டபத்தில் பாம்புப் புற்று உள்ளது. அதில் வெள்ளிக்கிழமை தோறும் மக்கள் பால் வார்ப்பர். பாம்பு வந்து அருந்துகிறது. இம்மண்டப உள்வாயில் வலப்புறத்தில் ஒரு சைவ அடியார் அமர்ந்த நிலையில் வடிவம் உள்ளது. 'இவ்வடிவத்தின் கீழுள்ள எழுத்தைக் கொண்டு இவர் திருவாவடுதுறை மடத்து மவுன அடிகளாராக இருக்கலாம்' என்று திரு ஆதிகேசவனார் எழுதியுள்ளார்.[1] இம்மண்டபத் திருமுன் இடப்புறத்தே மூன்று கொங்கைகள் கொண்ட இளம்பெண் வடிவம் அமர்ந்த நிலையில் உள்ளது. இது நாக அரசன் நாகன் என்பானின் மகள் என்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் பிள்ளையவர்களது புராணத்தில் ஒரு படலத்தைப் பெற்றிருப்பதுடன், கணபதிதாசர் என்பர் இயற்றிய 'நெஞ்சறி விளக்கம் என்னும் பாடல்களையும் பெற்றதாகும்

## வரலாறும் புராணப் பூச்சும்

மணிமேகலைக் காப்பியம் கூறும் நாக நாட்டுப் பீலிவளையின் வரலாற்றைப் புராண மாக்கிக் கூறப்பட்ட கதை இது. நாக அரசன்



நாகநாதர் கோயிலில் உள்ள மூன்று கொங்கைகள் பெற்ற நாக கன்னிகை

1. இரா. ஆதிகேசவன்; அருள்மிகு நாகநாதசாமி திருக்கோயில் வரலாறு - பக். 17

அஃதாவது பாம்புலகத்து மன்னன் மகப்பேறு வேண்டிக் காரோ ணரை வழிபட்டு மகளைப்பெற்று அவளுக்கு மூன்று கொங்கைகள் இருந்தமையால் கவன்றான்; 'சோழ மன்னன் ஒருவனைக் காணுங் கால் மூன்றாவது மறையும்; அவனே பாம்புலகம் வந்து மணப்பான்' என்பது அக்கதை. அம்மன்னனையே 'சாலீசுகன்' என்றனர்.

'சாலிசுகன்' வடசொல்; புராணப்பெயர். நெடுமுடிக்கிள்ளி தமிழ்; வரலாற்றுப்பெயர். கிள்ளி புகாரை ஆண்டவன். நாக நாட்டு இளவரசி *பீலிவளை* இங்கு வந்தாள். நாககன்னிகை நாகன் மகளும் நாகை வந்தாள். அவள் புகாரில் கிள்ளியைக்கண்டாள்; கூடி னாள். சொல்லாமல் போனாள். நாக கன்னிகை நாகையில் சுகனைக் கண்டாள். மூன்றாவது கொங்கை மறைந்தது. (பீலி வளைக்கு மூன்றாவது இல்லை). வளையைக் காணாது கிள்ளி தேடி னான். சுகன் புற்றுச் சுரங்கம் வழியாக நாகர் நாடாம் பாம்பு உலகம் சென்று மணந்து வந்தான்.

வரலாற்றைப் புர்ாணம் எப்படிப் பூசும் என்பதற்கு இஃதும் ஒரு சான்று.

## தனிச்சிறப்புகள்

இக்கோயிலுக்கு ஒரு சிறப்பு உண்டு. இதனைச் சார்ந்து இண்டு துணைக் கோயில்கள் உள்ளன. எந்தச்சிவன் கோயிலிலும் தெட்சணா மூர்த்தி திருவுருவம் கருவறைப் புறச்சுவரின் மாடத்தில் தெற்கு முகமாக இடம் பெற்றிருக்கும். இக்கோயிலில் தனிக்கோயில் கொண் டுள்ளமை ஒரு சிறப்பு. இத்தனிச்சிறப்புச் சட்டைநாதர் கோயிலிலும் உண்டு.

மற்றொன்று சீதையை மீட்க இலங்கை சென்ற இராமன் இலங் கைக்குப் பாலம் அமைக்கச் சிவபெருமானை வேண்டி வழிபட்ட அரு வுருவம் அமைந்த கோயில் ஒன்று உள்ளது. இஃது 'இராமநாதர் கோயில்' எனப்படும்.

திருநாகைக் காரோண புராணம் நாகங்களின் பெரியோனாகிய ஆதிசேடன் வழிபட்டுக் கட்டிய கோயில் என்று கூறுகிறது.

இக்கோயிலில் அமைக்கப் பெற்ற ஒரு துண்டுக் கல்வெட்டைத் தமிழ்ப்பல்கலைக் கழகக் கல்வெட்டுத் துறை ஆய்வாளர் தி. பி. செயக்குமார் தம் களஆய்வில் கண்டுள்ளார். அஃது ஒரு சிறு அறக் கட்டளையைக் குறிக்கிறது.

கோயில் அரச கோபுர நுழைவாயிலின் மேலே பாவப்பட்டுள்ள பாறைகளில் கல் எழுத்துக்கள் காணப்படுகின்றன. ஒன்றில் சூளாமணி விகாரையின் இராசராசப் பெரும்பள்ளிப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அவ்விகாரை இடிபட்டதன் பின்னர் கட்டப்பெற்ற மண்டபத்தில் அமைக்கப்பட்டதை இது குறிக்கும். புத்தக் கோயில் வழிபாட்டின் ஒரு சான்றுச் சின்னத்தை நாகநாதர் கோயில் கொண்டுள்ளது.

## 4. மலையப்பர் கோயில்

இதனை 'மலையீசுவரர்' கோயில் என்று வழங்குவர். இப்பெயரே இஃது ஒரு மாடக்கோயில் என்பதனை அறிவிக்கிறது. இது கட்டுமான அமைப்பில் 30 அடி உயரத்தில் கருவறையைக் கொண்டது. கருவறையிலமைந்த மூலவர் திருவுரு ஒரு புதுமை அமைப்புடையது. பொதுவாக அருவுருவ வடிவம் உருண்டையாக அமைவது. இம்மூலவர் புதுமைப்பாங்காகப் பல்லவர் வடிவமைப்புப் பாங்கில் 32 பட்டை வடிவம் கொண்டது. இஃதொரு சிறப்பு.

### அரிமாவினுள் அம்மையப்பர்

மூலவருக்குப் பின்னே யாழித்தூண் அமைப்பு உள்ளது. அதில் ஓர் அரிமா அமர்ந்த பாங்கில் உள்ளது. அதன் வயிற்றில் இறைவன் இறைவியுடன் வீற்றிருக்கும் காட்சி அழகியது; சிற்பக் கலையின் சிறப்பை அறிவிப்பது.

புராணப்படி பராசரர் என்னும் முனிவர் காரோணரை வழிபட வந்து, ஓரிடத்தில் தவக்குடில் அமைத்துச் சிவஅருவத் திருவுருவை நாட்டிப் பல்லாண்டுகள் வழிபட்டார். சிவபெருமான் காட்சி தந்து முனிவர் வேண்டுதலை வினவினார். தாம் அமைத்த குடிற்கோயிலில் கயிலாயத்துடன் அமர வேண்டுமென வேண்ட அவ்வாறே கயிலாய அமைப்பான கட்டுமலைக் கோயிலுடன் இடங்கொண்டார்.

இக்கோயிற் பணியில் குறிப்பிடத்தக்க ஒன்று ஆலந்துக்காரரின் ஆட்சி இறுதிக் காலத்தில் இருந்த ஆளுநர் உதவியால் இக்கோயில் திருப்பணி நிகழ்ந்ததாகும். கிறித்துவ சமயச் சார்பான ஆலந்து ஆளுநர் இப்பணியைச் செய்வித்து இக்கோயிலில் தமிழ்க் கல்வெட்டு ஒன்றையும் நுழைவாயில் இடப்பக்கம் வைக்கச் செய்துள்ளார்.

அதில்,

"இக்கோயில் 1777ஆம் வருடம் புகழத்தக்க கவர்னர் ரெயினியர் வான் விளிசிங்கன் பிரபு காலத்தில் புதுப்பிக்கப்பட்டது" என்றுள்ளது. இவர்தாம் ஆலந்தின் இறுதி ஆளுநராவார்.

ஆளுநரின் தாய் மொழியாம் டச்சு மொழியிலும் ஒரு கல்வெட்டு வலத்திருச்சுற்றின் வெளிப்புறச் சுவரில் உள்ளது. இம்மலையப்பர் கோயில் நீலா தெற்குவீதியிலிருந்து காரோணர் கோயிலுக்குச் செல்லும் வழியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இஃது ஒன்றே நாகையில் மாடக் கோயிலாகும்.

## 5. நடுவர் கோயில்

நடுவர் கோயில் என்னும் பெயர் சில கருத்துக்களைத் தருகின்றது. நகருக்கு நடுவே அமைந்த கோயில் என்பது முதல் கருத்து. இது கொண்டு இக்கோயில் எழுந்த காலத்தில் நகரமைப்பு எந்த அளவில் இருந்திருக்கும் என்று அறிய இயலும். வெளிப் பாளையத்தை விடுத்து நாகை அகநகர் என்று பார்ப்பினும் இக் கோயில் சரியளவில் நடுவாக இல்லை. ஓரளவே நடு இடமாகும். இது கொண்டு வெளிப்பாளையம் தோன்றுவதற்கு முன்னரே இக்கோயில் எழுந்திருக்கலாம் என்று கொள்ள இடம் உண்டு. இவ்வகையில் இது தொன்மை வாய்ந்த கோயிலாகும்.

### உலகப் படைப்பிடம்

புராணக் கதையில் ஊழிக் கால உலக அழிவிற்குப் பின்னர் நான்முகன் உலகைப் படைக்கச் சிவபெருமான் அருளின்படி இக் கோயிலை அமைத்து வழிபட்டான் என்றுள்ளது. நான்முகன் பெய ரால் இக்கோயிலின் பின்னே 'பிரமதீர்த்தம்' உள்ளது. இராமனும் ரமனும் இதனை வழிபட்டனர்; அருள் பெற்றனர் என்பர்.

இதன் கருவறையில் ஒரு நிலவறை உண்டு. திருமுன்தெரு அகல மானது. தெற்கில் மட்டும் ஒரு மடவளாகத் தெருவைக் கொண்டது.

இதனை வடமொழியார் "நடுத்தலேசம்" என்றும் இறைவனை "மத்தியத்தலேசர்" என்றும் இக்கோயிலின் முன்னமைந்துள்ள பிள்ளையாரை "மத்தியத்தலேச விநாயகர்" என்றும் ஆக்கினர்.

இராசகோபுரமும், நுழைந்த சிறு வெளியில் தெற்குப் பார்த்த ஒரு கொலுமண்டபமும், ஓரளவான மாமண்டபமும், அம்மன் திருமுன்னும், உள்ளாழி மண்டபமும் கொண்டது இக்கோயில்.

## 6. அழகர் கோயில்

"அழகர்" என்றதும் திருமாலின் கோலந்தான் நினைவில் வரும். இந்த அழகர் கோயிலோ சிவன் கோயில். அழகிழந்த அழகருக்கு இங்கு அழகை அருளியதால் சிவனார் அழகப்பர் – அழகநாதர் என்று பெயர் பெற்றார்.

### அழகு தந்த அழகர்

பாற்கடலைக் கடைந்தபோது வாசுகி கக்கிய நஞ்சின் வெப்பம் அனைவரையும் கருகச் செய்தது. பள்ளி கொண்டிருந்த திருமாலும் உடல் கருகினார். அதைப்போக்கச் சிவபெருமானை வேண்டினார். அவர் அருளியபடி நாகை வந்து காரோணர் முதலியோரை வழிபட்டு நடுவர் கோயிலுக்குத் தெற்கில் ஓரிடத்தில் அருவுருவத்தினை நிறுவி வழிபட்டார். சிவபெருமான் தோன்றிக் கருகிய கோலத்தை நீக்கி முன்னையிலும் அழகாக்கினார். அழகாக்கியதால் அவ்விலிங்கத்தில் அமர்ந்து அழகர் என்று போற்றப்பெற்றார். அம்மையார் அழகம்மை யானார்.

இக்கோயில் ஒரு திருச்சுற்றுள்ள கோயில்; கற்கோயில். அணுக்கத் திருவுருவங்கள் உள்ளன. கோயிலின் பின்புறம் 'அமுத புட்கரணி' என்னும் திருக்குளம் உள்ளது. கோயிலின் தெற்கில் 'சாரபுட்கரணி' என்னும் திருக்குளம் உள்ளது.

'அழகுக்கு அரசன்' என்னும் பொருளில் 'சௌந்தரராசன்' என்றும், அழகர் துணைவி என்னும் பொருளில் சௌந்தர்ய நாயகி என்றும் வடமொழி ஆக்கமும் ஆயின.

### மாறுபட்ட மதிப்பு

திருமண் (நாமம்)ணுக்குரிய திருமால் திருநீறு பூசி, கவுத்துவமணியணிந்த மாலவர் சிவக்கண்மணி (உருத்திராக்கம்) அணிந்து, எட்டெழுத்துக்குரிய (நாராயணாயநமக) அவர் ஐந்தெழுத்தை (நமசிவாய) ஓதி, துளசிக்குரிய அவர் கொன்றை மலர் கொண்டு வழிபட்டமை இக்கோயிலின் சிறப்புச் செய்தி எனலாம்; மாறுபட்டவை மதிக்கப்பட்டன.

## 7. வீரபத்திரர் கோயில்

அழகர் கோயிலின் கிழக்கில் தெற்குமுக வாயில் கொண்ட வீர பத்திரர் கோயில் உள்ளது. இக்கோயிலமைந்த தெரு, வீரபத்திரசாமி கோயில் தெரு என்றுள்ளது. தக்கன் வேள்வியை அழிக்க

சிவபெருமானின் ஒரு சடை மோதலில் தோன்றியவர் வீரபத்திரர்; தன்னுடன் தக்கன் வேள்வியை அழித்த வீரமாகாளியுடன் இங்கு வீற்றுள்ளார்.

ஒரு சிறிய அரச கோபுரத்துடன் சுற்று மதில்களைக் கொண்ட அளவான கோயில் இது. இதன் பின்புறத்தே ஓடிய சிந்தாற்றுக் கரையில் புத்தத்துறவியர் வாழ்ந்த இடம் இருந்தது. இங்கிருந்தும் புத்தர் வெண்கலச் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.

## 8. அகத்தியப்பர் கோயில்

(வெளிப்பாளையம்)

தமிழ் அகத்தியன் தொடர்புள்ள கோயில் இது. தமிழுடன் வடமொழியும் இணைந்து அகத்தீசுவரர் கோயில் எனப்படுவது.

### நாகைக் கரையில் கடலைக் குடித்தார்

சிவ பார்வதி திருமணக்கூட்டத்தால் வடக்கு தாழ்ந்து தெற்கு உயர்ந்ததைச் சமப்படுத்தச் சிவபெருமானால் அனுப்பப் பெற்ற அகத்தியர் தம்மைத் தடுத்த விந்தத்தை அடக்கிய கதையை அறிவோம். அவர் காரோணம் வந்தார். வெளிப்பாளையத்தில் தாம் ஒரு அருட்குறி அமைத்து வழிபட்டார். அரக்கர் வானவர் போரில் தோற்ற அரக்கர் கடலுள் மறைந்தனர். அகத்தியர் நாகைக் கரையில் கடலை ஒரு கையில் அடக்கிக் குடித்தார். அரக்கர் அழிபட, தாம் நாட்டிய கோயிலில் வழிபாடாற்றிப் பொதியம் சென்றார் என்கிறது புராணம்.

அவர் பெயரால் அகத்தியப்பர் கோயிலாக உள்ள சிற்றளவுக் கோயில் இது. அரச கோபுரத்துடன் இன்றியமையாத அணுக்கத் தெய்வங்களைப் பெற்றுள்ள கோயில்; திருச்சுற்றையும் மடவளாகங் களையும், திருக்குளத்தையும் கொண்ட அழகிய கோயில்.

## 9. புன்னாகக் காட்டப்பர் கோயில்

(நாகூர்)

நாகூரில் ஒரு சிவன் கோயில் உள்ளது. இது மட வளாகங்களைக் கொண்ட அளவான கோயில்; அரச கோபுரமும் திருச்சுற்றும் கொண்டது.

புன்னைமர நிழலில் எழுப்பப்பெற்ற அருட்குறிக்கு எழுந்த கோயிலாதலால் இது 'புன்னாக வனநாதர் கோயில்' என்று பெயர் பெற்றது.

### மணமகன் பெற்றமை

இக்கோயிலுக்குரிய புராணக்கதை இது:

ஆதிசேடன் வாசுகிக்குப் பெற்ற கன்னியர் நால்வர். மணமகன்களை நாடி நாகூர் வந்து அங்கிருந்த வளாகத்தில் புன்னாக மரம் வளர்த்து அருவுருவம் அமைத்து வழிபட்டுச் சிவனருளால் மணம் பெற்றனர். இங்கெழுந்த கோயிலே இது.

## 10. குமரன் கோயில்

குமரன் கோயில் நாகையில் முருகனுக்கென்று அமைந்த தனிப்பெருங்கோயில் ஆகும். ஒல்லாந்தர் ஆட்சியின் அடாவடியால் இக்கோயில் உருவாகியது. 17ஆம் நூற்றாண்டில் உருவான பிற்காலக் கோயில் இது.

நகரின் தென்மேற்கு மூலையில்பழைய சிந்தாறு (விருத்தகாவிரி) ஓடிக் கிழக்கே திரும்பிய கரையில் இருந்த கார்முகேசர் கோயிலை ஒல்லாந்தர் அப்புறப்படுத்தினர். அதிலிருந்த திருமுருகனைப் போற்றி எழுப்பப்பட்ட கோயிலே "நாகைக் குமரன் கோட்டம்" எனப் பெறும். குமரகோயிலில் இக்குமரன் "மெய்கண்ட வேலவன்" எனப் படுவான். தந்தைக்கு மெய்ப்பொருளைக் குறித்தமையால் இப்பெயர் பெற்றான்.

கார்முகேசர் கோயிலிலிருந்த முருகன் திருவுருவத்தைப் பேணிய நகரத்தார் ஏனையர் துணையுடன் இக்கோயிலை எழுப்பினர். "இக்கோயில் நாகை நீலா தெற்கு வீதியில் இருந்த கா. அண்ணாமலை தேசிகர் என்பவரால் கட்டப்பெற்றதாகத் தெரிகிறது" என்பர். (18)

### உயர்ந்த தெருக்கள்

இக்கோயில் நீலா தெற்குத் தெருவின் நடுவில் வடக்குச் சிறகத்தில் எழுப்பப்பெற்றுள்ளது. இதனை அடுத்து வடகிழக்கில் கட்டியப்பர் (அமுதகடேசர்) கோயில் உள்ளது.

கோயிலின் முன் வெளியில் ஒரு நாற்கால் மண்டபம் ஊஞ்சல் மண்டபமாக உள்ளது. இதன் நடுவிடம் பள்ளமாக இருப்பதுகொண்டு நாகைத் தெரு எவ்வளவு உயர்த்தப்பெற்றுள்ளது என்பதை உணரலாம். பெரும் மதிற்சுவரையுடைய இக்கோயில் கிழக்கில் மூன்று மாடக் கோபுரத்தையும், தெற்கில் அரச கோபுர வாயிலையும் கொண்டது. தெற்கு மதிற்சுவரின் மேல், புராணச்

சுண்ணாம்புச் சிற்பங்கள் தெருவைப் பார்த்த பாங்கில் புடைப்புச் சிற்பங்களாகக் காட்சி தருகின்றன.

உள்ளே அமைந்த காட்சி மண்டபம் புதுவைப் பிரெஞ்சு அரசில் டூப்ளே காலத்தில் மொழி பெயர்ப்பாளராகப் (துவிபாஷி) பணியாற்றிய திரு ஆனந்தரங்கம் பிள்ளையவர்களால் (கி.பி. 1720 – 1755) கட்டப்பட்டது. இதன் அறிகுறியாக ஒரு தூணில் இவரது திருவுருவம் புடைப்புச் சிற்பமாக உள்ளது.

## ஆறுமுகமில்லா ஒரு முகர்

மூலவராகத் திருமுருகன் முடிசூடிய ஒரு தலை, நான்கு கைகளுடன் உள்ளார். வள்ளி, தேவானை தாமரை மலரையும், குவளை மலரையும் கைகளிற் கொண்டு முடிசூடி நிற்கின்றனர். பின்னே மயில் உள்ளது. முன்னே அவர் ஊர்தியில் மற்றொன்றாகிய பிணிமுகம்' என்னும் யானை உள்ளது. தெற்கு முகமாகச் சிவலிங்கம் நந்தியுடன் உள்ளது.

கொற்றவை, தெட்சிணாமூர்த்தி, குபேரன், அகத்தியர், பிற்காலத்தில் அமைக்கப்பெற்ற ஒன்பது கோளவர் முதலிய அணுக்கத் திருவுருவங்கள் உள்ளன.

## நாகைவரு ரெங்கன்

இக்கோவிலில் மெய்க்காவலராக இருந்த அழகு முத்துப் புலவர் தொழுநோயராய் – முருக அடியராய் முருகன் மேல் 'திருப்புகழ்', 'மெய்கண்ட வேலாயுத சதகம்', "மெய்கண்ட வேலவர் குறம்" என்னும் நூல்களைப் பாடியுள்ளார். இவருக்கு இக்கோயிலில் ஒரு செப்புத் திருமேனியும் ஒரு வழிபாட்டுக் கருங்கல் திருமேனியும் உள்ளன. இவர் காலத்தில் தான் புதுவை ஆனந்தரங்கம் பிள்ளை வருகை தந்து மண்டபம் எழுப்பினார். இதன் குறிப்பாக "நாகை வரு ரெங்கன் வாழி" (19) என்று தம் திருப்புகழில் பாடியுள்ளார்.

இக்கோயில் திருவிழா தைப்பூசத்தில் 10 நாள்களும், கந்த சட்டித் திருவிழா ஐப்பசியில் 10 நாள்களும் தொடர்ந்து நிகழும். சூரசம்காரமும், வள்ளி தேவானை திருமண விழாவும் சிறப்பானவை. இங்குள்ள இடும்பன் ஊர்தி புதுமையானது.

19.5.1978இல் இக்கோயிலுக்குக் குடமுழுக்கு விழா நிகழ்ந்தது.

அருணகிரியார் பாடியுள்ள திருப்புகழ் காரோணர் கோயிலில் இடம் பெற்ற முருகனைப் பாடியதாகும். அவர் காலம் 14ஆம் நூற்றாண்டு. குமரன்கோயில் காலம் 17ஆம் நூற்றாண்டு.

# 11. நெல்லுக்கடை மாரியம்மன் கோயில்

நாகையில் குறிப்பிட வேண்டிய கோயில்களில் நாகை 'நெல்லுக்கடை மாரியம்மன் கோயிலும்' ஒன்று. பொதுமக்களால் நாளும் வணங்கப்படும் கோயில் இது.

## கண்ணகியம்மன்

அகநகரில் பெருமாள் கீழைத்தெருவில் தெருவை ஒட்டிக் கிழக்கு முகமாக அமைந்துள்ளது. மாரியம்மன் மூலவர். மாரியம்மன் என்பது ஒரு மாற்று ஆக்கக் கடவுள். கண்ணகியார் மாரி பெய்வித்து வெப்பக் கொப்புளத்தை அடக்கியமையால் "மாரியாத்தா" எனப் பட்டார். அவர்க்கெனத் தோன்றிய தொன்மைக் கோயில்கள் மாரி யம்மன் கோயில்களாயின. இலங்கையில் இதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன.

இலங்கை நயினாத் தீவில் உள்ள நாகபூசணி அம்மன் கோயில் திருத்தேரில் ஒரு மாரியம்மன் மரச்சிற்பம் உள்ளது. அதன் ஏந்திய வலக்கையில் சிலம்பு உள்ளது. (இதனை யான் கண்டதுண்டு). மாரி யம்மனாக மட்டுமன்றி மரியன்னை கோயிலாகவும் மாற்றப் பட்டுள்ளது. இலங்கையில் 'மடுவில்' என்னும் ஊரிலுள்ள கிறிஸ்துவ மரியன்னை கோயிலுக்குத் தமிழ்ச் சமயத்தவர் பலரும் பத்தினியம்மன் கோவிலுக்குச் செல்வதாகவே சொல்லிச் செல் கின்றனர். இஃது அவ்வாறு மாற்றம் பெற்றது என்பதை ஓர் ஐரோப்பிய அறிஞர் ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு மாற்றமின்றி இயல்பாகவும் மாரியம்மன் கோயில்கள் பின்னர் எழுந்தன. நாகையில் மாரியம்மன் மேல் நீங்கா அன்புகொண்ட திருமதி பெரிய நாயகியம்மாள் என்பார் சிறிய அளவில் கோயில் அமைத்தார். அஃதே பின்னர் மக்களால் — நெல்லுக்கடை வணிகர்களால் — பெருக்கப் பெற்று இன்றைய நிலையில் உள்ளது; நெல்லுக்கடை மாரியம்மன் என்னும் பெயரும் பெற்றது.

இக்கோயிலில் மூலவர் மாரியம்மன். சிவனாரின் அருவுருவத் திருமுன்னும் உள்ளது. மேலும் வலச்சுற்றில் எல்லையம்மன், ஐயனார், திருமுருகன் உள்ளனர். கூத்தரசர், பிள்ளையார், முருகன் முதலியவர் திருவுருவங்களும் நிறுவப் பெற்ற இஃது ஒரு சிவன் கோயிலாகவே திகழ்கிறது.

நாள்தோறும் மக்கள் வழிபடுவதுடன் ஞாயிறு தோறும் மிகு எண்ணிக்கையில் வழிபாடு செய்கின்றனர். வழிபடுவோர் கூட்டத்தில் ஓரிரு பிற சமயத்தாரையும் காணலாம்.

புதுமையாக நெல்விளக்குப் படைப்பர். பலவகைக் காவடிகள் எடுப்பர்.

## வானில் ஒரு சுற்று

ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் பெருவிழா நிகழும். பத்தாம் நாள் திருத்தேரோட்டம் உண்டு. அன்று இங்குப் பொது மக்களின் வேண்டுதலாக நிகழும் 'செடில்' நிகழ்ச்சி இக்கோயிலின் புகழ் பெற்ற காணிக்கை வழிபாடாகும்.

கோயிலின் திருமுன்னர் கழுமரமாக உயர்ந்த தூண் நிறுத்தி அதில் ஏற்றி இறக்குமாறு ஒரு கணையமரம் பொருத்துவர். ஒரு முனையில் செடிலின் மேல் களம் பக்கத்தில் சட்டம் உயர்த்தி மேல் விமானம் குடையமைத்த அமைப்பு ஒன்று இருக்கும். அதில் ஒரு பூசாரி காத்தவராயன் வடிவம் பூண்டு வேண்டுதல் செய்யப்பட்ட குழந்தையை ஏந்திக்கொள்ள, செடில் களத்தை மறு பக்கத்தால் உயர்த்தி உயரத்திலிருந்தவாறு ஒரு சுற்றுச் சுற்றுவர். குழந்தைகளே ஏற்றப் பெறுவர். இதற்குக் கட்டணம் கட்டிச் சீட்டை முன்கூட்டியே பெற வேண்டும். இரவு தொடக்கமாகச் சுற்றத் தொடங்கிக் காலை வரை – சில ஆண்டுகளில் மறு இரவிலும் – இது நிகழும். குழந்தைக்கு நேரும் தீங்குகளைப் போக்கிக்கொள்ளவேண்டி இவ்வாறு செடிலில் ஏற்றுவர். சீட்டைக் கொடுத்து ஏறிய குழந்தை வானில் ஒரு சுற்று வரும்.

இதற்கொரு காத்தவராயன் கதை உண்டு. ஆரியமாலாவைச் சிறையெடுத்ததாகக் காத்தவராயன் கழுவேற்றப்பட்டான். அவன் பாங்கில் இச்செடில் அமைக்கப்பெற்றது.

பெரும்பகுதி குழந்தை நலங்கருதியும், நோய் தீர்க்க வேண்டியும், குடும்ப நலன்கள் வேண்டியும், கழுவாய்க்கும் பலவகை வேண்டுதல் களை மக்கள் செய்து கொள்வர். சிறு மண்பொம்மைகள், தேங் காய்கள், மிளகு, உப்பு முதலியவற்றைக் காணிக்கையாகச் செலுத் துவர்.

இக்கோயில் ஒரு மரபுவழியான குடும்பத்தாரின் அறப் பார்வையின் கீழ் நடைபெறுகிறது.

## சைவ மக்கள்

அனைத்து வகைச் சிவன் கோயில்களாலும் நாகை நகரம் பெரும் பகுதி சைவத் திருநகராகத் திகழ்கிறது. நாகை மக்களிற் பெரும் பகுதியினர் சைவ சமயத்தவர். சைவ சித்தாந்தப் பெரு மக்கள் பலர் வாழ்ந்தனர். சைவ சித்தாந்த திரு வீரப்ப செட்டியார், திரு முத்துக்காயாரோகணம் செட்டியார் போன்றோர் குறிக்கத்தக்கவர். அரசில் பணியாற்றிய மதுரை நாயகம் பிள்ளை என்பார் சைவ சித்தாந்தி. அவர் நகரச் சிவனடியார் வாரவழிபாட்டு மன்றம் அமைத்து ஞாயிறு தோறும் ஒவ்வொரு கோயிலுக்கும் சென்று தேவாரம் ஓதி வழிபாடு நடத்தினார். இன்றும் சைவம் திகழ்கிறது. நாகை நண்பர் திரு ஆ. நாராயணசாமி அவர்கள் 'சேக்கிழார் மன்றம்' அமைத்துள்ளார்.

# 12. சிக்கல் கோயில்

நாகை சைவத்துடன் இணைக்கத்தக்கது சிக்கல் சிங்காரவேலர் திருக்கோயில். தொடக்கத்தில் இஃது அருவுருவத் திருவுருவமைந்த சிவன் கோயில், பின்னர் முருகன் இடம் பெற்றுச் சிங்காரவேலர் கோயிலாயிற்று.

ஏழாம் நூற்றாண்டுத் திருஞானசம்பந்தர் சிக்கல் சிவனாரைப் பாடியுள்ளார். அப்பாடல்களில் முருகன் – சிங்காரவேலன் பற்றிய குறிப்பே இல்லை. அவர் பாடலில் வெண்ணெய்ப் பெருமானாகச் சிவ பெருமான் உள்ளார். அம்மை பெயர் வேலொண்கண்ணி யினாள். மற்றிரு தேவாரத்தார் பாடல்கள் இல்லை.

## வெண்ணெய் சிக்கியது

வசிட்ட முனிவர் இங்குக் காமதேனு சுரந்த மிகுபாலில் திரண்ட வெண்ணெயால் இலிங்கம் அமைத்து வழிபட்டு அதனை எடுத்துச் செல்ல முயன்றபோது எடுக்க இயலாமல் நிலத்துடன் சிக்கியதால் இவ்வூர்க்குச் 'சிக்கல்' எனறு பெயர் வந்ததாம். இவ்வெண்ணெய்ப் பெருமான் கோயிலை ஒட்டி முருகன் கோயில் கட்டுமலைக் கோயிலாகப் பெரிய அளவில் அமைந்தது.

வள்ளி, தேவானையுடன் முருகன் மயில்மேல் அமர்ந்த தோற்றம் மிக அழகானது. சிற்பக் கலையில் மிகப் பாங்குடையது. கந்த சட்டி விழா, சூரசம்காரம் மிகச்சிறப்புடைய விழா. கார்த்திகையில் வள்ளி தேவானை திருமண விழாவின் வெள்ளித் தேர்க் காட்சி

கவர்ச்சியானது. உரிய ஊர்தி ஆட்டுக்கடா, மற்றும் மயில் முதலிய ஊர்திகள் பொன்னாலும் வெள்ளியாலும் ஆனவை. இக் கோயிலில் 13ஆம் நூற்றாண்டிலான சடாவர்மன் கல்வெட்டு ஒன்று உள்ளது. 14ஆம் நூற்றாண்டு அருணகிரியார் திருப்புகழ் பாடியுள்ளார்.

இக்கோயிலின் எதிரில் பெரிய திருமண மண்டபம் ஒன்றுள்ளது. திருக்குளமும் உள்ளது. சிக்கல் நாகை திருவாரூர்ச் சாலையில் கீழ்ப் புறம் நாகையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. சாலையி லிருந்து உள்ளே செல்லும் வாயிலில் புதிதாக மகர தோரண வாயில் அமைக்கப் பெற்றுள்ளது.

## ஈ. நாகையில் திருமாலியம் (வைணவம்)

"மாயோன் மேய காடுறை உலகம்" என்னும் தொல்காப்பியத் துடன் தமிழ்மண்ணில் அறிமுகமாகும் திருமால் முல்லை நிலத் தெய்வமானார். தமிழ் மண்ணில் திருமாலியத்தின் மூலம் அறியக் கூடவில்லை. வடபுலத்திலிருந்து வந்த சமயம் என்பர் ஆய்வாளர். இஃது ஐயத்திற்குரியது.

### ஆழ்ந்தோர்

தமிழகத்தில் திருமாலியத்தை ஊன்றிப் பயிரிட்டோர் ஆழ்வார் கள். எட்டாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தவரான நம்மாழ்வார் முதலாகத் திருப்பாணாழ்வார்வரை ஆழ்வார் பதின்மர். "பதின்மர் செந்தமிழைப் படிக்கிலாய்" என்று திருவேங்கடக் கலம்பகம் பதின்மராகப் பாடும். மேலும் ஆண்டாளையும் மதுர கவியையும் கூட்டிப் பன்னிருவர் என்பர். தொடர்ந்து இராமநுசரும் நீர்ஊற்றி எரு இட்டனர். தமிழ் மண்ணில் திருமாலிய உயர்வைத் திருமாலாம் இறைவனே,

**"என் அடியவர்கள் என் பாதநீர் பருகி**
**என் மதம் நிகழும் தமிழ் நாட்டில்**
**தோன்றுவர்"** என்றுகூறியதாகப் பிருகத் பிரும சங்கிதையில் உள்ளது என்பர். இது கொண்டும் ஆழ்வார் பெருமக்களால் தமிழகத்தில் திருமாலியம் தழைத்ததை அறியலாம்.

**"ஆழ்வார் என்பார் எம்பெருமானுடைய**
**(திருமாலுடைய) மங்கல குணங்களில்**
**ஆழங்காற் படுமவர்கள்"**

என்றனர் தொன்மைத் திருமாலியச் சான்றோர்.

"மக்கள் படும் துன்பங்களைப் பார்த்துப்

பொறாமல் அழுந்தியவர்" என்றும் கூறினர். இவர்களைப் பாக வதம் திராவிடராக "த்ரமிடேஷுசபூரிய" என்று சுக முனிவர் வாயி லாகக் கூறியது. ஆழ்வார்களில் நம்மாழ்வார் முதல்வர்; திருமாலியத் தாராலும், ஏனை ஆழ்வார்களாலும் முடிமேல் சூடிப் போற்றப்படு கிறவர். இவரை "வைணவை குலபதி" என்பர்.

## சொற்சுவை துளும்பும் பாவிசைகள்

ஆழ்வார்கள் பாடிய பாவிசைகள் நாலாயிரமாகும். இவற்றை "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்" என்பர். பின் எழுந்த இராமாநுசர் பாடிய நூற்றந்தாதியும் இவற்றுடன் சேர்த்துப் போற்றப்படும் சிறப் புடையது. இவை திருமாலியத்தின் கருவூலங்கள்; நான்மறையின் வடிப்புகள் என்பர். சைவத்திற்குத் தேவாரமும் திருவாசகமும் போன்று திருமாலியத்திற்கு இவை நாடித்துடிப்பானவை. நேரே உரையாடுவது போன்ற சொல்லோட்டமும், சுவைச் சொல்லாட்சியும், நயமான வண்ணனைகளும், புதிய சொல்லாக்கங்களும் இவற்றிற் கெல்லாம் இழையோட்டமாக ஓதப்படும் இசையினிமையும் ஆழ்வார் மொழிகளின் இயல்பு மூச்சுகள். இவை படிப்போரை வயப்படுத்தி, ஓது வோரை உள்ளடக்கிக் கேட்போரைக் குளிர்விப்பவை.

## ஒன்றே ஒன்று

நாலாயிரத்துள் அதிகமாகப் பாடியவர் நம்மாழ்வார். 1296 பாவிசைகள் இவர் பாடியவை. அடுத்து அதிகம் பாடியவர் திருமங்கையாழ்வார். இவர் பாவிசைகள் 1253.

ஆழ்வார்களால் பாவிசை பெற்ற திருமாலியத் திருநகர்கள் 108. வடபுலத்து 12 திருநகர்கள் அல்லாமல் மற்றவை தமிழ் நாட்டவை. 108 இல் சோழநாட்டுத் திருநகர்கள் 40; கடற்கரைத் திருநகர்கள் 7; ஏழுள் நாகை ஒன்று. 108 திருநகர்களில் திருமங்கையாழ்வார் 88 நகர்களைப் பாடியுள்ளார். அதிகம் திருநகர் பாடியவர் இவரே. நம்மாழ்வார் 86 நகர்களைப் பாடியுள்ளார்.

நாகையைத் திருமங்கையாழ்வார் ஒருவரே பத்துப் பாக்களால் பாடினார்.

நாகை நகரில் ஆறு திருமாலியக் கோயில்கள் உள்ளன. ஏழாவதும் இருந்தது. அவற்றுள்,

அருள்திரு சௌந்தர்யராசப் பெருமாள் கோயில்,

அருள்திரு நவநீதக் கிருச்ணசாமி கோயில்;

அருள்திரு வரதராசப் பெருமாள்கோயில் (வெளிவை) என்னும் மூன்றும் மூலவர் கோயில்கள்.

சந்நிதி ஆஞ்சநேயர் கோயில்,

இரண்டு மாத்துவ ஆஞ்சநேயர் கோயில்கள்,

அருள்மிகு வேதாந்த தேசிகர் கோயில் என்பவை திருமாலிய அணுக்கத் தெய்வக் கோயில்கள்.

## எல்லாம் அழகு

சௌந்தர்யராசப் பெருமாள் கோயில் என்று வழங்கப்படும் அழகரசப் பெருமாள் கோயில் பெரியது. நிறைவான அமைப்புக் களைக் கொண்டது. அம்மையின் பெயர் சௌந்தர்யவல்லி எனப் பெறும் அழகுக்கொடியாள்.

இது பெரிய திருமாலியக் கோயில், நான்கு சுற்று வீதிகளைக் கொண்டது. எழுநிலை மாடமாக உயர்ந்த அரச கோபுரம் 90 அடி உயரமுள்ளது. நாகைக் கோயில்களில் இஃதே மிக உயர்மானது. உரிய மண்டபங்களைக் கொண்டது. சோழர், பல்லவர், மராத்தியர் திருப்பணிகள் செய்துள்ளனர். மராத்திய மன்னர் ஒருவர் வைரமாலை பூட்டினார். கருவறை விமானம் 'அழகிய விமானம்' எனப்பெறும். திருக்குளம் கொண்டது.

கருவறையில் மூலவர் திருவுருவம் நின்ற திருக்கோலத்தில் 10 அடி உயரமுள்ளது. அம்மன் திருமுன் அழகியது. வைகுந்தநாதர், சிரீநிவாசப்பெருமாள், இராமர், ஆண்டாள், கருடாழ்வார் திருப்படி மங்கள் தனித்தனியே உள்ளன. தென்கலைச் சான்றோர் மணவாள மாமுனிகள் திருவுருவம் உள்ளது. அரங்கர் திருமுன் இருபுறமும் கூப்பிய கைகளுடன் இருவர் நிற்கின்றனர். இவர்கள் 'கண்டன், சுகண்டன்' எனும் உடன்பிறப்பினர் என்பர். இக்கோயில் ஒரு தனிச் சிறப்பைக் கொண்டது. திருமாலின் திருக்கோலத்தை, 'கிடந்த திருக்கோலம்', 'இருந்த (அமர்ந்த) திருக்கோலம்', 'நின்ற திருக் கோலம்' என்பர். இம்மூன்று படிமங்களும் இந்நிலைகளில் உள்ளன. இவ்வாறு அருகிலே அமையும். கிடந்த (படுத்த) திருக் கோலம் தோளில் தலை சாய்த்துள்ளது 'புசங்க சயனம்' ஆகும்.

வழிபட்டுப் பேறு பெற்றார் நான்கு ஊழிகளிலும் முறையே ஆதிசேடன், நிலமகள், மார்க்கண்டர், சாலிசுகன் என்பர். சாலிசுகன்

பாம்புலகம் செல்லப் புலவழி அறியாமல் கவன்றபோது அழகர் அருளால் வழிகண்டான் என்கிறது புராணம். இச்சாலிசுகனுக்கும், நாக அரசனுக்கும் காட்சி தந்ததையும் புராணம் கூறுகிறது.

## கோபுரம் கண்டனர்

ஏறத்தாழ ஏழாம் நூற்றாண்டளவில் இக்கோயில் எழுப்பப் பெற்றிருக்கலாம். நாயக்க மன்னர்களது திருப்பணியும் நேர்ந் துள்ளது. கி.பி. 1659 இல் ஆட்சி அலுவலராக இருந்த சகுல் நாயக்கர் என்பார் (நாக மாமுடி நாயக்கர் குமாரர்) தாம் 90 அடி உயர அரச கோபுரத்தை எழுப்பி உள்ளே மண்டபங்களையும் கட்டினார் என்பதற்கு அடையாளமாக இவரது உருவமும் இவர் மனைவியார் இலட்சுமி அம்மையாரது உருவமும் கைகூப்பி நிற்கும் பாங்கிலும் கிடந்து வணங்கும் பாங்கிலும் உள்ளன. 1787–இல் மராத்திய அலுவலராயிருந்த குண்டோபண்டிதர் என்பவர் அர்த்த மாமண்டபம் கட்டியுள்ளார். இதனைக் குறிக்கும் கல்வெட்டு உள்ளது. நகரத்துப் பெருமக்கள் திருப்பணிகள் செய்துள்ளமைக்கும் கல்வெட்டு காணப் படுகிறது.

## காதலி ஏக்கம்

இத்திருக்கோயில் இறைவன் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்றுள்ளார் அன்றோ? பத்து இனிய பாவிசைகளில் முதல் ஒன்பது பாடல்களின் ஈற்றிலும்,

"அச்சோ ஒருவர் அழகியவர்" என்றும் பத்தாவது பாடலில் "நாகை அழகியார்" என்றும் அழகுத் தமிழில் பாடியுள்ளார். இப்பாடல்கள் அகத்துறைப்பாடல்கள்; அழகியார்பால் காதல் கொண்ட தலைவி தன் தோழியிடம் கூறும் பாங்கில் அமைந்தவை.

**"தமர்தம் இல்லம் புகுந்து நின்றார்**
**நாகரிகர் பெரிதும் இளையர்" (20)**

என்று அவர் அழகில் நாகரிகம் கண்டு, இளமைப் பொலிவில் இளகித் துவண்டு கொஞ்சிப் பேசும் பாடல்கள் இவை.

**"பொன் இவர் சோதி மரகதத்தான் பொங்கிளஞ் சோதி"**

என்று மரகதமாக – பல்வகைப் பேரொளியாகக் காண்கிறாள். நாகைக் காரோணர் ஒரு கோமேதகம் என்றால் நாகை அழகியர் ஒரு மரகதமாக வண்ணணையில் நிற்கிறார். பத்தாவது பாடல் கடைகாப்புப் பாடல். திருமங்கையாழ்வார் தம்மைக் 'கலிகண்டன்' என்று பாடிக்கொள்வார்;

"சீர்க்கலி கண்டன்
குன்றா இசையால் சொன்ன
செஞ்சொல் மாலை" (22)

என்று நிறைவேற்றியுள்ளார்.

இக்கோயில் திருவிழா பெருவிழாவாக, பங்குனியில் பத்து நாள்கள் நிகழும். காலையில் தங்கப் பல்லக்கிலும், மாலையில் அழகிய ஊர்திகளிலும் வீதிஉலா நிகழும். தேர்த்திருவிழா உண்டு. சித்திரை தொடங்கி ஒவ்வொரு திங்களும் மரபான விழாக்கள் நிகழும். வைகாசியில் நம்மாழ்வாருக்கு 5 நாள் விழா குறிக்கத் தக்கது. ஆனியில் அம்மனுக்குத் திருவிழா நிகழும். இக்கோயிலில் படிமம் கொண்ட மணவாள மாமுனிகளுக்கு ஐப்பசியில் பத்து நாள்கள் விழா நிகழ்வதும் ஒரு தனிச்சிறப்பு.

இவ்வழகியாரை இசை மும்மணிகளில் ஒருவராகிய முத்துசாமி தீட்சதர் சில இசைப்பாடல்களால் போற்றியுள்ளார். திருமாலிய நூல்களிலும் நாகைப் பாடல்கள் உள்ளன.

நாகைக்கோர் உயர் கோயிலாக இக்கோயில் திகழ்கிறது.

## நாகையிலும் வெண்ணெயர்

இதன் தென்மேற்கில் தனித் திருமுன் வீதி கொண்டு அருள்திரு 'வெண்ணெய்க் கண்ணன்' கோயில் ஓரளவான அமைப்புடன் விளங்குகிறது. தனக்கெனத்தனித் திருவிழாவையும் காண்பது இக் கோயில். நாகூரில் ஒரு அரங்கநாதர் கோயில் இருந்தது. அதனைப் போர்த்துகீசியர் இடித்து விட்டனர். இதனை வரலாற்றாசிரியர் திரு. கே.கே. பிள்ளையவர்கள் சான்றுகள் காட்டித் தம் 'தமிழக வரலாற்'றில் காட்டினார்.

நாகையில் திருமாலியம் ஓரளவில் தன் தனித்தன்மையால் இன்றும் திகழ்கிறது. சமயப் பிடிப்பும் தமிழ்த் திருவாய்மொழிப் பற்றும் கொண்ட திருமாலியத்தராய் இச்சமயத்தார் வாழ்கின்றனர்.

## வள்ளலார் மன்றம்

தமிழ்ச் சமயக் கோயில்கள் பலவாய் நாகையில் அமைந்திருக்க ஒரு சமயச் சார்புமின்றித் தமக்கெனத் தனிவழி கொண்ட வள்ளலார் அருள்திரு இராமலிங்க அடிகளார் கோயில் ஒன்றும் புண்டரீகுளம் மேல்கரையில் அமைந்துள்ளது. தைப்பூச நாள் கொண்டாடப்

படுகிறது. "அருள்பிரகாச வள்ளலார் மன்றம்" என்றொன்றை இதில் அமைத்து அருட்பாக் கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். சித்த மருத்துவரும் ஓய்வுபெற்ற தமிழாசிரியருமாகிய புலவர் இர. இராம தாசு (அந்தணப்பேட்டை) அவர்களும் நாகை திரு. ச. துரையரசன் அவர்களும் ஏனைய நல்லன்பர்களும் ஈடுபாட்டுடன் 'உலக சமரச சன்மார்க்க மையக்கிளை' என்றமைத்து இயக்கி வருகின்றனர்.

## கோயில், குளம் தொகை

இதுவரை நாகையில் தமிழர் சமயங்களையும், அவற்றின் கோயில்களையும், கடவுளர்களையும் வழிபாடுகளையும், பயன்களையும் கண்டோம். இச்சமயக் கோயில்களாக,

சிவன் கோயில்கள் 16

திருமாலியக் கோயில்கள் 6 (+1)

பிள்ளையார் கோயில்கள் 26

சிறுதெய்வக் கோயில்கள் 20

– என 69 கோயில்கள் நாகையில் உள்ளன. நீராடிப் பேறு பெறும் சிறப்பாக உள்ள திருக்குளங்கள் 12 உள்ளன. அவை தீர்த்தம் என்னும் வட சொல்லமைப்புடன் உள்ளன.

அவை:

(1) தேவதீர்த்தம் (காரோணர் கோயிலுக்குள் முத்தி மண்டபத்துடன் உள்ளது), (2) சாறுவ தீர்த்தம் (அம்மை திருமுன் தென் மேற்கில் உள்ளது), (3) காசு தீர்த்தம் (புண்டரீகுளம்), (4) பிரம தீர்த்தம் (நடுவர் கோயில் பின்), (5) அமுதபுட்கரணி (அழகர் கோயில் பின்), (6) சாரதி புட்கரணி (அழகர் கோயில் தெற்கு), (7) சாரபுட் கரணி (பெருமாள் கோயில் பின்), பாதாளக் கங்கை (மாமுனித் தீர்த்தம்), (9) சூரிய தீர்த்தம், (10) சந்திர தீர்த்தம், (11) நித்தகங்கை, (12) சமுத்திர தீர்த்தம் (கடல்).

சமயத் துறையில் இவை யாவும் பெருமையாய்ப் பேசப்படு பவை. புராணத் துறையில் பல பேறுகளைப் பெற்றவர்களையும், பெற வேண்டுபவர்களையும் அறிமுகம் செய்வன

நாகை நகரில் மேலே கண்டவை நிற்க, புறப்புறச் சமயங் களாகிய இசுலாமியம் கிறித்துவம் ஆகிய இரண்டும் புகுந்து நிலைபெற்றுள்ளன. இவ்விரண்டும் ஓரளவில் பெரும்பகுதி மக்களைக் கொண்டுள்ளன.

# உ. நாகையில் இசுலாமியம்

## இசுலாமியமும் கிறித்துவமும்

இசுலாமியம் ஓர் உலகளாவிய சமயம். கிறித்துவத்திற்கு அடுத்த நிலையில் உலக எல்லைப் பரப்புடையது. அதுபோன்றே பேரெண்ணிக்கை மக்களால் பின்பற்றப்படுவது. இசுலாமியம், கிறித்துவத்தின் ஒரு மாற்று வடிப்பாகும். அதனால் இவை ஓர் அச்சு வடிப்புகளாகவே உள்ளன. கிறித்துவத்தில் பல இறைத் தோற்றாளர்க்குப் பின்னர் இறுதித் தோன்றலாக ஏசுகிறித்து தோன்றினார். அதுபோன்றே ஒரு நூறாயிரத்து இருபதினாயிரம் இறைத்தோற்றாளராம் நபிகளுக்குப் பின்னர் முகம்மது நபியவர்கள் தோன்றினார்கள். இரு சமய முன் இறைத் தோற்றாளர்கள் பெயர்கள் பலவும் ஒத்திருப்பதையும் அறியலாம். அங்கு மோசே; இங்கு மூசு நபியாவார். ஏசுவையும் ஈசாநபி என்றனர். இதுபோன்றே பிறவும். ஒரு சிறு பட்டியலாக இரண்டையும் ஒன்றித்துக் காட்டலாம்.

| கிறித்துவம் | இசுலாமியம் |
|---|---|
| ஒரே கடவுள் யெகோவா | ஒரே கடவுள் அல்லா |
| முற்றறிவோர் (தீர்க்கதரிசிகள்) பலருள்ளனர் | நபிகள் பலருள்ளனர். |
| நம்பிக்கைத் தோன்றல் ஏசு | இறுதி நபி முகம்மது நபி |
| உயிர்த்தெழுதல் நம்பிக்கை | உயிர்த்தெழுதல் நம்பிக்கை |

இவ்வாறு மற்றும்பல ஒன்றிப்பைக் கொண்டவை இரண்டும்.

## இசுலாத்தின் கோட்பாடுகள்

இசுலாம் என்பதற்குக் 'கடவுளின் பெயரால் அமைதி வழி' என்று பொருள். இசுலாம் என்பதே சமயப் பெயர். முகம்மதியம என்பது முகம்மது நபியவர்களைப் பின்பற்றுவோர் என்னும் பொருள் கொண்டது என்று கண்டோம். இன்றைக்கு 1480 ஆண்டுகளுக்கு முன் அரபு நாட்டில் முகம்மது நபியவர்கள் தோன்றினார்கள். இறையருளாலும் தம் பட்டறிவாலும் இசுலாமியத்தைத் தோற்றுவித்தார்கள். முஃச்லீம் என்பது அரபுச் சொல்.

இறைவன் அருள்மொழியாக முகம்மது நபியவர்களின் வழியாகவந்த அருள்நூலே குர் – ஆன் எனப்படுவது என்பர். இஃதே இசுலாத்தின் ஒரே மறைநூல்.

இசுலாத்தின் கோட்பாடு 'ஈமான்' எனப்படும். ஏழு நம்பிக்கைகள் அவை. 1. அல்லா ஒருவரே கடவுள்; 2. அவர் அனுப்பிய 'மலக்கு' என்னும் அருளாளர்கள் நம்பிக்கைக்குரியவர்கள்; 3. இறைதூதர் முகமது நபியவர்கள்; 4. நபிகள் அறவுரைகள் சிறந்தவை; 5. இறுதித் தீர்ப்பு நாள் உண்டு; 6. நன்மை தீமை எல்லாம் இறைவன் பாலவை; 7. இறைவன் இறந்தவரை உயிர்ப்பிப்பான். இவை ஏழும் அகக் கோட்பாடுகள்.

புறக்கடமைகள் ஐந்து. அவை: 1. அல்லா ஒருவனையே வணங்குதல்; 2. நாளும் ஐந்து வேளை தொழுகை; 3. ஏழைப் பங்கீடு; 4. இரம்சான் திங்களில் நோன்பு; 5. தூய மக்கா பயணம்.

இவ்வேழும் ஐந்துமாகிய இரண்டு பகுதிகளே இசுலாத்தின் விதிப்புகள். இசுலாத்தில் உருவ வழிபாடே இல்லை; எவ்வகை உருவத்தையும் எதிலும் கொள்வதில்லை. தொழுகையில் அனைவரும் உண்மையாகச் சமமே; கீழைநாட்டார் மக்கா மேற்கில் இருப்பதால் மேற்கு நோக்கித் தொழுவர். 'மசூதி' எனப்படும் கோயிலில் சென்றுதான் தொழ வேண்டும் என்பதில்லை. எங்கும் உணர்வுடன் தொழலாம்.

## வழிபாட்டுத் திருவிடக் குறியீடு

ஒவ்வொரு சமயத்தாரும் தாம் தாம் வழிபடும் அல்லது தொழும் திருவிடத்தை ஒவ்வொரு குறியீட்டுச் சொல்லால் குறிப்பர். சைவத்தார் 'கோயில்' என்பர். 'கோயில்' என்றாலே தில்லைக் கோயிலைக் குறிக்கும். 'பூங்கோயில்' என்றால் திருவாரூர்க் கோயிலைக் குறிக்கும். திருமாலியத்தார் 'திருப்பதி' என்பர்; தமிழில் 'விண்ணகரம்' என்பர். சமணத்தார் வடமொழியில் 'சிலாதலம்' என்பர். புத்தர் பாளி மொழியில் 'விகாரை' என்பர். கிறித்துவர் ஆங்கிலத்தில் 'சர்ச்சு' என்றும் மாதாகோயில், திருச்சபை என்றும் குறிப்பர். இசுலாமியர் 'மசூதி' என்னும் அரபுச் சொல்லால் குறிப்பர். 'மசூதி' என்றால் தொழும் தூய இடம் என்று பொருள். துறவிகள் அடக்கமான புதைவிடத்தைத் 'தர்கா' என்பர்.

## பள்ளி வந்த வழி

ஒரு தமிழ் வழக்கு உண்டு. அரசர் அடக்கம் செய்யப்பெற்ற இடம் 'பள்ளிப்படை' எனப்படுவது தமிழ் வழக்கு. தொன்மையான பள்ளிப்படைகளே பின்னர் கோயில்களாக மாற்றம் பெற்றன

என்பதை முன்னரும் கண்டுள்ளோம். 'பள்ளிப்படை' என்பதில் 'பள்ளி' என்பது இறந்தோர் நிலத்துப் பள்ளி (துயில் படுக்கை) கொள்வதையும், 'படை' என்பது பள்ளி கொள்ள அமைக்கப்பட்ட இடத்தையும் குறிக்கும். இவ்வழக்கு பின்னர் அறவோர் தங்கும் இடத்தை – ஓய்வுகொள்ளப் பள்ளி கொள்ளும் இடத்தை – குறிக்கலாயிற்று. சமணத் துறவியர் தாம் ஓய்வு கொள்ளும் இடத்தையும், பயிலும் இடத்தையும் ஒன்றாகவே கொண்டு 'பள்ளி' என்றனர்.

திருச்சி மலைக்கோட்டையின் மேல் உள்ள முகட்டுப் பிள்ளையார் கோயிலின் பின்புறத்தில் மலைக் குடைவான கூரையமைப்புண்டு. இதில் பல சமணத் துறவியர் தங்கிப் பயின்றனர். தத்தமக்கென ஒவ்வொரு பாறைப் படுக்கையையும் அமைத்துக் கொண்டனர். அங்கிருந்த சமணத் துறவியரின் தலைவர் பெயர் 'சிரா' என்பது. ஒரு படுக்கையில் 'சிரா' என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. 'சிரா' ஓய்வுகொண்ட பள்ளி 'சிராப்பள்ளி – திருச்சிராப் பள்ளி' என்று பெயர் கொண்டது. இன்றும் வழக்கில் உள்ளது.

'பள்ளி' என்னும் இச்சொல்லைப் புத்த சமயத்தாரும் கொண்டனர். நாகைச் சூடாமணி விகாரையில் 'இராசராசப் பெரும்பள்ளி', 'இராசேந்திரப் பெரும்பள்ளி' என இருந்தவைகளை அறிந்தோம்.

இவைபோன்றே இசுலாமியர் தாம் தொழுகை செய்த திருவிடத்தைத் தமிழில் 'பள்ளிவாயில்', 'பள்ளிவாசல்' என்று வழங்குகின்றனர்.

ஆனால், தமிழ் மண்ணின் சமயமாகிய சைவப்பள்ளி என்னும் சொல்லை வடமொழிப் படையெடுப்பால் சைவம் இழந்தது. திருமாலியமும் அவ்வாறே. வந்த வேற்று சமயத்தார் இந்நாட்டு வழக்கை இன்றும் கொண்டுள்ளமை நன்றிக்குரியது. நாகூரில் 'யாகூசன் பள்ளித்தெரு' என்றொரு தெருப் பெயர் உள்ளது. கிறித்துவரும் சில சிற்றூர்களில் 'ஏசுப்பள்ளி' என்கின்றனர்.

சமணரும் புத்தரும் பயிலும் இடத்தையும் 'பள்ளி' என்று கொண்டதால் இன்று 'கல்விக் கூடங்கள்' 'பள்ளிக்கூடங்கள்' எனப் பெறுகின்றன.

இசுலாத்தில் சில பிரிவுகள் இருப்பினும் பொதுவில் அனைவரும் அல்லாவையே கடவுள் என்பர். முகம்மது நபியவர்களை அருளாளராகப் போற்றுவர். ஒத்த வழிபாடும், ஒன்றித்த சமயப்

பிடிப்பும் சமய நம்பிக்கையும், கடமைப்பாடும் வேறுபடாமல் உள்ளன. வெள்ளிக்கிழமையைச் சிறப்பு நாளாகக் கொள்கின்றனர்.

இசுலாமியரை முகம்மதியர் என்று காணும் போது முகம்மது நபியவர்களின் ஆன்மீகக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதுடன் அவர்தம் நடை, உடை, பாங்கு, வாழ்வியல் எடுத்துக்காட்டு முதலிய வற்றையும் கைக்கொள்வதில் நாட்டம் உடையவராகத் தோன்றுவர்.

இசுலாமிய ஆண்டுக்கணக்கும் அவர் செயல் கொண்டே எழுந்து இன்றும் இசுலாமியர் வழக்கில் உள்ளது. அது இச்ரி (ஹிஜ்ரி) எனப்படும். நபியவர்கள் 'தௌர்' என்னும் குகைக்குள் தனியே 3 நாள்கள் தங்கினார். நான்காவது நாள் அபூபக்கர் என்பார் கூடினார். நான்காவது நாள் 'யதுரிப்' நோக்கிப் பயணமானார். இந்நாளுக்குத்தான் 'இச்ரத்' (ஹிஜ்ராத் – துறந்து செல்லல்) என்று பெயர். இதிலிருந்து கி.பி. 622 செப்டம்பர் முதல் இவ்வாண்டு தொடங்கியது.

### *மரக்கலவரையர்*

நாகையில் இசுலாமியர் சமயத் தொடர்பால் புகவில்லை. தொழில் தொடர்பால்தான் புகுந்தனர். மரக்கலம் செலுத்துவதில் வல்லவராக மேலைக் கடற்கரை வந்த அரபியர் கீழைக் கடற்கரையையும் அடைந்தனர். நாகையிலும் வடக்குப் பகுதியாம் நாகூரிலும் மரக்கல அரையர் அலுவல் தலைவர் ஆக இடம் பெற்றனர். அஃதாவது அரசர்க்கு மரக்கல அலுவல் தலைவராக அமர்த்தப்பட்டனர். அன்னார் இடம்பெற்ற நாகூர் பையப்பைய வணிகம் பெற்று மரக்கலச் செலவுகளால் சிறு துறைமுகமாக அமைந்தது. மரக்கலவரையர் குடும்பங்கள் வந்து அடைந்தன. இசுலாத்து வாழ்வியல் துவங்கியது. காலப்போக்கில் இசுலாமிய சமயப் பெரியோர் வந்தனர். இவ்விடத்துச் சமய மக்களில் பலரை முகம்மதியர் ஆக்கினர். அன்னார் முதலில் 'முகம்மதியரானவர்' என்று குறிக்கப் பெற்றனர். இசுலாமியம் நிலை பெற்றது.

நிலை பெற்றாலும் அது பல்கிப் பெருகியமை ஓர் இசுலாமியத் துறவியார் வருகையாலும், அருளிப்பாட்டாலும், அடக்கத்தாலும் நேர்ந்தது. அவர்தாம் நாகூர் ஆண்டவர் என்று போற்றப்பெறும் *அருள்திரு சையது அப்துல் காதிறு சாகூல் அமீது அவர்கள்*. அவர்தம்

வரலாற்றையும் அருளிப்பாட்டையும் அவர் அடக்கத்தையும், அவர் தொடர்பான விழாக்களையும், சற்று விரிவாக எழுத வேண்டியது கடமையாகின்றது. ஏன் எனில், நாகை — நாகூர் இசுலாமியக் களம் ஆனது, அவரால் அன்றோ? அவர்தம் வரலாற்றுக்குரிய குறிப்புகள் 'கன்சூல் கறாமத்து' என்னும் நூலிலிருந்து கொள்ளப் பெறுகின்றன.

இப்பெரியார் வடபுலத்தில் இராமர் பிறந்ததாகச் சொல்லப் பெறும் அயோத்தி மாவட்டத்துக் கராணிக்கபூரில் செய்யது அசன் குத்தூசு என்பாருக்கும் செய்யிதுதத்துப் பாத்திமா அம்மையாருக்கும் மகனாக இச்ரி ஆண்டில் சமாத்துல் திங்களில் பத்தாம் நாளுக்கு நேரான கி.பி. 1490 நவம்பர் (கார்த்திகை) 25இல் பிறந்தார். தனியொரு அருள் உணர்வுடனும் செயலுடனும் வளர்ந்த அவருக்கு உரிய பருவத்தில் திருமண ஏற்பாடு செய்தனர். அதனை மறுத்து இல்லத்தை விட்டு வெளியேறினார். பாரசீகம், மக்கா, மதீனா முதலிய மேலை நாடுகளுக்குச் சென்று இந்திய மேலைக் கடற்கரை வழியாக வந்திறங்கி நம் நாட்டுக்குள் ஊடாடினார். தம் அருள் திறத்தால் பல அருளிப் பாடுகளைச் செய்தார். ஆங்காங்கு மாணவர் குழாம் பெருகியது. பின் பஞ்சாபில் அமைந்தபோது தம் அருளிப் பாட்டால் பிறந்த ஓர் ஆண்மகனைத் தம் பிள்ளையாக ஏற்று உடனுறைய வளர்த்தார். அம்மகனே பின்னர் 'இளம் ஆண்டவர்' எனப்பெற்றவர்.

## நாகூரில் அருளாளர்

பின்னர் தெற்கே வந்து பொதியமலை சென்று அங்கிருந்து திருச்சி வந்து தஞ்சை வந்தார். அப்போது தஞ்சையை ஆண்ட அச்சுதப்ப நாயக்கர் (கி.பி. 1680—1700) பிணியால் வருந்தி யிருந்தார். அதனை நீக்க இவ்வடிகளாரை வேண்டியதற்கேற்ப அரண்மனை மாடியிலிருந்த புறா ஒன்றைக் கொணரச் செய்து அப்புறாவின் உடலில் பாய்ந்திருந்த ஊசிகளை எடுத்துக்காட்டி அரசன் குன்ம நோயைப் போக்கினார். நாயக்கரது காணிக்கையைப் பின்னர் பெறுவதாகக் கூறித் திருவாரூர் வழியாக நாகூரை அடைந் தார். அங்கும் மாணவரும் அடியாரும் பெருகவே அங்கேயே நிலை கொள்ள விரும்பினார். இதனையறிந்த அச்சுதப்ப நாயக்கர் அப் பகுதியில் இருந்த ஐவேலி நிலத்தில் ஒரு பகுதியை வழங்கி நிலைத்து உறைய ஏற்பாடு செய்தார். நாகூருக்கு வந்தது கி.பி. 1530 ஆகும்.

அப்போது அவருக்கு அகவை 40. அவருடனிருந்த இளம் ஆண்டவருக்கு அகவை 12. அப்துல் காதிறு என்னும் இயற்பெயர் கொண்ட இச்சான்றோர் இறையருள் பெயராக 'சாகூல் அமீது' என்றும் சிறப்புற்று 'அப்துல் காதிறு, சாகூல் அமீது' என்று வழங்கப் பெற்றார்.

பின் அலந்துக்காரர் கப்பலில் பர்மா சென்று பல அருளிப் பாடுகள் செய்து மீண்டார். பெரும் நாயகமான இப்பெரியார் தாம் பிறந்த திங்களாகிய சமாத்துல் திங்கள் பத்தாம் நாள் வெள்ளிக்கிழமையில் – தம் 68ஆம் அகவையில் – புகழுடம் பெய்தினார். இந்நாள் கி.பி. 1558 நவம்பர் 25ஆம் நாளாகும். அசரத்து நாயகமாகத் திகழ்ந்தவர் நாகூர் ஆண்டவரானார்.

## தர்கா அமைந்தது – கந்தூரி எழுந்தது

அவர் விரும்பியவாறே அவர் உறைந்த இடத்தில் அவர் காலடி பதிந்த குறியீடுகள் கொண்டு அமைந்த இடத்தில் அடக்கம் செய்யப் பெற்றார்.



நாகூர் தர்கா

அவ்விடத்தில் அங்கு வாழ்ந்த மீனவர் தம் காணிக்கையாக முதலில் மரத்தால் 'தர்கா' அமைத்தனர். பின் அஃது பெருகி வளம்பெற்று இப்போதைய மிளிரும் 'தர்கா' வாகியது. இவ் வடக்கந்தான் நாகூரை ஓர் இசுலாமியத் திருவிடமாக்கியது. நாகைக்கும் பெருமையை இணைத்தது.

நாகூர் ஆண்டவர் ஆண்டு நினைவு விழாவான 'கந்தூரி' என்னும் திருவிழா அவர் இயற்கையெய்திய நாளில் தொடங்கி 10 நாள்கள் ஆண்டுதோறும் நிகழ்ந்து வருகின்றது. அடக்கமான திருவிடத்தில் ஒரு சுற்று மண்டபம் நாகைக் குஞ்சாயி மரக்கல வரையர் என்பவரால் கட்டப்பட்டது. இதுதான் புதுதர்கா அமைப் பிற்கு அடிகோலியதாகும். அதன்மேல் பெரும் குடை வடிவிலான 'கவிகை மண்டபம்' கட்டப்பட்டது. மேல் தங்கக் கலசம் பெற்று மிளிர்கிறது.

இத்தூயோர்தம் திருவுடலை நீராட்டியதில் தேங்கிய நீர்நிலை ஒரு குளமாக்கப்பட்டுக் கிழக்கே 'தர்காக் குளம்' என்றுள்ளது.

அடக்கமான இடத்தின் முன்பகுதி மேல்வளைவு மண்டபமாக விரிந்து வெண்பளிங்குக் கற்களாலும், தளம் சலவைக் கற்களாலும் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

இத்தர்கா 'அசரத் காதிறு ஒலி தர்கா' எனப் பெறுகின்றது.

## தூண்மாடம் என்னும் மனோரா

இசுலாமிய பள்ளி வாயில்களில் நகரத்து மக்களுக்குத் தொழுகை நேரத்தை அறிவிப்பதற்குப் 'பாங்கு' என்னும் கூப்பாட்டு முழக்கமாக முரசு அடிக்கப்படும். இது 'நகரா' எனப்படும். இதற்கு உயரமான இடமாக மாடம் எழுப்பப்படுவதுண்டு.

## முதல் 'சாகிபு' மனோரா

இவ்வாறாகும் மாடம் நாகூர் தர்காவிற்கு முதன்முதலாக 1635 இல் ஆண்டவர் அடக்கமான 77ஆம் ஆண்டில் தர்காவின் தென் மேற்கு மூலையில் எழுப்பப்பட்டது. 77ஆம் ஆண்டின் நினைவாக இம்முதல் மனோரா 77அடி உயரத்தில் செஞ்சிக்கோட்டை வாணியர் இபுராகிம்கான் என்பார் தம் அலுவலர்களாகிய மீரான் இராவுத்தர், மதாறு இராவுத்தர் பொறுப்பில் எழுப்பினார். இதற்கு மண்டபமும் கட்டப்பட்டது. இது 'சாகிபு மனோரா' எனும் பெயர் கொண்டது. மண்டபம் 'நடுமண்டபம்' எனப்படும்.

## இரண்டாவது தலைமாட்டு மனோரா

நாகை வாணிபர் நல்ல சயீது மரக்கலவரையரால் தர்கா வடமேற்கில் 1670இல் ஆண்டவர் அடக்கமான 122ஆம் ஆண்டில் இரண்டாவது மனோரா எழுந்தது. இது 93 1/2 அடி உயரம் கொண்டது. இதன் பெயர் 'தலைமாட்டு மனோரா' என்பது.

## மூன்றாவது 'முதுபக்' மனோரா

ஆண்டவர் அடக்கமான 132 ஆம் ஆண்டாகிய 1690 இல் கீழை நாட்டு மலாக்காவைச் சேர்ந்த பீர் நயினாரால் தர்காவில் வடகிழக்கில் 93 1/4 அடி உயரத்தில் மூன்றாவது மனோரா எழுப்பப்பட்டது. இதன் பெயர் 'முதுபக்' மனோரா.

## நான்காவது 'ஓட்டு' மனோரா

பரங்கிப் பேட்டையில் அறமன்ற நடுவராகப் பணியாற்றிய தாவூத்கான் என்பவர் அடுத்த நான்காவது மனோராவைத் தர்கா எல்லையின் தென்கிழக்கில் எழுப்பினார். இஃது ஆண்டவர் அடக்கமான 150 ஆம் ஆண்டாகிய 1708 இல் நிறைவேறியது. இதன் உயரம் 80 அடி. இதற்கு முதலில் ஓட்டுக்கூரை போடப்பட்டுப் பின்னர் சீராகக் கட்டப்பட்டதால் இஃது 'ஓட்டு மனோரா' எனப்படுகின்றது.

## பெரிய மனோரா

பெரிய மனோரா என்று வழங்கப்பெறும் ஐந்தாவது மனோரா மராத்திய மன்னன் பிரதாபசிங் சாயபுவால் எழுந்தது. இதற்கு அவர் தந்தை துக்கோசி என்னும் முதல் துளசா நிலம் அளித்தார். 'சிரீதுளசா சாகிபு அவர்கள் வணங்கி அளித்த இடத்தில்' என்று மனோராக் கல்வெட்டு அறிவிக்கிறது. (பிரதாபசிங் வேண்டியபடி அவருக்கு ஆண் மகனை அருளியதால் அதன் காணிக்கையாக எழுப்பினார் என்பார்) இது அடக்கமான 199 ஆம் ஆண்டாகிய 1757 ஆம் ஆண்டில் உருவானது. 11 மாடங்களில் 131 அடி உயரமுடையது.

இம்மனோராவின் கால்கோள் 17.2.1753இல் நிகழ்ந்தது. 20.1.1755இல் நிறைவடைந்தது. இம்மனோராவின் வடக்கில் 16.2.1758இல் பொறிக்கப்பட்ட பாரசீக மொழிக் கல்வெட்டும் கிழக்கில் மறுநாள் 17.2.1753 இல் பொறிக்கப்பட்ட மராத்திய மொழிக் கல்வெட்டும் உள்ளன. பாரசீக மொழிக் கல்வெட்டில் இசுலாமிய ஆண்டான 'இச்ரி' ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. இரண்டு பகுதிகளாகத் தமிழ் மொழியில் கல்வெட்டு உள்ளது. ஒன்று

தெற்கிலும் மற்றொன்று மேற்குப் பக்கத்திலுமாக உள்ளன. மேற்குப் பகுதிக் கல்வெட்டில்

"மனோரா 11 நிலம் கட்டி முடிச்சுது.

யுவ வருஷம் தை மாதம் 10ஆம் தேதி

கும்பம் வைத்தது" என்று மனோரா முகட்டில் கும்பம் வைத்ததும் பொறிக்கப்பட்டுள்ளது.

## ஒருமைப்பாட்டுக் கல்வெட்டு

இம்மனோராவில் இசுலாமியச் சார்பாகப் பாரசீக மொழி; மராத்திய மன்னர் சார்பாக மராத்திய மொழி; தமிழ்மண் சார்பாகத் தமிழ் மொழி என மும்மொழிகளில் அமைந்தமை ஒருமைப்பாட்டெண்ணத்தைத் காட்டுவதாகும்.



நாகூர் மனோரா

இதனைக் கட்ட மன்னரால் அமைக்கப் பெற்ற 1. சர்கேப் மானோசி செக்தாமித்தியர் 2. நாகூர் பந்தா சார்பாக அருனோசி போன்சுலே 3. மத்தியத்தர் (அமீனா) சேக் அப்துல் மல்லிக் (மராத்திய அரசு அலுவலர்) ஆகிய மூவரும் பொறுப்பேற்று நிறைவேற்றினர்.

## மராத்திய மன்னரின் மனம் விரிந்த நல்கைகள்

மராத்திய பிரதாப மன்னன் இத்துடன் தர்காவிற்கு நல்கையாக 'இளம்கடம்பனூர்' என்னும் சிற்றூர் வருவாயை வழங்கினான்.

பின் ஒருமுறை நாகூருக்கு வந்த பிரதாபசிங் வழியில் வடயரங்குடிக்கு அண்மையில் 'பாவா சாகேபின் தர்கா, மண்டபம்' இவை பற்றிய வேண்டுகோளை ஏற்றுத் தீவா நகரப் பேட்டைச் சங்கத்திலிருந்து ஒரு காசு வீதம் மகமையாக அளக்க ஆணையிட்டான்.

பிரதாபின் மகன் இரண்டாவது துளசா மன்னன் தர்கா செலவிற்குத் தட்டுப்பாடு நேர்ந்ததை அறிந்து பின்வரும் 15 ஊர்களின் வருவாயை நல்கையாக வழங்கினான். அவை நெடுங்காட்டாங்குடி, வடகுடி, சோழாங்க நல்லூர், குறும்பேரி, ஆழியூர், கடம்பர் வாழ்க்கை, நாங்குடி, சராங்கு, தருக்கண்ணங்குடி, புலியூர், இளங்கடம்பனூர், குடன்வெற்றி வாழ்க்கை, புல்லூர், தெத்தி, மேலை நாகூர் ஆகியவை. இந்நல்கையை ஒரு செப்புப் பட்டயத்தில் பதிந்து தர்காவில் அமைத்தான். அப்பட்டயம் 'சிக்தா' என்னும் பெயரில் தர்காவில் உள்ளது. இவற்றின் வருவாயால் ஆண்டவர் வழியினராக நாகூரில் வாழும் 640 பங்குதாரர் பயன் பெறுகின்றனர்.

## ஆண்டவர் மிதியடிகள்

இத்தூயவர் அடக்கமான கருவறை வெள்ளிக் கதவுகளால் அமைக்கப் பெற்றது. கருவறையுள் அவர் பயன்படுத்திய மிதியடிகள் பேணப்பெறுகின்றன. அடியவர் காட்சிக்கும் வாழ்த்துக்கும் பயன்படுத்தப் பெறுகின்றன. இக்கருவறை மிகத் தூய முறையில் பேணப்படுகின்றது. இதன் பின் அமைந்த வடக்குப் புற வாயில் தலைமாட்டு வாயிலாக அதைத் தொடரும் தெரு தலைமாட்டுதெரு ' எனப்படுகின்றது. இதுபோன்றே தெற்குப் புற வாயில் கால்மாட்டு வயிலாக அதைத் தொடரும் தெரு 'கால்மாட்டுத் தெரு' எனப்படுகின்றது.

ஆண்டவர் தொடர்பில் வாஞ்சூர்ப்பள்ளி, யாகூசன் பள்ளி, பீர் மண்டபம் உள்ளன.

## கந்தூரி விழா

இவ்வமைப்புக்களால் பொலிவுற்ற 'தர்கா' வுடன் நாகூர் திகழ்கிறது. ஆண்டவர் அடக்கமான முதலாண்டு நினைவு 'கந்தூரி'

என்று கொண்டாடப்பெறுகிறது. 'கந்தூரி' என்றால் திருவிழா. இதுதான் இதன் ஆண்டுத் திருவிழா. முதல் நாள் கொடியேற்றத் திற்குரிய கொடி நாகையிலிருந்து பெரும் அணிநலத்துடன் ஊர்வலமாகக் கொண்டு வரப்பெற்று ஏற்றப்படும். பத்து நாள்கள் விழா நடக்கும். பத்தாம் நாளில் ஆண்டவர் அடக்கமான இடத்தின்மேல் சந்தனம் பூசும் 'சந்தனக் கூடு' விழா நிகழும். அடக்கத்தின் மேல் சந்தனம் பூசப்பெற்று வெண்பட்டாம் 'சாதரா' போர்த்தப்பெறும். முதன்முதலில் அதற்குரிய சந்தனத்தை ஓர் அந்தண வகுப்பினர் வழங்கினர். இவர் ஆண்டவரால் நோய் நீக்கப் பெற்றவர். இவர் வழங்க வேண்டும் என்றும் முன்னரே ஆண்டவரால் கூறப்பட்டதாம்.

ஒருமுறை பர்மா நாட்டு மன்னன் இவ்வெண்பட்டாடை, சாம்பிராணி முதலியவற்றைப் பேழையில் வைத்துக் கப்பலில் அனுப்ப, கப்பல் கவிழ்ந்தது; பேழை மிதந்து நாகூரை அடைந்தது என்பர். இந்நிகழ்ச்சி நெடுங்கிள்ளி காலத்தில் பீலிவளை தன் மகனைப் பேழையில் கப்பல் வழி அனுப்ப, கப்பல் கவிழ்ந்தும் பேழை கரை சேர்ந்ததை நினைவுபடுத்துவதாக உள்ளது.

மராத்திய மன்னர் காலத்திலிருந்து சந்தனமும் வெண்பட்டும் ஆண்டுதோறும் இன்றும் மராத்திய மன்னர் வழியினரால் நேரடியாக வழங்கப்படுகிறது. அதனைக் குதிரை யானையுடனே வரவேற்றுப் பெறுவர். மராத்திய மன்னர் குடும்பத்தார் நலன் வேண்டித் தனியொரு வழிபாடு ஆற்றப்படுகிறது. இதற்காக மராத்திய மன்னன் இரண்டாம் துளசா ஒரு பட்டயம் உருவாக்கி வழங்கியுள்ளான்.

பத்தாம் நாள் திருவிழா நிறைவடைந்ததும் முதல் நாள் ஏற்றப்பட்ட கொடி இறக்கப்பெறும். அஃதும் ஒரு விழாவாக அமையும். அந்நாளில் வெளியூரிலிருந்து வரும் ஆண்டவருடைய மாணவர் வழியினர்க்கு ஆண்டவர் காலத்தில் உதவியது போன்று வழிச்செலவு வழங்கப்படுகிறது. இப்போது இப்பெருவிழா 15 நாள்கள் கொண்டாடப்படுகின்றது.

இக் கந்தூரித் திருவிழாவிற்கு ஒருமுறை இசுலாமிய அடியாரும் கவிஞருமாகிய குணங்குடி மஃச்தான் சாயபு அவர்கள் வருகை தந்து பத்து நாளும் தங்கி ஆண்டவர்மேல் பாடல்கள் பாடிச் சென்றுள்ளார். இவர் போன்று இசுலாமியத்தின் புலவர் சதக்கதுல்லா அவர்களும் வருகைதந்து புகழ்ப்பாக்கள் பாடியுள்ளார்.

பொதுமக்களும் பல சமயத்தவரும் இந்திய நாட்டின் பல முனையில் வாழ்பவரும், பல்வகை ஐயம் பெறுவோரும், இடுவோரும் ஆண்டுதோறும் பெருந்திரளாக, நூறாயிரக் கணக்கில் வருகின்றனர். புகை வண்டித்துறை சிறப்பு வண்டிகளையும் அரசுப் பேருந்து நிறுவனம் சிறப்புப் பேருந்துகளையும் விடுகின்றன.

நாகூரைப் பெற்ற நாகைக்கு விழாச் சிறப்பால் மட்டுமன்றி வணிகத்தாலும் வளம் சேர்கிறது. சிறப்பாக வியாழக்கிழமையை நாகூர் வழிபாடாகக் கொண்டு மக்கள் குழுமுகின்றனர்.

## நாகை நகரார்

நாகையில் இசுலாமியம் நாகூர் ஆண்டவரால் தழைத்துப் பூத்துக் குலுங்குகிறது.

நாகையில் வாழும் இசுலாமியப் பெருமக்கள் தம் தொழுகைக்குச் சில பள்ளி வாயில்களைக் கண்டுள்ளனர். கடமைகள் தவறாது வாழ்கின்றனர். இசுலாமிய ஆன்மீகக் கல்வி நிலையங்கள் உள்ளன. உருதுமொழி, குர் – ஆன் பயிற்றுவிக்கப்படுகின்றன.

ஆண்டவனை அனைவரும் போற்றுகின்றனர். இசுலாமியக் கோட்பாடாகிய "அல்லா ஒருவரே கடவுள்; அவருக்கே வணக்கம்" என்பதை மறவாது நாகூர் ஆண்டவரை வணங்குவது அவர்வழி அல்லாவை வணங்குவதாகவே கொள்கின்றனர்.

"எல்லாப் புகழும் அல்லாகுத்தாலாவுக்கே" என்று குர் – ஆனின் முன்னுரை மொழியை மறவாது நாகூர் ஆண்டவர்க்குச் செய்யும் போற்றியும் அவர்வழி அல்லாவுக்குச் செய்யும் போற்றியாகவே செய்கின்றனர்.

இவற்றிற்கெல்லாம் இறையோட்டமாக நாகை, நாகூர் இசுலாமிய மக்கள் தமிழர்களுடன் ஒன்றியும் உறவாடியும், அரவணைத்துத் தோள் கொடுத்தும், வாழ்வில் பங்கு கொண்டும் இணைந்து வாழ்வது சிறப்புடன் குறிக்கத்தக்கதாகும்.

## ஊ. நாகையில் கிறித்துவம்

உலகளாவிய பெருஞ்சமயம் கிறித்துவம். இஃது இல்லாத நாடோ, நகரோ இல்லை என்னும் அளவில் பரவியுள்ளது. இதன் தோற்றம் 1983இல் நேர்ந்தது.

## ஏசாயா – (வீடுபேறு)

இதற்கு முன்னர் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் எருசலேமில் 'ஏசாயா' என்றொரு யூதஞானி வாழ்ந்தார். அவர் நம்பிக்கை முன்னுணர்வாளராக (தீர்க்கதரிசியாக) விளங்கியவர். 'ஏசாயா' என்னும் சொல்லுக்கு 'வீடுபேறு' என்பது பொருள். அவர் ஒரு பெரும் ஆன்மீக அறவுரைத் தலைவராக விளங்கியதுடன் ஓர் ஆன்மீக நூலையும் எழுதியவர். அவரைப் பற்றிய செய்திகளும் அவர்தம் அறவுரைகளும், விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் ஓர் அதிகாரத்தில் மிகப் பெரியதாக அமைந்துள்ளன. அவர் அறவுரை ஓரளவில் ஒரு சமயத்துறை எனத் தக்கது. அக்கால மக்களால் பின்பற்றப்பட்டது. ஓரளவில் பரவியது.

அவருக்கு முன்னரே 'மோசையா' என்னும் ஞான அறிவிப்பாளர் ஓர் அறிவிப்பைச் செய்திருந்தார். அது, 'கடவுளால் நீராட்டப்பெற்ற (அபிசேகம் பண்ணப்பெற்ற) ஒரு முற்றுணர்வாளர் தோன்றுவார்' என்பதாகும்.

## கிறித்து என்றால்

'மேசியா' என்னும் வேறு ஒரு எபிரேயச் சொல்லுக்கு 'நீராட்டப் பெற்றவர்' என்பது பொருள். இச்சொல் கிரேக்கத்தில் 'கிறித்து' ஆயிற்று. இத்தகைய நீராட்டப்பெற்றவராகிய ஒருவரை யூதமக்கள் எதிர்பார்த்திருந்தனர்.

இன்றைக்கு 1993ஆண்டுகளுக்கு முன் பாலத்தீனத்துச் செருசலேமில் யூதர் இனத்தில், 'யோசேப்பு' என்பார்க்குக் 'கன்னிமரியாள்' வயிற்றில் ஓர் ஆண் மகவு பிறந்தது. இதற்கு "யோசுவா" என்று பெயரிட்டனர். "யோசுவா' என்பதற்கு "மீட்பர்" என்பது பொருள். "யோசுவா" என்பதே உரோமிய மொழியில் "ஏசு" என்றாயிற்று.

## கிறித்தவம் பிறந்தது

பாலத்தீனத்தில் வாழ்ந்த 'யோவான் ஃச்நானாகன்' என்னும் ஆன்மீக ஞானி ஏசுவின் 28ஆம் அகவை அளவில் நடைமுறைக் கேற்ற திருந்திய ஆன்மீக அறிவுரைகளைப் பரப்பியவர். இவற்றில் நாட்டம் கொண்டு அவரைப் பற்றத்தொடங்கிய 'ஏசு' தம் முப்பதாம் அகவையில் தம் புதிய கோட்பாட்டைப் பரப்பினார். இத்தகைய ஒரு மீட்பரையே யூத மக்கள் எதிர்பார்த்திருந்தனர். இவரையே கடவுளால்

'நீராட்டப் பெற்றவராகிய கிறித்து' என்று ஏற்றுக் கொண்டனர். இயேசுவே தாம் எதிர்பார்த்த 'மீட்பர்' என்றனர்.

இயற்பெயராகிய ஏசுவுடன் அருட் பெயராகிய கிறித்துவும் கூடி அவர் 'ஏசு கிறித்து' என்று போற்றப் பெற்றார்.

ஏசு கிறித்து தம் அடிப்படைக் கோட்பாடாக,

"கடவுள் தந்தை; மக்கள் பிள்ளைகள்;

கடவுளே தந்தையும் = பிள்ளையும் = தூய ஆவியாகவும்

இருக்கிறார்; நான் கடவுளின் நேர்முக ஒரே மகன்" என்றார். இந்த அடிப்படைக் கொள்கை 'திரித்துவம்' (Trinity) எனப்படும்.

யூதமக்கள் உரோமானியரிடமிருந்து தம்முரிமையைப் பெற முனைந்தனர். தமக்கு ஏசு கிறித்துவையே 'மேசியா' என்னும் அரசுத் தலைவராகக் கொள்ள விரும்பினர்.

ஏசுவும் 'நாமே அரசர்; தம் அரசு பரலோகத்தைச் சேர்ந்துள்ளது' என்றார். இதனால் வெறுப்புற்ற உரோம அரசினர் ஏசு 'கடவுளைப் பழிக்கிறார்; மேசியா அரசுக்கு உரிமை கொண்டாடுகிறார். எனவே, மக்களுக்கும் நாட்டுக்கும் கீழறுப்பு (துரோகம்) செய்பவர்' என்றெல்லாம் குற்றம் சாட்டி அரசு அறமன்றத்தில் நிறுத்தினர். அறமன்றம் குற்றவாளியே என்று சிலுவையில் அறையத் தீர்ப்பாயிற்று. அத்தீர்ப்பின்படி ஏசு சிலுவையைத் தாமே சுமந்து சென்று அறையப்பட்டு அடக்கம் செய்யப்பட்டார். மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பர்.

ஏசு கிறித்துவின் மாணவர் பன்னிருவர். அவர்களைத் தம் கிறித்துவச் சமயத்தை உலகெல்லாம் சென்று பரப்புமாறு அனுப்பியிருந்தார். அனுப்பப்பட்டமையால் அன்னார் 'அப்போத்தலர்' எனப்பெற்றனர். அவர்களால் ஏசுவிற்குப் பின்னரும் கிறித்து சமயம் பரப்பப்பட்டது. விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் 4 அதிகாரங்கள் அனுப்பப்பட்டவர்க்காக உள்ளன.

இவ்வாறு கிறித்துவ சமயம் தோன்றிப் பரவியது. இது உரோமில் ஓர் அரசுத் தலைமை நகரையே 'வாக்டிகன் நகர்' என்று கொண்டு உலகக்கிறித்தவர்களையெல்லாம் ஆண்டது,

## கத்தோலிக்கம்

ஏசு கிறித்துவின் கிறித்துவ சமயம் பரப்பப்பட்டதுடன் ஏசு கிறித்துவும் தேவ குமாரனாகப் போற்றப் பெற்றார். கிறித்துவ சமயக்

கோயில்கள் அவரையும் அவர் ஏற்றப்பட்ட சிலுவையையும் கடவுள் பாங்காகவே கொண்டன. அவரை ஈன்றெடுத்த அன்னை கன்னிமரியாள் தெய்வமாகப் போற்றப் பெற்றுத் தொழுகை செய்ய அமைக்கப் பெற்றார். மரியன்னை கோயில்கள் என்னும் பெயரில் 'மாதாகோயில்' என்று அக் கோயில்கள் கூறப்பெற்றன. இவற்றைக் கையாண்ட உரோமர் பாங்கினர் 'உரோமக் கத்தோலிக்கர்' எனப்பெற்றனர். உலகெல்லாம் 'உரோமக் கத்தோலிக்கம்' கால்கொள்ள ஏற்பாடுகள் நடந்தன.

## ஏசு சங்கம்

இதன் ஓர் அமைப்பாக 'ஏசு சங்கம்' (Jesus Society) உருவானது. இதனை இக்னீசியசு லயோலா (1491 – 1556) என்பார் உருவாக்கினார். முதலில் பாலத்தீன இசுலாமியரைக் கிறித்துவ ராக்கும் நோக்கம் கொண்ட இது காலப்போக்கில் அனைத்துச் சமயத்தாரையும் கிறித்துவராக்கும் செயலில் ஈடுபட்டது. உலகெங்கும் இடம் கொண்டது. முன்னர் சூளாமணி விகாரைப் பகுதியில் சிறு கிறித்துவத் தொழுகை அறை அமைத்ததைக் கண்டோம். அஃது இந்த ஏசு சங்கத்தவர் அமைத்ததேயாகும். அன்னார் சமயமாற்றத்துடன் கல்விப்பணி, மருத்துவப் பணி, குமுகாயப் பணி என்றெல்லாம் மேற்கொண்டனர். தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ் கற்றுத் 'தேம்பாவணி' என்னும் காப்பியத்தை எழுதிய வீரமாமுனிவர் இச்சங்க வழி வந்தவரே.

ஏசு கிறித்துவைப் பற்றிப் பாடிய பாவேந்தர் பாரதிதாசனார் தோழன், தோழி உரையாடலில், வினா விடையாக வைத்து,

**"மேதினிக்குச் சேசுநாதர் எதற்கடி தோழி? – முன்பு**
**வெம்மைகொள் மக்களைச் செம்மை புரிந்திடத் தோழா"**

என்று தொடங்கி ஏசுவின் பாதை வழுவியதைச் சுட்டும் நோக்கில்,

**"ஏதுக்கு நன்மைகள் ஏற்கவில்லை உரை தோழி? – இங்கே**
**ஏசுவின் கட்டளை நாசம் புரிந்தனர் தோழா"** (23) – என்றார்.

பாவேந்தர் இக்காலத்தில் இந்திய நாட்டில், "நாசம் புரிந்ததை" என்றாலும் இச்செயல் உரோமக் கத்தோலிக்கரால் செய்யப் பெற்றது.

## பிராட்டெஸ்ச்டெண்டு

இதனால் கிறித்துவ சீர்திருத்த முனைப்பு தோன்றியது. 16–ஆம் நூற்றாண்டில் செர்மனியின் கிறித்துவத் துறவியார் 'மார்ட்டின் லூத்தர்' என்பார், ஒரு சீர்திருத்தப் புரட்சியையே செய்தார். இவரை

ஏற்றோர் 1555 இல் 'பிராட்டெஃச் டெண்டுகள்' எனப் பெற்றனர். இவர்கள் முதலில் ஒடுக்கப்பட்டாலும் பின்னர் தலையெடுத்து உலகமெல்லாம் பரவினர்.

கிறித்துவம் அமைந்த ஊர்களில் பிராட்டெஃச் டெண்டுகள் அமைத்தனர். லூத்தரின் புரட்சிமாற்றத்தால் கிறித்துவத் திருச்சபைத் தந்தையர் திருமணம் செய்து கொள்ளலாம் என்று ஆனது குறிக்கத்தக்கது.

## சில ஒருமுகம்

மேலும் இப்பிரிவுகள் கிறித்துவத்தில் ஏற்பட்டாலும் பொதுவில் ஏசுவே பின்பற்றப் பெற்றார். அவர்தம் மலைச் சொற்பொழிவும் பத்துக் கட்டளைகளும் அன்றாடத் தொழுகையில் கடவுளை வேண்டும் வழிபாட்டு உரைகளாக அப்படியே கடைப்பிடிக்கப்படுகின்றன.

யெகோவாவை வேண்டும்போது,

"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" – என்று தொடங்கும் வழிபாட்டு உரை அனைவராலும் அவ்வாறே அவரவர் மொழியில் ஓதப்படுகின்றது.

'அவ்வாறே ஆகுக' என்னும் பொருள் கொண்ட 'ஆமென்' என்பதை நிறைவு மொழியாகக் கொள்கின்றனர்; அனைவரும் வேண்டுகின்றனர். இவ்வேண்டுதலில் ஏசுவின் அடிப்படைக் கோட்பாடுகளாகிய "இறைவன் அரசு, இறைவன் தந்தை; இறைவனே நல்லாம் தருபவன். பாவமன்னிப்பு" என்பன உள்ளன. இவைபோன்றே கிறித்துவராக்க ஞானநீராட்டல் (ஞானஃச்நானம்) முதலியன ஒன்றித்தன. 'ஞான நீராட்டல் என்பது பார்ப்பனரின் இருபிறப்பாளராக்கும் துணைக்கண்கள் திறப்பு (உபநயனம்) போன்றதாகும். கிறித்துவத்தில் பிரிவுகள் இருப்பினும் அனைவரும் கடவுளாக 'யெசோவா' வையேக் கொள்வர். மறைநூலாக விவிலியத்தையே கொள்வர். இந்நூலின் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்னும் பிரிவுகளில் பிராட்டெஃச்டெண்டுகள் புதிய ஏற்பாட்டைச் சிறப்பாகக் கொள்வர்.

## பிறந்தநாள் விழா

சிறப்பாக ஏசுகிறித்து பிறந்தநாள் விழாவைத் தவறாது டிசம்பர் திங்கள் 25ஆம் நாள் இரவு 12 மணியில் கொண்டாடுவது ஒருமித்த தாயிற்று. ஏசு குழந்தைகளுக்குப் பரிசு வழங்கல், பிறந்த நாள் மரம்

வைத்தல், கூட்டு வழிபாடுகள் நிகழும். உரோமக் கத்தோலிக்கக் கோயில்களில் ஏசு பிறந்த (மாட்டுத்) தொழுவக் காட்சி அமைக்கப்படும். இப்பழக்கம் 1224 இல் பிரெஞ்சு நாட்டில் துவங்கி எங்கும் பரவியது. இக்கொண்டாட்டம் நம்நாட்டில், கொண்டாடப் படும். தீபாவளி போன்றதாகும். இஃது ஆங்கிலத்தில் (Christmas) எனப்பெறும். ஆயினும் இந்நாள் ஏசுவின் பிறந்தநாள் தான் என்று உறுதி செய்யப்பட்டதன்று. கி.பி. 354இல் ஓர் உரோமப் பாதிரியார் 'லைபிரியசு' என்பார், டிசம்பர் 25 என்று ஆணையிட்டு நடைமுறைப்படுத்தச் செய்தார்.

கிறித்துவ ஆண்டு (கி.பி. – கி.மு.) பிறந்தது.

## நாகையில்

உலகளாவிய கிறித்துவம் நாகையில் 17ஆம் நூற்றாண்டில் இறங்கியது. போர்த்துகீசியர் ஆட்சியின் போது அவர்தம் தொழுகைக் காகச் சிற்றளவில் ஒரு கோயிலைச் சிந்தாற்றுத் துறையில் எழுப்பினர். பின்னர் இது விரிவாக்கம் பெற்றது. இஃது உரோமக் கத்தோலிக்கர் கோயில்; பின்னர் உரோமக் கத்தோலிக்கத் திருச்சபையரால் பெரிதாக உருவாக்கப்பட்டது. பெருங் கூடத்தைக் கொண்டதாகவும் அதன் விமானம் வானளாவி உயர்ந்து கூம்பு வடிவில் கூரிய முகட்டை ஊசிபோல் உடையதாயிற்று. அது மக்க ளால் 'ஊசி மாதா கோயில்' எனப்படுவதாயிற்று. கடலை நோக்கி இரண்டாவது கடற்கரையில் பரந்த முன்றில் உடையதாக உள்ளது.

இதில் அமைந்துள்ள மரியன்னை திருவுருவம் பிலிப்பைன் நாட்டு மணிலாவிலிருந்து வந்தது. அதனை அனுப்பப் பேழையில் வைத்து எடுக்கும்போது அதன்தலைப்பகுதி சாய்ந்து அமைந்த கோலத்திலேயே இருந்ததால் அக்கோலத்திலேயே அமைக்கப் பெற்றுள்ளது. இங்குச் சிறந்த வழிபாட்டுக் கிழமை சனிக்கிழமை யாகும். மறைத்திரு 'பெல்லாரோ' என்பார் இதனைப் புதுப்பித்துப் பொலிவுறச் செய்தார்.

## அன்னை கோயில்கள்

கத்தோலிக்கக் கோயில்களாக நாகைக் கடற்கரைப் பகுதியிலேயே வடகிழக்குப் பகுதியில் இரண்டு மாதா கோயில்கள் உருவாயின. அப்பகுதியில் கத்தோலிக்க மக்கள் அதிகம் உறைகின்றனர்.

வெளிவையிலும் நாகையிலும் கத்தோலிக்கக் கோயில்கள் சிற்றளவில் அமைந்தன. இவற்றிற்கெல்லாம் முன்னர் இப்போதைய அறமன்றங்கள் உள்ள பகுதியை ஒட்டி மேற்கில் ஏசு சங்கத்தாரால் ஒரு சிறு தொழுகை அறை (Chapple) பிரெஞ்சுப் பாதிரியாரால் எழுப்பப்பெற்றது. இன்னோர் இவர்கள் தாம் முன்னேயிருந்த சிதைந்து பட்ட சூளாமணி விகாரையும், புதுவெளிக்கோபுரமும் தமக்கு இடையூறாக இருப்பதாக அரசு ஆணையுடன் இடித்தனர் என்று கண்டோம்.

ஊசிமாதா கோயில் திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக நிகழும். மரியன்னை அணிசெய்யப்பெற்ற தேரில் மின்விளக்கு ஒப்பனை யுடன் இரவில் உலா வருவார். இதுதான் குறிப்பிடத்தக்க விழா.

கத்தோலிக்கரின் வழிபாட்டு முறைகளும் சில நடைமுறைளும் இசுலாமியம் அல்லாத பிறசமயக் கரணங்களை (சடங்குகளை) ஒட்டியனவாகவும் அமைவதுண்டு. மலர்மாலைகளைப் பயன்படுத்து வதும், மங்கலச் சுற்றாம் 'ஆரத்தி' எடுப்பதும் கூடக் கடைப்பிடிக்கப் பெறுகின்றன. ஞாயிறு தோறும் கூட்டுத் தொழுகை முறை உண்டு. தனிச் சிறப்பு நாள் நிகழ்ச்சிகளும் நிகழும். நாள் வழிபாடும் நிகழும். தனியே பங்குத் தந்தை என்று ஒரு பாதிரியார் அமைந்திருப்பர்.

## ஏசு கோயில்கள்

நாகையில் ஒல்லாந்தர் ஆட்சியின்போது புகைவண்டி நிலையத் திற்கு எதிர்ப்புறம் கிழக்கில் ஒரு ஏசு கோயில் எழுப்பப்பட்டது. இது தெற்கு முகமாக அமைந்தது. ஓரளவு தொழுகைக் கூடம் கொண்டது.

இது சிதைந்து பழுதுபட்டதால் பழைய பேருந்து நிலையத்திற்கு எதிரில் தெற்கு முகமாகப் புதுக்கோயில் ஒன்று எழுப்பப்பட்டது. இதன் திருப்பணிக்குப் பல ஆலந்துப் பெருமக்கள் உதவியுள்ளனர். இதனை அறிவிக்கும் கல்வெட்டு டச்சு மொழியில் கோயில் முகப்பில் வலப்புறச் சுவரில் உள்ளது. அதில் குறித்தபடி இக்கோயில் 3 சூலை 1774இல் கட்டப்பெற்றுள்ளது. இக்கல்வெட்டின் இரண்டாவது பகுதியில் உதவியோர் பெயரில் அவ்வாண்டில் ஆளுநராக இருந்த 'இரெயினெர் வான் விளிசிங்கென்' பெயர் பொறிக்கப் பெற்றுள்ளது. இவர்தம் நகரில் உள்ள மலையப்பர் கோயிலின்

திருப்பணி செய்தவர். அங்கு அமைந்த கல்வெட்டிலும் இப்பெயர் பொறிக்கப்பட்டுள்ளதை முன்னர்க் கண்டோம்.

இக்கோயிலில் ஒரு சிறப்பு அமைப்பாக மரத்தாலாகிய உயர் மேடை ஒன்று பின்னணி இசைக்கருவி வைப்பதற்கு உள்ளது. அதன்பின்பக்க மேலிடத்தில், 'ஆட்சி நாகைப் பகுதி'யில் விவரிக்கப் பெற்ற ஆளுநர் மனைவியின் கல்லறை மண்டபத்திலும் கல்லறைக் கல்வெட்டுப் பாறையிலும் பொறிக்கப்பெற்ற அவ்வம்மையாரின் சின்னம் அவ்வாறே மரச்சிற்பமாக வைக்கப்பட்டுள்ளது. இது அவ்வம்மையாரின் நினைவுக் காணிக்கையாகும்.

இக்கோயில் இக்காலத்தில் புதுப்பிக்கப் பெற்றது. இவை யிரண்டும் பிராடெஸ்டெண்டுக் கோயில்கள்.

## சீர்திருத்தத் திருச்சபை

பிராட்டெஸ்டெண்டை உருவாக்கியவர் மார்ட்டின் லூத்தர் என்று கண்டோம். அவர்தம் பெயரால் அமைந்த திருச்சபை ஒன்று நாகையில் அமைந்தது. அதற்கென லுத்தரன் திருச்சபைக் கோயில் ஒன்று, பெருமாள் கீழ வீதியும் தெற்கு வீதியும் சேரும் மூலையின் கிழக்கில் அமைந்துள்ளது. இது தெற்கு முகமாய் அமைந்தது. இத்திருச்சபையார் இதனை வழிபடுகின்றனர். இதற்கெனத் தனி ஆயர் உள்ளார். ஆண்டுதோறும் ஆண்டுவிழா போன்ற வழிபாட்டு நிகழ்ச்சி நிகழும்.

## நகைபோடாத் திருச்சபை

பின்னர் 'பெந்தகொஸ்தே' எனப்பெற்ற இலங்கைச் சார்பான திருச்சபை ஒன்று அமைந்தது. இதற்கெனக் கோயில் அமைப்பில் ஒன்றுமில்லையாயினும் இல்லங்களில் கூடி கூட்டு வழிபாடு இயற்றினர். இன்னோர் வெள்ளுடை அணிந்தனர். பாவேந்தர் அவர்கள் நிறைய பொன் வெள்ளி நகைகள் அணிந்து கிறித்துவக் கோயிலுக்கு ஞாயிறு தோறும் செல்வோரைப் பகடிசெய்யும் கருத்தில் ஒரு பாடல் எழுதினார். அதில்,

"இலைபோட்டழைத்ததும்

**நகை போட்ட பக்தர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தார்;**

**ஏசு மட்டும் வரவில்லை"** என்று பாடினார். இதனை ஈடு செய்யும் வகையில் நகைகள் அணியாதவர்களைக் கொண்ட கிறித்து வர்கள் பெந்தகொஸ்தெயராகவும் மற்ற வகையிலும் அமைந்தனர்.

நாகை தென்னிந்திய உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய திரு ஈஃச்டர்ராசா என்பார் பணியிலிருந்து விலகி அமெரிக்கத் திருச்சபை ஒன்றில் சேர்ந்து அதற்கென ஓர் அமைப்பை உருவாக்கினார். வெளிப்பாளையத்தில் ஓரில்லத்தில் தொடங்கிய, அவர் பின்னர் அமெரிக்க உதவியுடன் தொழுகையிடம் ஒன்று அமைத்து அதனைப் பெரிய கூடமான கோயில் போன்று அமைத்தார். அன்னோர் பெரிய இரைச்சலுடன் முழக்கமிட்டு வழிபாடாற்றுவர். 'அலிலேயா' என்று உரக்க ஓலமிடுதல் போன்று முழங்குவர். இதனைச் சேர்ந்தோர் ஓரளவான எண்ணிக்கை கொண்டவராக நாகையில் உள்ளனர்.

## கிறித்துவர் நடைமுறை

இவ்வாறாக நாகையில் இடம் பெற்ற கிறித்துவம் தன் மக்களை நகருக்குள் பரவலாகவும் சிதறலாகவும் பெற்றுள்ளது. முன்னர் அவ்வத் திருச்சபையார் சிலர் குழுவாகத் தெருமுனையில் ஞாயிறுதோறும் நின்று ஏசுவின் அறிவுரைகளைப் பரப்பினர்.

சைவ சமயத்தவர் மார்கழித் திங்களில் விடியலில் பாடிக் கொண்டு தெருக்களில் வருதல்போன்று திருச்சபையாரும் செய்தனர். தமிழ் மண்ணில் வாழ்வோரது பழக்கங்களைக் கைக்கொண்டு அதன் வழி கவர்ச்சியூட்டினர்.

'முகம்மதியரானவர்' என்பது போன்று 'கிறித்துவரானவர்' என்று தமிழ்மண்ணின் பிற சமயத்தாரைத் தம் சமயத்தில் சேர்த்துக் கொண்டனர். 'மெய்யறிவு நீராட்டு' என்னும் ஞானஃச்நானம் செய்வித்துக் கிறித்தவராக்கினர்; நாகையிலும் இது நிகழ்ந்தது.

எவ்வாறாயினும் கிறித்துவர்பால் அமைந்த பிற மரபுகளும், செயல்முறைகளும், அன்பும், அரவணைப்பும், துணையும் வாழ்வில் ஈடுபாடும் கொண்டவையாக அமைந்தன.

திருக்கோயில் நிகழ்ச்சிகள் அன்றி, திருமணம் போன்ற நல்விழாக்களிலும், உயிர்நீத்த அவல நிகழ்ச்சிகளிலும் திருச்சபை ஆயர் பங்கு கொண்டு தொழுகை நடத்தி வாழ்த்தி ஆறுதல் தருவார். நோய்வாய்ப்பட்டவர் இல்லம் சென்று தொழுகை நடத்துவார். கிறித்துவத்தில் வேறுபட்ட சமயத்தாருக்கும் இவை போன்றவற்றைச் செய்வது குறிக்கத்தக்கதாகும்.

ஏசுகிறித்து பிறந்தநாள் கிறித்தவரது சமய விழா என்றாலும் அஃது உலக வரலாற்றுப் பதிவு நாளாயிற்று. உலகத்தில் வரலாற்றுக் கால அளவு இந்த நாளை வைத்தே அனைவராலும் வழங்கப்பெறுகிறது. கிறித்து (பிறந்த) பின் கி.பி. என்றும். கிறித்து (பிறப்பதற்கு) முன் கி.மு. என்றும் உலக ஒருமைப்பாட்டு ஆண்டாக விளங்குகிறது.

'கிறித்துமசு' கிறித்து பெயரால் அமைந்த கிறித்துவ சமய விழா. ஆயினும் இந்நாள் வாழ்த்தைப் பிற சமயத்தினரும் ஒருவருக்குஒருவர் 'கிறித்துமசு வாழ்த்து' என்று வழங்கி மகிழ்கின்றனர்.

பொதுவில் நாகையிலும் கிறித்துவம் ஐந்து முனைகளில் இடம் பெற்றுக் கிறித்துவத்தைப் பெருக்கியதுடன் தொடக்கம் முதலாகவே கல்வி நிலையங்களை ஏற்படுத்திக் கல்விப்பணி செய்து வருகின்றது.

கிறித்துவத்தால் நாகைக்கு ஒரு பெருமையும் வளமும் உண்டென்றால் அது வேளாங்கன்னியால் நேர்வதாகும்.

## வேளாங்கன்னி

நாகை தனக்குரிய சிறப்புகளாலும் சூழ்ந்துள்ள துணைகளாலும் சிறப்புற்றது. மேற்கே சைவச் சிக்கல் சிங்காரவேலரால் சிறப்பு; வடக்கே இசுலாமிய நாகூர் ஆண்டவரால் சிறப்பு; இவைபோன்று தெற்கே கிறித்துவ வேளாங்கன்னியால் சிறப்பு. கிழக்கு வங்கக் கடலால் வளமான சிறப்பு.

### 'கண்ணி' அன்று

'வேளாங்கன்னி' என்னும் ஊர் நாகைக்குத் தெற்கில் 10 கி.மீ. தொலைவில் திருத்துறைப்பூண்டிச் சாலையில் உள்ளது. அங்கமைந்த கிறித்துவக் கோயில் உரோமன் கத்தோலிக்கச் சார்புடையது. வங்கக் கடற்கரையில் சிறிய குப்பமாக இருந்த அப்பகுதி கன்னி மரியன்னையால் 'வேளாங்கன்னி' ஆயிற்று.

ஏசுவின் அன்னை கன்னியாகவே ஏசுவைப் பெற்றுச் சிறப்புற்றார். 'கன்னி மரியாள்' எனப்பெற்றார். கடவுளின் அருளாளர் நிலையில் தொழுகைக்கான அன்னையாகக் கிறித்துவர்களால் போற்றப்பெறுகிறார். இவ்வன்னையாம் கன்னி பல்வகை

மக்களாலும் விரும்பத்தக்க பெருமையுள்ள கன்னி என்னும் பொருளில், வேள் – விருப்பத்திற்குரிய; அம் – பெருமையுள்ள; கன்னி – கன்னியன்னை என்னும் பொருளில் இப்பெயர் அமைந்தது. ஆனால் வேளாங்கண்ணி என்று கண்ணைக் குறித்து வழங்குவது பொருந்தாததாகும். கன்னியன்னை மேரியாள் வழிபடுவோர்க்கு உடல் நலத்தை (ஆரோக்கியத்தை) வழங்கி யருளுவதால் 'ஆரோக்கியமாதா' என்று சிறப்புப்பெயரால் அழைக்கப்பெறுகிறார்.

நாகையைப் போர்த்துகீசியர் ஆண்ட 17 ஆம் நூற்றாண்டில் அன்னை மரியாளின் அருளிப்பாடுகளாகத் தெற்குக் கடற்கரைக் குப்பத்தில் நேர்ந்தவற்றை அறிந்த போர்த்துகீசிய ஆளுநர் சிறு குடியில் போன்ற ஒரு கோயிலை உருவாக்கினார். 24' நீளம் 12' அகலமே கொண்டதாக அக்கோயில் உருவானது 1920 இல் விரிவு பெற்றது. அது காலப்போக்கில் பல்வகையாலும் திருச்சபையாராலும் பெருமக்களாலும் பெருகி இன்று வானளாவிய எழிற் கோயிலாகத் திகழ்கிறது.

முதலில் பால் விற்கும் சிறுவன், மோர்க்காரி என்று எளிய வர்க்கே அருளிப்பாடுகள் துவங்கி இன்று முடவர், நொண்டி, குருடர், மனநோயாளர்க்குக் காப்பகம் அமைந்துள்ள அளவில் பெருகி யுள்ளது.

கிழக்கே கடலை நோக்கி வானுயர்ந்த இரட்டைக் கோபுரங் களுடன் திகழும் கோயில் 1974–75 இல் மேற்கு நோக்கிய பெரும் காட்சிக் கட்டடத்தையும் பெற்றது. முன்பகுதியில் சதுரப் பீங்கான் ஓடுகள் வெளிநாட்டிலிருந்து கொணர்ந்து பதிக்கப்பட்டன.

மரியன்னை பெயரில் 'மாதாகுளம்' ஒன்று உள்ளது. அங்கிருந்து கோயிலுக்கு வரும் வழியில் அன்னையின் அருளிப் பாடுகள் சிற்பங்களாகச் சிறுசிறு கலைக் கூடங்களாகக் காட்சி தருகின்றன. அன்னை பிறந்த நாள் செப்டம்பர் 8–இல் சிறப்புறு கிறது. ஒவ்வோராண்டும் அன்னையின் மின் ஒப்பனைத் தேர்த் திருவிழா நிகழும். ஆகஸ்ட்டு 29–இல் கொடியேற்றப்பட்டு 10 நாள்கள் பெருவிழாவாக நிகழும். தமிழ்நாட்டளவிலும் இந்திய தேச அளவிலும் பல்வகை மக்கள் நூறாயிரக்கணக்கில் குழுமுவர். தமிழ்நாட்டு மூலை முடுக்கிலிருந்தெல்லாம் காவி ஆடையும், வண்ண உடையும் உடுத்தி அன்னை மரியாள் கொடிபிடித்துக் கால்

நடையாகச் சாரி சாரியாக மக்கள் வருவதைக் காணலாம். சிலர் மரியன்னையின் படம், திருவுருவம் கொண்ட சிறு தேரை இழுத்து வருவர்; தாங்கியும் வருவர்.

அவ்வூர் தாங்க முடியாத அளவில் வருகை தரும் மக்களுக்கு அரசுப் பேருந்து நிறுவனம் தனிச்சிறப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. வருவோர் தங்குவதற்குக் கோயில் சார்பிலும் தனியார் சார்பிலும் நிறுவனங்கள் சார்பிலும் உண்ண, உறைய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பயணிகளுக்காகவே தனியொரு கோயில் உருவாக்க உள்ளனர்.

அடியவர்கள் தம் வேண்டுதலைச் செலுத்த வெள்ளியாலும், பொன்னாலும் பலவகைப் பொருள்களாலும் காணிக்கைகளை வழங்குகின்றனர். அவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அருங் காட்சியகம் ஒன்றுள்ளது.

விழாவின்போது புதுக்கடைகள் அமைப்பாலும் பொருளாதாரப் புழக்கத்தைப் பெருக்குகின்றன. இதனால் நாகை நகரும் வாணிப வளம் பெறுகிறது. ஒவ்வொரு ஞாயிற்றிலும் அன்னை அடியவர்கள் ஆயிரக்கணக்கில் வந்து வழிபடுகின்றனர்.

கோயிலுக்குக் கருவறை எனத்தரும் உள்மேடைப் பகுதியில் அன்னை மரியாளின் அழகுருவம் பொலிவுற உள்ளது. சிலுவையும் ஏசும் இடம் பெற்றுள்ளார்கள்.

நாள்தோறும் வழிபாடு என்னும் திருப்பலி 5 வேளை நிகழ் கிறது. தமிழிலும் 10 மணியளவில் ஆங்கிலத்திலும் திருப்பலிகள் நிகழும். மலையாளத்திலும் ஒரு வேளை நிகழ்கிறது.

இக்கோயிலின் தலைமைப் பொறுப்பாளராகத் தஞ்சைப் பேராயர் உள்ளார். பங்குத்தந்தையாக மறைத்திரு சம்மனசு அடி களார் 20 ஆண்டுகட்கு மேலாக அமைந்து சிறப்பான பணிகளைச் செய்து வருகிறார்.

அன்னை மரியாளின் வேளாங்கன்னிப் பெயரால் சென்னை யில் ஒரு வேளாங்கன்னிக் கோயில் பெருமளவில் எழுந்துள்ளது. அஃதும் பெருவிழாவைக் கண்டு வருகிறது.

அனைத்து வகையிலும் சிறந்து விளங்கும் வேளாங்கன்னி அனைத்து வகை நோயாளிகளையும் அனைத்து உருவில் பெயர் பெற்றோரையும் விழாவின்போதும் பிற நாள்களிலும் கண்டு வருகிறது.

வேளாங்கன்னியால் நாகைக்கு ஒரு சிறப்பு மட்டுமன்று, விழாக்காலங்களில் குறிப்பிடத்தக்க பணப்புழக்க வளமும் வாணிபப் பெருக்கமும் நேர்கின்றன.

## எ. சமய அமைதி

"வணங்கும் துறைகள் பலப்பல ஆக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலப்பல ஆக்கி அவையவை தோறும்
அணங்கும் பலப்பல ஆக்கி" (24) என்று நம்மாழ்வார் பாடினார். நாகையில் கடவுள் பலர்; கோயில்கள் பலப்பல; வணங்கும் துறைகள் பல. ஆனால் மக்கள் அறிவுக் கீறல் (மதிவிகற்பு) பெறவில்லை; பிணங்கி நிற்கவில்லை; இணங்கியே வாழ்கின்றனர். ஒருவர் சமயக் கோயிலுக்கு மற்றவர் போகின்றனர். விழாக்களில் பங்கு பெறுகின்றனர். கலந்து கொள்கின்றனர். மகிழ்கின்றனர். இன்றுவரை பிணக்கமோ பூசலோ இல்லை.

ஆனால் இப்போது முளைத்திருக்கிற புது இராம அடியார்கள் எதிர்காலத்தை எவ்வாறு ஆக்குவாரோ? அண்மையில் பிள்ளையார் ஊர்வலத்தை நாகூருக்குக் கொண்டு சென்றமை நல்ல அறிகுறி அன்று.

இருப்பினும் நாகைப் பொதுமக்களும் பிற அரசியல் இயக்கத் தாரும் அமைதிச் சமய நோக்குடையாரும் சான்றோரும் அடியார் களும் பிணக்கும் பூசல் நிலைமையும் ஏற்படாமல் காக்கவேண்டும்.

**சமய நாகை அமைதி நாகையாகவே அமைக!**

நாகை சமயத்தால் பெருமையுள்ளது. இப்பெருமை அகப் பெருமையாகவும் வெளிநாட்டில் ஓரளவில் சைவம் புகுந்த அளவில் புறப்பெருமையாகவும் அமைந்தது.

இவற்றிற்கும் முன்னாக இரண்டு பெருமைகளையும் நாகை பெற்றது வணிகத்தாலாகும்.

### 6. சமய நாகை

| ஆசிரியர் | கொண்டுகாட்டி | கொண்டு காட்டி நூற்குறுக்கம் |
|---|---|---|
| 1. தேவநேயன் ஞா. | | : வட.வர. – பக். 143,144 |
| 2. மறைமலையடிகள் | | : சை.சி. ஞான – பக். 119 |
| 3. பவணந்தி முனிவர் | | : நன் – பொதுப்பாயிரம் – நூற்பா 11. |

| | |
|---|---|
| 4. Ramachandhran T.N. | : The Nagapattinam and the other Buddhist Brouser in the Madras Museum (Essay) |
| 5. தொண்டரடிப் பொடியாழ்வார் | : நாலா. தி. பிர. – திருமாலை–8 |
| 6. ——— | : The Cholas (University of Madras) Page 107. |
| 7. G.O. No. 1857 dt. 4.6.1859 | : Madras (Public Works Dept.) |
| 8. Jayakumar P. | : Nagapattinam a Medieual Chola part (Essay foot note) |
| 9. The Antiquariam | : Remain in the presidency of Madras - Vol I |
| 10. மாங்குடி மருதனார் | : புறம். 335–11,12 |
| 11. மாணிக்கவாசகர் | : திருவா. – போற்றித் திருவகவல் – 164, 165 |
| 12. ——— | : பெருந்தொகை – 83 |
| 13. மீனாட்சி சுந்தரம் பிள்ளை சி. | : தி.நா.புரா. – சுந்தர விடங்கப் படலம் – 26 |
| 14. சுந்தரர் | : சுந்.தேவா. திருநாகைக் காரோணப் பதிகம் பாடல் 1,2 |
| 15. மாணிக்க வாசகர் | : திருவா. – திருத்தெள்ளேணம்–1 |
| 16. Indian Epigraphy | : Annual Report 1956-57-No, 150-169 |
| 17. ——— | : படே. வெ.பட். வரிகள் 56,57 |
| 18. ஆதிகேசவன் இரா. | : மெய்.தி.வர. – பக்.13 |
| 19. அழகுமுத்துப் புலவர் | : திறப்பு – 100–8 |
| 20, 21, 22. திருமங்கையாழ்வார் | : நாலா.தி.பிர. – பெரிய திருமொழி – பாடல் 1,4,10 |
| 23. பாரதிதாசன் | : பா.தா.கவி – 1 : 61. |
| 24. நம்மாழ்வார் | : நாலா.தி.பிர. – திருவிருத்தம் – 96 |

# 7. வணிகம், தொழில் நாகை

## அ. வணிக நாகை

நாகை வெளிநாடுகளில் பெயர் பெற்றது முதலில் வணிகத்தால் தான். பெயர் மட்டுமின்றி வளமும் பெற்றது. வெளிநாட்டுப் பயணிகள் 'வணிக அங்காடி நகர்'களில் (Commercial Market Towns) நாகையை ஒன்றாகக் குறித்தனர்.

### வணிகம், வாணிபம்

இத்துறைத் தொடர்புள்ள சொற்களை இங்குக் குறித்தல் ஒரு துணையாகும். 'வணிகம்'[1] "வாணிகம்"[2] என்னும் இரு சொற்களும் சங்க இலக்கியங்களில் உள்ளன. 'வாணிபம்'[3] என்னும் சொல்லும் பின்னர் இணைந்தது.

இப்போது ஆங்கில வழக்கிற்கேற்ப இச்சொற்களை இவ்வாறு அமைத்துக் கொள்ளலாம்.

வணிகம் – Commercial

வாணிகம் – Trade

வாணிபம் – Merchancy (வியாபாரம், வர்த்தகம்)

இவ்வாறு பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்வழிப் பாடநூல்களில் கொள்ளப்பெற்றுள்ளன. இந்நூலிலும் அவ்வாறே கொள்ளப்பெற்றுள்ளன. மேலும் 'வாணியம்' என்னும் சொல்லும் உள்ளது. இஃது எண்ணெய்த் தொழிலைக் குறிக்கும். வாணியனார் 'செக்கான்' என்று அகர முதலிகள் காட்டும். மேலும் இத்துறைப் பிரிவுகளுக்கு 'வணிபம்', 'வணியம்' என ஆக்கிக் கொள்ளலாம்.

### நீரிலும் நிலத்திலும்

நாகை, பட்டினமானபின் பூம்புகார் வணிகமெல்லாம் இங்கு அமைந்தன. ஏற்றுமதி, இறக்குமதி உள்ளூர் வாணிபம் கால்

---

1. *"அறவிலை வணிகன் ஆய்அலன்" – புறம் 132*

2. "யான் ஓர் வாணிகப் பரிசிலன் அல்லேன்" புறம் 208–6, 7

3. "வாணிபம் செய்வார்க்கு" என்று பாடவேறுபாட்டுடன் – திருக்குறள் 120

"இவளை வைத்துக்கொண்டென்ன வாணிபம்" பெரியாழ்வார் திருமொழி 3:7–9.

கொண்டன. ஏற்றுமதி இறக்குமதிகளை மதுரைக்காஞ்சி என்னும் பத்துப்பாட்டு நூல்,

"நீரினின்று நிலத்தேற்றவும்

நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்" என்று பாடும். அன்று பாடியது போன்று நாகைத் துறைமுகத்தில்,

"அளந்தறியாப் பலபண்டம்

வரம்பு அறியாமை வந்து ஈண்டின".

சங்க காலத்தில் தமிழகத்துடன் கிரேக்க, உரோம நாடுகள் வணிகத் தொடர்பு கொண்டிருந்தன. பெரிபுளூசு ஆசிரியரும் (கி.பி. 56) தாலமியும் (கி.பி. 119–161) இதனைக்குறித்தனர்.

நாகையில் கிடைத்த உரோம நாணயங்களைக் கொண்டு உரோமர் வணிகம் நாகையில் அமைந்ததை அறிகிறோம். இது கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே துவங்கிவிட்டது.

பின்னர் கீழை நாடுகளான யாவா, சுமத்திரா, இந்தோனீசியா, மலேயா, பர்மா முதலிய நாடுகளுடன் வணிகம் தொடர்ந்தது. அயல் நாட்டு வணிகங்களில் குறிப்பாக, சீனநாட்டு வணிகம் சிறப்புடையது. சீனாவிலிருந்து இந்தியாவிற்கு வரும் இரண்டு வழிகளில் கீழைக்கடற்கரையில் நாகை ஒன்று. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் யாவா முதலிய கீழை நாடுகளுக்கும் செல்ல நாகை இன்றியமையாத துறைமுகமாயிற்று.

இதற்கு முன்னரே, இரண்டாம் நூற்றாண்டில் இந்தோனீசி யாவில் ஆட்சியை நிறுவியோர் தென்னிந்தியரே. இவர் நாகைத் துறைமுகம் வழியாகவே சென்றனர். இதனாலும் அந்நாட்டு வணிகம் தொடர்ந்தது.

சீனாவிலிருந்து 'சீனா', 'சங்கு' (Chong) என்னும் கப்பல்களில் பட்டும், பீங்கான்களும் கொண்டு வந்து இறக்கி, இங்கிருந்து சில உணவுக் கூலங்களும் முத்தும் மணியும் ஏற்றிச் சென்றனர்.

## வரி நீக்கம்

இடையில் 'உல்கு' எனப்படும் ஏற்றுமதி இறக்குமதி வரிகள் அதிகமானதால் வெளிநாட்டு வணிகம் குறிப்பாகச் சீன வணிகம் குறைந்தது. பின்னர் இது சரியாயிற்று போலும். வெளிநாட்டு வணிகம் பெருகியது.

## தேவாரத்தில்

ஏழாம் நூற்றாண்டில் நாகை வந்த ஞானசம்பந்தர் நாகைக் கடற்கரையில் "வரைஆர்வன போலும் வளரும் வங்கங்கள்" (கப்பல்கள்) என்று பாடினார். மலைபோன்று பெரிய கலங்கள் பலவாக இருந்ததை அறிகிறோம். எட்டாம் நூற்றாண்டில் சுந்தரர் நாகைக்கு வந்தார். கடவுளிடம் பல பொருள்களை வேண்டியதைக் கண்டோம். மணப்பொருள்களாம் கத்தூரி, கமழ்சாந்து வேண்டினார். காம்பினோடு நேத்திரங்கள் (நேத்திரம் – கண்) என்று பார்வைக்கும், குளிர் பார்வைக்குமாகக் கண்ணாடி வேண்டினார். இவற்றை நாகையில் மட்டுமே வேண்டினார். இங்கிருந்த அங்காடியில் பார்த்துத்தான் வேண்டியிருப்பார். ஏறிச் செல்லக் குதிரை வேண்டினார். அரபிக்குதிரைகள் வந்திறங்கியிவற்றை அறிந்திருப்பார். இவையெல்லாம் இங்கு விற்கப்படுவதைக் கண்டு, கோயில் பண்டாரத்திலிருந்து பணம் கொண்டு வாங்கித் தருமாறு பாடினார். இன்றும் மணப்பொருள்களும், பட்டுத் துணிகளும், குளிர் கண்ணாடிகளும், நாகை, நாகூர் அந்தி அங்காடிகளில் இருப்பனவற்றைக் காண்கிறோம்!

பிற்காலச் சோழப் பெருமன்னன் இராசராசனுடைய (கி.பி. 985–1014) கடற்படை நாகையில் இருந்தது. அவன் மகன் இராசேந்திரன் கடாரத்தை வென்றதைக் கண்டோம். இவ்வெற்றிகள் கடற்செலவில் பெரும் வணிகத்தை நோக்கமாகக் கொண்டவை.

சாவக நாட்டு சிரீவிசய மன்னர்களது வணிகத் தொடர்பு மிகுதியாயிற்று. கி.பி. 1015 இல் இராசராசன் சீனத்திற்கு வணிகம் கருதிக் கப்பலில் தூதுவரை அனுப்பி வெளிநாட்டு வணிகத்தைப் பெருக்கினான். தொடர்ந்து 1033 இல் இராசேந்திரனும் 1075இல் முதற் குலோத்துங்கனும் சீனத் தொடர்பைப் புதுப்பித்தனர். இவற்றை வரலாற்றாசிரியர் திரு நீலகண்ட சாத்திரியார் குறித்துள்ளார் (1).

முதற் குலோத்துங்கன் காலத்தில் வெளிநாட்டு இறக்குமதியும் ஏற்றுமதியும் மிகப்பெருகின. அதற்கு வாய்ப்பாக 'உல்கு' என்னும் சுங்க வரியை அவன் அறவே நீக்கினான். இதனால் அவனுக்குச் 'சுங்கம் தவிர்த்தோன்' என்னும் புகழ்ப்பெயர் உண்டாயிற்று. இது கொண்டே அக்காலக்கட்டத்தில் வரி இடையூறாக இருந்ததை அறியலாம்.

வெளிநாட்டு வணிகத்தில் பண்டமாற்றுக் குறைந்து நாணயப் புழக்கம் உண்டாயிற்று. வெளிநாட்டுப் புழக்க நாணயங்கள் பொன்னால் அமைந்தன. சிரீவிசய மன்னர் வழி வணிகத்திலும், அறத்திலும் 'சீனக்கனகம்' என்னும் சீனநாட்டுப் பொன் நாணயம் இருந்ததை வரலாற்றாசிரியர் திரு.கே.சி. கிருச்னன் குறித்துள்ளார். (2)

கி.பி. 1777 இல் சோழ நாட்டு வணிகர் 72 பேர் ஒரு குழுவாக நாகைத் துறைமுகம் வழியே விலைமதிக்க முடியாத பொருள்களுடன் கீழைநாடுகளுக்கும் சீனாவிற்கும் சென்று வணிகம் புரிந்தனர். இது குலோத்துங்கன் 'சுங்கம் தவிர்த்ததால் நேர்ந்த நன்மை' எனலாம்.

**அலை அலையாக யானை குதிரைகள்**

11ஆம் நூற்றாண்டினரான சேக்கிழார் தம் பெரிய புராணத்தில்,

"கரிபரித்தொகை சொரிவதாம் கலத்தால்" என்று நாகைக் கடற்றுறையில் யானைகளும் குதிரைகளும் இறக்குமதியானதைப் பாடியுள்ளார். பூம்புகார் துறைமுகத்தில் யானைகளும், குதிரைகளும் பிற மதிப்பார்ந்த பொருள்களும் இறக்குமதியானமை இங்குத் தொடரப்படாமல் என்ன ஆகும்?

மேலைக் கடற்கரையில் ஏற்றப்பட்ட யானைகள், மிளகு, ஏலம், தேங்காய் முதலியனவும் அரபு நாட்டுக் குதிரைகளும் இங்கு இறக்குமதியாயின.

சேக்கிழார் நாகையைப் பற்றிப் பாடிய இரண்டு பாடல்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியவை. அவர் சோழ நாட்டு அமைச்சராகவும் இருந்தவர். எனவே, நாகையைக் கண்டே பாடினார் எனலாம்.

**"பெருமை யிற்செறி பேரொலி பிறங்கலின் நிறைந்து**
**திரும கட்குவாழ் சேர்விடம் ஆதலில் யாவும்**
**தருத லின்கடல் தன்னினும் பெரிதெனத் திரைபோல்**
**கரிப ரித்தொகை மணிதுகில் சொரிவதாம் கலத்தால்" (3)**

என்று இறக்குமதியாலும், ஏற்றுமதியாலும், வணிகத்தாலும் நாகை நகர் பேரொலி பெற்றிருந்தது என்றார். வணிகத்தில் செல்வவளம் கொழித்ததைத் திருமகள் வாழ்வதற்குச் சேர்ந்த இடம் என்றார். கடலாலும் நிலத்தாலும் அனைத்துப் பொருள்களும்

சேர்ந்தன என்பதை "யாவும் தருதலின்" என்றார். அலைபோல, யானைகளையும் குதிரைகளையும் கூட்டமாக இறக்கியதையும் குறித்துள்ளார். தொடர்ந்து,

"பீடு தங்கிய பல்பொருள் மாந்தர்கள் பெருகி"

என்றது வணிகரையே குறிக்கும். 'வாணிபத்திற்குப் பல்வகை உலகப் பொருள்களையும் கொணர்ந்தனர்' என்றும் 'அத்தகைய உலகவணிகர்களுடன் நகர் வாணிபரும் பெருகினர்' என்றும் பாடியமை வெற்று வண்ணனை அன்று. உலகப் பொருள்களெல்லாம் காணப்பட்டமையால் 'உலகைக் காணும் கண்ணாடி போல் இருந்தது' என்றதும் உண்மை வண்ணனையாகும்.

## நாகையில் பர்மா

1476 இல் பர்மாவிலிருந்து இலங்கை சென்ற வணிகர்களும், கடற் பயணிகளும் நாகையில் வணிகம் செய்தும் நகரைக் கண்டும் சென்றனர். இதனைப் பர்மா நாட்டுக் கல்யாணி நகர்க் கல்வெட்டு சொல்கிறது.

1478 இல் பர்மா அரசர் ஒருவர் 'தம்மசெட்டி' என்றொருவரை அனுப்பினார். அவர் பெயரில் 'தம்ம' என்றிருப்பதால் அவர் புத்த சமயத்தவராகலாம். 'செட்டி' என்பது அவர் வணிகர் என்பதைக் காட்டுகிறது. இஃதும் கல்யாணிக் கல்வெட்டில் காணப்படுவது. இது பாளிமொழிக் கல்வெட்டு.

### உண்மை வண்ணனை

15ஆம் நூற்றாண்டில் காளமேகம் பாடியதாகவுள்ள பாடல் ஒன்று நாகையில் நான்கு திக்கிலிருந்தும் இறக்குமதியான பொருள்களைக் காட்டியுள்ளது.

"குடக்கினில் துரங்கமும் வடக்கினில் கலிங்கமும்
குணக்கினில் பசும்பொனும் குனித்ததெற்கில் ஆரமும்
அடிப்பரப் புடைக்கலத்து அனேகவண்ண மாகவந்(து)
அஞ்சுவண்ண மும்தழைத்து அறத்தின்வண்ண மானஊர்"

(துரங்கம் – குதிரை. கலிங்கம் – ஆடை.)

என்னும் முதல் இரண்டடிகள் மேற்கில் மலையாளத்துக் கடற்கரை வழியான அரபு நாட்டுக் குதிரைகள் வந்து இறங்கியதையும், வடக்கே சீனாவிலிருந்து பட்டாடைகள் வந்திறங்கியதையும் கிழக்கு நாடுகளிலிருந்து பசும்பொன் வந்ததையும் தெற்கே பாண்டி நாட்டு

சந்தனமும் முத்தும் வந்திறங்கியதையும் காட்டுகின்றன. இவை வந்த கப்பல் அடிப்பாகம் பரந்த பரப்புடையதாக இருந்ததைக் குறிப்பதன் மூலம் மிகுதியான பொருட்களின் கொள்கலமாக அக்கலம் இருந்தது என்றார். இவைபோன்ற அழகும் வளமுமான பொருள்களுடன் "அஞ்சு வண்ணமும்" தழைத்ததையும் காண்கிறோம். இந்த "அஞ்சுவண்ணம்" பற்றிப் பின்னர்க் காணலாம்.

இவற்றை வண்ணனை என்று தள்ள வேண்டியதில்லை. பட்டினப்பாலை காட்டும் பூம்புகார்த் துறைமுகத்தில்,

**"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்**
**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்" (4)**

(புரவி – குதிரை. கால் – தரைவழி. கறி – மிளகு. ஆரம் – சந்தனம். குணகடல் – கீழைநாடு. துகிர் – பவளம். வாரி – வருவாய்.)

என்ற உருத்திரங்கண்ணனார் பாடல் அடிகளின் மறுபடிகளாக மேற் கண்ட காளமேகம் பாடல் அடிகள் இருப்பினும், இவற்றின் நிழல்கள் போல இருப்பினும், இவற்றில் உண்மை இருக்கிறது என்று கொள்ளலாம். காட்டும் பொருள்கள் 17, 18 ஆம் நூற்றாண்டு களிலும் ஆலந்துக்காரர் ஆட்சியிலும் வந்து இறங்கின.

மேற்காணப்பட்ட காளமேகத்தின் பாடலின் பின்னிரண்டு அடிகளில், 'கடற்கரையில் இறக்குமதியான சந்தனத்தைப் பெண் குரங்கு ஒன்று விறகுடன் வாரி யிறைத்தது. அதனைக் கண்ட ஆண் குரங்கு சினந்தது. பெண் குரங்கை அடிக்க எழுந்தது. எழுந்து அதன் கையை முறுக்கியது. உடனே, பெண் குரங்கு இதற்கு எதிர்ப் பாகத் தன் வாயில் அடக்கியிருந்த முத்தைக் கையில் வாங்கி ஆண் குரங்கின் மேல் வீசியெறிந்துவிட்டுப் பக்கத்திலிருந்த பாக்கு மரத்தில் மீது ஏறிக்கொண்டதாம்' என வருகிறது.

காளமேகத்தின் இஃதொரு கற்பனை வண்ணனை நயமானது; சுவையானது. ஆனாலும் சந்தனம் இறக்கிக் குவியலாகக் கிடந்தது

உண்மை. வாயில் குரங்கு போட்டுக்கொண்ட முத்தும் உண்மை யாகலாம். இது பாடலின் பிற்பகுதி.

"கடற்கரை குவித்தசந் தனத்தைஇந் தனத்துடன்
கலந்திறைக்கும் மந்தியைக் கனன்றுமுற் கவிக்குலம்
புடைப்பதற் கெழுந்துகை முறுக்கலும் முறுக்குவாய்
புதைத்தமுத்தை விட்டெறிந்து பூகம்ஏறும் நாகையே" (5)

## முத்து ஏற்றுமதி

கி.பி. 1806 இல் ஆவணக் குறிப்பு தரும் செய்தி இது:

"கொல்பேரை, மலாக்கா துறைமுகங்களுக்கு முத்துச்சிப்பி 15 தூக்கு சாமிநாத செட்டியாரின் கப்பலில் நாகூர்த் துறைமுகத்தி லிருந்து ஏற்றி அனுப்பினர். சேக் மயாரன் காதர் என்பவர் கப்பலில் முத்துச்சிப்பி 5 தூக்கு அனுப்பப்பட்டன. இவற்றின் மதிப்பு 3344 1/4 வராகன். இவற்றிற்குக் கப்பல் கூலி 5 விழுக்காடு".

இதுகொண்டு நாகூர் ஒரு துறைமுகமாக இருந்ததும் அங்கு இரண்டு தனியாருக்குக் கப்பல்கள் இருந்ததும் அவற்றில் முத்துச்சிப்பி ஏற்றப்பட்டதும் உண்மை நிகழ்ச்சிகள். சில ஆண்டுகளில் நாகூர்த் துறைமுகம் செயலற்றுப் போயிற்று.

மற்றொரு செவிவழிச் செய்தி உண்டு. 'நாகூரில் ஒரு மார்வாரி, தான் வெற்றிலை பாக்கு போடுவதற்குச் சுண்ணாம்பிற்கு மாற்றாக முத்தைச் சுட்டு நீறு ஆக்கிப் பயன்படுத்தினார்' என்பர்.

நாகைக் கடற்கரைக் குரங்கு வண்ணனையை முத்து ஏற்றுமதி உண்மையாக்குகிறது.

1676—இல் ஏகோசி மன்னர் நாகை ஆலந்துக்காரருக்கு நாகையையும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் வணிகக் குத்தகைக்கு விட்டதைத் தொடர்ந்து ஆலந்து நாட்டுப் பொருள்களும் இலங்கைப் பொருள்களும் பிற நாட்டுப் பொருள்களும் இறக்குமதி யானதுடன் சிறந்த மணப்பொருள்கள் இங்கிருந்து ஏற்றுமதி யாயின. இவற்றால் ஆலந்துக்காரரே மிகப் பயன் அடைந்தனர்.

ஆலந்துக்காரர் காலத்திலும் யானைகளும் அவர்கள் செல் வதற்குரிய மகிழ்வண்டிக்கும் விற்பனைக்குமாகக் குதிரைகளும் இறக்குமதியாயின.

## வருவாயில் அரைப்பங்கு

1770இல் திருமுல்லைவாயில் திருமுல்லையப்பர் கோயில் திருப்பணிக்கு ஏற்பாடானதை ஒரு செப்பேடு குறிக்கிறது. இதில் வாணிபர்களே தம் பங்காக மகிமை செலுத்தியதை அறிகிறோம். அச்செப்பேட்டில் கீழ்வருமாறு உள்ளது:

**"பெரியதனத்தில் வந்தகாள் கறுத்தான் மரைக்காயர்**

**..... பிற நாகூர் சிவந்தலிங்க செட்டியார் னாகபட்டணம் திருமேனி**

**செட்டியார் ........... எழுதிக் கொடுத்த வயனம் துறைமுகத்தி**

**லேற்றப்பட்ட நெல் கண்டி 100 க்கு மகமை வராகன் 1 ஆக**

**காய் ஏத்து தானியங்களுக்கு கண்டி 100க்கு வராகன் 2" (6)**

என்பதிலிருந்து இங்கிருந்து நெல்லும், கடலை, முதலிய காய்கறிகளும் ஏற்றுமதியானதை அறிகிறோம். இதில் நாகை, நாகூர் வணிகப் பெருமக்கள் பங்கு கொண்டனர்.

(வந்தகாள் — வர்த்தகாள். கண்டி — ஒருவகை நெல் அளவை)

1799 முதல் 1845 வரை வேர்க்கடலை, புகையிலை, துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாயின. சிற்றளவில் காய்கறிகளும் ஏற்றுமதியாயின.

### கலங்கள்

1821—இல் இரண்டாம் சரபோசி மன்னன் காலத்தில் ஒரு கப்பல் வாங்கப்பட்டுக் கல்கத்தாவிலிருந்து நாகைத் துறைமுகத்திற்கு வந்தது. மேலும் 1838இல் இச்சரபோசி மன்னரே இரண்டு கப்பல்களை வாங்கி அவற்றிற்குப் 'பிரகதீசுவரர்', 'பிரசாத்' எனப் பெயர்களிட்டு வணிகத்திற்குப் பயன்படுத்தினார். இக்கப்பல்கள் ஆங்கிலருக்கு வணிகத்திற்காக 6000/— உருவா வாடகைக்குக் கொடுக்கப்பட்டன. ஆங்கிலர் சார்பில் சேம்சு உரோசு (James Rose) என்பார் இதனைப் பெற்றவராவர்.

## பெற்றார் குடியும் ஏறியது

இக்காலக் கட்டத்தில் அரிசி, தேங்காய், ஆடுகள் முதலியவற்றுடன் மிளகு, ஏலம் முதலியவை ஏற்றுமதியாயின. ஆங்கில நாட்டுப் பொருள்கள் விற்பனைக்காக இறக்குமதியாயின.

"சாராயக் குப்பிகள் பத்தை நாகூர் பந்தர்
தெற்கிலிருந்து வடக்கே கொண்டு செல்ல வரியாக
வெள்ளிப்பணம் ஆறு" பெற்றதை ஓர் ஆவணம் காட்டுகிறது.

ஆங்கிலேயர் ஆட்சியில் நாகையில் துறைமுக அலுவலகம் (Port Office) அமைக்கப் பெற்று மலேயா, சிங்கப்பூர், பர்மா முதலிய நாடுகளுக்குப் பயணிகள் கபபலும் சரக்குக் கப்பலும் விடப்பட்டன. இதனால் ஏற்றுமதி இறக்குமதிகள் பெருகின எனலாம்.

வெங்காயம், மிளகாய், மஞ்சள் முதலியவைகளுடன் கைத்தறித் துணிகள், சில்லறையான அப்பளம், வடாம் முதலியவைகளுடன் பதிப்பான நூல்களும் ஏற்றுமதியாயின. இதில் தனியார் சிலரும், நாகபட்டினம் வணிகக் குழுமத்தாரும் (Nagapattinam Chamber of Commerce) பங்கு கொண்டனர். இறக்குமதியான கோதுமை, மூட்டைகளும் உர மூட்டைகளும் சிறு சிறு குன்றுகள் போலக் கடற்கரையின் வெளியிடங்களில் குவித்து வைக்கப்பட்டன.

## ஆடுகள் குதித்தன

ஓர் இலக்கியச் செய்தியை இங்குப் பொருத்திப் பார்க்கலாம். பூம்புகாரில் இறக்குமதியாகி உல்கு கட்டப்பட்டதன் குறியாக,

"புலி பொறித்துப் புறம் போக்கி

மதிநிறைந்த மலிபண்டம்

பொதி மூடை"கள் போர் போலக் குவிந்து கிடந்தன. 'இப்போர் மீது வரையாடுகளும் நாய்களும் தகராடுகளும் ஏறிக்குதித்து விளையாடின' என்று பட்டினப்பாலை (7) அறிவிக்கிறது. இக்காட்சி 1800 ஆண்டுகளுக்குப் பின்னர் நாகைக் கடற்கரையில் நிகழ்ந்ததை நான் கண்டு மகிழ்ந்தேன். மேலே குறிப்பிட்ட கோதுமை, உர மூட்டைப் போரின் மேல் ஆடுகளும் குட்டிகளும் ஏறி ஓடிக் குதித்தன.

சங்க இலக்கியங்களின் வண்ணனை வெற்று அளப்பு அன்று. உண்மையின் மெருகுவடிவமாகும் என்பதை இதனாலும் உணரலாம்.

இவ்விவரங்களினால் கி.மு. முதல் கி.பி. 20ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து கால இடைவெளியின்றி நாகையில் வெளிநாட்டு வணிகம் நிகழ்ந்தது என்பதை அறியலாம். உள்நாட்டுக் கடைக்காரர் வாணிபமும் தொடர்ந்து நிகழ்ந்தது; நிகழ்கிறது.

இன்றும் நாகை அந்திக்கடையிலும் நாகூர் தர்கா அண்டையிலுள்ள கடைகளிலும் வெளிநாட்டுப் பொருள்கள் சிலராலும், வெளிநாட்டுப் பொருள்கள் என உள்நாட்டுச் சரக்குகள் பலராலும் விற்கப்படுகின்றதைக் காணலாம்.

நாகையிலிருந்து குறிப்பாக வெங்காயம் மிகுதியாக ஏற்றுமதியாயிற்று. சோவியத்து நாட்டிற்கும் நாகை வெங்காயம் வழங்கியது. இப்போதும் வெங்காய ஏற்றுமதி உண்டு.

'இறால்' என்னும் பழுவகை மீன் வணிகம் மிகுதியாக நிகழ்கிறது. வெளிநாட்டிற்கும் இது செல்கிறது. மீனவர்களால் நாள்தோறும் பிடிக்கப்படும் பலவகை மீன்களும் நாகை நகரிலும் அண்டை மாவட்டங்களிலும் விற்பனையாகின்றன. மீனைக் காயவைத்துப் பக்குவப்படுத்திய 'கருவாடு' விற்பனையாகிறது; ஊருக்குள் கூவியும் விற்கப்படுகிறது.

### பேட்டை

அங்காடியாகக் கூடி மொத்தமாகப் பொருள்களை வாணிபம் செய்யுமிடம் பேட்டை எனப்பெறும். இவ்வகைப் பேட்டைகள் இரண்டு நாகையில் இருந்தன. இப்போது பெயரளவில் உள்ளன. ஒன்று அக்கரைப்பேட்டை. இது கடற்கரையிலேயே உள்ளது. இங்கு மீன் மொத்த வணிகம் நிகழ்ந்தது. இப்போதும் கடலிலிருந்து படகில் மீன்கள் கொணர்ந்து இறக்கப்பட்டதும் கூடை கூடையாக ஏலத்தில் விற்கப்படுவதும் உண்டு. மற்றொன்று அந்தோணிப்பேட்டை. இது நகர்க்குப் புறத்தில் மேற்கே 1 கி. மீட்டரில் வேளாங்கன்னி சர்ச் சாலையில் உள்ளடக்கமாக உள்ளது. இங்குப் புடவைகள் மொத்தமாக விற்கப்பட்டன.

## ஆ. வணிகத்தில் பொருள் மாற்று முறை

### அஃக விலை

வணிகம் நாட்டுப் பொருளியலுக்கு அடிப்படையானது. பொருள் என்பது பொன், வெள்ளி முதலியனவாகவும் இருக்கலாம். பண்டங்களாகவும் இருக்கலாம். தம்மிடம் உள்ள ஒரு பண்டத்தை மற்றவருக்குக் கொடுத்து அவரிடமுள்ள பண்டத்தை மாற்றாகப் பெறுவது 'பண்டமாற்றம்' எனப்பெறும்.

மிகத் தொன்மைக் காலத்தில் பண்டமாற்று முறையே நாட்டில் இருந்தது. தொடக்கக் காலங்களில் பண்டமாற்றிற்கு முதற்பண்டமாக நெல்தான் பயன்பட்டது. நெல் கொடுத்துப் பொன்னையும் பண்டங்களையும் பெறுதல், பொருளும் பண்டமும் கொடுத்து நெல் பெறுதல் என்று பண்டமாற்று தொடங்கியது.

இப்போதும் நாம் விலையமைப்பை 'அகவிலை' என்கிறோம். 'அகவிலை' என்பது விலையமைப்பிற்கு ஓர் அளவுகோல். அஃகம் விலை அஃகவிலை – அகவிலை என்றாயிற்று. 'அஃகம்' என்றால் நெல்லைக் குறிக்கும். நெல்லின் மதிப்பை வைத்துப் பிற பொருள் மதிப்பிடப்பெற்றமையால் 'அகவிலை' ஆயிற்று. எனவே முதல் பண்டமாற்று நெல்லில் துவங்கியது. இக்காலத்தும் நெல் அறுப்போர் நெல்லைக் கடையில் கொடுத்துச் சமையல் பொருள்களை நாகைப் பகுதியிலும் வாங்குகின்றனர்.

இப்பண்டமாற்று வெளிநாட்டு வணிகத்திலும் நடந்தது. நாகை வணிகத்திலும் பண்டமாற்று வணிகத்தைக் கீழை நாட்டினரும் சீனரும் நடத்தினர்.

## காசும் பணமும்

காலப்போக்கில் பண்ட மதிப்புகளை ஒரு சீராகக் கொள்ள இயலாததால் நாணய முறை வந்தது. தமிழகத்தில் 'காசு' என்னும் நாணயம் தோன்றியது. 'காசு' என்னும் சொல்லுக்கு' 'மணி' என்பது முதற் பொருள். *அது பொன்னால் செய்யப்படும் மணி.* அம்மணி முன்னர் உருண்டையாகக் காது வைக்கப்பட்டிருந்தது. பின்னர் தட்டை வடிவமாயிற்று. நாணிலோ, கம்பியிலோ கோக்கும்படி காது வளையம் வைக்கப்பெற்ற காசுக்கு ஆயிற்று. இக்காசைக் கிளி மூக்கில் கொண்ட வேப்பம்பழத்திற்குக் குறுந்தொகை உவமையாகக் கூறுகிறது. (8)

பசும்பொன்னாலான வட்ட வடிவக் காசு கோக்கப்பட்ட மாலையை ஐங்குறுநூறு,

**"பொலம்பசும் பாண்டில் காசுநிரை அல்குல்"** (9)

என்று கூறுகிறது. (பாண்டில் – பட்டம்)

பொன்னாலும் பின்னர் வெள்ளி, செப்பு, பித்தளை, ஈயம், தோல் முதலியவற்றாலும் தமிழகத்தில் காசுகள் தோன்றின.

**"நெஞ்சே உனையோர் காசா மதியேன்"** (10)

என்று தாயுமானவர் நெஞ்சை இழிந்த நாணயமாகப் பாடினார்.

இவ்வாறு நெல்லும் நாணயமும் (காசும்) வணிகத்திற்கு மாற்றல் பொருள்க ளானமையால் இரண்டையும் விரைந்து தேடிக்கொள்ள வேண்டும் என்று அவ்வையார்,

"அஃகமும் காசும் சிக்கெனத் தேடு" (11) என்றார். இவ்வறிவுரை பண்டமாற்றையும் நாணய மாற்றத்தையும் குறிப்பாக அறிவிக்கிறது.

காசுடன் பின் 'பணம்' என்பதும் சேர்ந்தது. பணம் பாம்புப் படம் போன்றது என்னும் பொருள் கொண்டது. இப்போதும் 'காசு', 'பணம்' என்பது வழக்கு.

## நாணயத் தோற்றம்

உலகில் கி.மு. 8ஆம் நூற்றாண்டில் லிபியா நாட்டு மன்னன் கிரிசசு (Croesus) என்பான் முதன்முதலில் நாணயத்தை வெளியிட்டான். இது பொன்னிலும் வெள்ளியிலும் வந்தது. பின் பிற உலோகங்களிலும் வந்தது. கி.மு. 2ஆம் நூற்றாண்டில் நிக்கலில் வந்தது.

நாகையில் வெளிநாட்டு நாணயமாக உரோமப் பொன் நாணயங்கள் கிடைத்துள்ளன. உரோமப் பொன் உயர்ந்ததாக இருந்ததால் தமிழர் அதனை உடைமை (சொத்து) யாகச் சேர்த்தனர்; புதைத்தும் வைத்தனர். விந்திய மலைக்குத் தெற்குத் தமிழத்தில் உரோமத் தங்க நாணயம் புதையல்களாகக் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று நாகைப் புதையல். புதையல் அன்றிச் சிதறலாகவும் நில அகழ்வில் கிடைத்துள்ளன. எனவே, நாகை வணிகத்திற்கு உரோமப் பொன் நாணயம் பயன்பட்டதை அறியலாம்.

பின்னர் சீனநாட்டுச் 'சீனக்கனகம்' என்னும் பொன் நாணயம் நாகையில் புழக்கமாயிற்று. வணிகத்தால் வந்தவை இவை.

முற்காலத் தமிழக மன்னர்களால் நாணயங்கள் பல உலோகங்களால் அவரவர் குறியீட்டு முத்திரையிடப் பெற்று வெளிவந்தன. புழங்கின.

பிற்காலச் சோழன் இராசராசப் பெருமன்னன் ஆட்சி நாணயங்கள் ஒரு பக்கம் நிற்கும் அரசன் குறியுடன் மறுபக்கம் சோழர் சின்னமாகிய புலி பொறிக்கப்பெற்றவை. இராசேந்திரன் ஆட்சி நாணயங்கள், படுத்த புலி பொறிக்கப்பட்டவை, முதற் குலோத்துங்கன் ஆட்சி நாணயங்கள் புலி, வில், மீன் ஆகிய மூன்று முடி மன்னர் சின்னங்களும் ஒரு சேரப் பொறிக்கப் பெற்றவை. இக் குலோத்துங்கன் வெளியிட்ட காசு ஒன்றில் 'சு' என்னும் எழுத்து ஒன்று குறிக்கப்பெற்றுள்ளது. இது குலோத்துங்கன் சுங்கம் தவிர்த்தவன் என்பதன் அறிகுறிப் பதிவாகும். இவையனைத்தும் நாகை

வெளிநாட்டு வணிகத்திலும் உள்ளூர்வாணிபத்திலும் புழக்கத்தில் இருந்தன.

## கழஞ்சு முதலியன

நாணய அளவுச் சொற்களாகக் 'கழஞ்சு' (50கிராம் எடை), 'மஞ்சாடி' (5 கிராம் எடை) அளவுகள் வழங்கப்பெற்றன. பின் 'வராகன்' (வராகம் – பன்றி) என்னும் பன்றி பொறித்த கன்னட நாணயம் முதலில் வந்து பின்னர் பொன்னிலும் பல்வகை வராகன் என வந்தது.

நாகையில் நாணயங்கள் அச்சிட்ட தொழிலகம் மதுரை நாயக்கர் காலத்தில் இருந்துள்ளது என்கிறார் புலவர் சே. இராசு அவர்கள். (12)

மராத்தியர் காலத்தில் பணம், சக்கரம், வராகன் முதலியன வெளிவந்து நாகை நகரில் புழக்கமாயின. பின்னர் இவற்றுடன் போர்த்துகீசியர் கி.பி. 1500 கள்ளிக்கோட்டையில் நாணயவார்ப்புத் தொழிலில் அச்சேற்றிய நாணயம் நாகையில் புழக்கமாயிற்று. பின்னர் ஆலந்துக்காரர் பழவேற்காட்டிலும், நாகையிலும் நாணயத்தை அச்சிட்டனர்; நாகையில் அத்தொழில் அமைந்த இடந்தான் இன்றும் நாணயக்காரத்தெருவாக உள்ளது. அச்சடிப் பதை மராத்தியர் தம் மொழியில் 'கம்பட்டம்' என்றனர். இதனை அச்சேற்றும் உரிமையை ஆலந்துக்காரருக்கே பங்குத்தொகை வருவாய் வழங்குமாறு ஒப்படைத்தனர்.

இந்நாணயங்களின் ஒருபுறம் திருமால் உருவமும், மறுபுறம் 'தேவநாகப்பட்டின' என்னும் புகழ்ச் சொல்லும் இடம் பெற்றன. 18ஆம் நூற்றாண்டளவில் நாகைப் பெருமாள் கோயில் கோபுரம் பொறிக்கப் பெற்றது.

நாகை நாணயக்காரத் தெருக் கம்பட்டத்தில் தங்கக் காசுகளாகக் கீழ்வரும் 5 காசுகள் அச்சாகிப் புழக்கத்தில் அமைந்தன. காலவாரியாக,

பொன்காசு

| | |
|---|---|
| 1. கி.பி. 1662 – 1677 | .. பரங்கிப்பேட்டை வராகன் |
| 2. கி.பி. 1676 | .. தஞ்சாவூர்ப் பணம் |
| 3. கி.பி. 1693–1694 | .. ஒற்றைப்பணம், இரட்டைப்பணம் |
| 4. கி.பி. 1747 – 1781 | .. நாகபட்டினம் வராகன் |
| 5. கி.பி. 1781 | .. நாகபட்டினம் 'ஃச்காட்' வராகன் |

## வெள்ளிக்காசு

கி.பி. 1675 .. 'ஃரூவட் பெரிய பணம்

நாகை நாணயக்காரத் தெரு நாணய அச்சடிப்புத் தொழிலகத்தில் 'பணக் கம்பட்டம்' என்றும் 'வராகன் கம்பட்டம்' என்றும் இரண்டு வகைப் பகுதிகள் இருந்தன.

செப்புக் காசுகளாக நாகரி எழுத்துப் பொறிக்கப்பெற்ற காசுடன் தமிழ்ப்பெயர் பொறிக்கப்பெற்ற 1, 2, 4, 10, 15 காசுகள் மதிப்புள்ளவை வெளிவந்தன. ஈயக்காசுகளும் தமிழ் எழுத்துப் பொறிக்கப்பெற்று வெளிவந்தன.

இவற்றில் ஒன்றிரண்டு போக பிற நாகையில் புழக்கமாயின. ஓரளவில் உள்நகர்ப் புழக்கத்திலும் பயன்பட்டன.

ஆங்கில ஆட்சியில் அவர் பாங்கில் நாணயங்கள் அவர் நாட்டில் முதலில் அச்சேறி வந்தன. அவர்தம் வணிக நிறுவனத்தைத் துவங்கிய போது ஆங்கில ஆட்சியர் முழுமையாக 994 நாணய வகைகளை வெளியிட்டனர். *அவர்தம் நாணயங்களில் முதலில் விக்டோரியா* பேரரசியின் மார்பளவு உருவமும், பணத்தின் மதிப்பும் பொறிக்கப்பெற்றன. பின்னர் பிற பொருள் உருவங்கள் இடம் பெற்றன. அவ்வப்போது ஆண்ட மன்னர் தலை உருவம் பொறிக்கப்பெற்றது.

## பணத்தாள்

ஆங்கிலர் இந்திய ஆட்சியைப் பிடித்ததும் இந்திய நாடு முழுமையுமாக Rupee என்னும் அளவையிடப் பெற்ற நாணயங்கள் வந்தன. அதனையே நாம் 'உருவம்' பொறித்த நர்ணயமாகவும் கருதி 'உருவா' என்கிறோம்.

சில்லறைகளாக ஓர் உருவாவுக்குக் கீழ் உள்ளவற்றைக் 'காசு' என்கிறோம். அவை, நாணயங்களாகவே வந்தன. பொன்னும், வெள்ளியாலும், பித்தளையாலும், தாம்பிரத்தாலும் புதிய நிக்கலாலும் ஆன நாணயங்களும் வந்தன.

பெரும் மதிப்புள்ள ஓர் உருவாயும் அதற்கு மேலும் தாளில் அச்சிடப்பெற்ற 'தாள்பணம்' வெளிவந்தது. அஃதும் புழக்கமாயிற்று. உருவா 1000 பெறும் தாளும் வந்தது.

இவற்றுடன் நாகையின் வெளி வணிகத்தில் அமெரிக்கத் தாள் பணமும் பழக்கமாயிற்று.

ஆலந்தார் காலத்தில்தான் தமிழில் காசு அச்சிட்டனர். ஆங்கிலர் காலத்தில் பிறமொழிகளுடன் தமிழும் இடம் பெற்றது. 'நாகப் பட்டினக் காசு'என்னும் பெயரிலும் ஆலந்தாரே வெளியிட்டனர்.

ஆலந்தாரே பித்தளையில் நாணயம் வெளியிட்டனர். அது 'நாகூர்ச் சல்லி' எனப்பெற்றது. நாகூர் பெயரிலும் அவர்களாலேயே வெளியிடப் பெற்றது.

"நாகப்பட்டினம் வராகன்" என்று அச்சிடப்பெற்ற பணத்தின் மதிப்பு,

"நாகப்பட்டினம் வராகன் 15உக்கு ஒன்பது.

சக்கரம் 2.4 5/8 வீதம் சக்கரம்.

35.9 5/8 என்றும் மோடி ஆவணம் ஒன்றால் அறிய முடிகிறது. இம்மதிப்பீடு நாகையிலும் கணக்கில் கொள்ளப்பட்டது.

### பண்ட சாலைகள்

ஒல்லாந்தர் காலத்திற்கு முன்னரே பிற்காலச் சோழர் காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ளூர் வணிகருடைய பண்ட சாலைகள் இருந்தன. பையப்பைய அவை வளர்ந்து முதற் கடற்கரைச் சாலையிலும் இரண்டாம் கடற்கரைச் சாலையிலும் முழுமையாகப் பண்டசாலைகளே அமைந்தன. இவற்றின் துணையால் பல்வகை யாரும் ஊக்கத்துடனே முனைப்பாக ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்து நாகையை வளப்படுத்தி வருகின்றனர்.

நாகை தன் வணிகத்தையும் உள்ளூர் வாணிபத்தையும் பண்ட மாற்றை ஓரளவாகக் கடைப்பிடித்தும் நாணயம் கொண்டும், நாணயமாக நடத்துகின்றது.

பொதுவில் மக்களின் அன்றாட வாழ்க்கை என்பது நாணயமும், தாள்பணமும் இன்றி இல்லை.

நாகை தொடர்ந்து, தான் வணிகத்திற்குத் துணையாக நின்றும், வாணிகத்தைத் துணையாகக் கொண்டும் சிறந்தது; சிறக்கின்றது.

## இ. நாகையில் வணிக வாணிபப் பெருமக்கள்

பயன்படு பொருள்கள் உடல் என்றால் அவற்றிற்கு உயிரூட்டு பவர் வணிகர். வணிகத்தால் அவர் பெயர் பெறவில்லை. அவர் செய்வதால் வணிகம் பெயர்பெற்றது. வணிகத்தாலும்

வாணிபத்தாலும் வணிகரும் வாணிபரும் நாட்டுப் பொருளியலை நிலைநாட்டுகின்றனர்; நுகர் பொருளுக்கும், பயன்படுத்தும் மக்களுக்கும் வணிகர் ஒரு பிணைப்புச்சரடு ஆவார். நேர்மையான வணித்தால்தான் பொருள் சமப்படுகிறது.

## வணிகர் குணநலன்கள்

அவர் யார் நேர்மையான வணிகர்? அவருக்கு இலக்கணம் வகுத்துத் திருவள்ளுவர் அறிமுகம் செய்துள்ளார். அவர் பிறர் பொருளையும் தம் பொருள்போலக் கருதிச் செயற்படுபவர். இதனைக் 'கொள்வது மிகையும் கொடுப்பது குறைவும் இல்லாதவர்' என்றார் உரையாசிரியர் பரிமேலழகர். அவர்தாம் வணிகர்; அவரிடந்தான் வணிகம் உயிரோட்ட முள்ளதாயிருக்கும். இதனைத் திருவள்ளுவர்,

"வாணிபம் செய்வார்க்கு வாணிபம் பேணிப்

பிறவும் தமபோற் செயின்" (13) என்றுகூறி வணிகர்க்கு இலக்கணம் படைத்தார். இதனை நடுவுநிலைமையில் வைத்து வணிகரை நடுவராக்கினர்.

இவ்வாறான நேர்மையானவரின் செயற்பாட்டிற்கு – தொழிலுக்கு நன்றியாக நாம் ஒரு கைம்மாறு செய்கிறோம். அதுதான் வணிக ஊதியம் (இலாபம்) எனப்படுவது. முறையாகச் செய்யாதவர் தாமாகவே இந்தக் கைம்மாற்றை இழக்கிறார். இதுதான் இழப்பு (நட்டம்) எனப் படுகின்றது.

வணிகர் உழைப்பும் அறிவு நுணுக்கமும் உடையவர். அவர் விற்பனைக் கூடத்தில் அமர்ந்து பொருள் நுகர்வோர்க்கு நேரடியாகப் பொருளைக் கொடுப்பது வாணிபம் (வியாபாரம்). அவரே பொருளை விற்பனைக்குப் பெறத் தொகுக்கும் போதும் மொத்தமாகத் தரும்போதும் வணிகம் செய்த வணிகர் ஆகிறார். வணிகர் ஒருவராகவும் இருக்கலாம்; பலராகவும் இருக்கலாம்; கூட்டு சேர்ந்த நிறுவனத்தாராகவும் இருக்கலாம்.

எவ்வாறாயினும் அவர் தனிப்பட்டவர் என்னும் வகையில் எட்டு குணங்களைப் பெற்றிருப்பார் – பெற்றிருக்க வேண்டும் என்று 'பிங்கலம்' என்னும் சொற்களஞ்சிய நூல் கூறியுள்ளது. அவை எட்டும் இவை:

1. தனிமை ஆற்றல், 2. வெறுப்புக் கொள்ளாமை, 3. செய்யத் தக்க இடம் தெரிந்து செய்தல், 4. நேரத்தில் செயலாற்றல், 5. எதிர்

காலத்தில் நேர்வதைத் தெரிந்து கொள்ளுதல், 6. பெரும் இழப்பு வந்தாலும் அஞ்சாது மேலும் முயலுதல். 7. பொருளை ஈட்டுதல், 8. இல்லத்தார்க்கும் உறவினர்க்கும் பகுத்துக் கொடுத்தல்.

இவற்றை உடையோரை "வாட்டம் இல்! சிறப்பினை உடையவர்" என்கிறார்.

இவற்றை நாகை வாழ் வணிகர்களுடன் நினைவில் கொண்டு நாகைப்புராணம் பாடிய பிள்ளை அவர்கள் நாகை வணிகப் பெருமக்கள்,

"புனித இவ்விருநாற் குணங்களும் பொருந்திப் பொற்புற ஒழுகுவார்" (15) என்றார். மேலும் நயமாக வணிகரைச் செவிடர், குருடர், ஊமையர், என்றார். கமுக்கமான செய்திகளைப் பிறர் கூறினால் காது கொடுக்காமல் செவிடராகி விடுவர். பிறர் மனைவியர் அழகைப் பார்க்காத குருடராம்; எவரும் புறங்கூறினால் அதனை எதிர்த்துப் பேசாத ஊமையராம். (16) இவ்வாறு குறையால் நிறை சொன்னார்.

மேலும் பொதுக் கல்வியைக் கற்கும் போதே வணிக் கல்வியும் கற்பாராம். பொருளை ஈட்டும் போதே அறத்தையும் ஈட்டுவாராம். பகுத்துக் கொடுக்கும்போதே சற்று ஊதியத்தோடும் கொடுப் பாராம்.(17) இறுதியில் சொன்னது ஒரு பகடியான உண்மை. முன்னோர் பனம்பழம் அளவு அமைத்த அறக்கட்டளையைத் தினை அளவில் செய்து அந்த அறத்திலும் ஊதியம் சுருட்டும் வாணிபர்களைப் பிள்ளையவர்கள் பார்த்திருப்பார்கள் போலும்.

நல்ல நேர்மையான நாகை வணிகரும் தனிப்பட்டவராகப் பொருளீட்டி நாகைக்கும் பிற ஊர்களுக்கும் அறம் செய்த சிலரை மக்கள் நாகையில் கண்டோம். திருமேனி செட்டியார் போன்றோர் பலர் இடைக்கால அளவில் வணிகர் செட்டிமார் எனப்பெற்றனர். அவ்வகைச் செட்டிமார் நாடெங்கிலும் இருந்தனர். நாகையிலும் பலர் இருந்தனர்.

## வணிகக்குழு

தனி வணிகம் போன்று கூட்டு சேர்ந்து செய்யும் கூட்டு வணிகம் முற்காலத்திலேயே தமிழகத்தில் நிகழ்ந்தது. தனி வாணிபத்தை மேற் கொண்ட போதும் நகர்விட்டு நகர் செல்ல நேரும்போதும் தமிழ் நாட்டிற்குள் நாடு விட்டு நாடு செல்லும்போதும் துணைகருதியும்,

வழிப்பறிக் கொள்ளையர் (ஆறலைக் கள்வர்) கருதியும் கூட்டமாகச் சென்றனர். இக்குழு 'சாத்து' எனப்பெற்றது.

நெல், உப்பு முதலிய பொருள்கள் பல வண்டிகளிலும் கழுதைகள் மேலும் சாரிசாரியாகப் போயின. இதுபோன்ற உப்பு வணிகர் குழு 'உமண்சாத்து' எனப்படும். இத்தகைய 'உமண்சாத்து' நாகை உப்பளத்திலிருந்து போனது. விளைந்த உப்பைக் கொடுத்து நெல், பயிறு முதலியவற்றைப் பண்டமாற்றமாகப் பெற்று வந்தது. இச் 'சாத்து' என்பது சிற்றூர்களிலுள்ள வணிகர் கூட்டாக அமைந்து உள்நாட்டில் பரவலாகச் செய்ததுடன் வெளிநாட்டிற்கும் சென்றது.

இதுபோன்று வேறு பொருள்களைக் கொண்டு வணிகம் செய்யும் 'சாத்து' இருந்தது. 'சாத்து' என்னும் பொதுச்சொல் கூட்டான வணிகத்தைக் குறிக்கும். மிளகுப் பொதிகளைக் கழுதைகளின் மீது ஏற்றிச் செல்வர். இதற்கு 'உல்கு' என்னும் சுங்க வரியும் விதிக்கப்படும். இதனைப் பெரும்பாணாற்றுப்படை,

"கழுதைச் சாத்தொடு வழங்கும் உல்குடைப் பெருவழி" (18) என்று காட்டுகிறது.

மக்களின் பல்வகையான பெயர்களைத் தொல்காப்பியம் பட்டியலிடுகிறது. அவற்றில் ஒன்று "குழுவின் பெயர்" (19). இப் பெயருக்கு எடுத்துக்காட்டு தந்த உரையாசிரியர்கள் "வணிகக் கிராமத்தார்" என்று காட்டினர்.

இவ்வகையில் 'மணிக்கிராமத்தார்' என்றொரு வணிகக் கிராமத்தார் இருந்தனர்.

நாகையிலிருந்து வணிகக் குழுவினர் கீழை நாடுகளுக்கும் சீனாவிற்கும் சென்று வணிகம் செய்தனர். அவ்வாறு சென்ற வணிகர் யாவாவில் ஒரு பகுதியில் குடியமர்ந்து வணிகம் செய்தனர். அப்பகுதி ' நாகபட்டினம்' என்னும் ஊர் ஆயிற்று. இன்றும் அப்பெயரில் உள்ளது.

மன்னர் இராசராசனும் இராசேந்திரனும் கலங்களில் நாகைத் துறைமுகத்திலிருந்து சீனாவிற்கு வணிகத் தூதுவர்களை அனுப்பினர்.

பல திசைக்கும் செல்லும் வணிகக் குழுவொன்று அந்நாளில் இருந்தது. இது திசையாயிரத்து ஐந்நூற்றுவர் குழு என்னும் சிறப்புப் பெயர் பற்றது. முதற்குலோத்துங்கன் காலத்தில் இக்குழு பல நாடுகளுக்கும் பல

பிரிவுக் குழுக்களாகச் சென்றது. இதனைக் குலோத்துங்கன் காலத்தின் கி.பி. 1080ஆம் ஆண்டுக் கல்வெட்டு காட்டுகிறது. இவ்வாறெல்லாம் இடையூறு இன்றிச் செய்யக் குலோத்துங்கன் 'உல்கு' என்னும் சுங்க வரியை நீக்கியது பெரும் வழி வகுத்தது. இன்னோர் வெளிநாடுகளில் குடியேறியும் அமர்ந்தனர்.

உலகில் பிற்காலத்தேதான் — அஃதாவது கி.பி.16இல்தான் மேலைநாட்டார் 'கிழக்கிந்தியக் கம்பெனி' அமைத்து அரசு உதவியுடன் வணிகம் செய்து வந்தனர்.

கூடி வணிகம் செய்யும் 'கூட்டுறவுத்துறை' கூட 1904இல் தான் உருவாயிற்று. தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இவ்வகைக் குழுவை வணிகர் அமைத்தனர். நாகையும் இதில் பங்கு கொண்டதாகிறது.

## பலபட்டடை

பல கூலங்களை வைத்து வணிகம் செய்வது 'பலபடடடை' எனப்பெற்றது. அக்காலத்தில் மளிகைப் பொருள்களும் பிற நுகர் சரக்குகளும் கொண்ட கடைகளின் ஒட்டு மொத்தப் பெயர் இந்தப் பல பட்டடை என்பது. இவ்வாறு வணிகம் செய்த தமிழ்ப் புலவர் ஒருவர் 'பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்' எனப் பெயர் பெற்றார்.

இப்பலபட்டடையார் செட்டி மக்களாக இருந்தனர்; இசுலாமிய ராகவும் இருந்தனர்.

தஞ்சாவூர் கொங்கணேசுவரர் கோயில் செப்பேட்டில்,

"பல பட்டடைச் செட்டியார் வற்த்தகாள்

துலுக்கர்லெப்பை பதினெட்டுப் பட்டடை

வற்த்தகாள் அனைவரும்" (20) என்றுள்ளது. இன்னார் செட்டிக் குழுவினர், 18 வகை இசுலாமியக் குழுவினர். இக்குழுக் களில் நாகை வணிகர் இருந்தனர். இஃதும் ஒரு வணிகக் குழு வாகும். இன்னோர் உள்நாட்டில் வணிகம் புரிவோர். பல பட்டடைப் பேட்டை என்றொரு அங்காடி கூடும் வணிகக் களம் உண்டு.

நாகையில் வணிகக் குழுவாக அமைந்து வெளிநாட்டிற்குச் சென்றதுபோல் மேலைக்கடற்கரைக் கொல்லத்திலிருந்து வணிகக் குழுவினர் நாகைக்கு வந்து வணிகம், வாணிபம் செய்தனர். இன்னோர் கொல்லம் கொல்லாப்பூரிலிருந்து வந்தோர். அப்பெய

ராலேயே குழுவினராக வணிகம் செய்தனர். நாகையிலேயே இன்னோர் ஒரு பகுதியில் குடியமர்ந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. இதனை மன்னர் இராசராசன், இராசேந்திரன் காலக் கல்வெட்டுக்கள் (21) காட்டுகின்றன.

## கடலில் அறம்

கீழைநாட்டு வணிகத்திற்குச் சென்றோர் கூட்டாகவும் சென்றனர். தனியாகவும் சென்றனர். பூம்புகார் கம்பளச் செட்டி என்பவன் தன் தனிக் கப்பலில் வணிகத்திற்குச் சென்றவன். 'வணிகக் கப்பல்' என்று கூட்டாகச் செல்லும் கப்பல் வணிகம் உண்டு.

மணிமேகலையில், பூம்புகார் நகரைச்சார்ந்த சாதுவன் என்னும் செட்டி,

"வங்கம் போகும் வாணிகர் தம்முடன்" (22) தன் தனி வணிகத்திற்குப் போனான் என்று காண்கிறோம். இதுபோன்றே அமுதசுரபி என்னும் உணவு வழங்கும் பாண்டத்துடன் 'ஆபுத்திரன்' என்பான் சாவக நாட்டிற்குச் சென்றான். அவனும்,

"வங்க மாக்களொடு மகிழ்வுடன் ஏறிச்" (23) சென்றதை அக்காப்பியம் காட்டுகிறது. கடலில் வணிகத்திற்குச் செல்லும் குழுவினரை 'வங்கமாக்கள்' என்றது மணிமேகலை.

இவற்றின் மூலம் மற்றொன்றையும் காணலாம். ஆபுத்திரன் அறம் செய்யச் சென்றான். அவனை வணிகர் ஏற்றிச் சென்றமை வணிகத்தோடு அறத்திற்கும் உதவியதைக் காட்டுகிறது.

நாகை, நாகூர் நகரங்களில் வணிகக் குழுவினர் இருந்தனர். அன்னோர் அறமும் செய்தனர்.

"கும்பகோணம் ஆதி கும்பேசுவரர் கோயில்

சீரணோர்த்தாரணம் செய்ய நாகூர் வகையறா வணிகர்களிடம்

இருந்து யாசகம் செய்தது ரூ. 2000/–" என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது.

## நாகை வணிகக் குழுமம்

நாகையில் இக்காலத்தும் வணிகக்குழு தோன்றிச் செயலாற்றியது. நாகபட்டினம் வணிகக்குழுமம் (The Nagapattinam chamber of commerce) என்னும் பெயரில் பல வணிகர்களைக் கொண்ட குழுமம் ஒன்று ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தில் நன்கு செயலாற்றி நாகைக்கு வணிக வளம் தந்தது.

இதுபோன்று உள்ளூர் வாணிபர்கள் ஒரு சங்கமாக 'நாக பட்டினம் வர்த்தகர் சங்கம்' என்று அமைந்து இயங்கி வருகின்றனர்.

இவ்வாறு குழுவுடன் நாகையில் அமைந்த வணிகம் ஒரு வகைப் பொருளை மட்டும் விற்கும் வணிகத்திலும் சிறந்தது. உப்பு வணிகம் மீன் வணிகம், நெல் வணிகம், வெளிநாட்டுப் பொருள்கள் வணிகம் என்று பல வணிகர் இருந்தனர்; இருக்கின்றனர்.

## அஞ்சு வண்ணம்

இவருள் 'அஞ்சு வண்ணத்தார்' என்பார் ஒரு வகையினர். 'அஞ்சு' என்பது 'ஐந்து' என்றறிவோம். இவ்வெண்ணிக்கை வணிகர் எண்ணிக்கை அன்று. வணிகப் பொருளின் எண்ணிக்கை. ஐந்து வகை வண்ணப் பொருள்களை விற்றதால் 'அஞ்சு வண்ணத் தார்' எனப்பட்டனர்.

இன்னார் இசுலாமியர். யவனர் எனப்பெறும் அரபியர் இவ்வணிகத்தைச் செய்ய வந்தனர். இவர்கள் யவன அரச குலத்தவனான ஒருவனையே முதல்வனாகக் கொண்டு வந்தனர். இதனைப் 'பல்சந்தமாலை' என்னும் நூல்,

"இயவன ராசன் கலுபதி தாம்முதலென்ன வந்தார்
அயன்மிகு தானையர் அஞ்சு வண்ணத்தார்
ஏழ்பெருந் தேர் அங்கத்து இயவனர்கள் அல்லா என வந்து" (24)

என்று பாடியுள்ளது. "அஞ்சு வண்ணத்தவர்.... அல்லா என வந்து" என்பதால் இவர் அல்லாவை வணங்குகின்ற இசுலாமியர் ஆவார். 'கலுபதி' என்பவனைத் தலைவனாகக் கொண்டு வந்தனர். இன்னார் தமிழகத்தில் தங்கிக் குதிரை பூட்டிய (சாராட்டு) தேரில் உலா வந்துள்ளனர். வலிமையான சிறு படையும் இவர்கட்கு இருந்தது.

இன்னோர்,

"கீழ்க்கடற்கரையில் பாண்டிய நாட்டிலுள்ள தீத்தாண்ட தானபுரத் திலும் அக்குழுவினர் இருந்தனர் என்பது அவ்வூர்க் கல்வெட் டொன்றால் அறியப்படும். அன்றியும் சோழநாட்டிலுள்ள துறைமுகப் பட்டினமாகிய நாகபட்டினத்திலும் அவர்கள் வாணிகம் நடத்திக் கொண்டு சிறப்புற்றிரு[illegible] (25) என்று கல்வெட்டறிஞர் சதாசிவப் பண்டாரத்தா[illegible]ரார்.

'அஞ்சு வண்ணம்' என்பது மணப்பொருள்கள் ஐந்தைக் குறிக்கும். அவை, சந்தனம், சவ்வாது அத்தர், புனுகு, பன்நீர் (பன்னீர்) ஆகும். இவற்றை விற்போர் 'அஞ்சு வண்ணத்தார்' ஆயினர். இவற்றுள் சில அரபு நாட்டு இயற்கை ஆக்கப் பொருட்கள். அரபு நாட்டு இசுலாமியர் இவற்றைக் கொண்டு வணிகம் செய்தனர்.

இன்றும் ஒரு தனிப் பேழையில் இவற்றுடன் நாகரிக 'மண வடிப்பு நீரியம்' (cent) கொண்டு செல்வர். வீடுகளுக்குச் சென்று விற்பதுண்டு. இவர் இசுலாமியராக இருத்தலை இன்றும் காணலாம்.

## "அறத்தின்வண்ணமான ஊர்"

நான்கு திக்கிலிருந்தும் நாகைக்கு வந்திறங்கிய பொருள் களைப் பாடிய காளமேகப் புலவரின் பாடலில்,

**"அடிப்பரப்புடைக் கலத்து**
**அனேக வண்ணமாக வந்த**
**அஞ்சு வண்ணமும் தழைத்து**
**அறத்தின் வண்ணமான ஊர் ........ நாகையே"**

என்றுள்ளது. இதில் பெருங் கப்பலில் பல பொருட்களுடன் இந்த அஞ்சு வண்ணப் பொருள்களும் வந்து நாகை தழைத்ததைக் கூறியுள்ளார். நான்கு திக்கிலிருந்து வந்த குதிரை முதலான பெரும் மதிப்புடைய பொருள்களுடன் இந்த ஐந்து வகை மணப் பொருள்களும் கூடிய விற்பனையால் ஊர் தழைத்து வளம் பெற்றது. இவ்வணிகத்தார் தம் வருவாய் கொண்டு நாகையை வண்ண மாக்கியவர்; அறம் செய்தும் வண்ணமாக்கியுள்ளனர். இதனால் நாகை "அறத்தின் வண்ணமான ஊர்" ஆயிற்றாம்.

## கமுக்கக்குறிகள்

காளமேகத்தின் மற்றொரு பாட்டால் வணிகர் தங்களுக்குள் கமுக்கமாகக் கூறிக்கொண்ட குழூஉக்குறிச் சொற்களையும் காட்டியுள்ளார். சொற்கள் இவை:

"கருந்தலை, செந்தலை, தங்கால், திரிக்கால், கடை, குடவர், தாட்டி, கொத்து, கரந்தைகள், அரும்பு, சொத்து". (26)

இச்சொற்கள் நாகை வணிகர்களாலும் வழங்கப்பெற்றுள்ளன. இவற்றின் மறைபொருள்களை எளிதில் அறியக்கூடவில்லை. இவ்வகையிலும் நாகை வணிகர் சிறந்துள்ளனர். இவ்வகை

வல்லமைகளுடன் சிறந்திருந்ததால் நாகை வணிகரை நாகைப் புலவர் அழகுமுத்து அவர்கள்,

"மருவு சோணாட்டினுறை

சிறையெலாம் மீட்டுவிடு

வணிகர்சேர் நாட்டில் வரு மருகேசா" (27) என்று சிறப்பித்தார்.

சோணாட்டில் தேங்கிச் சிறைப்பட்டிருந்த பொருள்களை யெல்லாம் கொண்டு வந்து ஏற்றுமதியாலும் உள்நாட்டு வாணிபத் தாலும் சிறக்கவைத்ததைக் காட்டியுள்ளார்.

இக்காலத்தில் நேரும் கடையடைப்பு போன்று அக்காலத்திலும் கடையடைப்புச் செய்துள்ளனர். இதனைப் பெருந்தொகை என்னும் தொகை நூலில் "நாகப்பட்டினத்துச் செட்டி கடையடைப்பித்துப் பாடச் சொன்ன போது காளமேகப் புலவர் பாடியது" என்று தலைப்பு வைத்து ஒரு பாடலைக் காட்டுகிறது. கடையடைத்தலும் ஒரு தொடர்கதை போலும்.

'அண்ணாச்சி'

ஆலந்தார் காலத்தில் கடற்கரைச் சாலையில் அமைந்த பண்ட சாலைகளைத் தொழிற்சாலை என்றனர். இவை சேமிப்புக் கிடங்குகள்.

இன்றும் சேமிப்புக் கிடங்குகளாம் பண்டசாலைகள் உள்ளன. இக்கால நாகை வணிகர்களில் முதன்மையானவராகப் பெரு வணிகர் திரு அ.து. செயவீரபாண்டிய நாடாரைக் குறிக்க வேண்டும். வணிகர் மட்டுமின்றிப் பொதுமக்களும் இப்பெருமகனாரை 'அண்ணாச்சி' என்றே அன்புடன் அழைக்கின்றனர்.

கூர்ந்த அறிவுள்ள நாகை இளைஞர் திரு சு. அசனல் ஆரிபு என்பார் சென்னையில் பொருள்களை ஏற்றி இறக்கும் தொழிலில் சிறந்து விளங்குகின்றார். பொலிவும் நல்லொழுக்கமும் உடைய இவர் என்பால் பேரன்பும், பெருமதிப்பும் கொண்ட அன்பு மாணவர்.

இக்காலத்தில் இளைஞர்கள் வணிகத்தில் முனைப்புற்று வணிகத்திற் சிறந்து வருகின்றனர். தாம் வணிகத்தால் பெற்ற வளங் கொண்டு சுழற் சங்கம், அரிமா சங்கம், தமிழ்த் தொடர்பான சங்கம், கல்வி நிலையங்கள், சமய மன்றங்கள், கோயில், அறக்குழுக்களில்

பங்கு கொண்டு அறப்பணியாற்றுகின்றனர். இன்னோர் பட்டியல் நீளமானது.

நாகை வணிகர் நற்றமிழர் வணிகர்
வாகை சூடும் வளமார் வணிகர்
ஈகை யதிலும் எடுப்புடை வணிகர்
பாகை ஒத்த பண்புடை வணிகர் – என்று சிறப்பிக்கலாம்.

## ஈ. தொழில் நாகை

### 1. "தள்ளா விளையுள்"

நாகை ஒரு பெரிய தொழில் நகரம் அன்று. தொழில் அறவே அற்ற நகரமும் அன்று. நிலத்தின் சிறப்பான தொழில்களைக் கொண்டது. செயற்கையான தொழில்களையும் ஏற்றது.

நாகையின் இயல்புத் தொழில் இயற்கை வளமாம் கடலால் நிகழ்வது. திருவள்ளுவர் "தள்ளா விளையுள்" என்றார். எக் காலமும் எந்நிலையிலும் தள்ளாத – அறாத – குறையாத விளைச் சலைத் தருவது கடல். மீன் ஒரு விளைச்சல், உப்பு ஒரு விளைச்சல், இவையிரண்டும் கடலோடும் வணிகத்திற்கும் இடந்தரும் துறையுமாகும்.

கடல் முத்து, பவளம், சில கனிமம் முதலியவற்றின் விளை நிலமாயினும் முன்னிரண்டையும் நாகைப் பகுதிக் கடல் பெற வில்லை. அதனால் முத்துக்குளித்தல், பவளக் கொடி கொள்ளல் என்னும் தொழில்களைக் கொள்ள இயலாது போயிற்று.

மீன்பிடி தொழில் முதன்மையானது. இது 'நுளைத்தொழில்' எனப்பட்டது. இதனைச் செய்வோர் 'நுளையர்' என்றும் 'பரதவர்' என்றும் முற்காலத்தில் அழைக்கப்பெற்றனர். இவ்விரு சொற் களையே சங்க இலக்கியங்களில் காண்கிறோம். இவ்விரண்டு சொற் களும் கடற்கரை நிலமாம் நெய்தல் நிலத்தொடர்பிலே பேசப்பட்டன. 'மீனவர்' என்னும் பெயர் பின்னர் நேர்ந்தது. தொன்மைக்காலத்தில் 'மீனவன்' என்றால் மீன் பொறித்த கொடியை உடைய பாண்டியனையே குறிக்கும். இடைக்காலத்தில் மீனைப் பிடித்து விற்கும் தொழிலால் 'மீனவர்' பெயர் அமைந்தது.

"வலை வளத்தொழில்" (28) என்று பிள்ளையவர்களும்

"வலை வளத்து உண்டி" (29) என்று சேக்கிழாரும் பாடினர்.

## 2. மீனவர் ஆட்சி

இத்தொழில் மக்கள் 'வத்தல்' என்னும் மிதவையில் ஓரிரு கல் தொலைவிலும் நாவாயில் (படகில்) கடலுள்ளும் சென்று மீன் பிடிப்பர். பெருவலை கொண்டு பிடிப்பர். வத்தலின் செல்வோர் சில பொழுதுகளிலும் ஒருநாள் அளவிலும் செல்வர். நாவாயில் செல்வோர் சில நாள்கள் தொடர்ந்தும் பிடிப்பர். பெரும்சால் பானைகளில் நீர், உணவு, கொண்டு செல்வர். சமையல் பொருள்களுடன் போய்ச் சமைத்து உண்பதும் உண்டு. பலர் கூடியே செல்வர். இரவில் விளக்குக் கொள்வர்; காற்றை வேலை வாங்கிப் பயணம் செல்வர். அலைகளின் ஆட்டம் அவர்கட்கு ஊஞ்சலாட்டம், தெளித்து அடிக்கும் உவர்நீர் பன்னீர்த்தெளிப்பு. வலைதான் ஆட்சிக்கோல். கடற்பரப்பெல்லாம் அவர்தம் ஆட்சி நாடு. காற்றை அறிந்து, வான நிலை தெரிந்து செயற்படுவதுதான் அவர்தம் ஆளுகைத் திறன். கூடை கூடையாக மீன்களைப் பெறுதல்தான் பகை வரிடமிருந்து பெறும் திறைப் (கப்பம்) பொருள். கரையில் நின்று அவைகளைப் பெற்று அவர்களை வரவேற்போர்தாம் இவ்வரசர்தம் அரசியர். கடற்கரைக் குப்பந்தான் இன்னோர் தலைநகர். கடலி லிருந்து நகரில் ஒளிவிடும் விளக்கை எண்ணுவதே இவர்கள் பொழுதுபோக்கு. இவர்தம் படகு விளக்குகளை எண்ணுவதே கரையாரின் ஒரு பொழுதுபோக்கு.

மீன் பிடிக்கச் செல்லும் முன் உரியவர்களை அழைக்க அடிக்கும் முரசு 'நெய்தல்பறை', 'மீன் கோட்பறை' எனப்படும். 'மீன் பாட்டம்' என்பது வரி.

இவர்க்குப் 'பரதவர்' என்னும் குடிப்பெயர் பரவையில் (கடலில்) செய்யும் தொழிலால் விளைந்த பெயர். பிற்காலத்தில் 'படகர்' என்னும் பெயர் கடலில் சென்று ஓரளவில் கடலிலும் பெருமளவில் ஆறு குளங்களிலும் மீன் பிடிப்போர்க்கு வந்தது.

தென்னிந்தியக் குலங்களையும் குடிகளையும் ஆராய்ந்த ஐரோப் பிய அறிஞர் எட்கார் தாஃச்டன் என்பார் இவர்களை நாட்டுக்குள் பக்டர், பரக்தார், பக்டா' (30) என்றெல்லாம் கண்டுள்ளார். வலை கொண்டு மீன் பிடிப்பதுடன் உள்நாட்டில் ஈட்டியால் குத்தியும்

இன்னோர் மீன் பிடிப்பர். இன்னோர் முற்காலத்தில் ஆந்திரத்திலிருந்து வந்தோராகக் கொண்டு இவர்கள் தெலுங்கு பேசினர் என்றும் குறித்துள்ளனர். இவர்கள் செட்டி இனத்தைச் சேர்ந்தவர் என்பர்.

படகரில் 'செம்படகர்' என்பார் 'செம்படவர்' என்னும் குடியினராகக் குறிக்கப் பெறுவர். இவர்கள் சிறுவலை, அரிப்பு வலை, ஊத்தா என்னும் கூடை கொண்டும் தூண்டில் போட்டும் மீன் பிடிப்பர்.

நாகை நெய்தல் நில மண்ணின் மைந்தர் நுளையரும், பரதருமே. பரதரின் தலைவராக அரசர் நிலையில் (நம்பிராசா) ஒருவரைக் கொண்டனர். அவர் வழி வந்தோர் ஒரு தனிக் குலமாகக் கருதப்பெற்றுப் 'பரதவராச குலத்தார்' எனப்பட்டனர். இவர்களையே புராணப் பாங்கில் 'பர்வதராச குலத்தார்' என்று கூறிக் கொள்கின்றனர்.

நெய்தல் நிலத் தெய்வமான வருணனைத் தொல்காப்பியம் "வருணன் மேய பெருமணல் உலகமும்" என்றது. நெய்தல் நில மக்களும் வருணன் குலத்தவராகக் கொண்டு 'வருண குலத்தவன்' என்றனர். யாழ்ப்பாணத்துப் புலவர் வையாபுரி என்பவர் பாடிய 'வையா பாடல்' என்னும் நூலில் 'மச்சமுறு கடலில் மனைத்தீவாரும் வருண குலத்தார்' (31) என்று காட்டப்பட்டுள்ளன. இவருள் மன்னர் போன்ற செல்வன் 'வருணகுல ஆதித்தன்' என்றிருந்தான்.

உள்ளூரிலும் அண்மை ஊரிலும் மீன் விற்பனைத் தொழில் நடந்தது; இக்காலத்தில் வெளிமாநிலத்திற்கும் அவ்வழி வெளிநாட்டிற்கும் அனுப்பப்பட்டு ஒரு பெருந் தொழிலாகியுள்ளது.

### 3. உப்பளம்

மீன்பிடித் தொழிலுடன் இந்நிலத்துத் தொழில் உப்பளத் தொழிலும் அதனை விற்கும் தொழிலுமாகும். இத்தொழில், 'உமண்' எனப்பெறும்; செய்வோர் உமணர். செய்யும் வணிகம் உடன் சாத்து. ஏற்றிச் செல்லும் வண்டி 'உமண வண்டி'. இழுத்துச் செல்லும் பகடு 'உமண் எருது' என்றெல்லாம் இலக்கியங்கள் அறிவிக்கின்றன.

மீன்பிடித் தொழில் 'பிடித்தோம் — வந்தோம் — விற்றோம்' என்று முடிவது. உமண் தொழில் கரையில் பாத்தி உண்டாக்கிக்கடல் நீரைக் கட்டி, சூரிய வெப்பத்தில் உணக்கி, உப்பாக்கும் தொழில். இவ்வணிகம் பற்றி முன்னர்க் கண்டுள்ளோம்.

உப்பை ஆக்கும் இடம் 'உப்பளம்' எனப்பெறும். 'அளம்' என்றாலே உப்புத்தன்மை கொண்ட நிலத்தையும் குறிக்கும். நாகையில் முன்னர் 'உப்பளம்' இருந்தது; தொழில் நிகழ்ந்தது. இப்போது இல்லை. முன்னர் இருந்ததன் அடையாளமாகக் கடற் கரையில் 'உப்புத்திடல்' என்னும் பொருளில் Salt stownd இருக் கிறது. அதுவே தென்னிந்தியத் திருச்சபை மேனிலைப்பள்ளி விளையாட்டுத் திடல்.

## உணங்கல் கருவாடு

கடல் மீனையும் தருகிறது; உப்பையும் தருகிறது. இரண்டையும் ஒன்றாகப் பயன்படுத்தி மீனவப் பெண்கள் ஒரு துணைத் தொழில் செய்கின்றனர். அது 'கருவாடு' எனப்படுகின்றது. மீன் வாடிக் கருத்துப்போனதால் இப்பெயர் பெற்றது. இலக்கியங்கள் இதனை 'மீன் உணங்கல்' என்று குறிக்கும்.

நாகைக் கடற்கரையில் இந்த மீன் உணங்கல் சிறு மலை போல் போராகக் குவித்து வைக்கப்பட்டிருந்ததைப் பிள்ளையவர்கள் பாடி யுள்ளார்கள். இதன் வணிகமும் ஒரு தொழில். ஊருக்குள் கூவியும், வெளியார்க்கு அனுப்பியும் இத்தொழிலை மகளிரும் செய்வர்; ஆடவரும் செய்வர்.

## 4. படகு – கப்பல்

அடுத்துக் குறிப்பிடத்தக்க தொழில் நாவாய் - படகு கட்டுதல். இஃது திறமையுடன் கலையமைப்பு கொண்ட தொழில். தச்சுக் கலைஞர் இதனைச் செய்பவராயினும் இதற்கென்று தனிப் பயிற்சியுள்ள மரத் தச்சர்களே பயன்படுவர். தச்சர்கள் தொழில் செய்யினும் மீனவர்களின் பட்டறிவு உள்ளவர்களே இதன் வடிவமைப்பிற்கும் உறுதிக்கும் நீர் கசியாமைக்கும் கருத்தைத் தருபவர்கள். கலைத்திறனும் வலிமையான உடல் உழைப்பும் இத்தொழிலுக்கு வேண்டப்படுபவன.

நாகையில் இத்தொழில் காலங்காலமாய் நடந்து வருகின்றது. எப்போதும் ஒரு நாவாயாவது கட்டப்பட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம். இக்காலத்தில் ஒரு நாவாய் பல நூறாயிரம் உருவா செலவில் உருவாக்கப்படுகின்றது. நாகைக் கட்டுமானத்தார் பெயர் பெற்றவர்கள். இத்தொழிலாளர் பிறநாடுகளுக்கும் நம் நாட்டின் மேலைக் கடற்கரைப் பகுதிக்கும் சென்று தொழில் செய்தனர்.

குறிப்பாக ஆஸ்திரேலியாவில் இத்தொழிலாளர் திறமையில் உருவான நாவாய்கள் சிறந்தவை என்பர்.

இதற்கெனத் தனி மரவகை பயன்படுத்தப்படும். மரப்பாளங்கள் பொருந்தும் இடங்களில் நீர்க்கசிவு, ஏற்படாமல் இருக்கச் சாக்கு அல்லது உரிய பொருள் வைக்கப்பட்டுக் கொண்டே பொருத்தப்படும். கட்டுமானம் முடிந்ததும் வண்ணம் தீட்டி அந்நாவாய்க்கு ஒரு பெயர் சூட்டப்படும்.

இத்தொழிலில் கையாளப்படும் வினைக்கும் நாவாய்ப் பகுதிகளுக்கும் உறுப்புகளுக்கும் தனிக்குறிப்புள்ள சொற்கள் உள்ளன. இவை பெரும்பகுதி தமிழ்ச் சொற்கள். மாந்தர் உறுப்புச் சொற்களாகிய அகடு, நெற்றி முதலிய பல சொற்களாக இக்கலைச் சொற்கள் உள்ளன.

## படகில் தமிழ்

மொழி ஞாயிறு பாவாணரையா என் இல்லத்தில் தங்கியிருந்த நாள்களில் படகுத் தொழில் துறைக்கு அழைத்துச் சென்று பல அரிய இத்தொழிற் சொற்களைப் பெற முடிந்தது. மொழிஞாயிறு அவர்கள் சில சொற்களைக் கேட்டு மகிழ்ந்தும் உவந்தும் பாராட்டியும் கருத்தை வழங்கினார்கள். அவர்களே சொற்களைக் குறித்துக்கொண்டு வந்து இல்லத்தில் அமர்ந்து பார்த்து முகம் மலர்ந்தார்கள். எனவே, இத்திறமைத் தொழிலில் தமிழ் வளமும் உள்ளது குறிக்கத்தக்கது.

நாகைக்கு இஃதொரு சிறப்புத் தொழில்.

## 5. சிற்பக்கலை

புத்த சமயத்தார் அமைப்பால் நாகை சிற்பக் கலைத்தொழிலில் பங்கு கொண்டது.

புத்தர் சிலைகள் நாகையில் அக்காலத்தில் உருவாயின. சிறிய அளவில் வெண்கலத்தால் வார்ப்பாக அடிப்பாகங்கள் செய்யப் பட்டன. சிறந்த கலைநுணுக்கமுள்ள சிலைகள் இங்கிருந்து எடுக்கப் பெற்று எழும்பூர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பெற்றுள்ளன. கலை மண்டப அமைப்பில் தூபிகள் புத்தர் உருவையும் பெற்றுள்ளன. கலைத்திற னமைந்த இரண்டு மண்டபத் தூண்களின் படங்கள் காட்டப் பெறுகின்றன. ஒரு சிலையில் 'நிகமா' என்று தமிழ் எழுத்தில் உள்ளமை நாகையில் சிற்பங்கள் உருவானதன் அறிகுறியாகும்.

சிறு அளவில் புத்தர் அமர்ந்த தோற்றத்தில் ஆயிரக்கணக்கில் சிலைகள் வடிக்கப்பட்டுள்ளன. ஈழை நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. ஈழைநாட்டுச் சிலைகளும் வந்துள்ளன.

இச்சிலைகளின் சிற்ப நுணுக்கம் இந்தோனீசியக் கலை வடிப்பின் பாங்கையும் கொண்டது.

## 6. நாணய வார்ப்பு

நாயக்கர் காலம் முதல் நாணய வார்ப்பு நாகையில் நடந்து வந்தது. ஆலந்துக்காரர் காலத்தில் மிகுதியாகவே இத்தொழில் நிகழ்ந்தது. பல்வகை உலோகங்களில் வார்க்கப்பட்டன; அடிக்கப்பட்டன. சிலவகை வடிவங்களையும் காணமுடிகிறது. தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டமை ஒரு சிறப்பு. மராத்தியர் இதனைக் "கம்பட்டம்" என்றமை கண்டோம்.

இத்தொழிலின் நினைவை நாணயக்காரத்தெரு எழுப்பிக் கொண்டுள்ளது. இப்போது நாணயம் உருவாகவில்லை. என்றாலும் இத்தெருவின் கீழ்ப்பகுதி முழுமையாகப் பொன், வெள்ளி அணிகலன்கள் உருவாக்கப்படும் நகைக் கடைகளே உள்ளமை ஒரு பொருத்தமாகிறது.

## 7. வெடி மருந்து

விழாக் காலச் சிறப்புக்குரிய வெடிகளுக்கும் பல வாணங் களுக்கும் ஓரளவில் போர்க்குண்டு வெடிப்புகளுக்குமாகும் மருந்து கள் இடித்தும், பொடித்தும், கலந்தும் உருவாக்கப்பட்டன. தொழில் நிகழும் இடமும் தேக்கி வைக்கும் இடமும் 'கொத்தளம்' எனப்படும். நாகையில் மருந்துக் கொத்தளத்தெரு இன்றும் உள்ளது.

## 8. குடிசைத் தொழில்கள்

முற்காலத்தில் மணிகளிலும், முத்துக்களிலும் துளையிடும் தொழிலும், கோக்கும் தொழிலும் நாகூரில் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. இதற்கு உறுதியான அல்லது குறிப்பான சான்றும் இல்லை. ஆயினும் செவிவழிச் செய்திகள் உள்ளன இஃது ஒரு குடிசைத் தொழில்

நாகூரில் குடிசைத் தொழிலாகப் பனை ஓலையில் தடுக்குகள், சிறு கொட்டான்கள், தூக்குப் பைகள், சிறுவர் விளையாட்டுப் பொருள்கள் முதலியன செய்யப்படுகின்றன. இவற்றை இசுலாமிய *மகளிர் செய்கின்றனர். தலையில் வைத்துக் கொள்ளும்* பனை

ஓலைத் தொப்பி வருவோர் தலைமீது ஏறிக்கொள்ளும். எனவே, இவ்வகையில் இது தலையாய தொழில்.

## 9. பயிர்த்தொழில்

நாகையின் கிழக்கே மீன் விளையும் வயல்; உப்பின் மூலவயல். சுற்றிலும் பயிர் வயல்கள் உள்ளன.

தென்மேற்கில் தொடங்கி மேற்கு வடமேற்கில் உள்ள நிலங்களில் பயிர்த்தொழில் நிகழ்கிறது. சுற்றியுள்ள சிற்றூர்கள் அனைத்தும் பயிர்த்தொழில் களங்களே. நாகைக்கு மட்டுமின்றி வெளி மாவட்டங்களுக்கும், மாநிலங்களுக்கும் உணவு வழங்கும் பணியில் இப்பயிர்த்தொழில் திகழ்கிறது. இப்பயிர் நெற்பயிர்; நன்செய்த் தொழில்; புன்செய் பயிர் இல்லை எனலாம்.

ஆனால் புன்செய் பயிரில் தோட்டப் பயிர்த்தொழில் தெற்கிலும், வடக்கிலும் திகழ்கிறது. தெற்கில் பொய்கை நல்லூர் முதலாக வேட்டைக்காரன் இருப்புவரை காய்கறிகள் தோட்டப்பயிர்கள்.

பொய்கைநல்லூர்க் கத்தரிக்காய் சுவையானது. மக்களால் விரும்பி வாங்கப்படுகிறது. மாமர வளர்ப்பும் மாங்காய் விளைச்சலும் குறிப்பிடத்தக்கவை.

வடக்கில் பால்பண்ணைச் சேரியில் தோட்டப்பயிராக மலர்கள் மணக்கின்றன. முல்லை, மல்லிகைப் பூந்தோட்டங்கள் மிகுதியாகவும், பிற அளவாகவும் உள்ளன. இதனையும் ஒரு குறிப்பிடத் *தக்க நாகைத் தொழில் எனலாம். மலரும்* தொழில் எனலாம்; மணக்கும் தொழில் எனலாம்.

மணத்தில் குறிப்பிடமுடியாத கடல் தொழிலில் துவங்கும் மீன் தொழில் நாகை மணத்தில் சிறக்கும் முல்லையில் நிறைவு பெறுகிறது.

எதிர்காலம் நாகையைப் பெருந்தொழில் நகரமாக்க நிலத்தடி எண்ணெயையும் நிலத்தடி எரிவாயுவையும் (Gas) நம்பியுள்ளது.

## 10. புகை வண்டித் தொழிற்சாலை

ஆங்கிலர் ஆட்சியின் நலமாக நாகை புகைவண்டிப் போக்கு வரத்தைப் பெற்றது. இத்துறைக்குரிய இரும்புத் தொடர்பான பொருள்களையும் பிறவற்றையும் உருவாக்கும் இரும்புப் பட்டறை என்னும் தொழிற்சாலை, சற்றுப் பெரும் அளவில் நாகையில்

அமைந்தது. நாகைப் புகை வண்டி நிலையத்தை ஒட்டித் தெற்கில் இஃது அமைக்கப் பெற்றது. சுற்றும் உயரமான பாதுகாப்பு மதிற்சுவர் களுடன் இது அமைந்தது. இங்குப் புகைவண்யத் துறைக்குரிய இரும்புத் தொடர்பான பொருள்கள் உருவாக்கப் பெற்றன.

உருவானவற்றை எடுக்கவும் இரும்புப் பாளங்களை உள்ளே கொண்டு செல்லவும் தொழிற்சாலைக்குள்ளே புகைவண்டித் தொடர் செல்ல இருப்புப்பாதை அமையும் அளவிற்குச் செயற்பாடுகள் பெருகியிருந்தன. இது நாகைக்கு ஒரு பெரும் வளந்தருவதாகவும் சிறப்பாகவும் அமைந்திருந்தது.

பலர் பணி பெற்றனர். கிழமை (வாரம்) தோறும் கூலி கொடுக் கப்பட்டது. திங்கள் ஊதியத்திற்கும் பலர் பணியாற்றினர். இதனால் கிழமை தோறும் நகரில் பணப்புழக்கம் இருந்தது. இங்கு நேர்ந்த இடையூற்றால் இது திருச்சி, பொன்மலைக்கு மாற்றப்பட்டது என்பர்.

அவ்விடம் முன்னமைப்பின்படியே இப்போதும் உள்ளது.

## 11. எஃகு உருட்டுத் தொழிற்சாலை

புகைவண்டித் துறைத் தொழிற்சாலை மாறியதும், அவ்விடத்தில் டாடா நிறுவனத்தார் ஓர் எஃகு உருட்டாலையை ஏற்படுத்தினர்.

இங்கு இரும்பு நீள் பாளங்கள் கொண்டு வரப்பெற்று பெரும் உலையில் இளகச் செய்து பல்வகைக் கம்பிகளை உருவாக்கு கின்றனர். இவை பல வகையில் வீட்டுக் கட்டுமானங்களுக்கும் தொழிற்சாலைப் பயன்களுக்கும் செல்கின்றன.

இவற்றுடன் ஆணிகள் செய்யப்படுகின்றன. இந்த ஆலையில் நூற்றுக் கணக்கில் தொழிலாளர் பணியாற்றுகின்றனர். இஃதொரு குறிப்பிடத்தக்க தொழிற்சாலையாக உள்ளது.

இதனை ஒட்டித் தனியார் வார்ப்புத் தொழிற்சாலை 'சாலமோன் பவுண்டரி' என்னும் பெயரில் இயங்கி வருகின்றது.

## 12. தொழிற் பேட்டை

நகரின் வடக்கில் நாகை நாகூர் இடையில் அரசால் தொழிற் பேட்டை வளாகம் ஒன்றமைக்கப்பட்டு, தொழிற் சாலைக்குரிய கட்டடங்கள் அமைந்தன. இவற்றில் தனியாரும் சில நிறுவனத்தாரும் அரசினரும் ஈய எழுதுகோல் (Pencil), சேமியா முதலிய தொழில் களை ஆற்றி வருகின்றனர்.

இஃது இன்னும் பெருக வாய்ப்புள்ளது.

## 7. வணிகம், தொழில் நாகை

| ஆசிரியர் | கொண்டு காட்டி நூற்குறுக்கம் |
|---|---|
| 1. Neelakanda Sasthree | : Forign Notices of South India - P. 25 |
| 2. Krishnan K.G. | : Studies in South Indian History and Epigraphy. P.108 |
| 3. சேக்கிழார் | : தி.தொ.புரா: – அதிபத்தர். 3,4. |
| 4. உருத்திரங்கண்ணனார் | : பட். பா. 185–191 |
| 5. காளமேகம் | : சோழ மண்டலச் சதகம் – 45 |
| 6. இராசு. செ. (ப.ஆசிரியர்) | : தரு. ஆ. செப். 4. வரி 8–16 (த.ப வெளியீடு) |
| 7. உருத்திரங்கண்ணனார் | : பட். பா. – 135 – 137 |
| 8. அள்ளூர் நல்முல்லையார் | : குறு. 67 |
| 9. ஓதலாந்தையார் | : ஐங். 310 31–1 |
| 10. தாயுமானவர் | : தாயு. திரு. தி. உடல் பொய்யுறவு – 72 |
| 11. அவ்வையார் | : கொ.வேந்.. 13 |
| 12. இராசு. செ. | : தஞ்.மரா.செப். – பதிப்புரை பக். XXV |
| 13. திருவள்ளுவர் | : திரு. – 120(12) |
| 14. பிங்கலர் | : பிங்..நி. – 779 |
| 15. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சி. | : தி.நா.புரா. – திருநகரப் படலம் 107. |
| 16. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சி. | : தி.நா.புரா. – திருநகரப் படலம் 108. |
| 17. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சி. | : தி.நா.புரா. – திருநகரப் படலம் 109. |
| 18. கடியலூர் உருத்திரங் கண்ணனார் | : பெரும்பாண். – 80(8) |
| 19. தொல்காப்பியர் | : தொல். பெய.11 |

| | |
|---|---|
| 20. இராசு. செ. | : தஞ். மரா. செப். – கொங்க ணேசுவரர் கோயில் செப்பேடு – 3 வரி: 22,23 |
| 21. ——— | : A.R.E. 1956-57: No. 152,155,156. |
| 22. சாத்தனார் | : மணி. – 16–11 |
| 23. சாத்தனார் | : மணி. – 14–79 (17) |
| 24 ——— | : பல். மா. – களவியற்காரிகை – உரை மேற்கோள் |
| 25. சதாசிவப் பண்டாரத்தார் | : பிற். சோ. வர. பக். 67 |
| 26. காளமேகம் | : தனி. சிந். – பக். 95 (பதிப்பு 1908) |
| 27. அழகுமுத்துப் புலவர் | : திறப்பு. 36–4 |
| 28. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சி. | : தி.நா.புரா. அதிபத். 5–3 |
| 29. சேக்கிழார் | : தி.தொ.புரா. அதிபத்தர் 5–3 |
| 30. எட்கர் தர்ஸ்டன் | : தென்.குல.குடி. தொகுதி. பக் 30 (த.ப.தமிழ்ப் பதிப்பு) |
| 31. வையாபுரி ஐயர் | : வை. பாடல் – 60 |

# 8. கற்றவர் பயிலும் நாகை

## அ. முற்காலக் கற்றவர்

கற்றவர் எந்நாட்டிலும், எவ்வூரிலும் இருப்பர். சிற்றூர்களிலும் கற்றவர் ஒருவராவது இருப்பார். முற்காலத்தில் 'நூல்' என்பதற்குக் 'கணக்கு' என்றொரு சொல் உண்டு. நூலை – கணக்கை ஆராய்ந்தவர் 'கணக்காயர்' எனப்பெற்றார்.

**"கணக்காயர் இல்லாத ஊரும்**

**...... நன்மை பயத்தல் இல(1)"** என்று – நூல் பாடியது. இவ் வாறிருக்க நாகைக்கு மட்டும் 'கற்றவர்' உரியவரா? இல்லைதான். ஆனால் இங்குக் "கற்றவர் நாகை" என்றில்லை; "கற்றவர் பயிலும் நாகை" என்றுள்ளது. கற்றவர் மேலும் மேலும் பயின்ற சிறப்பு நாகைக்கு ஒரு சிறப்பு.

தாம் பாடிய திருநகர்களுக்குப் பல சிறப்புகளைப் பாடிய திருநாவுக்கரசர் நாகைக்கு மட்டும் "கற்றவர் பயிலும்" என்று அடை மொழி கொடுத்தார்.

**"கற்றவர் பயிலும் நாகைக் காரோணம்"** என்று முன்னும் (2)

**"கற்றவர் பயில் கடல் நாகை"** என்று அடுத்தும் (3) இருமுறை புகழ்ந்தார். திருஞானசம்பந்தரும் **"ஞானத்துறை வல்லார் தொழுதேத்த"** (4) என்று ஞானமாம் மெய்யறிவு பெற்றாரும் அவ்வழி கற்றாரும் இருந்தமையைக் குறித்தார். சுந்தரர் நகரத்தாரைக் குறிக்கவில்லை. அவர் நகரத்துப் பொருள்களிலேயே நோட்டம் வைத்து அவற்றை வேண்டியே பாடியுள்ளார்.

### புத்தம் கற்றார்

மூவர் காலத்திற்கு முன்னரும் பின்னரும் புத்தத் துறவியார் நாகையில் வாழ்ந்தனர் அன்றோ. அன்னார் துறவுப் பணியாக நூலாய்வும் நூலாக்கமுந்தான் நாகையில் நிகழ்ந்தன. அதனால்,

"நற்றவர்க்கு இடமாவது நாகையே" என்றார். பிள்ளை யவர்களும் "கற்றவர் புகழும் நாகை" என்றார். மேலும் பிள்ளயவர்களே,

"கழக இடம் கரையிலவாம் நாகநகர்" (5) என்று 'கற்றவர் கூடிப் பயின்று ஆராயும் கழகங்கள் நாகையில் எண்ணிக்கையற்று இருந்தன' என்றார்.

எனவே, நாகை குறிக்கத்தக்க சிறப்புக்களில் கற்றார் நிறைந்து பயின்றதும் ஒன்றாகும்.

புத்தத் துறவியர் அமர்ந்த பதரி திட்டையில் புத்த சமய ஆய்வு செய்தனர். புத்த நூல்களுக்கு உரை எழுதினர். புதிய நூல்களைப் படைத்தனர். நூல் 'அட்டபகரணம்' என்பதற்கு உரை என்ற பொருளில் "நிட்டகதா" என்று எழுதப் பெற்றது. தன்மபாலதேவர், காசபதேவர் முதலியோர் பல நூல்களைப் படைத்தனர்; ஆய்வு செய்தனர். வெளிப்பகுதியிலிருந்து அமைதியாக எழுதுவதற்கும் பயில்வதற்கும் வந்தது புத்தம் கற்றவர் பலர். எனவே, புத்த சமய அளவிலும் கற்றார் நாகையில் பயின்றனர். வெளிநாட்டுச் சீனரும் இங்குப் புத்த வளாகத்தில் உறைந்து 'யோகம்' பயின்றதை அறிந்தோம்.

புத்த சமயக் கற்றவர் நாகையில் பயின்றாலும் அவர்தம் பயிற்சி நூல்களும், அன்னார் வடித்த நூல்களும் தமிழில் இல்லை. பெரும்பகுதி பாளி மொழியிலும், ஓரளவு வடமொழியிலும் அமைந்தன. இக்கற்றவர் பயில்வால் தமிழ்மக்களோ, நாகை மக்களோ, தமிழோ எப்பயனும் பெறவில்லை. எத்துணையும் பெறவில்லை. புத்தத் துறவியராம் கற்றவர் பயின்றனர் என்று கூறிக்கொள்ளலாம்.

## சங்க மகள் நாகையார்

நாகன் என்னும் தமிழ் நாகநாட்டார் புலவர்களாய்த் தமிழகத்தில் சங்க காலத்தில் இருந்து பாடினர். சங்க இலக்கியங்களில் நாகன், அவன் மகன் நாகன் போத்தன் என்னும் புலவர்களை முன்னரும் கண்டோம்.

சங்கப் புலவர் மற்றொருவர் பெயர் நம் கவனத்தை ஈர்க்கிறது. அப்பெயரில் "நாகை" என்னும் ஊர்ப்பெயர் அமைந்திருப்பதே அந்த ஈர்ப்புக்குக் காரணமாகும்.

நாகை என்று தமிழகத்தில் சில ஊர்கள் உள்ளன. அற்றில் இவர் எந்த ஊராகவும் இருக்கலாம்; நம் நாகையாவும் இருக்கலாம். இவர் ஒரு பெண்பாற்புலவர். குறுந்தொகையில் இரண்டு பாடல்களாக (118, 225) இவர் பாடல்கள் உள்ளன. இரண்டும் அகத்துறைப் பாடல்கள். காதல் தலைவி ஒருத்தி காதலனைப் பிரியும் போதும், பிரிந்த பின்னர் அவன் வருகையை எதிர் பார்த்தும் பாடப்

பெற்றவை. முன் (118) பாடல் கடற்கரை நிலத்து நெய்தல் திணைப்பாடல்; இதில் இவ்வம்மையார் அறிவிக்கும் ஒரு செய்தி தமழர்தம் விருந்தோம்பும் மரபை அறிவிக்கின்றது.

எங்கும் கோட்டை வாயில்கள் பலர் புகுமாறு பெரிய வாயில்களாக இருந்தன. அரண்மனை வாயிலும், செல்வர் இல்லத்து வாயிலும் பலர் புகுமாறு அகன்ற வாயில்களாக இருக்கும். அதனால் இவற்றைப் 'பலர் புகு வாயில்' என்பர். அவ்வாயில் வழி வெளி நாட்டாரும், 'வெளியாரும் புகலாம். காவலர் புலனறிந்து வரவேற்கத் தக்காரை வரவேற்பர். இதுபோன்றே அரண்மனை வாயிலிலும் செல்வர் இல்ல வாயிலிலும் காப்பாளராக உள்ளோர் வரவேற்பர். இது பொதுச் செய்தி. இரவு நேரத்தில் கதவுகளை அடைக்கும்போது வருவோரை அறிந்து உசாவுபவன் கடவுநன் எனப்பெறுவான். கதவை அடைக்கும்போது அந்தக் 'கடவுவோன்' வாயிலில் வந்து நின்று 'இன்னும் (விருந்தினர், வெளிநாட்டார்) உள்ளே வர வேண்டியவர் உள்ளனரோ' என்று வினாவி (கடவி) விட்டுத்தான் கதவை அடைப்பான். இஃதொரு சிறப்பான 'வாழ்வியல் பண்பு. இதனைப் புலவர் நன்னாகையார்,

"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" (6)

என்று பாடியுள்ளார். இஃதொரு தமிழர்தம் வாழ்வியல் மரபு. இஃதைப் பாடிய "நாகையார்" நினைவிற்குரியவர்.

நெய்தல் திணையில் பாடியுள்ளதால் இவர் நெய்தல் நிலத்தவராக – நாகையராக இருக்கலாம் என்று கொள்ளலாம். ஆனால் மலைநிலத்துக் குரிய குறிஞ்சித் திணையிலும் ஒரு பாடல் பாடியுள்ளார்.

அவ்வாறாயினும் பெயரில் நாகைநகர்ப் பெயர் அமைந் திருப்பது கற்பவர்க்கு ஓர் உவகை தருவதாகும். இப்புலமை மகளிர் நாகையராக அமர்ந்தாகக் கொண்டு மகிழலாம்.

## ஆ. இடைக்காலக் கற்றவர்

பின்னர் நாம் அறிவது ஏழாம் நூற்றாண்டில் அப்பரும், ஆளுடைப் பிள்ளையும் பாடிய நாகையில் கற்றவர் பயின்றதைத் தான். அவர்கள் நாகையில் கண்டு பாடியுள்ளதுபோல் பலர் சிறந்துள்ளனர் என்று கொள்ளலாம். குறித்துச் சொல்லச் சான்று கள் கிடைக்கவில்லை.

## கவித்திருமதி காளிமுத்து (கி.பி. 18 நூற்.)

அடுத்து நமக்குக் கிடைப்பவர் ஒரு பெண்பாற் புலவர். இடையில் எவரையும் அறிய வகை இல்லை. புலவர்கள் தம் வரலாற்றைக் குறிப்பது தற்புகழ்ச்சியாகக் கருதியதால் வரலாறுகள் பதியப்பட வில்லை. ஆற்றில் போன சுவடிகள், கறையான் தின்றவை, வெளிநாடு போனவை, முடங்கிக் கிடப்பவை என்னும் பகுதிகளே ஓலைச் சுவடி வரலாற்றில் மிகுதி. இவற்றில் இருப்பவை – தூங்குபவை. எழுப்பப்படும்போது நாகையில் புலவர் பெயர் வரலாம்.

கிடைத்துள்ள பெண்பால்புலவர் காளிமுத்துப் புலவர் இவர் நாகையில் குறுநில மன்னர் போன்று வாழ்ந்த வருணகுலாதித்தன் மேல் ஓர் 'உலாமடல்நூல்' பாடியுள்ளார்.

### நாகைக் காளிமுத்து

இவர் நாகைப் புலவர் என்பதை அறிஞர் திரு. கா.சு. பிள்ளை யவர்கள் தம் 'இலக்கிய வரலாற்றில்' குறித்துள்ளார் (7). தமிழறிஞர் திரு. மு.சி. பூர்ணலிங்கம்பிள்ளையும் "வருணகுலாதித்தன் மடலைத் தாசி காளிமுத்து பாடி"யதாக எழுதியுள்ளார் (8). தமிழறிஞர் திரு மு. அருணாசலம் அவர்களும் 'காளிமுத்த'ம்மை நாகைப் புலவர்' என்றே காட்டியுள்ளார்.

இக்கவித்திருமதி காளிமுத்து பற்றி வேறுபட்ட செய்திகள் அறிஞர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள கொழும்பு தமிழ்ச்சங்கம் 'பாவலர் சரித்திர தீபம்' என்றொரு நூலை வெளியிட்டுள்ளது. இதில்

"காளிமுத்துப் புலவர் வரலாறு தெரியவில்லை. ஏழு தனிப்பாடல்கள் உள. ஒவ்வொரு பாடலும் 'வேலப்பன் மைந்தன் குருநாதன்' என்று முடிகிறது. கேலிப் புலவனோ இலக்கண இலக்கியங்கள் நன்கு கற்றுச் சாலப் புகழப் பெற்று விளங்கிய புலவனோ அறியோம்" (9) என்றுள்ளது.

அறிஞர் திரு ந.சி. கந்தையா அவர்கள் ஒரு பாடலைக் காட்டி தாசி 'காளிமுத்து பாடல்' என்றெழுதியுள்ளார். (10)

அபிதான சிந்தாமணியில் *"காளிமுத்து தாசி"* என்றும் அவள் மயிலைக் குழந்தை முதலியாரையும் பள்ளிக்கொண்டான் எனும் *பரதவனையும்* பாடிப் பரிசு பெற்றார் என்றும் காண்கிறோம்.

பலர் காளிமுத்துப் புலவர் தேவரடியார் குலத்தவர் என்பதை ஒரு முகமாகக் கூறியுள்ளனர். நாகையைச் சேர்ந்தவர் என்பதைப் பலர் குறிக்கவில்லை. அபிதானசிந்தாமணியில் பள்ளிக்கொண்டான் என்னும் "பரதவனை" என்றுள்ளது. பரதவர் மீனவக் குலத்தவர். இஃது ஒரு குறிப்பாகிறது.

இப்பெரும் அறிஞர்கள் தத்தம் ஆய்வுகளால் குறிப்பது போன்று கவித்திருமதி காளிமுத்து நாகையில் வாழ்ந்தவரேயாவார். கற்றவர் பயில் நாகை பெற்ற கற்றவரேயாவார்.

## மறு குழப்பம்

மற்றொரு குழப்பம் "வருணகுலாதித்தன் மடலை எழுதியவர் அம்மைச்சி என்னும் தாசி" என்று திரு ந.சி.க. குறிக்கிறார். வருணகுலாதித்தன் உலாமடல் முதல் பதிப்பில் 'அம்மைச்சி' எழுதியது என்று பதிப்பாகியுள்ளது. அம்மைச்சி வருண குலாதித்தன் காலத்துடன் மாறுபடுவதால் இவை பொருந்தா. திரு. கு. அழகிரிசாமி அவர்கள் "நீலாயதாட்சி வருணகுலாதித்த உலா மடலின் பதிப்பாசிரியராகவோ, நூலாசிரியராகவோ இருந்திருக்க வேண்டும்" என்றார். கவித்திருமதியாம் நீலாயதாட்சி இந்நூல் ஆசிரியை என்றொரு கருத்து உலவியது.

நாகைப் புலவர் என்று குறிக்காத சிலரும் இப்புலவர் பாடல்களில் சிருங்காரச் சுவை (பால் இன்பச்சுவை) மலிந்துள்ளன என்று கூறியுள்ளனர். இவர் எழுதிய வருணகுலாதித்தன் உலா மடல் என்னும் நூல் இந்தப் பால் இன்பச் சுவையின் தனிப்பெரும் பெட்டகமாக உள்ளது.

முடிவாக, கவித்திருமதி காளிமுத்து நாகைப் புலவர் என்றும் தேவரடியார் குலத்தவர் என்றும், வருணகுலாதித்தன் மடல் பாடியவர் என்றும் உறுதியாகக் கொள்ளலாம்.

இவர் தென்காசியை ஆண்ட பராக்கிரம பாண்டியன் மீது ஒரு பாடல் பாடியுள்ளார். இப்பாண்டியன் காலம் 18—ஆம் நூற்றாண்டு. இப்பாடல் 1771 இல் பாடப்பட்டிருக்கும் என்று அறிஞர் திரு மு. அருணாசலம் அவர்கள் எழுதியுள்ளார்கள். எனவே காளிமுத்து அம்மை 18ஆம் நூற்றாண்டினர். இப்பாடலையும் அம்மைச்சி பாடியதாகச் சொல்வர் சிலர்.

கவித்திருமதி காளிமுத்து அம்மையார் புலமை மிக்கவர். இலக்கண இலக்கியங்களில் தேர்ந்தவர். கலிவெண்பாவைக் கண்ணிகளாகச் சுவைபட, ஆற்றொழுக்காகப் பாடும் வல்லமை உள்ளவர். அகத்தியமும் தொல்காப்பியமும் அறிந்தவர். திருக்குறளை நன்கு கற்றவர். இனிய தமிழ்ச் சொற்களுடன் துடை (தொடை) போன்ற திரிபுச் சொற்களையும் வடசொற்களையும் கையாள்பவர். இவற்றை இவர் எழுதிய வருணகுலாதித்தன் உலா மடலில் காண்கிறோம். இந்நூலின் முதல் பதிப்பு 1775 இல் சந்திரசேகரப் பாவலராலும் இரண்டாவது பதிப்பு 1838இல் சரவணப் பெருமாள்[1] அய்யராலும் வெளிவந்தன. இரண்டாம் பதிப்பில் நூல் ஆசிரியர் பெயர் குறிக்கப் பெறவில்லை. ஆசிரியர் பற்றிய குழப்பத்தால் இவ்வாறு விட்டார் போலும்.

'மடல்' என்பது சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது. இது 'உலாமடல்', 'வளமடல்' என இருவகைப்படும். இந்நூல் 'உலாமடல்'. காதலன் ஒருவன் கனவில் உலா போகிறான். சோலையில் ஓர் அழகியைக் காண்கிறான். அவள் மேல் தீரா அடிமைக் காதல் கொள்கிறான். அவள் நடந்தபோது மண்ணில் பதிந்த காலடிச் சுவடு ஒவ்வொன்றையும் தொட்டுக் கண்களிலே ஒற்றிக் கொள்கிறான். இதனை,

**"மண்ணிலே தோயஅடி வைத்தசுவடு அத்தனையும்**

**கண்ணிலே ஒற்றிஒற்றிக் காமுற்றேன்"** என்று அவனே ஓலமிடுகிறான். இறுதியில் கண் விழித்தவன் அவளைக் காணாமல் கனவில் பார்த்த காலடிச் சுவட்டையும் தேடிக்காணாமல் மடல் ஏறுகிறான். தனக்குக் கிடைக்காத பெண் உருவத்தைத் துணியில் ஓவியமாகத் தீட்டி பனங்கறுக்கால் செய்த குதிரை மீது ஏறி ஊரில் உலா வருவது போன்று பேசுவது மடல் ஏறல் எனப்பெறும்.

## வருணகுலாதித்தன் உலா மடல்

இவ்வமைப்பில் இந்நூல் சிறந்தது. இலக்கியப் புலவர்களது வழக்கமான பேச்சில் 'வெண்பாவுக்குப் புகழேந்தி, வசைக்குக் காளமேகம்...' என்பர். இதுபோல்.

1. இவ்விரண்டாம் பதிப்பை எனக்கு அன்புடன் உதவியவர் நாகைப் பெருமாள் கோவில் தெருவில் வாழ்ந்த திரு. அ. கோவிந்தசாமி என்பார்.

"வருணகுலாதித்தன் உலா மடலைப் போல் ஒரு மடலும், முக்கூடற் பள்ளைப்போல் ஒருபள்ளும், குற்றாலக் குறவஞ்சிபோல் ஒரு குறவஞ்சியும் தமிழில் (வேறு நூல்கள்) இல்லை" என்று பழமொழிபோல் பேசிக் கொள்வர். இதனாலும் இந்நூலின் சிறப்பை அறியலாம்.

இன்பச் சுவையில் கனவில் காணப்பெற்ற தலைவி, அடி, பரடு, கணைக்கால் முதல், நெற்றி, கூந்தல்வரை அஃதாவது அடி முதல் முடி வரை 27 உறுப்புகளைச் சுவைபட வண்ணிக்கப்பெறுகிறாள்.

செந்தமிழையும் புலவர் மொழிகளையும் பல சுவைகளுக்கும் பெருமைகளுக்கும் உவமையாகக் காட்டியுள்ளார்.

**"உடுக்கையிழந்தவன் கை போல"**

**"காமம் உழந்து"** என்னும் குறட்பாக்களை அப்படியே அமைத்துப் பாடியுள்ளார்.

ஓடும் ஆற்றைப் பாடும் கண்ணிகள் முடுகி ஓடும் ஆறு போன்று அந்த ஓசையுடன் உள்ளன. வாய்விட்டுப் படிக்க வேண்டும் போல் ஆர்வம் எழும். படித்தால் நாவை உலுக்கி நெளித்துப் புரட்டி உருட்டும். இந்நூல் வெண்பாவில் தனிச்சொல் பெற்ற கண்ணிகளாக 470 கண்ணிகளையும் முன்னே மூன்று வாழ்த்து வெண்பாக்களையும் கொண்டது.

இடம் விரிவாவதைக் கருதி, சுவை சொட்டும் பகுதிகளை 'ஆர்வமுள்ளோர் நூலைத் தேடிப் பிடித்துச் சுவைக்கலாம்' என்னும் தூண்டுகோலுடன் நிறுத்த வேண்டியுள்ளது.

## காத்தான்

கற்ற நாகையராம் அம்மையார் தொடர்பில் வருணகுலாதித்தன் பற்றியும் காணவேண்டியுள்ளது. இவன் அவரால் பாடப்பெற்ற மடலின் பாட்டுடைத்தலைவன் என்பதால் மட்டும் அன்று; அஃதும் ஒரு சிறப்பே. இந்த ஆதித்தனும் கற்ற நாகையில் அவனை அம்மையாரே "முத்தமிழ்விரகன்" என்று சிறப்பித்துள்ளார். இயற்றமிழ், இசைத்தமிழ், கூத்துத்தமிழில் வல்லவனாகக் காண்கிறோம். இத்துடன் செந்தமிழ்ப் புலவர்களை உணர்ந்து போற்றியவன். இதனிலும் மேலாகத் தமிழ்ச்சங்கம் அமைத்தவன்.

மணிமுடியான அறமாக ஏழைகளுக்குச் 'சத்திரம்' அமைத்துப் பசி போக்கியவன். 'காத்தான் சத்திரம்' பற்றியும் 'காத்தான் செட்டித்தெரு' பற்றியும் அறிந்தோம்.

வருணகுலாதித்தன் மக்களைப் பசியின்றிக் காத்ததால் 'காத்தான்' என்னும் புகழ்ப் பெயரில் விளங்கினான்.

"கருணைமுகில் ஆனகொடைக் காத்தான் தென்னாகை

வருணகுலாதித்தன்" (11) என்று போற்றப்பெற்றான். இவன் வருணகுலத்துக் கோனேரிராசன் மகன் அச்சுதராயன் என்னும் இயற்பெயருடன் 'வருணகுலாதித்த அச்சுதராயன்' என்றும் 'திருமலைராய வருணகுலாதித்தன்' என்றும் வழங்கப்பெற்றவன்.

'நாகையர் கோன்' என்று போற்றப்பெற்றான். இவன் காலம் கி.பி. 1725 – 1750, என்று கணிக்க முடிகிறது. இப்புகழ் பெற்றவனாம் கற்றவனையும் பெற்றது நாகை.

## அழகிய முத்து

அருணகிரியார் முருகன் மேல் பாடியது 'திருப்புகழ்'. நாகை அருணகிரியார் எனத்தக்க நாகை அழகுமுத்துப் புலவர் நாகைக் குமரன் மேல் பாடியது 'திறப்புகழ்'. அது "கிரி' பாடியது. இது "முத்து" பாடியது. அது திருவான புகழ். இது திறமான புகழ். தொழுநோயரான புலவர் அழகுமுத்து அவர்கள் நாகைக் குமரன் கோயில் மெய்க்காவலராகத் திருப்பணி ஆற்றியவர். நாகை நீலா வடக்கு வீதியில் வாழ்ந்த திரு அம்பலவாண செட்டியாருக்கும் திருமதி சிவகாமசுந்தரிக்கும் அரும் மகனாகப் பிறந்தவர். இவர் திரு ஆனந்தரங்கம்பிள்ளையை "நாகை வரு ரங்கன் வாழி" என்று பாடியிருத்தலால் அவர் காலமாகிய கி.பி. 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் ஆகிறார்.

அழகு முத்துப்புலவர் பாடியவை 'திறப்புகழ்', 'மெய்கண்ட வேலாயுத சதகம்', 'மெய்கண்ட வேலாயுதக் குறவஞ்சி' என்னும் மூன்றுமாகும்.

உடல் 'தொழு' என்றாலும் செய்யுள் முத்து; அழகிய முத்து; சந்தத்தோடு "இசைக்கும் முத்து". இவர்தம் திருவுருவம் அக்கோயிலில் உள்ளது.

## இ. பிற்காலக் கற்றவர்

கால வரிசையில் இங்கே ஒரு புலவர் பட்டியலைத் தர வேண்டும்.

### இயற்றமிழ் ஆசிரியர்

நாகையில் 19, 20ஆம் நூற்றாண்டுகளின் முற்பகுதியினரைக் காண்கின்றோம். கற்றவராகவும் புலவராகவும் பலரை அறிகின்றோம்.

இவர்களில் முதல்வராக நாகை இயற்றமிழாசிரியர் திரு வே. நாராயணசாமி பிள்ளை காட்சி தருகிறார். "இயற்றமிழ் ஆசிரியர்" என்னும் அடைமொழியே இவர் இலக்கண இலக்கியங்களில் தேர்ந்த திறனாளர் என்பதை அறிவிக்கிறது.

நாகை யாதவத் தெரு என்னும் கடைத்தெருவின் முற்பகுதியில் புத்தகக்கடை வைத்திருந்த சிறு வாணிபப் புலவர் இவர். புத்தகம் வாங்க வருவோர் அவற்றைப் புரட்டிப் படிக்கவும் உதவுவர். ஐயம் கேட்போருக்கு அதனைத் தீர்த்து அறிவு கொளுத்துபவராகக் கற்றவர் ஆக்கினார்.

மனோன்மணியம் காப்பியத்தை வடித்த பேராசிரியர் திரு பெ. சுந்தரம் பிள்ளையவர்கள் திருவனந்தபுரத்திலிருந்து நாகை வந்து இயற்றமிழாசிரியர்பால் ஐயம் தீர்ந்து கற்றவர்.

### மறையாத தமிழ் மலை (1876 – 1950)

அடுத்துக் குறிக்கத்தக்கவர் மறைமலை அடிகளார். வேதாசலம் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் காடவர்கோன்பாடியில் வாழ்ந்த அறுவை மருத்துவர் திரு சொக்கலிங்கம் பிள்ளையின் மகனார். அவரின் காதற் கிழத்தியாக நாகை யாதவத் தெருவிலிருந்த சின்னம்மையாரால் ஈன்றெடுக்கப்பெற்றவர். பிறந்த நாள் 15.7.1876. நாகையில் அப்போதிருந்த வெசுலிமிசன் பள்ளியில் (இப்போது தென்னிந்தியத் திருச்சபை மேனிலைப்பள்ளி) பயின்றவர். பயிலும் போது தமிழும், ஆங்கிலமும் வடமொழியும் கற்றவர். எதிரிலிருந்த புத்தகக் கடைக்குச் சென்று இயற்றமிழாசிரி யரின் ஆசிரியம் கொண்டு புலமை நிறைத்துக்கொண்டார். சைவ சித்தாந்த நூல்களையும், வடமொழி நான்மறைகளையும் கற்றுத் தேர்ந்தார்.

பின்னர் சென்னை சென்று கிறித்துவக் கல்லூரியில் பேராசிரியராக அமர்ந்தார். 'பொது நிலைக்கழகம்' என்று பல்லாவரத்தில் துவங்கி, பலதுறை நூல்களாக 65 நூல்களைப் படைத்தார். செந்தமிழ் வடமொழி கலப்பதால் நேரும் தாழ்வையும் தூய்மைக்கேட்டையும் உணர்ந்து தனித்தமிழ் இயக்கம கண்டார். தம் பெயரை மறைமலைஅடிகள் (சுவாமி - அடிகள்; வேதம் - மறை; அசலம் - மலை) என்றாக்கிக் கொண்டார்.

இதன் முன் 'நாகை வேதாசலம்' என்று தம் நூல்களிலும் கட்டுரைகளிலும் தம் ஊராம் நாகையைக் குறித்துகொண்டார்.

தனித்தமிழ் ஊற்றமும் தமிழ் மரபின் ஏற்றமும் சைவத்தில் பகுத்தறிவின் தேற்றமும் கொண்டவர். சொற்பொழிவு உலகுக்கு மிடுக்கும் பெருமிதமும் கவர்ச்சியும் வழங்கியவர். ஆரியரின் வேண்டாத செயல்களை வெளிப்படுத்தியவர். இந்தி பொதுமொழியாதலை எதிர்த்தவர்.

நாகைக்கு மட்டுமன்றித் தமிழகத்திற்கே ஒரு தமிழ்மலை. தமிழகத்திற்கு மட்டும் அன்றித் தமிழ் வழங்கும் உலகுக்கெல்லாம் திருவள்ளுவர் ஆண்டைக் கண்டு வழங்கிய பெருமகனார்.

## மலைச்சிலை

இத்தமிழ் மலையை மறையாத மலையாக நாகைப் பெருமக்கள் முழு உருவ வெண்கலச் சிலையை நாட்டியுள்ளமை கண்டோம். அடிகளார் பிறந்த யாதவத் தெருவின் இடத்திலேயே இச்சிலை நாட்டப்பெற்றது.

இவ்வழகுச்சிலை திருவள்ளுவர் ஆண்டு 2000 - இல் ஆனி 5 இற்கு நேரான 19.6.1969இல் நாட்டப்பட்டது. நாகைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் அமைந்த குழுவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் யான்

பொதுச் செயலாளராகப் பணியாற்றி நிறைவேற்ற நேர்ந்தது. நாகைப் பெருமக்களும் வெளியூர்ப் பெருமக்களும் மனம் பற்றி உதவினர்; புலவர்கள் உழைத்தனர்; யான் ஆற்றிய பணிகளில் இது மனநிறைவு தரும் முதன்மையான பணி.

## சிலைப் பாட்டு

ஒன்றைக் குறிக்க வேண்டும். இச்சிலையின் அடிப்பீடம் கருங் கல்லாலாகியது. திருவாவடுதுறைச் சைவத் திருவிடத்துத் தலைவரவர்கள் இதற்கு முழு நன்கொடையும் வழங்கினார்கள். இதன் வடபுறக் கல்வெட்டில் உள்ள அறுசீர் விருத்தம் குறிக்கத்தக்கது. வெளியாராலும் வெளி நாட்டாராலும் சுவைக்கப்பெற்றுப் படியெடுத்துச் செல்லப்பட்ட சிறப்புடைய அது கீழ் வருவது:

**"நாகையில் பிறப்பை வைத்தார்;**
**நாகையில் தமிழை வைத்தார்;**
**ஓகையில் துறவை வைத்தார்;**
**ஒளியினில் இறைமை வைத்தார்;**
**வாகையில் வாழ்வை வைத்தார்;**
**வகைவகை நூல்கள் வைத்தார்;**
**ஆகையால் சிலையை வைத்தோம்;**
**அவர்நெறி செயலில் வைப்பீர்". (11)**

இதன் அடியில் 'புலவர் கோவை. இளஞ்சேரன்' என்றிருப்பது இன்றும் என்னை மகிழ்விப்பது.

## மலை மலர்

இவ்விழாவின் போது நாகைத் தமிழ்ச் சங்கச் சார்பில் பதிப்பாசிரியனாக யான் அமைய மலர்ந்த "மறைமலையடிகளார் நினைவுமலர்" மலர்க்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்பெற்று நிற்பது. தனித்தமிழில் உருவானது என்பது குறிக்கத்தக்கது.

## மலைக்குப் பாளம்

அடிகளார்க்குத் தென்பகுதிப் புகைவண்டித்துறை ஆற்றிய நினைவுப் பதிவு நன்றியுடன் குறிக்கத்தக்கது. நாகைப் புகைவண்டி நிலையத்தில்,

"நிறை தமிழ்ச் செம்மல்

மறைமலை அடிகளார்

பிறந்த நகரம்"

என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப் பெற்ற பாளம் நிலை நாட்டப் பெற்றுள்ளது. இதனைப் பற்றி ஒரு குறிப்பைத் தர வேண்டும்.

நாகைப் புகைவண்டிநிலையக் கலந்தாய்வுக் குழு உறுப்பின ராக யான் இருந்த போது இவ்வாறமைக்க ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டு அறிவிப்புப் பலகையும் செய்யப்பட்டது. 4 அடி நீளம் 11/2 அடி அகலத்தில் மரச்சட்டத்தில் அடித்த தகட்டில் எழுதப்பட்டதாக அமைக்கப்பட்டது. இஃது கடனுக்குச் செய்யப்பட்டதாகக் காட்டிற்று. இதனை உருவாக்கிய அத்துறைப் பொறியாளரின் பரந்த மனத்தை இது வெளிப்படுத்தியது. அப்போது தென்பகுதிப் புகைவண்டித் துறைப் பொது மேலாளராகத் திருச்சிராப்பள்ளியில் திரு.கோபால தேசிகன் என்பார் இருந்தார். இச்சூழலில் நாகைக்கு வந்திருந்தார். அவருடன் உரையாடிய போது இவ்வறிவிப்புப் பலகை பற்றி விளக்கம் கேட்டு அதனைப் பார்த்தார். அதனால் மனம் நிறைவடையாத அவர் ஒன்றும் சொல்ல முடியாமல் தாம் வந்த தனி மெருகு வண்டிக்குப் போய் என்னை அழைத்து வருந்தி உரையாடினார். அதனை வாய்ப்பாகக் கொண்டு, "இதனை நாட்டித் திறக்கத் தங்களைத்தான் அழைக்கப் போகிறேன். இதனை நாட்ட முனைந்தவனும் நானே. நாட்டப்பட்ட பிறகு 100 தமிழார்வலருடன் வந்து உடைக்க இருப்பவனும் நானே" என்றேன். கேட்டு வருத்தப் புன்னகை கொண்ட அவர் உடன் பொறியாளரை அழைத்து என்னைக் காட்டி, "இவர் சொல்வது போல் அதனை மாற்றிச் செய்க" என்றார். அவ்வாறே செய்யப்பட்டுப் புகை வண்டி நிலையத்தில் அதனை நாட்டிய விழாவில் அன்றைய மாவட்ட அறமன்றத் தலைவராக இருந்தவரும் இப்போது சென்னை உயர்அறமன்றத்து நடுவர் செம்மலாக (Justice) உள்ளவருமான மாண்பமை சனார்த்தனம் அவர்கள் தலைமையில் திருமிகு கோபால தேசிகன் அவர்கள் திறந்து வைத்தார்கள். அப்பெருமகனார் இன்றும் நன்றியுடன் குறிக்கத்தக்கவர்.

அன்று இரவு நாகைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நிகழ்ந்த இலக் கியக் கூட்டத்தில் சென்னை உயர் அறமன்றத் தலைமை நடுவராக

இருந்த நடுவர் செம்மல் மு.மு. இசுமாயில் அவர்கள் தலைமையில் திருமிகு கோபால தேசிகன் அரிய உரையாற்றினார். இவர் சிறந்த திருமாலியத் தமிழ் அறிவரும் ஆவார். இவரால் நகரம் கற்றவர் உதவிபெற்ற நாகையாயிற்று.

## மலையின் குன்றுகள்

கற்றவர் வரலாற்றில் அடுத்து மறைமலை யடிகளாரின் மாணவர்கள் பலர் முன்வருகின்றனர். தண்டபாணிப் பெருமகனார் என்பார் திருக்குறள் அறத்துப்பாலுக்கு விருத்தியுரை தந்தவர். இவரின் இளவல் திரு கோபால கிருட்டிணன் என்பார் பல புதினங்களை எழுதியவர். இவரும் புலமை செறிந்தவர்.

## வள்ளலார் வாழ்வினர்

வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளாரின் திருஅருட்பாவில் தேர்ந்தவரும் வள்ளலாரை அடியொற்றி வாழ்ந்தவரும் ஆகிய திரு அருணாசலம் பிள்ளை என்பார் நெல்லுக்கடை மாரியம்மன் கோயிலிலிருந்து பழைய பேருந்து நிலையத்திற்குச் செல்லும் தெருவில் ஓர் இல்லத்தில் வாழ்ந்தார். அவரை யான் ஒருமுறை கண்டு உரையாட நேர்ந்தது. வள்ளலாருடன் உரையாடியமை போன்ற உணர்வு கொண்டேன்.

## தோடா பெற்றவர்

நாகை நாட்டுயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணி யாற்றிய புலவர் கோ. சதாசிவம் பிள்ளை 'நீலலோசனி' என்றொரு இதழை வெளியிட்டார். அரிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார். 'புலிக்கண்ணி', 'மறலிவிடுதூது' முதலிய நூல்களை எழுதினார். இவர் இறுதியில் எழுதிய 'கையறுநிலை' 'நான் இயற்கையெய்திப் போகும் இடத்தில் தொல்காப்பியர், திருவள்ளுவர் முதலிய சான்றோர்களைக் காண்பேன்' என்னும் கருத்துடைய அகவலாகும்; சுவையானது. முன்னர் சட்டையப்பர் கோயில் தேர் இழுக்க "வடம் பிடிக்க வாருங்கள்" என்று பாடிச் செல்வாக்கை நிலை நாட்டியதைக் கண்டோம். இவர் தமிழ்ப் புரவலர் மதுரை பாண்டித்துரைத் தேவரவர்களிடம் தோடாவும் பாராட்டும் பெற்றவராவார்.

# ஈ. 300 ஆண்டுகளில்

18 ஆம் நூற்றாண்டு முதல் 20ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த புலவர்கள் மிகப் பலர். சிதறலாகக் கிடைக்கும் புலவர் பெருமக்கள் இங்குத் தொகுக்கப்பெறுகின்றனர். இவர் நீளும் பட்டியலில் அமைபவராவர்.

சைவ, திருமாலிய, இசுலாமிய, கிறித்துவ, ஐரோப்பியப் புலவர்களை இப்பட்டியலில் காண்போம். மகளிர் பங்கில் ஓர் அம்மையாரும் உள்ளார்.

## திருமண் இட்டோர்

திருமாலியப் புலமைத் திருவினர் பலர் நாகையில் இருந்து நூல்கள் படைத்தனர். நாகை வெளிப்பாளையத்தைச் சேர்ந்த திரு ஐ. முத்துக்கிருட்டிண பிள்ளை ஆழ்வார் இராமானுசதாசர் என்னும் திருமாலியப் பெயர் கொண்டவர். 'பக்தாம்ருத மஞ்சரி' படைத்தவர். வெளிவை ஆழ்வார்தாசர் வேங்கடேசதாசர், நாகைப் பெருமான் மீது 'தசாவதாரப் பதிகம்' பாடிய திரு நா. சுப்பராயபிள்ளை, வெளிவை திரு வாசுதேவநாயுடு, பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றிய திரு புருடோத்தம நாயுடு, திரு குமரகுரு ஆசாரி ஆகியோர் நெற்றியில் திருமண் இட்ட புலவர்கள்.

## புலமைத் திறத்தர்

நாகையில் வாழ்ந்த யாழ்ப்பாணம் திரு முத்துத் தம்பியா பிள்ளை குறிப்பிடத்தக்கவர். குறிப்பிடத்தக்க 'அபிதான கோசம்', 'நன்னூல் இலகுபோதம்', 'தென்மொழி வரலாறு' என்னும் மூன்று அரிய நூல்களைப் படைத்தவர். குடமூக்கைச் சேர்ந்தவராக நாகையில் வாழ்ந்த பள்ளி ஆசிரியர் திருக்குடந்தை திரு சபாபதியாபிள்ளை, 'திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் பெரியநாயகி யம்மன் பதிகம்' பாடினார்.

தென்னிந்தியத் திருச்சபை உயர் நிலைப்பள்ளியில் பணி யாற்றிய வடமொழிப்புலவர் திரு ச. சக்ரபாணி ஐயர் 'கணிகஞானி ஒரு சம்வாதம்' எழுதினார். இப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணி புரிந்த திரு முத்துச்சாமி ஐயர் தேர்ந்த புலவர். (இப்பள்ளியில் யான் 29 ஆண்டுகள் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினேன்.)

நாகை நாட்டுயர்நிலைப்பள்ளியில் பணியாற்றிய திரு முத்துராம பாரதி, இப்பள்ளியில் பணியாற்றிய, 'நாகை நான்மணி

மாலை' படைத்த திரு சா. சாமிநாத பிள்ளை, இந்நூற்குப் பாராட்டுப்பா நல்கிய சைவப் பெரியார் செந்தமிழ் ஆசான் என்று போற்றப்பட்ட திரு சோ.ம.தெ.முத்துக்காயாரோகணம் செட்டியார், இசுலாமியப் புலவராகிய திரு கிருது முகம்மது மரக்கலவரையர் 'அட்டநாகபந்தம்' எழுதினார். திரு சீமான் பிள்ளை ஒரு புலமை வணிகர். இவர் சென்னை இதழான 'மகர விகட தூதனின்' நாகை முகவர். நாகையில் கோயில் குருக்களாகப் பணியாற்றிய திரு வி. பிச்சுக் குருக்கள் 'கருந்தடங் கண்ணியம்மை ஆடிப்பூர ஓடப்பாட்டு' எழுதினார். மகளிர் உலக அம்மையாராகத் திருமதி நாகலட்சுமி அம்மாள் 'நீலாயதாட்சியம்மன் நவரத்தினமாலை' பாடினார். திரு மாணிக்கக் கவிராயர் என்பார் ஒரு நாகைப் புலவர்.

இந்நாட்டார் மட்டும் தமிழ்ப் புலவரோ? இதோ 'ஐரோப்பியன் யானும் தமிழ்ப் புலவனே' என்று தலை உயர்த்தியவர் மறைத்திரு ஏல்வைன் ஐயர் தென்னிந்தியத் திருச்சபைத் தலைவர்.

இவ்வாறமைந்த புலவர் பலரின் வரலாறுகளைக் குறித்துக் காட்டும் நூலாகிய 'கோயில் வரலாறு' என்னும் நூலைப் பாடிய திரு இராம. சிங்காரவேலுப் பத்தர் என்பார் நாகை அக்கரைக்குளம் செர்க்கநாகர் மீது இந்நூலைப் பாடினார்.

நாகையை அடுத்த உரத்தூரில் ஓர் அந்தணப் புலவர் வாழ்ந்துள்ளார். அவரிடம் தொண்டை நாட்டு அனதாரி என்பவர் தமிழ் கற்று மதுரைச் சுந்தர பாண்டியன் வரலாற்றைச் 'சுந்தரபாண்டியம்' என்னும் பெருநூலாகப் பாடினார். தண்ணிலப்பாடி திரு நடராசுப்பிள்ளை திருவிளையாடற்புராணச் சொற்பொழிவில் சிறந்த புலவராவார். கீழ்வேளூரில் வாழ்ந்த திரு சுப்பிரமணிய தேசிகர் அரிய நிகண்டு நூலொன்றை எழுதினார்.

"மிருச்சகடிகம்" என்னும் வடமொழி நாடக நூலை நாகை வழக்கறிஞர் திரு பாலகிருட்டிண ஐயர் என்பார் தமிழில் மொழி பெயர்த்தார். இவர் வடமொழியிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர்.[1]

திருமாலியப் புலவர்கள் தொடக்கமாக இதுவரை காட்டப்பெற்ற புல்வர் விவரங்கள் நாகைத்தமிழ்ச் சங்கத்து வெளியீடாகிய 'மறைமலையடிகளார் நினைவு மல'ரில் நாகைத் தமிழறிஞர் திரு இரா. ஆதிகேசவனார் எழுதிய 'நாகைப் புலவர் வரலாறு' என்னும் கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டவை.

வடமொழி உபநிடதம் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றது. அதைப் பின்னர் அறியலாம்.

## நாகையில் பிள்ளையவர்கள்

தமிழ் உலகில் 'பிள்ளையவர்கள்' என்றால் திருச்சிராப்பள்ளி மகாவித்துவான் புலவர் ஏறு திரு சி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களையே குறிக்கும். பிள்ளையவர்கள் நாகைக்கு வந்து ஈராண்டுகள் உறைந்து நாகையைப் புலவர் நாகை ஆக்கினார்.

பிள்ளையவர்கள் (1815–1876) மதுரை திரு சிதம்பரம்பிள்ளை – திருமதி அன்னத்தாச்சி பெற்ற திருமகனார். பல புலமைச் சான்றோர்பால் தமிழ் பயின்றார். இலக்கண, இலக்கிய, சைவ, சித்தாந்தத்தில் ஒப்பு சொல்ல முடியாத பெரும் புலமையர். 'இலக்கண விளக்கம்' என்னும் நூலை நாகைக்கு அண்மையிலுள்ள கீழ்வேளூர்க்கு வந்து அங்கிருந்த பெரும்புலவர் திரு சுப்பிரமணிய தேசிகர்பால் பாடம் கேட்டதும் குறிக்கத்தக்க ஒன்று.

## படிப்பின்றி நேரம் இல்லை

தமிழ் நூல்களைப் பாடம் சொல்லுதல் அவர்தம் உயிரோட்ட வாழ்வு. செய்யுள் யாத்தல் அவர்தம் நாடித்துடிப்பின் நன்மைகள். சமய புராணச் சொற்பொழிவு அவர்தம் உணர்வார்ந்த பணி. இம்மூன்றிற்கும் இழையோட்டம் என்றும் நீங்காத அவர்தம் படிப்பு.

ஒருமுறை அவர்தம் தலைமை மாணாக்கராகிய பூவாளூர் தியாகராச செட்டியார் பிள்ளையவர்களிடம்,

"இடைவிடாமற் பாடஞ் சொல்லுவதாகப்

பேர்வைத்துக்கொண்டு நன்றாய்ப்

படித்து வருகிறீர்கள்" என்றாராம். (12) இது கொண்டு அவர்தம் நீங்காப் படிப்பை அறியலாம். அவ்வாறு நாளெல்லாம் நேரமெல்லாம் கற்றவரை நாகை பெற்றுப் பலரைப் பயிலவைத்தது. இவ்வகையில் பிள்ளையவர்கள் கற்றவர் பயில் நாகை என்பதற்குச் சிறப்புரை தந்தவராவார். நாகைத் தொடர்பில் அவர்களை அறிவது ஒரு கடமையாகும்.

## நாகைப் புராணம்

பிள்ளையவர்களால் புராணம் பாடப்பெறாத ஊர் சிறப் படையாது என்றொரு வழக்கு உண்டு. அச்சிறப்பை நாகை பெற

இருவர் முனைந்தனர். ஒருவர் தேவாரத் திருக்கூட்டத் தலைவராக இருந்த தவத்திரு வீரப்ப செட்டியார். மற்றவர் நாகையில் அரசுப் பணிகளின் மேற்பார்வையாளராக (Overseas) அலுவல் புரிந்த திரு அப்பாத்துரை முதலியார். இருவர் வேண்டுகோளையும் ஏற்றுப் பிள்ளையவர்கள் நாகை வந்து சட்டையப்பர் கோயில் தெருவிலமைந்த திருவாவடுதுறை மடத்தில் உறைந்து 1868 ஏப்ரலில் திருநாகைக் காரோணப் புராணத்தை எழுதத் துவங்கினார்கள். ஓராண்டுக் காலம் இப்படைப்பைச் செய்தார்கள்.

## குருதி கசிந்த விரல்

இப்பணியின் போது நேர்ந்த சுவையான நிகழ்ச்சிகள் பல. ஒன்றையேனும் குறிக்கவேண்டும் அது பிள்ளையவர்களின் செய்யுள் இயற்றும் விரைவையும் மணிக்கணக்கில் தொடர்ந்து செய்யுளைச் சொல்லிக் கொண்டே போகும் ஆற்றலையும் பதிவதாகும்.

அக்காலக் கட்டத்தில் பனையோலையில் எழுதும் பழக்கும் இருந்தது. செய்யுளியற்றுவோர் தாமும் எழுதுவர்; அவர் சொல்லக் கேட்டு எழுதும் ஏடெழுதுவோரும் இருந்தனர் இதன் குறிப்பில் தான் "எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான்" என்னும் பழமொழி எழுந்தது.

பிள்ளையவர்களது மாணவர் உரத்தநாடு கோபால் பிள்ளை என்பார் பிள்ளையவர்கள் சொல்ல, பனை ஏட்டில் எழுத அமைந் தார். ஓலையில் விரைந்து எழுதும் திறனாளர். இவர். இத்திறத் தைப்பற்றிய தன்முனைப்பான பெருமையும் கொள்பவர். ஒருநாள்,

"ஐயா அவர்கள் என்னுடைய கை வலிக்கும்படி

பாடல் சொல்லுகிறார்களில்லையே" என்று நண்பரிடம் சொல் லியதை உள்ளிருந்து கேட்ட பிள்ளையவர்கள் அன்று பாடல்களைச் சொல்லத் துவங்கினார்கள். காலை ஏழுமணிக்குத் தொடங்கியது. அன்று மிகத் தொடர்ச்சியாக விரைந்தன செய்யுள்கள். 10மணிக்கு நிறுத்தும் நேரம் போய் 12மணி வரை நீடித்தது. 11 மணி அளவிலேயே ஏடு எழுதிய திரு கோபாலர் விரல்களில் குருதி கட்டிச் சிவந்து 12 மணியில் குருதி கசியும் நிலைவந்து வலி துடிக்க வைத்தது. விரலை அசைக்க முடியாத நிலையில் சுவடிகளையும் எழுத்தாணியையும் பிள்ளையவர்கள் திருவடியில் வைத்து வீழ்ந்து வணங்கிக் கசிந்து பொறுத்தாற்ற வேண்டினார்.(13)

## அரங்கேற்றம்

இக்குறிப்பை இங்குத் தரும் அளவில் திறனோடு அமைந்த நூல் திருநாகை காரோணப் புராணம். இது 61 படலங்களில் 2506 பாடல்களைக் கொண்டது. இந்நூல் அரங்கேற்றம் 1869 பிப்ரவரியில் நிகழ்ந்தது. அரங்கேற்றத்திற்கு முன்னரே இந்நூல் அச்சேறியது. அரங்கேற்றம் தொடர்ந்து ஓராண்டு நிகழ்ந்தது. காரோணர் முத்தி மண்டபத்தில் புலவர் மணிகள் சூழ நிகழ்ந்தது. கற்றவர்பயில் நாகையாயிற்றே; இடையிடையே சுவைத்துப் பாராட்டியோருடன், ஐயம் எழுப்பியோரும், மறுத்துப் பேசியோரும் இருந்தனர். அனைவரும் அமைதியும் உவகையும் பெருமிதமும் கொள்ளுமாறு நூல் அரங்கேறியது.

இவ்வரங்கேற்றத்தின்போது நாகைக்கு வருகை தந்திருந்த காஞ்சி சங்கரமடத்துத் தலைவர் அருள்மிகு சங்கராச்சாரியார் அவர்கள் பிள்ளையவர்களை அழைத்துப் பாராட்டினார்கள்.

திரு அப்பாத்துரைப் பிள்ளையவர்கள் இப்பணியில் முனைந்து நின்று நிறைவின்போது யானை மேல் நூலை எடுத்துச்சென்று பிள்ளையவர்களைப் பாராட்டிக் காணிக்கைகளும் வழங்கினார்.

கற்றார் பெற்ற நாகைக்குக் கற்றார் போற்றும் பெருநூல் கிடைத்தது.

## நாகையில் பாரதியார்

கற்றவர் பயிலும் நாகை உற்றவரும், கற்றவரும் வருகை தந்த பெருமையையும் பெற்றது. அவ்வாறு வந்தாரால் வெளிப்படும் செய்திகள் பல. அவற்றுள் சிறந்த ஒன்று:

நாகை பெற்ற பேறான அது கவி மாமன்னன் பாரதியார் நாகைக்கு வந்து சில நாள்கள் தங்கியதும் அப்போது அவர் ஒரு வாய்ப்புப்பெற்றதுமாகும். தாம் நாகைக்கு வந்ததைத் தம் அறுபத் தாறில் பாரதியாரே பாடியுள்ளார்.

"அன்றொருநாள் புதுவைநகர் தனிலே கீர்த்தி
அடைக்கல ம்சேர் ஈசுவரன் தர்ம ராஜா
என்றபெயர் வீதியிலோர் சிறிய வீட்டில்
இராசாரா மையனெனும் நாகைப் பார்ப்பான்

முன்றனது பிதாதமிழில் உபநிட தத்தை
மொழிபெயர்த்து வைத்ததனைத் திருத்தச் சொல்லி
என்றனைவேண் டிக்கொள்ள, யான்சென்று ஆங்கண்
இருக்கையிலே அங்குவந்தான் குள்ளச் சாமி" (14)

இப்பாடலால் நாகையில் வாழ்ந்த இராசாராம் ஐயரின் தந்தை உபநிடதத்தைத் தமிழில் மொழிபெயர்த்ததை அறிகிறோம். அத்துடன் அரிய செய்தி ஒன்றும் கிடைக்கிறது. பாரதியார் "யான் சென்று அங்கு இருக்கையிலே" என்றதால் நாகைக்குப் பாரதியார் வருகை தந்து சில நாள்கள் தங்கியிருந்தார் என்றும் அறிகிறோம். இத்துடன் "அங்கு வந்தான் குள்ளச்சாமி" என்று 'குள்ளச்சாமி' என்றொரு மெய்யறிவுச் சான்றோர் (சித்தர்) நாகையில் இருந்ததையும் அறிகிறோம். தொடர்ந்து நான்கு பாட்டுக்களில் குள்ளச்சாமியால் பாரதியார் தாம் பெற்ற மெய்யறிவை விளக்கியுள்ளார். இக்குள்ளச்சாமி பித்தர் போல் நாகையில் திரிந்துள்ளார். இவ்வகைஞானி ஒருவரை — சித்து கற்றவரை — நாகை பெற்றிருந்தது என்பது ஒரு சிறப்பான செய்தியாகும்.

நாகைக்குவந்த பாரதியாரை நாகைச் சட்டையப்பர் கீழவீதியில் 'சனோபகார அச்சகம்' என்றொரு அச்சகத்தை நடத்திய திரு சனார்த்தனம் ஐயர் வரவேற்றுத் தம் இல்லில் தங்க வைத்தார். அவர் மகனார் என்பால் இதனைக் கூறினார்.

## நாவலர் குலாம் காதிறு (1833–1908)

நாகை ஒரு மறைமலை யடிகளாரைப் பெற்றது போன்று நாகூர் ஒரு குலாம் காதிறு நாவலரைப் பெற்றது. அதன் வழி நாகையும் ஒரு பெருமை பெற்றது.

புலமைத் திரு குலாம் காதிறு அவர்கள் நாகூரில் 1833 இல் பிறந்தார். தந்தையார் பெயர் வாபு இராவுத்தர். நாவலரவர்கள் தமிழ், ஆங்கிலம், அரபு மொழிகளில் அறிவு நிரம்பியவர், முன்னர் இயற் றமிழாசிரியர் வே. நாராயணசாமி பிள்ளையவர்களிடமும், பின்னர் புலவர் ஏறு மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடமும் தமிழ் கற்றார். மதுரையில் தமிழ்த்திரு பாண்டித்துரை தேவர் தமிழ்ச்சங்கம் அமைத்த போது இவர் பணியையும் அவர் பெற்றார். 'மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவராற்றுப்படை என்னும் நூலை எழுதிச் சங்கத்திலேயே அரங் கேற்றினார். மலேயா, இலங்கை சென்று தமிழும் இசுலாமும்

பரப்பினார். யாழ்ப்பாணத்திலும் இவர்தம் நூலொன்று அரங் கேறியது.

நாகையில் சிறந்த வணிகராக இருந்த மதுரைப்பிள்ளை கூட்டிய பெரும்மன்றில் 'நாவலர்' பட்டம் வழங்கப்பெற்றார். பெரும்புலவர் சோழவந்தான் அரசஞ்சண்முகனார் இவர்தம் இலக்கண இலக்கியப் புலமைய்ப் போற்றி எழுதினார். 'புலவர் குலமணி' என்று பாராட்டப் பெற்றார்.

இவர் எழுதிய நூல்கள் 24. அவற்றுள் 'பொருத்த இலக்கணம்' முதலிய இலக்கண நூல்களும், இலக்கியங்களும், உரைகளும், உரை நடை ஆக்க நூல்களும், சமய நூல்களாகச் சிற்றிலக்கியங்களும் உள்ளன. நாகூர் ஆண்டவர் வரலாறாக எழுதப்பட்ட 'கல்சூல் கறா மத்து' குறிப்பிடத்தக்க பெருநூல். அது 131 அத்தியாயங்களும் 576 பக்க அளவும் கொண்ட நூல். நாகூர் ஆண்டவர் வரலாற்றை நிறை வாகக் கூறுவது அந்நூல்.

'புலவராற்றுப்படை' என்னும் அவர்தம் நூல் சங்க இலக் கியத்தில் பத்துப்பாட்டின் ஒரு பாட்டு போன்ற சிறப்புடையது. இவர் எழுதிய 'அரபு – தமிழ் அகராதி' குறிக்கத்தக்க தமிழ்ப் பணியாகும்.

நாகூர் முத்துப் புலவர் இயல்பான ஓட்டத்தில் செய்யுளியற்றும் புலமையாளர். தமிழ்த்திரு பாண்டித்துரை தேவர்பால் பேரன்பு பூண்டு அவரால் போற்றப்பெற்றவர். அவர்மேல் 51 பாடல்களும் பல தனிப் பாடல்களும் பாடியுள்ளார்.

## எமவாதம்

திரு இராசகோபால பிள்ளை என்பார் ஒரு நாகை எழுத்தாளர். இவர் 'எம வாதம்' என்றொரு நூலை எழுதினார். இஃதொரு வழக்காடல் நூல். நாடக உருவில் அமைந்தது.

மார்க்கண்டேயருக்காகச் சிவபெருமான் காலனைக் (எமனை) காலால் உதைத்துச் சாய்த்தார். பின்னர் உயிர்பெற்ற எமன் தன்னைச் சிவபெருமான் உதைத்தது குற்றம்; உயிர் வாங்கும் என் கடமையைச் செய்யும் போது தடுத்ததால் குற்றம். எனவே, அவரை அறமன்றத்தில் குற்றக் கூண்டில் நிறுத்தி உசாவித் (விசாரித்து) தீர்ப்பு வழங்க வேண்டும். இவ்வாறு எமன், நாகை அறமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுக்கிறார். இவ்வாறு அமைக்கப்பெற்ற நூல் 'எமவாதம்' என்பது. இஃதொரு புதுமைப் படைப்பு; பட்டிமன்றப்

பாங்கு; வழக்காடுமன்ற அடையாள நூல். சொற்போரைக் காணலாம். தீர்ப்பு சிவபெருமானுக்குச் சார்பாயிற்று.

நாகைநடுவர் கோயிலில் மார்க்கண்டேயன் மேல் கவரும் கயிறு வீசியதற்காகக் கழுவாய் வேண்டி எமன் வழிபட்டான் என்னும் புராண நினைவிலும் இதன் ஆசிரியர் இவ்வழக்குநூலைப் படைத்ததாகவும் கொள்ளலாம்.

## புலமை விருந்தினர்

நாகையில் வந்தமைந்த புலமை விருந்தினர் பலருள் 1950இல் பெரும்புலவர் அ. கோபாலய்யர் என்பவர் நாகநாதர் திருமுன் தெருவில் சில ஆண்டுகள் உறைந்தார். இவர் கலிங்கத்துப்பரணி, பெருந்தேவனார் பாரதம் ஆகிய நூல்களுக்கு உரையெழுதிப் பதிப் பித்தவர். தனிப்பாடல்கள் பல எழுதிவர். 'கடோத்கசன் தூது' என்று வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தவர்.

புலவர் பலர் நாகைக்கு வந்து பணியாற்றினர். பெரும் புலவர் ச.தண்டபாணி தேசிகர் அவர்கள் நாகை நாட்டுயர்நிலைப் பள்ளி யில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். திருவாவடுதுறை, தரும புரம், திருப்பனந்தாள் ஆகிய சைவத் திருமடங்களில் நல்லிடம் பெற்றுப் பல நூல்களைப் பதிப்பித்தார். தம் படைப்பாகவும் பதிப்பாகவும் 150 நூல்களுக்கு மேல் உருவாக்கிய பெரும் ஆசிரியர். மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இவருக்கு முதுமுனைவர் (D. Litt.,) பட்டமளித்துச் சிறப்பித்தது. நாகை கொண்ட புலவர் இவர்.

## கண்முன் காட்சியர்

நம் காலத்தவர் என்று சிறப்பாகப் பல கற்றாரைக் குறிக்க வேண்டும்.

## கம்பத் திறனாளர்

புலவராகக் கல்லாது போயினும் நுண்ணறிவால் புலவராகவும் கற்ற பேரறிஞராகவும் திகழ்கின்றவர் மாண்புத் திரு மு.மு. இசுமாயில் அவர்கள். நாகூரில் பிறந்து நாகை நாட்டுயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்றவர். பின்னர் சென்னையில் சட்டக்கல்வி பயின்று அறமன்ற நடுவரானார். சென்னை உயர் அறமன்றத் தலைமை நடுவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

கல்வியிற் சிறந்த இப்பெரியார் தமிழ் இலக்கிய நூல்களை ஈடுபாட்டுடன் பயின்றவர். கம்பர் இராமாயணத்தில் தோய்ந்தவர்.

சென்னையில் 'கம்பன் கழகம்' அமைத்துக் கம்பன் கன்னித் தமிழ் பரப்புகின்றவர். கம்பராமாயணப் பதிப்பை அழகியதாய்ப் பதிப்பித் துள்ளார். கருத்தழகும் சுவையழகும்பட கம்ப இராமாயணத்தையும் பிற இலக்கியங்களையும் திறம்படப்பொழியவும் எழுதவும் வல்லவர்.

இசுலாமியரான இவர் புலால் உண்ணாத பெருந்தகை. நேர்மையும், நெறியும், கண்டிப்பும் கொண்ட அறவர்.

இக்கற்றாரைப் பெற்ற நாகை மற்றாருக்கும் பயன்படும் வகையில் அவரைச் சென்னைக்கு வழங்கிற்று.

## புலமைப் பணியினர்

நாகை நாட்டுயர்நிலைப்பள்ளியில் நெட்டாண்டுகள் பணி யாற்றிப் புகழுடம்பில் நிற்கும் புலமைத்திரு வை. சண்முகதேசிகர் சைவப் பெரும்புலவர். கணீரென்ற குரல் இசையாளர். பல மணிக் காலம் தேவாரத்தை நல்லிசையுடன் பாடும் செம்மல். சமயச்சொற் பொழிவில் இசையர். இலங்கைக்குச் சென்று சமயச் சொற் பொழிவுகள் ஆற்றியவர்.

ஆங்கில மருத்துவராய்த் தமிழ் பயின்ற பெருமகன் மருத்துவர் திரு ப.மு. சொக்கலிங்கனார். தருமைச் சைவத் திருமடத்துப் புலவர் தமிழ்த்திரு. த. முத்துத் தாண்டவராயர் மகனார். எளியவர்க்கு இரங்கும் பெருந்தகை. நாகைத் தமிழ்ச் சங்கப் புலவர் விரும்பிப் பயின்று 65 ஆவது அகவையில் புலவர் பட்டம் பெற்றவர். செம்பாகமான செய்யுள்கள் இயற்றியவர். வெண்பாக்கள் இயற்றும் திறனாளர். 'தருமையாதீனச் சிலேடை வெண்பா' என்றொரு நூலைப் படைத்தவர். சைவ முத்திரை பெற்றவர். நிறைவுக் காலம் வரை தமிழ் நூல்களைப் படித்துச் சுவைத்தவர். குழந்தை உள்ளம்கொண்டவர்.

நாகை நகைக் கடையில் எளிய கணக்கராகப் பணியாற்றி யவராகச் சிக்கலில் வாழ்ந்த திரு. சிங்காரவேலர் நல்ல எழுத்தாளர். பொதுவுடைமை மூலவர் காரல்மார்க்சு எழுதிய 'முதலிமை' (Capital) என்னும் நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர். அஃது அச்சில் வந்துள்ளது. அடக்கமானவர், கற்றவர் என்று கொண்டு நாம் உவக்கலாம்.

நாகையில் தமிழறிஞராக வாழும் திருமாலியத் திரு இரா. ஆதி கேசவனார் ஒரு நிலக்கிழார். அதனினும் மேலாகத் தமிழ்ப் புலக்

கிழார். திருமாலிய நூல்களில் ஈடுபாட்டுடன் தேர்ந்தவர். இலக்கியங்களை ஆழ்ந்து கற்றவர். நினைவாற்றல் மிக்க கருத்தாளர். நாகைக் கோயில்களில் வரலாற்றைத் தனித் தனிச் சிறு சிறு நூல்களாக எழுதியுள்ளார். புலமைப் பட்டம் பெறாத பெரும்புலவர். ஆன்று அவிந்து அடங்கியுள்ள சான்றோராக நாகைப் பெருமாள் வடக்கு வீதியில் வாழ்ந்து வருகிறார்.

ஏற்றுமதி இறக்குமதி வணிகராக நாகை முதற் கடற்கரைச் சாலையில் வணிக நிறுவனம் அமைத்துள்ள கவிஞர் இப்னு சமாலுத்தீன் என்னும் இசுலாமியத் திருவாளர் கவிதையாற்றல் மிக்கவர். தமிழ் நூல்களை படிந்தவர். இசுலாமிய சமயத் தோய்வில் சூழ்ந்த நெறியானவர். 'இப்னு சமாலுத்தீன் கவிதைகள்' என்றொரு தொகுப்பை வெளியிட்டுள்ளார். என்பால் பேரன்புடன் பாராட்டுப்பா பெற்றுப் பதிப்பித்துள்ளார்.

தென்னிந்தியத் திருச்சபை மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றி ஓய்வுபெற்ற புலவர் இரா. இராசு அவர்கள் தேர்ந்து தெளிந்த புலமையர். எச்செயலையும் அமர்வுடன் ஆரச் செய்பவர். என் அணுக்க நண்பராக நாகைத் தமிழ்ச் சங்கப் பணிகளில் தம்மை ஊன்றியவர். தூங்கிய நாகைத் தமிழ்ச் சங்கத்தைத் தட்டி எழுப்பிப் புதுப்பித்துள்ளார். அதன் சார்பில் 'திருக்குறள் வகுப்பு' நடத்தி வருகின்றார். அவர்க்கு உறுதுணையாகத் தமிழ் மருத்துவமறிந்த புலவர் இரா. இராமதாசு அவர்கள் (அந்தணப்பேட்டை) பணியாற்றுகிறார். புலவர் இராசு அவர்கள் திறன்மிக்க ஆசிரியர்; உரன்கொண்ட பகுத்தறிவாளர். நல்லோர் நெஞ்சில் நிற்கும் நண்பர். வெண்பாவை ஆற்றோட்டமாக எழுதும் புலமையர். நாகை 'இளஞ்சேரன் நகரில்' வாழ்கிறார்.

நாகை நாட்டுயர் மேனிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வுற்ற கவிஞர் மீனவன் சிறந்த கவிஞர். "கொஞ்சும் குழந்தை" முதலாகப் பல கவிதை நூல்களை எழுதி வெளியிட்டவர். நாராயணசாமி என்னும் இயற்பெயரினர். கவிதைக்குப் பாராட்டுக்கள் பெற்றவர். நாகை ஆரிய நாட்டுச் செட்டித் தெருவில் வாழ்கிறார்.

நாகை நீலா தெற்கு வீதியில் சிறு பெட்டிக்கடை வைத்து வாணிபம் நடத்தும் திரு ப. சிங்காரவேலன் அவர்கள் எளிமைக்குச் சான்றானவர். நல்ல எழுத்தாளர். நாகையிலும் சுற்றுப்புறத்திலும்

உள்ள கோயில்களின் வரலாறுகளைத் தினமணி சுடரில் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு முன்பே எழுதியவர். பழகற்கினிய பண்பாளர்.

"புத்தகப்பித்தன்" என்னும் புனை பெயர் கொண்டுள்ள திரு தோ. ந. வீரராகவன் அவர்கள் நல்ல எழுத்தாளர். சில நூல்களை எழுதியுள்ளார். 'தாரா அச்சகம்' என்னும் அச்சகம் நிறுவி அச்சுத் தொழிலராக உள்ளவர். 'இமயப் பதிப்பகம்' என்னும் பதிப்பகத்தையும் அவர் செல்வன் வழி 'குமரிப்பதிப்பகத்'தையும் நிறுவிப் பல நல்ல நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருபவர். இதனால் இமயமும் குமரியும் கொண்டவர். இப்பணியை 4 ஆண்டுகளாகத் திறம்படச் செய்து வருகிறார்.

இதுவரை இங்குப் பதியப் பெற்ற நாகைக் கற்றவர் வரலாறு ஏறத்தாழ 300 காலக் கட்டம் கொண்டது. மேலும் அறியப்படாமல் பல கற்றாரை நாகை பெற்றிருக்கலாம், அடைந்திருக்கலாம், பயன் பெற்றிருக்கலாம். அவர்களை என் மனக்கண்ணால் நெஞ்சில் நிறுத்திப் பாராட்டி வணங்கி மகிழ்கின்றேன்.

இவ்வாறு அறியக் கூடாது போனவர் பலர். 'அத்தகைய கற்றவரையும் பெற்று நாகை தமிழ் மணம் கமழ்ந்ததை வைத்துத்தான் சிறுவன் "தமிழ் மணக்கும் நல்நாகை" என்றான்.

## உ. தமிழ்ச் சங்க நாகை

தனிமலர்களாகப் புலவர்கள் தமிழ் மணம் பரப்பினர்; மலர்க் கொத்தாகவும் தமிழ் மணம் பரப்பினர். அக்கொத்தாம் தமிழ் மன்றங்களும், கழகங்களும் சங்கங்களும் நாகையில் திகழ்ந்தன; திகழ்கின்றன.

நூல்களைக் கற்று ஆய்ந்தோர் கூட்டம் – குழுவாக அமைந்து முத்தமிழ் வளர்த்ததை வருணகுலாதித்தன் மடலில்,

"கணக்காயர்

கூட்டமும் முத்தமிழின் கோதாட்டும்" (15) என்றும்

"பன்னும் வளநாகை பதி". (16) என்றும் பாடியுள்ளார்.

சுந்தரர்

"கலை விளையாடும் பெருங்கூட்டங்க"ளைக் கண்டுள்ளார்.

வருணகுலாதித்தனால் நாகையில் தமிழ்ச் சங்கம் அமைந்திருந்தது. அதுகொண்டு கவித்திருமதி காளிமுத்து அம்மையார்,

"சங்கம் திகழ் நாகை" என்று பாடினார்.

பிள்ளையவர்களும்

"கழக இடம் கரை இலவாம் நாக நகர்" என்றார்.

இவ்வாறு இந்நூற்றாண்டிலும் சங்கங்கள் அமைந்து நாகையைத் தமிழ் நாகையாக்கின; கற்றவரைப் பயில வைத்துக் "கற்றவர் பயில் நாகை"யும் ஆக்கின.

## சைவத் தமிழ் நிலையங்கள்

1940 ஆண்டளவில் நாகைத் தமிழ்ச் சங்கம் ஒன்று அமைந்து தமிழ் வளர்த்தது. மருத்துவப் புலவர் திரு. ப.மு. சொக்கலிங்கனார் அதன் செயலாளராகப் பணியாற்றினார். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள் வருகை தந்து சொற்பொழிவாற்ற தொடர்ந்து பெரியபுராணம் படிக்கப் பெற்றுள்ளது.

காரோணர் கோயிலுக்குள் முத்து மண்டபத்தில் அவ்வப்போது சமயச் சான்றோர் கூடி சைவத்துடன் தமிழ் வளர்த்தனர்: அம்மண்டபத்தில் இசைப்பாங்குப் புலமைத்திரு அருணாசலக் கவிராயர் அவர்களின் இராமநாடக கீர்த்தனம் அரங்கேறியுள்ளது.

தேவாரத் திருக்கூட்டத்தினர் என்னும் குழுவினர் சைவத்திரு சொ. வீரப்ப செட்டியார் தலைமையில் தேவாரமும், சைவமும், தமிழும் போற்றினர். நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார் ஒரு சைவ சபை நிறுவிப் பொழிவுகள் வழங்கியதுடன் சைவப் புலமையேறு சோமசுந்தர நாயகரை அழைத்துப் பொழிவு நிகழ்த்தினார்.

அரசு அலுவலராக இருந்த மதுரைப்பிள்ளை சைவ சிந்தாந்த சபையை வெளிவையில் நிறுவி அதற்கென ஓரில்லமும் உருவாக் கினார். இன்றும் நின்று திகழ்கிறது. தமிழ்ப்புரவலர் பாண்டித்துரை தேவரின் துணையைப்பெற்றது. மும்முறை மறைமலையடிகளாரை அழைத்து மிகச் சிறப்பாகப் போற்றிப் பயன் கொண்டது. இப்போதும் நாகை அறமன்றத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற புலவர் திரு. வி.என். இராசகோபாலபிள்ளை ஆர்வமுடன் செயலாற்றி வருகிறார்.

வார வழிபாட்டு மன்றம் அமைந்து கிழமைதோறும் போற்றிச் செய்தது. திரு உத்தண்டி செட்டியார் தலைவராகவும் திரு நமசிவாயம் பிள்ளை செயலாளராகவும் பணியாற்றினர்.

## புதுமைத் தமிழ்ப் பேரவை

தென்னிந்தியச் திருச்சபை உயர்நிலைப்பள்ளியாக இருந்த போது 'தமிழ்ப் பேரவை' அங்கு அமைந்து ஒவ்வோர் இலக்கியத் துக்கும் ஒவ்வொரு விழாவாக, சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப் பிள்ளை முதலாகப் பெரும் புகழ் பெற்ற புலவர்களின் செஞ் சொல் மணம் பரப்பியது. இதில் மொழி ஞாயிறு பாவணர் அவர்ளும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரும், கவியோகி சுத்தானந்த பாரதியாரும் புலமைத்திரு கி.வா. சகந்நாதனாரும், முத்தமிழ்க் காவலரும், திருக்குறளாரும் தமிழ்த் தேன் சுரந்தனர். இஃதொரு புதுமைப்பாங்கில் என் இயக்கத்தில் நிகழ்ந்தது.

## நாகைத் தமிழ்ச் சங்கம்

நாகைத் தமிழ்ச் சங்கம் மீண்டும் தோன்றியது. மறைமலை யடிகளார் நூலகம், இலவச மாணவர் இல்லம், வகுப்புகள், கூட்டங்கள் நடத்தியது. பெரியோர்க்கான யாப்பருங்கலக்காரிகை, திருக்குறள், சிலப்பதிகார வகுப்புகளும் சிறார்க்கான ஆத்திசூடி, கொன்றைவேந்தன் வகுப்புகளும் நிகழ்ந்தன.

என் இயக்கத்தில் புதுமையாக மேடைத் தமிழ் வகுப்பு நடத்தப் பெற்றது. உட்கூட்டம், பெரும் இலக்கியப் பொதுக்கூட்டம், ஆண்டு தோறும் மறைமலையடிகளார் விழா, ஆண்டுவிழாக்கள் நிகழ்ந்தன. நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார் சிலை நிறுவப் பட்டதைக் கண்டோம். ஐயப்பேழை அமைந்து எழுந்த ஐயங்களைப் போக்கிற்று. முதலில் அன்றைய நகராட்சித் தலைவர் திரு அ.மு. பொ. திருவம்பலம் செட்டியார் அவர்களும் அடுத்து வழக்கறிஞர் திரு தம்பையா அவர்களும் தலைவராக அமைந்தனர். பெயர் பெற்ற வழக்கறிஞர் திரு. க.காளிமுத்து அவர்களும், மருத்துவப்புலவர் திரு. ப.மு. சொக்கலிங்கனாரும் துணைத் தலைவர்களாக அமைந்தனர். இதனை நினைவுறுத்தும் யான் அமைச்சனாக அமைந்தேன். தமிழ்த்திரு இரா. ஆதிகேசவனார், திரு தோ.ந. வீரராகவன் அவர்கள், தணிக்கையாளர்கள். திரு. நா.வி. புருடோத்தமன் அவர்கள், திரு. தானியேல் பிள்ளை அவர்கள், திரு. வே. கோவிந்தராசன் அவர்கள், திரு இரா. கோவிந்தசாமி அவர்கள் (சிலைக்குழுச் செயலாளர்) செயலாளர்களாக அமைந்து பணியாற்றினர்.

சிறப்பாகப் புலவர் வகுப்பில், ஆசிரியராகக் கற்றோர் அலுவல ராகக் கற்றோர் ஆர்வலராகக் கற்றோர் எனக் கற்றோர் தமிழ் பயின்று புலவர் பட்டம் பெற்றனர். பதினைவருக்கு மேல் தமிழாசிரிய

ராயினர். தமிழ்ச் சங்கப் பொருளாளராகப் பெருவணிகர் திரு நா.வீ. காயாரோகணஞ் செட்டியாரும், பின்னர் அவர் இளவல் திரு. ஆ. நாராயணசாமி அவர்களும் உதவினர். நாகை மக்களின் சிறப்பான துணையுடன் நிறைந்து மகிழ்தற்குரிய பணிகள் ஆற்றி, 'அது இருந்த இடம் இதுதான்' என்று காட்டுவதற்கு விழுந்துள்ள வீரப்பசெட்டியார் சத்திரம் உள்ளது.

## தமிழ் மன்றங்கள்

வெளிப்பாளையத்தில் 'தொல்காப்பியர் மன்றம்' தோன்றிப் புலவர்களை உருவாக்கியது. அதனையும் தேட வேண்டியுள்ளது. ஆனாலும் அது வழங்கிய புலவர்கள் சிறந்து வாழ்கின்றனர்.

"தமிழ் இலக்கிய மன்றம்" ஒன்று மருந்து வணிகர் திரு. ஆ. இராமசாமி அவர்களால் தோன்றித் தமிழறிஞர் இரா. ஆதிகேசவன் அவர்களைத் தலைவராகவும் புலவர் பல்கதிர்ச் செல்வன் அவர்களைச் செயலாளராகவும் கொண்டு கூட்டங் களையும், விழாக் கூட்டங்களையும் நிகழ்த்தி வருகிறது.

'முத்தமிழ் மன்றம்' ஒன்று புலமை மகளிர் கற்ற மகளிர் முயற்சியால் தோன்றிப் புலமைத் திருமதி மணிமேகலை அவர்களின் செயற்பணியில் திகழ்கிறது. நாகூரில் செந்தமிழ்ப் படிப்பகம் சில்லாண்டுகள் நிலவித் தமிழ் பரப்பியது.

எனவே கற்ற தனியார் புலமையாலும் செயற்பாட்டாலும் மட்டுமின்றி நாகைக் கற்றார் பயில் சங்கங்கள், மன்றங்கள் வாயிலாகவும் தமிழ் பரவியது என்று எண்ணி மகிழலாம். 18—ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் கற்றார் என்றால் தமிழ் கற்றவரையே குறிக்கும். பின்னர் கல்வித் துறைகள் பெருகின. தொழில் துறைகள் தோன்றின. இவற்றைக் கற்றுப் பட்டம் பெற்றோராக வழக்கறிஞர், பொறியாளர், மருத்துவர், அலுவலர், பேராசிரியர் எனக் கற்றோர் பலவகையினராயினர். அன்னார் அனைவரையும் மிகு எண்ணிக்கையில் நாகை பெற்றுச் சிறந்தது; சிறக்கின்றது.

## ஊ. கல்வி பயிற்றும் நாகை

கற்றார் பயில் நாகை கற்றாரை உருவாக்கும் நாகையாகவும் சிறக்கிறது. சிறார்க்குத் துவக்கப்பள்ளிகள், வேண்டிய அளவில் நாகையில் உள்ளன. ஆங்கில வழி மழலையர் பள்ளிகள் உள்ளன. உயர் தொடக்கப் பள்ளிகளும் உயர்நிலைப்பள்ளி ஒன்றும், மேல்

நிலைப்பள்ளிகள் ஒன்பதும் இருபாலார்க்கும் உள்ளன. அரசின் தொழில் நுட்பப் பள்ளி இயங்கி இப்போது செயற்பாட்டை எதிர்பார்த்துக் கொண்டுள்ளது.

முதன் முதலில் நாகையில் 1817இல் ஒரு கிறித்துவத் தொடக்கப்பள்ளி துவங்கப்பெற்றது. இதுதான் முதல் ஆங்கிலம் கற்பிக்கப் பெற்ற பள்ளி. இது 1823 இல் வெசுலிமிசன் உயர் நிலைப் பள்ளியாயிற்று. அதுதான் இப்போது தென்னிந்தியத் திருச் சபை மேனிலைப் பள்ளியாக வளர்ந்துள்ளது. இதன் பழைய கட்டடத்தின் வடபகுதியில் மேலே குறிக்கப்பட்ட ஆண்டுகளின் குறிப்புகள் கல்வெட்டுக்களாக உள்ளன.

வலிவலம் தேசிகர் என்னும் பெருமகனார் தம் உடைமை கொண்டு உருவாக்கிய 'வலிவலம் தேசிகர் பலமுனைத் தொழிற்கல்லூரி' தோன்றி நூற்றுக்கணக்கானவர்க்குத் தொழில் வாழ்வு தந்து வருகின்றது. அதன் இணைப்பாக, 'தருமாம்பாள் பலமுனைத் தொழில் நுட்பக் கல்லூரி' உள்ளது.

## முதன்மைக் கல்லூரி

அ. துரைசாமி மரகதவல்லியம்மாள் (அ.து.ம) மகளிர் கல்லூரி பெருவணிகச் செம்மல் திரு. அ.து. செயவீரபாண்டிய நாடாரால் தோற்றுவிக்கப்பெற்றுப் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் உறுப் பாக முதன் நிலையில் வளர்ந்து வருகிறது. தம் வணிக உழைப்பில் உடைமையில் ஏற்காட்டுப் பண்ணையை அறக்கட்டளையாக்கியும் நிகழ்த்தும் வணிகச் செல்வங் கொண்டும் 'அண்ணாச்சி' அவர்கள் இத்துடன் ஒரு மேனிலைப்பள்ளி நடுநிலைப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி, முதலியவற்றில் கல்வி அறச் சூழலை ஆக்கியுள்ளார்.

தம் உரிமை உடைமையாகக் கருதாமல் நகரத்துப் பெரு மக்களைக் கொண்டு குழு அமைத்து இயக்குவது அவர்தம் பரந்த மனப்பாங்கின் சான்றாகிறது.

இதன் செயலாளராக நிலக்கிழார் திரு பார்த்தசாரதி நாயுடு என்னும் சீனிவாச நாயுடு அவர்கள் தொடர்ந்து அமைந்து தம் முதுமையிலும் இளைஞராய்ச் செயல்படுகிறார்.

இசுலாமியக் கல்வி நிறுவனம் ஒன்று இளமைத்திரு ஆரிபு என்பவரால் தொடங்கப்பெற்றுச் சிறந்த கல்விப் பணியும் தமிழ்ப் பணியும் சமயப் பணியும் ஆற்றுகின்றது.

இவ்வாறெல்லாம் நாகை கற்பவர் பயிலும் நாகையாகிச் சிறக்கிறது.

**வளர்க கற்றவர் கற்பவர் பயிலும் நாகை!**

## 8. கற்றவர் பயிலும் நாகை

| ஆசிரியர் | கொண்டுகாட்டி நூற்குறுக்கம் |
|---|---|
| 1. நல்லாதனார் | : திரி –10 |
| 2. திருநாவுக்கரசர் | : திருநா. தேவா – நாகைக் காரோணப் பதிகம்: 8–3 |
| 3. திருநாவுக்கரசர் | : திருநா. தேவா – நாகைக் காரோணப் பதிகம்: 2–1 |
| 4. திரு ஞானசம்பந்தர் | : திருஞா. தேவா: 6–3 (1–6) |
| 5. மீனாட்சி சுந்தரம் பிள்ளை.சி. | : தி.நா. புரா – கடவுள் வாழ்த்து – 9–1 |
| 6. நன்னாகையார் | : குறு – 118 |
| 7. சுப்பிரமணிய பிள்ளை, கா. | : இல. வர – பக். 74 |
| 8. Poornalingam pillai M.C. | : T. Lit - p. 312 |
| 9. சதாசிவம் பிள்ளை, அ. | : பா. ச. தீ – பக். 109 |
| 10. கந்தையா ந.சி. | : தமி. பு. அக – பக். 120 |
| 11. இளஞ்சேரன் கோவை | : நிறை. மறை. சி. கல். |
| 12. சாமிநாத ஐயர் உ.வே. | : சிரீ. மீனா. சரி – பகுதி 1 – பக் 82 |
| 13. சாமிநாத ஐயர் உ.வே. | : சிரீ. மீனா. சரி – பகுதி 1 – பக் 314 – 316 |
| 14. சுப்பிரமணிய பாரதி, சி. | : பார. பா (த.பல்.) பாடல் தொடர் எண் 2405 |
| 15. காளி முத்தம்மை | : வரு. உ. மடல் – கண்ணி – 50 |
| 16. காளி முத்தம்மை | : வரு. உ. மடல் – கண்ணி – 236 |
| 17. சிங்காரவேலு முதலியார் | : அபி. சிக். பக்.428 |

# 9. இன்று – நாளை– நாகை

## இன்று – நாளை

இதுவரை நாகை எட்டு நிலைகளில் விவரிக்கப்பெற்றது. வரலாற்றில் தொடங்கி, பெயர், ஆட்சி, நகரமைப்பு, மக்கள், சமயம், வணிகம் – தொழில், கற்றார் வரை நாகை பதிவுகளைப் பெற்றது.

இவ்வெட்டு நிலைகளிலும் நாகை இன்று எவ்வாறுள்ளது; நாளை எவ்வாறாகலாம் அல்லது எவ்வாறு ஆகவேண்டும் என்று காண்பதே இன்று – நாளை – நாகை ஆகும். இன்று என்பது நிகழ்கால எல்லையின் படப்பிடிப்பு. நாளை என்பது வருங்கால நலத்தின் எதிர்பார்ப்பு. நேற்றைய நிலையை வைத்து இன்றைய நிலையைக் காணும் போதே இன்றைய நிலையை அடிப்படையாகக் கொண்டு நாளைய விளைவையும் ஓரளவில் கணிக்க முடியும். அக்கணிப்புடன்பொதுவில் நாகை நலம் கருதிய எதிர்பார்ப்பையும் குறிப்பது நூல் முறையும் ஆகும்.

## அ. வரலாற்று நாகை

### வரலாறு

வரலாறு என்பது ஆங்கிலத்தில் 'History' என்றும் வடமொழி யில் 'சரித்திரம்' என்றும் சொல்லப்பெறும் 'வரலாறு' என்னும் தமிழ்ச்சொல் மற்றைய இரண்டிற்கும் முந்தியது. முதன் முதலில் சங்கப் புலவர் நல்லந்துவனார் இச்சொல்லை எடுத்தாண்டுள்ளதைப் பரிபாடலில் காண்கிறோம். வைகை ஆற்றில் பல செல்வர் நீராடுவதால் அவர் பூசியிருந்த மணப்பொருள்களாம் மணச்சாறும் சந்தனமும் மண நெய்யும் அணிந்திருந்த மண மலரும் நீரை மணக்க வைத்துள்ளன. அத்தகைய மணக்கும் யாறு வரும் நிலையை,

"யாறு வரலாறு" (வரல் + ஆறு) (1) என்று பாடினார். எனவே பழந்தமிழ்ச் சொல்லாகிய வரலாறு – 'வருதலாகிய நிலை' என்னும் பொருள் கொண்டது. இவ்விடத்தில் 'வந்த நிலை' என்பது இறந்த காலத்தைக் காட்டுவது. எனவே, காலப்பாங்கில் நிகழ்ந்ததைக் குறிப்பது வரலாறு. தமிழில் தொடர்ந்து வரும் மரபுமுறை வரலாற்று முறை எனப்படும். 'வரலாற்று வஞ்சி' என்றவொரு சொல் செய்யுள்

வகையையும், இச்செய்யுளில் எழுதப்பெறும் சிற்றிலக்கியத்தையும் குறிக்கும். இளம்பூரணர், பேராசிரியர் என்னும் தொல்காப்பிய உரையாசிரியர் இருவரும் ஓர் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாகக் (உதாரணமாக) காட்டுவதை 'வரலாறு' என்றே எழுதினர்.

எனவே, காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியை அப்படியே காட்டுவது வரலாறு. இவ்வரலாற்றில் நாகை இடம்பெற்றதை வரலாற்று நாகையில் கண்டோம்.

வரலாற்றுக் காலத்தை வகுத்த வரலாற்று ஆசிரியர் காலத்தை வைத்தே மூன்றாகக் கொண்டனர். முற்கால வரலாறு (Anciant History) கி.பி. 476 வரை என்றும், இடைக்கால வரலாறு (Mediaeval History) கி.பி. 476 முதல் 15ஆம் நூற்றாண்டு வரை என்றும், இக்கால வரலாறு (Modern History) 15ஆம் நூற்றாண்டிற்குப் பின் என்றும் வகுத்துள்ளனர்.

'வரலாறு திரும்ப நிகழாது' என்றும் 'வரலாறு மீண்டும் நிகழும்' என்றும் இருவகைக் கருத்துக்கள் உள்ளன. முதற்கருத்தை இங்குக் கொண்டு வரலாற்று நாகையில் நிகழ்ந்தவற்றின் நீள் தொடர்பில் நாகையின் இன்றைய நிலை என்ன என்று முதலில் காணலாம்.

## இன்றைய வரலாறு

இன்றைய நாகை, வரலாற்றின் பதிவுக்கு உரியதா என்றால் 'ஆம்' என்றோ 'இல்லை' என்றோ கொள்ளாமல் பதியத்தக்க 'வரலாற்றின் முதற்படியில் நிற்கிறது' என்று கொள்ள வேண்டும்.

இன்று அமைந்திருக்கின்ற நாகை மாவட்ட அமைப்பு, நிலத்தடி வளத்தை வெளிக்கொணரும் அடித்தளச் செயல்கள், வளரத் தொடங்கியுள்ள கல்வி முதலியவற்றால் இன்றைய நாகை வரலாற்றுப் பதிவில் நிற்கிறது என்பது உண்மையே.

## நாளைய வரலாறு

இன்று நிகழ்கின்ற நாகை நிகழ்ச்சிகளைக் கொண்டு இஃது இவ்வாறே வளர்ந்தால் நாகை நாளைய வரலாற்றில் ஒரு குறிப்பான இடத்தைப் பெறும்.

"வரலாறு ஓர் அறிவியலே;

அதற்கு அதிகமும் இல்லை;

குறைவும் இல்லை",

என்று புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் பியூர் (Bur)என்பார் பதிந்துள்ளார். நாகையில் அறிவியலும் அதன் பங்கான பொறி யியலும் கால் வைத்துள்ளன. இதனால் நாளைய நாகையின் வரலாறு இந்திய நாட்டில் ஒரு வளந்தரும் இடத்தைப் பெறும். நாகைக்கும் வளந்தந்த வரலாற்றை உண்டாக்கும். அவ்வரலாற்றுச் சிறப்பு எவ்வாறிருக்கும் என்பதையும் இக்காலக் கணிப்பொறி (Computer) கொண்டு கணிக்கவும் முடியும். ஒருவ னுடைய உறுப்புஅமைப்புகளையும் முக அமைப்பையும் வைத்து அவன் உருவப்படத்தைக் கணிப்பொறி உருவாக்கி விடுகிறது. இதன்படி உள்ளதை வைத்து வருவதையும் கணித்துப்பார்த்தால் நாகையின் நாளைய வரலாறு வளங்காட்டும் வரலாறாக அமையும்.

## ஆ. பெயர் நாகை

### இன்றைய பெயர்

'நீர்ப்பெயற்று' என்ற முதற்பெயரில் துவங்கி, 'பதரி திட்டை' நாகர்பட்டினம் – நாகானனம் – நெகமம் – நாகபட்டினம் என்று பெயர் மாறியதைக் கண்டோம். அயல் நாட்டார் தம் ஒலிப்பிற்கு ஏற்பப் பல்வகை ஒலிப்பில் நாகர்பட்டினத்தைக் குறித்தனர்.

### நாகபட்டினம்

இங்கு ஒன்றைப் பதிந்துவிட வேண்டும். அது நாகப்பட்டினமா, நாகபட்டினமா என்பது. உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் முதல் நிறைதமிழ்ச்செம்மல் மறைமலை யடிகளார், புலவர் ஏறு மீனாட்சிசுந்தர் பிள்ளை முதலிய புலமையர் வரை அனைவரும் நாகபட்டினம் என்று, இடையில் ஒற்று 'ப்' போடாமலே எழுதியுள்ளனர்.

ஆனால், வழக்கிலும் இக்காலப்பதிவுகளிலும் நாகப்பட்டினம் என்றே எழுதப்படுகின்ற இப்பெயர் பற்றிய ஆய்வைக் கொள்ளாத நிலையில் யானும் நாகப்பட்டினம் என்றே கையாண்டேன். ஆய்வில் நாகர் தொடர்பால் ஏற்பட்டது 'நாகர்பட்டின'மே என்று முடிவு கொள்ளப்பட்ட நிலையில் மீண்டும் கவனங் கொள்ள வேண்டியுள்ளது.

பாம்புத் தொடர்பில் நாகம்–பட்டினம் என்று இரண்டு சொற்களும் புணரும் போது நாகம் என்பதன் 'ம்' போய் 'ப்' ஆக

அமையும். அமைந்து 'நாகப்பட்டினம்' ஆகும். வரலாற்றின்படி நாகம் பட்டினம் பொருந்தாது. ஆகையால் நாகர்பட்டினம் என்பதே காலப்போக்கில் மக்கள் ஒலிப்பில் "ர்" போய் 'நாகபட்டினம்' ஆயிற்று என்றே கொள்ள வேண்டும்.

எனவே, 'நாகபட்டினம்' என்று எழுதுவதே பொருந்தும்.

## பட்டினம் – பட்டணம்

மற்றொரு பிழை செய்வோரும் உள்ளனர். அப்பிழை 'நாகபட்டணம்' என்று 'பட்டண'மாக எழுதுவது. 'பட்டினம்' என்பது துறைமுக நகரம். அச்சொல்லின் பிழையான உருவந்தான் 'பட்டணம்'.

எனவே, 'நாகப்பட்டணம்' என்று எழுதுவதைவிட்டு 'நாக பட்டினம்' என்றே எழுத வேண்டும். சிலர் 'பட்டினம்' என்ற சொல் கடற்கரை நகரைக் குறிக்கும் என்றும், 'பட்டணம்' என்ற சொல் உள்ளே அமைந்த நகரத்தையோ, ஊரையோ குறிப்பதாகக் கொள் ளலாம் என்றும் கூறுகின்றனர். இஃது ஏற்கத்தக்கதே. எவ்வா றாயினும் இது 'நாகபட்டினம்' என்றே கொள்ளப்பட வேண்டும்.

இதன் மரூஉச் சொல்லே சொல்லாகிய 'நாகை' என்பதில் தவறில்லை. இந்நூலில் பல இடங்களில் இடச் சுருக்கம் கருதி 'நாகை' என்ற சொல்லே கையாளப்பெற்றது.

## கண்ணியம்மிகு காயிதே மில்லத்

இரண்டு ஆண்டுகளுக்கு முன் கீழைத்தஞ்சை மாவட்டத்துத் தலைநகராக இந்நகர் இருந்தபோது 'நாகபட்டினம்' என்று முழுச்சொல்லாக வழங்கப்பெற்றது.

இன்றளவில் இசுலாமியச் செம்மல் திரு காயிதே மில்லத் அவர்களைப் போற்றும் கருத்தில் இப்புதுமாவட்டத்திற்கு அவர் பெயர் சூட்டப் பெற்றுள்ளது.

திரு காயிதே மில்லத் அவர்கள் இவ்வாறு போற்றுதற்குரிய பெருந்தகை. அவர் திருநெல்வேலியைச் சார்ந்த ஊராகிய கோட்டை யில் 5–6–1893இல் பிறந்தவர். நாடறிந்த நற்பெருந்தகை. நுண்ணிய அறிவும் பரந்த மனப்பாங்கும் உடையவர். 'கண்ணியம் மிக்க காயிதே மில்லத்' என்று போற்றப்பெறுபவர்.

அவர் இந்தியப் பெருநாட்டளவில் புகழ்பெற்றவர். பொதுப் பணியின் பெருந்தகை. அவர்தம் பணிகளில் சிலவற்றைக் குறித்தே ஆக வேண்டும்.

காந்தியடிகளது ஒத்துழையாமைப் போராட்டத்திலும் இந்திய விடுதலைப் போராட்டத்திலும் பங்கு கொண்டவர். இந்து — இசுலாமிய ஒற்றுமைப்பணியின் சின்னமாக விளங்கியவர். இந்திய அரசியல் விதிப்பு அவையில் உறுப்பினராக இருந்து மாநிலங்களுக்கு அதிக ஆட்சிஉரிமை வழங்கப்படவில்லை யென்றால் அவை 'மினுமினுக்கும் நகராட்சி போன்றவைகளே' என்று நயம்பட உரைத்தவர். இவற்றிற்கெல்லாம் மணிமுடி போன்று இந்திய நாட்டு அரசின் தேசிய மொழிகளில் தமிழ் அமைய வேண்டும் என்று வற்புறுத்தி வெற்றி கண்டவர். சிறுபான்மையர் நலன் கருதும் பாங்குடையவர். முனைப்பாக இருந்து தமிழகத்தில் 14 இசுலாமியக் கல்வி நிறுவனங்களை அமைத்தவர்.

இப்பெருந்தகையின் பெயரை இப்புது மாவட்டத்திற்கு இட்டது ஒரு கடப்பாட்டைச் செலுத்தியதாகும். இசுலாமியப் பெருமக்கள் மட்டுமின்றி அனைவரும் எண்ணி மகிழத்தக்க ஒன்று இது.

இதன் முழுப்பெயர் 'நாகபட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்' என்பது. இதனை நாகை என்று சுருக்கி 'நாகை காயிதே மில்லத் மாவட்டம்' என்று எழுதுகின்றனர். இது விரிவாக்கப்பட வேண்டியது.

## நாளைய பெயர்

வருங்காலத்தில் இப்பெயர் அஃதாவது "நாகபட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்" என்பது என்ன ஆகும்? இன்றே 'நாகை' என்று சுருங்கி வருகிறது. இவ்வகை வழக்கு உரிய முழுப்பெயரை மறைத்து விடுவதாகும். ஆயினும் அஞ்சல் துறை, புகைவண்டித்துறை, போக்குவரத்துத் துறை, பதிவுத் துறை முதலியவற்றில் முழுச் சொல்லமைப்பு உள்ளது. எனவே மாறாது; மாறக் கூடாது என்று கூறலாம்.

ஆனால், அரசியலால் ஏற்படும் ஆட்சி மாற்றங்களால் வருங்காலத்தில் என்ன ஆகுமோ? எதனையும் எதிர் பார்க்கும் சூழல் வளர்ந்து வருகிறது. மாற்றமும் பெறலாம்; திரிக்கவும் பெறலாம். முளைவிடும் 'மதமான பேய்' இப்பெயரை மாற்றக் கருதலாம். இவ்வாறு நேரும் போது மக்கள் மறுத்து பெரும் பண்பாட்டையும் பரந்த மனப்பாங்கையும் கூட்டி, கீழறுப்புக்காரர்களைத் தோல்வியுறச் செய்வர். இஃது உறுதி.

பெயர் பற்றி நாளைக் காலத்தையும் கருதிப் பார்த்து முடிவாகச் சொன்னால் "நாகபட்டினம்" என்பது குலையாமல் கலையாமல் கல்லெழுத்தாக வேண்டியதேயாகும். 'நாகர்பட்டினம்' என்பதே இதன் நிறைவான பெயர் என்றாலும் இதனை மீண்டும் கொணர மக்கள் முயல்வது சிறப்பாகும்.

## இ. ஆட்சி நாகை

### இன்றைய ஆட்சி

இம்மண்ணின் மைந்தராம் சோழர் ஆட்சியில் முன் நாகை விளங்கியது. பின்னர் அயல்புல மன்னர் ஆட்சியில் குலைந்தது; வெளிநாட்டவர் ஆட்சியில் அலைந்தது. ஆங்கிலர் ஆட்சியில் சில நல அமைப்புகளைப் பெற்றது. இன்று இந்தியக் குடியரசின் ஆட்சியில் தமிழ் நாடு மாநில அரசினால் ஆளப்படுகிறது. அரசியல் கட்சியாளர் ஆட்சியாக – அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக உள்ளது. முதல் அமைச்சராக மாண்புமிகு செயலலிதா அவர்கள் உள்ளார்கள். ஒரு மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக ஆளுகையில் உள்ளது. மக்கள் சார்பில் சட்டப் பேரவை உறுப்பினராகத் திரு கோடிமாரி அவர்கள் உள்ளார். மருத்துவர் பத்மா அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

### புதுமாவட்டம் விவரம்

இன்று நாகபட்டினம் ஒரு புது மாவட்டமாக அமைக்கப் பட்டுள்ளது. 18.1.1991 இல் ஒரு தனிப் புது மாவட்டமாகத் தொடக்கம் பெற்றது. முன்னர் கண்டதுபோல் 'நாகபட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்' என்னும் பெயர் சூட்டப்பெற்றது.

இம்மாவட்டம் நாகபட்டினம் கோட்டம், மன்னார்குடிக் கோட்டம், மயிலாடுதுறைக் கோட்டம் என மூன்று கோட்டங்களாக உள்ளது.

11 வட்டங்களாக (1) நாகபட்டினம் வட்டம், திருவாரூர் வட்டம், நன்னிலம் வட்டம், குடவாசல் வட்டம், (2) மயிலாடுதுறை வட்டம், தரங்கம் பாடி வட்டம், சீர்காழி வட்டம், (3) மன்னார்குடி வட்டம், நீடாமங்கலம் வட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், வேதாரணியம் வட்டம் என்பன அடைப்புக்குள் உள்ள எண்ணின்படி முறையே மூன்று கோட்டங்களில் அடங்கி உள்ளன.

5 சிறகங்கள் (Birca) 1185 வருவாய்ச் சிற்றூர்களைக் கொண்டுள்ளன.

மாவட்டப் பிரிவுத் துறைகளாக ஆட்சித் துறை, காவல்துறை, கருவூலத் துறை, மண்டலப் போக்குவரத்துத் துறை, பதிவுத்துறை, மீன் வளர்ச்சித்துறை, மருத்துவத்துறை, திட்டத் (முதியோர் கல்வி) துறை ஆகியவற்றின் மாவட்ட அலுவலர்களையும் அலுவலகங் களையும் கொண்டுள்ளது.

உள்ளாட்சிகளாக 5 நகராட்சிகளைக் கொண்டுள்ளது. அவை நாகபட்டினம் நகராட்சி, திருவாரூர் நகராட்சி, மயிலாடுதுறை நகராட்சி, மன்னார்குடி நகராட்சி, திருத்துறைப்பூண்டி, நகராட்சி என்பன ஆகும்.

ஒரு நகரியத்தையும் (Town ship) 19 ஊராட்சி ஒன்றியங் களையும், 17 பேரூராட்சிகளையும் கொண்டுள்ளது.

பரப்பளவு, மக்கள் தொகை இவற்றில் தஞ்சாவூர் மாவட்டத்தை விடப் பெரியது. இதுபோன்றே பல அமைப்புகளிலும் நாகை தஞ்சையைவிட அதிக எண்ணிக்கை கொண்டதாக அமைந் துள்ளது.

போக்குவரத்திற்குரிய அரசின் சாலைகளில் மாநில நெடுஞ்சாலை 6 கிலோ மீட்டர், மாவட்ட நெடுஞ்சாலைகள் 883.8 கி.மீ., பிற மாவட்டச் சாலைகள் 1099 கி.மீ. நீளங்களில் அமைந்துள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தைவிட நாகபட்டின மாவட்டம் 216 கி.மீ. அதிக நீள அளவைக் கொண்டதாகும்.

கண்டு மகிழத்தக்க இடங்களாக, பழைய தரங்கம்பாடிக் கோட்டை, புதிய பூம்புகார்ச் சிலப்பதிகாரக் கலைக்கூடம், கோடியக்கரை விலங்குகள் அடைக்கலக் களம், உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் அடைக்கலக்களம் ஆகியன உள்ளன.

வழிபாட்டிற்குரிய பெயர்பெற்ற பெரிய கோவில்களாக நாகபட்டினத் திருக்காரோணர் கோயில், நாகூர்த் தர்கா, வேளாங்கன்னி மாதாகோயில், சிக்கல் சிங்காரவேலர் கோயில் ஆகியவை உள்ளன.[1]

இது தனிப் புதுமாவட்டமாக மலர்ந்தபோது 7275 நலப்பணிகளும், 509 அடிக்கல் நாட்டல்களும் 881 அலுவலகப் புதுக்

1. இப்புள்ளி விவரங்கள் புதுமாவட்டத் திறப்பின்போது வெளியிடப்பட்ட அரசு அறிக்கை இதழிலிருந்து தொகுக்கப்பெற்றவை யாகும்.

கட்டடங்களும் தொகுப்பு வீடுகளும் திறப்பு செய்யப்பட்டன. ஆனால் ஒன்றுகூட நாகபட்டினம் நகருக்கென்று அமையவில்லை. அனைத்துத் திறப்பும் நாகபட்டினம் நகரின் விழா மேடையிலேயே நிகழ்த்தப்பட்டன என்பதை எண்ணி நாகை மக்கள் ஒரு பெருமூச்சுடன் அமைதி கொண்டனர்.

இவ்வாறெல்லாம் அமைந்த இன்றைய நிலையில் நாகையில் ஒரு புது வளர்ச்சிக்கு முதற்படி போடப்பட்டுள்ளதாகக் கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முதலாகப் புதிதாக அமைந்த மாவட்ட அலுவலகங்கள், குடிக்கூலிக் கட்டடங்களிலும், நெருக்கடி இடங்களிலும் இயங்குகின்றன. இவ்வாறமைந்த தொடக்க நிலைமை நீட்டிக்காமல் நாளைய வளர்ச்சிப் பணிகளை உயர்த்த வேண்டும்.

## ஆட்சியில் நாளை

நாளைய உலகத்தின் ஏற்றமோ ஏக்கமோ எதுவாயிருப்பினும் இன்றைய ஊர், நகர், நாடு இவற்றின் வளர்ச்சியாலும் வளத்தாலும்தான் நேர வேண்டும்.

உலகில் அறிவியலும் அதன் தொடர்பான பொறியியலும், பிற நலஞ்சேர்க்கும் இயல்களுமே உலகை உயர்த்தும் அடித்தளங்களாக உள்ளன. சிறப்பாக அறிவியலாலும், பொறியியலாலும்தான் சிற்றூர் முதல் நாடு வரை வளர்ச்சி பெற வேண்டும். எனவே ஆட்சியாளர் சிற்றூர்களிலும் இவ்விரண்டின் துணைகள் அமைய முனைப்புக் கொள்ள வேண்டும். நாகையும் இதனை எதிர்பார்த்துள்ளது.

இந்திய நாட்டின் ஒவ்வொரு நகரமும் மூன்று ஆட்சிகளால் பேணப்படுகிறது. அந்தந்த நகர்க்குள்ளேயே அமைந்து நேரடியாக நகராட்சி பணியாற்றுகிறது. மாநிலத் தலைநகரில் அமைந்து மாநில ஆட்சி ஆளுகிறது. புதுதில்லியில் மையத்தலைமை அரசு அமைந்து மாநிலங்களைத் தன் பிடியில் வைத்தும், திட்டங்கள் கொண்டும் ஆள்கிறது.

நாகை நகரும் இவ்வாறே ஆளப்படுகிறது. நகராட்சி என்பது அவ்வந்நகரத்து மக்களின் சார்பாளர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற மக்களாட்சி அமைப்பு. தமிழ்நாட்டில் நகராட்சித் தேர்தல் தள்ளிக் கொண்டே போவது தவிர்க்கப்பட்டு மக்கள் சார்பாளர் மன்றம் அமைந்தாக வேண்டும். இதனால் அன்றாட நலன்களாகிய விளக்கு, குடிநீர், சாலை, பொதுநலம் ஆகியவை கண்காணிப்புடன் அமையும்.

நாகை நகருக்கு மாநில அரசு ஆற்ற வேண்டியவை நிறைய உள்ளன. இன்றியமையாச் சிலவற்றைக் இங்கே குறிப்பிட வேண்டும்.

## மீனவர் நலம்

கடற்கரை மீனவர்களின் வாழ்வியலில் நாட்டம் கொள்ள வேண்டும் ஒரு நலம் மருத்துவ நலமாகும். மக்களின் உடல்நலமும், நோய்த்தாக்கமும் அவர் வாழும் சுற்றுச் சூழலைப் பொருத்தும் அமைகின்றன. கடற்கரைச் சூழலில் உப்பு நீரோடு போராடும் நிலையில் அவர்தம் வளமும் தாக்கமும் வேறானவை. எனவே அவர்கட்கெனத் தனி மருத்துவ ஆய்வு செய்து குப்பப் பகுதியிலேயே சிறுசிறு மருத்துவமனைகள் திறக்கப்பெற வேண்டும். இது போன்றே அவர்தம் தொழிலுக்கு இடையூறு இல்லாமல் அவர்க்கு நுகர்பொருள்கள் அவ்வக் குப்பத்திலேயே வழங்கப் பெற வேண்டும்.

**"எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்**

**வல்லறிதல் வேந்தன் தொழில்"** (2) என்றார் திருவள்ளுவர். இன்றைய வேந்தராக உள்ள மாநில ஆட்சியர், நாகை நகரத்தார் எல்லார்க்கும் அமையும் பொது நலங்களை ஆழ்ந்து அறிந்து செயலாற்ற வேண்டும்.

## நீர்ப் போக்குவரத்து

மைய அரசின் பார்வை நாகையில் பதிய வேண்டிய இன்றியமையாமை உள்ளது. அஞ்சல் துறை, புகைவண்டித் துறை, கப்பல் போக்குவரத்துத் துறை, சுங்கத் துறை, வருமான வரித்துறை முதலியவை மைய அரசுடையவை.

அஞ்சல் துறை புகைவண்டித் துறைகளில் உள்ள சிறு சிறு குறைகள் மக்களின் பயன்பாட்டிற்குத் துன்பம் தருபவை. இவற்றை விட, கப்பல் போக்குவரத்து நாகை அளவில் தனிக்கவனம் கொள்ளத்தக்கது. ஈழைநாடு செல்லும் பயணிகளுக்கும், பொருள் களுக்கும் கப்பல் மேலும் விடப் பெற வேண்டும். வளமுற்றோர் வான ஊர்திப் பயணம் கொள்ள முடிகிறது. முடியாதவர் சென்னை சென்று தான் கப்பலேற வேண்டும். முன்பு இருந்தது போன்று பயணிகள் கப்பல் அமைக்கப் பெறவேண்டும். இதற்குத் துணை யாகும் பெரும் திட்டமாக இயற்கைத் துறைமுக மல்லாத இதனைச் செயற்கையில் அமைத்தோ, கப்பல் நிறுத்தப் பெறும் தொலைவு அள விற்குப் பாலம் அமைத்தோ வணிகம் பெருகுவதற்கு உதவ வேண்டும்.

அத்துடன் மாநில அரசின் இணைப்புடன் கரையோரப் படகுப் போக்குவரத்தை அமைக்க வேண்டும். நாகைக்கு வடக்கிலும்

தெற்கிலும் மேற்குக் கரையிலும் தொடர்பு அமையுமாறு படகுப் போக்கு வரத்து அமைக்கப்பெற வேண்டும்.

வடக்கில் காரைக்கால், புதுவை, கடலூர், மாமல்லபுரம், சென்னை என்றும், தெற்கில் அதிராம்பட்டினம், தூத்துக்குடி, இயன்றால் இசைவுடன் யாழ்ப்பாணம், கொழும்பு என்றும் மேற்கில் கொல்லம் என்றும் பயணிகள் படகுப் பணியும் சரக்குப் படகுத் தோற்றமும் உண்டாக்கப் பெற்றால் பல்வகையிலும் நலம் தரும்.

## மோதல் குறையும்

இப்படகுப் போக்குவரத்து மாநில ஆட்சியாளரால் உள் நாட்டிலும் அமைக்கப்பெற வேண்டும். தொழில் வல்லுநர் திருமிகு நா. மகாலிங்கம் அவர்கள் 24 ஆண்டுளுக்கு முன்னரே (1969இல்),

"திருச்சியிலிருந்து தஞ்சாவூர் வழியாக நாகபட்டினத்திற்குப் படகுப் போக்குவரத்தை நடத்த புதிய வாய்க்கால் வெட்டுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இதன்மூலம் பெரும் அளவிற்கு வணிக வளர்ச்சியோடு வேளாண்மைப் பொருள்களை எளிதாகக் கொண்டு போகவும் வாய்ப்பு ஏற்படும். சுமார் 2 கோடி உரூவா செலவில் இந்த வாய்க்காலைத் திருச்சிக் கல்லணையிலிருந்து அமைத்து, இரு புறங்களிலும் செம்மையான நெடுஞ்சாலையை அமைப்பதன் மூலம் போகுவரத்து வாய்ப்பு மிகச் சிறப்பாக அமையும்", (3)

என்று எழுதியுள்ளார். இதனை மாநில ஆட்சியாளர் பார்வைக்கு நாகைப் பெருமக்கள் சட்டப்பேரவை உறுப்பினர் வழி வைக்கலாம். திரு நா.ம. தம் கருத்தில் வைத்துள்ள 'நெடுஞ்சாலை இரு புறங்களிலும் செம்மையான நெடுஞ்சாலையை அமைப்பது என்னும் கருத்தும் செயற்பட்டால் சரக்குந்துகள் மட்டும் பயன்படுத்த இதனை ஒதுக்கலாம். நாட்டில் சரக்குந்தால் நேரும் மோதல்கள் குறையும். அவ்விரு சாலைகளும் ஒருவழிப் போக்காக அமைந்தால் சரக்குந்து மோதல்களும் குறையும். இதனால் வணிகப் பொருள் போக்குவரத்து வாய்ப்புகள் நிறைவை நோக்கி நடைபோடும்.

## கடற்கரை அரண்

மைய அரசு மாநில அரசின் துணையுடன் நாகைக் கடற்கரையை வலுப்படுத்த, சுவர் அரண் அமைக்க வேண்டும். ஏறத்தாழ 3 கி.மீ. நீளத்திற்கு இஃது அமைக்கப்பெற வேண்டும். முன்னர் ஓரளவில் அமைக்கப்பட்டது. இது கரை அரிப்பைப் பாதுகாக்கும் இன்றியமையாப் பணியாகும்.

இதன் தொடர்பில் மாநில அரசு கடற்கரை மீனவர் குப்பம் ஒவ்வொன்றிற்கும் சுற்றுப் பாதுகாப்பு அரண்சுவர் எழுப்பி, அவர்கள் குடிசைகளை உறுதியான வீடுகள் ஆக்க வேண்டும். இவை புயலின் தாக்குதலைத் தாங்குவனவாக அமைய வேண்டும்.

### சாலை அலைகள்

நகருக்குள் நெடுஞ்சாலைத் துறைச் சாலைகள் உண்டு. நகராட்சிப் பொறுப்புச் சாலைகள் உள்ளன. பெரும்பாலும் எல்லாம் அலையலையான நிலையில் உள்ளன. அல்லது குண்டு குழிகளாக உள்ளன. இவை செப்பமாக வேண்டும்.

இவ்வாறு நாகை நகர் நாளைய ஆட்சியாளரிடம் பெரும் மாற்றங்களை எதிர்பார்த்துள்ளது. மேலும் எதிர்பார்ப்புகள் வரும் பகுதிகளில் குறிக்கப்படும்.

## ஈ. நகரமைப்பு நாகை

### இன்றைய நகரமைப்பு

நாகை நகரமைப்பு ஏறத்தாழப் பிற்காலச் சோழர் காலத்தில் கோயில் சுற்றுப்போக்கில் அமைந்த சூழலிலேயே உள்ளது. புறநகர் அமைப்புகள் தவிர நகரில் புத்தமைப்பிற்குரிய மாற்றம் ஏதும் இல்லை. புத்தமைப்பிற்குரிய வாய்ப்புகளும் அருகியே வந்துள்ளன. அவற்றில் தெருக்களில் கழிவுநீர் ஓடுசால்கள் அமைந்தமை ஒரு வகையில் நலம் தந்தது. இவ்வமைப்பிலும் விடுபட்ட பகுதிகள் உள்ளன. நாகை நகராட்சி இதில் கவனம் கொள்ளாமல் விட்டுள்ளது. பழைய அடித்தளத்திலேயே புதிய இல்லங்களும் வணிகக் கட்டடங்களும் அமைகின்றன. இன்றைய நகரமைப்பு நிலையில் மிகவும் இடையூறானது கடைத்தெருவாகும். குறுகிய பெரிய கடைத்தெருவும், சந்துபொந்தில் சிறு கடைத்தெருவும் அமைந்திருப்பது மாற்ற இயலாத நிலை கொண்டுள்ளது. 600 ஆண்டுகளுக்கு முன்னமைந்த கோயில் சுற்று நெடுவீதிகளும், குறுவீதிகளும் சிறு தெருக்களும், சந்தும் அவ்வவ்வாறே உள்ளன. சந்துகள் நகராட்சியால் தூய்மை செய்யப் பெற வேண்டிய நிலையில் உள்ளன.

புகைவண்டி நிலையத்தை விட்டு நகர்க்குள் புகுந்தால் சூழ்ந்து கிடக்கும் ஊர்திகள், ஒட்டுக்கடைகள், கூடைக்கடைகள் மக்களை நெருக்குகின்றன; துரத்துகின்றன; வெருட்டுகின்றன.

அண்மையில் நேர்ந்த பெருமழையால் சாலைகள் அலைகளாகியுள்ளன. இவைபோன்று பெருங் குறையான நிலையில் இன்றைய நகரமைப்பு நிலையும் அதன் போக்குவரத்து நிலையும் உள்ளன.

## நாளைய நகரமைப்பு

நகரமைப்பில் கடைத்தெரு எவ்வகையிலேனும் சிறகத்திற்கு 2 அடி அளவாவது விரிவாக்கப் பெற வேண்டும். நகரமைப்புக் கட்டடங்களாகவோ அலுவலகக் கட்டடங்களாகவோ காடவர்கோன் பாடிக்கும் நாகூர்க்கும் இடைப்பட்ட இடத்தில் உள்ள வெளிகள், கொல்லைகள், வளாகங்கள், தோப்புகள் முதலிய இடங்களில்தாம் அமைக்கும் வாய்ப்பிருக்கிறது. அதனை நகரமைப்புக்கேற்ற வடிவமைப்புக்கொண்டு அதன்படி அமைக்க முனைய வேண்டும். அமைந்துள்ள புறநகர்ப் பகுதிகளில் தெரு, தெருவிளக்கு, குடிநீர் இவற்றிற்கு வேண்டியவற்றைச் சரிசெய்ய அவற்றிற்குத் தடையாக உள்ள விதிகளைத் தளர்த்த வேண்டும். நகராட்சி இவற்றில் கவனம் கொள்ள வேண்டும்.

தொழிலாலும், அதன் தொடர்பான வணிகத்தாலும், நாகை நகர் பெருகவும், வளரவும் நகர்க்கு நகரமைப்பு துணையாக வேண்டிய இன்றிமையாத சூழல் உள்ளது. இச்சூழல் செம்மையாகி நாளைய நாகையின் நகரமைப்பு சீராக அமைந்தாக வேண்டும்.

## சீரமைப்பு ஏழு

குறிப்பாக ஏழு இடங்கள் நாகையிலும், இரண்டு இடங்கள் நாகூரிலும் சீரமைக்கப்பட வேண்டும்.

## நாகையில் ஒன்று

புகைவண்டி நிலையம் புகுவாயில் இடத்திலிருந்து மேற்கே செல்லும் பேருந்துச் சாலையை ஒட்டித் தெற்குச் சிறகத்தில் நீளமாக புகைவண்டித்துறைக் குடியிருப்புக்கள் உள்ளன. இவ்விடங்களின் கொல்லைகள் பெரும் பயனின்றி உள்ளன. இவற்றைப் புகைவண்டித் துறையினரிடமிருந்து 20 அடி அகலத்திற்கேனும் வேண்டிப் பெறலாம். பெற்று அங்கு வாடகைச் சீருந்துகள் (Taxi, Pleasure cars) மூன்று சக்கர இயங்கிகள் (Auto Rickshaws), மிதியிழுப்பு வண்டிகள் (Cycle Rickshaws) குதிரை, மாட்டு வண்டி கள் ஆகியவை நிற்கச் சீரான கொட்டடி அமைக்கலாம். இதனால்

அங்குள்ள இடையூறான நெருக்கடி தீரும். வெளியேறும் பேருந்துகளுக்கு ஒரு நிற்கைத்தளமும் ஒதுக்கலாம்.

## இரண்டு

அங்குள்ள தீயணைப்பு நீர்த்தொட்டி நோயின் பிறப்பிடமாக உள்ளது. கெடு நாற்றத்தை அள்ளி வழங்கி வருகிறது. அதனைத் தூர்த்து அங்கொரு சிறிய பூங்கா அமைத்து நகராட்சிப் பொறுப்பில் நாளும் அழகியதாய்ச் செய்ய வேண்டும்.

## மூன்று

கடற்கரையில் புகைவண்டித் துறைக்கு உரியதாய் இக்காலத் 'தமிழ்நாடு பயணிகள் விடுதி'யை ஒட்டியுள்ள மலங்கழி இடத்தைப் படகுத்துறை ஆக்க வேண்டும். இவ்விடம் புகைவண்டித் துறை இடமானால் அவர்கள் செப்பமாக்க வேண்டும்.

## நான்கு

நெல்லுக்டை மாரியம்மன் கோயிலின் வடக்கில் சிதைந்து கிடக்கும் குளம் தூர்க்கப்பட்டு அங்கு அரசுக் கூட்டுறவுச் சிறப்பங்காடி அமைத்து நுகர்பொருள்கள் வழங்கும் வாணிப வளாகமாக அமையப் பெரும்கட்டடம் எழுப்பப்படலாம். இஃது இரண்டு பயன்களை நல்கும். இடம் தெளிவடையும், மக்கள் பயன்பெறுவர். தூர்க்காமல் சுற்றுச்சுவர்களை வலுப்படுத்தி, கீழ்நிலவறை வளாகமாகவும் அமைக்கலாம். நீர் இறைப்பால் மழைக்கால நீரை நீக்கலாம். நகரமைப்பில் இச்செயல் ஒரு புதுமை பெறும்.

## ஐந்து

அழகர் கோயிலின் பின்புறத்திலும், நடுவர் கோயிலின் பின்புறத்திலும் உள்ள குளங்கள் எவ்வகை பயனும் இன்றி உள்ளன. இவற்றின் கரைகளைச் செப்பம் செய்து ஒன்றை நீச்சல்குளம் (Swimming Pond) அல்லது பாய்வு நீச்சல் நீரகம் (Swimming Pool) ஆக்கலாம். ஒன்றை நிலவரைப் பண்டசாலையாக்கலாம்.

## ஆறு

புதிய பேருந்து நிலையத்தின் மேற்கில் அறமன்ற வளாகத்தின் தெற்கில் உள்ள தாமரைக்குளம் கட்டட அடித்தளத்திற்கு ஏற்பத் தூர்க்கப்பட்டுப் புத்தமைப்பான குடியிருப்புகளுக்கு திட்டமிட்ட வகையில் வழங்கப்படலாம். இவ்வாறு முன் ஒரு நோக்கம் இருந்தது. நகரும் அழகு பெறும். புதிய பேருந்து நிலையமும் புத்தமைப்புக்

~ளைப் பெற வேண்டும். ஏழாவது சீரமைப்பை அடுத்தடுத்து வரும் ‘ மய நாகை’ப் பகுதியில் காண்பது பொருத்தமாகும்.

நாகூரில் இரண்டு சீரமைப்புகள் நேர வேண்டும்.

### ஒன்று

தர்காவிற்குச் செல்லும் கடைத்தெரு அகலமாக்கப்பெற வேண்டும். புறநகரில் கடைகள் தொகுப்பாக ஒரு பெரும் வளாகத்தில் அமைதல் வேண்டும். பல்வகை நுகர் பொருள்கள் கலைப் பொருள்கள், அணி பொருள்கள் எனக் கவர்ச்சிக்குரிய பொருள்களைக் கொண்ட கலை வளாகம் அமைய வேண்டும்.

### இரண்டு

நகரின் புறத்தே புகுவாயிலிடத்தில் அளவான வாய்ப்புகள் கொண்ட அறைகளுடன் கூடிய தங்கும்விடுதி அளவான கட்டணத்தில் வழங்கும் திட்டத்தில் அரசால் எழுப்பப்பெற வேண்டும். நகராட்சியே இதனைச் செய்யலாம். பயணிகளுக்கும் பேருதவி யாகும்; நாகூர் நகரமைப்பிற்கும் துணையாகும்; வருவாயும் கிட்டும்.

## உ. மக்கள் நாகை

### இன்றைய மக்கள்

‘மண்ணுக்கு ஒரு குணம் உண்டு’ என்பர். இங்குக் ‘குணம்’ என்றதும் சுவையை அன்று; விளைச்சலையும் அன்று; வன்மை மென்மையாம் தன்மைகளையும் அன்று. தன்பால் தன்னை மதித்து வாழும் மாந்தருக்குக் குணத்தை ஏற்றுங் குணம். இக்குணம் நல்ல தாகவும் இருக்கலாம். தீயதாகவும் இருக்கலாம்; ‘திருப்பூந்துருத்தி விருந்தோம்பல்’, ‘கருப்பூர் மத்திசம்’ என்ற வழக்குகள் இதனை அறிவிப்பனவே.

‘அந்த மண்ணில் பிறந்தவனா! அடாதவன்’ என்றும், ‘மருதூ ரான் மறந்தும் பொய் சொல்லான்’ என்றும், ‘அந்த ஊரானா அவன் ஒரு மாதிரி’ என்றும் சொல்லப்படுவன எல்லாம் முழு உண்மை யாகா. ஒவ்வொருகால் நேர்ந்ததை வைத்தும், செப்புவார்தம் விருப்பு வெறுப்பைக் கொண்டும் அவ்வாறெல்லாம் சொல்லப்படுகின்றன.

நாகையில் "நல்லார், பொல்லார் அல்லார்" என்று சம்பந்தர் பாடினார். எங்கும் இன்னோரெல்லாம் உள்ளனர். இங்கும் இருக்கலாம்.

ஆனால் இன்றைய நாகைவாழ் மக்களின் நற்குணங்களைக் குறித்துக்காட்ட இயலும்.

"அடுப்பவர்க்கு இனிய நாகை" (4) என்று பிள்ளையவர்கள் பாடியதுபோல் உதவிசெய்யும் மனப்பான்மையர் நாகையர். உழைப்பில் சுறுசுறுப்பானவர். காலங்காலமாய்க் கடலோடு போராடியும் அலுக்காத மீனவர். பத்துக் காசு வாணிபம் முதல் பல்லாயிரம் வணிகம் வரை விடாது தொடர்ந்து செய்யும் வணிகர். இறையன்பு மாறாதவர். சிற்றளவில் கடவுள் மறுப்புள்ளோர் உள்ளனர். திரைகடலோடிப் பொருளீட்டினாலும் தம் நகரை மறவாது ஓடி வந்து விடுபவர். இவ்வாறெல்லாம் குறிக்கும் அளவில் நாகை மக்கள் இன்று உள்ளனர்.

முற்காலத்திலும் இடைக்காலத்திலும் பலநாட்டு மக்களும் பல இனத்து மக்களும் வணிகத்திற்காக இங்கு வாழ்ந்தவர் அன்றோ. அதன் நிழலாக இன்றும் பலஇனத்து மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் இனவேறுபாடு, சாதி வேறுபாடு, சமயப் பூசல், குழுமோதல் என்பன எட்டிப் பார்க்க விடாத மக்கள் நாகையர். பணக்காரன் ஏழை என்பதில் கூட பண்ணையார் — பண்ணையாள் என்னும், மேலவர் கீழவர் என்னும் வேறுபாடுகள் நாகை மக்களிடம் மிகமிகக் குறைவு.

வேறுபட்ட சமய மக்கள் வாழினும் சமயக் காழ்ப்பு கொண்டவரோ, அதனால் பூசல் உண்டாக்க முனைபவரோ இன்று வரை இல்லை. இதற்குக் காரணம் சமய ஆர்வம், சமுதாய ஆர்வம் இவற்றிற்கு மேலாகத் தமிழ் ஆர்வம் நிறைந்தவர்கள் என்பதே.

"கற்றவர் பலபேர் குழாம்குழாம் ஆகிக்
கலந்து வாழிடம் பலவால்" என்றபடி குழுக்கள் பல எவ்வகைக் கற்றவரிலும், அரசியல் கட்சியாளரிலும் இருந்தாலும் அனைவரும் கலந்து வாழ்பவர்கள்.

கடவுள் பற்று உள்ளவர் யாவரும் ஒழுக்கம் உள்ளவர் என்பதோ, கடவுள் மறுப்பாளர் அனைவரும் இழுக்கம் உள்ளவர் என்று சொல்லுவதோ உண்மையன்று. வேறுபட்டார் எங்கும் உள்ளமைபோல் இங்கும் உள்ளனர்.

எவ்வளவுதான் உயர்ந்தாலும் 'நடுஇரவிலே (மழைக்கு அன்றி) குடை பிடிப்பவர் இலர்'. குட்டுபவரும் இலர்; குனிபவரும் இலர்; (எங்கும் பள்ளிகளில் கூட இது போய்விட்டது) ஓடுபவரும் இலர்; விரட்டுபவரும் இலர்.

புலமைக் காய்ச்சலின் நிழல் ஓரளவில் உண்டு. ஆனால் புலமைத்திமிர் பெருமளவில் இல்லை. புகழ் வேட்டை பெருமளவில் இல்லை. இடைத்தரகர் எங்கும் போல் இங்கும் உள்ளனர். பொதுவில் நன்மக்கள்; சிறப்பில் பொன்மக்கள்.

இவையாவும் இதனை எழுதுகின்றவன் 27 ஆண்டுகள் நாகையில் வாழ்ந்து, பழகியறிந்த உணமைகள்.

இன்றைய நாகை மக்களின் அமைதி எத்தகையது? முழுமையும் அமைதி என்று எழுதிவிட முடியாது. ஆரவாரச் சூழலால் அமைதிக்கு இடையூறும் உண்டு. நாகூர் தர்காக் கந்தூரி விழா, வேளாங்கன்னி விழா, நாகை மாரியம்மன் கோவில் திருவிழா என ஒவ்வொன்றும் பத்துப் பதினைந்து நாள்களும் அவற்றிற்கு முன் நாள்களும் பின் நாள்களுமாக ஆண்டில் மூன்று திங்கள் ஆரவாரமான திங்கள்கள். போக்கு வரத்தால், நெரிசலால், பொருள் பற்றாக் குறையால், விலை யேற்றத்தால் அமைதிக்கு இடையூறு தான். ஆயினும் காட்சி, பொழுது போக்கு, வழிபாட்டு வாய்ப்பு என்பவனவற்றால் இவ்விடையூற்றின் வலு குறைந்து காணப்படும்.

"நாகையில் பிறக்க முத்தி" என்று ஆன்ம அமைதி கொள்வோர் சிறு எண்ணிக்கையர். நாகூர் ஆண்டவர் மேல் நகராத நம்பிக்கை கொண்டோர் பெரும் இசுலாமிய எண்ணிக்கையர். நாளும் நீறணிந்து வாழ்வோர் மிகுதி. திருமண் இடுவோர் குறைவு.

## நாளைய மக்கள்

இவ்வாறான இன்றைய நிலை நாளை எவ்வாறு தொடரும், நீளும் என்பது பொறுத்துப் பார்த்துத்தான் நம்ப வேண்டி யிருக்கிறது.

இனப்பூசல், சாதிப்பூசல் வர வழியில்லை; வரக் கூடாது. சமயப் பூசல்...? ஆம் புள்ளி வைத்து வினாக்குறி போட வேண்டியுள்ளது. முன்னர் குறித்தது போல் புதிதாக முளைத்துள்ள 'மதமான பேய்' வெளியிலிருந்துதான் வந்து கவ்வப் பார்க்கிறது. மக்கள் புறங்காண வேண்டும்; காண்பர். இதற்கு இரண்டு நிகழ வேண்டும்.

## பொது நிலைப் பேரவை

ஒன்று: நாகை நகரில் 'பொது நிலைப் பேரவை' அமைக்கப் பெற வேண்டும். இஃது இலக்கியம், குமுகாயம் இரண்டிலும் பொது நோக்குக் கொண்ட கருத்தை முன்வைத்துத் தொடர்ந்து இயங்க

வேண்டும். சங்காலச் சான்றோர், சைவ நால்வர், திருமாலியப் பன்னிருவர். இசுலாமிய நபிகள், கிறித்துவச் சான்றோர் பகுத் தறிவுப் பெரியார் முதலியோர் விழாக்களாகத் திங்களுக்கொன்றாக நிகழ்த்தப்பெற வேண்டும். பண்பும் அமைதியும் உயிரோட்டமும் உடைய தாகவும், பழிப்பு, இழிப்பு தலைகாட்டாததாகவும் நிகழ்ச்சி நிகழ வேண் டும். சரி விழுக்காடு அனைத்து வகையினரும் உறுப்பினராக அமைய வேண்டும். இதனை முயற்சியுடனும் முனைப்பாகவும் அறிவார்ந்த நோக்கிலும் அரவணைப்புப் பாங்கிலும் ஆற்ற வேண்டும்.

## நகர மக்கள் பேரவை

இரண்டு: நாகூரில் 'நகர மக்கள் பேரவை' அமைக்கப்பெற்று மாந்தரியல்பு குலையாமல் ஒற்றுமைப்பாங்கு தொடர விளம்பரங்கள் செய்ய வேண்டும். விழாக் காலங்களில் நிகழ்ச்சிகளை அமைக்க வேண்டும். பொது விழாக்களை மக்கள் ஒன்றிப்பு நிகழ்ச்சி களாகக் குமுகாய அமைப்பில் அமைக்க வேண்டும்.

பொதுவில் நாகை மக்களிடம் இயல்பாகவுள்ள நற்குணங்களை நிலை நாட்டும் பன்முக முயற்சிகள் தொடர்ந்தால் நாளைய நாகை மக்கள், நலம்நலியாமல் வளம் வாடாமல் அமைதி வாழ்வில் திகழ்வர்.

## ஊ. சமய நாகை

## இன்றைய சமயம்

முன்னர்க்கண்டபடி புகுந்தமைந்த சமயங்களில் புத்தம் போக மற்றவை உள்ளன. ஏறத்தாழ 300 ஆண்டுகளாக எச் சமயமும் தேக்கம் பெறவும் இல்லை; புத்தாக்கம் கொள்ளவும் இலை. கிறித்து வத்தில் புதிதாகத் துவங்கப்பெற்ற ஒன்றிரண்டு பிரிவுகள் வாய்ப்பிற் கேற்ப இயங்குகின்றன.

பொதுவில் சொல்லப்பெறும் இந்து சமயம் என்னும் சைவம், திருமாலியம் அவ்வக் கோயில்களின் நாட்பூசெய்கள், சிறப்பு வழிபாடுகள், திருவிழாக்கள் என்ற வழக்கமான நிகழ்ச்சிகளே சமய நிகழ்ச்சிகளாக உள்ளன. பலகோயில்கள் திருப்பணி செய்யப் பெற்றுக் குடமுழுக்கைக் கண்டுள்ளன. தேவாரத் திருக்கூட்டம் ஒன்றிருந்தது இப்போது இல்லை என்னும் நிலைதான் உள்ளது. சிற்றளவு நடைமுறையாகச் சில நிகழ்ச்சிகள் புத்தாக்கமின்றி நிகழ்கின்றன. நாகையில் இன்றைய சமய நிலையில் குறிப்பிடத்

*தக்கவை மிக அருகியவையே.* நாகூர், வேளாங்கன்னி வழக்கம் போல் விழாக்களைக் கொள்கின்றன.

## நாளைய சமயம்

இதே சிறப்பில் நாளைய சமய நிலை நிகழ்வதே போதுமானது. புதுமுனைப்புகள் மக்களுக்கு இடையூறான பாடுகளை (பிரச்சினைகளை) உண்டாக்கக்கூடும்.

நாகை, நாகூர் இரண்டையும் கூட்டிச் சமயப் பொதுநிலை கொள்வதே நாளைய முயற்சியாக இருக்க வேண்டும்.

## பேய்க்குளம் தாய்க்களம்

நாகையில் ஒன்று அமைக்கப்பெறலாம். அது முன்னர் நாளைய நகரமைப்புப் பகுதியில் எழுதப்படாமல் இப்பகுதிக்கு ஏற்றி வைக்கப் பெற்ற ஏழாவது பிரிவாகும்.

நாகையில் நீலா கீழ வீதியிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் *சாலையில் 'பேய்க்குளம்' என்று* ஒன்று உள்ளது; இது பயனில் இல்லை. ஓரளவு பரப்பளவு கொண்டது. அதுகுறித்து ஓர் உரிமைப் பூசல் இருந்து பின்னர் அது தீர்க்கப்பட்டு இசுலாமிய நிறுவனப் *பங்கில் தற்போழ்து உள்ளது. அதனை* பெருமனங்கொண்டு ஒரு பொதுப் பயன்பாட்டிற்குக் கொணரலாம்.

அஃது அங்கு ஒரு பொதுக்கூடம் வாய்ப்பான அமைப்புகளுடன் எழுப்பப்படுவதற்குரிய இடமாகும். இலக்கியம், குமுகாயக் கல்வி, மருத்துவம் முதலிய பொதுநலன்களுக்குப் பயன்படும் அளவில் ஒரு கலை மன்றக் கூடம் கட்டப்பட வேண்டும். அனைத்து வகைத் திருமணங்கள் வரவேற்புகள் சிறப்புக் கூட்டங்கள் இவற்றிற்கு வாடகைக்கு அளவான கட்டணத்தில் விடப்படலாம்.

இசுலாமியப் பெருமக்கள் இதில் மனம் பற்றி ஏனைய மக்கள் ஒத்துழைப்பையும் பொருளுதவியையும் கொண்டு இதனைச் செய்தால் மக்களின் பொதுநலனுக்கு மட்டுமன்றிச் சமயப் பொதுமைக்கும் நலமாகும். இது சமயப் பொதுமைச் சின்னமாகவும் திகழவேண்டும். இதன் உரிமை, ஊதியம், யாவும் இப்போது அதனைக் கொண்டுள்ளோர்க்கே அமையலாம். இதனால் *பேய்க்குளம் தாய்க்களம் ஆகும்.*

எல்லாவகையிலும் நாகையின் நாளைய சமய நிலை பூசலுக்கு இடந்தராமல் அமைவதே நலம்.

# எ. வணிகம், தொழில் நாகை

## இன்றைய வணிகம்

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டளவில் நாகை பெற்றிருந்த வணிகத்தை ஒப்பிட்டால் இன்றைய வணிகம் வளர்ச்சி பெற்றதன்று. உள்நாட்டு வணிகமும் உள்நகர வாணிபமும் கடைகள் எண்ணிக்கையில் பெருகியிருக்கலாம். ஆனால் வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி மிகக்குறைவே. இருபது ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்ததைவிடக் குறைந்துள்ளமை கண்கூடாகும்.

இருப்பினும் கால் நூற்றாண்டு அரைநூற்றாண்டளவில் — ஒன்றிரண்டு ஒரு நூற்றாண்டளவிலும் நாகை முதற் கடற்கரை, இரண்டாம் கடற்கரைச் சாலைகளில் பண்டசாலைகளை அமைத்து இன்றும், அவற்றைத் தொடர்ந்து நடத்துவோரும் உள்ளனர். 'அண்ணாச்சி' திரு அ.து. செயவீரபாண்டிய நாடார், ஏசியா கார்ப்ப ரேசன் திரு அண்ணாமலை, திரு இப்று சமாலுத்தின், திரு நடராச செட்டியார், திரு கோபால கிருட்டிண பிள்ளை, திரு ந. சொக்க லிங்கம், திரு முருகேசன் முதலியோரும் மற்றும் சிலரும் அமைதியாக இவற்றைச் செய்து வருகின்றனர்.

பத்தாண்டுகளாக வளர்ந்து வரும் மீன் வணிகமும் குறிக்கத்தக்கது. கடல் விளைச்சலாம் விதைக்காத அறுவடை மீன்பெருக்கம். நாகைக் கடலில் பல்வகை மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இவற்றுள் நல்ல வணிகத்தில் குறிக்கப்பட வேண்டியது இப்போது இறால் மீன் வணிகமாகும். இதில் 21 வகை கள் உள்ளன. இவ்வகைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில வகைகள் அமெரிக்கா, பிரான்சு, சப்பான் நாட்டாரால் விரும்பி உண்ணப்படு பவை. நாகை இறால் பெருமளவில் இந்நாடுகளுக்கு ஏற்றுமதி யாகிறது.

இதனால் வெளிநாட்டு வருமானம் ஆண்டு ஒன்றிற்கு 800 கோடி உருவாவாகச் செலாவணி கொண்டது. இதில் ஒரு பகுதி நாகை இறால் ஏற்றுமதியாகும்.[1]

---

1. மீன்கள் பற்றிய விவரங்களை உதவியவர் திரு பொன். பழனிவேல் அவர்கள்.

இவ்வணிகத்தில் திரு பொன். பழனிவேல் அவர்களும் சட்டப் பேரவை உறுப்பினர் திரு கோடிமாரி அவர்களும் குறிப்பிடத்தக்க சிலரும் ஈடுபட்டுள்ளனர்.

இறாலுடன் சுவையான வெளவால் (கருப்பு, வெள்ளை, வகைகள்) வஞ்சிரம், கனவா, வினம் முதலிய மீன்களுடன் கடல் பாசியும் வெளிவணிகத்திற்கும் உள்ளூர் வணிகத்திற்கும் பயன் படுகின்றன. இவை நாகையில் பிடிக்கப்பட்டு, பனிக்கட்டியால் பதத்துடன் அன்றாடம் விற்பனைக்கு நகரைவிட்டு வெளியேறுகின்றன.

நகர்க்குள் நிலவும் வாணிபத்தில் ஒரு நகருக்கு இயல்பானவை இங்கும் அமைந்துள்ளன. பெயர் பெற்ற துணி வாணிபம் திரு அரங்கராமானுச நாயுடு அவர்கள் (மு.இரா. சன்சு), திரு மோகன் அவர்கள் முதலியோரால் நிகழ்கின்றது.

மர வணிகத்தில் மன்னராகத் திறன் மிக்க திரு இரா. நாராயணன் அவர்கள் (இராமகிருட்டிணர் டிம்பர் டெப்போ) விளங்கி வருகிறார்.

பொதுச் சரக்குகள் வாணிபத்தில் முக்கால் நூற்றாண்டு வரலாற்றுடன் திரு நா. வீ. காயாரோகணம் செட்டியார் மற்றும் திரு இரா. கலியாண சுந்தரம் ஆகியோருடன், புதிதாகக் கவர்ச்சியான அமைப்புடன் சில அன்பர்களும் விளங்குகின்றனர்.

திரு பன்னீர்செல்வம், திரு கு. இலக்குவன் ஆகியோர் முல்லங்கி செட்டியார் வழியினர், திரு ஆவடைத்தங்கம் முதலியோர் மளிகை வாணிபர்கள். கன்னியப்ப செட்டியார் இரும்பு, வண்ண வாணிபம் பழமையானது. பொன், வெள்ளி அணிகலன் வாணிபம் திரு பா.க. பாலகுரு செட்டியார், ந. ஆறுமுகப் பத்தர் மக்கள், திரு கோபால கிருட்டிணன், விறுவிறுப்பான திரு இரா. வீரப்பன் முதலியோரால் சிறப்படைகிறது.

வைரம், மணிகள், நோட்டம் பார்ப்பதில் தேர்ந்த திரு கோதண்டபாணிப்பத்தர் அணிகல அமைப்பிலும் தேர்ந்தவராக விளங்குகிறார். அமைதியும், தெளிவும் உடையவர்.

சிறு பொறிகளின் துணைப் பொருள் வாணிபத்தில் திரு. என். ஆர்.முருகையன் அவர்கள் தனித்தவொர் அமைப்பாக அமைதியுடன் செயற்படும் வாணிபர்.

அரசு சார்பில் சிறப்பங்காடி வாணிபமும் நிகழ்கிறது.

பொதுவாக ஓரளவான வாணிபம் நாகையில் நடைபெறுகிறது என்று சொல்லலாம்.

## நாளைய வணிகம்

தொழில் வளத்துடன் கூடிய வணிகந்தான் பெரும் பயனுடையதாகும். நாகையின் எதிர்கால வணிக வளம் நாகையில் துவங்கியுள்ள தொழிலால் ஒளிபெற உள்ளது. பிற வணிகம், வாணிபம் இப்போதுள்ள அளவைவிட மேலும் சிறப்பாகப் பெரும் அளவில் தொழில் துணையால்தான் வளம்பெற உள்ளன.

அத்தொழில் யாது? அதுதான் நிலத்தடி எண்ணெய் வளத்தையும், இயற்கை எரிவாயு (gas) வளத்தையும் வெளிக் கொணரும் தொழில் ஆகும். இத்துடன் எண்ணெயில் வேண்டாதவற்றைப் பிரித்துத் தூய்மையாக்கிப் பயன்படக் கூடிய வகையில் செய்யும் தொழிலும் இணைவதாகும்.

## இன்றைய நாளைய தொழில்

பொதுவாகத் தொழில் என்னும் போது நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார் எழுதிய கருத்தொன்றை இங்குக் காணலாம்.

"தொழிலை அதற்கேற்ற இடங்களில் இரண்டாந்தரமாகவும், உழவுத் தொழிலை அதற்கேற்ற எல்லா இடங்களிலும் வைத்து முற்றாகவும் நடத்தி வருவார்களாயின் நம் நாட்டவர்கள் அளவுபடாத செல்வம் மலியப்பெற்று இனிது வாழ்வார்கள்" (5) என்றார். தொழில்களில் மக்களால் ஒதுக்க முடியாத இன்றியமையாமை கொண்டது உழவு தொழில்.

**"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்; அதனால்**

**உழந்தும் உழவே தலை"** (6) என்ற திருவள்ளுவர் மொழி வாய்மொழியன்றோ? மக்களுக்கு முதன்மையானது உணவு என்பது உறுதியான உண்மை. அதனைத் தொடர்ந்து உடை, உறையுள் என்று வளரும்போது அனைத்திற்கும் தொழில் ஈடுகொடுத்துத் துணைநின்று வளர்ச்சி தரும் என்பது அடுத்து உறுதியாகிவிடும் உண்மை. முதலில்

**"உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"** (7)

என்ற இலக்கியத் தொடர் எழச்செய்த உழவர் செய்யும் பயிர்த் தொழில் பற்றிய நாகையைக் காண்போம்.

இங்கு நெற்பயிர்தான் கணக்கில் முதன்மையாகக் கொள்ளப் படுவது. நகரில் அதன் மேற்கு எல்லையில் சிறிதளவான நன்செய் வயல்களே உள்ளன. சுற்றுப்புற ஊர்களின் அமைந்த வயல்களே இதன் வளத்தைக் காட்டுபவை. வேளாண்மை செய்வோர் பெருவேளாண்மையர், சிறு வேளாண்மையர், குறு வேளாண்மையர் என உள்ளனர். இப்பயிர்த்தொழிலுக்குரிய அறிவு மேலும் வளர்க்கப்பெற வேண்டும்.

## பண்ணைப் பல்கலைக்கழகம்

இவர்கள் அனைவரும் வழக்கமான வேளாண் முறைகளைப் புதிய வேளாண் அறிவியல் உதவியுடன் ஆற்றுகின்றனர்.

இத்தொழிலின் வருங்காலம் சிறக்க வேண்டுமாயின் இம் மாவட்டப் பகுதியில் கள ஆய்வை மேற்கொண்ட மூன்று வெளிநாட் டறிஞர்கள் வழங்கியுள்ள ஒரு கருத்தைச் செயற்படுத்த வேண்டும்.

இவான் இல்லிச் (Ivan Illish), எர்மன் டாலை (Herman Daly) ஆல்வின் டாஃப்ளர் (Alwin Toffler) என்னும் மூவரும் ஒருமுகமாக,

"இப்பகுதி வேளாண்மையருக்கு அவர்கள் பயிர்த் தொழிலில் புகுமுன் அவர்கள் இழப்பைக் குறைத்துக் கொள்ளவும் அதனை ஈடுகட்டவும் அறிவுகொளுத்தப்பெறஒரு பயிர்ப் பண்ணைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பெற வேண்டும்"

என்றனர். இஃது இங்குள்ள வேளாண்மையரின் நிலப்பகுதி நிலையை உணர்ந்து சொல்லப்பெற்றது. எனவே, இவ்வாறு ஒரு பல்கலைக் கழகம் அமைதல் வருங்கால வேளாண்மையை உயர்த்தி வளமாக்கும்.

இப்புதுமாவட்டத்தில் 4,61,433 எக்டேர் பயன்படுத்தக்கூடிய நிலப்பகுதி உள்ளது. இதில் 3,01,074 எக்டேர் விளைநிலம், காடு 11,023 எக்டேர். பயன்படாமல் 70,366 எக்டேர் நிலம் கிடக்கிறது.

இதனை மணணாய்வு செய்து நெற்பயிருக்கோ பொருத்தமான வேறு பயிருக்கோ பயன்படுத்தலாம். இப்பகுதி சணல் பயிரிடுவதற்கு ஏற்றது. வேதாரண்யம் பகுதிகளில் அண்மைக்காலமாகச் சணல் பயிரிடப்படுகிறது. இங்கும் செய்யலாம். மக்கள் கவனங்கொள்ள வேண்டும். இது பணப்பயிர். இங்கு மேலும் துணைப்பயிர்களைச் செய்து பயிர்த் தொழிலால் எதிர்கால நாகையை மேலும் வளப் படுத்தலாம்.

## நிலத்தடி வளம்

நாகைக்குக் கிடைத்திருக்கும் பெரிய பேறு, நிலத்தடி எண்ணெய் வளமும், எரி வளி வளமும் ஆகும். நிலத்தடியில் இருக்கும் எண்ணெய் பாறை எண்ணெய் (Petrol) எனப்பெறும். இது "நீர்மப் பொன்" (Liquid Gold) என்று பொன்னுக்கு நிகராகச் சொல்லப் பெறுவது. நிலத்தடியில் இதன் படிவத்தைக் கண்டு பிடித்து வெளிக்கொணர ஆயும்போதே இயற்கை எரிவளி (Natural Gas)யும் கிடைப்பது அறியப்படும். நம்நாட்டில் இதற்காக "எண்ணெய் இயற்கை எரிவளி நிறுமம்" (Oil Natural gas Corporation) நிறுவப் பெற்றுப் பணியாற்றுகிறது.

காவிரி கழிமுகப் பகுதியில் இவ்வளத்தைக் காணும் பணி 30 ஆண்டுகளுக்கு முன் துவக்கப் பெற்றுஎண்ணெய்ப்படிவு, இருப்பது காணப்பெற்றது. இதற்கு முதன்முதலில் பட்டுக்கோட்டையில் நிலத்தில் துளையிடும் துரப்பணப்பணி 1963 செப்டம்பரில் துவங்கி எண்ணெய் இருப்பு காணப்பட்டது. தொடர்ந்து 1964–65 இல் நன்னிலம் வட்டம் திட்டைச்சேரியில் முதல் எண்ணெய்க் கிணறு தோண்டப்பட்டு எண்ணெய் இருப்பது காணப்பட்டது. ஆனால் இது வணிக முறையில் ஊதியம் தருவதாக இல்லை. இருப்பினும் பணி தொடர்ந்தது.

இப்போது நரிமணத்தில் தோண்டிய கிணற்றில் எடுக்கப் பெறுவது வணிகத்திற்கு உரியதாக அறியப்பட்டுள்ளது. கிணறுகள் பகுதியில் எரிவளியும் காணப்பட்டுள்ளது. நாகைப் பகுதியில் ஒன்பது இடங்களில் எண்ணெய்க் கிணறுகள் பணி தொடர்ந்து நடக்கின்றது.

நாகைக்கு அண்மையில் உள்ள வேங்கடங்காலில் எண்ணெய்த் தூய்மி (Refinery) நிலையம் அமைகின்றது. எரிவளி எடுப்பும் சேமிப்பும் இப்பகுதியில் அமைகின்றன.

இந்த எண்ணெய் வளத்தாலும் எரி வளி வளத்தாலும் எதிர்கால நாகை மிக வளம் பெற உள்ளது. எண்ணெய்த் தூய்மி அமைந்து பெருந் தொழில்வளத்தை உண்டாக்கும். எண்ணெய் வணிகம் நம்நாட்டிற்கு இறக்குமதியிலேயே கையேந்தி நின்ற நிலையை மாற்றி வழங்கும் கையாக உயர்த்தும் நிலையை அடைய வைக்க உள்ளது. இதில் நாகை பங்கு பெற்று வளம் பெறும்.

அத்துடன் இதனை ஒட்டிய தொழில்கள், பணிகள் மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும்.மேலும் எரிவளி கிடைப்பால் நாகை நகர மக்கள் குழாய்மூலம் தம் தம் இல்லங்களுக்கு எரிவளி பெறும் நல்ல வாய்ப்பைப் பெற உள்ளார்கள். எரிவளி பயன்பாட்டுத் தொழில்கள் பெருகும். தனியார் வணிகமும் வளரும்.

இத்தொழில் நாளைய நாகையை நல்ல வளமாக்கப் போகிறது என்பது மகிழ்ச்சிக்குரியது.

## புதிய தொழில்கள்

இத்துடன் நாகை கொள்ள வேண்டிய தொழில் வளச் சூழல்கள் உள்ளன. இறால் மீன் ஏற்றுமதியுடன் அதனைக் கொண்டு நாகையிலேயே தொழிலகம் ஏற்பட வேண்டும். அறிவியல் வல்லுநர் கோவை கோ.து. நாயுடு அவர்கள் ஒருமுறை என்னிடம் நாகை இறால் கொண்டு குல்கந்தும் ஊறுகாயும் செய்யலாம் என்றார்கள். இறால் வளர்ப்போர், பிடிப்போர், விற்போர், ஒருங்கிணைந்து கூட்டுறவு முறையில் இதனை ஆய்ந்து ஒரு தொழிலகத்தைத் தொடங்கலாம். இதுபோன்று மீன் பாடம் செய்தல், உணவுப் பதமாக்கிக் குப்பியில் அடைத்தல் முதலிய தொழில் தொடங்கல் நலம். கடற்கரைப்பகுதியில் உப்பளம் ஏற்படுத்தி உப்பை விளைவிக்க முயலலாம். அவ்வுப்பளம் புதுமுறையில், உணவிற்குப் பயன்படும் மென்தூள் உப்பாக்கி விற்கும் சிறுதொழிலகம் தொடங்கலாம். இவ்வாறு வாய்ப்புகளைப் பயன்படுத்தி நாகை வளம்பெறும் முயற்சியை மேற்கொண்டால் மக்கள் நலமும் வளமும் பெருக வாய்ப்புள்ளது.

வளர்க, வளம் பெறுக, எதிர்கால நாகை!

# ஏ. கற்றவர் நாகை

## இன்றைய கற்றவர்

தமிழ் மண்ணில் கற்றவர் என்றால் தமிழ் கற்றவர் என்ற நிலை இருந்தது. நாகையிலும் அவ்வாறே என்று கண்டோம். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. இன்று தமிழ் கற்றவர் பின்னிலையில் நிற்கின்றனர். தமிழ்க் கல்வி என்பது பெரிதும் அகவாழ்க்கைக் கல்வி. ஓரளவில் புதுவாழ்க்கைக்குப் பயன்படுவது. புறவாழ்க்கைக் கல்வியே இப்போது பெரும்பயன் உள்ளதாகி விட்டது. அகத்தைப் புறம் வென்றதால் நாகையும் புறத்தில் வைரமுடி சூடி வருகிறது.

ஆங்கிலக் கல்வியால் சட்டம், பொறியியல், மருத்துவம், அலுவற்கல்வி, கணக்காய்வு, மேலாண்மைக் கலைக்கல்வி (M.B.A) எனப் பெருகியுள்ளன. நாகை இவற்றில் பங்கு பெற்றுள்ளது. வழக்கறிஞர்கள் நூற்றுவராகியுள்ளனர். மருத்துவர், பொறியாளர் எண்ணிக்கையும் நன்கு உள்ளது.

ஆயினும் நாகை மண் மைந்தராய் இந்திய அரசுப் பணி (I.A.S.) இந்தியக் காவற்றுறைப் பணி (I.P.S.) ஆகியவற்றில் கற்றுயர்ந்தவர் எவரும் அமையவில்லை. இஃது ஒரு குறையே.

## நாளைய கல்வி

வருங்காலத்தில் நாகையில் வளர வேண்டிய கல்வியும், தோன்ற வேண்டிய கல்வி நிலையங்களும் குறிக்கப்பட வேண்டியன.

நாகை மேனிலைப்பள்ளிகளில் பயின்ற ஆண்கள் ஆண்டிற்கு 150 பேர் கல்லூரிக் கல்விக்காக வெளியூர் செல்கின்றனர். இவர்கட்கும் சுற்றுப்புற மாணவர்க்குமாக ஒரு கலைக்கல்லூரி அமைய வேண்டும்.

இன்றியமையாதனவாக ஒரு பொறியியற் கல்லூரியும், ஒரு வணிகவியல் பயிற்சிக் கல்லூரியும் ஒரு மீன் ஆய்வு வளர்ப்புக் கல்வி நிறுவனமும் அமைக்கப் பெற வேண்டும். மூனறு ஐரோப்பிய அறிஞர் அறிவித்துள்ளமைக்கு ஏற்ப பயிர்ப்பண்ணைப் பல்லைக்கழகம் (Farm university)ஒன்று ஏற்பட வேண்டும். படகு கட்டும், இயக்கும் பயிற்சி நிலையம் ஒன்றும் ஏற்பட வேண்டும். தமிழ் இலக்கிய இலக்கணக் கல்வி தொடரவும் பெருகவும் 'தமிழ்க்கல்லூரி' ஒன்று தோன்ற வேண்டும். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தமிழ்க்கல்லூரி தனியாக அமையப் புது விதி அமைக்கபெற்றுள்ளது. இதனைப் பயன்படுத்திப் புதுப்பிக்கப் பெற்றுள்ள நாகைத் தமிழ்ச் சங்கம் இப்பணியை மேற்கொள்ளலாம். ஓய்வு பெற்றுள்ள புலவர் இரா. இராசு அவர்களும் ஏனைப் புலமை நண்பர்களும் தமிழ் ஆர்வப் பெரியோர்களும் இதற்கு முனையலாம்.

இவ்வாறெல்லாம் நாகை ஒரு சிறந்த கல்வி மாவட்டமாகவும் கற்றோர் பயிலும் மாவட்டமாகவும் கற்றோரை வழங்கும் மாவட்டமாகவும் உயர்வு பெற வேண்டும்.

# ஐ. நிறைவுரை

இந்த நிறைவுரை நூலுக்கும் நிறைவுரை; நாகைக்கும் நிறைவுரை. ஆனால் நிலைத்து நின்றுவிடும் நிறைவுரையன்று; நிகழ்கால நிறைவுரையாகும். நூலுக்கும் நிகழ்கால நிறைவுரை; நாகைக்கும் நிகழ்கால நிறைவுரை அதனால் நிறைவுரை தொடரும்; நூல் நிறைவுரையும் இந்நூலைத் தொடர்ந்து நாகபட்டின வரலாற்று நூல்களும் எழுதப்பெற்றுத் தொடர்ந்து நிறைவுரைகளைப் பெறும்.

நாகபட்டினம் பலநிறைகளை மேலும் மேலும் பெற்றும் பல்லோராலும் நிற்றவுரைகளைப் பெறும்.

ஒரு நாடு முழு நிறைவுபெற அது 5 அணிகளைக் கொள்ள வேண்டும் என்பது திருவள்ளுவர் விதிப்பு.

**"பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்**

**அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து" (8)** என்பது அவர் நிறைவுரை. இந்நூலில் இவ்வைந்தும் நாகைத் தொடர்புடன் காட்டப் பெற்றுள்ளன.

இவ்வணிகளை இந்நேரம் முதல் ஊழி ஊழிக் காலமும் நாகை சூடி வர வேண்டும். ஐந்தில் முன் நான்கைவிட இப்போது உடனடிக் கவனத்திற்குரியது 'ஏமம்' என்னும் பாதுகாப்பு. ஆண்டுதோறும் நவம்பர் 30 நாகைக்கு அச்சுறுத்தும் நாள். சூறாவளி, புயல், கடல் அலை புகல் என்பன ஆண்டுதோறும் தொடர்கதை. அரசு இதற்குச் சில ஏற்பாடுளைச் செய்துள்ளது. நிறைவான ஏற்பாடுகள் முன்னர் காட்டப் பெற்றுள்ளன. மற்றைய நான்கும் அவ்வப்போது காட்டப்பெறவும் வேண்டும். காட்டுபவர் எவர்?

ஆம். காட்டுபவர் ஒரு குழுவினராக உருவாக வேண்டும்.

நாகையில் வணிக அமைப்புகள், சுழற்சங்கம், அரிமா சங்கம், தொழிலாளர் சங்கம், இலக்கியச் சங்கம், ஆன்மீக மன்றம், இனத்தவர் பேரவை என்றெல்லாம் உள்ளன.

இன்னோார் அனைவரும் ஒருங்கிணைந்து ஒரு 'நகர மக்கள் பேரவை'யை அமைக்க வேண்டும். நாகை நலங்கருதி திங்களுக்கொருமுறையும், உடனடி நடவடிக்கைக்கேற்ப வேண்டும் காலத்தும் கூடி நிலைமைகளை ஆய்ந்து கலந்துரையாடி அரசுக்கு அறிவிப்பதையும், வலியுறுத்துவதையும் கடமையாகக் கொள்ள

வேண்டும். நாகைத் தொகுதிச் சட்டப் பேரவை உறுப்பினரையும், நாடாளுமன்ற உறுப்பினரையும் முடுக்கிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதில் அரசியல் வேண்டியதில்லை. அமைதியியல் நிறைய வேண்டும். தேர்தல்களை அணுக வேண்டியதுமில்லை. அணுக விட வேண்டியதுமில்லை.

நாகைப் பெருமக்கள் கவனத்திலும், முயற்சியிலும் நடைமுறையிலும் கொள்ள வேண்டிய இன்றியமையாத கடமை. இக்கடமை மேலும் மேலும் பெருகலாம். நிறைவடையும் — நின்றுவிடும் கடமை அன்று. இதனைக் குறிக்க வேண்டியது நிறைவுரையின் கடமையாயிற்று.

## நாளும் வாழ்க!

நகரத்தின் நலங்கருதி
நன்னோக்கே முதலீடாய்
நயந்து கூடி,
நுகரத்தான் மக்கள் உளார்,
நுகர்த்தத்தான் ஆட்சியென
நுன்று தூண்டி
நகரமக்கள் பேரவைதான்
நடைபோடும் நல்லமைப்பாய்
நாட்டம் கொண்டு
பகரத்தான் நாங்கள் உள்ளோம்
என்பதன்றிப் பணிசெய்து
பணைப்பாய் வாழ்க.
நாகபட் டினமென்றும்
நாட்டிலொரு பட்டினமாய்
நலத்தில் வாழ்க!
நாகபட்டினம் தொழில்கள்
நாட்டியொரு பெருவளத்தில்
நயந்து வாழ்க!

நாகபட்டினம் என்றும்
நாகு – இளமைப் பட்டினமாய்
நடந்து வாழ்க!
நாகபட்டினம் இந்த
நானிலத்தில் புகழ்நாட்டி
நாளும் வாழ்க! – கோவை. இளஞ்சேரன்

## 9. இன்று – நாளை – நாகை

| ஆசிரியர் | கொண்டு காட்டி நூற்குறுக்கம் |
|---|---|
| 1. நல்லந்துவனார் | : பரி. – 6–42 |
| 2. திருவள்ளுவர் | : திரு. 582 |
| 3. மகாலிங்கம், நா. | : மறை. நி. மலர் (நாகைத் தமிழ்ச் சங்க வெளியீடு) பக். 135 |
| 4. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சி. | : தி.நா.புரா. – திருநகரப் படலம் 56 |
| 5. மறைமலையடிகள் | : மக். நூ. உயிர். – பக். 148 |
| 6. திருவள்ளுவர் | : திரு. – 1031 |
| 7. சாத்தனார் | : மணி. – 11–96 |
| 8. திருவள்ளுவர் | : திரு. – 738 |